3378

THE K...
...HIN...
MYLAPORE, MADRAS-4

சிவகுகமயம்.

புதுச்சந்நிதிக்கந்தன்றுணை.

ஸ்ரீ சுப்பிரமணிய பராக்கிரமம்.

காஞ்சிபுரம் ஜமீந்தாரும்,

ஸ்ரீ ஏகாம்பநாத சுவாமி தேவஸ்தான தர்மகர்த்தரும் ஆகிய

கா. மு. சுப்பராயமுதலியார் அவர்கள்

விரும்பியபடி

(யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி)

மகாவித்வான் ஸ்ரீமத்

[illegible] கதிரைவேற்பிள்ளை அவர்கள்

இயற்றியது.

சென்னைக் குயப்பேட்டை

பி. நா. சிதம்பரமுதலியார்

அண்டு பிரதர்ஸ் அவர்களது

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

[விலை 1922. [ரூபா—2

Rigistered CoPy Right.

பி. நா. சிதம்பரமுதலியார்
அண்டு பிரதர்ஸ் அவர்களது,
வித்தியாரத்நாகரம் பிரஸ்·
64-ெந. படவெட்டம்மன் கோயில் தெரு.

THE KUPPUSWAMY SASTRI
R... INSTITUTE
MYLAPORE MADRAS-4

விஷயசூசிகை.

எண்.	விஷயம்.	பக்க
1	உபோத்காதம்.	9
2	கடவுள்வணக்கம்.	1
3	அவையடக்கம்.	4
1	சத்திமான் மூர்த்தி.	23
2	ஞான சத்திதர மூர்த்தி.	30
3	தாரகாந்தக மூர்த்தி.	35
4	வாராசோன்மத்த பங்க மூர்த்தி.	40
5	கூர்மபங்க மூர்த்தி.	45
6	புலிங்க மூர்த்தி.	50
7	சரவணோற்பவ மூர்த்தி.	55
8	சகலலோககுரு மூர்த்தி.	62
9	கார்த்திகேய மூர்த்தி.	69
10	அருணாரூட மூர்த்தி.	74
11	பிரமசாத்த மூர்த்தி.	81
12	சிருட்டிகர்த்தத்துவ மூர்த்தி.	89
13	பிரமகாராக்கிருக விமோசன மூர்த்தி.	97
14	பரசிவ குருமூர்த்தி.	105
15	சீகர மூர்த்தி.	115
16	குகசுவாமி மூர்த்தி.	121
17	ஞானதேசிக மூர்த்தி.	125
18	அத்துவா மூர்த்தி.	135
19	வியாக்கிராசுரசங்கார மூர்த்தி.	147
20	கயாரூட மூர்த்தி	153
21	மாதங்காரி மூர்த்தி.	159
22	யாகரக்ஷக மூர்த்தி.	165
23	புட்பசத்திர மூர்த்தி.	171
24	பத்திரசத்தி மூர்த்தி	177
25	பிராணவாசல மூர்த்தி.	182

எண்.	விஷயம்.	பக்கம்.
26	இலிங்க தலேச்சுர மூர்த்தி.	186
27	முட்டைநாயக் குமார மூர்த்தி.	189
28	சகத்திரான்ம பரிபாலன மூர்த்தி.	195
29	வரதராச மூர்த்தி.	204
30	பஞ்சாயுதப்பிரதான மூர்த்தி.	209
31	சதுர்முக சாபாரி மூர்த்தி.	215
32	யோகாசாரிய மூர்த்தி.	219
33	குழந்தைவேலப்ப மூர்த்தி.	225
34	கோரகிருதாரி மூர்த்தி.	229
35	இடும்பாசுர சிக்ஷாரக்ஷக மூர்த்தி.	233
36	சர்வலோக க்ஷணப்பிரதக்ஷிண மூர்த்தி.	238
37	தண்டதரக் குமார மூர்த்தி	245
38	பூரணபாலன கிருபா மூர்த்தி	249
39	இந்திர போகாநுக்கிரக மூர்த்தி.	255
40	நாகவாதன நிவாரண மூர்த்தி.	258
41	போக மோக்ஷாநுக்கிரக மூர்த்தி.	263
42	பரமைசுவரிய மூர்த்தி.	268
43	சேனாபதி மூர்த்தி.	273
44	சண்முக மூர்த்தி.	276
45	புரோகித மூர்த்தி.	281
46	கலாவிநோத மூர்த்தி.	285
47	இலீலா மூர்த்தி.	291
48	தேவதண்டன ரக்ஷா மூர்த்தி.	296
49	தாரகாசுர சங்கார மூர்த்தி.	301
50	சத்திர நடன மூர்த்தி.	308
51	துடிக்கூத்த மூர்த்தி.	313
52	வித்வ மூர்த்தி.	317
53	மாதிருகா மந்திரரூப மூர்த்தி.	327
54	குகபரப்பிரம மூர்த்தி.	332
55	சந்தானவரத மூர்த்தி.	337
56	காமாசார தேவ மூர்த்தி.	340
57	கிரவுஞ்சபேத மூர்த்தி.	345

எண்.	விஷயம்.	பக்கம்.
58	முருக மூர்த்தி.	349
59	பாலசுப்பிரமணிய மூர்த்தி.	353
60	பிரபந்த தாரதம்மிய நிர்ணய மூர்த்தி.	356
61	உக்கிரவர்ம மூர்த்தி.	363
62	வாருணோக்கிர மர்த்தன மூர்த்தி	369
63	பாகசாதன கர்வபங்க மூர்த்தி.	372
64	சுவர்ணாசலதண்டன மூர்த்தி.	377
65	சகல கலாவல்லப மூர்த்தி.	381
66	அபிடேக குமார மூர்த்தி.	387
67	பீடாதிப மூர்த்தி.	389
68	குமாரப் பிரமசாரி மூர்த்தி.	392
69	வல்லிகல்யாண மூர்த்தி.	395
70	நடனநாத மூர்த்தி.	399
71	பராசர குமாரோபதேச மூர்த்தி.	402
72	திரிசுதந்திராபேத மூர்த்தி.	406
73	சர்வ விபுத்துவ மூர்த்தி.	409
74	தேவவாகன தான மூர்த்தி.	413
75	மாவிட்டபுரக் கார்த்திகேய மூர்த்தி.	417
76	மதுகாவல மூர்த்தி.	422
77	அகிலலோக நடன மூர்த்தி.	429
78	இராம மூர்த்தி.	431
79	கதிர்காம மூர்த்தி.	439
80	சிங்கமுகாசுரவத மூர்த்தி.	447
81	சூரசங்கார மூர்த்தி.	459
82	விசுவரூப மூர்த்தி.	469
83	அசுரபுரதகன மூர்த்தி.	477
84	அகடிதகடன சாமர்த்திய மூர்த்தி.	481
85	தேவசேனாபதி மூர்த்தி.	485
86	சர்வபலப் பிரதான மூர்த்தி.	491
87	பதங்காபவர்க்க மூர்த்தி.	501
88	வள்ளி பரிணய மூர்த்தி.	507

இதன்கண் எடுத்தாளப்பெற்ற நூல்கள்.

வடமொழி நூல்கள்.

இருக்குவேதம்.
யசுர் வேதம்.
சாம வேதம்.
அதர்வண வேதம்.
சுவேதாச் சுவதரம்.
இராம ரகசியம்.
ஈசாவாசியம்.
மந்திரம்.
சாந்தோக்கியம்.
மகம்.
யோகதரிசனம்.
முக்திகம்.
சரபம்.
அதர்வசிரம்.
கூடாருணிகம்.
அதர்வசிகை.
பிரச்சினம்.
சரஸ்வதிரகசியம்.
காண்வசாகை.
மைத்திராயணம்.
முண்டகச்சாகை.
புருட சூக்தம்.
வாதுளம்.
அசிதம்.
சந்தானம்.
காமிகம்.
சுவாயம்புவம்.
சூக்குமம்.
கிரணம்.
விப்பம்.
மகுடம்.
பாரமேசுரம்.
பௌட்கரம்.
மதங்கம்.
சிந்தியம்.
இரௌரவம்.
காரணம்.
சிவஞான போதம்.
நிசுவாச காரிகை.
குமார தந்திரம்.
வீராகமம்.
மிருகேந்திரம்.
இலிங்காமிர்தம்.
ஐந்திரவியாகரணம்.
பாணினிவியாகரணம்.
சித்தாந்தபோதம்.
மகிம்ந ஸ்தவம்.
ஸ்காந்தசம்பவம்.
ஸ்கந்தலகரி.
கந்தகாலோத்தரம்.
சங்கர சங்கிதை.
சூதசங்கிதை.
ஆலாஸ்ய மகாத்மியம்.
வருணைபத்ததி.
சோமசம்புபத்ததி.
காலோத்தரம்.
வாமன புராணம்.
மற்ச புராணம்.
வராக புராணம்.
கூர்ம புராணம்.
வாயுசங்கிதை.
உபதேசகாண்டம்.

வடமொழிநூல்கள்.

தக்ஷிணகைலாசமான்மியம்.
பிரமகைவர்த்த புராணம்.
விண்டுபுராணம்
பிரமாண்ட புராணம்.
சைவபுராணம்.
சாரதாதிலகம்.
சிகரிணிமாலை.
மகாபாரதம்.
சப்தார்த்த நிர்ணயம்.
கந்தஸ்தவம்.
வேங்கடகுகஸ்தலநிரூபணம்.
இலிங்கசோபானம்.
ஆயுர்வேதம்.
கிரியாவிவரணம்.
சதாசிவரூபம்.
பிரமோத்தரகாண்டம்.
கேசவாதி நாம சிவபரத்துவ நிரூபணம்.

தமிழ்நூல்கள்..

திருவாசகத் திருவருட்பா.
திருமந்திரம்.
திருமுருகாற்றுப்படை.
பதினோராந்திருமுறை.
பெரியபுராணத்திருவருட்பா.
சிவஞானபோதம்.
டிெ மாபாடியம்.
சிவஞானசித்தியார்.
சிவப்பிரகாசம்.
சிவஞானதீபம்.
துகளறுபோதம்.
சித்தாந்தபோதம்.
கந்தபுராணம்.
சூதசங்கிதை.
வராகபுராணம்.
கூர்மபுராணம்.
சிவரகசியம்.
பாகவதம்.
காஞ்சிப்புராணம்.
பார்க்கவபுராணம்.
தணிகைப்புராணம்.
திருவிளையாடற்புராணம்.
வேப்பத்தூரார்திருவிளையாடல்.
திருப்பரங்கிரிப்புராணம்.
பிரமோத்தரகாண்டம்
திருச்செந்தூர்ப்புராணம்.
வாசிட்டலைங்கபுராணம்.
திருக்காளத்திபுராணம்.
சீகாளத்தி புராணம்.
செவ்வந்திப் புராணம்.
பழநித்தல புராணம்.
கருவூர்ப் புராணம்.
சிவகங்கைப்புராணம்.
கடம்பவன புராணம்.
திருக்கோளிலிப் புராணம்.
பட்டினத்துப் பிள்ளையார் புராணம்.
திருப்போரூர்ப்புராணம்.
புலவர் புராணம்.
திருப்புகழ்.
வீரசோழியம்.
இறையனாகப்பொருள்.
திருக்குறள்.
சிறுபாணாற்றுப்படை.

அ

தமிழ்நூல்கள்.

நாடகநூல்.
சீவக சிந்தாமணி.
இசை நுணுக்கம்.
சுததானந்தப்பிரகாசபாதம்.
பரத சேனுபதீயம்.
குணநூல்.
பட்டினப்பாலை.
பரிபாடல்.
பத்துப்பாட்டு
தொல் காப்பியம்.
மணிமேகலை.
சிலப்பதிகாரம்.
திவாகரம்.
பூதத்தாரவையடக்கியல்.
வியாகரணம்.
குமார தரிசனம்.
இராமாயணம்.
கதிர்காமப் புராணம்.
கதிர்காமமான்மியம்.
பிங்கலந்தை
கதிர்காமக் கோவை.
திருப்போரூர்த்தலவெண்பா.
தனிப்பாடல்.
நல்வழி.
சௌந்தரியலகரி.
முருகன்முறையீடு.
தீர்த்த மாலை.
கதிர்காமக் கலம்பகம்.
மருட்பா மறுப்பு.
சுப்பிரமணிய தலக்கோவைப் பிள்ளைத்தமிழ்.
நச்சினார்க்கினியருரை.
அடியார்க்குநல்லாருரை.
யோகதரிசனம்.
கருவூர்மான்மியம்.
செந்தமிழ்நாவலர்சரிதம்.
தொண்டைமண்டலசதகம்.
கந்தபுராணச் சுருக்கம்.
திருவள்ளுவமாலை.

குகமயம்.

புதுச்சந்நிதிக் கந்தநாதன்றுணை.

உபோற்காதம்.

[illegible]

[illegible]

நாணின் மீதுள விரதமு மதனடு நட்டதோர் தனுவுமத் தனுவி,
னேணி னுச்சியி னடக்குசக் கரங்களு மவைநடு வியைந்திடுங் கணையுங்,
கோணை யங்கதின் வயிறுவாழ் வலவனு மவன்றன்வாய்க் குதிரையு மவற்
றின், பேணுமுச்சியுங் கொண்டவன் பிரமமெற் கருள்புதுச் சந்நிதிப்
பெருமான்.

உலகமானது தோன்றி நின்றொடுங்க லென்னு மூவினையுடைமையிற் கடம்போலக் காரியமே யென்று அநுமித் துணரப்படும். செய்வோனை யின்றிச் செய்வினை யின்மையால் அவன் அவள் அது வெனவவயவப் பகுப்புடைய இவ்வுலகந் தன்னைக் காரியப்படுத்தும் மகாசங்கார காரணனைக் கருத்தாவாக வுடைத்து. அதனை, "அநுமாநம்த்ருடம்வ்யாப்ய பரோக்ஷார்த் தாவபோதக மிதி" எனவரூஉம் பௌட்கராகம விதியானே ஐந் துறுப்புக்களானுங் காட்டி வலியுறுத்துவாம். என்னை?

௧. இவ்வுலகம் ஒருகருத்தாவை யுடைத்து-பிரதிஞ்ஞை.
௨. அவன் அவள் அதுவென மூவினைப்படலின்-ஏது.
௩. கடமுதலிய காரியங்கட்குக் குலாலன்போல-உவமை.
௪. அங்ஙனே காரியமான வுலகும் ஒருகருத்தாவை யுடைத்தென அநுமித் துணரப்படும்-உபநயம்.
௫. ஆகலின் உலக மொருகருத்தாவை யுடைத்து-நிகமனம்.

அம் மகாசங்கார காரணன் யாவனோ வென்று ஆயுழி, தோற்றக்கேடுகளிலா னெவனோ வவனே சங்கார காரணனாகிய பரமமுதல்வனென்று வேதசிவாகமங்களாகிய அருணூல்கள் கூறாநிற்கும். அவனைப் பரசிவன் என்னும் விசேடப் பெயரான் அழைப்ப பெரியோர். ஆகவே சிவபெருமா னொருவரையே பரமபதியெனக் கொள்வதுசித்தாந்த மாகவும், ஈண்டுச் சுப்பிரமணியக் கடவுளைப் பரப்பிரமமென்பது முரணாலோ வெனின், அற்றன்று. சிவபெருமானே தேவியார்க்கு உபதேசிக்குங் காலைத் தாமே குகன் எனவும் குகன் தாமெனவுங் கூறியருளி யுண்மையைத் தெரித்தருளா னன்றென்க.

"ஒருவனே யிராவணாதி பாவக முற்றாற்போலத்-தருவனிவ்வுருவ மெல்லாந் தன்மையுந் திரியானாகும்" என்று சித்தாந்த உபநிடதங் கூறு மாற்றானே குமரவடிவங் கொண்டு சுப்பிரமணியன் முதலாயபலதிவ்விய நாமங்களொடும் நின்று விளங்குகின்றவர் சிவனேயென்பது தெள்ளிதிற் றுணியப்படும் ஒருவன் கூத்திற் குரிய பலவேடங்களைக் கட்டி நடித்தானாயினுந் தன்றன்மையிற் சிறிதுந் திரியாமைபோல, முதல்வனும் ஐந்தொழிற் குரியனவாய் ஈண்டுக் கூறப்படும் மூர்த்தங்களை யெல்லாம் எவ்வியக்காலும் அவையெல்லாங் குணகுணி பாவமா யுடனிற்குந் தனது சத்தியிற் காணப்படுவன வாகலின், அதுபற்றித் தன்றன்மைவேறுபட்டு விகாரியாவா னல்ல னென்க. இவ்வுண்மையானே சிவனே குகன்; குகனே சிவனெனக் கூறும்பதிநூல்க ளெல்லாம். இக்கருத்துப்பற்றியன்றே,

ஈச னேயவ னுடலான் மதலையா யினன்கா
ணாசி லாவவ னறுமுகத் துண்மையா லறிநீ
பேசி லாங்கவன் பரனொடு பேதக னல்லன்
தேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்.

என்று கூறிற்றுக் கந்தபுராணமும். "ஆதலி னமது சத்தி யறுமுகனவ னும் யாமும்-பேதகமன்றால்" எனவரூஉம் வாக்கியங்களும்இப்பொரு ளை வலியுறுத்தும். தேவி திருமுகம் ஒன்றும், சிவபெருமான் றிருமுகம் ஐந்துஞ் சேர்ந்து ஆறுமுகமா யிருத்தலானும், சிவபெருமானது திருமுகம் திருக்கரங்கள், திருக்கண்கள் என்னு மவையிற்றை யொருங்கெண்ண முப்பதாகல்போல, சுப்பிரமணியக்கடவுளின்றிருமுகங்கள், திருக்கரங்கள் திருக்கண்கள்என்னு மவையிற்றையுமொருங் கெண்ண முப்பதாகலானும். தாரகாக்கன்முதலியஅசுரர்புரங்களையும், காமனையுஞ் சிவபெருமான்புன்ன கையானுந்திருவிழியானும் எரித்தழித்தாற் போலச் சுப்பிரமணியக் கட வுளும் அசுரசேனைகளின் புரங்களைப் புன்னகையானுந் திருவிழியானும் அழித்தருளலானும், சிவபெருமானுக்கு முச்சத்தி யிருத்தல் சிவண, குக பரப்பிரமத்திற்கும் வள்ளியம்மையாராம் இச்சாசத்தியும். தெய்வயானை யம்மையாராங் கிரியா சத்தியும், வேற்படையாம் ஞானசத்தியும் இரு த்தலானும், சிவபெருமான் யோக போக வேக மூர்த்தங்களையும், அருவம் உருவம், அருவுருவம் என்னும் முத்திறத் திருமேனிகளையுங் கோடன் மான, குகப்பெருமானும் அவையிற்றைக் கோட லுண்மையானும், சிவ பெருமான் பஞ்ச கிருத்தியங்களையு நடத்துவதுபோல, இவரும் நடத்தி யருளலானும், இன்னன பலப்பல வேதுக்களானுஞ் சிவனுங் குகனும் ஒருவரே யென்க. இதனை,

நன்முக மிருமூன் றுண்டா னமக்கவை தாமே கந்தன்
றன்முக மாகி யுற்ற தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்த மூவிரண் டெழுத்து மொன்று
யுன்மக ளுமத் தோரா றெழுத்தென வுற்ற வன்றே.

முகம்விழி மலர்க்கை மூன்று முப்பது முன்பு காஞ்செய்
மகவினைக் கருளவந்த வள்ளலுக் கீண்டுச் சாடப்
புகுமிறைக் கவைகண் மூன்று முப்பதே பொலிவு மற்றே
திருவுரு வானுஞ் சேயைச் சிவனெனத் தெளிதல் வேண்டும்.

என்றின்ஞேரன்ன பிரமாணங்கள் கூறுமுகத்தாற் கண்டுகொள்க. வேதமும் "அவனே மகேசுரன்: அவனே உமை; அவனே விநாயகன்; அவனே ஸ்கந்தன்" என்பது போதர "யச்ச மகேச்வர: ! யாசோமா! யச்ச விநாயக: ! யச்சஸ்கந்த; !" எனப் பஞ்ச ருத்திரங்களு ளொன்ருய அதர்வசிரசு என்னுஞ் சாகையானும், நீயே பெண்; நீயே ஆண்; நீயே குமாரன்" என்பது போதர "த்வம்ஸ்திரீ த்வம்புமாநசி த்வம்குமார" எனச் சுவேதா சுவதரச் சாகையானுஞ் சிவனே கந்தனெனத் தெற்றென வுணர்த்திற்று. இவ்வுண்மையுணராது "கந்தன் பரசிவனல்லன் ; அவன் பாலனே" என்றுகொண்ட சூரபன்மன், தாரண், பானுகோபன், அக்கினிமுகன், வச்சிரவாகு முதலிய அசுரர்கள் தங்கள் குலத்துடன் ருமழிந்ததையும், பொய்யாமொழி முதலாயினேர் அச்சுறுத்தப்பட்டதையும்உணர்ந்தவர் குகன் சிவனே யெனக் கொண்டுய்வார் என்பது.

அற்றேல் மகேசுர ரிதயக்கணும், தடாதகையார் திருவயிற்றும், அக்கினியி னிடத்தும், சதாசிவ மூர்த்திகளின் நெற்றிக் கண்களினின்றுந் தோன்றி யருளினரென்பதும், சாபம்பெற்று மூகையானுரென்பதும் என்னை யெனின், அவை உபசாரமே யன்றி யுண்மையல்லவாம். அவ்வுண்மை கார்த்திகேயன், சரவணபவன், கங்கைதனயன் முதலிய வற்றுனும், சுவாமிநாதன், சிவகுரு முதலியவற்றுனும் உணருங்கற் போதரும். இங்ஙனந் திருவிளையாடலானே யன்பர்க் கருள்புரித னிமித்தம் பலப்பல மூர்த்தங்களைக் கொண்டருளிய சுவாமி நாதனைச் சிவனுக்குவேருக வைத்தெண்ணி வழிபடுவார் சிலர் உண்மை யுணராது தம்மதத்திற்குக் கௌமார மதமெனப்புதுவதோர் பெயர்சூட்டி யொழுகுவர். அதனுல் அவர் இடர்ப் படுதலன்றிப் பேரின்பங் கூடலொருகாலு மின்ரும். இக்கருத்தினியதெரியாத மற்ருேர் சாரார் குமாரக்கடவுள் சிகண்டருத்திரர் அனந்ததேவ நாயனுர் என்பார் தங் குமாரர் என்றும், அவர் பிரளயாகலர் விஞ்ஞாகலர் என்பாருள் வைத் தெண்ணப்படுந் தகையரென்றும், பரிவார தேவரு ளொருவராகப் பூசித்தற்குரியரென்றும், சித்தாந்திகள்

பதியெனக் கொள்ளா ரென்றும், ஆகலா னவரைப் போற்றுவோர் சித்தாந்தத்திற்கு வேறான கௌமார சமயிகளென்றும், அவர்க்குச் சீகண்டபுவனப் பிராப்தியே முத்தியென்றுந் தன்மனம் போனவாறெல்லாங்கூறி யெரிவாய் நரகிற்கு இரையாவாரென்க. இவரெலாங்குகனேசிவனென்னு முண்மை தெளிவரேல் அங்ஙனங் கூறி யிடர்ப்படுகிலார். சிவனுக்கு வேறாக வைத்து வழிபடுவோரையே கௌமாரமதத்தரெனவொதுக்குவ மெனினும் அங்ஙனம் பெரியோர் ஒருமதம் வகுக்காமையானும், குமாரக் கடவுளை வழிபடுவோர் சிவனை வழிபட்டவ ராவரெனச் சுருதிகள் கூறலானும் அது பொருந்தாதென மறுக்க. காணாபத்தியம் என்பதும் அங்ஙனங் கொள்ளற்பாலதாம்.

இங்ஙனம் விளங்குஞ் சுப்பிரமணியக் கடவுளின் பிரபாவங்கள் மனவாக்குகட் கெட்டாதன. அவற்றினொருசிறிதேயான்மாக்களெல்லாம் உய்யும் பொருட்டு வேத சிவாகம புராணேதிகாச முதலியவற்றிற் கூறப்பட்டவைக. தமிழ்ப் பண்டைநூல்கண் மாட்டு முருகனே கடவுளாக அறையப்பட்டுள்ளது. ஐந்திணைகளுண் முற்றிணையாய்க் கூடலானேயின்பமுறுத்த வல்ல வத்துணைச் சிறப்புடைய குறிஞ்சி நிலத்துத்தெய்வஞ் சுப்பிரமணியனே யென்றுஅகத்தியம். தொல்காப்பிய முதலிய கூறலாற் தமிழ்நாட்டுத் தெய்வம் அவரே யென்பது தெளிவாம். அதனானன்றே செந்தமிழ்ப் பரமாசாரியரும், தமிழர் கடவுளு மவரெனத் தெளிந் தொழுகி வழிப்பட்டார்ஆன்றோர். வடக்கட் சுப்பிரமணிய தலங்கள் மல்கிக் காணாது தெற்கட் காணப்படுவது மிதனை வலியுறுத்து மாயிட்டு.

இத்தகைச் சிறப்பினையுடைய பரமநாதனுங் குகக்கடவுளார்கலியுகத்திலே விசேட பிரத்தியக்க தெய்வமாக விருந்து அன்பர்க்கருள்புரிதலாற் கலியுக வரதர் எனவுங் காரணப் பெயருற்றார். தமிழ்நாட்டகத்தார் பெரும்பாலும் அவரைத் தொழலும். அவர்புகழ் பேசலும் கேட்டலுஞ் செய்துய்கின்றார். ஆகலிற் பாவயுகமாகிய இக்கலிகாலத்தே யிருமை யின்பமும் எளிதிற் பெறவேண்டியோர், வேண்டியார் வேண்டுவன வெல்லாமீயும்

இக்கலியுக வரதர்த் தொழுதல் ஆவசியகமாம். அங்ஙனந் தொழுவார்க்கும் அன்பு வேண்டும். அவ்வன்பும் அவரது மெய்ப்புகழ்களாகிய பராக்கிரமங் களைச் செவ்வனே யறிதலா லதிகரித்து நிலையுறும். ஆகலான் அளவிற ந்து விளங்குஞ் சுப்பிரமணிய பராக்கிரமங்களை யெல்லாம் எடுத்துரைத்த லும், உரைத்தவழி யுணர்தலுஞ் சிற்றறிவினோர்க் கியலாதென்பதுயாவரு முணர்ந்த தொன்றே. அவற்று ளொருசிறிது ஞானரையிற் போந்தவற்றி னின்றியமையாத பராக்கிரமங்களையெடுத்து வகுக்கி னுலகிற் குபகாரமா மென்று, என்மனம் பன்னாட் சிந்தித்து அவாக்கொண்டமைக் கியைய.

காஞ்சிபுரம் ஜமீந்தாரும், திருவேகம்பநாத சுவாமி யாலய தர்மகர்த் தரும், வேளாளகுலப் பிரபுவும், பரோபகார சீலரும், பன்னிருதிருமுறை த் திருவருட்பாக்களை யவ்வாலயத் தாசுவாக்களி னுரோகணிப்பித்து உல கின்க ணுள்ள வுண்மைச் சைவத் திருக்கூட்டத்தினர் யாவரு முவகைக் கடலிற் றிளைக்கும்படி மிக்க விமரிசையாக மகோற்சவஞ்செய்வித்தவரும், ஸ்ரீ சித்தாந்த சிவநேசத் திருக்கூட்டம் என்னுஞ் சபைத்தலைவரும், கொ டை முதலியவற்றாற் றிக்கெல்லாம் புகழ்விளங்கப் பெற்றோரும், வித்தி யா விநோதரும் ஆகிய ஸ்ரீமந் கா-மு-சுப்பராயமுதலியார்அவர்களும்பெரி தும் விரும்பிப் பன்முறை வேண்டியதனானே திடங் கொண்டு, வழிபடு கடவுளாயிருக்கும் அவ்வேதுவானுங் கல்வி கேள்விகளிற் சிறிதுமில்லா தே துணையின்றி யியற்றுவான் புக்கேன்.

சுப்பிரமணியப் பகவனார்தம் பராக்கிரமங்களோ, சிவபராக்கிரமம், தேவி பராக்கிரமம், விநாயக பராக்கிரமம் என்னு மிவையிற்றைப்போல இத்துணையவென்று வரையறை செய்து எந்நூன் மாட்டும்வகுக்கப்பட் டில. அதனானே யவர் பராக்கிரமங்கள் வரையறைப்படாதனவென்பது தெற்றெனப் போதரும். ஒன்று கூறுவதுபோன் மற்றொன்று கூறுது விகற்பித் துரையாநிற்கும். அஃது இந்நூலினுங்காங் கெடுத்து வகுப்பதாற் றெரிய. பெரும்பாலும் வடமொழிக்காந்தபுராணத்துச் சங்கர சங்கிதைச்

சிவரகசியகண்டம். தமிழ்க் கந்தபுராணம் ஆலாஸ்ய மகாத்மியம், குமார தந்திரம், தணிகைப்புராணம், திருவிளையாடற்புராணம், பாரதம், கூர்ம புராணம் முதலியவற்றிலே கூறப்பட்ட மகிமைகளுஞ் சரிதங்களு மொ ன்றற்கு ஒன்று விகற்பித்தியலாநிற்கும். ஆயின் மற்றையகூறுவனசொல் லவும் வேண்டுமோ? ஆதலால் அவையிற்றையும் ஏனைய நூல்களி னுதப் பட்டவைகளையும் முரணுவன நீக்கி ஒருவா றியைத்தும், பின் நிகழப்பெ றீஇ ஆன்றோரா னுரைக்கப் பெற்று வழங்கிவருஞ் சரிதங்களையுஞ் சேர் த்துஞ்சுப்பிரமணிய பாராக்கிரமம் என்னும் பெயரா னீதியற்றினும்.

அங்ஙனம் இந்நூலிற் சேர்த்த பராக்கிரமங்கள் எண்பத்தெட்டு. அவைகள் வடமொழி தென்மொழி மேற்கோள்கள் பலப்பலவானிறுவப் பட்டுள்ளன. அவற்றுட்கூர்ம தண்டன மூர்த்தி, வாராகோன்மத்தபங்க மூர்த்தி முதலாகிய சில பராக்கிரமங்கள் சிவபெருமா னியற்றியனவாக நூல்களில் ஆங்காங்கே கிளக்கப்படினும், அவை யிருவருக்குமுளதாமபே தப் பெற்றியானே, தக்கயாக சங்காரம், மலரோன்றலை கொய்தன் முத லாயினவே போலக் கூறப்பட்டனவாமென்க.

இன்னுங் கந்த மூர்த்தி யொருவரானேமேடமூர்தல், பிரமனைச் சிறையிடல், பாசிவோபதேசம் பகர்தல், கிரவுஞ்சவரை பிளத்தல், அசுர புர தகனம், சிங்க முகாசுர வதம், சூரபன்ம வதம், தேவசேனாபரிணயம், வள்ளி பரிணயம முதலாய வல்லமைகள் இயற்றப்படினும் அவை பராக் கிரமப் பாகுபாடு பற்றி வேறு மூர்த்திகளாக வைத்தெண்ணப் பட்டன. இவ்வாறே யேனைய வற்றிற்குங் கண்டு கொள்க.

இன்னும் பலப்பல பராக்கிரமங்கள் உள்ளன. அவை சண்மாதுர மூர்த்தி, கந்த மூர்த்தி, தத்துவஞான போதக மூர்த்தி, சுவாமிநாத மூர் த்தி, சைவாட்ட மங்கள மூர்த்தி, ஆவரண தேவ மூர்த்தி, திக்குப்பால காதிக்க மூர்த்தி, சப்தாசாரிய மூர்த்தி, இருதய மீடமூர்த்தி, சதுர்வேத ரூப மூர்த்தி, திருவேங்கடாசல மூர்த்தி, சமுத்திரகத மூர்த்தி, புசங்கா

பரண மூர்த்தி, நவகோட்டாதிக்க மூர்த்தி, அஷ்ட தேவாதிக்க மூர்த்தி, அஷ்டகுலாதிக்க மூர்த்தி, செயந்திபுரமூர்த்தி, முசுகுந்த வரப்பிரசாத மூர்த்தி, சுப்பிரமணிய மூர்த்தி, குமார மூர்த்தி, மனு வரப்பிரசாத மூர்த்தி, அகத்தியோபதேச மூர்த்தி, நந்திபோதன மூர்த்தி, முதலிய பராக்கிரமங்கள் இருப்பினும் அவையெல்லாம் பின்னர் வெளியிடப் படும்.

திருஞான சம்பந்த சுவாமிகள் சுப்பிரமணியக் கடவுளின் திருவவதார மாகவும், அவர் செய்தருளிய அத்தி யற்புத பராக்கிரமங்களையீண்டு வகுக்காமை யென்னை யெனின், அவர் சுப்பிரமணியக் கடவுளின் திருவருளானே சாரூப்பியம் பெற்றுள்ளதோர் அபர சுப்பிரமணிய ரெனக் கொள்ளுமாறு, திராவிட மாபாடியத்தார் முதலாயவான்றோர் கூறுபவாகலின் உலகமலையாமை யென்னும் அழகுபற்றிவிடுத்தாம். அருணகிரிநாத சுவாமிகள் முதலாய வடியார்கட் கருள்புரிந்த பராக்கிரமங்கள் சண்மாது மூர்த்தி முதலிய வற்றிற்குப் பாரத மாதிய கூறும் புராண சரிதங்கள் போலப் பிறழ்வுற்றுத் தெளிவாய்விளங்கப் படாமையானும், பலரும் பல வா றுரைத்தலானும் இதுபோது பதிக்கா தொரீஇச் சென்றனன்.

ஈண்டுக் காட்டப்பட்ட விடயங்கள் ஒரேகாலத்து எழுதப்படாது ச
யம் வாய்த்துழி யெல்லாம் எழுதப்பட்டன வாகும். ஆதலாற் சுப்பிரமண
ய பத்தியின் முதிர்ந்த அன்பர்கள் இவற்றின்கட் குறையிருப்பினு
குணங் கொண்டு கோதாட்டுவா ரென்னும் துணிபானே யொருவா
ற்றி, சத்த முத்தித் தலங்களு ளொன்றாய், செந்தமிழ்க்குவரம்பெனச்
ப்பிய முந்து காஞ்சி மூதூர்த் திருவேகம்பநாதப்பெருமான் திருச் சந்
க்கண் பலப்பல புலவ சிகாமணிகள் சமுகத்திற் செவ்வனே யாங் கே
வெளியிட்டாம்.

சென்னை
பராபவ௵
ஆனி௴ ௨௨.

இங்ஙனம்.
நா. கதிரைவேற் பிள்ளை.
பச்சிம புலவகான நகரம்,
யாழ்ப்பாண

சுப்பிரமணியப்பெருமா

உ

சிவகுகமயம்.

ஓம்குகபரப்பிரஹ்மணேநம:

சுப்பிரமணிய பராக்கிரமம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

என்றும் புதுமைவிளைத் தெண்ணுவோர்க் கெந்நிதியு
மன்றவரு ளங்கதிரை மாநகர்போற் — றன்றபுதுச்
சந்நிதிவாழ் மாமுகனார் தன்றுணைவ னின்வுலத்தாற்
சந்நிதிவாழ் வெற்கருளுந் தான்.

கடவுள் வணக்கம்.

நான்கடியின் மிக்குவந்த கலித்தாழிசை.

ஆரணமுங் காணரிய வருபொருளென் றெவரும்
பாரணஞ்செய் துனியேத்தப் பதிந்தருளெம் பரனைச்
சீரணவும் பொழிலுடுத்த திருக்கதிரைத் தலம்வாழ்
காரணனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கந்தனுருக் காணாத கண்ணென்ன கண்ணே. (க).

(க) அருபொருள் = அற்ற பொருள். வினைத்தொகை யாகலின் ஐயமற்ற பொருளெனக் கொள்க. இனி "அற்றகாரியம்" என்றாற் போலத் தீர்ந்த பொருளென்றுமாம். அறுவகைச் சமயத்தாருந் துணிந்த பொருளென்னலு மொன்று. "அருபொருளிவ னென்றே" எனச் சிலப்பதிகாரத்துங் கூறல் காண்க. "கண்ணென்ன கண்ணே" என்றது, மண்ணினும் மரத்தினுங் கல்லினும் உள்ள கண்களுடன் பீலிக் கண்ணு முண்டாகலின், கதிரை = கதிர்காமம் என்னும் தலம். இதுவே பாடிவீடாய ஏமகூடமாம்.

சீரானைப் பிறவானைச் சேவலனை மஞ்ஞைத்
தேரானைப் போற்றலர்க டோரானை யெம்மு
னீரானை யளத்தற்கு நேரானைப் பொய்யிற்
சேரான்சீர் கேளாத செவியென்ன செவியே
செவ்வேளின் சீர்கேளாச் செவியென்ன செவியே. (உ)

அவஞான மதுசேர்ந்திங் கலையாமற் சைவத்
திவஞான மெய்ம்மையெனத் தெள்ளியுய நம்மூர்
நவமான சந்நிதியி னண்ணியெமை யாளுந்
தவமானின் சீருரையாத் தாவென்ன தாலே
சரவணன் சீருரையாத் தாவென்ன தாலே. (ங)

இடந்தானு முணரானை யின்முருகை யெல்லாங்
கடந்தானை யருளாந்தண் கடலானை வேல்கைக்
கிடந்தானை யெப்பொருளுங் கிடப்பானைச் சூர்க்கா
நடந்தானை யேத்தாத நாளென்ன நாளே
நம்பரனை யேத்தாத நாளென்ன நாளே. (ச)

(உ) செவியென்ன செவி என்றது, மண், மரம், கல் இவையிற்றி னுஞ் செவி யிருத்தலானென்க.

(ங) அவஞானம்=ஏனைய சமயிகள் கொண்ட பசுபாச ஞானங் கள். திவஞானம்=சிவஞானம். சைவம் என்றது ஈண்டுச் சித்தாந்தத் தை. நவமானசந்நிதி=புதுச்சந்நிதியென்னு மொருபெருங் கோயில்; அது யாழ்ப்பாணத்து மேலைப்புலோலிக்கணுள்ளது. உபயகதிர்காமம் எனவும் கூறுப. தாவென்ன தால் என்றது, மண், மரம், கல் என்பவற் றின் நாக்களுடன் சிற்கைநா, கலப்பைநா என்பவு முளவாகலின்.

(ச) இடந்தான்=பூமியைத் தோண்டினவன், திருமால். அவனு முணராமையை "விஷ்ணூர் வாராஹம் ரூபமாஸ்தாய" என வருஉம் இருக்குவேத மந்திர வசனத்தானும் தமிழ்வேதத்திருவாக்குகளானும் பிறவற்றானு முணர்க. சூரபன்மனைக் கொல்வான் படையுட னடந்த மையால் "சூர்க்கா நடந்தானை" என்றும், இவை நான்கும் படர்க்கைப் பாவல் என்க.

தெய்வயானையம்மையார்.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சிவன்பரிக் கிரக சத்தியாந் திருமாற்
றேவிதன் வலக்கணிற் றோன்றிப்
பவன்வடி விடக்க ணிருந்தெமக் கருளைப்
பாலிக்குந் தேவியைப் பரையாந்
இவண்செயுந் தவத்தா லவன்மக ளெனவே
சென்றுயாப் பெயரதைத் தாங்கு
மவளெவள் கிரியா சத்தியாந் தெய்வ
யானையி னடிமலர் பணிவாம். (௫)

வள்ளியம்மையார்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

புள்ளிமான் றரிகரத்தம் புல்லிமான் மகன்றடத்துப்
போந்து நீங்
கள்ளிமான் வனசார்கை யன்றுமா னெனவருந்தி
யெனமாக் கண்ட
புள்ளிமான் வயிற்றுதித்துங் குகமடங்காக் குகமடங்கற்
புல்லு மானும்
வள்ளிமா னிச்சையெனச் சொல்லுமான் மலர்ப்பதங்கள்
வழுத்து வாமால். (௬)

வேலாயுதம்—(படைக்கலநாயகம்.)

கடையிலா வலிமை யாதி காணலாற் சிவன்கண் வந்த
வடைவினு லறுமு கத்தை யடைதலா லாவி மெய்யாய்
மிடைதலா லாய்தம் போலு மேன்மையான் முருக னுக்கும்
படைமுதல் சீர்த்தி பாடும் வாமதைப் படைத்தே னுமே. (௭)

உளர்தி, கொடி.

கோச்சகக் கலிப்பா.

மாலயனூர் காண்பரிய மலர்ப்பதத்து முடிமீதுங்
கோலமதா யென்றுறனுங் குடிகொண்டீர் நும்பெருமை
பாலனே னென்றறியேன் பத்தியா னென்னவைப்பீர்
மேலமயில் வாகனமே சேவலா மெய்க்கொடியே. (அ)

குகனடியார் வணக்கம்.

கட்டளைக்கலித்துறை.

விறல்வா கவன்றுணை மற்றிலக் கத்தவர் வென்றநந்தி
குறுமா முனிவிதி யிந்திர னாதியர் கொண்டடக்கி
றறவோ னருண கிரிகச்சி யப்ப னலகினர்தந்
திறமாப் பதமல ரென்னுளத் தோடையிற் சேர்ந்தொளிர்மே.

அவை யடக்கம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தன்னளவைத் தானறியான் றலைவனென மறைகூவு
மவன் றன் சான்ற
மன்னளவு வலனெல்லா நானறைவ லெனவருதன்
மத்த ஞாளி
கொன்னளவும் பாற்கடலைக் கொளச்சகத்திற் களிப்பனெனுங்
கொள்கை யன்றோ
வென்னளவோ வென்னெனனே யளியெழுப்ப வெழுந்தனன்மெய்ப்
புலவோ ரெள்ளார். (க)

---

* அவையடக்கம் என்பதனை, அவையை யடக்குதல் என இரண்டன் றொகையாகக் கொள்க. அதாவது சபையினுள்ளா ரடங்குமாற்றால் இனியவாகச் சொல்லி யவரைப் புகழ்தல். "அவையடக் கியலே யரிற்புத்தெரியின்-வல்லா கூறினும் வகுத்தனர்கொண்மினென்-றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே" என்றது தொல்காப்பியவிதி. அதனை "திரைத்த விரிக்கிற் றிரைப்பினு வாய்போல்" எனவருஉம் பூதத்தாரவையடக்கியற் செய்யுளானுந் தெரிக.

சந்தஞ மொருதேவப் பரம்பரன் * வல் லமைகடமைக்
காண்ட லென்றன்
வந்ததோ மறைமயங்கு மெவருணர்வர் வாய்மையவை
வாக்குட் கெட்டா
வெந்தமா ருடையான்ற னருள்வழிய ரியம்பினமுன்
னூல்கொண் டேற்ற
மந்தணமு மமைத்தேன்மெய்ப் புலவரன்ன மாட்சியென
வரிப்பார் மாதோ. (உ)

‡ ஆர்வமொழி.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கண்ணே வாயா முருகுண்மை களித்து நோக்கிப் பருகுமின்கள்
வண்ண மூக்கே வாயாக வையன் மேனி மண நுகர்மி
னெண்ணு மனனே வாயாக வெழுத்தா றுளத்திற் பதித்திடுமி
னண்ணல் வலனுஞ் செவிவாய்க்கொண் டருந்தியுய்ம்மி னமரங்காள்.

கொச்சகக் கலிப்பா.

காதல்கூர்மெய்ப் புதல்வரொடுங் கிளைஞரொடுங் கடிமனைவாழ்
மாதரொடுந் தோழமையர் யாவரொடு மனமகிழ்ந்து
தீதின்ஞானப் பொருளென்னுந் தேனருந்தி யருட்குமர
நாதன் றனது சீர்பாடி யாடியுய்ம்மி னமரங்காள். (உ)

கடவுள்வணக்க முற்றிற்று.

* வல்லமைகள்=பராக்கிரமங்கள்.

‡ வாக்கு உள்=சொல்லும் மனமும். மந்தணம்=இரகசியம். ஆர்வமொழியாவது-உலகர்மேல் வைத்த அன்பினுற் றமடைந்த வுண்மையை யன்னேரு மடைவான் கூறல். "எந்தை புகலூர் பாடுமின் புலவர்காள்" எனவும், "ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்" எனவும் வருஉந் திருவாக்குகளாலறிக.

முதலாவது,

ஓம் சத்திமான்மூர்த்தி.

ஊரிலான்குணங் குறியிலான் செயலிலா னுரைக்கும்
பேரி லானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரி லான்வரல் போக்கிலான் மேலிலான் றனக்கு
நேரி லான்குகக் கடவுளா யென்னுளே நின்றான்.

அநாதிமல முத்த விபுத்துவப் பொருளாய், உரு குணம் குறி செயல் பெயர் முதலியன இல்லாராய், ஒப்புயர் வின்றி ஆன்மாக்களின் இருதய புண்டரீக வீடாகும் தகராலயக்கண் சிதாகாயப் பொருளா யிருப்பவர் குகேசப் பெருமானே யாவர். அவரே சத்திகளுக்கு எல்லாந் தலைவராகலிற் சத்திமான் எனப்படுவர். ஆன்மாக்களின் * சகச மலத்தைக் கெடுத்து அத்துவித முத்திப் பேற்றை யளிப்பதற்காகக் கொள்ளும் மூவகை வடிவிற்கும் ஐந் தொழிற்குங் காரணமா யுள்ளது சத்தியேயாம். அஃதாவது சிவகுருநாதன் ஆன்மாக்கட்கு அருள்புரிதல் மாத்திரங் குறித்துப் பொதுவகையால் அறிந்தும் அறிவித்தும் நிற்பதான தடையிலா ஞானமே யென்றுணர்க. சத்தி யென்பதற்கு வல்லமை யென்பதே பொருளாகும். அதனால் நீருக்குக் குளிர்ச்சியும், நெருப்பிற்குச் சூடும் போலக் குணகுணி பாவமாக நிற்றலின், பரனோடு பிரிவிலதாய் மரத்திற்கு வைரம்போன்ற தொன்றாம். இக்கருத்தையே "அதபத்யு ரதிஷ்

* சகசம்=கூடவுதித்தது. ஆணவ மலம் ஒன்றே யதுவாகும். ஏனைய மலங்கள் ஆகந்துக மலமே. அற்றேல் ஆணவமும் ஆன்மாவுங் குணமுங் குணியுமாயி, குணங் கெடுமாயிற் குணியுங் கெடுமன்றே யெனின், அற்றன்று. சகசம் என்பது குணங் குற்றம் என இருவகைப் படும். அவற்றுள் இது குணமாகாது செம்பிற்குக் களிம்பும், அரிசிக்குத் தவிடும் போல்வதாய குற்றமே யென்க.



சத்திமான் மூர்த்தி.

டாநம்" எனவரூஉஞ் சுலோகத்தால் *மதங்கம் என்னும் ஆகமம் விளக்கிற்று சத்தியே யுலகிற்குக் காரணம். சத்தியே யைந்தொழிற்குங் கருவி. சத்தி யின்றேல் யாவு மின்று.

சிவமெனும் பொருளு மாதி சத்தியொடு
சேரி னெத்தொழிலும் வல்லதா
மிவள்பி ரிந்திடி னியங்கு தற்குமரி
தரிதெனு மறையி ரைக்குமா
னவபெ ரும்புவன மெவ்வ கைத்தொழி
னடத்தி யாவரும் வழுத்துதா
லவனி யின்கணொரு தவமி லார்பணிய
லாவதோ பரவ லாவதோ.

என்ற சௌந்தரிய லகரிச் செய்யுளானு மவை பெறப்படும். அரசனது ஆஞ்ஞா சத்தியானது மந்திரி, பிரதானி, படைத்தலைவன், நியாயாதிபதி முதலாகக் கீழ்நின்ற சேவகன் இறுதியாகவுள்ள அங்கத்தார் மாட்டுப் பதிந்து காரிய வேறு பாட்டாற் பலவகைப் படல்போல, பரா சத்தி யாகிய குகசத்தி ஒன்றே இச்சித்தல், அறிதல், செய்தல், என்னும் வேறுபாட்டால் இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியாசத்தி என மூவகை யாகவும், பின்னரும் அவாந்தர வேறுபாட்டால் அநந்த சத்தியாகவும் வியா பரிக்கும் என்க. சத்திமானாகிய சுப்பிரமணியக்கடவுள், தமது சத்தியா னது இச்சா சத்தியாக வியாபரித்த காலத்து இச்சிதா எனவும், ஞான சத்தியாக வியாபரித்த காலத்து ஞாதா எனவும், கிரியாசத்தியாக வியா பரித்த போது கர்த்தா எனவும், அநந்த சத்தியாங் காலத்து அநந்தர்

* மதங்கம் என்பது உபாகமத்து ளொன்று. பன்னிரண்டு இலக் கம் கிரந்தங்களையுடைய பாரமேசுர ஆகமத்தின் பிரிவுகளுள் ஒன்று. பார மேசுரப் பிரிவுகளாவன—யக்ஷணி, பத்மம், பாரமேசம், பௌட்கரம், சுப் பிரயோகம், அம்சம், சாமான்யம், மதங்கம் என்னு மேழுமாம்.

எனவும் பெயர் பெறுவர். கிரியா சத்தி செந்தி, இரௌத்திரி, ஈசானி, பூரணி, ஆர்த்தி, வாமை, மூர்த்தி என எட்டாகவும் வியாபரிக்கும் என்க.

அவற்றுள் முதன் மூன்றுங் குமாரப் பெருமானுக்குச் சூக்கும வடிவாகவும், ஏனைய ஐந்துந் தூல வடிவாகவும் சொல்லப் படும். அன்றியும் செந்நியாற் படைப்பும், இரௌந்திரியினாற் காப்பும் மறைப்பும், ஆரணி சத்தியால் அழித்தலும் அருளலும் ஆகிய சூக்கும கிருத்தியங்களும், ஈசானி முதலிய ஐந்தானுந் தூல பஞ்சகிருத்தியங்களுஞ் செய்தருளுவர், இங்ஙனமன்றி வேறுவிதமாகவும் கூறப்படும். அவை வருமாறு:—குமாரக்கடவுளின் வல்லமை யொன்றே பரை, பராபரை, அபரை யெனமூவகைப்படும். அவற்றுட் பரை யென்பது குகப்பெருமானின் சுவசிற்சத்தியாகும். பராபரை யென்பது உலக உபாதான சத்தியாகும். அபரை யென்பது பரிக்கிரகசத்தியாகும். பரை யென்னும் சத்தி இரத்தை, சுக்கிலை, அசிதை, கிருட்டிணை, உன்மனை யென ஐந்து வகையாகும். பராபரை என்னுஞ் சத்தி இச்சா சத்தி, ஞான சத்தி, கிரியாசத்தி, ஆதிசத்தி என நால்வகைப்படும். அபரை யென்னுஞ்சத்தி பிராமிசத்தி, வைணவிசத்தி, இரௌத்திரிசத்தி என மூன்றுவகைப்படும். இச்சத்திகளையே அந்தணர் முதலாயினோர் முறையே காலை, உச்சி, மாலைகளிற் றியானிக் கின்றனர். பிராமி சத்தி ௬00-கோடிவிசால முள்ள இரத்தநிற மண்டலத்தில் சகல உலகங்களையும் படைத்தற்குக் காரணமாயிருப்பள். வைணவிசத்தி உ-கோடி விசாலமுள்ள சுவேதமண்டலத்திற் காத்தற்குக் காரணமாயிருப்பள். இரௌத்திரி ௩-கோடிவிலாச முள்ள விந்துமண்டலத்தில் அழித்தற்குக் காரணமா யிருப்பள்.

பராசத்தி ஞானமே யாக வியாபரித்த போது சிவதத்துவம் இலய தத்துவம், நிட்கள தத்துவம் எனவும், கிரியை யாக வியாபரித்த போது சத்திதத்துவம் எனவும், இரண்டுஞ் சமமாக வியாபரித்த காலத்துச் சதாசிவ தத்துவம், போக தத்துவம், உத்தி யுத்த தத்துவம், சகளநிட்கள

தத்துவம் எனவும், இச்சையாக வியாபரித்த காலத்து ஈசுர தத்துவம், அதிகாரதத்துவம் பிரவிர்த்தி தத்துவம், சகளதத்துவம் எனவும் பெயர் பெறும். அங்ஙனமேசத்திமானாகிய முருகப் பெருமானாரும் குகன், இலயன் நிட்களன் எனவும், சத்தன் எனவும், சதாசிவகுகன், போகன், உத்தி யுத்தன், சகளநிட்களன், ஈசுரன், அதிகாரன், பிரவிர்த்தன், சகளன் எனவும் வரூஉம் பன்னிரு திருநாமங்களையுங் கொண்டு நிற்பார். இதனை அவரது பன்னிரு திருக்கரப் பாங்கானும் உய்த்துணரப்படும் என்க. இக்காரணத்தால் இலய குகன், போககுகன், அதிகாரகுகன் என்னும் மூவகைச் சத்திமானும் அவரே யென்பது தெளியப்படும்.

இங்ஙனம் பராசத்தியின் வேறுபாட்டாற் றோன்றும் மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, எழு, எட்டு, பதின் மூன்று, ஐம்பத்தொன்று, அநந்தம் ஆகிய கூறுபாடுள்ள இச்சை முதலாயவற்றையும், அவாந்தர வேறுபாட்டால் வரும் மகாமாயை, உன்மனை, சமனை, வியாபினி, வியோம ரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை சூக்குமை, அதிசூக்குமை, அமிர்தை, அமிர்தாமிர்தை, வியாபினி, இந்திகை, தீபிகை, உரோசிகை, மோசிகை, ஊர்த்துவகை, நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை, சசிநி, அங்கதை, இஷ்டை, மரீசி, சுவாலினி, தமை, மோகை, இரகை்ஷ, நிட்டை, மிருத்தியு, அபயை, இரசை, இரதி, வால்யை, காமை, சம்மியமை, கார்யை, தாத்திரி, பலை, மேதை, காந்தி, சுவதி, திருதி, மனோன்மணி, உமை, திரு, வாணி என்னுஞ் சத்தி பேதங்களுக் கெல்லாந் தலைவரும், அவரேயாம். வாமை, ஜியேட்டை, இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி என்னும் எட்டுச் சத்திகளுக்கும் அதிபர் என்பது அறுமுகங்களானும் இரு திருவடிகளானு முணரப்படும்.

சுத்த வித்தியா தத்துவத்திலே யுள்ள பூர்ணோதரி, வீரசேனி, சான்மலி, உலோலாட்சி, வர்த்துளாட்சி, தீர்க்க நாசிகை, தீர்க்க முகி,

கோமுகி, தீர்த்த சிம்சு, குண்டோதரி, அர்த்த கேசி, விகிர்த முகி, சுவாலா முகி, உலூகமுகி, ஸ்ரீமுகி, வித்யா முகி, சாசுவதி, மகாகாளி, சாவசித்தி, சமன்மிதி, கௌரி, திரிலோக்கியை, வித்யை, மந்திர சத்தி, ஆன்ம சத்தி, பூதமா, தேவாம்போதரி, திராவிணீ, நகரீ கேசரி, மஞ்சரி, ருபிணி, விரைசேகர ரோதரி, பூதாதினி, பத்திரகாளி, யோகினி, சங்கினி, கர்ச்சினி, காளராத்திரி, கூர்த்தங்ய கபர்த்தினி முதலிய உருத்திர சத்திகள் ஐம்பத்தொன்றாகப் பராசத்தி யுருக்கொண்ட போது, பச்சிம புலவகான, நகரத்துப் புதுச்சந்நிதி என்னு மொருபெருங் கோயிலின்கண் ணெழுந்தருளும் குகேசக்கடவுளும் அவற்றிற் கேற்ப, ஸ்ரீகண்டர், அநந்தர், சூக்குமர், திரிமூர்த்தி, அமரேசர், அரபீசர், பராபூதி, திதீசர், தாணுகர், அர சேங்கிடேசர், புவுரீகர், சத்தியோசாதர், அநுக்கிரகர், ஈசுரர், அக்குரூரர், மகாசேனர், கிராதேசர், சண்டேசர், பஞ்சாந்தகர், சிவோததமர், ஏகருத்திரர், கூர்மர், ஏகநேத்திரர், சதுராननர், அசேசர், சரு, சோமேசுரர், இலாங்குலி, தாருகர், அர்த்தநாரீசுரர், உமா காந்தர், ஆஷாடி, இடிண்டி, அத்திரி, மீனர், மேஷர், உலோகிதர், சகித்தர் முதலிய ஐம்பத்தொரு உருத்திரர்களாக நின்று அவ்வித்தியா தத்துவ புவன கிருத்தியஞ் செய்தலின், அச்சத்திகளையுடைய சத்திமானும் குமாரக் கடவுளே யாவர்.

இவற்றானே எந்தையாராய குகனாரே சிவபெருமானாகிய முழு முதற் கடவு ளென்பதும், அவரே பிரேரக போக போக்கிய காண்டங்க ளென்னும் சுத்த சுத்தாசுதத அசுத்த தத்துவங்க ளாகிய சொற் பொருட் பிரபஞ்சங்களைப் படைத்துங் காத்தும் அழித்தும் மறைத்தும் அருளியும் விளையாடும் புவன பதித்துவ கர்த்தவ்விய சத்திமான் என்பதும் வெள்ளிடை மலைப்போற் றெள்ளிதி னுணரப்படுமென்க. இத்தகைய அநந்த கோடி சத்திகளை யுடைய தலைவனாதலிற் சுப்பிரமணியக் கடவுள் சத்திமான் பூர்த்தி யாயினார்.

சிவஞான சித்தியார்

சத்திதான் பலவோ வென்னிற் றொன்றே யனேக மாக
வைத்திடுங் காரி யத்தான் மந்திரி யாதிக் கெல்லா
முய்த்திடு மொருவன் சத்தி போலரா னுடைய தாகிப்
புத்திமுத் திகளை யெல்லாம் புரிந்தவ னினைந்த வாறும்.

ஒன்றதா யிச்சா ஞானக் கிரியையென் றொருமூன் றாகி
நின்றிடுஞ் சத்தி யிச்சை யுயிர்க்கரு ணைச மாகு
நன்றலா ஞான சத்தி யானயந் தறிவ னாத
னன்றருட் கிரியை தன்னா லாக்குவ னகில மெல்லாம்.

துகளறு போதம்.

கிரியையறி விச்சை கிளர்ந்த சத்தியேதோ
பெரியபரா சத்தி யெனப் பேசு.

சிவப்பிரகாசம்.

நிடுபரா சத்திக ழிச்சா ஞான
நிறைகிரியை தாவதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு வுருவ மாகி
நவின்றுபல கலைநாத விந்துவாதி
கூடுமொளி வளர்குடிலை மாயை மேவிக்
கொடுவினைகொ டனுகரண புவன போகம்
நீடுபெற நிறுவியவை யொடுக்கு மேனி
பிறங்கியிட் களசகளப் பெற்றி யாமே.

சித்தாந்த போதம்,

சத்தியுரு வெனலானும் மத்துணைவே றிருக்கரத்திற்
றுங்கலானுஞ்
சித்துருவின் றெழிலானுஞ் செவ்வேடன் வனசமலர்க்
காணுசெம்பாதம

வித்துரும முகத்தானு மன்னவனே சத்திமான்
விளம்புமீது
சத்தியமுக் காலுமிது சத்தியமே வேதமதுஞ்
சாற்றுஞ் சாட்சி.

ஓம் சத்திமான் மூர்த்தயே நம:

இரண்டாவது,

ஓம் ஞானசத்திதா மூர்த்தி.

சிவகுகப் பெருமானுடன் அபேதமாக விளங்கும் தடைப்படாத அறிவே ஞானசத்தி யெனப்படும். அந்தப் பராசத்தி யொன்றே ஆன் மாக்கண் மீது வைத்த பெருங்கருணைத் திறத்தானே மூவகைப்படும். அந்த மூன்று சத்திகளையும் உடையர் என்பதனை விளக்குதற்கே பெரு மான் வள்ளியம்மையார். தெய்வயானை யம்மையார், வேலாயுதம் என்னு மூன்றனையுங் கொண்டருளினர். இச்சா சத்தியையே வள்ளி யம்மையா ரென்றும், கிரியா சத்தியையே தெய்வயானை யம்மையா ரென்றும், ஞான சத்தியையே வேலாயுத மென்றும் உருவகித்துப் புராணாதி சுத்த வித்தை கள் புகலாநிற்கும். வேற்படைக்கலம் ஞான சத்தியென்பது, "எம் முடைய சத்தியே நம்மைக் கொல்லும்" என்று சிவபெருமான் சூர பன்ம ஞதியர்க்குச் சொன்னமையாலும், அவ்வாறே ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலம் என்றெண்ணப்பட்ட சூரபன்மன், சிங்க முகன், தாரகன் என்னும் மூவரையும், ஆகாமியம் சஞ்சிதம், பிராரத்தம் எனும் வினைப்பகுதியென்றெண்ணத் தகுந்த கிரவுஞ்ச மலையையும், அதன் கொடுவினைகளையும் அழித்தமையாலும், மற்றை யாயுதங்கட்கும்



ஞானசத்திதர மூர்த்தி.

வழங்கப்படாத சத்தி என்னுஞ் சிறப்புப் பெயரைத் தனக்கே யுடைமை யானும், மும்மல காரியத்தொகுதிகள் என்றெண்ணப்படும், சூரனாதி மூவரது சேனைகளையும் மாயங்களையும் வலிமைகளையும் அழித்தமை யானும்,

பொன்றிகழ் சடிலத் தண்ணறன் பெயரும்
பொருவிலா வுருவமுந் தொன்று
மன்றுபெற் றுடைய வருத்திர கணத்தோர்
நவிலருந் தோமரங் கொடிவாள்
வன்றிறற் குலிசம் பகழியங் குசமு
மணிமலர்ப் பங்கயந் தண்டம்
வென்றிவின் மழுவு மாகிவீற் றிருந்தார்
விறன்மிகு மறுமுகன் கரத்தில்.

என்று கந்தபுராணங் கூறியபடி தோமரம், துவசம், குலிசம், அங்குசம், அம்பு, பங்கயம், மணி, மழு, தண்டு, வாள், வில் என்னும் பதினொரு ஆயுதங்களும் பதினொரு உருத்திரர்களே யென்றும், வேலாயுதம் சிவசத்தியே அவ்வுருவாக வந்திருந்த தென்றும் கந்தபுராணம உரைத்தலானும், மற்றைய ஆயுதங்கள் போலச் சடத்துவமின்றிச் சித்தத்துவமுடைமையானும் பிறவாற்றானும் தெற்றெனத் தெளியப்படும். இன்னும் பராசத்தியை அபேத மென்னலால் அது பரம் பரனே யென்றுங் கருதப் படுதல் போல இவ்வேற் படைக்கலமும் கந்த சுவாமியே யென்று கூறப்பட்டிருக்கின்றது.

கந்த புராணம்.

அந்தமி லொளியின் சீரா லறுமுகம் படைத்த பண்பா
லெந்தைக ணின்றும் வந்த வியற்கையாற் சத்தியாம் பேர்
தந்திடும் பனுவல் பெற்ற தன்மையாற் றனிவேற் பெம்மான்
கந்தனே யென்ன நின்னைக் கண்டுளக் கவலை தீர்ந்தேம்.

இன்னும் ஒருபடையானுந் தான் அழிக்கப் படாமையாலும், தாமொன்றே பலப்பல உருவங் கொண்டு வென்றமையாலும், பாசங்களை நிக்கிரகிப்பது என்பதனைப் பானுகோபன், சிங்க முகன் என்பவருடைய மாயாபாசங்களாற் கட்டப்பட்டு வீரவாகு தேவர் முதலாயினோர் மயங்கிய வழி அவற்றை யறுத்தமை யானும் பெறுதும்.

இத்துணைச் சிறப்பினதாகிய பாசதறி என்னும் ஞானசத்தியைக் கொண்டு ஆன்மாக்களின் பந்தங்களை யறுத்துத் தமது திருவடிப்பேற்றை யளித்தருளத் திருவுருவங் கொண்ட பரமாரியன இச்சை, ஞானம், கிரியை என்னும் இவை மூன்றிலைபோலக் கிளைகொண்டு பவகடலைச் சுவற்றும் ஞானசத்தியாம் வேலாயுதத்தை வலத் திருக் கரத்திற் றரித்து, தாமரை மலர்போலும் இடத்திருக் கரத்தைத் தமது * குறங்கில் வைத்து, ஒருதிருமுகமும் இருவிழிகளும் உடையராய், கோடி சூரியப்பிரகாச மொருங்கு சேர்ந்த ஒளியுடையராய், தேவர்களும், வித்தியாதரர்களும் சூழ்ந்து சேவிப்ப வீற்றிருந்தருளுவர். ஞானசத்தியைத் தரித்தமையால் **ஞான சத்திதரன், ஞானசக்தி யாத்மா** எனப் பெயர் பெற்றார்.

$ குமார தந்திரம்.

𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 । 𑌏𑌕𑌾𑌸𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌂𑌵𑌾𑌮𑍇 𑌕𑌟𑌿𑌦𑌕𑍍𑌷𑌿
𑌣𑍇𑌖𑌕𑍇𑌰 । 𑌇𑌚𑍍𑌛𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌂𑌭𑌜𑍇 ॥

! சக்திதரஸ்வாமி! ஏகாஸ்யத்வி புஜம் வாமே கடிதக்ஷிணே கேகரே; இச்சா ஞான க்ரியாசக்தி ரூப சக்தி தரம் பஜே!!

$ குமார தந்திரம் என்பது எண்ணாயிரம் சுலோகங்களையுடைய இலளிதம் என்னும் ஆகமத்தின் முப்பிரிவினுள் ஒன்று. இது குமாராகமம் எனவும், கௌமார தந்திரம் எனவும் வழங்கப்படும். கௌமார தந்திரமென்னும் உபாகமம் இக்காலத்து இல்லையாயிற் றென்றும், இப்போதுள்ளது குமாரவிதிபற்றிய சாரதாதிலகம் முதலிய அநேக நூல்களின் றிரட்டு என்றுஞ் சிலர் கூறுவர். "எந்தையுமை தேர்ந்திட வியம்பிய குமார தந்திர விதிப்படி தவாதறு முகற்கு" எனக் கந்த புராணமுறைத் தலுங் காண்க.

* குறங்கு அரை.

தாரகாந்தக மூர்த்தி.

தணிகைப் புராணம் அகத்தியப் படலம்.

இச்சா ஞானக் கிரியையெனு மிவைமூன் றிலையாய்க் கிளைத்தெழுந்திட
டச்சா ஞாதி யறச்சுவற்று மயில்வே லொருகை வலக்தமைத்து
நச்சா தவரைத் தெறுமொருகை நளினங் குறங்கி னமைத்தி மையோர்
விச்சா தார்சூழ் ஞான சத்தி தான துருவம் விதிப்போரும்.

ஓம் ஞான சத்திதா மூர்த்தியே நம :

மூன்றாவது,

தாரகாந்தக மூர்த்தி.

முன்னர்க் காலத்திலே அசுரர்க் கெல்லாந் தலைவனா யிருந்த தாரகன்* ஒருவ னுளன், அவன் பிரம தேவரை நோக்கி ஐம்பதினாயிரந் தேவ வருடம் தவஞ் செய்தான். அது கண்ட மலரோன் தோன்றி வேண்டிய வரங்களைக் கொடுத்தான் அதனாலே சுவர்க்க மத்திய பாதலங்களி லுள்ளார் யாவரையும் வென்று, அவரெலாக தன்னேவல் கேட்டு நிற்ப அரசு செய்வா னாயினான். மும்மூர்த்திகளையும் வெல்லத் தகுந்த திறலை யுடைய தன்னைப் போன்ற மூன்று புத்திரர்களைச் சிவாநுக்கிரகத்தாற் பெற்றான். தனக்கு எதிர் ஒருவரு மின்றித் திருமால் முதலிய யாவரை யும் வென்று கடந்தவ னாதலால் தாரகன் எனக் காரணப் பெயரோடு விளங்கினான். (தாரகம்—கடத்தல்) அவன் றன் மைந்தர்களாகிய தார காக்கன், கமலாக்கன், வித்துன் மாலி யென்னும் மூவரையும் நோக்கி, மைந்தர்காள்! என்னை யித்தகைய பெருநிலையில் வீற்றிருக்க வைத்தது தவமே. தவத்தைப் பார்க்கிலுஞ் சிறந்த தொன்றில்லை. அதனால்

* இத்தாரகன் சூரபன்மனது தம்பி என்று சிலர் கூறுப. அவ னன்று. இவன் திரிபுரத்தசுரர் தந்தையாகலின் வேறாயினான் என்க.

அடையப் படாத பொருள்களு மில்லை. ஆதலால் அழியாத வரத்தைப் பெறுதற்கு அருந்தவஞ் செய்மின் என்றான். அவரும் அதனைச் சிர மேல் வகித்துச் சென்று தவங்கிடந்தார். இவற்றை யுணர்ந்த தேவர், முனிவர், இந்திரன், பிரமன், திருமால் முதலிய மேலவர் யாவரும் என் செய்வேம் என்று வியாகுலங் கொண்டு அவனிடம் ஏவல் செய்யப் போகாது வைகுண்டத்தி லிருந்து யோசித்தார்கள்.

என்னை? தாரகன் இணையொருவ னின்றி யெங்களை யேவல் கொண் டான். அவனால் யாம்படும் வருத்தங்களோ அளவில. ஆகவே யவனொடு மைந்தரும் அழியாவரம் பெற்று வருவரேல் எங்கதி எவ்வாறாகும். என் றிவ்வாறு எண்ணி யெண்ணி யேக்க முற்றார். தாரகனையும் அவன் மைந்தர்கள் மூவரையும் கொல்வதற்கான உபாயங்கள் பலவற்றை யாராய்ந்து அபிசார வேள்வி யொன்றை யாற்றுவாராயினார். தாரகன் இதனையறிந்து தேவர்கள், முனிவர்கள், யாவரையும் வேரோடு அழிப்பே னென்று உருத்தெழுந்து வைகுண்டத்திற்குச் சென்றான். திருமால் முதலியோர் அறிந்து நடு நடுங்கிப் புகலிடம் யாதென்று பொன்மலையைத் தேடி யோடிச் சென்று புகுந் தொளித்திருந்தார். தாரகன் ஆங்கும் பெருஞ் சீற்றத்துடன்போய், தேவர்களே! முனிவர்களே! நும்மபடித் தன்மை வியக்கத்தக்கதே யென்று இகழ்ந்து, இதோ நுங்கட்கு இடந் தந்த மேருமலையை வேருடன் பிடுங்குகின்றேன். அதன்பின் எவ்விடத் துப் புகுவீர் என்று முழங்கி, முன்னாக்காலத்து வெள்ளிமலையையெடுத்த இராவணன்றன் மூத்தோனானேயென்ன, தன் இருகைகளாலுங் குடைந்து மேருமலையை மேலே தூக்கினான். குடைபோலச் சரித்துச் சுழற்றினான்; குலுக்கினான்; பிரசண்ட மாருதம் ஆர்த்தடித்த போது சிறுமரக் கொம்பரி னுள்ள அறக் கனிந்த பழங்கள் கீழ் வீழ்தல்போல, தேவர் முனிவர் இந்திரன் பிரமன் விட்டுணுமுதலாயினோர் யாவருங் கீழ் வீழ்ந்து ஓடிக் கயிலைக்குச் சென்றார். தாரகன் அவரோடியதுகண்டு மலையை முன்போல நிறுவியூர்க்குச் சென்றான்.

பிரமதேவரிடத்துஞ் சிவபெருமா னிடத்தும் வரப்பிரசாதமடைந்த தாரகன் என்பான் மூவுலகையும் அடிப்படுத்தி யாளாநிற்புழி, பிரம விட்டுணு முதலிய தேவாகளும் ஏனைய கணத்தவர்களும் மிகக வச்ச முற்றோராய்க் காடு, மலை, கடல், அண்டப்புறம் என்னு மிவ்விடங்களி னுருமாறி வசித்தார்கள். அவருள் இந்திரன் றாரகனோ டெதிர்த்துத் தன் வச்சிராயுதத்தை யெறிய, அது துரும்பு போன் மடிந்து கீழ்விழவே அச்சங் கொளீஇ மனைவியாகிய இந்திராணியும, குமாரனுஞ் சயந்தனும் உடன்வா இருடி வடிவமெடுத்து, ஓாவனக்கட் பன்ன சாலையி னிருந்தான், அக்கினி மடைத் தொழில் செயதான். வருணராசன் புனல் வழங்கினன். வாயுதேவன் அரண்மனைத் துகள் துடைத்து அலைந்தான். மற்றைய வானவரும் இட்ட குற்றேவல்களைச் செய்தார். சூரியனும் மறைந்து வானிற் சென்றான். பிரமதேவர் தமது மனோவதியி னின்றும் நீங்கித் தோணிபுரம் என்னுஞ் சீகாழிப் பதியை யடைந்து, வாணியுந் தாமுமாக இருடிவேடந் தரிததுப் பூசித்திருந்தார். அதனாலே அப்பதி பிரமபுரம் எனப்பெயருற்றது. வாமனராம் வாசுதேவர் தாரகனோடு பொருது தோற்று, வைகுண்டத் திருததற்கு வெருவி மீன்வடி வெடுததுச் சமுத்திரத்தில் வீழ்ந்து சஞ்சரிததிருந்தார்.

இஃதறிந்த தாரகன் வைகுண்டஞ் சென்று ஆங்குள்ள சித்திர சபையின்கண் இருந்து அரசுசெய்தனன். அங்கணுள்ள விரசாநதியின்கண் விட்டுணுவி னேவலால் அங்கிதேவன் சூலங்கொண்டுவா அவுணன்கண்டு வெருட்ட வருந்தி யோடி யவண் வாரானாயினன்.

இங்ஙனம் வருத்தமுற்ற தேவர்கள் யாவருந் திருக்கயிலாய மலையை யடைந்து அரனை யஞ்சலித்து வணங்கி யேத்தி, அடியரிடர் தீர்த்தருளும் ஐயனே! தாரகனாற் படுந் துன்பம் அடியேங்களாற் சகிக்க வொண்ணாது. அதனை நீக்கி யருள் புரிக என்று பெரிதும் வேண்டினார். மகேசப் பெருமான் அவர் துன்பத்தை யறிந்து தந்திருவுளத்து உன்னிய

மாத்திரையே, ஆறுமுகமும், பன்னிரு விழிகளும், அபயம், வாள், சூலம், சக்கரம், முசலம், வேல் என்பன வமைந்த வலத் திருக்கரம் ஆறும், வரதம், கொடி, கேடகம், அங்குசம், பாசம், குலிசம் என்பன அமைந்த இடத்திருக்கரங்கள் ஆறுங் கொண்ட, கோடி சூரியப்பிரகாசம் போன்ற திருவுருவ முவடயராய், சுப்பிரமணியப் பெருமான் அவரது இருதயத்தினின்றுந் தோன்றி யருளினர். சிவபெருமான் அவர் திருமுகம் நோக்கி, குமார! தாரகனை வதைத்துத் தேவர் துன்பை நீக்குதி யென்று அனுப்ப, குகப் பெருமானர் படைகளொடுஞ் சென்று * தாரகனுடன் பத்துநாட் பொருது சுக்கிர வாரத்து இரவிலே கொன்று, விட்டுணு முதலிய தேவர்களை முன்போ லிருத்திக் குமார சிகரத்தின்க ணெழுந்தருளினர். தாரகாசுரனுக்கு அழிவைச் செய்தமையால் தாரகாந்தக மூர்த்தி எனப் பெயர் பெற்ருர்.

சிவரகசியம். (பரம இதிகாசம்.)

தாரகன் கதையுரைத்த அத்தியாயம்.

ஆனகேளசுரருக்கிகலனைவரியுந்
தானவன்சமரினொந்துதளர்வுற்றுவலிபோய்
மீனமாயுவரிமீதினில்விழுந்ததுமலா
லூனமுற்றொழியுமின்மினியையொத்தனனரோ.

இத்திரத்தமரர்யாவருமிடந்தயரவே
முத்திறத்துலகும்வௌவியமுரண்கொளசுர
னத்தெடுத்தவனலங்கொள்பதிநண்ணியவன்வாழ்
சித்திரச்சபையிருந்தரசுசெய்தனனரோ.

---

* இவன் இருந்த இடம் திருக்கூவமென்று அத்தல மான்மிய முரைக்கின்றது. இவனுடன் பொருதஇடம் தொண்டை மண்டலத்திற் செங்கற்பட்டு என்னும் ஊர்க்குச் சமீபத்துள்ள திருப்போரூர் ம்ன்ப. சமர புரி என்ற காரணப் பெயரானும் போதரு மென்க.

கணபதியுடன் கடவுளுத்தரச் சருக்கம்.

என்றுகங்கைமைந்தனையாமேவினேமவனிவ்வாறிதயத்துன்னிச்
சென்றுதாரகனையடர்த்தெய்தினனப்பரிசுதிகழுந்தொந்திக்
குன்றனையதந்திமுகத்துண்டிவிநாயகன்சரணங்குறித்துப்போற்ற
நன்றிகொளுன்றுயிடத்தி னடத்தியென வெடுத்துரைத்தானுதன்றனே,

குமார தந்திரம்.

கௌசிகசங்கிதை மந்திரோத்தாரப் படலம்.

𑌤𑌾𑌰𑌕𑌾𑌰𑌿𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 । 𑌵𑌰𑌦𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌧𑍍𑌵𑌜𑌖𑍇𑌟𑌕𑌚𑌾𑌪
𑌵𑌜𑍍𑌰𑌾𑌭𑌯𑌪𑌾𑌶𑌵𑌜𑍍𑌰𑌖𑌡𑍍𑌗𑌮𑍁𑌸𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌨𑍍𑌵𑌹𑌮𑍍 । 𑌦𑍍𑌵𑌿
𑌦𑌶𑌪𑌾𑌣𑍍𑌯𑌰𑍍𑌪𑌿𑌤𑌦𑌤𑍍𑌤𑌦𑌾𑌨𑌮𑌰𑍁𑌣𑌕𑍋𑌟𑌿𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌂 𑌭𑌜 𑌤𑌾
𑌰𑌕𑌾𑌰𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰 𑌭𑌵𑌨𑌾𑌶𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 ॥

! தாரகாரிஸ்வாமி ! வரத மங்குசத்வ ஜௌச கடக சாப
வஜ்ர மப்யபய பாச வஜ்ர கட்க முசல சக்தி மங்வஹம் !
த்விதசபாணர்ப்பிதத்ததாந மருணகோடி சந்நிபம் பஜத
தாரகாரி மத்ர பவநாச காரணம் !!

தணிகைப்புராம் - அகத்தியனருள்பெறு படலம்.

வரதங்கொடிகே டகங் தோட்டி வளர்ந்த வெறுழ்ப்பா சங்குலிசம்
பரவு·மபயம் வாள்சூலம் பரிதி முசலம் வேன்முந் நாற்
காமும் விளங்க வறுமுகமுங் கதிர்ப்ப விழிகள் கருணைமழை
தரவென் றருளுந் தாரகாந்த கன்சீ ருருவஞ்சமைப் போரும்.

பழநித் தலபுராணம்-வசுமந்தச் சருக்கம்.

பாவடி யானைத் தாரக னுயிருண் படையொள்வேற்
தேவர்க டேவன் கதையமு துண்டான் செவிவாயான்

மேவின ளோர்பா லான வரைப்பான் மிளிர் நெல்லிக்
காவி லடைந்தான் றூபதா குழிலைக் கண்ணுற்றான்.

கூர்மபுராணம்-திரிபுரதகனமுரைத்த அத்தியாயம்.

காந்தை ழ் மேருவெற்பைக் கடவுளர் வெருவி யோட
வொராடும் பிடுங்கி மீட்டும் வைத்திடும் விறல்கொ டிண்டோட்
டாரகன் றன்னை வெற்றி யறுமுகன் சாய்த்த பின்னர்ச்
சீர்கெழு மவன்றன் மைந்தர் திசைமுகற் பழிச்ச லுற்றார்.

தாரகாந்தக மூர்த்தியே நம:

நான்காவது,

வராகோன்மத்த பங்க மூர்த்தி.

பிரமதேவன் புத்திர ரான காசிபமுனிவர்க்குப் பதின்மூவர் மனை வியர். அவர் அதிதி, திதி, தனு, அரிட்டை, சுரசை, கடை, சுரபி, விநதை, தாம்பிரை, குரோதவசை, இளை, கத்துரு. முனி என்னும் இவரேயாம். இவர்களுள் திதி யென்பா ளிடத்திலே இருவர் மக்கள் பிறந்தனர் அவருட் பொன்னிற முடையான் இரணியன் எனவும், பொன்னிறமான கண்களை யுடையவன் இரணியாக்கன் எனவும் பெயர் பெற்றனர். இரணியம்—பொன், அக்கன்—கண்களையுடையவன். இவர் கள் இருவரும் வைகுண்ட துவார பாலகரான விசயன், சயன் என்ப வரே. பிருகு முனிவர் சாபத்தால் இங்ஙனம் பிறந்தனர். இரணிய னுக்குப் பிரகலாதன், அநுகிலாதன். சங்கிலாதன், கிலாதன் நால்வரும், அவருட் பிரகலாதற்கு விரோசனனும், அவனுக்கு மாவலியும் குமாரராகப் பிறந்தனர்.

இரணியாக்கன் என்பான் தவவலிமையுடையனாய், சர்ச்சரன், சகுனி, பூததந்தாபனன், மகா நாபன், மகா வாகு, கால நாபன் என்னும்

33/8

வராகோன்மதத பங்க மூர்த்தி.

ஆறுபுத்திரர்களைப் பெற்று மூவுலகமுந் தனது ஏவல் கேட்ப அரசியற்றி னன். தானே பிரமம் என்றுந் தன்னை யன்றி வேறு கடவுள் இல்லை யென்றும் அகங்காரங் கொண்டான். இவ்வாறாய மாயாவாதக் கொள்கையை யுடைய இரணி யாக்கன் இடம் ஓர் முனிவர் சென்று பூதேவி நாயகனான மாயவனே கடவுள் என்றார். அது கேட்ட இரணியாக்கன் முனிவரைச் சினந்து, அப்பூமி தேவியைப் பாயாகச் சுருட்டிப் படுகடலிற் கறைத்து விடுகின்றேனென்று தன் தவ வலியாற் பாயாகச் சுருட்டிக் கடலிற் கொண்டு சென்றான். தேவர்களும் முனிவர் அந்தணர் முதலியோரும் ஓலமிட்டனர். பூமிதேவியும் நாராயணா! மாதவா! என்னைக் காத்தருள்க, என்று அபயமிட்டாள். மாலார் அவற்றை யுணர்ந்து ஆதிவராகம் போன்ற வராகரூப மெடுத்துச் சென்று, ஏழு கடல்களுக்கும் அப்பாற்பட்டு, அளவின்றி நின்ற பெரும்புறக் கடலுட் சென்று முழுகி, இரணியாக்கனோடு போர் செய்து தமது தந்தத்தால் இடித்து அவனைக் கொன்று பூமியைத் தங்கொம்பி னுனியில் தாங்கி மேலெழுந்தார். கொண்டபூமியை முன்போல நிறுத்தினார். அதுகண்ட உயிர்களும் மேலுலகத்தவருந் துதித்தார்கள். அதனாலே விட்டுணுவாகிய பன்றிக்கு அகங்காரந்தோன்றித் தானே முழுமுதற் கடவுளென்று பிரமையுற்று, இரணியாக்கனது இரத்தத்தைப் பானஞ்செய்த வெறியினாலும் ஒன்றுந் தெரியாததாகிப் பூமியைக் குத்தித் தோண்டிக் கடலினுக்குள் வீழ்ந்து கலக்கி உயிர்களையு மலைத்து மதங்கொண்டு குமுறித் திரிந்தது. பிரமன் இந்திரன் தேவர் முனிவர் முதலாயினோர் திருக்கைலாய பதியிடத்திற் சென்று முறையிட்டனர். வேத புருடசூக்தத்திற் பிரதிபாதிக்கப்பட்டவராய், பதினைந்து முகம், பதினைந்து பாதம், அவ்வளவு திருக்கரங்கள், நாற்பானைந்து விழிகள் என்னு மிவையுற்ற திருவுருவத்தையுடையராய் விளங்கும் ஆதி சதாசிவப் பெருமான் தம்மிடத்தினின்றும் ஆறு திருமுகம், பன்னிருகை, முப்பாதம் என்னும் உறுப்புகளையுடைய ஆப்தேசகியா குகப்பெருமானை அனுப்பியருளினர்.

" ஆத்தியன்னியவஸ்நரீதி " என்று வேதம் முழங்கித் துதித்த மகேசுரரான அறுமுகப்பெருமான் உயிர்களை வருத்தும் அகங்காரப் பன்றியைத் தேடிக் கண்டு, தந்திருவடியால் ஓர் உதை உதைத்தார். பன்றி அண்டச் சுவர் இடிந்து வீழ்ந்தாற் போல வீழ்ந்தது வீழ்ந்த மாத்திரையே பெருமானார் அதன் பிற்காலிரண்டனையும் பிடித்துக் காகா வென்று சுழற்றினார். பானுகம்பன் தன் ஆயிரம் வாயினுஞ் சங்கை வைத்து முழக்கினான். தேவர் பூமாரி பொழிந்து அபயமிட்டார். பிரமர் வந்து இவ்வளவிற் றேவரீர் உயிர்ப்பிச்சை யளித் தருள்க வென்று குறையிரந்தார். பெருமானார் விட்டுணு வாகிய வராகதோத்திரத்தையுங் கேட்டுத் திருவுள மிரங்கி, அதன் கொம்பரை மாத்திரம் பிடுங்கிச் சென்று சிவபெருமானது திருமுன்வைத் தருளினார். இறைவனார் தேவர்கள் வேண்டு கோட்படி தந்திருமேனியி லணிந்தருளினர். திருமாலாகிய வராகமூர்த்தி அகங்காரந் தொலையப் பெற்று, சிவசண்முக உற்கருடங்களை யெல்லாந் தெளிவிக்கும் வராகபுராணத்தைத் தம்மையடுத்த தேவர் முதலாயினார்க்குக்கூறி வைகுண்டமடைந்தனர். திருமாலாகிய வராகத்தின் வெறித் தன்மையாகிய அகங்காரத்தை யடக்கின்மையால் வராகோன்மத்த பங்கமூர்த்தி எனப் பெயருற்றனர், இவ்வவதாரம் பிரதம மகா சிருட்டி யாரம்பத்திலே வந்த வராககற்பத்திலே யாகும்.

* சங்கர சங்கிதை - உபதேச காண்டம்.

அறுபத்து நான்காம் அத்தியாயம். (௬௫-௭௪) சுலோகங்காண்க.

---

* பொற்கண்ணனாகிய இரணியாக்கனைக் கொன்று உன்மத்தங் கொண்ட மாயப்பன்றியின் கொம்பைமுறித்துக் கொடுக்க, சிவபெருமான் அணிந்தருளியதலம் திரு அரதைப் பெரும்பாழில் என்னும் அரித்துவார மங்கலம் என்ப. இது சோழநாட்டிற் காவிரியின் தென்கரையி லுள்ளது.



கூர்ம பங்க மூர்த்தி.

சிவரகசியகண்டம்-யுத்தகாண்டம்.

கா-அத்தியாயம்-௩௯-சுலோகம் பார்க்கவும்.

(ஆதி வராக மூர்த்தியின் சிங்கப் பல்லைப் பிடுங்கின பலசுப்பிரமணியர்கள் போல விளங்கினார்,)

கந்தபுராணம்-இரணியன் வதைப்படலம்

அங்கண்மா ஞாலந் தன்னை மேலினி யகழு மோட்டுச்
செங்கண்மா லேன மாகை யெயிற்றையோர் சிறுகை பற்றி
மங்குல்வா னுலகிற் சுற்றி மருப்பொன்று வழுத்த வாங்கித்
தங்கணா யகற்குச் சாத்தச் சண்முக னளிக்கு மென்பர்.

வராகோன்மத்த பங்க மூர்த்தயே நம:

ஐந்தாவது,

கூர்ம பங்க மூர்த்தி.

முன்னர்க் காலத்திலே தேவர்க்கும அசுரர்களும் பகைமுற்றிப் போர் மூண்டது. அப்போரிலே தேவர்களிற் பலரும், அசுரர்களிற் பலரும் இறந்தார்கள். அதனை யிருபகுதி யாரு மறிந்து சாவாமல் நின்று யுத்தஞ் செய்யும் வழியை யருள் செய்ய வேண்டு மென்று முகுந்த மூர்த்தி யிடத்தில் முறையிட்டுக் கொண்டனர். அவர் இருபகுதி யாரையும் அழைத்துச் சென்று, மந்தர மலையை மததாகவும் சந்திரனை அடைதூண் ஆகவும் நிறுத்தி, வாசுகியைக் கயிறாகப் பூட்டி, தேவர்கள் வாலினும், அசுரர்கள் தலையினும் பிடித்து இழுத்துக் கடையும்படி செய்தார். இவர்கள் இழுக்கும் விசையினாலே வாசுகி யென்ற சர்ப்பம் உடல் தேய்ந்து வருந்திப் பொறுக்க முடியாமல், தனது ஆயிரம் வாய்களினு முள்ள காளி, காளாத்திரி, யமன், யமதூதி என்னும் நால்வகைப்பட்ட நாலாயிரம் பற்களினின்றும் விடத்தைக் கக்கியது. அது ஆர்ப்பரித்து

உருத்திராக்கினி போல் வருதலும் தேவரும் அசுரரும் பயந்து ஓடினர். நாராயணமூர்த்தி "நான்காப்பே"னென்று எதிர் நின்று நஞ்சின் வேகம் பட்ட மாத்திரத்தே பவளவண்ணமா யிருந்த மேனியெல்லாங் கறுக்க, அஞ்சி யோடிக் கயிலாய பதிக்கு அறிவித்தார். அவர் அதனைச் சுந்தர மூர்த்தி நாயனாரைக் கொண்டு வருவித்து உண்டு நீலகண்டராய்

தேவர்களும் அசுரர்களும் விட்டுணு பிரமனென்னு மிவருடன் சென்று முன்போற் கடைந்தார், மந்தரமலை பாதலத்தில் அமிழ்ந்திற்று, திருமால், விநாயக பூசை செய்யாமையால் அன்றோ இவ்வல்லல்கள் சம்பவித்தன என்று கணபதி பூசை செய்து கடைவித்தார். கடையுங் காலத்தில் மந்தர மலை, மேலும் கீழும் பக்கத்தும் சரிந்து போவதைப் பார்த்து, திருமா லானவர் ஆயிரங் கைகளையுடைய கூர்ம வடிவங் கொண்டு, மந்தரமலைமேலே யெழும்பாதும், கீழே யாழாமலும், பக்கத்திற் சரியாமலும் கைகளால் தாங்கி, தோன்றிய அமிர்தத்தைத் தேவர்க்குக் கொடுத்தார் அதனால் விட்டுணு தன்னை விடப் பரப்பிரமம் வேறு கிடையாதென்று அகங்காரங் கொண்டு ஆயிரங் கைகளாலுங் கடலைக் கலக்கி உலகினுக்குப் பெருந் துன்பத்தைச் செய்வாராயினர் உயிர்களெல்லாம் இறக்குங்கால நேரிட்டது. நட்சத்திர கூட்டங்களுஞ் சூரிய சந்திரர்களும் விண்ணிற் சஞ்சரித்த லின்றி யலைந்து பரம பதியை நோக்கி யோலமிட்டுக் கதறினர். பாற்கடல், கூர்மங், கலக்கி மோதுதலாலே பொங்கிப் பிரளய வெள்ளம் போல வழிந்து உலகத்திற் பரந்து உயிர்களை வாரி யழிக்கத் தொடங்கிற்று.

தேவர் முனிவர் முதலாயினோர் யாவருஞ் சிவபெருமானது சந்நிதியிற் சென்று காளகண்ட மூர்த்தியே! நீலமேகம் போன்ற பெருங் கூர்மத்தினாலே யாமெல்லாந் துன்பம் அடைகின்றோமென்று புலம்பி முறையிட்டார். பெருமானார் திருப்புன் முறுவல் கொண்டு, அன்பர்களே! அஞ்சாதீர் என்று அபயங் கொடுத்து, தந் தொடைமீது இருந்த சுப்பிர

மணியக் கடவுளைத் திருநோக்கஞ் செய்தருளினர். புதுச் சந்நிதிக் கந்நாதன் அக்குறிப்பை யோர்ந்து விரைவிற் பாற்கடல் சென்று ஓர் உங்காரஞ் செய்தார். விட்டுணுவாகிய கூர்மம் அவ்வுங் காரத்தைக் கேட்டு வலியொடுங்கி யிடிகேட்ட சர்ப்பம் போல் தியங்கி மூர்ச்சையாயிற்று அதுபோது சுப்பிரமணியப் பெருமானுடன் பின்றொடர்ந்த அரிகர புத்திரர் தமது தாயான கூர்மத்தைப் பற்றிக் கரகர வென்று இழுத்து வெளியிற் கொண்டு வந்தார். கந்தவேள் தந்திருவடியானே எற்றுதலும் * கூர்மம் அண்டமுகடு மேலிடிந்து விழுந்தாற் போல மேலே யெழுந்து, நிலம் பிளக்கத் திக்குகள் செவிடுபடப் பேரொலியுடன் கீழ்விழுந்து மல்லாந்தது. முருக வேள் இருப்புலக்கை கொண்டு ஓரடியடிக்க வுன்னும் போது, தாமரை மலர்ப் பொகுட்டில் வீற்றிருக்கும் இலக்ஷ்மி தேவி கேட்டு ஓடிவந்து கண்ணீர் விட்டு வணங்கி,

மருவார் செழுங்கூந்தல் வாணிகலன் பூண்டிருப்பத்
தருநீழன் மேவிச சசிவாழ்வி னேடிருப்பத்
திருவோ திருவிழப்பா டேவர்கு ளாமணியே
மருகோ யுயிரளித்தென் மங்கலநாண் காப்பாயே.

மங்காத காமர்பிடி மான்மருங்கு வைத்தருளு
மெங்கள் பெருமானே யேத்துவார் கண்மணியே
கங்கை குமாரவென் காதலனை யுய்வித்து
மங்கலநாண் பிச்சை வழங்காய் வழங்காயே.

மூவரென வோது முதற்றே வரிலொருவ
னுவி யழிந்தா லவுணர்வினை யேசாரோ

---

* கூர்மத்தின் அகங்காரத்தை யொழித்து ஓட்டினைப் பிடுங்கிய தலம், சோழநாட்டிலே காவிரிநதியின் தென்கரையினுள்ள திருத்தண்டலை நீணெறி என்பதாம். அது திருக்கடிக்குளம் என்னுந் தலத்திற்கு வடகிழக்கே பதினொன்குமயில் தூரத்திலுள்ளது.

தேவரிடர் தீர்ப்போய் சிற்றடிச்சி மங்கலநாண்
காவல் புரியாயே லென்றுங்களைகண்ணே.

என்று துதித்துத் தனது முன்றானையை நீட்டித் தாலிப் பிச்சைகொடுத் தருள வேண்டு மென்று குறை யிரந்து கேட்டாள், எம்மை யடிமை யாகவுடைய கதிரை நாயகக் கடவுள் இலக்குமியாரின் றுதிக்கு இரங்கி, விட்டுணுவாகிய கூர்மத்தி னுயிர்போக்காது ஓட்டை மாத்திரம் பெயர்த்து, உறுதிக்கூறிக் கயிலை யடைந்து தமது தந்தையார் சந்நிதியில் ஓட்டினை வைத்து நின்றார். தாணுவாய் நின்ற சங்கர பகவான் குமா ரரை யணைத்து முதுகு தைவந்து பக்கத்தி லமரச் செய்தனர். பின் னர்த் தேவர்களை நோக்கி இவ் வோட்டினை யென் செய்து மென்று வினவ. அவர்கள் வேதமுதலே! தேவரீர் திருமேனியி லோராபரண மாகத் தரித்தருள வேண்டு மென்று வேண்ட, பரமனார் அவ்வாறே தரித் தார், அது முதல் எமது குமாரக் கடவுளுக்குக் கூர்ம பங்க மூர்த்தி யென்னுந் திருநாம முண்டாயிற்று. திருமாலாகிய கூர்மமும் மயக்கந் தெளிந்து சிவனையுங் குகப் பெருமானையும் வேதங்களாற் றுதித்து, தெளிந்த அறிவுடனே நாரதர் முதலிய முனிவர்க்கும் பிறர்க்குஞ் சிவ பெருமானது பிரபாவங்களை யுணர்த்துங் கூர்ம புராணத்தைக் கூறித் தவ்வடிவுடன் வைகுண்டஞ் சார்ந்தது.

கூர்ம புராணம்-இந்திரத்யும்நன் முத்திபெற்ற அத்தியாயம்.

கரைகொன் றிரங்கு திரைக்கடல்வான்
குழிசி யாகக் கறையனல்வா
ளரவங் கயிறு மதிதறியா
வமர ரமுதங் கடைந்தெடுப்ப
வரைமுன் னிடலுந் தாழாது
மாயோன் வளர்கூன் புறத்தாமை
யுருவிற் றாங்கிக் கடன்மதித்து
வானோர்க் கமுத முதவினான்.

பாகவதம் - கூர்மப் படலம்.

படிதிசை ககன முதலெரிந் திடவான்
பரந்துவந் தெதிருமா விடத்தைக்
கொடியிடை பாக னுலகெலா முவப்பக்
கோமள வங்கையி னேற்பக்
கடுகுபோ லாலந் திரண்டமர்ந் திடலுங்
கடிதினில் விழுங்கிடக் கண்டத்
திடையினி லமர வெழிலுறு காள
கண்டனாம் பெயரிறை யானான்.

அந்தரந் திசைபா ரடங்கலு மெரித்தங்
கடர்த்திடு மாலகா லத்தைக்
கந்தரந் தரித்த விறையினைக் கண்டே
களிப்புறு மமரரோ டவுணர்
துந்துபி முழங்கத் தருமலர் பொழிந்து
துதித்துநின் றாடினர் பாடி
யெந்தைநீ யெமைக்காத் தருளுமீ சனுநீ
யென்றடி யிறைஞ்சியேத் தினரால்

கதிர்காமக் கோவை - ஊர்பெயர் வினாதல்.

வினைமாலை யஞ்சுறப் புற்றவன் வேலை வடித்தெழுப்ப
வனமாலை யஞ்சுறப் போடது கொண்டுதந் தைக்குவைத்த
வனமாலை யஞ்சுறப் பேவயில் கொண்டவன் வாழ்கதிரை
வனமாலை யஞ்சுறப் பாயிடம் பேர்தமை வாய்ந்துரையே

கூர்ம பங்க மூர்த்தயே நம:

ஆறுவது.

புலிங்க மூர்த்தி.

சிவபெருமான் உமாதேவியாரை விவாகஞ் செய்து திருக்கயிலை மலையின்கணெழுந்தருளி யிருக்குங் காலத்திலே சூரபன்மனது கொடுந் துன்பத்திற்கு ஆற்றாத தேவர், முனிவர், கந்தருவர், நாகர் முதலாயினோ ரும், இந்திரன், பிரமன், விட்டுணு என்பவரும் மேருமலையிற் கூடி யெண்ணுவாராயினர். யோகியாயிருந்த சிவபெருமான் எம் பிரார்த் தனைக்கு இரங்கி யுமையவளை வதுவை செய்தருளினர். செய்தும் ஒரு திருக்குமாரரைப் படைந்து எம்மைக் காக்காது வாளா விருக்கின்றனர் அவரை நோவதிற் பயனில்லை யாங்கள் தவஞ் செய்திலேம், தவறு களைசெய்தேம், இன்னுங் கைலாசபதியை வேண்டுவே மாயிற் றிருவுள மிரங்குவர் என்றனர் அப்போது பிரமதேவர் "சிவபெருமானது செய் கையை யறிந்தே போதல் தகுதி" என்ன, வாயுதேவனை யனுப்பினர். அவனும் இவர்பிடிவாதத்தினாலே யஞ்சி யஞ்சி, சோலைமலர் வாசனை யளாவி, கங்கை தோய்ந்து, தென்றலாய் அசைந் தசைந்து மெல்லெனத் திருக்கோயிலிற் செல்வானாயினன் திருநந்தி தேவர் கண்டு உரப்பினார். இடிகேட்ட சர்ப்பம் போல வாயு தேவன் சிறிதும் வலியின்றி வெருவி விழுந்தான் பின் றெளிவுற்றுப் பண்டைய வுருவத்தைக் கொண்டு திருநந்திதேவரது திருவடிகளை வணங்கி, எம பெருமானே! விட்டுணு முதலிய தேவர்கள் சிவபெருமானைத் தரிசித்துத் தங்குறைகளை விண் ணப்பஞ் செய்ய நினைத்து அவர் செய்கையை யறிந்து வருமாறு என்னை முன்னராகவே யனுப்பினர். நான் மறுக்கவும் அவர்தம் வருத்தங்களைப் புகன்று போகுமாறு வலிந்து அனுப்பினர். அதனாற் றென்றலாய் மெல்ல நுழைந்தேன். தேவரீர்க்கு விண்ணப்பஞ் செய்ய நினைத்தி லேன். சூரபன்மனால் வருத்த முற்று அறிவு குன்றப் பெற்றேன். அறிவிலியாகிய எனது பிழையைப் பொறுத்தருள்க என்று விழுந்து வணங்கிப் பிரார்த்தித்தான். திருநந்தி தேவர் கோபந் தணிந்து "நாம்



புலிங்க மூர்த்தி

இங்கே யுன்னுயிரைத் தந்தேம். நில்லாதே மீண்டு போவாய்" என்று ஏவினர். வாயுதேவன் மேருமலை சென்று பிரமன் முதலாயினோருக்கு நிகழ்ந்தனவற்றைக்கூறினன்.

அவர்கள் யாவரும் துன்ப முற்று, மேருமலையினின்றும் யாவரும் புறப்பட்டுக் கைலையை யடைந்து, கோயிலின் முற் சென்று திருநந்தி தேவரைப் பணிந்து, அடியேங்களுடைய வரவைப் பரமனுர்க்குத் தெரித் தருளல் வேண்டு மென்று குறையிரந்தார். அங்ஙனே நந்திதேவர் அறி விக்கச் சிவபெருமான் "அவர்களை யழைத்து வருதி" என ஆஞ்ஞாபித் தார். நந்தி தேவர் யாவரையும் அழைத்துச் சென்றனர் நாரணன் முதலாயினோ பலகாலும் வணங்கி அஞ்சலி செய்து தங்குறைகளை யெல் லாம் முறையிட்டார், நித்திய கன்னிகையான உமா தேவியாரைத் திரு மணஞ் செய்தமை யோரேதுக் காட்டன்றி யவரிடத்து மைந்தரைப் பெறுதற்கு அன்று, ஆகலால் அநாதி மலமுத்தரே! தேவரீரிடத்திலே தேவரீர்க்கு ஒப்பாக ஒரு திருக்குமாரரைத் தோற்றுவிததருள வேண்டும் என்றனா சிவபெருமானும் அபயங் கொடுத்து, தமது பழமையாகிய ஆறு திருமுகங்களையுங் கொண்டு, அம்முகங்களினுள்ள நெற்றிக் கண்க டோறும் ஒவ்வோர் அக்கினிப் பொறியைத் தோற்றுவித்தருளினர்.

அத்தகைய ஆறு பொறிகளும் பிரம விட்டுணு முதலிய தேவர்கள் யாவரும் சிறிதும் அணுக லாற்ற மிக்க வெம்மையை யுடையனவாகி உலக மெங்கும் பரந்தன, அப்பொழுது வாயுக்கள் உலைந்து ஓய்ந்தன. கடல்கள் எல்லாம் வற்றின, வடவா முகாக்கினியுந் தன்செருக்கு நீங் கிற்று; பூமிபிளந்தது; மலைகள் யாவும் நெக்கன; அட்ட நாகங்களும் நெளிந்து நீங்கின; எட்டுத் திக்கு யானைகளும் வெருவி யலறி யோடின. ஆயினும் அவ்வக்கினிப் பொறிகள் உலகுயிர்களைப் புரத்தற்குத் தோன் றின வாகலின் ஒருயிரைத் தானும் நாசஞ் செய்தில எவர்களையும் எவை களையும் அஞ்சச் செய்தன. அவற்றின் வெம்மைகண்டு பரமேசுவரியுந்

தமது சிலம்புகள் புலம்புமாறு திருக்கோயிற்கு ஓடிச் சென்றார். விட்டு ணு முதலாயினோர்வெருவி நடுநடுங்கி யிடந்தோறும் ஓடினர். ஆங்காங்கு நின்று சதாசிவப் பெருமானைத் துதித்துப்புலம்பினர்; ஓலமிட்டார். ஒரு கணத்துள் இப்பொறிகளின் வெம்மையை மாற்றா தொழிவீராயின் உல கம் அழியும் எனக் கூவினர். சிவபெருமான், அமரர்களே! அஞ்சன் மின் என்று, முன்போலவே யொரு திரு முகத்தோடும் எழுந்தருளியிருந்து, அக்கினிப் பொறிகள் தம்முன் வருமாறு திருவுளத் துன்னினர். உடனே பொறிகள் முன்போல் ஆறாகி வந்து நின்றன. வாயுவையும் அக்கினியை யும் அழைத்து இவைகளைத் தாங்கிச் சென்றுகங்கையாற்றில்விடுதிரெனச் சிவபெருமான் கட்டளை யிட்டார். அவர் வணங்கி? ஐயனே, இவற்றைத் தாங்க வல்லவர் எவர்? அடியேங்களாற் கூடுமோ வென்று வெருவினர் ஒருகணநேரந் தாங்கும் வல்லமையைச் சிவபெருமான் அவர்க்கு அளிக்க, வாயுதேவன் ஒருகணம் அரிதிற் சுமந்து சென்று ஆற்றாமல் அக்கினி யிடஞ் சேர்த்தனன். அவனும் ஒருகணத்துட் டாக்கிக் கங்கையாற்றில் விடுத்தான். தேவர்கள் முதலினோர் கயிலையினின்றும் நீங்கி மிக்கவு வகையோடும் சென்றனர். இங்ஙனம் பரமசிவன்றன் நெற்றிக்கண்ணி னின்றும் பொறிகளாகத்தோன்றி யருளலாற் சுப்பிரமணியக் கடவுள் புலிங்க மூர்த்தி, சிவதேசசு மூர்த்தி யாயினர்.

கந்தபுராணம் - திருவவதாரப்படலம்..

நிற்புறுமமரர்யாரு நெஞ்சுதுண்ணெனநீடு
மற்புதரீராகி யருண்முறையுன்னிப்போற்றச்
சிற்பரன்றன்கொண்டுள்ள திருமுகமாறுதன்னிற்
பொற்புறு நுதற்கண்டோறும் புலிங்கமொன்றொன்றுதந்தான்.

ஆவதோர்காலையீச னறுமுகநுதற்கண்மாட்டே
மூவிருபொறிகடோன்றி முளரியான்முதலாவுள்ளோ

புலிங்க மூர்த்தி.

ரேவருமணுகல்செல்லா வெல்லைநீர்வெம்மைத்தாகிப்
பூவுலகண்டமுற்றும் பொள்ளெனப்பாயவன்றே.

சிறத்தலுங்கன்னலொன் றெரியின்றீஞ்சுடர்
பொறுத்திடலரிதெனப் புலம்பிக்காலினேன்
மறுத்தவிர்பிறைமுடி வாதனுணையாற்
றிறற்படுவன்னிதன் சென்னிசேர்த்தினன்.

சேர்த்தலுமொருபதந் தீயின்பண்ணவன்
வேர்த்துடல்புழுங்குற மெலிவிற்றுங்கியே
பேர்த்தொருபதமிடப் பெறுதுவல்லைபோ
யார்த்திடுகங்கையி னகத்துய்த்தானரோ.

புலிங்க மூர்த்தயே நம:

ஏழாவது,

சரவணோற்பவ மூர்த்தி.

அக்கினிதேவன் சுமந்து விடுத்த பொறிகள் ஆறும் அடைதலும் கங்கையானது சிவபெருமானது சடைக்காட்டின் முன்னர் ஞான்று மறைந்தாற்போல வறந்தது, சிவபெருமானுடைய திருவருளை யறிந்து கங்கையானது அப்பொறிகளைச் சுமந்து கொண்டு சரவணப் பொய்கை யில் விடுத்தது. பிரமன் விட்டுணு முதலிய தேவர்கள் யாவரும்வந்து அண்ணியதாகிய விளைவைக் காக்கும் வறியார்போலக் காக்கத் தலைப்பட் டார். பிரமா ஆகாயத்திலும், விட்டுணு பூமியினும், இந்திரன் முதலிய திக்குப் பாலகர்கள் எண்டிசைகளினும் நின்று காத்தார்கள். சரவணப் பொய்கையும் சிவபெருமானுடைய திருவருளினாலே வறத்தலின்றி முன் போலிருந்தது.

அருவமும் உருவும் ஆகி, அநாதியாய், பலவாய், ஒன்றாகி, பிரம மாக விளங்காநின்ற பரஞ்சோதிப் பிழம்பே, ஆன்மாக்க ளுணர்ந்துய்யும்

பொருட்டு ஆறு திருமுகங்களும், பன்னிரு திருக்கரங்களும் கொண்டு முருகக்கடவுளாக அவதரித்தது. ஆகாயத்திலே துந்துபிகள் ஒலித்தன வேதங்களெல்லாம் ஆரவாரித்தன. பிரமவிட்டுணு முதலாயினோர் பூமாரி பெய்து "அடியேங்கட்கு அருள்செய்க" என்று துதித்துச் சூழ்ந்தார்கள். உலகத்துள்ள வுயிர்க ளெவற்றிற்கும் உவகைக் குறிகளுண்டாயின. சூர பன்மன் முதலிய அசுரர்கள் யாவருக்குந் தீய நிமித்தங்கள் காணப்பட்டன. வேதங்களாலும் மனத்தாலும் வாக்காலும் அறியப்படாது எங்கணும் நிறைந்துநின்ற நிருமலராகிய முழுமுதற் கடவுள் அறுதிருமுகங்களை யுடையராய்த் தோன்றி, ஆன்மாக்களிடத்துள்ள பேரருளுடன் செந்தாமரை மலரின்கண் தந்தைபோல வீற்றிருந்தருளினர்.

இம்மூர்த்தமே சரவணோற்பவ மூர்த்த மெனப்படும். இது ஆறு திருமுகங்களும், பன்னிரு திருக்கரங்களும், அவற்றினிடையே வேல், கேடகம், கண்டாமணி, தாமரை, கோழிக்கொடி, இடங்கம், அம்பு வாள், வரதம், அபயம், வில் என்பனவும் பொருந்த விளங்கா நிற்கும் என்று நூல்கள் கூறின. சரம்=நாணற்புல். வனம்=நீர். நாணற் புல் செறிந்த நீரையுடைய பொய்கையே சரவணவாவியாகும் இது இமய மலையின் பாங்கரினுள்ளது. அப் பொய்கையில் உற்ப வித்தமையாற் சரவணோற்பவ மூர்த்தியாயினார்.

இம்மூர்த்தத்தான் அறியப்படும் உண்மை யென்னெனில், சுப்பிர மணியக் கடவுள் மற்றைய தேவர் மனிதர் விலங்கு முதலிய வுயிர்கள் போல, மாதாவுதரக்கணிருந்து கருப்பாயசப் பையுறுத்தல், சலம்பூரித்தல், உதராக்கினி சுடுதல், பிராணவாயு முரித்துத்தள்ளுதல், யோனித்துவாரத்தா னெருக்குண்ணுதல் முதலாய கருப்பவாதனைப்படாமலும், அதோ முகமாகத் தோற்றாமலும், சிவவீரியத்தானே ஊர்த்துவமுகமாகத் தோன்றியவ ரென்பதும், சிவாக்கினியி னின்றும் ஆறு பொறிகளாகத் தோன்றலால் அக்கினிகோத்திரிகளாகிய அந்தணர்களை முக்கியமாக ஆராதிக்கப்படுகின்ற பிராமணத்தெய்வந் தாமேயென்

பதும், அக்கினிகொண்டுசெய்யும் யாகத்திற் கதிபதியும், யாகபலத்தை யளிப்பவரும், யாகபரிபாலனருந்தாமே யென்பதும், வெளியாகிய ஆகா யத்திற்பரந்து, வாயுவினுலும் அக்கினியினுலுஞ் சுமக்கப்பட்டு, கங்கை, வாவிக்கண் விடப்பட்டு, மலைகளினும் பூமியினுஞ் சேர்ந்து திருவிளை யாடல் செய்தமையால் ஆகாயத்திற் சப்தகுணமாகவும், வாயுவிற் சப்தம் பரிசம் என்னுமிரண்டாகவும், தேயுவின்கண் அவ்விரண்டனோடு உருவம் என்னுங் குணமாகவும், அப்பு பூதத்தில் அம்மூன்றனோடு இராசகுண மாகவும், பிருதிவி பூதத்தின்மாட்டு அந்நான்கனோடு கந்தம் என்னுங் குணமாகவும் இருப்பவர் தாமேயென்பதும் விளக்கியருளிய திருச்செய லாம். இவையன்றி ஐம்பூதங்கட்கும் அதிபதியாகிய பஞ்சமூர்த்திகளாக வும் இருப்பவர் தாமே யென்னும் உண்மையைத் தெரித்தவாறுமாம்.

குமாரக் கடவுளாகும் 'ஆறு திருப் பொறிகளையும், மற்றைய தேவ ரெல்லாம் இருப்பவும, வாயுவும் அக்கினியுஞ் சுமத்தற்குக காரண மென்னை ? பரமபதியாகிய பெருமானுர் அவர்களை யழைத்துத் தாங்கும் வல்லமை கொடுத் தருளியது போல, மற்றைத் தேவர்க்கு ஏனோ செய் திலர்? என்னுஞ் சங்கையுந் துக்கமும் பலதேவர்கட்கும் உண்டாயிற்று. அஃது துணர்ந்த விட்டுணு அமரர்களை நோக்கி, "தேவிர்காள்! துன்பப் படாதிர். பரமான்மாவாகிய குமாரக் கடவுளை யணுகுந் தன்மை வாயு விற்கும் அக்கினிக்கும் உண்டன்றி யெம்மனோர்க்கு இல்லை! என்னோன் றும் இல்லை!! ஆகலாற்றன் உமாபாகராகிய பரசிவனுர் அவர்தமை யழைத்து அருள்புரிந் தனுப்பினர். யாது காரணமோ வெனக் கேட்டி ரேல், அதனை விளங்கக் கூறுதும். நீவிரெல்லீரு மாயா வன்மையானே மறந்தனிர்போலும்.

முன்னோர் ஞான்று நங்கட்கும் அசுரர்கட்கும் போர் விளைந்த; தன் றே? அதன் கண் முதலிற் றைத்தியர் வென்றி பெற்றுர் யாங்கள்

தோல்வி யுற்றோம். இரண்டாவது யாங்கள் வென்றி கொண்டோம்; அசுர குல மடியோடழிந்தது. அவ்வெற்றிக் களிப்பினாலே யாமெல்லா மகங் கார மடைந்து, எங்களையே யாங்கள் புகழ்ந்து, அவ்வென்றிக்குக் காரணம் ஒவ்வொருவரும் யாங்களேயென்று இறுமாப்புற் றிருந்தோம். அதனாலே கடவுளாகிய பரசிவனாரையும் மறந்து நின்றோம். இயற்கையே ஆன்மாக் களின் அறியாமைகளைப் போக்கி யன்னோர்க்குத் தந்திருவடிப் பேற்றை யளித்தல்வேண்டு மென்னுங் கருணையையுடைய சிவநாதன், எங்கள் அகங்காரங்களையும், யாமே பரப்பிரம மென்றெண்ணுந் தற்போதத்தை யுங் கெடுத்துத் திருவருள் புரியத் திருவுளங் கொண்டு, எவ்விடத்துங் காணப்படாத அழகிய இயக்க வடிவம் உற்று, நங்கள் இடத்தினடுவே தோன்றி யிறுமாந்து வீற்றிருந் தருளினார். அதுபோது தேவர்களெல் லாம் அந்த வடிவம் யாதென்று அறிய நினைத்தார்கள். அக்கினியை நோக்கி "நீ அறிந்து வருவாயாக" என்ன அவன் சென்று இயக்கரூபத் தைநெருங்கி "நீ யார்" என்று வினவ, இயக்க மூர்த்தி அக்கினியை நோக்கி "நீ யார்" என்று வினவியருள, அக்கினி தேவன் கூறுவான். "நான் அக்கினியாக இருக்கிறேன்" என்றான். 'அங்ஙனம் பிரசித்த மான நின்னிடத்தில் என்ன பராக்கிரமம் இருக்கிறது" என்று கேட்ட ருளினர். பூமியிலிருக்கும் எவ்வகைப் பொருளையும் எரிக்குஞ் சாமர்த்தி யம் எற்கு உண்டு" என்றான்.

இயக்க மூர்த்தி "இத் துரும்பை எரி" என்று, ஓர் துரும்பை அக் கினி முன்வைத்தார். அவனால் எரிக்க முடியாது திரும்பிப்போனான். வாயு தேவனும் போய்த்திரும்பினான், மூன்றாமுறை இந்திரனைத் தேவர் கள் அனுப்பினர். அவன் அவ்வுருவை நோக்கி ஓடினான், இயக்கமூர்த்தி யாகிய பரம சிவம் மறைந்தனர். அக்கினிக்கும் வாயுவுக்கு மண்மையராய் நின்று, அவர்களுடன் வசனித்த இயக்க வடிவப் பரமான்மா, இந்திரனைத்

கண்ட காலத்து என்மறைந்தனர்? என்றுவேதங்கள் ஆராய்ந்தன. "இந்திரன் அதிககருவ முடைய னாகலால் அவனுக்குத் தன்றிருமொழிப் பேச்சைசம்பிரமங் கொடுத்திலது. ஆகலாற்றான் அக்கினியும் வாயுவுந் தேவதைகளுட் பிரதானமாக மதிக்கப் படுகின்றனர்" என்று வேதங்கள் அறுதியிட்டுரைத்தன. இத்தகைய நியாயங்களாற்றான் பரப்பிரமமாகிய புலிங்கங்களைச் சிவபிரானார் மற்றைய தேவர்களிடம் அளிக்காது, அங்கியந் தேவன், வாதராசன் என்னு மிவர் வயினளித்தருளினா ரென்று திருமால் கூறத் தெளிந்தனர் தேவர்.

சாமவேதம்-தலவகார சாகை.

தஸ்மை த்ருணம் நிததாவேதத்தஹேதி ததுபப்ரேயாய ஸர்வஜவேந தந்ந ஶஶாக தக்தும் ஸ தத ஏவ நிவவ்ருதே நைததஶகம் விஜ்ஞாதும் யதேதத்யக்ஷமிதி |

அத வாயுமப்ருவந்வாயவே தத்விஜாநீஹி | கிமேதத்யக்ஷமிதி ததேதி | தஸ்மை த்ருணம் நிததாவேதததத்ஸ்வேதி ததுபப்ரேயாய | ஸர்வஜவேந தந்ந ஶஶாகாதாதும் ஸ தத ஏவ நிவவ்ருதே | நைததஶகம் விஜ்ஞாதும்யதேதத் யக்ஷமிதி ||

யதக்நிர்வாயுரிந்த்ரஸ்தே ஹ்யேநந்நேதிஷ்டம் பஸ்பர்ஶுஸ்தே ஹ்யேநத் ப்ரதமோ விதாஞ்சகார ப்ரஹ்மேதி |

யசுர்வேதம் மந்திரசாகை.

ஸவாக்நிஸ் ஸலிலே ஸம்ஹிவிஷ்ட:!

"நீரிலுள்ள அக்கினியும் அப்பரப் பிரமமே" என்று சிலேடையாற்கூறுவது முணர்க."

கந்தபுராணம்-திருவவதாரப் படலம்.

அரனருண்முறையினை யறிந்துகங்கைதன்
சிரமிசையேந்தியே சென்றொருகன்னலிற்
சரவணமெனுந்தடந் தன்னிற்சேர்த்தனண்
மரையிதழாயிடை மல்குற்றுலென.

கங்கையுமொல்கப்புக்க கடுங்கனற்கடவுட்சோதி
யங்கிருமூன்றுமுன்ன ரம்மைவாழியயச்சாரத்
றங்கியகமலம்பூத்த சரவணம்புகலுமுக்கட்
புங்கவனருளாற்றென்மை போன்றதுவறத்தலின்றி.

அருவமுமுருவுமாகி யனாதியாய்ப்பலவாயொன்றாய்ப்
பிரமமாய்நின்றசோதிப் பிழம்பதோர்மேனியாகிக்
கருணைகூர்முகங்களாறுங் கரங்கள்பன்னிரண்டுங்கொண்டே
யொருதிருமுருகன்வந்தாங் குதித்தனனுலகமுய்ய.

குமாரதந்திரம்.

சரவணபவஸ்வாமீ!! சக்திம் கண்டாத்வஜ சரசிஜே குக்குடபாச தண்டௌ டங்கம் பாணம் வரதமபயம் கார்முகம்சோத் வகந்தம்!பீதம் சௌம்யம் த்விதசநயநம் கேகயம்சைஸ்தைர்ய சமீந்த்ரைச் சத்பிப் பூச்யம் சரவணபவம்ஷண் முகம் பாவயாமி!!

சரவணோற்பவ மூர்த்தயே நம:



சகலலோக குருமூர்த்தி.

எட்டாவது,

சகல லோக குரு மூர்த்தி.

இருடிகளுட் டிருமாலின் வம்சத்திற் றோன்றியவரும், பிரமதேவ ரின் றுணைவரு மாகிய * கபில முனிவர், சாங்கியந்தைவிடுத்துச் சிவாக மப் பொருளை நன்குணர்ந்து சைவ சித்தாந்த நெறிநின்றார். இவர் பிரம தேவரைப் போல, ஆதியிலே சிவபெருமானிடத்தினின்றுந்தோன்றினார் என்று, "𑌅𑌹𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌕𑌪𑌿𑌲𑍋 𑌹𑍍𑌯𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌤𑍍𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾𑌃 ।(அகம் ப்ரஹ்மா கபிலோ தாப்பிய நந்தஸ்த்வத் தஸ்ஸர்வே தேவதேவ ப்ரசூதா:! யானும் பிரமதேவன், கபிலன், இனி அநந்தன் முதலாம் எல்லோரும், தேவ தேவனே! உம்மிடந் தோன்றினோம்)என்ற பாரதவசனத்தைக் காட்டுவர். அங்ஙனங் கூறுவ தடாது. சிவசாரூப்பிய முற்ற வோருருத்திரரையேயீண்டுந்தேவ தேவனென உபசார மாத்திரையாற் கூறிய தெனக் கொண்டு, மற்றை யோர் போல இவரும் ஓர் உருத்திரர் வயிற் றோன்றினா ரெனக்கொள்க. சிவனிடம் பிறந்தார் புருடதத்துவமே முதலென்று சிவாகமத்திற்குப்புற மான வோர்நூலை யோர்காலு முரைக்கா ரென்றுணர்க.

இங்ஙன மாகிய முனிவர் சைவசித்தாந்தமே மெய்ந்நெறியெனத் தெளிந்து, முத்திக்கு நேர்வாயில், ஞான சாதனமா மென்றும், அந்தஞா னத்திற்கு நேர் வாயில் சிவயோக மாமெனவுமுணர்ந்து, தாங் கைக்கொ

---

* இக்கபிலமுனிவர், புறச்சமயங்களுள் ஒன்றாகிய சாங்கியமதத்தை யுண்டாக்கினவர். சாங்கியத்துட்சேசுர சாங்கியமேயன்றி, நிரீச்சுரசாங்கி யால்லர். கபிலர்=பொன்னிற முடையவர்எனக் காரணங் கொள்க. இச்சேசுர சாங்கியம் யோகமதம்போன்று, சைவசித்தாந்தத்தைப் பெரும் பாலும் பிரதிபாதித்து, அதனையுணர்தற்குப் பேருபகாரமா மென்பர் சிவ ஞானபோத மாபாடியத்தாரும்.

ண்ட வைதிக வேள்வி முதலாயின வெல்லாம் அழிதன் மாலையவாய போகங்களையே பயப்பவை யெனக்கைவிட்டு, சகுணபாவனை, நிர்க்குணபாவனை, பிரமபாவனை யென்னும் மூவகைப் பாவனைகளுட்பிரமபாவனையைக் கைக்கொண்டு சிவயோகம் புரிவாராயினர்

அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் ப்ரஹ்மசர்யம் தயார்ஜவம்|
க்ஷமா த்ருதிர் மிதாஹார: சௌசஞ்சேதி யமா தச |

(அஹிம்சா ஸத்யமஸ்தேயம் பிரஹ்ம சர்யம் தயார்ச்சவம் ! க்ஷமா த்ருதிர் மிதாகார: சௌசம்சேதியமாதச) என்னுஞ்சாமவேதசாகாவசனங்களானே அகிம்சை, மெய், கள்ளாமை. பிரமசரியம், தயை, நேர்மை, பொறுமை, தைரியம், அளவுண்டி, சுத்தி என்னும் இயமங்கள் பத்தனையுங் கொண்டு அவற்றுட், பிரமசரியம், அகிம்சை, ஏற்காமை, மெய் என்னும் நான்குமே முக்கியமா மென்று, கூடாநுணிகோபநிடதம் "ப்ரஹ்மசர்ய மஹிம்ஸா அபரிக்ரஹஞ்ச ஸத்யஞ்ச யத்நதோ ரக்ஷதோ ரக்ஷத (ப்ரஹ்மசர்யம ஹிம்சாபரிக்கிருகஞ்ச சத்யஞ்ச யதோநகோரக்ஷதோ ஹேரக்ஷத) எனவுரைத்தாங்கு, அவையிற்றை முக்கியமாக் கொண்டும், தவம், சந்தோடம், ஆத்திகபுத்தி, 'தானம், ஈசுரபூசை, சித்தாந்த சிரவணம், இலச்சை, உத்தி, செபம், விரதம் இவைகளே நியமங்களெனக்கொண்டும், மற்றைய ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் அங்கங்களையுற்றுஞ் செய்யாநின்றார். அக்காலத்திலே கபிலனார்க்குக் காலமுடிவு சமீபித்தது. அதனையறிந்த முனிவர், முற்காலத்தே யொரு முனிவன் தந்தையைப் பூசித்துக் காலனை வென்று சுத்த முத்தனாய் விளங்கினான், யான் இப்போது அவனைப் பூசித்தற்குத் தலங்க டோறுந் திரியக்காலமில்லா தாயிற்று. தந்தையாம் அவனும் விரைவிற் றோன்றி அருளகில்லான்; ஆகலானவன் மைந்தனுங் குமாரக் கடவுளையே பூசித்து உய்குவல் எனத் தீர்மானித்

தார். சகல லோக குருமூர்த்தியாகிய அறுமுகக் கடவுள் பாலினெய்போ லெங்கணும் வியாபித்து இருப்பாராயினுந் தயிரினெய் போல விளங்கி நின்றருளுந் தான மெதுவோ வென் றாராய்ந்தார். பல்வகைத் தலங்களினும் மேலானதாய், முருகக்கடவுளார் ஒருகணமு நீங்காது வீற்றிருந் தன்பர்க்கெளிவந் தருளுந் தலம் மூகாம்புரி என்னுந் தலமெனக் கண்டார். அத்தலத்திற்கு விரைவிற் சென்றார்.

ஆங்கே, "எந்தை யுமை தேர்ந்திட வியம்பிய குமார
தந்திர விதிப்படி தவாதறு முகற்கு
முந்திய குடங்கர் முதன் மூவகை யிடத்தும்"

எனக் கந்த புராண முரைத்தபடி, கந்தக் கடவுளைக் கும்பம், தம்பம் விம்பம் என்னு மூன்றிடத்துந் தாபித்துக் கந்தாகமம் ஆகிய குமார தந்திர விதிப்படி மெய்யன்புடன் பூசிப்பாராயினர், எமன் இவர்கால முடிந்தமையினாலே தன்றூதுவரை நோக்கி, "கிங்கரர்காள்! கபிலனுயிரை யொருகணத்தே யிங்குக் கொண்டு வருதி" ரென்று கட்டளை யிட்டனன். யமதூதர் விரைவிற் கபிலனு ரிருக்கு மிடம் வந்து அவரைத் தூரத்தி னின்றழைத்தனர் முனிவரர் அவர்களை நோக்கிக் 'கிங்கரர்காள்! கிருபைக் கடலாகிய கதிரை நாயகனார்தம் அடியார்கள் நும்மைக் காணின் வெறுப்பான்றி நும்முடன் வாரார். நுங்களைப்பொருட் படுத்தி யானும் பேசுகிலேன். நான் வாரேன்; போமி" னென்று புனிதமாதவனார் தோத்திரம் புகலத் தொடங்கினர். யம தூதர்களின் ஆரவாரமும், அவர்களின் ஆழ்ந்த கண்களும், செந்நிறக் குறுமயிரும், கருமலை போலி மேனியும் வக்கிர தந்தங்களுங் கண்டு அஞ்சுகின்றேன். ஹே! பரமபதி! குமரேசா, அசுர குலாந்தகா! தேவயானை காந்தா! வல்லீபதே! "என்று துதித்தார். தூதர்க்கு அவை யெலாம் பெரிய பாணங்கள் போ

னுழைந்து அவர் தம்மனத்தை யலைத்து வெருவச் செய் தமையாற்கிட்டிப் பற்ற வியலாது அங்குற்று யமனிடங் கூறினர். அவன்றன் மந்திரியாகிய காலன் என்பானை அனுப்பினன். அவன் சான்மலி கணவனாகிய யமனுடைய உத்தரவின்படி யஜோவதி யாகிய எமபுரத்தினின்றும் நீங்கி மூகாம்புரித்தல மடைந்து கபில னிலையைத் தூரத்தே நின்று கண்டான். கபில முனிவர் அங்ஙனம் பலவாறு தோத்திரித்து அபயம் ! அபயம்!! என்று இரங்க, சரவணபவ மூர்த்தி சடிதியிற் றோன்றி, மிருத்தியுஞ்சய மந்திரம் எனப்படுங் காலாந்தக மந்திரத்தை உபதேசித் தருளினர். அது வருமாறு:—

[illegible] |
[illegible] |

[illegible]
[illegible] ||

எனத்தொடங்கி,

[illegible] |
[illegible] |

[illegible] |

என்று முடியு மதுவாம்.

இம்மந்திரத்தை யதற்குரிய பீசம், அதி தேவதை, தியானம், சந்தசு, நியாசம் முதலிய வியல்புகள் பொருந்த உபதேசித் தருளிய மாத்திரையே, கபில முனிவர் கந்தக் கடவுளாகிய சகல லோக குரு

மூர்த்தியை விழுந்து விழுந்து பன்முறை வணங்கி யெழுந்து, வேதமுத லே! சிவாகமச் செல்வமே! அஞ்சினூர்க்கரணே! அளப்பருங்கருணையங் கடலே! ஒவ்வோர் சிருட்டியினும் பிறக்குங் காலதத்துவத்திற் குட்பட்ட பிரமனுக்குச் சாத்திரங்களின் விரிவை யுபதே சிப்பவர் தேவரீரேயாம். காலத்திற் குட்பட்ட குருக்கண் மாருக்கெல்லாந் தேவரீரே ஆதிகுரு. காலாந்தகரும் காலாதீதருமாகிய சிவபெருமானுக்குக் குருவாக விருந்து ஒரு மொழிப்பொருளை உபதேசித்தருளிய பரமகுரவருந் தேவரீரே. ஆக லான் எல்லாவித்தைகட்கும் பரம்பொருளாகிய தேவரீரே பரமாசாரியர். தேவரீரேயான்மாக்களாகிய எம்போலிய ருய்யும் பொருட்டுப் பலவேறு வகைப்பட்ட சாத்திரங்களை யெல்லாம் உண்டாக்கி யருளினீர். கூடத்தங் களாகிய நால்வகை வித்தைகளையும் அவையிற்றின் வேறுபாடுகளையுந் தோற்றுவித் தருளினர். மந்திரங்க ளெல்லாம் அத்துவாக்களி லடங்கு மென்று வேத சிவாகமங்கள் கூறின. அவ்வாறத்துவாக்களும் ஆறு முக மாகப் பெற்ற தேவரீருக்கு எந்த மந்திரம் அறியதுதேவரீர்அருளிய சாத் திரங்கள் முந்நூறு வகையும், மகாதந்திரங்கள் எழுபது வகையுமாம் என்று "ஶதாஸாசைவ வித்யாநாஞ்ச த்ரைஸாஹஸ்ரம் ஸ்ம்ருதம் | ஶதாநி த்ரீணி ஶாஸ்த்ராணாம் ஸப்ததந்த்ராணி ஸப்ததி |" எனவரும் வேதாங்க வசனங்களானேயறிந்தாம். ஏ! மந்திர மகாஞான மகோததியே! எண்பத்து நான்கு இலக்கம் யோனி பேதங்க ளில் அரிதினுமிக்க அரியதான இம் மானுடப் பிறவியை யெளியே னெடுத்து, அறிவு பெற்றுத் தேவரீரைவழிபட்டமையாற் கொடியதோர் மரணத் துன்பத்தி னின்றும் நீங்கினேன். காலவாதனைப் படாதேயுய்ந் தேன். நின்றிருவடிப்பேறாம் பேற்றையும் நாயினேன் பெரிது மடைந் தேன். என்றுபுகழ்ந்துவணங்கி, யெழுந்து துதிபலபாடி யானந்தக் கூத் தாடி, இன்னுமொன் றறையும்.

தடங்கருணைப் பெருங்கடலே! ஓர் வர மெற்கருளுதி. என்னெனி லோ, இத்தல மெனது மாண வாதனையை யகற்றியது. ஆகலின் ஈண் டுள்ள தாவரம், ஊர்வன, நீர்வாழ்வன, பறவை, விலங்குமுதலிய வுயிர் வருக்கங்களும் உடலம் விடுங்கால் யமவாதனையி லகப்படா நியோகிகண் மானச் சேறல் வேண்டும்'' என்று இரந்தார். தெய்வ குஞ்சரி நாயகனார் புன் முதலாய எல்லாவுயிர்கட்கும் பக்குவக் கேற்பப், பலவகை மந்திரங் களையும் உபதேசித்தருளி அன்னோர் பாவங்களைத் தொலைத்தருளி வீற்றி ருக்கின்றார். இங்ஙனஞ்சகல லோகத்திற்குங் குருவாக வெழுந்தருளியிரு ந்து அருள்புரிதலாற் சகல லோகதுருமூர்த்தியெனப் பெயர் பெற்றார்.

கிருஷ்ணயசுர் வேதம்.

𑌯𑍋 𑌯𑍋𑌨𑌿𑌂 𑌯𑍋𑌨𑌿𑌮𑌧𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑍇𑌕𑌃
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌨𑌿 𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌯𑍋𑌨𑍀𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 ।
𑌋𑌷𑌿𑌂 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌂 𑌕𑌪𑌿𑌲𑌂 𑌯𑌸𑍍𑌤𑌮𑌗𑍍𑌰𑍇
𑌜𑍍𑌞𑌾𑌨𑍈𑌰𑍍𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌂 𑌚 𑌪𑌶𑍍𑌯𑍇𑌤𑍍 ॥

"யோயோநிம் யோநிமதிஷ்டத்யேக:
விச்வாநி ரூபாணியோ நீச்சசர்வா:!
ருஷிம்ப்ரஸூதம் கபிலம்யஸ்தமக்ரே
ஜ்ஞானைர் பிபர்த்தி ஜாயமாநஞ்சபச்யேத்:!

மேற்படி மந்திரசாகை.

𑌵𑍇𑌦𑌾𑌹𑌮𑍇𑌤𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌮𑍍
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ।



கார்த்திகேய மூர்த்தி.

ஸகலவித்யாதிக்ருதே ப்ருந்தவேதி
நாநாவித்யாவிதே வேதநாய ||

திருச் செந்தூர்ப் புராணம்.

புகலுதற் கரிய மூகாம் புரியினிற் கபில யோகிக்
ககமகிழ் சிறந்து கால ஞானையைக் கடக்க வேண்டித்
தகையமந் திரஞ்சொல் வாய்ந்த தந்திரப் பசும்பூ டாதித்
தொகை சொலிச் சகல லோக குருப்பெயர் சூட்டிக் கொண்டான்.

சகல லோக குரு மூர்த்தயே நம:

ஒன்பதாவது,

கார்த்திகேய மூர்த்தி.

சுப்பிரமணியப் பெருமான் ஆறு திருமுகங்களும் பன்னிருதிருக் கரங்களுமுடைய பாலராய்ச் சரவணப் பொய்கையினுள்ளசெந்தாமரை மலரின்மீது வீற்றிருந்த திருவிளையாடலைக் கண்டு, விட்டுணு முதலிய தேவர்கள் யாவருங் கார்த்திகை மகளிர் அறுவரை நோக்கி, சரவணப் பொய்கையிற் சென்று ஆண்டுள்ள இறைவனுகிய குழந்தைக்கு நுங்கள் பாலை யூட்டி வளர்ப்பீராக என்றார். அவரும் அதற்கு இயைந்து முருகக் கடவுளை அடைந்து துதிக்க, அவ்வறுமுகக் கடவுள் தம்மை யடைந்தோக்கு வேண்டியன அருள்செய்யும் பெருங்கருணைக் கடல் ஆதலால் வெவ்வேறாக ஆறு சிறுவர் வடிவங் கொண்டருளினர். கார்த்திகை மகளிர்கள் அறுவரும்மிக மகிழ்ந்து ஆறு குழவிகளையும் வெவ்வே றெடுத்துத் தங்கள்

தங்கள் முலைப்பாலை யூட்ட அவ்வறு முகக் கடவுள் திருமுறுவல்புரிந்து, நீங்காத பேரருளினாலே மிகவருந்தினார் போல உண்டருளினார். ஆறுசிறு வராய் நின்ற தனிமுதற் கடவுளை அம்மகளிர்கள் சரவணப் பொய்கையி னுள்ள தாமரை மலர்களாகிய சயனத்தின் மீதுசேர்த்துத் துயில் செய் வித்தனர். முருகக் கடவுள் திருவருளினாலேதுயில் செய்தற்கு ஒருருவ மும், துயில் செய்து விரைந் தெழுந்துமழலைபேச ஒருருவமும், தாயின் முலைப் பாலைச் செம்பவளவாய்வைத்து அருந்த ஒருருவமும், நகைத்துக் கொண்டிருக்க ஒருருவமும், விளையாட ஒருவடிவமும், அழுவார் போல அழுதற்கு ஒருதிருவுருவமுங் கொண்டருளினார்.

தவழ்தற்கு ஒருருவமும், தவழ்ந்து செல்லுதற்கு ஒரு திருவுருவும், நில்லாது விரைந்து எழுந்துவிழ ஒருருவமும், இருத்தற்குஒருவடிவமும், பொய்கை யெங்குஞ் சென்றுழக்க ஒருருவமும், மாதாவிடத்து இருக்க ஒருருவமும் உடையராயினார். அவையன்றிக் கூத்தாடவும், செங்கை கொட்டவும், பாட்டுக்கள் பாடவும், பார்த்தற்கும், ஓடுதற்கும், ஒவ்வோர் இடத்து ஒளித்தற்கும், எங்குந் தேடவும் ஒவ்வோ ருருவங்களாகப்பற்பல திருவுருவங்களைக் கொண்டருளினார். இவ்வாறே ஆறுதிருமேனியுங்கண மொன்றினுள்ளேஆயிரம் பேதமாம் வண்ணம் முழுமுதற் கடவுளாய் நின்ற குமாரசுவாமி யெண்ணிறந்த திருவிளையாடலை இயற்றுவார் ஆயி னர். கார்த்திகை மகளிர்கள் அறுவரும் அறுமுகக் கடவுளுடைய திருவி ளையாடல் முழுதையும் நோக்கி நோக்கி மிக்க அற்புதமடைந்து குழந்தை களெனக் கொள்ளுதலை யொழித்து, சிறிதும் பிரியாது அஞ்சி வழிபடு கடவுளாகவே கொண்டு மெய்யன்புடன் துதித்தார்கள்.

சிவபெருமான் உமாதேவியார்க்கு முருகக் கடவுளின் பெருமை களை யெல்லாம் எடுத்து உணர்த்தி, குமரனே நாம், நாமே குமரனென்று திருவாய் மலர்ந்தருளினார். பார்வதி தேவியார் அதுகேட்டு, எம்பெருமா

னே ! நம்முடைய குமரனை நாம் கொண்டு வருவோம். எழுந்தருளுக என்று சிவபெருமானோடும் இடபவாகனத்துஇவர்ந்து, சகல கணத்தவர்களுடன் சரவணப் பொய்கை சார்ந்து, ஆறுருவங் கொண்ட முருகக் கடவுளின் தன்மையைப் பார்த்துத் திருவருள் செய்து கரையின்கண் நின்றனர். குமாரக்கடவுள் சிவபெருமானையும் உமாதேவியாரையுங் கண்டுதிருமுக மலர்ந்து உளங்களித்தார். அப்பொழுது மகாதேவர் தேவியாரைநோக்கி "உமையே ! நீசென்று உன் புதல்வனைக் கொணர்தி யென்றனர். தேவியார் இடபவாகனத்தினின்றும் இறங்கிப் பேரன்புடன் சென்று தமது திருக்குமாருடைய ஆறு திருவுருவங்களையும் இருதிருக்கரங்களாலும் வாரி யெடுத்துத் தழுவினர். ஆறுதிருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களு முடைய ஒருருவாயினர். முருககடவுள் அதனாலே கந்தன் என்னுந் திருநாமத்தைப் பெற்றனர். கந்தம்=கலத்தல். உமாதேவியாராலே யொன்று சேர்க்கப் பட்டவர் என்க. பரஞானப்பாலை யூட்டிட, பரமனும் பெருங்கருணையோடுந் தமதுபக்கத்திருத்தியருளினர். பின்னர் உமாதேவியாரையும் திருக்கரத்தினால் எடுத்துத் தமது இடப்பக்கத்தில் அமர்த்தினார். அம்மூவருஞ் சேர்ந்தமூர்த்தமே சோமாஸ்கந்த மூர்த்தம் எனப்படும். ச=கூட, உமா=உமையும், ஸ்கந்த=கந்தசுவாமியும் இருக்கும் மூர்த்தமே சோமாக்கந்த மூர்த்த மெனப்படும்.

அப்பொழுது கார்த்திகை மகளிர்கள் பேரன்புடன் துதித்து வணங்கி நின்றார். கைலாயபதி யாகிய சிவபெருமான் அவர்கள்மீது திருவருளைக்கஞ்செய்து, நம்முடைய குமாரனாகிய இவன்உங்களால் வளர்க்கப்பட்டமையாற் கார்த்திகேயன் என்னும்பெயரைப் பெறக்கடவன். யாவராயினும் உங்கள் நட்சத்திரத்திலே நம்செல்வக் குமரனை மெய்யன்புற்று வழிபடுவா ராயின் அவர் வேண்டும் வரங்களைக் கொடுத்து முத்தியையுமளிப்பேம்என்று திருவாய் மலர்ந்தருளினார். கார்த்திகை மாதத்துக்கார்த்

திகை நட்சத்திரந் தொடங்கிப் பன்னிரு வருடங்காறும் அநுட்டித்து விரதத்தை முடித்து உத்தியாபனஞ் செய்தவர் இம்மைப்போகங்களை யநுபவித்து உண்மை யுணர்வு தலைக்கூடப் பெற்று, கந்த சாயுச்சிய மடைவர் என்பது திண்ணம். கார்த்திகை நாளிலே கார்த்திகேய மூர்த்தியை விதிப்படி பூசை புரிந்தோர் பெறற்கரும்பே றடைவார்.

கார்த்திகேய மூர்த்தியின் இலக்கணம் உரைக்குங்கால், தாமரைமலர் போலுஞ் செவ்வி யுடைய ஆறுதிருமுகங்களும், ஆறு திருக்கரங்களும், வலப்பாலிற் கூர்மைபொருந்திய அழகையுடைய வேலாயுதம், வாள், அபயம் என்பனவும், இடத்திருக் கரங்கள் மூன்றனில், சிறப்புப் பொருந்திய வச்சிராயுதம், கேடகம், வரதம் என்பனவும் கொண்டு, நோய், பயம் முதலியவற்றையும் பிறவிப்பிணியையும் நீக்கித் திருவருள் செய்யுமூர்த்தியாம் இதனையொருசாரோர் வாகுலேயமூர்த்தியெனவுங் கூறுநிற்பர். வாகுலம் = கார்த்திகை. வாகுலேயன் = கார்த்திகேயன். | பிறப்பு இறப்புக்குணம் குறி செயல்முதலியன வில்லாத பரம்பொருளைக் கார்த்திகைப் பெண்களின் புத்திரனெனப் புகல்வதுஉண்மையன்று; உபசாரமேயென்றுவேத உபப்பிருங்கண முரைத்தது. கார்த்திகைப் பெண்கள் வளர்த்தமையாற் கார்த்திகேய மூர்த்தி ஆயினர்.

கந்தபுராணம்-சரவணப்படலம்.

கந்தன்றனை நீர்போற்றிய கடனாலிவ னுங்கண்
மைந்தன்னெனும் பெயராகுக மகிழ்வா லெவரேனு
நுந்தம்பகலிடையின்னவ னேன்றுள்வழிபடுவோர்
தந்தங்குறை முடித்தேபரந் தனைநல்குவ மென்றான்.

குமாரதந்திரம்.

கார்த்திகேயவ்ரதீ || [illegible]
[illegible] |
[illegible]
[illegible] கார்த்திகேயம் [illegible] ||

*கார்த்திகேய ஸ்வாமீ!! வரத குலிசகேடம்வாமஹஸ்த
த்ரயேச ததமபய சக்திம் கட்கமங்ய த்ரயேச!
தருணரவி சமாபம் ஸ்வாதுபி! பூஜ்யமாநம் கமல வதந
ஷட்கம் காரதிகேயம் பஜாமி!!

தணிகைப்புராணம்-அகத்தியப்படலம்.

சீர்த்த குலிசங் கேடகமே செழித்த வரத மிடப்பாலுங்
கூர்த்த மணிவேல் வாளபயங் குலாவு வலப்பாலுங் கவின
வேர்த்த வாறு மலர்க்கரமு மிலங்கும் வதன மோராறுஞ்
சூர்த்த பிணிக டபுங் கார்த்திகேய னுருவந் தொகுப்போரும்.

கார்த்திகேய மூர்த்தயே நம:

---

* கார்த்திகைப் பெண்கள் பாலை யுண்டற்கும், அவர்களால் வளர்க்கப்படற்குங்காரணங்கள் பலவாறு பலருங்கூறுவர் அங்கி தோன்றியனாகலின், அந்நாட்களாம்கார்த்திகைப் பெண்களே வளர்த்தார் என்ப. பத்துப்பாட்டு என்னு நூலின்கண், "நெடும்பெருஞ் சிமயத்து நீலப்பைஞ் சுனை—யைவரு ளொருவ னங்கையேற்ப—வறுவர் பயந்த வாறமர்செல்வ" என்று நக்கீரனார் கூறினர். அதற்கு ஆசிரியர்நச்சினார்க்கினியர் "அங்கியங்கடவு ளுருத்திர வீரியமேற்றுண்டமிழ, அருந்ததி யொழிந்த வறுவர்மங்கையருங் கொண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவண வாவியிற் பதுமப் பாயலிற்பயந்தார் என்றுரைத்தனர். இங்ஙனமே பாரதத்துங் கூறப்பட்டுளது. எங்ஙனமெனில். அசுரரான் மெலிந்த இந்திரனாகிய தேவர்கள் கயிலை நண்ணிச் சிவனை யிரக்க, அவர்தமது வீரியமாகிய அக்கினியை, அக்கினி யுண்ணுமா றேவினர். அதனை யுண்ட அக்கினிமெலிந்து வாடுங்கா லெழுமுனிவர் மகம்புரிந்தார். அம் முனிவபத்தினிமார் எழுவர்மீதும் அக்கினி மிக்க காதல் கொண்டோர் சோலைக் கட்போயிருந் துயிர்விடவெண்ணும்போது, மனைவி சுவாகை, அருந்ததி யுருவெடுக்க முடியாமையால். மற்றை யறுவர்பெண்கள் வடிவெடுத்துத்தன்கணவனக்கினியைப் புல்லி யவ்வீரியத்தை நாணற்புற்றடத்தினுமிழ வவ்வுருத்திர வீரியஞ்சுக்கிலபக்கப் பிரதமை தொடங்கி யுருப்பெற்றுச் சட்டிதிதியிற் பன்னிருதோள் அறுமுகங்களுட னவதரித்தது என்று கூறியது. இச்சரித்திரத்துட்சிலபிறழ்வுடைத் தாகலானும், கந்தபுராணத்திற்கு மாறாகவிருத்தலானும் விடப்பட்டது.

பத்தாவது,

அஜாரூட மூர்த்தி.

எல்லா வாற்றலும், எல்லா முதன்மையும் எல்லாவநுக்கிரகமுமுடைய சிவகுகக்கடவுள், வெள்ளியங் கிரியாகிய திருக்கயிலாயமலையின் முன் றிருவாயின் மண்டபக்கண், வீரவாகு, வீரதீரன், வீர புரந்தரன், வீரமார்த்தாண்டன் முதலிய துணைவர் ஒன்பதின்மரும்' இலக்கஞ் சேனை வீரர்களும், தம்மைப் புடைசூழ்ந்துபோற்றிநிற்ப வீற்றிருந் தருளினர் அக்காலத்தே தேவ விருடியாகிய நாரத மகாமுனிவர், வேள்வி யொன்று செய்ய விரும்பினர். தேவர்முனிவர், அந்தணர், இந்திரன், பிரமன், விட்டுணு முதலிய சகலகணத்தவர்களோடுஞ் சேர்ந்து பூவுலகின்கண் இடம் வகுத்து, வேதசிவாகம விதிப்படி செய்யத் தொடங்கினர். அங்ஙனஞ் செய்யாநின்ற காலத்தே மந்திர மாறுபாட்டானே யாகாக்கினியி னின்றுஞ்செக்கர் வானம் போன்ற ஆட்டுக்கடா வொன்று தோன்றியது. அதன் வடிவத்தையுஞ் சினத்தையும் ஆரவாரத்தையுங் கண்டு அங்குள்ளார் யாவருஞ் சாலவுந் திகிலடைந்து அஞ்சினர். ஆட்டுக்கடா தோன்றியதை யாராயுங் காலத்து, பூமியின்கணுள்ளாருட்சிலர் அந்தணரென் றிருப்பார், பெரிது மேத மென்று ஏதஞ் செய்கின்றனர். வேதத்தினுட் பொருளை யறி யாமே, அவ்வுட் பொருளைச் சுத்தவாதுள முதலிய தந்திரத் தொகுதிகளிற் கண்டுணராமே, தாமூனு மதுவு முண்பா னாசையுற்று. பௌண்டரீகம், பசுநிரூடபந்தம், அசுவமேதம் முதலிய பெயர்களை வைத்துக்கொண்டு பசுக்களையுங் குதிரைகள் முதலாயினவற்றையுங் கொன்றருந்துகின்றனர். அதுமட்டோ, அசமேத மென்று பெயர் காட்டி "நம்மினத்தவாம் அசங்களை யெல்லாம் அறுத்தருந்துகின்றனர். சோமயாக மென்பதன் கண்ணும் நங்குடர்க் கொடிகளையே சோமலதையென்று அநியாயமாக் கொண்டுறவைத்து எச்சின் மயங்க வோர் பாத்திரத்திற் பலரும் வாய்வைத் துரிஞ்சிக் குடிக்கின்றனர். இங்ஙன



அருணைநட மூர்த்தி

மிவர், தம்பொழுது போக்கிற்காகவும், விருப்பத்தை முடித்தற்காகவும் இக்கொடுந் தொழில் செய்கின்றனரே. ஆகலான் அவ்வகைத்தாய கொடு வேள்வி முதலியவற்றைக் கனவினும் இனிமேனினைக்காதும், நமரங்களை யறுத்துண்ணாதும், அவரெலாங் குழுமியிருக்கு மிவ்விடத்திற் றானேவே ரோ டழித்துப் பழிக்குப் பழிவாங்குவே னென்று புறப்பட்டது போல்

ஆட்டுக் கடாவானது அண்ட கோளகையும் வெடித்து நுண்டுளாகு மாறு ஆர்த்துக் கொண்டும், தலையைச் சாய்த்துக் கொம்பர்களை நிலத்திற் குத்தித் தூளி கிளப்பியும், ஊழிக் காலத்தே பிரசண்ட மாருதமும், வடவை யென்னுந தீயினையுந் தண்ணியதாக்குமூழித்தீயும், எழ்வகைமேகத் திடியும், எழ்கடலும் ஒன்று கூடிமுழங்கி வருதல் போலச் சீறிக் கிளம்பியும் வருதல் கண்ட நாரதர் முதலினோர் அவ்யாகத்தை முடிக்காது தம் முயிர் பிழைத்தாற்போது மென்னுஞ் சிந்தையராய் நடுநடுங்கி யோடுவாராயினார். அங்ஙனம் வெரீஇ யோடுகின்றவர்களை யெல்லாம் ஆட்டுக் கடாபார்த்து, அவர்களைப் பின்றொடர்ந்து கொம்பர்களாற் றாக்கியபோது, சிலர்காலொடிந்தார். சிலர்கரம் அற்றார். சிலர் குடர் கிழியப் பெற்றார். சிலர் மாண்டார். இங்ஙனம் உலக மெலாந் திரிந்தது உயிர்கள்பலவற்றை யதஞ் செய்தும், அச்ச முறுத்தியுந் திரியா நிற்புழி, நாரதர்முதலியமுனிவர்கள் ஓட்டமா யோடிச் சென்று, ஊழியினு மழியாத் திருக்கயிலை மலையை யடைந்தனர். ஆங்கே முன்னைப்பழம்பொருட்கு முன்னைப்பழம் பொருளாகிய உபய கதிர்காம வாசன்எழுந்தருளி யிருக்கக் கண்டனர். சந்திரனைக்கண்ட சமுத்திரம்போல வுவகை பொங்கச் சொல்வார். முனிவிர்காள்! ஈண்டேகுகப் பெருமானார் தமதருந் துணைவர்களும், இலக்கம் வீரர்களுஞ்சேர்ந்து நிற்பத் திருவிளையாடல் செய்தருளுகின்றார். யாங்கள் சிவபெருமான் றிருமுன்னர்ச் சேறல் வேண்டா. அன்னவரேயோர் திரு

விளையாடலான் நங்களை யெல்லாம் புரந்தருளற் கிவ்வுருவங் கொண்டு தோன்றி யருளினார் ஆகலால் நங்கள் அல்லல்களையகற்றும் பொருட்டே முருகநாதனார் முன்வந்தருளினர். இன்னோரைச் சிறுவ ரென்று நினைய ற்க நங் கரங்க ளெல்லா முகிழ்வுற்றுச்சிரமேலேற, வாய்கீதங்களை யோ யாமே பாட, கண்கள் ஆனந்தக்கண்ணீரை யருவிபோன் மாறாதுபொழி யாநிற்ப, ஓலமிட்டு அவர்பாத கமலங்களை நோக்கித் தீர்க்க தண்டஞ்செய் குவம்; வம்மின்என்று தமக்குள்ளே தெளிந்து கொண்டு, புதுச்சந்நிதி யென்னுமொரு பெருங் கோயின்மிசை யெமையாள வந்தருளுங் கதிரை நாதனார் திருமுன்னர்ச் சென்று, சொல்லியாங்கு அடியற்ற மரம்போல வீழ்ந்து துதிப்பாராயினார்.

மறைகளுக் கிறைவா வோல மந்திர முதல்வா வோல
நிறைகுணக் குன்றே யோல நிதசிவாக் கினிபூ வோலங்
குறைமுடித் தருள்வா யோலங் கூடெமக் காணே யோல
மறைகழற் குரிசி லோல மரன்சுத வோல மோலம்.

என்றின்னன துதிகளைக் கூறி யோலமிடப், பெருமானார்,முனிவிர்காள்! தேவிர்கா ளுமக்குற்ற குறை யென்னே? அஞ்சன்மின்!அஞ்சன்மி னென் றபயாத்தம் அருளித் தெரியார் போல் வினவியருளினார். அவர்கள், "எம் பெருமானே ! தேவரீர் அறியாததன்றே! யாகாக்கினியினின்றுந் தோன் றிய அஜத்தால் (ஆட்டுக்கடாவினால்) யாங்கள் பெருந்துன்ப முற்றேம். இத்துணைக்குள் உலகத்துள்ள வுயிர்க ளெல்லாம் அழிந்திருக்கு மென்ப தொருதலை. அடியேங்கட்கு வேறு புகலிட மில்லை. தேவரீரே தஞ்சம் ஆகலாற்காத்தருளுதிர்" என்று பிரார்த்தித்தனர். பகவான் திருவுளமிரங் கிப் பக்கலில் நின்ற வீரவாகுவைத் திருநோக்கஞ் செய்தருளி, "அவ்வா ட்டுக் கடாவை யின்னே கொணர்தியென்றுஞ்ஞாபித்தருளினார். ஆண்ட கையராம் வீரவாகு தேவர், அத்திருவரு ளாஞ்ஞையைச் சிரமேற் கொ

ண்டு, குகேசப் பெருமானுடைய திருவடித்தாமரைகளில் வீழ்ந்து வணங்கித் துதித்து விடைபெற்றுக் கடாவைத் தேடிச் செல்வாராயினார்.

அதுகாலை, ஆட்டுக்கடா வானது, தேவர், முனிவர் முதலாயினோர் அஞ்சி யோடினமையாற் பூமியி லுள்ளாரைச்சிதைத்து, கீழ்ஏழுலகினுஞ் சென்று, ஆங்குள்ளாரையும் வதைத்து, மேலுலகஞ்சென்று, திவ்விய லோக மெனப்படூஉஞ் சுவர்க்க வுலகைத் தன்கொம்பாராற் றகர்த்துக் குலைத்துநாசம் பண்ணி, பிரமனுலகானசத்திய வுலகத்தை யடைந்து, இறுமாந்து ஆரவாரித்து நின்றது வீரவாகு தேவர் பூமியெங்கணுந் தேடிக்கீழுலகினும் போந்தாய்ந்து தேடிக்காணப் படாதாகச் சுவர்க்க வுலகமுஞ் சென்று துருவ, கடாக்காணாதாயிற்று அதற்கு மேல்உள்ள பதவிகளுங் கடந்தப் பாற் பிரமபதம் அடைந்தார் அங்ஙனந் தேடுழி யோரிடத்து, வடவா முகாக்கினி அநேகாயிரம் யோசனை யுயாந்துபரந்து வளர்ந்தாற்போன்ற உடலையும், அதன் கொழுந்து நீண்டாற் போன்ற நாக்கையும் சுவர்ணாசலமாகிய மேரு மலையுந தன்னடிச் சிலம்பர்க ளுண்கணு ளொன்றினுட்பெய்த பருக்கைக் கற்கள் பலவற்று ளொன்று போல்வ தெனுமத் துணைத் தோற்றத்தையு முடைய ஆட்டுக் கடாவைக கண்டார் கடா இவரைக் கண்டதுங் குமுறிக கிளம்பியது. வீரவாகு தேவர் அவ்வாட்டுக்கடா அஞ்சும் வண்ணம் உரப்பி, விரைந்து போய் அதன் கொம்பர்களைப் பற்றி, கரகரவென்னு மொலியுண்டாக இழுத்துச் செல்வாராயினார்.

திருக் கயிலாய மலையை யடைந்து முருகக் கடவுடிரு முன்னரே அவ்வசத்தை விடுத்துப் பணிந்துநின்றார் சிவகுருவா மெந்தைபெருமானார், விட்டுணு, பிரமன் முதலிய தேவர்களையும், நாரதர்முன்னாக நின்ற இருடியர் குழாங்களையு நோக்கித் திருவாய் மலர்ந்தருளும். "நம்மாட்டுச் சான்ற அன்புடையீர்! ஆட்டுக் கடா நம்மிடத்திற்கு. வந்து விட்டது.

இனி நீவிர் ஒரு சிறிதுமஞ்சாது பூமியிற் சென்று தொடங்கிச் செய்த வேள்வியை முற்றுதிர். வேள்வியி னுண்மைப் பொருளையுந் தெளிந்து கொள்ளுதிர்.'' என்றுதிருவாய் மலர்ந்தருளினர். அன்னவரெல்லாம்அது கேட்டுத்தம்மை மறந்தவராய் ஆனந்தக் கூத்தாடி, சர்வலோக சரணியரே! தேவரீர் திருவருட்கோ ரெல்லையுளதோ? இன்னும் ஓர் வரங்கேட்குதும். அதனை நீக்காது பிரசாதித் தருளல்வேண்டும். என்னெனில், இவ்வாட்டு க்கடாவை வேறெங்கனும் விடலொல்லாது தேவரீர் வாகனமாக் கொண் டு நடத்தி யருளல் வேண்டும். அடியேங்களும் மற்றை யோரும் அஜா ரூடராகிய தேவரீரைக் கண்டகாலத்தே, எங்கட் குண்டாகிய இடர்களைத் தவிர்த்தாட் கொண்டபரம்பொரு ளிவரென்று நல்லறிவுற்றுஉய்தற்கேது வாகும் என்றுகுறை யிரந்தனர். வேண்டியார் வேண்டியாங் கீந்தருளு மொருமுதல்வன் அங்ஙனஞ் செய்வே மென்று இசைந்தார்.

அவ்வன்பரெலா முன்ன ருஞற்றிய தவங் காரண மாகவே, அவ்வா ட்டுக் கடாவை வாகனமாக் கொண்டருளினர் அதன் மேலேறி யெவ்வு லகங்களினுஞ் சென்று * ஐவகை நடைகளாகிய ஆகந்திதம், தோரிதகம், இரேசிதம், வற்கிதம், புலுதம் என்னுமிவையிற்றை நடத்திக் காட்டி விண்ணு மண்ணுந் துதிக்கப் பற்பல திருவிளையாடல்களைச் செய்தனர். நாரதர். முதலினோர் தாந தொடங்கிய யாகத்தை முடித்து, கந்தக் கட வுள் யாகாதிபதியும், யாக பரிபாலனரும் யாகபலப் பிரதானரு மென்று ணர்ந்து, அவரைத்தொழுதனர். O ''அக்கினிபூ'' என்று வேதங்களாற்

* ஐவகை நடைகளின் விவரமாவன:—ஆகந்திதம=அசைவில்லாத நடை. தோரிதகம்=அதிகமாகவுஞ் சதுரமாகவும் இருக்கின்றநடை. இரே சிதம்=வட்டமிட்டநடை. வற்கிதம்=முன்காலைத் தூக்கிவரும் நடை, புலுதம்=வேகமுள்ளநடை.

O அக்கினி—''தேவாநாம் அக்ரே ணீ:'' அதாவது தேவதைகளுக்கு முன்னேஇருக்கிறவன் ஆகலால் அக்கினி யென்னும் பெயர் போந்ததெ ன்க. பூ—குமாரன். சிவபெருமானை ''தவேவாக்நி'' என்றுவேதங்கூறிற் றாகலின் குமாரனை ''அக்கினி பூ'' என்ப தொக்குமன்.

பிரதிபாதிக்கப்பெற்ற முருகக்கடவுளார், அதற்கியையவும், அவ்வுண்மையை யெய்போலிய ருணர்ந் துய்யவும், அக்கினி தேவனைப் போலத் தாமும் ஆட்டுக் கடாவாகன முடையாராயினர். அதனாலே வேதங்களெல்லாம் அவரை அஜன் எனக் கூப்பிடுகின்றன. அருணமாகிய (அஜமாகிய) கடாவினேறிச் செலுத்துங் காரணத்தாற் கந்தக் கடவுள் அருணாரூட மூர்த்தி யெனப் பெயர் பெற்றார்.

யசுர்வேதம்.

𑌅𑌜𑌾𑌮𑍇𑌕𑌾𑌂 𑌲𑍋𑌹𑌿𑌤𑌶𑍁𑌕𑍍𑌲𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌂
𑌬𑌹𑍍𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌂 𑌜𑌨𑌯𑌨𑍍𑌤𑍀𑌂 𑌸𑌰𑍂𑌪𑌾𑌂 ।
𑌅𑌜𑍋 𑌹𑍍𑌯𑍇𑌕𑍋 𑌜𑍁𑌷𑌮𑌾𑌣𑍋𑌽𑌨𑍁𑌶𑍇𑌤𑍇
𑌜𑌹𑌾𑌤𑍍𑌯𑍇𑌨𑌾𑌂 𑌭𑍁𑌕𑍍𑌤𑌭𑍋𑌗𑌾𑌮𑌜𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 ॥

'அஜாமேகாம் லோஹிதசுக்ல கிருஷ்ணாம்
பஹ்வீம் ப்ரசாம்ஜநயந்தீம் சரூபாம்!
அஜோக்யேகோசுஷ மாணோநுசேதே
ஜகாதயேநாம் புக்தபோகா மஜோந்ய:!

காமிகாகமம் அர்ச்சன விதிப்படலம்.

𑍐 𑌨𑌮𑌸𑍍𑌕𑌾𑌰𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 𑌮𑍇𑌷𑌾𑌯𑌪𑌦𑌮𑍁𑌦𑍍𑌧𑌰𑍇𑌤𑍍 ।
𑌕𑌰𑍍𑌷𑌿𑌣𑍍𑌯𑍈 𑌨𑌮 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑍍 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌤𑌲𑌾𑌗𑍍𑌰𑌕𑍇 ।

'ஓம் நமகாரம் சமுத்திருத்திய மேஷாயபத முத்தரேத்!
கர்சிந்யை நம இத்யேதத் வாமபாத தலாக்ரகே!

கந்தபுராணம் தகரேறுபடலம் முழுதும்.

இதுவிடயமாக வுள்ளன வாகலால் ஆங்கும் பார்க்கக் காண்க.

கந்தபுராணம்.

மேடமூர்தியாகவுய்த்து விண்ணுமண்ணுமுருகவே
ளாடல்செய்துலாவிவெள்ளி யசலமீதிலமர்தரு
நீடொளிவொருபகற்க ணெறிகொள்வேதன்முதலினோர்
நாடியீசனடிவணங்க வவ்வரைக்கணண்ணினார்.

அருணநட ப்ரீத்தயே நம:

பதினொன்றாவது,

பிரமசாந்த மூர்த்தி.

சுப்பிரமணியக் கடவுள் ஆட்டுக் கடாவை வாகனமாகச் செலுத்திப் பற்பல திருவிளையாடல் புரிந்து, வெள்ளி மலைக்கணவீற்றிருந்தருளினர். அதுகாலைப் பிரமதேவன் இந்திராதி தேவர்களுடனும் * கின்னரர், கிம்புருடர், சித்தர், வித்தியாதரர், முதலிய கணர்களோடுஞ்சிவபெருமானைத் தரிசித்தற்காகக் கயிலை மலைக்குச் சென்றனன். ஆங்குத் திருமுன் வாயிலிற் கந்தக் கடவுள் நிற்கக் கண்டும் அவரை வணங்காது, "இவன் ஓர் இளைஞன் றானே" எனவுரைத்து இறுமாந்து சென்றனன். சுப்பிரமணியப் பெருமானு மவரைக் கவனிக்காது வேறுபடுத்திச் சிவனை வணங்குவதுண்மைப் பயனை யளிக்காது. என்னை? தாமுஞ் சிவனும் மாணிக்கமணியும் அதனொளியும்போ லிருக்கின்றே மென்னு முண்மையை யுலகிற்குணர்த்தவும், பிரமன் கொண்ட அபராதத்தைத் தீர்க்கவுந் திருவுளங்கொண்டழைத்து, "நீயாவன்" எனவினவி யருளினர்.

---

* கின்னரர்=மானுடமுகமுங் குதிரை யுடலு முடையவர். கிம்புருடர்=குதிரைமுகமும் மானுட வுடலு முடையவர். சித்தர்=சித்திகள் பெற்றோர். அவர் ஆதிநாதர். அநாதிநாதர், கோரக்கநாதர் முதலாயினோர். வித்தியாதரர்=மாலிகாஞ்சன முதலியவித்தைகளைத் தரித்தார்.



பிரமசாத்த மூர்த்தி.

விதியோன் நடுநடுங்கித் துணுக்க முற்று, என் விளையுமோவென்று ஏங்கி "அடியேன் படைத்தற் ரெழி லுடைய பிரமன்" என்றான். "அங்ஙனமாயி னினக்கு வேதம் வருமோ ?" என்று பகவான் கேட்டனர். பிரமதேவன் கூறுவான்-ஐயனே! * பதினெட்டு வித்தைகளிலும் வல்லமை யுள்ளேன். வித் (அறிவு) என்னுந் தாதுவின்அடியாகப்பிறந்த, வித்தைகள் என்றுஉள்ளன வெலா மோதி யுணர்ந்துளேன். அவற்றைப் பலர்க்கு முபதேசிக்கு மாசாரியனாகவு முள்ளேன் என்றான். பரமான்மா அவைகேட்டுத் திருவாய்மலர்ந்தருளும். நன்று! நன்று! அத்துணைவல்லமையுடையையோ? அங்ஙனமாயி னிருக்குவேதங் கூறுதி. நின்வன்மை யறிது மென் றனுஞாபித்தமை மேட்டு மலரோன் வாய்திறந்து, பதின் மூன்ற மெழுத்தாகிய ஓகாரத்தை ‡ விந்து நாதங்களுடன்சேர்த்து ஓம் என்று உச்சரித்த மாத்திரையினே, சர்வலோக பரமாசாரியமூர்த்தியாகிய விசாக மூர்த்தி, திருக்கர மமைத்து, சதுர்முகா, நிற்றி! நிற்றி. அதன் பொருளை விளங்க வுரைத்தியென் றருளினர். பிரமன் சொல்லத் தொடங்கினன்.

ஐயனே! ஓம் என்பது பிரணவ மெனப்படும். எல்லாவித்தைகட்கும் எல்லா மந்திரங்கட்கும் முதலாயுள்ளது. சொல்லுமிடத்துச் சொற் பிரபஞ்ச மெல்லா மிதன்கட் டோன்றி நிற்கும். ததீசிமுனிவன் றந்தையாகிய அதர்வண விருடியென்பான் பண்டைஞான்று இவ்வோங்கார மான்மியத்தைப் பிப்பலாத முனி புத்திரனை பைப்பலாதனும், சத்தியவாக னென்னும் பாரத்துவாச முனிசீடனை ஆங்கிரசும், என் குமரன் சனற்குமாரனுங் கேட்டபோது உபதேசித்துளான். அது அதர்வண வேத

---

* பதினெட்டு வித்தைகளாவன—வேதம்-ச, அங்கம்-சு, உபவேதம்-ச, மீமாஞ்சை, நியாயம், புராணம், மிருதி என்னு நான்குஞ்சேர்ந்தவைகள். இங்ஙனம் வாயுசங்கிதை கூறுமெனக.

‡ விந்து என்பது [illegible] வெழுத்து. நாதம் என்பது ஒலி.

த்தின் ஒன்பான் சாகைகளு ளொன்ருகக் காணப்படும். இங்ஙனம் வேத ங்கடோறும் அதன்பெருமை விளக்கமாக் கூறப்பட்டுள்ளது. பிரகருட மென்னுந் தத்துவ ஞானத்தை யுண்டாக்கலாற் பிரணவ மெனப் பெயர் பெற்றது. அதுவியட்டிப் பிரணவம், சமட்டிப் பிரணவ மெனஇருவகை ப்படும். வியட்டிப் பிரணவமாவது அகார, உகார மகாரங்களாம், சமட்டிப் பிரணவம் ஆவதுஅவை மூன்றெழுத்துஞ் சேர்ந்து ஓம் என்று ஒலிப்ப தாகும். வியட்டிப் பிரணவம் அபரப் பிரணவம்எனவும், சமட்டிப்பிரண வம் பரப் பிரணவ மெனவுஞ் சொல்லப்படும். இப்பிரணவம் வந்த வர லாறு கூறுகின்றேன்:—

பகவ! முன்னர் ஞான்று பன்னூட் டவமுழந்து, அதன் பயனுனே பூமி அந்தரம் சுவர்க்கம் எனு மூன்றனையுஞ் சங்கற்ப மாத்திரையானே படைத்தனன். அவையிற்றைப் பின்னர்த் தவாக்கினியாற் கொளுத்தி னேன். அவற்றினின்றும் முறையே அக்கினி, காற்று, சூரியனென்னு மிவை தோன்றின. அவற்றையுந் தகித்தேன். அவற்றி னின்று முறை யே இருக்கு, யசுர், சாமம் என்னும்வேதங்க டோன்றின. அவையுமெ ன்னு லெரிககப்பட்டன. அவற்றினின்றும் பூர், புவ: சுவ: என்னும்வியா கிருதிகள் மூன்றுந்தோன்றின. அவற்றையுந் தகித்தேன். ஆங்கிருந்து முறையே அகாம், உகாம், மகாம்என்பன தோன்றின. அவைமூன்றனை யுஞ் சேர்த்து ஓம் எனவைத்தேன். அகா உகா மகாங்களி னியற்கையை யொருசிறிது உரைக்கின்றேன்.

ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம த்யேயம் ஸர்வமுமுக்ஷுபி: |
ப்ருதிவ்யக்னிஸ்ச ருக்வேதோ பூரித்யேவ பிதாமஹ: ||
அகாரஸ்து லயம் ப்ராப்தே ப்ரதமே ப்ரணவாம்சகே |
அந்தரிக்ஷம் யஜுர்வாயுர்புவோ விஷ்ணுர்ஜநார்தந: ||
உகாரஸ்து லயம் ப்ராப்தே த்விதீயே ப்ரணவாம்சகே |

ச்ருணு ஸ்வரூபம் ஸ்வராவேத ஸ்ரவாஸ்ரிதே ப்ரவரேஸ்வர: ||
ஓங்காரே தாத்மகம் வ்யாப்தே த்ருதீயே ப்ரணவாம்ஸகே |
அகார: பீதவர்ணஸ் ஸ்யாத் ரஜோகுணமுதீரிதம் ||
உகார ஸாத்விகஸ் ஸுக்லோ மகார: க்ருஷ்ண தாமஸ: |
அஷ்டாங்கம் ச சதுஷ்பாதம் த்ரிஸ்தானம் பஞ்சதைவதம் ||

என்று காமவேதங் கூறியாங்கு, இப்பிரணவம் முத்திகாமிகளா லே தியானிக்கப் படுமொன்று. எட்டு அங்கங்களையும், நான்கு பாதங்களை யும், மூன்று தானங்களையும், ஐந்து தேவதைகளையுமுடையது. பிரண வத்தின் மூன்றெழுத்திற்கு முரிய வியல்புவாக்கு மனங்கட் கெட்டாது. ஆயினுஞ் சொல்கின்றேன்.

அ. நிறுத்தல், படைத்தல், பிருதிவி, உதாத்தம், இறந்த காலம், சுத் தா சுத்த தத்துவம், சகலநிலை, பொன்னிறம், இராசதகுணம், சொப்பனவத்தை, இருக்குவேதம், காருக பத்தியம், காலைப் போது, பிரமநாடி, அக்கினிமண்டலம் என்னுமிவை யதன்கண் உணரற் பாலன.

உ-குவிதல், காத்தல், அந்தரம், அநுதாத்தம், நிகழ்காலம், சுத்ததத் துவம், சுத்தநிலை, வெண்மை நிறம், சாத்விக குணம், சாக்கிரா வத்தை, யசுர்வேதம், ஆகவனீயம், உச்சிப் போது,பிங்கலைநாடி, சூரிய மண்டலம் என்னு மிவை யதன்கண்உணரற் பாலன.

ம-மூடுதல், அழித்தல், சுவர்க்கம், சுவரிதகம், எதிர்காலம், அசுத்த தத்துவம், கேவலநிலை, கருமைநிறம், தாமதகுணம், சுழுத்தி யவத்தை, சாமவேதம், தக்கிணாக்கினியம், மாலைக்காலம், இடை நாடி, சந்திரமண்டலம் என்னு மிவை யதன்கண் அறியும் பாலனவாம்.

இவற்றிற்கு முறையே நானும், திருமாலும், உருத்திரனுமே அதிதேவதை யாவேம். இவ்வாறு தோன்று முறை, தொழில், இடம்அல்லது பூதம், காலம், தத்துவம், நிலை, நிறம், குணம், அவத்தை, வேதம், அக்கினி, பொழுது (சந்தி,) நாடி, மண்டலம் முதலியவற்றை யோகிகள் அறிவார்கள். இதனை அக்கர பரப் பிரமம் என்றுவேதங் கூறுகின்றது. ஞானத்தை நிலைநிறுத்தும் பொருளிதுவாகும். அதனுற்றான் ஆலம்பனம் என்னும் பெயரை யிதற்குவரித்தார் பெரியோர். இப்பிரணவ வுண்மையுணர்ந்தார் எமதுசத்தியவுலகிற் பூசிக்கப்படுகின்றனர். இங்ஙனம்,

𑌏𑌤𑌦𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌮𑍇𑌤𑌦𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑌂 𑌪𑌰𑌮𑍍 |
𑌏𑌤𑌦𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇 ||

ஏகதா லம்பனம் சிரேஷ்ட மேகதாலம் பனம்பரம்!
ஏகதா லம்பநம் ஞாத்வா ப்ரஹ்மலோகே மஹீயதே!!

என்று யசுர்வேதங் கூறுகின்றது. இப்பிரணவம் மூன்று மாத்திரைகளை யுடையது. இந்தப் பிரணவ உபாசனத்தைப் பிரதீகோபாசனம் என்றல் பொருந்தாது. பிரம உபாசன மாகவே எண்ணுதல் வேண்டும். அதனல் அகர மென்னு முதல் மாத்திரையை யெவர் உபாசிக்கின்றரோ அவர் அப்பெருமையால் விவேகஞானம் பெற்று மேலாய அரியமானுடப் பிறவியை யெடுத்து, அதன்கட்சிவஞான மடைந்து, முத்தியையடைதறிண்ணம். எங்ஙனெனில் அகாரம் இருக்குவேத வடிவாயிருத்தலால் என்க. யசுர்வேதம் மந்திர வடிவமாக விளங்கும். உகர மகரங்களைத் தியானிக்கின்றவர் சந்திரலோகத்தை அடைவர். எவரொருவர் மூன்று மாத்திரைகளையுடைய பிரணவத்தை யுபாசிக்கின்றரோ, அவர் சூரியனது ஒளி மண்டலத்தை யடைந்து பாம்பு பழைய தோலினின்றும் விடப்பட்டாற் போலப்பாவத்தி னின்றும் விடுபட்டுப் பிரமலோகத்தை யடைவார்.

பிரச்சினோபநிடதம் ஐந்தாவது பிரச்சினம்.

[illegible]

[illegible]

இங்ஙனங் கூறுகின்றது. என்றிவ்வாறு பிரமனுரைத்துப்போதலும், சுப்பிரமணியக் கடவுளார், "இவைதாமோவப்பிரணவத்தின்பொருளாவன ?" என்று நகைத்து உண்மைப் பொருளை யுரைத்தி என்றார். கமலாசனன் றிகைத்து ஒன்றுந் தெரியாது மயங்கி நிற்ப, இங்ஙனமுள்ள நீயோ படைக்குந் தொழில் செய்வாய் ; இவ்வாறோ சிருட்டியும் புரிகின்றாய் ? நீயோ அகாரப் பொருளாயிருப்பவன் ? நன்று நன்று எனவுரைத்து, அப் பிரமனது நான்கு முடிகளுங் குலுங்கும்படி * குட்டி

* வீரவாகு தேவரே சுப்பிரமணியக் கடவுளின் றிருவுளக்குறிப்பை யுணர்ந்து, பிரமன் முடியிற் குட்டிச் சிறையில் வைத்தனரென்று வடமொழிச் சங்கரசங்கிதை கூறுகின்றது. தணிகைப்புராணம் முருகக்கடவுளி னொன்றுகொண்டு கணங்க ளிங்ஙனஞ் செய்தவெனக் கழறிற்று.

யருளினர். இத்தகையவிருண்ட வுளத்தனைச் சிறை யிடுக வென்று ஆஞ் ஞாபித்தார். வீரவாகுதேவரும், ஆங்கு நின்ற வீரர்களுமாகப் பற்றிச் சென்று கந்தமலைக்க ணுள்ள குகை யொன்றனில் அடைத்தனர். பிரமன் மிகவும் வருத்தம் உற்று ஆங்குச் சிறையிருந்தான். சுப்பிர மணியப்பெரு மான் பிரமனைத் தண்டித்துச் சிறைவைத்தமை கேட்டுக் கடவுளர்க ளெல்லாம் விதிர் விதிர்ப்புற்று வணங்கிச் சென்றார்.

பிரமசாத்த மூர்த்தியின் இலக்கணங் கூறுமிடத்து ஒரு திருமுக மும், நான்கு திருக் கரங்களும், வரதம், கமண்டலம் என்னும் இரண்டும் இடத் திருக்கரங்களிற் பொருந்தவும், அபயம், அக்கவடம் என்பன வலத் திருககரங்களிற் பொருந்தவும், தாமரைமலரையொத்த பிரகாசமுமுடைய ராய் விளங்குவார் என்க.

யசுர்வேதம்-அத்தியாச்சிரம சாகை.

𑌅𑌣𑍋𑌰𑌣𑍀𑌯𑌾𑌨𑍍𑌮𑌹𑌤𑍋𑌮𑌹𑍀𑌯𑌾𑌨𑍍
𑌆𑌤𑍍𑌮𑌾𑌗𑍁𑌹𑌾𑌯𑌾𑌂𑌨𑌿𑌹𑌿𑌤𑍋𑌸𑍍𑌯𑌜𑌨𑍍𑌤𑍋𑌃 ।
𑌤𑌮𑌕𑍍𑌰𑌤𑍁𑌂𑌪𑌶𑍍𑌯𑌤𑌿𑌵𑍀𑌤𑌶𑍋𑌕𑍋
𑌧𑌾𑌤𑍁𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾𑌨𑍍𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑍀𑌶𑌮𑍍 ॥

அணோ ரணீயாந் மஹதோ மஹீயாந்
ஆத்மா குஹாயாம் நிஹிதோஸ்ய ஜந்தோ: ।
தமக் ரதும் பஶ்யதி வீதசோகோ
தாது: ப்ரசாதாந் மஹிமாந மீஶம் ॥

குமார தந்திரம் மந்திரோத்தாரப் படலம்.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑌾𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍀 । 𑌵𑌾𑌮𑍇 𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌂 𑌚𑍈𑌵
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚 [illegible] 𑌪𑌙𑍍𑌕𑌜𑌂 𑌵𑌿𑌶𑌾

[illegible]

ப்ரஹ்ம சாஸ்தஸ்வாமி ! வாமேகரே ச யுகளே வா குண்டி கேச சவ்யேக்ஷ சூத்ரே மபயந்ததம் விசாகம் வல்லீ யாயுதம் வரத லோஹக மேக வக்திரம் வந்தாமஹே வரத சம்பவ சரிதாரம்.

தணிகைப்புராணம் - அகத்தியப்படலம்.

வரத மணிக்குண் டிகையிரண்டும் வாமத் திருக்கைத் தலமாக்கிப்
புரவு புரியு மபயமொடு புரைதீ ரக்க வடம்வலப்பா
விரவை யிரிக்கும் வலத்த மைத்திட் டெல்லாவுலகு மினிதளித்துப்
பிரம சாத்த னெனப்பொலிந்த பெருமா னுருவம் பிறக்குநரும்.

பிரமசாத்த மூர்த்தயே நம:

பன்னிரண்டாவது,

சிருட்டி கர்த்தத்துவ மூர்த்தி.

பிரம தேவன், சுப்பிரமணியக் கடவுளி னுத்தரவையானே சிறை செய்யப்படும்போது, வலிய கணங்க ளெல்லாம் அவனைத் துன்பப்படுத்தத் தொடங்கின. முடிகளி னின்றும் பல ரத்தினக் கூட்டங்கள் சிந்தவும், இரத்தங் கொப்பளித்து அருவி நீர்போற் றிரண்ட தோளினின்று குதிப்பவும், அழகும் அவனது காந்தியும் படைத்தற்றொழிலுஞ் சிந்தவும் முடிதோறுங் குட்டி, வலிய காத்தைப் பிறைபோற் பிடித்துப் பிடரிற்



சிருட்டி கர்த்தத்துவ மூர்த்தி.

பிடித்துத் தள்ளி, அக்கவடமுந்தாமரை மலர் மாலையும் அறுந்து வழிக டோறுஞ் சிதறக் கொடு சென்று, ஓர் குகைக்கட் சிறையிட்டன. ஆங்கே நான்முகன் தந்தை தாயராலே தண்டிக்கப்பட்ட மழலைக்குழவிகள் போல, வருவதை யறியானும், வேறொரு துணையு மின்றி மரணகாலத் துயிர் களேபோல மாழ்கிநின்றான். பாம்புகளின் வாய்ப்பட்டுப் பலநாள் வருந் துஞ் சூரிய சந்திரர் போலவும், துன்பங்க ணிறைந்த கருப்பையிற் பல வாண்டு கிடக்குங் குழந்தை மானவும், விடியாத இருளின் வயப்பட்ட கண்களே சிவணவும். பிரமன் றனது ஒளி, வன்மை, பெருமை, அறிவு முதலிய யாவுங் குறையப் பெற்றுத் தேம்பியிருந்தான்.

இசை மடந்தை யாகிய சரசுவதி, தன துயிர்த் துணைவனாகிய விரிஞ்சன் குமாரக் கடவுளாலே தண்டிக்கப்பட்டுச் சிறைப்படுவதை முன்னரே யறிந்தாள் போலும். என்னெனில், அவனகத்தி னின்றும் நீங்கவருமே. அதுகாலைக் குடியிருத்தற்கு ஓர் இடம் வேண்டுமே என்று புட்பக் கொத்துக்கள் விளங்கா நின்ற தருக்களையும், வெண்டாமரைப் பூக்களையும், இசைகளையுந் தான் வாழு மிடமாக்கிக் கொண்டனள். நல் லுணர்ச்சி யிருக்கின் நரகமு மொருவனுக்குச் சுவர்க்கத்தைப் போல இன்பத்தைக் கொடுக்கும். அஃதின்றேற் சுவர்க்கமும் நகரத்தைப் போ லத் துன்பத்தையே கொடுக்கும். அங்ஙனம் நல்லுணர் வின்மையா னன்றே, உலகத் துள்ளஉயிர்கள் யாவற்றிற்கும் பேரானந்தத்தை விளைக் குங் கயிலாயத்தி னோர்பாங்கராங் கந்தமலைக் குகையும் பிரமனுக் களவிலாத் துயரத்தைக் கொடுத்தது. தேவர்கள் இன்பத்தையும், நரகர் துன்பத் தையும், மானுடர் இரண்டனையும் அநுபவிப்பாரக ளென்று புலவர் புகலாநிற்பர். அவரெல்லாம் பிரமன் அன்றுபட்ட வல்லற்றுணையை யறிவரே லங்ஙனம் புகலார்: புகலார்.

இப்பால் உலக மெங்கணு நிறைந்தவரும், அன்பர்தங் குற்றங்களை யெல்லாந் தவிர்த்துத் தந்திருவருட் செல்வத்தை வழங்குவோரும்.

> நவத்வாரே புரே தேஹீ
> ஹம்ஸோ லேலாயதே பஹி: |
> வஶீ ஸர்வஸ்ய லோகஸ்ய
> ஸ்தாவரஸ்ய சரஸ்ய ச ||

(ஒன்பது துவாரம் உள்ள வோர் புரத்திற் தேகியாகி அம்சன் வெளிப்பட் டலைகின்றான். இவன் தாவர சங்கமப் பொருளின் வடிவாய எல்லாப் பிரபஞ்சத்திற்கும் வசியாம்.)

என்னும் வேத வசனத்தைப் பிரமனுக்கும் இலக்கிய மாக்கிய வரும்; காலகாலரும், உலகத்தை யறிந்தவரும். தம்மையே காரணமாகப் பெற்றவரும், எல்லா வித்தைகளாலும் அறியப் பட்டவரும், குணேசரும், பிரதானரும், மோக்கத்திற்கும், திதிக்கும் பந்தத்திற்கும் ஏதுவானவரு மாகிய சுப்பிரமணியக் கடவுள், பிரமதேவன் சிறையிடைப் புக்கமையால் அவன் செயும் படைப்புத் தொழிலைத் தாமே செய்தருளத் திருவுளங் கொண்டு, சிறப்பின் மிக்க திருவேங்கட மலையை யடைந்தருளினார்.

மேலாய தகுதி கொண்ட வரைப்பாய், செந்தமிழ்க்கு வரம்பெனப் பண்டை யோராற் புகலப்பட்டதாய், அகத்தியனார்க்குச் செந்தமிழைச் செவியறி வுறுத்திய தலமாய் விளங்காநின்ற திருவேங்கடமலையை யடைந்த பெருமானார், ஒவ்வொரு காலத்தையும் பலவகையாக மாற்றி யிந்த க்ஷேத்திரத்திலேயே சங்கரிக்கின்றார்; மீட்டும் பலபதிகளைப் படைத்துத் தாமொருவரே மகான்மாவாய்ச் சர்வாதிபத்தியஞ் செய்பவர் என்பதை யுலகந் தேறி யுய்யுமாறு பெருகிய கருணையுடன், அம்மலைக்க ணோருத்தம

தானங் கண்டு கோயில் புனைவித்து, நடுவணிடப்பட்டு விளங்குந் தவிசின் மத்தியில், நீண்ட சடாமுடியும்: வரத அபயங்களும், கமண்டலம் அக்க வட மென்பவும் நாற் றிருக்கரங்களி னிடத்து மமைய, முனிவர், தேவர் கள், இந்திரன், விட்டுணு, கணத்தவர்கள், நவவீரர்கள், இலக்கம் வீரர்கள், என்னு மிவர்க டம்மைச் சூழ்ந்து துதிக்க வீற்றிருந்து சிருட்டித்தொழில் செய்யத் தொடங்கி யருளினார்.

தாஞ் செய்தருளுகின்ற படைப்புத் தொழிற் கேற்பத் துழாய் மாலை தரித்தோன் காக்க மாட்டானென்று அவன் செயுங் காத்தற் றொழிலையும், தந்தை செல்வம் மைந்தர்க்கு உரியதாகலான் அவர்செய்யும் அழித்தற் றொழிலையும் அதனோடு செய்தருளினார். ஆகவே முத்தொழிலுந்தாமே செய்தருளி முத்தொழிற்கும் மும்மூர்த்திகட்குங் காரண ரென்பதைத் தெற்றென விளக்கினார். இந்திரற்கும் அதனால் அரசில்லை யாயிற்று. தேவ வருடங்கள் பலகழிந்தன. விருப்பு வெறுப்பென்பன தனக்கொன்று மின்றி, தம் பணி புரியும் அடியார்கட் குரிய விருப்பு வெறுப்புக் களை நீக்கி யருள்புரியும் பராபரமூர்த்தியாகிய செவ்வேட் கடவுள், படைத்த வப் படைப்பிற்றோன்றிய ஆன்மாக்கள் பெற்ற பேற்றை யிற்றென்று நுண்ணிய அறிவுடையார் தாமுங்கூற வல்லரோ? யாவரும் புண்ணிய வடிவாகவே விளங்கினர். தீவினை யென்பது எவ்வுயிர்களை யும்விட்டு நீங்கிற்று. சொற் பிரபஞ்சம்|பொருட் பிரபஞ்ச மென்னுமிரு வகைப் பிரபஞ்சங்களை யெல்லாம், தாம் நிமித்த காரணராக நின்று முதற் காரண மாகிய மாமாயையி லிருந்துந் துணைக் காரணமாகிய சத்தி யைக் கொண்டு படைத்தார்; அளித்தார்; துடைத்தார்; இதனானே மும் மூர்த்திகட்கும் முதல்வர் அவரே யென்பதூஉம், கிருத்திய சுதந்திரர் அவரேயென்பதூஉம்; பெறப்பட்டன. மலைபோலும் பெருவன் மையுள்ள சாத்தற்கு மூன்றுகலப் பாரஞ் சுமத்த லோர் விளையாட்டாயினமை சிவண, வேங்கடாசல பதியாகிய சுப்பிரமணியக் கடவுட்கும் இஃதோர் திருவிளையாட் டாயிற்று.

"காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி"

"ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாடி"

னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தேம்"

எனத் திருவாசகத் திருவருட்பாவிற் கூறியதூஉ மிவ்வுண்மையைத் தெரிக்கு மென்க. சர்வ கர்த்தத்துவ பதியாகிய ஞான சத்திதாப் பெருமான், சிருட்டித்தன் முதலியன வெல்லாம், குயவன் முதலினோர் செய்யுங் காரணவினை போலாது, "இஃதிவ்வா றுக; இஃதிவ்வாறுகாமே யொழிக" என்று எண்ணுத லாகிய சங்கற்ப மாத்திரையே யென்க. இக்கருத்து அமையவே,

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவன்"

எனச் சிவஞான போதமுந் தெளித்தருளிற்று. * பன்னிரு திருமுறைத் திருவருட் பாக்களு மிங்ஙனே கூறுமென்க. இதனானே பிரம விட்டுணு உருத்திர ரென்னு மிவர்க்குத் தொழிற் சுதந்தரமில்லை யென்பதூஉம், அங்ஙனே முத்தி பெற்ற ஆன்மாக்க ளிறைவனே மான வைந்தொழி லுஞ் செய்யுமென்று சிவசமவாதி, உருவசமவாதி, சித்தாந்தந் தெரியாது அதற்குமாறாக நின்று எம்மதமுஞ் சம்மத மென்னு நவீனமத வாதி யென்னு மிவர்கூறுங்கூற்றுக்களெல்லாம் பொய்யேயா † மென்பதூஉம், விஞ்ஞான தீக்கைக்கண் உடல் பொருள்களோ டொப்பச் சற்குரவன் கையிற் றானஞ்செய்தளித்தும், அங்ஙன மளித்த பொருளென்றறிவு

* பன்னிரு திருமுறைத் திருவருட்பாக்க ளாவன:—தேவாரங்கள், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினோராந் திருமுறை, பெரியபுராண மென்பன.

† இதன் விரிவைச் சிவஞான போத மாபாடியத்து ஆறுஞ் சூத்திர வுரையினும், மருட்பா மறுப்பு என்னும் நூலினுங் கண்டுகொள்க.

மறிவு சலியாமைப் பொருட்டு நாடோறுஞ் சிவ பூசையிற் செபங் கன்மங்களோடொப்பச் "சிவோதாதா" என்னு மந்திர மோதி ஆன்மாவையுஞ் சிவனுடைமையாகப் பூநீரோடு தானஞ் செய்தளித் தடிமையாகப் பாவிக்கும் ஆன்மாக்கட் கென்ஞான்று மைந்தொழின், முத்தொழி லன்றி யொரு தொழிற்றானுஞ் செய்தற் காற்றலில்லை யென்பதூஉம். கந்தப் பெருமானர் விளக்கி யருளின ரென்க. இங்ஙனம் பிரமனைச் சிறைவிட்டுத் * திரு வேங்கடக்கண் முத்தொழிலையும் நடத்தலானும், முக்கியமாகப் பிரமன் இடம் நிகழ்த்திய தொழிலை, ஈண்டு அதிட்டான மின்றித் தாமே நடத்தலானுஞ் சிருட்டிகர்த்தத்துவ மூர்த்தியாயினர்.

கிருஷ்ண யசுர்வேதம்.

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||

---

* திருவேங்கட மென்பது இக்காலத்து விட்டுணுத் தலமென்று வைணவர் கொண்டாடுகின்றனர் நாகாபரணமும், சடாதாரணமும், வில்வார்ச்சனையும், சஷ்டியுற்சமுஞ், தேவிமார்கள் இன்றித் தனியே வீற்றிருத்தலும், ஆயுத மின்றி யமர்ந்தமையும், வேங்கட சுப்பராய னென்னும், பெயரவழக்கும், புதிதாக ஆயுதம் வைத்திருத்தலும், சுப்பிரமணியராலயத்திற்குரிய அந்தராள அளவு இருத்தலும், விட்டுணு வாலயத்திற்குரிய வந்த ராளமின்மையும், கந்தபுராணம், உபதேசகாண்டம், தணிகைப்புராணம், சங்கரசங்கிதை, சூத சங்கிதை, திருப்புகழ், பிரமாண்டபுராணம், கந்தஸ்தலம், வேங்கடகுகஸ்தல நிரூபணம், க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் முதலிய நூல்களிற் சொல்லப்படுதலுமாகிய இன்னோரன்னகாரணங்கள் பலவற்றால், திருவேங்கடத் தலம் சுப்பிரமணிய தலமேயாகத் தெளியப்பட்டது. விஷ்ணு தலமன்றென்பது பிரசித்தமாம்.

சிருட்டி கர்த்தத்துவ மூர்த்தி.

மேற்படி வேதம் மந்திரசாகை.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(ஒவ்வொரு சாலத்தையும் பலவகையாய்த் திரித்து இந்தத் தலக் கண்ணே இக்கடவுள் அழிக்கின்ருன். மீட்டும் அநேக கர்த்தாக்களைச் சிருட்டித்து இவனே மகான்மாவாய்ச் சர்வாதிபத்தியஞ் செய்கின்ருன்.

இருக்கு வேதம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

கந்தபுராணம் - அயனைச் சிறைபுரி படலத்துங் காண்க.

தணிகைப் புராணம் - வீராட்டகாசப் படலம்.

கண்டவர் பிறவி மாய்க்குங் கமண்டல மக்கமாலை
கொண்டிரு காத்துச் சார்வோர் கொடும்பய மொதுக்கிநல்க
வொண்டொடிக் கமலச் செங்கை யோரிரண் டமைத்தவ்வாற்றின்
விண்டவர் கடப்பந் தாரான் வீற்றிருந் தருளுநாளில்.

சிருட்டி கர்த்தத்துவ மூர்த்தயே நம:

பதின்மூன்றாவது,

பிரம்மகாராக்கிருகவிமோசனமூர்த்தி.

இங்ஙனம் வேங்கட மலைக்கட் டிருக் கோயில் கொண்டு எழுந்தருளி நெடிய முடிப் பெருமான் படைத்தன் முதலிய தொழில்களை நடாத்துவா ராயினார். நந்த கோபன் மகனான விட்டுணு இதனை யறிந்து வருத்தங்கொண்டு யாவரும் வருக வென்று தம்மனத்தி னினைத்தனர். இந்திரன், தேவர்கள், முனிவர்கள் முதலிய யாவரும் வந்து சேர்ந்தனர். அவர்களுடன் றிருமால் கயிலை சார்ந்து, திருவாயிற்க ணுள்ள திருநந்திதேவரின் பாதங்களை வணங்கி, அவர் விடைபெற்றுச் சென்று, உமையம்மையாரோடு மெழுந்தருளி யிருக்கின்ற ஆயிர நாமத் தண்ணலாஞ் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கித் துதித்து, விரிந்த கரங்களைக் குவித்து அஞ்சலித்து நின்றனர். துன்ப மானது தம்மனத்தை யலைக்குமாறு நின்ற தேவர் முதலினோரை, தேன் றுளிக்கின்ற கொன்றை மாலையை யணிந்த வழகனார் திருநோக்கஞ் செய்து, நீவிர் வந்த காரணத்தைச் சொல்வீராக வென்றருளினர். அவர்கள், பெருமானே! தேவரீர் திருமுன்னிலையிற் சொல்லுதற்குப் பெரிதும் அஞ்சுகின்றேம், யாமென்றார். கருணையங் கடலார் அவர்ப்பார்த்து, அளியீர்! எம்முனுரைத்தற்குச் சிறிதும் அஞ்சன்மின்; சொல்லுக வென்றருளினார். விட்டுணு முதலாயினோர் விளம்புவர்.

𑌯𑌨𑍍𑌮𑌨𑌸𑌾 𑌨 𑌮𑌨𑍁𑌤𑍇 𑌯𑍇𑌨𑌾𑌹𑍁𑌰𑍍𑌮𑌨𑍋 𑌮𑌤𑌮𑍍 ।
𑌤𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 𑌨𑍇𑌦𑌂 𑌯𑌦𑌿𑌦𑌮𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ॥

யந்மநஸாந மநுதேயே நாஹுர் மநோமதம் !
ததேவப் பிரஹ்மத்வம் வித்திநேதம் யதிதமுபாஸதே !!

ஆன்மாக்கள் எதனை மனத்தினால் நிச்சயிக்க வில்லையோ?, எதனால் மனம் நினைக்கிற தென்று சிவஞானிகள் உரைக்கின்றனரோ, எப்பொ



பிரம காராக்கிருக விமோசனமூர்த்தி.

சுப்பிரமணிய பராக்கிரமம்.

ருள் நின் சமீபத்தில் உள்ளதோ, அதுவே பிரமம் என்று அறிதி.
வான்மாவைப் பிரமம் என்று அறியற்க.

என்று சாமவேதங் கிளந்த மகாமகிமையுடைய பகவ! அடியேங்கள் விண்ணப்பிப்பன வற்றைக் கேட்டருளுதி. துன்பமாகிய பெரிய சாகரத்து ளாழ்ந்து கரைகாணா திளைக்கு மெங்களை யெல்லா மெடுத்தருளுவான் றிருவவதாரம் புரிந்து விளங்குங் கடப்பந்தா ரண்ணலை இளையோ னெனத் தன்பேதைமையான் விளங்கிய பிரமன், அறியாமை யென்னு மிருட் டன்மையால் அவரை வணக்கஞ் செய்யாது, தேவரீர் திருச்சந்நிதானம் புக்கு வணங்கி மீண்டனன். அதனைக் கந்தக் கடவுள் தந்திரு வுள்ளத்து வைத்து, ஆண்டுச் செல்லும் அவனைப் பிடித்துவருக என்று ஆஞ்ஞாபிக்க, வீரர்தலைவராகிய வீரவாகு அண்ணல் அவனைப் பிடித்தீர்த்துச் சென்று கடம்பனார் திருமுன் விடுத்தார். வேத முதல்வராய அவர், பிரமனைப் பிரணவப் பொருள் வினாவித் தலையின் மொத்தி, அவனைச் சிறையிடுவித்துத் திருவேங்கட மலைக்க ணமர்ந்து சிருட்டித் தொழிலைத் தாமே புரிந்தருளுகின்றார். அத் தொழிலோடு காத்தற் றொழிலு மவரே புரிகின்றார். இதுகாரண மாகவே தேவரீரது திவ்விய சந்நிதானத்தைப் புகலிடமா நினைத்து வந்தேம் என்றார். பூரணராய சிவபெருமான் பொலிவுபெற்ற கூந்தலையுடைய உமா தேவியாரைத் திரு நோக்கஞ் செய்து நின் செல்வக குமா னாற்ற லிவ்வளவிற்றோ வென்று புன் முறுவல் பூத்து, தேவர்க்குத் திருவாய் மலர்ந்தருளுவார்.

செம்மைய ஞானசத்தித் திருவுருக் கொண்ட செம்ம
லெம்மின்வே றல்லன் யாமு மவனின்வே றல்லேங் கண்டீ
ரம்மழ வடிவினான்பா லன்புசெய் தவர் பிழைத்தோர்
நம்மடித் தொண்டு செய்தோர் நவைபடப் பிழைத்தோ ராவர்.

௬00 பிரம காராக்கிருக விமோசன மூர்த்தி.

பிழைகள் எல்லாவற்றினும் மேலான பிழையைச் செய்த பிரமனுக்கு, நங்குமாரனியற்றிய தண்டனை தகுதியை யுடையதே யாகும். அவனைச் சிறையினின்றும் விடுவித்த லெவ்வாறு? குழுமி வந்து இவண் சேர்ந்த நீவிரெல்லாம் யோசித்துச் சொன்மின் என்ன, கொன்றை மாலைக் குழகனார் முன் அவரெல்லாம் நடுங்கிய மனத்தாராய்ச் சொல்வார், பரம் பொருளே! முன்னர் ஞான்று ஆணவ மென்னு மிருளி னகப்பட்ட பெரும்பிழையைத் தேவரீரே யுணர்ந்து, ஒரு செயலு மற்றுக் கிடக்கும் அக்கேவல அவத்தையிலே கருணை வைத்து ஆண்டருளினர். அங்ஙனந் திருவருள்புரியுந் தேவரீர் இப் பிழை யொன்றனையு முட்கொள்ளா தருள் புரிதல் அரிது போலும் என்றார். அதற்கு. இறைவன் றிருவாய் மலரும். ஞானசத்தி தானாய அவனும் யாமும் வேறல்லேம். நாமே குமரன் குமரனே நாம். அவ்வாறே,

"ஸ்கந்தஸ் ஸ்கந்தாஜ்ஞாநாவிஸ்கந்தோ ஸ்கந்தாஜ்ஞாயதேஸ்கந்தாஜ்ஞாய"

என்று யசுர் வேதத்திலே அந்தியாச் சிரம சாகை யானது கூறுகின்றது. அதுமட்டோ,

யஸ்ஸ்கந்தஸ்ஸ ருத்ர | யோருத்ர | யஸ்ஸவிநாயக | யஸ்ஸ்கந்த

என்று அதர்வண வேதங் கூறுகின்றது. ஆகலால் நான் வேறு, குமரன் வேறு எனப் பிரித்தோர் இரௌரவம் மகாரௌரவ முதலிய கொடிய நரகங்களினின்று மேறமாட்டார். ஒருகால் ஏறுவரேல் 'மலப் புழுவாகவும், மலந்தின்னும் பன்றி யாகவும், புலையாகவும், பிறந்து பிறந்துழல்வர்; இது உண்மை! உண்மை!! முக்காலும் உண்மை!!! அவர் பவக் கடலினின்றுங் கரையேறுதலில்லை. குமாரனிடம் அன்பு செய்தவரே உய்ந்தார். அவனடிக் கன்பு செய்யாது எம்மைப் பூசிப்பாராயினும் அவர் பிழைப்பட்டவரே. ஆகலாற் பிரமன் செய்தது மேலான அதி

பாதகம். அப்பாதகத்தையும் நங்குமரன் காருணியத்தினாற் றீர்ப்பதற் கன்றோ குட்டிச் சிறையிடுவித்தான். தன்னை வணங்கில னென்னுஞ் சினத்தானன்று. பிரணவற்றின் பொருள் யாமும் அவனுமே யன்றி வேறொருவரு மாகார். பிரணவத்திற்கு அகரம், உகரம், மகரம், விந்து, நாதம், சத்தி, சாந்தம் என்னும் எழுபகுப் புள்ளன. அவற்றுட் சத்தி என்பது வேலாயுத மாகவும், மற்றைய ஆறும் ஆறு முகங்களாகவும் அவற் குண்மையானும் அது நன்கு விளங்கும்.

வேதங்களில் ஆங்காங்கே.

𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌂 𑌓𑌂𑌕𑌾𑌰𑍇𑌣 𑌯𑌤𑌨𑍍𑌤𑍇 𑌨𑌾𑌰𑌂𑌹𑌤𑍇
𑌸𑌦𑌾𑌸𑌂𑌹𑍃𑌷𑍍𑌟𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍋 𑌰𑌾𑌜𑍇𑌤𑌃 |

𑌸 𑌓𑌂𑌕𑌾𑌰𑍋 𑌯 𑌓𑌂𑌕𑌾𑌰𑌃 | 𑌸 𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃
𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌪𑍀 𑌸 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌰𑍍𑌣𑌵𑌤𑌾𑌰𑌕𑌃
𑌸 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵 𑌇𑌤𑌿 ‖ எனவும்,

𑌈𑌶𑌾𑌨𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌂
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌧𑌿𑌪𑌤𑌿𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌶𑌿𑌵𑍋
𑌮𑍇 𑌅𑌸𑍍𑌤𑍁 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑍋𑌮𑍍 ‖ எனவும்.

எம்மைக் கூறியதன்றி, எங்குமரனையும் யாக காலத்தே "சுப்பிர மண்யோம்! சுப்பிரமண்யோம்!! சுப்பிரமண்யோம்!!! எனமூன்று முறைகூவி யழையா நிற்கும். இங்ஙன மிருப்பவு மிவற்றை யறியாது தானே அகரப் பொருள் என்ற பிரமனை விடுவிப்பது கூடாதன்றே.

காஞ்சிப் புராணம்.

எக்கலைக்கும் பூதங்க ளெவற்றினுக்கும் பிரமனுக்கு மீசனென்னத்
தக்கமுதற் பரப்பிரமஞ் சதாசிவனே மெனவேதஞ் சாற்று மல்லால்

௯௨. பிரம காராக்கிருக விமோசன மூர்த்தி.

மூக்கனல்சூழ் வேள்வியிற் சுப்பிரமணிய னேமெனவு மூக்காற் கூறு
மிக்கருத்தை யறியானை யெவ்வாறு விடுவிப்ப தியம்பு மின்னே.

என்று பெருமானார் அருளியதைக்கேட்டு விட்டுணு நடுநடுங்கி யுரைப்பார். மூவா முதலே! தேவ சிங்கமே! முன்னர் நான்று அவன் இயற்றிய எத்தனையோ பிழைகளைப் பொறுத்தருளினீர். அங்ஙன முள்ள தேவரீர் இந்தப் பிழையைத் தான் பொறுக்கல் அரிதோ? வேத முதலே! பூரண! புராதனப் பொருளே! குமாரப் பெருமா னிடஞ் செல்வே மானால், யாங்க ளெல்லா மிறந்து படுத லொருதலை யென்றே யிச்சந்நிதியை யடுத்தேம். ஈண்டும் வருதற்கு மிகவும் அஞ்சியே யிந் நாள்காறுந் தரித்திருந்தேம். கடனடுவட் போதாநிற்கும் மரக்கலப் பொய் மர மேலிருந்த காகம், அங்கு நின்றோர் துரத்த நாற்பாங்கரு மோடி யோடிப் போந்து கரையுந் தங்கு மிடமும் வேறு காணாது, முன்றங்கிய கூம்பரையே மீட்டும் நாடி வருதல் போல, அடியேங்களும் யாங்குச் செல்வேம்? யாரைத் துணைக் கொள்வேம்? தேவரீரேயன்றி வேறு தஞ்ச மென்னே? என்று மற்றைய தேவர் முதலினரோடுஞ் சேர்ந்து தாழ்ந்து தாழ்ந்து இரந்தார். தாழ்ந்தவரை வறியராக்கவிடாத பரசிவனார் கருணை கூர்ந்து, அஞ்சற்க வென்று அபயங் கொடுத்து நந்தி தேவரை யழைத்துத் திருவாய் மலர்ந் தருளுவார்.

நந்தியே! பொன் மணி கொழித்துப் பாயும் பொழி லுடுத்த வேங்கடப் பொருப்பை யடைந்து, கடப்பந் தாரா னடிமலர் வீழ்ந்து கை குவித்துத் துதிகள் கூறி, "பிரமன் சிறையை விடும் வரத்தைத் தந்தை யார் அவண் திருமான் முதலானோர்க்குக் கொடுத்தார். அவ்வரம் இவண் கொடுத்த வரமே யாகும்" என்று அவன் சிறையை நீக்கி வருதி" என் றருளினர். திருநந்தி தேவர் வேங்கடமலையை யடைந்து சிவபெருமான் அருளிய வாறு வணக்கமுதலாய புரிந்து "பிரமன் சிறையை விடும் வரத்தை" என்று கூறிய மாத்திரையே சர்வகர்த்தத்துவ மூர்த்தி யெ

குண்டு, "நீ இவண் நிற்பையேல் நின்னையுஞ் சிறையிடுவிப்பாம்" என்று கூறியருள, நந்தி தேவர் நடுநடுங்கி மிகப்பயந்து வேறொன்று முரையாராய் ஓடிச்சென்று பாசிவனார்க்கு அங்கு நிகழ்ந்தவற்றை யுரைத்தார். பெருமானார் புன்முறுவ லுற்றுக் கணர்கள் யாவருஞ் சூழ்ந்துபோற்ற இடபாரூடரா யெழுந்தருளித் திருவேங்கடஞ் சென்று புதல்வரைத் தழுவிப் பிரமன் சிறைவிடுமாது கூறியருளினர். பிரணவப் பொருள் தேரியான் படைப்புத் தொழிலை யெங்ஙனம் புரிவான். அவனை விட லொல்லாதெனை, பாசிவனார் வெகுள்வார்போல, மைந்த நின் செய்கை யென்னே? பிரமன் சிறைவிடென்று யாம் உரைக்கவும் மறுக்கின்றனை யெனக் குமாரக்கடவுள் மலரவன் சிறையை விடுவித்தனர். பாசிவனார் வெள்ளியம் பொருப்பிற் சேர்ந்தார். குமாரப்பெருமானார் தம்மை வணங் கிய பிரமனுக்கு உறுதிமொழி கூறி யனுப்பினர். அதன்பின் கயிலைப் பாங்கருள்ள கந்தமலைக் கோயிலிற் சென்று வீற்றிருந்தார். பிரமனைக் காராக்கிருகம் என்னுஞ் சிறைச் சாலையினின்றுஞ் சிவபிரான் வேண்ட விடுத்தமையாற் பிரமகாராக் கிருக விமோசன மூர்த்தி யாயினர்.

கந்தபுராணம் - அயனைச் சிறை நீக்குபடலம்.

நன்சிறை யெகின மேன நாடுவா னருளை நல்கத்
தன்சிறை நின்றோர் தம்மைச் சண்முகக் கடவுணோக்கி
முன்சிறை யொன்றிற் செங்கேழ் முண்டகத் தயனைவைத்த
வன்சிறை நீக்கி நம்முன் வல்லைதந் திடுதி யென்றான்.

என்றலுஞ் சாரதர்க்குட் சிலவர்க ளேகியங்க
ணொன்றொரு பூழைதன்னு ளொடுங்கின னுறையும் வேதா
வன்றளை விடுத்தல் செய்து மற்றவன் றனைக்கொண் டேகிக்
குன்றுதொ ளுடல் செய்யுங் குமரவேண் முன்ன ருய்த்தார்.

பிரம காராக் கிருக விமோசன மூர்த்தயே நம:



பரசிவ குரு மூர்த்தி.

பதினான்காவது,

பரசிவ குரு மூர்த்தி.

கந்தாசலத் திருக் கோயிற்க ணிருந்த குகக் கடவுள், தந்தையாராகிய சிவபெருமானைத் தரிசிக்கச் சென்றார். தந்தையாராம் பசுபதி "குமார! இங்ஙனம் வருக" என்று எடுத்து உச்சி மோந்து, முதுகு தைவந்து "நின் பேதைமையை யுலக மெவ்வாறு தெளியும்" என்று உரை வழங்கி அதனை விளக்குவா னுன்னி, கங்கையைச் சடையிற் காக்கச் செய்தருளிய வரனார், திருப்புன் முறுவல் பூத்த முகத்தினராய், வரைபக வெறிந்த வள்ளலாரை நோக்கி யுரைப்பா ராயினார்.

செல்வக் குமர! 'பேதைமையா னாதல், பெருங் கிழமையாதனால், நட்பினர் மாட்டும் பிழைகடோன்ற லியற்கை. அறிவிற் சிறந்த பெரியார் தாந் தெரிந்து ஒரு பிழையுஞ் செய்கிலார். அறிவிற் குறைந்த சிறியோர் அறிந்தும், அறியாமையானும் பெரும்பிழைகளையுஞ் செய்வர். அவ்வத் திறங்களி னுண்மைகளை யறிந்த பெரியோர் அதுபற்றிக் கோபித்து வைரங் கொள்ளார். ஆகலானே பிரமனும் அறிவின்மையானே நின்னைக் கண்டு வணக்கம் புரியாது விரைவி னம்பால் வந்தான். பின்னர் அவனை விளித்து, அவன் மூக்கினுஞ் செவிகளினும் வாயினுங் கண்களினும் இரத்தஞ் சொரியுமாறு குட்டி, கணங்களால் அடிப்பித்துப் பல நாளாகச் சிறையி லிடுவித்து, எல்லார் தொழிலையும் நீயே யியற்றினை. எல்லார்க்குஞ் செய்யும் வணக்கமு நினக்கே யெய்துந் தகையது" என்று எம்பிரானார் தந் திருவுள்ளத் தோர்மறைவைத்து அருளலும், குமாரக் கடவுள் புன் முறுவல்கொண்டு. உரைத்தருளும். எந்தையே! பிரணவத்தின் மெய்ப்பொரு ளறியாப் பிரமன் எங்ங னுலகங்களைச் சிருட்டிப்பான். அங்ஙன மறியாத வனுக்குச் சிருட்டித் தொழிலை யெவ்வாறு கொடுக்கலாம்? என்றார். அதுகாலைச் சிவபெருமான், மைந்தனே! நீ

அதன் பொருளைத் தெரிக்குதி, என்ன, செந்தமிழ்ப் பரமாசாரிய மூர்த்தி திருவாய் மலர்ந்தருளும், எந்தப் பொருள்களும் உபதேச முறையினாலன்றி யுரைத்த றகாது. காலம் இடம் என்பன அறிந்து, முறையினாற் கழற வல்லேம் என்றார்.

அரனார் கேட்டு, "மைந்தாவோ! உண்மையே" யுரைத்தாய். ஞானபோத உபதேசப் பொருள் கேட்டற்குச் சிறந்ததென்னு மாசிமாதத்து மகநாள் இதோ வருகின்றது. நீ யெஞ்ஞான்றும் நீங்காது விருப்புடனமரும் தணிகை வெற்பை யடைகின்றாம். என்று கணங்களோடும் வெளிப்பட்டு ஏறூர்ந்து சங்கரனார் தணிகைமலை சார்ந்தார். குமாரக்கடவு டோன்றாமை கண்டு, பிரணவப் பொருண் முதலிய உண்மை யுபதேசமெல்லாந் தவத்தானும் வழிபாட்டானுமே கிடைக்கற் பாலன வென்று உலகங் கண்டுதெளிந்துய்வான் றவம்புரிய ஆரம்பித்தார். ஞான சத்திதரக் கடவுளாரின் அத்தாணி மண்டபம் எனப்படூஉம் திருத்தணிகை மலைச்சாரலின் வடகீழ்ப்பாற் சென்று, தம்புரிசடை தூங்க, ஒரு கணப் பொழுது, வேலாயுதப் பெருமானை யுளநிறுவித் தவம் புரிந்தார். எல்லாம் வல்ல இறைவன், அங்ஙன மொருகணம் நோன் புஞற்றலானன்றே யத்தணிகைமலை கணிக வெற்பு எனப் பெயர் பெற்ற தென்ப.

தான் வழிபடுங் கடவு ளொன்றில்லாமையானும், வழிபடுவோரெல்லாம் வடக்கு முகமா யிருப்ப, வழிபாட்டைப் பெறாஉந் தாந்தென்றிசை முக நோக்கியிருந்து அதனாலே தக்ஷிணா மூர்த்தி யென வேதங்க ளெல்லாங் கூறிய பெருமான், இப்போது கந்தக்கடவுள் தோன்றலும் வடதிசை முக நோக்கி யிருந்தனர். பெருமானார் தென்முக நோக்கி வீற்றிருந்தருளினார். இவ்வாறாகத் தென்றிசைநோக்கி விளங்கும் மூர்த்தத்தை யன்றோ மேதா தக்ஷிணா மூர்த்தி, யோகதக்ஷிணாமூர்த்தி, வீணா தக்ஷிணா மூர்த்தி யெனச் சுத்த வித்தைகள் சொல்லித் துதிக்கும்.

வேதாங்களும்.

𑌅𑌜𑌾𑌤 𑌇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌕𑌶𑍍𑌚𑌿𑌦𑍍𑌭𑍀𑌰𑍁𑌃 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌤𑍇
𑌰𑍁𑌦𑍍𑌰 𑌯𑌤𑍍𑌤𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌮𑍁𑌖𑌂 𑌤𑍇𑌨 𑌮𑌾𑌂 𑌪𑌾𑌹𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ।

'அஜாத இத்யேவ கச்சித் பீரு: ப்ரபத்யதே
ருத்ரீயத்தே தக்ஷிண முகந்தே நமாம் பாஹிநித்யம்!' எனவும்,

𑌅𑌜𑌾𑌤𑌮𑌿𑌮𑌮𑍇𑌵𑌐𑌕𑌂 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 𑌭𑍀𑌰𑌵𑌃 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌮𑍁𑌖𑌮𑍍 ॥

'அஜாதமிம மேவைகம் மத்வா ஜந்மநி பீரவ:!
ருத்ரஸ்யாஸ்ய ப்ரபத்யந்தே ரக்ஷார்த்தம் தக்ஷிணம்முகம் ||

இவ்வாறு துதியாநிற்கும் மகேசுர மூர்த்தி யவரைத் தவிசிலிருத்திக் குருவிற்குச் சீடன் எவ்வெவ் வழிபாடு செய வேண்டுமோ வவையெலா மியற்றி யிருந்தார். முருகக்கடவுளார் சிவபெருமானுக்குப் பிரணவத்தி னுண்மைப் பொருளை யெல்லாம் மொழிந்தருளினர். அவை அவாங் மனோகோசரமா யிருப்பினும் சில காட்டுதும்.

அதர்வண வேதம்.

𑌸𑌹𑍋𑌵𑌾𑌚 𑌕𑌿𑌂 𑌤𑌤𑍍 𑌪𑍍𑌰𑌹𑍍𑌮
𑌯𑌤𑍍𑌰𑌾𑌣𑌂 𑌯𑌤𑍍𑌰𑌾𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌃 । 𑌕𑌿𑌂 𑌤𑌤𑍍 𑌤𑍍𑌰𑌾𑌣𑌂 𑌕𑍋 𑌵𑌾 𑌯𑌤𑍍𑌰𑌾𑌤𑌾
𑌕𑍍𑌷𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑌃 𑌸𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌵𑌾𑌚 । 𑌇𑌤𑌿
𑌤𑍇𑌤𑍍𑌰𑌤𑌕𑍍𑌷𑌾𑌰𑌂 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌯𑌤𑍍𑌰𑌾𑌣𑌂 𑌯𑌤𑍍𑌰𑌾𑌯𑌿𑌤𑌵𑍍𑌯
𑌇𑌤𑌿 𑌤𑌤𑌕𑍍𑌷𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑌾𑌸𑍍𑌕𑌾 𑌰𑍋
𑌵𑍇𑌦𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ॥

என்றத் தொடக்கத்தவா வுரைத்துப்போகு மிவ்வாற்றானே, "ஓ பகவ! ஆதிகாலத்தி லுபயோகித்தது யாது? தியான மென்பதூஉம் எது? தியாதா எவன்? எவன் தியேயன் என்று வினவிய வற்றிற்கு வேதம் என்ன விடை யிறுத்த தென்று நோக்குங் காலத்தே, பிரணவாக் கரமே! முதற்கண் தேவரீரால் நந்தி முதலாயினோர்க்கு உபதேசிக்கப் பட்டது. அதுவே தியானம்; அதுவே தியானம்; அதுவே தியானிக்கற் பாலது. இவ் வக்கரம் பரப்பிரம வடிவமாம். இப்பிரணவம் நான்கு பாதங்களுடன் கூடியது. இதன் நான்கு பாதங்களும் நால்வகை வேதங்களாம்.

முதலாம் மாத்திரை பிருதிவி, அகாரம், இருக்குவேதம், வசுக்கள், காயத்திரி சந்தம், காருகபத்தியாக்கினி யெனு மிவையிற்றை யுடையது இரண்டாம் மாத்திரை ஆகாயம், உகாரம், யசுர்வேதம், உருத்திரர்கள், திருட்டுச் சந்தம், தக்கிணாக்கினியம் என்னு மிவையிற்றை யுடையது. மூன்றாம் மாத்திரை தியுலோகம், மகாரம், சாமவேதம், சூரியர்கள், ஜகதி சந்தம், ஆகவனீயாக்கினி யென்னும் இவையிற்றை யுடையது. நாலாவ தாம் அர்த்தமாத்திரை சோமலோகம், ஓங்காரம் அதர்வண வேதம், மருத்துக்கள், விராட் சந்தம், ஏகரிஷி யென்னுஞ் சிவாக்கினி, பாஸ்வதி சத்தி என்று தியானிப்பார் யோகிகள். முதன் மாத்திரை சிவந்தும் பொன்னிற மாகவும் விளங்கும். இரண்டாவது மின்னலென்னுமது கருநிறமுடையது. மூன்றும் மாத்திரை சுபம் அசுபம் உடையது, வெள்ளை நிறங் கொண்டது. நான்காம் மாத்திரை மின்னல் போன்றது அன்றி யெல்லா நிறமுமுடையது. பரம்பொருளாகிய எம்மைத் தெய்வ மாக உடையது. இப்பிரணவத்தை மூன்றுமுறை விதிப்படி யுச்சரித்த வினாலே ஆன்மாச் சாந்தி யடைகிறான். நான்காமுறை அளபெடைப் பிரணவப் பிரயோகத்தால் அவ்வான்மாவுக்கு நம் ஒளி வடிவு தோன் றப்படும். இம்மந்திரம் மகாமநு, ஓங்காரம், பிரளயம், பிரணவம்

தாரணம், தாரகம், வித்தியுத், பிரகாசம், சுயம்பிரகாசம், சுயம்பிரமம் என்று சொல்லப்படும் பெயர்களை யுடைத்து. மேலான மந்திரமாகலின் மகாமநுவாம்.

ஸக்ருதுச்சரிதமாத்ர ஊர்த்வம் உந்நாமயதீதி ஓங்கார:।

என்னும் வேதவசனப்படி, ஓர் முறை யுச்சரித்த மாத்திரையே உயர்ந்த கதியிற் சேர்ப்பதால் ஓங்கார மெனப்படும். பிராணன்களெல்லாம் மகாசங்கார காலத்தே ஒடுங்கப் பெறுதலாற் பிரளய மெனப்பட்டது. எல்லாப் பிராணன்களையும் (உயிர்களையும்) எம்மிடத்தே சேர்ப்பிக்கின்ற மையாற் பிரணவ மெனப்படும். எல்லாத் துக்கங்களி னின்றும், எவ்வகைப் பயங்களி னின்றுந் தாண்டச் செய்வதாற் றரண மெனப் பெயர் பெற்றது. பிறவியாகிய பெருங் கடலினின்றுங் கடக்கச் செய்வதாலும், மனவாக்குகட்கு எட்டப் படாது கடந்து நிற்பதனாலும் தாரகம் என்னும் பெயர் பெற்றது.

ப்ரகாசேப்யஸ்ஸதோமித்யம்
தச்சரீரேவித்யோதயதி
முஹுர்முஹுரிதிவித்யுத் ।

'ப்ரகாசேப்பியஸ்ஸதோமித்யம்
தச்சரீரேவித்யோதயதி
முகுர்முகுரிதிவித்யுத் ;

என்ற வேதசவனப்படி எல்லாப் பிரகாசங்கட்கும் மேலானதாய்விளங் கிச் சரீரத்தினுள்ளே அடிக்கடி ஓம் என்று பிரகாசிப்பதனால் வித்தியுத் என்னும் பெய ருடைத்து. உள்ளே யிருக்குந் தியான யோக்கியமான பதார்த்தங்களைத் தீபத்தைப் போற் பிரகாசஞ் செய்விப்பதனாற்பிரகாசம் எனப்படும். வேறொன்றி னுதவி யின்றித் தானே யொளிர்தலாற் சுயம்

பிரகாச மெனும் பெயர்த்து. சுயம்புவான நம்வடிவா விளங்கலிற் சுயம் பிரமம் என்னும் பெயரை யுடைத்து. இவையே யன்றி,

ஸர்வகாரணோபஸம்ஹாரகத்வாத்
தாரணாத் ப்ரஹ்ம தூரியம் |

ஸர்வகாரணோப ஸங்காரத் தார்ய
தாரணாத் ப்ரஹ்ம தூரியம்:

என்னும் வேதவசனப்படி, எல்லாக் காரணங்களையும், அதாவது அகக் காரணங்கள் புறக் காரணங்கள் என்று மிவையிற்றை மேற்போக வொட்டாது அவையிற்றின் விருத்திகளை நசித்தலாலும், தரிக்கத் தக்கன வெவையோ வவற்றைத் தரித்தலாலும் பிரமதூரியம் என்று சொல்லப் படும். பிரணவம் வியட்டி, சமட்டி என விருவகை வியட்டி - அகர, உகர, மகரங்களாம். சமட்டி அம்மூன்றுஞ் சேர்ந்த ஓம் என்பதாம். உலகங்களாகிய சராசரப் பிரபஞ்சங்க ளெல்லாம் மூவகையி னடங்கும், அதன்க ணடங்காதது ஒன்று மில்லை. ஆதலால் அகர உகர மகரப் பிரணவங்களான் அம் மூவகை யெல்லாங் கோடலாற் பிரணவத்து ளெல்லா மடங்கு மென்க. பிரணவப்பொருளா யிருப்பவரும், பிரண வடிவினரும், பிரண வாதிபரும், பிரணவாதீதரும், பிரணவாந்தரி யாமியரும், பிரணவ வாச்சியரும், பிரணவப் பிரேரகரும், பிரணவப் பிரசாரணரும் ஆக விளங்கு வோர் தேவரீரும் அம்மையுஞ் சேட்டனும் யாமுமே. வேறொருவருமாகார். பிரம விட்டுணு ருத்திரர்களை யொரோ வழிக் கூறுவ துபசாரமேயாம். பிரணவமே யெல்லா மந்திரங்கட்கும் மேலானதாம். ஸ்ரீ பஞ்சாக்ஷர நீங்க வேனைய மந்திரங்கள்யாவும் பிரண வத்தை முதலாக் கொண் டியங்கப் பெறும். ஆகலால் அறிவுடையோர் அதனைமகாமனு வென்றும், சிவமந்திரமென்றும் உரைப்பர். பிரணவம் ஆறுவகை யாகவும், ஏழுவகை யாகவும் கொள்ளப்படும். அ, உ, ம, விந்து, நாதம், சத்தி என்னு மிவையே யாறும். இவையிற்றுடன்

சாந்தம் என்னு மொன்று சேர்த்துக் கோடலே யெழுவகையாம். இவ்வே ழனுட் சத்தி என்பது நம்வேற் படைக்கல மாகும். ஏனையவாறும் அறு முகங்களாக வமர்ந்திருந்த ஹெரிந்த தொன்றே. சொற்பிரபஞ்சங்களெல் லாம் அதனிடத்தி னின்றுந் தோன்று கின்றன.

𑌏𑌵𑌂𑌪𑍍𑌰𑌯𑌾𑌤𑍍𑌵𑌾𑌕𑍍𑌷𑌣𑌮𑍇𑌕𑌂
𑌕𑍍𑌰𑌤𑍁𑌶𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿𑌚𑌤𑍁𑌸𑍍𑌸𑌪𑍍𑌤
𑌤𑍍𑌯𑌾𑌯𑌤𑍍𑌫𑌲𑌂𑌤𑌦𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 ॥

ஏவந்ரியாத்வாக்ஷணமேகம்
க்ரதுசதஸ்யாபிசதுஸ்ஸப்த
த்யாயத்பலம்ததவாப்நோதி !

என்னும் அதர்வண வேத வசனப்படி, பிரணவ தியான பலத்தையாரா யுங்கால், ஒருமுறை தியானத்தால் நூறு நூறு யாகங்களை எழுபத்துநான்கு முறை செய்தவனுக்குரிய பலங் கிடைக்கும் என்று தெரிகிறது. பிரண வம் வேதத்தின் முதலினுங் கூறப்பட்டுள்ளது. முடிவினும்,

𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌦𑌾𑌵𑌨𑍍𑌤𑍇
𑌚 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾 𑌸𑍍𑌰𑌵𑌤𑍍𑌯𑌨𑍋𑌂𑌕𑍃𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌚𑍍𑌚 𑌵𑌿
𑌶𑍀𑌰𑍍𑌯𑌤𑍇 ।

ப்ரதிஷ்டித: ப்ரஹ்மண: ப்ரணவம்: குர்யாதாதா வந்தேச சர்வதா ஸ்ருவத்ய நோம் க்ருதம் ப்ரஹ்ம பாஸ்தாச்ச விசீர்யதே.

என்றிருத்தலாற் சர்வ வேதங்களும் பிரணவத்தி னடங்கு மென்க. பிரணவத்தி னுடலாக விளங்கும் அகாரத்திற்குப் பொருளாவார் தாமும் யாமுமே. அது,

அகாரேணோச்யதே ஸம்ஹா ஸ்வரேணோக்ஷரேண
ஹம்ஸ: ஸகாரோ ஸம்ஹாரவாசக: |

என்ற இருக்குவேத வசனப்படியும்,

யஸ்ஸ்வேதாதௌ ஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதி
ஷ்டித: | தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய ய: பரஸ்ஸ மஹேஸ்வர: |

என்னும் யசுர்வேத வசனப்படியும் யாங்களே யாவேம்.

ஓம் பூ : ! ஓம் புவ ! ஓம் ஸுவ : ! ஓம் மஹ : ! ஓம்ஜந : ! ஓம் தப : ! ஓம் சத்யம் : ! ஓம் தச்சவி தூர்வ ரேண்யம் பர்க்கோ தேவஸ்ய தீமகி தியோ யோநப் பிர சோத யாத்ஓமா போஜ்யோ தீர ஸோமிருதம் ப்ரஹ்ம பூர் புவச் சுவரோம! என்ற வேத மந்திரங்க ளெல்லாம், பூமி புவர் லோகம், சுவர்க்க லோகம், மகலோகம்; சனலோகம், தவலோகம், சத்தியலோகம் என்னுமிவை யெல்லாம் ஓங்காரமே. எவன் நம்முடைய ஞானங்களை எவனின்றுணே அந்தச் சிருட்டி கர்த்தாவான ஈசன்றனுயிர் வுடைய சொரூபத்தைத் தியானிப்பார். நீர், நெருப்பு, அவற்றின் குணங் கள், முத்தான்மா, மூவ் வியாகிருதிகள் இவையெலாம் பிரணவமே யெ ன்று தெளிவார்கள் உலகர். ஓங்காரத்திற்கு வடபுறம் சிரமுண்டு. தென் புறம் பாதம் விளங்கும். இவ்வுண்மை யாங்கள் தூக்ஷிணு மூர்த்தியா யிரு த்தலா னன்கு தெளியப்படும்.

அதர்வண வேதம்.

ஸஹோங்காரோயமோங்கார:
ஸப்ரணவோயம்ப்ரணவ:
ஸஸர்வவ்யாபீயஸ்ஸர்வவ்யாபீ

ஸோऽநந்தோ யோऽநந்த:
தத்தாரம் யத்தாரம்
தத்ஸூக்ஷ்மம் யத்ஸூக்ஷ்மம்
தச்சுக்லம் யச்சுக்லம்
தத்வைத்யுதம் யத்வைத்யுதம்
தத்பரம் ப்ரஹ்மேதி | ய ஏகஸ்ஸ ஏகோ ருத்ர:
ஸ ஈஶான: ஸ பகவான் ஸ மஹேஶ்வர:
ஸ மஹாதேவ இதி ||

என்னும் வசனங்களின்படி, "அவன் ஓங்காரன். எவன் ஓங்காரன்? அவன் பிரணவன். எவன் பிரணவன்? அவன் சர்வ வியாபி. எவன் சர்வ வியாபி? அவன் அனந்தன். எவன் அனந்தன்? அவன் தாரம். எவன் தாரம்? அவன் சூக்குமம். எது சூக்குமம்? அது சுக்கிலம். எது சுக்கிலம்? அது வைத்தியுதம். எது வைத்தியுதம்? அது பரப்பிரமம். எவன்பரப்பிரமம் அவன் ஏகன். எவன் ஏகன்? அவன் ஏகனுன உருத்திரன். அவன் ஈசானன்; அவன் பகவான்; அவன்மகேசுரன்; அவன் மகாதேவன்" என்று தெரிகிறது. இதன் கண் பிரணவத்தையும் நங்களையும் அபேதப்படுத்தி ஓங்காரம், பிரணவம், சர்வ வியாபகம், அநந்தம், தாரம், சூக்குமம், சுக்கிலம், வைத்தியுதம், பரப்பிரமம், ஏகம், உருத்திரம், ஈசானம், பிரமம், மாகேசுரம், மகாதேவம் என்னு நாமங்களை வாசகமாகிய பிரணவத்திற்கும் பெற வைக்கப்பட்டன. வாச்சியப் பொருள் வேறெவர்க்குஞ் செல்லா தென்பது இதனானுந் தெளியப்படும். இங்ஙனம் உரைத்த வுண்மையெல்லாம் சிவற்கே தெரியும். இவ்வாறாகப் பிரணவத்தி னுண்மைப் பொரு ளெவை யெவையோ அவை யெல்லாவற்றையும் முருகக்கடவுள் மொழிந்தருளினார். தமக்குந்

தாமே மகனாக விளங்கிய சிவபெருமான், தமக்குத் தாமே யொருகுற்றமு மில்லாத ஆசாரியாராக விருந்து, தாமாகிய தத்துவப் பொருளைத் தாமே சொல்லத்தாமே கேட்டுக் கூத்தாடினார். உயிர்களை யலைக்கும் ஆணவப் பகையும், சூரனும் பகையும், பிரணவப் பொருளாய் விளங்கு மிவ்வீரனு லின்றே யழிந்தன வென்று உளக்கட் டோன்றும் வீரக் குறிப்பால் ஆர்த் தலால் அந்த இடம் வீராட்டாகாச மென்று பெயர் பெற்றது. பிறப்பு இறப்பு இன்றிப் பேரின்பத்தை அளிக்குஞ் சிவ பெருமானுக்குப் பிரண வப்பொருளைக் கொடுத்த காரணத்தால், பிரணவ வநுந்த நகரம் என் றும், சிவபெருமா னோர்கணம் முருகக்கடவுளை நோக்கித் தவஞ் செய்த லாற் கணிக வெற்பு என்றும், முதலும் முடிவு மில்லாதும், தனக் கோர் மூலமில்லாதும் தானே யெல்லாவற்றிற்கும் மூலப்பொருளாய் விளங்குஞ் சிவபெருமானுக்கு, அறம் பொருளின்பம் வீடு என்னும் நால் வகைப் பொருட்கு மூலமாகிய வேதங்களின் முதலாய பிரணவ மூலப் பொருளை எவர்க்கும் மூலமாக விளங்கும் கந்தக்கடவுள் உணர்த்தலால் மூலவேதநண்ட மென்றுந் தணிகைததலம் பெயர் பெற்றது. இங்ஙனம் லோக குருவாகிய சிவபெருமானுக்குக் குருவாக வீற்றிருந்து பிரணவப் பொருளை யுபதேசித்தருளலாற் கந்தக் கடவுள் பரசிவ குரு மூர்த்தி யாயி னர்.

எதிருறுங் குமரனை யிருந்தவி சேற்றியங்
கதிர்கழல் வந்தனை யதனொடுந் தாழ்வயிற்
சதுர்பட வைகுபு தாவரும் பிரணவ
முதுபொருட் செறிவெலா மொழிதரக் கேட்டனன்.

மரணமும் பிறப்புங் கடந்தபேரின்பம் வழங்குமப் பெரும் பெய ரிறைக்குப், பிரணவப் பொருளைக் கொடுத்த காரணத்தாற் பிரணவவருத் தநன்னகரா, மிரணவல் லவுணக் கிளையெலா முருக்க விலங்கருட் டிரு வுருத்தாங்கி, யாணமா யமாரப் புரப்பவ னென்று மமர்ந்தரு டணிகைமா நகரம்.

பணிகிளரரப் பண்ணவன் முருகற் படர்ந்தருந் தவத்தினை யாங் குக், கணிகமே புரிந்து கருத்துமுற் றுறலாற் கணிக வெற்பெனப் பெயர் விளங்கும்.

மூலமீறிகந்து மூலமேலில்லா மூலகா ரணப்பொரு டனக்கு, மூல மாயிருந்து நால்வகைப் பொருட்கு மூலமாகியவரு மறையின், மூலவான் மொழிக்குப் பொருட் செறி வெவர்க்குமூலமா னவன் விரித்தமையான், மூலவேதண்ட மெனப்படுங் குறவர் மூலந் தோருவரைப் பறம்பு.

பரசிவ தரு மூர்த்தயே நம :

பதினைந்தாவது,

சீகர மூர்த்தி.

நீர்வள நிலவளங்களாற் சூழப்பட்ட * உச்சயினி நகரத்திலே மனு நீதி வழுவாது செங்கோல் நடாத்திய அரசன் ஒருவ னுளன் அவன்பெயர் சந்திரசேனன் ஆகும். அவன் மாகாளேசுரப் பெருமானை மெய்யன் புடன் பூசித்து வருங் காலத்திலே, சிவகணத் தலைவருள் மாணிபத்திரர், திருக்கயிலைக்க ணுள்ள சிந்தாமணியைச் சிவபெருமானது கட்டளைப்படி கொண்டு வந்து கொடுத்துச் சென்றார். அதனை யன்புடன் வாங்கிச் சந் திரசேனன் தனித்திருந்தது கேட்ட அரசர்கள் யாவரும் தாமும் அதனைத்

---

*. உச்சயினி நகரம் என்பது அவந்தி தேசத்தின் தலைநகரம். பிரச் சோதனன் என்னும் அரசனுடைய இராசதானி யென்று மணிமேகலை யென்னுங் காவியத்துட் கூறப்பட்டது. உஞ்சை, உஞ்சையினி என வும் சொல்லப்படும். பிரமோத்தர காண்டத் தமிழ் மொழிபெயர்ப்புப்பிர திகளிலே சீகரன் என்னும் பெயர்க்கு. சீதரன் என்று பாடபேதமாக உள்ளது. அதனை யாராய்ந்த காலத்துச் சீகரன் என்பதே யுண்மையெ னக் காணப்படுகின்றது.



சிகர மூர்த்தி.

தரித்தற்கு விரும்பித் தூதுவிடுத்தனர். சந்திரசேனராசன் தன்புய வலிமையும் வரங்களும் அறிந்த பின்னாத்தான் கொடுப்ப தன்னமை யென்று அறிவித்தான். அது கேட்ட அரசர்கள் யாவரும் வெகுளி கொண்டு படையெடுத்து வந்தார்கள். பகைவர்கள் திரண்டு மதிலை வளைத்தன ரென்று கேள்விப்பட்ட அரசன் சிறிதும் பயப்படாமலும், வேறோர் காரியங்களைச் செய்தற்கு எண்ணாமலும் பூசைத் திரவியங்களை யெல்லாங் கொண்டு சென்று மாகாளேசுரப் பெருமானைப் பூசித்துத் தியானித் திருந்தான்.

அவ்வாறு இருக்குங் காலை, இடையர் குலத்திற் சிறந்தாளொருத்தி, தன் மைந்தனுடன் சிவபெருமானைத் தரிசித்து வந்தாள். மற்றைநாள் அவள் புத்திரன் சந்திரசேன மகாராசன் பூசை செய்த படியே தானும் பூசிக்க நினைத்து, மணலாற் சிவலிங்கஞ் செய்து, பச்சிலைகளை மற்றைத் திரவியங்களாகப் பாவித்துப் பரசிவன் றிருவடியைத் தியானித்து அசைவற விருந்தான். அவன் தாய்வந்து மைந்தனே! உணவு கொள்ளுதற்கு வருவாய்'' என்று பலமுறை அழைத்துங் கேட்காமல் இருப்பது கண்டு கொடுங்கோபமுற்று, "என்ன விளையாட்டுச் செய்கின்றாய்'' என்று தன் கைகளால் மோதிப் புடைத்து, சிவலிங்க முதலாயவற்றை யெல்லாங் கலைத்துச் சென்றாள். ஆயமைந்தன் விழித்துப் பார்த்து வருந்தி அழுது உணவு கொள்ளாமற் சோர்ந்து மூர்ச்சை யாயினன். பின்னர்த் தெளிந் தெழுந்து பார்த்த காலை, அவ்விடம் திவ்விய தலமாகிச் சிவலிங்கப் பெருமானுஞ் சோதி வடிவாக விளங்குவது கண்டு அதிசயமடைந்து துதித்து, பெருமான் றிரு வருளை வியந்து மீட்டும் பூசித்தான். வீடுசென்ற இடைச்சி நித்திரை செய்து விழித்துப் பார்க்கவே, தன் வீடு முற்றும் பொன்மயமாக விளங்குவது கண்டு மனங்களித்து, நன்மகப் பெற்றே னென்று மகனைப்புகழ்ந்து, நிகழ்ந்தவற்றை யெல்லாம் அரசனுக்கு அறிப்பே னென்று சென்று தெரித்தாள். அரசனும் மந்திரிமார்களும் தானைகள் சூழச் சென்று கோயிலை வலம் வந்து சிவலிங்கப் பெருமானை

யுந் தரிசித்து, பொன்மயமா யிலங்கும் மனையையும் பார்த்துக் கரையிறந்த ஆனந்த முற்று நின்றார்.

படையெடுத்து வந்த அரசர்கள் யாவரும் இவ் வற்புதங்களை யெல்லாங் கேட்டறிந்து அஞ்சி, சந்திர சேனாரசனை வந்து வணங்கிச் சனிப் பிரதோஷத்திற் பூசித்துப் பேரருளடைந்த சீகான் என்னும் அப்பிள்ளையைப் புகழ்ந்து வணங்கி நின்றார் அப்போது அஞ்சனை வயிற்றிற் பிறந்து, இந்திரனால் அருளிச் செய்யப்பட்ட * ஐந்திர வியாகரணத்தை ஆறுநாட்கு ளோதியுணர்ந்து, இராவண யுத்தத்தில் இராமருக்குப் பற்பல உதவிகள் புரிந்த பெருவலிமையுடைய அனுமார் அவ்விடம் வந்தார். யாவரும் வணங்கினர். அஞ்சனை குமாரர் சீகானை யெடுத்து அணைத்து உச்சி மோந்து, பிரம விட்டுணுக்கள் முதலினாராலும் அடையப்பெறாத பெரும்பேற்றை யடைந்தாய். ஆயர்குலக் கொழுந்தே! நின்றவமே தவம் நின்பேறே பெறற்கரும் பேறு. தருமவடிவாகிய பசுக்களைப் பாதுகாத்த நின்குலத்தார் பயனெலாந் திரண்டு ஒருருவெடுத்தாய். சனிப் பிரதோஷ விரதத்தின் மகிமையை யெவர்க்குந் தெரித்தாய். இப் பூசனையின் பலதனாலே விட்டுணு வானவர் நின் எட்டாந் தலைமுறைப் பிள்ளையாகத் தோன்றி வளர்வார். நின் குலத்துத் தோன்றும் நந்த கோபன் என்பான் ஒருவன் வளர்ப்பான். அதனால் உன்குலத்திற்கும் பிதிரர்களுக்கும் உலகத்திற்கும் நன்மைகள் விளையும் என்றார். சீகான் கண்ணபிரான் பிறப்பதும் வளர்வதும் செய்வனவும் அடியனேன் இப்போதே யறிந்தானந்திக்க வேண்டுகின்றேன் என்றான். அஞ்சனை குமாரர், அன்பனே! அவை யெம்மாற் செய்த லியலா. காளகண்டப்

* ஐந்திர வியாகரணம்—இந்திரனாற் செய்யப்பட்ட தோரிலக்கண நூல். "இந்திரனெட்டாம் வேற்றுமை யென்றனன்" என அகத்திய னாரும். "ஐந் திரநிறைந்த தொல்காப்பியன்" எனப் பனம்பாரனாரு முரைக்கு மாற்றா னறிக.

பெருமானது செல்வக் குமார ராகிய சுப்பிரமணியப் பெருமானை நினைத்துத் தவங்கிடப்பையேல் அவை கூடும் என்று சென்றார். மற்றை யோர்களுந் தத்த மிடஞ் சென்றார்கள்.

சீகரன் என்பான் விந்த மலைக்கு மேலைப் பக்கத்திலே சோலைகளாற் சூழப்பட்ட குமார வனம் என்னுந் திருத்தலஞ் சென்று முழுமுதற் பொருளாகிய சுப்பிர மணியப் பெருமானை நினைந்து பற்பல வருடந் தவஞ் செய்தான். தாவாக்கினியினாலே சுவர்க்கலோக வாசிகளுஞ் சகிக்க முடியாது துன்பப்பட்டார். அடியர் இடர் தீர்க்கும் அறுசிகரச் செந்தழற் பொருப்பு, கருநிறக் கடலிற்றோன்றி யாங்கு வெளிப்பட்டது. சீகரன் வணங்கிப் பலதுதி பகர்ந்து தன் எண்ணங்களையும் எடுத்து வருத்தான்.

யாதவத் தலைவனாகிய சீகரன் விருப்பப்படியே, கண்ணபிரான் றோன்றியதும், நந்த கோபனிடம் வந்து வளர்ந்ததும், சகடாசுரன் பூதனை, அகாசுரன், பகாசுரன், குவலயாபீடம், சாணூரன், முட்டிகன், கஞ்சன், சிசுபாலன் என்னு மிவர் முதலாயினோரை வதைத்ததும், உருக்குமிணி, சத்தியபாமை, மித்திர விந்தை, காளி, நப்பின்னை, சத்தி யை, பத்திரை, சாம்பவதி யென்னு மாதரை மணந்ததும், அவருட் சாம்பவதி என்பாட்குப் புத்திரப் பேறின்மையால் வருந்தி, உபமன்னிய முனிவரையடுத்து வேண்ட அவர் திருவடித் தீக்ஷை செய்து, விபூதி ருத்திராக்கங்களை யணிவித்துத் தவஞ்செய்ய அனுப்ப அதனால் மகவீன் றதும், கண்ணன் சிவபூசை செய்ததும், தாம் கண்ணனுக்குச் சாரூப்பியம் அளிக்குங் காட்சியும், பாரதந் தீர்த்ததும் பிறவும் ஆகிய எல்லாவற்றை யும், சீகரன் கண்ணுற் கண்டு ஆனந்திக்கக் காட்டியருளினர். அவற்றை யெல்லாம் தரிசித்து ஆனந்த முற்றுப் பெருமானே! இத்தகைய கண்ண னும் இறந்தா னென்றால் அவன் சரிதையும் பெருமையும் என்னாகும். தேவரீர் திருவடியிற் சேரும் பெரும்பேற்றை யருளல் வேண்டும். இவ்

வாறாய சிறப்புடைச் செல்வங்களை யெல்லாம் அடியனேன் பொருட்டிற் செய்தருளினமையாலும், என் பெயருஞ் சீகான் என விருப்பதனாலும், தேவரீர் சீகரமூர்த்தி யென்னுந் திரு நாமத்துடன். இத்தலத்தில் எழுந் தருளி யிருந்து அன்பினர்க்கு அருள் புரிதல் வேண்டும் என்று இரந் தான். அங்ஙனமாய பெருஞ் சிறப்பை யெல்லாம் செய்தருளலாற் சுப்பிரமணியப் பெருமான் சீகர மூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

பிரமோத்தர காண்டம்.

அப்பூசனை கண்டார்பெறும் பேறித்துணை யளவோ
விப்போதிவன் வழியாவரு மெட்டாந்தலை முறையிற்
கைப்போதக மழைக்கும்மழைக் கார்வண்ணனை வளர்ப்பான்
மெய்ப்போதத்து நந்தென்னெனுங் கோன்றோன்றுவன் விளங்க.

இன்றேமுதல் வேல்வேந்தர்க ளெல்லீருமற் றிவனை
நன்றேதரு புகழ்ச்சீகா னெனவேபெயர் கவில்வீர்
என்றேயட லனுமான்சிவ பூசாபலத் தியல்பை
யன்றேதவ மதலைக்கினி தருள்செய்தனன் போனான்.

திருச்செந்தூர்ப் புராணம்.

விந்தமால் வரைக்கு மேல்சார் வெய்யவ னெடுந்தேர் தட்டக்
கொந்துலாங் கவடுபோக்குங் குமாரமா வனத்தினப்ப
னைந்தகோ பாலர்தம்மி னுகிளங் கதிர்போ லுற்ற
முந்துசீ காப்பேர்கொண்டு மூதுல கேத்துங் கோமான்.

கண்ணனுற் பத்தியான காரண முதலா யன்று
னெண்ணுதற் கரியவாய வைகுண்ட மெய்துங் காறு
நண்ணிய தினமோர் பத்தி னுடகத் தியற்கையாகத்
தண்ணளி சிறப்பவாடித் காட்டென வணங்கித்தாழ்ந்தான்.

கோகுலத் தாயன்வேட்ட குறிப்பெலா நடித்துப்பின்ன
ரோதைகயிற் கண்ணனென வுயர்திருக் கோலங் காட்டி
வாதுறு கண்ணன் சாயுச் சியத்தையும் வழங்கிச் செவ்வேள்
சீகரக் கடவுளென்றோர் திருப்பெயர் சூட்டிக் கொண்டான்.

சீகர மூர்த்தயே நம :

பதினறாவது,

குக சுவாமி மூர்த்தி.

கங்கை யாற்றின் பக்கத்திலுள்ள சிருங்கி பேரம் என்னும் நகரத்திற் பொருந்திய கானகத்திலே குகன் என்னுங் கிராத ராசனிருந்தான், அவன் பெரிய வில்லைத் தரித்தவன். திரண்ட புயங்களை யுடையவன். பல்லாயிர நாய்களை யுடையவன். பலகோடிவேடர் கூட்டங்களை யெல்லாஞ் சொல்லி னடக்கி யாளுவோன். கங்கையின் ஆழங்கண்ட நெடியவன். ஆயிரம் மரக்கலங்களுக்கு அதிபதியாக வுள்ளவன். சிவனடியார் குகனடியாரைக் காணிற் றன்னலாகுந் தொண்டு செய்வோன். குறிஞ்சி நிலத் தெய்வமாகிய குகப்பெருமானிடத்திலே மிகுந்த பத்தியுடையவன். சிருங்கி பேர நகரத்திலே வீற்றிருக்குங் குகப் பெருமானைத் தரிசித்தற்கு வரும்அடியார்க்கு ஓடஞ் செலுத்துவோன். சுப்பிரமணியப் பெருமானது ஆயிரந் திருநாமங்களுள் ஒன்றான குகன் என்னுந் திருநாமத்தை இடைவிடாது சொல்லுகின்றமையால் குகன் என்னும் பெயரால் அழைக்கப் படுவோன். வழிநடப்பார்க்குத் தேனுந் தினைமாவும் கிழங்குங் கனியும் பிறவுங் கொடுத்து ஆதரிப்பவன். இவ்வாறுள்ள குகன் என்னும் வேடத் தலைவன், இராம பிரான் சீதையுடன் வனம்வந்து கங்கையாற்றின் கரையை யடைந்து, மிக நீண்ட சடைமுடியும் மரவுரியுந் தரித்து, விபூதியை

குக சுவாமி மூர்த்தி.

யுடல முழுதும் உத்தூளனஞ்செய்து * சீதாதேவியுடன் வருவதைக் கண்டனன். அகண்டாகாரநித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவ பெருமான், குமரனும் பார்வதி தேவியாரு முடன்வர வருகின்றாரோ? அல்லது சுப்பிரமணியப் பெருமாளுகிய நங்குல தெய்வம், திருவிளையா ட்டி னிமித்தம் வள்ளியம்மை யாருடன் தமது உற்ற துணைவர் ஆகிய வீரவாகுதேவரும் உடன்வர எழுந்தருளினரோ? என்று வியப்புடன் வந்து இராமரையுஞ் சீதையையும் வணங்கி அவருடன் பெருநண்புற்று, அவர்களை ஓடத்திலேற்றிக் கரைவந்து சித்திரகூடம் போகும் இராமரு டன் தானும் வருவதாக வருந்தி நின்றான்.

இங்ஙனம் பிரியாது நின்ற குகனைத் தேற்றி, "என்னன்பனே! என்சொற் கடவாதே! வடதிசைக்கு வருங்காலத்து உன்னைக்கண்டுகலப் பேன்" என்று இராமர், சீதை யிலக்குமணர் என்பாருடன் சித்திர கூட நோக்கிச் சென்றார். அதுதொடங்கிக் குகன்மனமயர்ந்து வருந்தி இராம னையே நினைத்து இருந்தான். பின்னர்ப்பலநூறு வருடங் கழிந்தும் இராமர் தன்னிடம் வாராமையினலே அங்குள்ள தன்குலதெய்வ மாகிய குகசுவாமியை நோக்கித் தவஞ்செய்தான். சுப்பிர மணியப் பெருமான் அவன் முன் ஓர்வேடருபத்துடன் சென்று, குகனே! இராமன், சீதை யை யிராவணன்கவர்ந்து செல்லப் பல துன்பங்களை யடைந்து இராவண னைக்கொன்று, சீதையை மீட்டு அயோத்தி சென்று இறந்து பற்பலநாள் கழிந்தன என்றார். இராமன் இறந்தான் என்று கேட்டதும் இடிகேட்ட சர்ப்பம் போலவும், கணவன் இறந்தது கேட்ட தலையன்புடைய பதிவிர தை போலவும் விழுந்து மூர்ச்சை யடைந்தான்.

---

* சீதா=படைச்சால். சனகன் புத்திர காமேட்டி செய்ய உழும் போது படைச்சாலிற் றோன்றியபடியால் சீதா என்று பெயரிட்டு வள ர்த்தான். இவள் இராவணனுக்கு வண்டோதரி வயிற்றிற் பிறந்தவ ளென்க.

இராம! இராம!! என்றே கதறினான். அவனையேயன்றி வேறொன்றனை யு நினையாதவனானான். அதனைச் சிவராம மூர்த்தியாகிய சுப்பிரமணியப் பெருமான் நோக்கி, தசரத ராமனுடைய வடிவத்தை யெடுத்துக் காட்டி, நடந்த காதைகளையும் நடித்துத் தெரித்து, உண்மை ஞானத்தினை யடை யும் பரமானந்த முத்தியையும் அவனுக்கு அளித்தருளினார், குகன் என் னும் வேடத் தலைவனுக்கு அருள் புரிந்தமையாற் குகசுவாமி மூர்த்தி ஆயினர். இதனை ஆனந்தநாயக மூர்த்தி யெனவுங் கூறுவர்.

இராமாயணம்-கங்கைப்படலம்.

ஆய காலையி னாயிர மம்பிக்கு
நாயகன் பொற் குகனெனு நாமத்தான்
றூய கங்கைத் துறைவிடுந் தொன்மையான்
காயும் வில்லினன் கற்றிர டோளினான்

சிருங்கி பேர மெனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்று நகருடை வாழ்க்கையா
னொருங்கு தேனொடு மீயுப காரத்த
னிருந்த வள்ளலைக் காணவந் தெய்தினான்.

படருற வுளனும்பி கானுறை பகலெல்லா
முடருறு பகையாபோ யானென வுரியாய்நீ
சுடருறு வடிவேலாய் சொன்முறை கடவேல் யான்
வடதிசை வருமங்கா ணின்னுழை வருகின்றேன்.

திருச் செந்தூர்ப் புராணம்.

கங்கையின்வடபாற்சிங்கி பேரிபட்டினத்திற்காமர்
தங்கெழிற்சிலையிராமன் றனைத்தியானித்துவாழுந்
துங்கமாகுகற்கிராமன் றொல்கதையனைத்துஞ்சோரா
தங்குநாடகக்கூத்தாக வருளொடுநடித்துக்காட்டி.

சுந்தரச்சிலையிராமன் ஏறேற்றமுங்காட்டிஞான
மூர்த்தியபிரமானந்த முத்தியுங்கொடுத்துவேத
மந்திரகுகச்சுவாமி யென்னவும்வாய்ந்துபேரா
னந்தநாயகனென்றேது நாமமுங்குமரன்பெற்றான்.

குகசுவாமி மூர்த்தயே நம:

பதினேழாது,

ஞானதேசிக மூர்த்தி.

பூவுலகின்க ணுள்ள புண்ணிய தீர்த்தங்க ளெல்லாவற்றினும் மிக்க மேன்மையை யுடைய பிரம தீர்த்தம், கோகன்ன தீர்த்தம், குக தீர்த்தம், சத்தி தீர்த்தம், பரமானந்த கூபம், அகத்திய தீர்த்தம், சந்திர புட்கரணி, சூரிய புட்கரணி, குருக்கள், சோமம், கன்னி, கங்கை, விசுவம், காவிரி, பவானி, ஆம்பிராவதி, விரசை, மாகாளம், வைகை, கனசலம், கோதாவரி, வைதரணி, சித்திரநதி, வியாதம், பிருது துங்கம், கௌசிகம், காளிந்தி, கனகம், நந்தை, தெசாச்சுவமேதம், மாதுங்கம், சுவாமி, சுழுமுனை சிந்து, நருமதை, சரச்சுவதி, காயத்திரி, சக்கரம், சேது, தனுக்கோடி, கிருட்டிணை, புண்டரீகம், குபேரதுங்கம், பஞ்சநதி, மேகாரணம், பாவநாசம், தாம்பிரவன்னி, சொன்னவதி, விட்டுணு, சலசை, பிலக்காவதானம், சால சற்பி, மானசம், தன்மம், புருடை, யமுனை, சந்திரம், சாளக் கிராமம், பிரயாகை, வாரணை, அசி, வாமனம், மற்சம், காருடம் என்னுந் தீர்த்தங்கள் விசேடித்தன. இவற்றினும் மாவலி கங்கை, மாணிக்க கங்கை, நகுலதீர்த்தம் விசேடித்தன. இவற்றினுந்



ஞானதேசிக மூர்த்தி.

துங்கபத்திரை என்னும் * நதி தீர்த்தமே விசேட முடையது. இந்த திக்கு வடக்கு திசைக்க ணுள்ள ஞான புரத்திலே, அரிய தவத்தா லுயர்ந்த கௌசிக முனிவர் தத்துவ ஞானங் கைகூடப்பெறாமையா லும், அது இது வென் றுணராமையாலும், வருத்த முற்றுத் தவஞ் செய் தார், குகக்கடவுட் குகந்த தாகுஞ் சோடசமகாமனு, சடக்காம், சப்தாக் காம், நவாக்காம், தசாக்காம் என்பவற்றுட் சிறந்த சடக்கா மந்திரத்தைத் தியானித்துச் சகல லோக குருமூர்த்தியாகிய குக நாதனே இவ்வையப் பாட்டை நீக்கித் தெளிவித்தல் வேண்டுமென்று கடுந்தவம் புரிவா ராயினர்.

கந்தக் கடவுள் ஞானாசாரிய மூர்த்தி யாகத் தோன்றி, ஆங்குள்ள கடப்பமா நீழலின்கண் வீற்றிருந்து, தென்றிசை முகநோக்கிக் கௌசிக முனிவரை வடதிசை முகமா வைத்து, அருளாசனத்தின்க ணிருந்து, ஒரு திருக்காத்தை மார்பின்கண் வைத்து, மற்றோர் திருக்காத்தைச் சின் முத்திரை யாகப் பிடித்து, ஏனைய திருக்காங்க ளிரண்டனையும் வாத அப யங்களாகக் காட்டி உபதேசிப்பா ராயினர் அன்பனே!

ஞானம் பசுஞானம், பாச ஞானம், சிவஞானம் என மூவகைப் படும். பசுஞான பாசஞானங்கள் மயக்கத்தை விளைக்கும். சிவஞானம் என்னும் பதிஞானந் தெளிவை யுண்டாக்கும். ஆகலான் முன்னைய விரண்டானும் அத்துவித முத்தியாகிய பேரின்பங் கைகூடாது. பதி ஞான மொன்றானே அது கிடைக்கும். புறப்புறச் சமயிகளும், புறச்சமயி

---

* தீர்த்தவிசேடம் நதி, நதம், நதிதீரம், நத்யம் என நான்கு வகைப் படும். மேற்கிலிருந்து கிழக்கு முகமாய் ஓடுவது நதி. கிழக்கிலிருந்து மேற் கு முகமாய் ஓடுவது நதம், வடக்கிலிருந்து தென்றிசையை நோக்கி ஓடு வது நதிதீரம், தெற்கிலிருந்து வடதிசையை நோக்கி ஓடுவது நத்யம். இதனை "நதீம்ப்ராகு: ப்ரதீச்யாஸ்து ப்ராதிசீக்பாக காமிநீம்" என வரு உம் அசிதாகம சலோகங்களானுணர்க.

களும் கொண்டுள்ள ஞானம் என்பன பசுஞான பாச ஞானங்களாம். அவருள், உலகாயதர் இவ்வுலகின்கண் மிக்க அழகுடைய வனிதையரைப் பெற்றுக் காமதந்திரங் கூறியாங்கு புணர்ந் தின்புறுதலே முத்தியென்பர். வேதத்திற் கன்ம காண்டத்தையே பிரமாண மாகக் கொண்டு அநுட்டிக்கும் மீமாஞ்சகர் சோதிட்டோமம், சௌத்திராமணி, வாசபேயம், பசுநிரூட பந்தம், பௌண்டரீகம் முதலிய கர்ம பலங்களானே சுவர்க்கம் அடைதலே முத்தி யென்பர். புத்தரிற் பிரதீப நிருவாண வாதிகள், உருவகந்தம், வேதனு கந்தம், சஞ்ஞா கந்தம், ஞானகந்தம், விஞ்ஞான கந்தம் என்னும் பஞ்ச கந்தங்களும் அறக் கெடுதலே முத்தி யென்பர். அருக சமயிகள் அநந்த ஞானம், அநந்த தரிசனம், அநந்த வீரியம், அநந்த சுகம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, சகல சம்மியக் பாவம் என்னுங் குணங்கள் எட்டும், மதி, சுருதம், அவதி, மனபரியாயம், கேவலம் என்னும் ஞானு வரணீயமும், சக்கு தரிசனம், அசக்கு தரிசனம், அவதி தரிசனம், கேவல தரிசனம், நித்திரை, நித்திரா நித்திரை, பிரசலை, பிரசலாப் பிரசலை, தியானக் கிரந்தி என்னுந் தரிசனு வரணீயமும், சாத வேத நீயம், அசாத வேதநீயம், என்னும் வேதநீயமும், தேவாயுஷியம், திரியக் காயுஷியம், மானுஷியாயுஷியம், நரகாயுஷியம் என்னும் ஆயுநீயங்களும், மித்தியா தத்துவம், மிகவு மித்தியா தத்துவம், சம்மியகம்பிரகிருதி, அந்தானுசந்திக் குரோதம், மானம், மாயாலோபம், அப்பிரத்தி, யாக்கியானதிக்கு ரோகம், சசுவலனம், அதிக்குரோதம், அதிமானம், அதிமாயம் அதிலோபம், சிரிப்பு, அரதிருதி, சோகம், பயம், நிந்தை, மாதாவேதம், புருடவேதம், அலிவேதம், சத்தாவலோகனம், மாதிரு தரிசனம், சாகாகிரகண தரிசனம், ஞானம் என்னும் மோகனு வரணீயங்களும், வமயம், கந்தம், இரதம், பரிசம், உத்தியோகம், உச்சுவாசம், வாதாம் பரியாத்தி, அபரிபாத்தி, சூக்கும வியாத்தி, பிரசித்தம், அப்பிரசித்தம், சீவகம், துர்ப்பகம், அதேம், அநாதேயம், சாகாயம், சகீர்த்தி, அவகீர்த்தி, அகுரு, இலகு,

உபகாதா, பரகாதா ஆனுபூர்வி முதலாய தொண்ணூற்று மூவகை நாமங்களும், உயர்கோத்திரம், தாழ்ந்த கோத்திரம் என்னும் இருகோத்திரங்களும், தானாந்தராயம், இலாபாந்தராயம், போகாந்தராயம், உபபோகாந்தராயம், வீரியாணி யந்தராயம் என்னும் அந்த ராயங்களும் ஆனைய கன்மங்களுங் கெட்டு இருத்தலே முத்தி யென்பார்.

சமாரீந்தர். அல்லது மிருதி வாதிகள் தன்மாத்திரா புவனத்தை யடைதலும், இந்திரி யான்ம வாதி இந்திரிய புவனத்தை யடைதலும், மனோவாதி மனோதத்துவத்தைச் சேர்தலும், தார்க்கிகர் எல்லாங் கெட்டுப் பாடாணம் போலிருத்தலும், சாங்கியர் பிரகிருதி புருட விவேகமுறுதலும், பரிணாத வேதாந்திகளும் பாஞ்சராத் திரிகளும் பிரகிருதி புவனப் பிராப்தியாதலும், பாதஞ்சலர், விவர்த்த வாதிகளாகிய மாயா வாதியர் புருடதத்துவத்தை யடைதலும், பரசோம சித்தாந்திகள் வித்தியா புவனத்தை யடைதலும், சிவாவேச வாதியர் கலாபுவனத்தை யடைதலும், காலேசுரவாதிகள் காலதததுவததைச் சேர்தலும் இங்ஙனமே மற்றையோரும் நிலமுதல் நாத மீறாக வுள்ள தத்துவங்களை யடைதலுமே முத்தியென்பர். அவ்வத் தத்துவங்களை யுணர்தலே ஞானமென்பர். இவையெல்லாம் பசுஞான பாசஞானங்களா யடங்கும். இனிப் பதிஞான மாகியசிவஞானத்தைப் பற்றிச் சிறிது கூறுதும். முடிவாயுரைக்கு மிடத்து இச சிவஞான மில்லாதார் நம்மின்பத்தை யடைதலெக்காலு மில்லையாம்.

நாந்யப் பந்தா விமுக்தயேயனதத்வி துராமிர்தாஸ்தேபவந்தி!
ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி!
ததாசிவ மவிஞ்ஞாய துக்கஸ்யாந்தோ பவிஷ்யதி!!

என்னும் இருக்குவேத வாக்கியப்படி "ஞானமன்றி வீடு பெறவழி வேறில்லை; எவரிதனை யறிந்தார் அவர் அமிர்த ராவார்; பிரமத்தை யறி

தவன் பிரமமேயாவன். அங்ஙனஞ் சிவஞான மில்லாதார்க்குத் துக்கந் தொலைவுறாது என்று அறிந்துகொள்ளுதி.

ஹே! * கௌசிக! இப்பதிஞான மாகிய சிவஞானத்தைப் பெற வேண்டுவோர் யாங்கூறிய விச்சமயங்களை யெல்லாம் விடுத்துச் சமயாதீத மாய் விளங்கும் சைவ சித்தாந்த மாகிய அத்துவித நிலையை யடைந்து சோபான நெறிப்படுதல் வேண்டும். சோபான மார்க்கங்க ணான்கு. அவை தாதமார்க்கம், புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்பன வாம். இவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என முறையே கூற வும்படும். முத்தி என்னும் பேரின்பச் சுவையை அநுபவித்தற்கு இந் நான்குங் காரணங்க ளாகலால், அரும்பு, மலர், காய், கனிபோல விளங்கும். அரும்பின் றேல் மலருமா, மலரின்றேற் காயும், காயின்றேற் கனியும், கனி யின்றேற் சுவையும் எங்ஙன மில்லையோ அங்ஙனமே, சரியை யின்றேற் கிரியையும், கிரியை யின்றேல் யோகமும், யோகமின்றேல் ஞானமும், ஞான மின்றேல் முத்தியின்பமும் இல்லையாகும். அரும்புளதேல் மலரும், மலருண்டாயிற் காயும், காய்தோன்றிய வழிக்கனியும், கனியாற் சுவையும் பெறப்படுதல் போல, சரியையுள் வழிக்கிரியையும், கிரியையுள் வழி யோ கமும், யோகங் கூடியவழி ஞானமும், ஞானமுள்வழி முத்தியின்பமுங் கைகூடுமென்க.

இவை உபாயச் சரியை, உபாயக்கிரியை, உபாயயோகம், உபாய ஞானம் எனவும், உண்மைச் சரியை, உண்மைக் கிரியை, உண்மை யோகம், உண்மைஞானம் எனவும் இருவகைப் படலான் எட்டாகவும், சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில்

* ஈண்டுச் சொல்லப்பட்ட கௌசிக முனிவர், குசத்தி னின்றும் பிறந்த காதிமைந்தனுங் கௌசிகனன்று. யாரோவெனிற் பஞ்சரிஷிகோத் திரங்களு ளொருவராய கௌசிகரென்க. அது "கௌசிகக் காச்யபச் சைவ பாரத்வாஜோ" எனவரூஉஞ் சூக்கும ஆகம வசனங்களானுணர்க.

ஞானம் எனவும், கிரியையிற் சரியை, கிரியையிற் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் எனவும், யோகத்திற் சரியை, யோகத்திற் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் எனவும், ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் எனவும் வகைப்படலாற் பதினாறாகவும், உபாயமுண்மை வகையாக்க முப்பத்திரண்டாகவும் விளங்கும் என்க. இவை அன்பு காரணமாக உண்மையாற் செய்வதாஉம், புகழ் முதலிய உலகப்பயனை நோக்கிச் செய்வதாஉ மாகிய வேறுபாடுபற்றி உபாயம் உண்மை எனப்பட்டன வென்றறிக. சிவதீக்கையை யுடையராய் அன்பு காரணமாக உண்மையாற் செய்யுஞ் சரியை யாதிகளே விசேடம்.

அவற்றுட் சரியையிற் சரியை யாவது திருக்கோயில் அலகிடல், திருமெழுக்குச் சாத்தல், மாலை தொடுத்துச் சாத்தல், தீபதூபங்க ளிடல் முதலாயின.

சரியையிற் கிரியையாவது உமா மகேசர், இடபாரூடர், கல்யாண சுந்தரர், பிச்சாடனர், சபாபதி, காமாரி, காலாரி, திரிபுராரி, மாதங்காரி, அர்த்தநாரீசுரர் முதலிய இருபத்தைந்து மூர்த்திகளு ளொருவரை யாதல், நம்மை முதலாக வுடைய ஆவரண தேவதைகளு ளொருவரை யாதல் பூசித்தலாம். இருதய கமலத்தினிடத்தே யம்மைத் தியானித்தலே சரியையில் யோகமாகும்.

சரியையில் ஞானமாவது அத் தியானபாவனையி னுறைப்பானே ரநுபவ வறிவு நிகழப் பெறுதலாம்.

கிரியையிற் சரியை யாவது—நம்பூசைக்கு வேண்டப்படும் உபகரணங்களெல்லாஞ் செய்து கோடல். கிரியையிற் கிரியை யாவது, சிவாகமங்களிற் கூறியவாறே பூத சுத்தி, மந்திர சுத்தி, திரவிய சுத்தி, ஆன்ம சுத்தி, இலிங்க சுத்தி என்னும் ஐவகைச் சுத்தி முன்னாகச் சிவலிங்க வ

விற் செய்யும் பூசனை. கிரியையில் யோக மாவது—சரீரத்தி னுள்ளிடத்தே பூசை, ஓமம், தியானம் என்னு மூன்றற்கும் மூவிடம் வகுத்துக் கொண்டு செய்யப்படும் அந்தரியாகம். கிரியையில் ஞான மாவது—அவ் வந்தரியாக வுறைப்பின்கண் நிகழுமோரநுபவ வுணர்ச்சியாம்.

யோகத்திற் சரியை யாவது—இயமம், நியமம், ஆசனம், பிராணா யாமம் என்னும் நான்குமாம். யோகத்திற் கிரியை யாவது—பிரத்தியா காரம், தாரணை என்னும் இரண்டு மாகும். யோகத்தில் யோகமாவது—தியானம் ஆகும். யோகத்தில் ஞானமாவது சமாதி என்னும் அது வாகும்.

ஞானத்திற் சரியையாவது—கேட்டல் என்பது. ஞானத்திற் கிரியையாவது—சிந்தித்தல் என்னும் அதுவாம். ஞானத்தில் யோகமாவது—தெளிதல். ஞானத்தில் ஞானமாவது—நிட்டை கூடல் என்பது.

இச்சரியை. கிரியை, யோகம், ஞான மென்பவற்றின் பேறுகூறுங் கால் சாலோக்கியம், சாமீப்பியம், சாரூப்பியம், சாயுச்சியம் என்பனவாம். இவை ஆகமங்களினுரைக்கப்பட்டன வன்றி வேதங்களினுங் கூறியுள் ளோம். சாலோக்கியம் முதலிய நால்வகை முத்திகளைப் போலி வேதாந்திக ளொப்பாது மலவாதனையா னிகழ்வர். அவர் பவப்பய னதுவே யென்று விடுக.

முக்திகோபநிடதத்திலே,

ஶைவஸாலோக்யஸாரூப்யமுக்திரித்யபிதீயதே ||
ஸதாசாரரதோ ஜ்ஞானீ ஸ்வாத்மநிஷ்டஸ்ததாவிதஃ ||
த்ரிவிதாத்மகஸாலோக்ய ஸாமீப்ய ஸஜ்ஜநப்ரியம் |
ஶைவஸாலோக்யஸாரூப்யஸாமீப்யஸாயுஜ்யமுக்திஷு
[ஶை

[illegible] |
[illegible] ||

என்று விதித்ததை யிருடியே யறிதி. இவற்றானே கைவல்லிய மகாசெல்வத்தை யளிப்பது பதிஞான மெனப்படூஉஞ் சிவஞானமேயாம் அஃதாவது நம்முடைய தடத்த சொரூப லக்கணங்களையுள்ளவா றுணர்ந்து ஏகனாய் நம்பணியி னிற்றல். அந்தப் பதிஞானந்தான் பரமஞானம், சிவ ஞானம், குகஞானம், பரஞானம், தத்துவ ஞானம், திருவடிஞானம், அருண்ஞானம், அத்துவித ஞானம், மெய்யுணர்ச்சி, அநுபவஞானம், உண்மை யறிவு எனப் பலவாறுகூறப்படும்.

[illegible]

[illegible] |
[illegible] ||

சித்திரு சாத்மநி த்ருஷ்ட்வே சந்தியக்த்வா வ்ருத்
திம் மரீசிகாம்! லப்த்வா சிவபதச் சாயாந் த்யா
யேத் பஞ்சாக்ஷரீம் சுதீ :!

"சிவஞான முள்ளவன் பேய்த்தேர்க் கொப்பாகிய இவ்விருத்திகளை விடுத்து ஞானக்கண்ணாகிய பதிஞானத்தாலே தன்னிடத்தில் ஈசனை மெம்மைப் பார்த்து நம் பாத நிழலை யடைந்து திருவைந்தெழுத்தைத் தியானிக்க வேண்டும்,' என்றுரைத் திருப்பது முணர்தி. ஞான நிட்டையாம் அத்துவித ஞானத்தை யீண்டியா முணர்த்து கின்றேம். அங்ஙனே யிருந்து முத்தியைத் தலைப்படுதி யென்று, முன்னர் ஞான்று பாசிவனார் சனகர் சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னு நான்கு

முனிவர்க்கும் உணர்த்தியது போல் உணர்த்தி யருளினார். இங்ஙனம் ஆதிசைவ முனியாகிய கௌசிகனார்க்கு ஞானத்தி னியல்புகளை யெல்லாந் தேசிகனாகநின்று உபதேசித்தலாற் கந்தக் கடவுள் ஞான தேசிக மூர்த்தி யெனப் பெயர் பெற்றார்.

சாமவேத வசனங்கள்,

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

யசுர்வேதம்.

[illegible]
[illegible]
[illegible]

சிவஞான போதம்.

ஊனக்கண் பாச முணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாசமொருவத் தண்
ணிழலாம் பதிவிதி யெண்ணுமஞ் செழுத்தே.

சிவப் பிரகாசம்.

பாசமா ஞானத்தாலும் படர்பசு ஞானத் தாலு
மீசனை யறிய வொண்ணா திறையருண் ஞான நண்ணித்
தேசுறு மதனான் முன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து
நசமோ டேர்பார்த்து நிற்பது ஞான நிட்டை

முந்திய வொருமையாவே மொழிந்தவை கேட்டல் கேட்டல்
சிந்தனை செய்த லுண்மை தெளிந்திட லதுதா னாக
வந்தவா றெய்த நிட்டை மருவுக வென்று நான்கா
மிந்தவா றடைந்தோர் முத்தி யெய்திய வியல்பினாரே.

சிவகங்கைப் புராணம்.

தீர்த்தமெல் லவற்றுந் துங்க பத்திரை சிறந்த தாங்குக்
கார்த்தவே லிறைவன் முன்னர்க் கவுசிக முனிவனார்க்குச்
சீர்த்தஞா னங்க ளெல்லாந் தேசிக மூர்த்தியாகி
வார்த்தன னென்று நல்ல வராகமா புராணங் கூறும்.

திருக்கோளிலிப் புராணம்.

பரம்பிய தாங்கத் துங்க பத்திரை வடக்க தாக
நிரம்பிய ஞானப் பூக்கட் கவுசிக னென்னு நீர்மை
யருந்தவற் குண்மை ஞான வளப்பரும் போத மீந்து
பொருந்துமா சாரியப்பேர் கொண்டனன் புகழ்வே லண்ணல்.

ஞானதேசிக மூர்த்தயே நம:

பதினெட்டாவது,

அத்துவா மூர்த்தி.

அத்துவா என்னுஞ் சொல்லுக்குப் பொருள் மார்க்கம், அல்லது வழி என்பதாம். வழியாவது விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்று மூவகை யான்மாக்கட்கு முள்ள மலபந்தத்தை யறுத்துச் சிவ ஞானத்தை யுண்டாக்கிச் சர்வஞ்ஞத்துவ முதலிய குணங்களைப் பிர காசிப் பித்துச் சனனத்திற் புகாதபடி முத்தியிற் கூட்டுவதற்கு வகுத்த வழியாம்.* அவ்வழிதான் ஆறுக விருத்தலாற் சடத்துவா (ஷடத்துவா)

எனக் கூறுஞ் சிவாகமங்கள். அத்துவ சுத்தி யில்லாது முத்தியை விரும்புவோர், கோலின்றி நடக்க வுன்னிய குருடரைப் போலவும், மரக்கல மின்றி மகோததியைக் கடக்க விரும்பு மதியினர் போலவும் பெருந்துன்புறுவ ரன்றி யோர் நாளு முத்தியிற் புகார். ஆகலாற்றான் தீக்ஷை யெவர்க்கும் வேண்டப்பட்டது, அவ்வத்துவா மந்திராத்துவா, பதாத்துவா, வன்ணத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என அறுவகைப்படும். இவை சொல்வடிவும் பொருள் வடிவுமாக விளங்கும். இவை தன்மை வேறுபாட்டானே சுத்தம், சுத்தா சுத்தம் (மிசிரம்) அசுத்தம் என மூவகைப்படும். * சுத்த அத்துவாவினுக்கு விந்து என்னுஞ் சுத்தமாயையே முதற்காரணம். சுத்தா சுத்த அத்துவா வினுக்கு அசுத்த மாயையே முதற்காரணம். அசுத்த அத்துவாவினுக்குப் பிரகிருதி மாயையே முதற்காரணம். இங்ஙனம் ஆறத்து வாக்களும் மூவகைப் படலாற் பதினெட்டாகும், எங்ஙனமெனிற் கூறுதும், சுத்த மந்திராத்துவா, சுத்த பதாத்துவா, சுத்த வன்ணத்துவா, சுத்த புவனத்துவா, சுத்த தத்துவாத்துவா, சுத்த கலாத்துவா, சுத்தாசுத்த மந்திராத்துவா, சுத்தா சுத்த பதாத்துவா, சுத்தா சுத்த வன்ணத்துவா. சுத்தாசுத்த புவனத்துவா, சுத்தாசுத்த தத்து வாத்துவா, சுத்தாசுத்த கலாத்துவா, அசுத்த மந்திராத்துவா, அசுத்த பதாத்துவா, அசுத்த வன்ணத்துவா, அசுத்த புவனத்துவா அசுத்த தத்துவாத்துவா, அசுத்த கலாத்துவா என்னும் பதினெட்டுமாம். இப்பதினெட்டாகவும் இருப்பவர் தாமே என்பதைக் கந்தக்கடவுள் தமது ஆறு திருமுகங்களாலும் பன்னிரு திருக்கரங்களாலும் விளக்கி யருளுகின்றார்: எனவே ஆறு அத்துவாக்களுந் தமக்கு வடிவென்பதை அறுதிருமுகங்களானும் விளக்கிடுதல் காண்க.

---

* மதங்கம், வீமதந்திரம் முதலிய ஆகமங்களுஞ் சுத்த அத்துவாவிற் புவனங்கள் முப்பத்து மூன்றும், அசுத்த அத்துவாவில் இருநூற்று நாலென்றுங் கூறியது, இதனை நன்கு வலியுறுத்து மென்க. இவ்வுண்மை யுணராதார் அத்துவாப் பேதமின்றென்பர்.



அத்துவா மூர்த்தி.

அத்துவா மூர்த்தி.

இவ்வத்துவாக்கள் ஆறும் ஒன்றிலொன்று வியாபித்திருக்கும். மந்திரம் அக்கரங்களின் கூட்டமாகிய பதத்திலே வியாபித்திருக்கும். அப்பதம் வன்னத்திலே வியாபித்திருக்கும். வன்னம் புவனத்தின்கண் வியாபித்து விளங்கும். புவனந்தத்துவத்திலே வியாபித்திருக்கும். தத்துவங் கலைகளினும், கலைகள் துணைக் காரணமாகிய சத்தியினிடத்தும் வியாபித்து விளங்கும். அச்சத்திதான் குகக்கடவுளாகிய ஒரு முதற்பொருளினிடத்து அடங்கும். அவ்வுண்மை சத்தியை (வேற்படையைத்) தரித்து இருத்தலானும், சத்தன், ஞான சத்தியான்மா, சத்திமான் என்னும் பெயர்களானு நன்கு தெளியப்படும். இங்ஙனம் வருண பத்ததியும், இரௌரவ ஆகமமுங் கூறுவது காண்க.

இங்ஙனம் ஒன்றிலொன்று வியாபித்தலால் மந்திரங்கள் வியாப்பியம் பதங்கள் வியாபகம்; பதங்கள் வியாப்பியம் வன்னங்கள் வியாபகம்; வன்னங்கள் வியாப்பியம் புவனங்கள் வியாபகம்; புவனங்கள் வியாப்பியம் தத்துவங்கள் வியாபகம்; தத்துவங்கள் வியாப்பியம் கலைகள் வியாபகம்; கலைகள் வியாப்பியம் சத்தி வியாபகம்; சத்திகள் வியாப்பியம் சுப்பிரமணியக் கடவுள் வியாபகம் என்பது உண்மை நூற்றுணிபு. குகக்கடவுளாகிய சுப்பிரமணியப் பெருமானே சர்வவியாபகராகலால் ஆறத்துவாக்களாலும் ஏற்பட்ட கன்மங்களைப் புசிப்பித்துக் கழிப்பிப்பவரும், புசியாத வண்ணம் ஞானவதி முதலாய தீக்கைகளானே நீக்கியருள்வோரும் அவரே என்க.

க. மந்திராத்துவா என்பது, பதினொரு மந்திரங்களை யாகும்.

உ. பதாத்துவா என்பது, எண்பதொரு பதங்களை யாகும்.

ஙு. வன்னாத்துவா என்பது, ஐம்பத்தொரு எழுத்துக்களை யாகும்.

ச. புவனாத்துவா என்பது, இருநூற்றிருபத்துநான்கு புவனங்களையாகும்.

ரு. தத்துவாத்துமா என்பது, முப்பத்தாறு தத்துவங்களை யென்க.

சு. கலாத்துவா என்பது நிவிர்த்தி முதலிய ஐங்கலைகளை யென்க.

மேற்சொல்லிய மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம் என்னும் மிவ்வைந்துங் கலாத்துவா என்னும் ஐந்து கலைகளிலும் அடங்கி விளங்கும் வகை காட்டுதும்.

க * நிவிர்த்தி கலையிலே,

சத்தியோசாதம், இருதயம் என்னும் மந்திரம்–உ.
"ஓம் நமோநம" என்னும் பதமுதலாக,
,' மகாதேவ" என்னும் பதம் இறுதியாகவுள்ள பதங்கள் உஅ.
க்ஷ என்னும் வன்னம்–க.
பிரமாண்டத்துட் காலாக்கினி புவனமுதல் உருத்திர புவனமீறாகவுள்ள புவனம் சு.

கபாலீசாதி திரிதேசாதிபதி யீறாகக் கீழ்த்திசைப்	புவனம்	10	புவனம். 108.
அக்கினி ருத்திரர்முதல் க்ஷயர் முடிவாந் தென்கீழ்	,,	10	
யாமியாதி அதன்ம ரீறாகத் தென்றிசைக்கணுள்ள	,,	10	
நிருதிமுதற் றௌட்டிகரீறாகத் தென்மேற்றிசை	,,	10	
பலாதி சுதாந்த ருத்திரரீறாக மேலைத் திசைப்	,,	10	
சீக்கிராதி மேகவாகனாந்தம் ஆகவுள்ள வடமேற்றிசைப்	,,	10	
நீதி சாராதி பிரகாச ருத்திராந்தம வடதிசைப்	,,	10	
வித்தியாதிபர் முதற் பலப்பிரிய ரீறாகவுள்ள வடகீழ்ப்	,,	10	
கடாகக்கீழ் மாயனாதி யந்திவச்சிரதங்கட்டிரானீறுதியுள்ள	,,	10	
ஷை ஓட்டின்மேற் சம்பு ருத்திராதி திரிலோசனாந்த	,,	10	
வீரபத்திர பத்திரகாளி	,,	8	
ஆகக் கூடிய புவனம் 108			

பிருதிவி என்னும் பெயருள்ள தத்துவம் 1.
இவைகள் அடங்க நிற்கு மென்ப.

---

* நிவிர்த்தி கலை யென்பது காரணப் பெயர். தன்கட் சேர்ந்த பக்குவர்கட்குச் சங்கற்பங்களை விடுவித்து மீட்கின்றமையால் நிவிர்த்தி என்று பெயர். இதற்குத் தேவதை பிரம தேவன் எனக் கொள்க.

௨ ‡ பிரதிட்டா கலையிலே,

வாம தேவம் சிரசு என்னும் மந்திரங்கள் ௨.
மகேசுரன் என்னும் பதமுதலாக அரூபின் அரூபின்
என்னும் பதங்கள் இறுதியாகவுள்ள பதங்கள் ௨௭.
வகார முதல் டகார மீறாக வுள்ள வன்னம் ௨௪.
அமரேசன்முதற் சீகண்ட புவன மிறுதியாகவுள்ள புவனம் ௫௬.
அப்பு தத்துவ முதற் பிரகிருதி தத்துவ மீறாகவுள்ள தத்துவம் ௨௩.

என்னும் இவைகள் அடங்கி நிற்கும் என்க.

௩ * வித்தியா கலையிலே,

அகோரம், சிகை என்னும் மந்திரங்கள் ௨.
வியாபிந் வியாபிந் என்ற பத முதலாகத், தியானபத
மீறாக வுள்ள பதங்கள் ௨௦.
ஞகார முதல் ஸகார மீறான எழுத்துக்கள் ௭.
அகாரம் முதல், மாயை யிறுதியாகவுள்ள தத்துவத்து, பிர
சண்டாதி அங்குட்ட ருத்திராந்தமான புவனங்கள் ௨௭.
புருடதத்துவ முதலாக மாயை யீறாகவுள்ள தத்துவங்கள் ௭.

என்னு மிவைகள் அடங்கு மென்க.

௪ ¶ சாந்திகலையிலே,

தற்புருடம், கவசம் என்னும் மந்திரங்கள் ௨.

---

‡ பிரதிட்டா கலை என்றதுங் காரணப் பெயர். தன்னை யடைந்த ஆன்மாக் கட்கு முற்சொன்ன சங்கற்ப விகற்பங்களை விசேடித்து நிலை நிறுத்தலாற் பிரதிட்டை எனப்பெயராயிற்று இதற்குத்தேவதை விட்டுணு.

* வித்யா கலை என்பதில், வித்யா என்றதற்கு அறிவு என்று பொருள். தன்னையடைந் திருக்கும் ஆன்மாக்களின் அறிவைப் பிரகாசிப் பிக்கையால் அப்பெயர்த்து. இதற்குத் தேவதை உருத்திரக் கடவுள்.

¶ சாந்தி கலை என்பதிற் சாந்தி என்றதற்குச் சாந்தத்தன்மை என்று பொருள். இது தன்னைச் சார்ந்த உயிர்கட்கு விருப்பு வெறுப்பை யொழித்து, சங்கற்ப வழிச் செல்லவொட்டாத முதன்மையான சாந்தத்தை விளைத்தலால் அப்பெயர்த்து. இதற்கு மகேசுரர் தேவதை.

நித்திய யோகினே என்னும் பதமுதல், வியோம வியோபி
னே என்னும் பதங்கள் இறுதியாக வுள்ள பதங்கள் கக.
ஹ, ஷ, க்ஷ என்னும் எழுத்துக்கள் ௩.
சுத்த வித்தியா தத்துவத்தில் வாமாதி மனோன்மணி யீறான
புவனங்கள். ௯.
ஈசுர தத்துவத்தில் அநந்தேசுராதி சிகண்டி யீறான புவனங்கள் ௮.
சாதாக்கியதத்துவத்திற் சாதாக்கியபுவனம் க. ஆகக்கூடிய புவ
னம். க௮.
சுத்த வித்தை, ஈசுரம், சாதாக்கியம் என்னுந் தத்துவங்கள் ௩.

என்னு மிவைகள் அடங்கு மென்க.

௫ ‡ சாந்தியதீத கலையிலே.

ஈசானம், அத்திரம், † மூலம் என்னும் மந்திரங்கள் ௩.
ஓம் என்னும் பதம் க.
அகார முதல் அஃ விறுதியாக வுள்ள எழுத்துக்கள் கசு.
சத்திதத்துவத்தில் உள்ள நிவிர்த்தி, பிரதிட்டை,
வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்னும் புவனங்கள் ௫.
சிவதத்துவத் துள்ள இந்திகை, தீபிகை, உரோசிகை,
மோசிகை, ஊர்த்துவ காமினி, வியாபினி, வியோம
ரூபிணி, அநந்தை, அநாசிருதை என்னும் புவனங்கள்
௰. ஆகக்கூடியபுவனம் க௫.
சத்தி தத்துவம், சிவதத்துவம் என்னுந் தத்துவங்கள் ௨.

என்னும் இவைகள் அடங்கு மென்க.

---

‡ சாந்திக்கும் மேலாய பரம ஞானத்தை யுண்டாக்கலாற் சாந்திய தீதை என்றுபெயர். இதற்குத் தேவதை சத சிவமூர்த்தி. இவ்வைந்து கலைகளின் வடிவு, நிறம், குணம், அவத்தை, நாடி, வாயு, என்பவற்றை மதங்க ஆகமம், சோமசம்பு பத்ததி, வருணபத்ததி, காலோத்தராதிகளிற் காண்க.

† சில ஆகமங்களிலே சாந்தியதீத கலையிலே குறித்த மூன்று மந்தி ரங்களுடன் நேத்திரமந்திரம் என்னும் ஒன்றாங் கூட்டி நான்கென்று கூற லால் ஐங்கலைகட்கும் மந்திரங்கள் பன்னிரண்டாதல் காண்க. இதுபற் றியே திருமுறைத் திருவருட்பாக்களும் பன்னிரண்டாயின என்க.

இவ்வாறு மந்திரங்கள் பதினொன்றும், * பதங்கள் எண்பத்தொன்றும் எழுத்துக்கள் ஐம்பத் தொன்றும், புவனங்கள் இருநூற்றிருபத்து நான்கும், தத்துவங்கள் முப்பத்தாறுங் கலைகளினடங்க, அக் கலைகள் தமது சத்தியினடங்கச் சத்தி தம்முளடங்கச் சுப்பிரமணியப்பெருமான் விளங்காநிற்பர். முத்திக்கு வழியாகிய ஆறத்துவாக்களேயுந் தமக்கு வடிவாகக்கொண்டு, கிரியா தீக்கை, ஞானதீக்கை, சாம்பவிதீக்கை என்னும் மூவகைத் தீக்கையானும் மூவகை யான்மாக்கட்கும் அத்துவ சுத்தியை வருவித்துக் கந்தக் கடவுள் தமது திருவடிப் பேற்றை அளித்தருளுவர்.

சுப்பிரமணிய பரப்பிரமத்திற்கு மந்திராத்துவா ஒரு திருமுகமும், பதாத்துவா ஒரு திருமுகமும், வன்னத்துவா ஒரு திருமுகமும், புவனத்துவா ஒரு திருமுகமும், தத்துவாத்துவா ஒரு திருமுகமும், கலாத்துவா ஒருதிருமுகமும் ஆகஆறத்துவாக்களும் ‡ ஆறுதிருமுகங்களாக விளங்குமென்க. அதனனே சிவபெருமான் திருமுகங்கட்கு ஈசானம், தற்புருடம் என்றின்னவாறு பெயர் வந்தாற்போல, அறுமுகக் கடவு டிருமுகங்கட்கும் முறையே மந்திரேசம், பதேசம், வன்னேசம், புவனேசம், தத்துவேசம் கலேசம் எனப்பெயர்கள் கூறப்படு மென்க இவற்றானே சுப்பிரமணியக்கடவுளும் மந்திரேசன், பதேசன், வர்ணேசன், புவனேசன், தத்துவ ஈசன், கலேசன் எனப்பெயர் பெறுவார் கிரியாசத்தியாராகிய

---

* சில ஆகமங்கள் எண்பத்தொரு பதங்களுக்கும் முந்நூற்றாறு எழுத்தெனக்கூறும். பதங்கள் தொண்ணூற்று நாலென்றும், பதங்களுக்கு அளவில்லை யென்றுஞ் சில ஆகமங்களிற் சொல்லப்பட்டன. எழுத்துக்கள் என்னும் வன்னங்கள், பிரதிலோமக் கிரமத்தாலே க்ஷகாரா முதலாகக் கொள்க. லகார எழுத்துக்கும், வகார எழுத்துக்கும் பேதமின்மையால் அக்கரங்கள் ஐம்பது என்று சிந்தியம் என்னும் ஆகமங் கூறுநிற்கும்.

‡ பிரணவங்களே ஆறுமுகமென்றும், அறுகுணங்கள், ஆறுசத்திகள், சடக்கரங்கள், சங்கர சங்கரி முகங்கள், பஞ்சாக்கரத்துடன் பிரணவம், சிவசடானனம் முதலியனவே முகங்களா மென்றுஞ் சிலநூல்கள் கூறுநிற்கும். அவை மூர்த்த பேதங்கள் எனக் கொள்க.

தெய்வயானையம்மையாரும் மந்திரை, பதரூபிணி, வர்ணை, புவனை, தத்வரூபை, கலாரூபை எனப்பெயர் பொருந்துவர்.

இவ்வாறு வடிவங் கூறப்படுவதன்றி யின்னு மோர் வகையாகவும் வடிவு கூறப் பட்டுள்ளது. எங்ஙன மெனில், சுப்பிரமணியப் பெருமானுக்கு இருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம் முதலிய அங்கங்களாக முறையே புவனம், வன்னம், மந்திரம், பதம், தத்துவம், கலை என்னு மிவைகளாகின்றன. எனவே சுப்பிரமணியக் கடவுளார்க்கு முப்பத்தெட்டுக் கலைகள் திருக்கரம், திருவடி முதலிய திருவுறுப்புக்க ளாகின்றன. சாந்தியதீதகலை திருத்தலையாகவும், சாந்திகலை திருமுகமாகவும், வித்தியாகலை திருமார்பாகவும், பிரதிட்டாகலை குய்ய மாகவும், நிவிர்த்திகலை முழந்தாள், கணைககால் ஆகவும், புவனத்துவா திருமேனியாகவும், வர்ணத்துவா தோலாகவும், மந்திர அத்துவா உதிர மாகவும், பத அத்துவா மாமிசமாகவும், தத்துவ அத்துவா எலும்பு மச்சை, சுக்கில முதலிய தாதுக்களாகவுஞ் சொல்லப்படும். இவை யிற்றை வடிவமாக் கோடலின் சுப்பிரமணியப் பெருமானூர் சாந்தியதீதன், சாந்தேசன், வித்தியேசன், பிரதிட்டேசன், நிவர்த்தீசன் எனத் துதிக்கப் படுவார். தெய்வயானையம் மையாருஞ் சாந்தியதீதை, சாந்தை, வித்தியை, பிரதிட்டை, நிவிர்த்தை எனப் போற்றப்படுவா ரென்க.

இங்ஙன முள்ள திருவடிவங்களானே சத்திபண்ணிப் பேரின்பத்தையருளும் புதுச்சந்நிதிக் கந்த சுவாமியாம் பெருமான், அத்துவ சுத்தி யென்பது என்னெனில், ஆறத்துவாக்களினும் உள்ள சஞ்சித கர்மங்களை யெல்லாம் நசிப்பித்தல். கன்மங்களை நசிக்கவே மாயை அகலும். மாயை அகலவே ஆணவ மலத் தடையற்று ஆன்மாக்களின் சுவ ரூப ஞானம் பிரகாசிக்கும். அது பிரகாசித்தலால் அத்துவித ஞானம் வளர்ந்து இன்ப முறும். இவ்வாறே அத்துவாக்களைத் தமக்கு வடிவாக் கொண்டு

ஆறுமுக மூர்த்தியாய், ஆன்மாக்களை முத்தியிற் சேர்த்தலால் அத்துவா மூர்த்தி எனக் கந்தக் கடவுள் தோத்திரிக்கப் பெற்றனர்.

பௌஷ்கராகமம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

நமாயாநேச்வரோநாணுர்நசக்திச்சுத்தவர்த்தநம: !
உபாதாநமதோபிந்த: பரிசேஷேண லப்பியதே !
நாத்ரசக்திருபாதஞ்சவித்ருபத்வாத்யதாகுர :!
மாயாவிநாத்ரோபதாநம்மோஹகத்வாகஸ்வதேஜஸேதி !

சுவாயம்புவ ஆகமம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]

கிரண ஆகமம்.

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

மகுட ஆகமம்.

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

அஜிதாகமம்.

[illegible] ।
[illegible] ॥

என்றற் றொடக்கத்த சுலோகங்களானும் பெறுதும்.

இப்பிர மாணங்களே யன்றி. "சாந்தியா தீதகலை தன்னின் மந் மந்திரங்க டாமூன்று பத மொன்றக் காங்கள் பதினொறு" எனவ



ரூஉஞ் சிவஞான சித்தியார்த் திருவிருத்தத்தானும், "அத்துவாவடிவா மெம்மிறை முடிதான் கலைகளந்தாகுஞ் சாந்தி முதலான நான்குமாம்" என வரூஉஞ் சிவஞான தீபச் செய்யுளானு முணர்க.

அத்துவா மூர்த்தயே நம :

பத்தொன்பதாவது,

வியாக்கிராசுர சங்கார மூர்த்தி.

சுவேத வராக கற்பத்திலே பிரம தேவருக்கும் விட்டுணுவுக்குஞ் சண்டை நேரிட்டது. அதுகாலை மலரோன் றிருமாலை நோக்கி; நந்த கோபன் மகனே! நானே பரப்பிரமம்; என்னை வணங்குதி யென்றார். மாயவன் அது கேட்டு மைந்தனே! நீ என் உந்திக் கமலத்தினின்றும் பிறந்தவன் அன்றோ? ஆகலான் நீ மகனாகின்றாய். யான் நுனக்குத் தந்தை யாகின்றேன். நுன்னாலுஞ் சகல சராசரப் பொருள்களாலும் வணங்கப்படுதற் குரியோன் யானேயென்றார், பிரம தேவர் கோபித்து, வெண்ணெ யுண்ட கள்வ! நீ எனக்குப் புத்திரன் மருமகன், பௌத்திரன், பிர பௌத்திரன், பிர பௌத்திரன் என்னும் உரிமை யுடையை. உனது பத்துப் பிறவி யல்லாத $ பதினைந்து பிறவிகளுட் சனகன்,

---

* சில புராணங்களிலே வியாக்கிராசுரனைச் சங்கரித்த சிவபெருமானென்றே கூறப்பட்டுள்ளது சிவனே குகன், குகனே சிவன் என்னும் ஒற்றுமை நயம் பற்றிக் குகக்கடவுள் செய்ததைச் சிவன் செய்ததாகக் கூறியதென்க. அங்ஙனமே சுப்பிரமணியப் பெருமானார் செய்யப்பட்ட வராக வதம், கூர்மபங்க முதலியன வற்றையு முறைத்தமை யோர்க. காரிக்கடவுள் செய்தருளிய சிரக கொய்வு, வீரபத்திரரியற்றி யருளிய யாக சங்கார முதலியனவுஞ் சிவபெருமானே செய்தா ரென்று சில விடங்களி லுரைக்கப் பட்டமையுணர்க.

$ பதினைந்து பிறப்புக்களாவன—சனகன், சனாதவன், சனந்தனன், சனற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்கிரீயன், தத்தாத்திரேயன், மோகினி, எச்சன் வியாதன், தன்வந்திரி பௌத்தன் என்பனவாம், இன்னம் பிங்கலந்தை கூறிற்று.

பிறவிகளுட் சனகன்; சனந்தனன், சனந்தனன், சனற் குமாரன் என்னும் நான்கு முனிவராக என்னிடம் பிறந்தனை. நாரதனாகவுந் தோன்றினை. இவற்றானே எனக்குப் புத்திரன் ஆனாய். நான் பிதா ஆனேன். என்னாற் படைக்கப்பட்ட பூமிதேவியாகிய மகளை நினக்கு மனைவியாகத் தந்தேன். அதனால் நீ மருகன்; நான் மாமன் என்று அறிவாயாக. எனது மகனாகிய பிருகு முனிவனுக்கு மகள் இலக்குமி யன்றோ? அவளைத் தானே நின் மனையாக் கொண்டாய். அதுவன்றி என் குமாரனாகிய காசிப முனியின் மனைவியாம் அதிதி வயிற்றி னிடத்து வாமனன் ஆகப் பிறந்தாய். இவற்றானே நீ பௌத்திரனும் நான் மூதாதையும் ஆகின்றேன். வியாசன் தத்தாத் திரேயன், கபிலன், விடபன் என்னுமிவராகப் பிறந்தது பற்றிப் பிர பௌத்திரனு மாகக் காணப்படுகின்றாய் இன்னும் நின்னைப் படைத்துப் படைத்து என்கைகளும் மனமுஞ் சலித்தன.

நினது உந்தியினின்றும் வெளிப்பட்டமையால் நீ பரப்பிரமமாக வணங்கப் படுதற் குரியையோ? அங்ஙனாயின் நரசிங்க மாகத் தூணினின்றும் வெளிப்பட்டனை. அது பற்றித் தூணைத் தந்தை யென்பதூஉம், அதனைப் பரப்பிரம மாக வணங்கு வதூஉந் தகுதி யாமோ? அன்றியும் அதிதி வயிற்றில் வாமனனாகவும், இரேணுகை வயிற்றிற் பரசுராம னாகவும், உரோகிணி வயிற்றிற் பலராம னாகவும், கௌசலை வயிற்றிற் றசரத ராமனாகவும், தேவகி வயிற்றிற் கண்ண னாகவும் பிறந்தாய். சோமயசசு என்னும் அந்தணனையும், அவன் மனைவியையும் இனிப் படைப்பேன். அவள் வயிற்றில் உன்னையுங் குதிகை யாகப் படைக்கச் சித்தமா யுள்ளேன். அவர்கள் யாவரும் நுனக்குத்தாயுந் தந்தையருமாகலால் அன்னவ ரெல்லாம் பரப்பிரம மாவரேயோ? ஆகார்! ஆகார்!! அதுபோல நீ தந்தை என்பதூஉம், நின்னை வணங்க வேண்டு மென்பதூஉம் பொய்யாம் என்றார். இவற்றை யெல்லாங் கேட்ட திருமால் வடவைபோற் கொதித்தெழுந்து கோரயுத்தஞ் செய்தார். பிரமதேவரும்

இளைக்காது அவருடன்பொருதார். திருமால் மிகவுங்கோபித்து "இவனை யின்னே யழிக்கின்றேம்" என்று எழுந்து, வியாக்கிர அசுரன் என்பானை வேள்வியக்கினியி னின்றும் உண்டாக்கித் தமது தவ பலங்களை யெல்லாங் கொடுத்து விடுத்தார். பிரமதேவரும் அங்ஙனே யோர் அபிசார ஓமஞ் செய்து மகிடாசுரன் என்பானை யுண்டாக்கி விடுத்தனர். அவர்கள் இருவரும் நெடுநாட் பொருது, பின்னர் ஒருவரோ டொருவர் இணங்கிச் சீகண்ட ருத்திர மூர்த்தியை நினைந்து பன்னெடுங்காலந் தவம்புரிந்தார்கள். உருத்திர பகவான் றோன்றி அவர்வேண்டும் வரங்களை யெல்லாங் கொடுத்தருளினர்.

அதன் பின் புலிமுக முடையனும், யமனும் நடுங்கத்தக்க பயங்கரமான தோற்ற முடையவனும், வரபலங்களான் மேற்பட்ட அவன் மகிடாசுரனை மந்திரியாக வைத்துத் திரிலோகங்களையுந் தன்னடிப்படுத்தி அரசாள்வா னாயினன். தேவர், முனிவர், இந்திரன், பிரமன், விட்டுணு முதலினோரை யெல்லாம் புறமுதுகிட் டோடப் பாணங்களால் அடித்துத் துரத்தி, அவர் பதவிகளை யெல்லாந் தனதாக்கி யரசு செய்தான். பிரமதேவரையும் விட்டுணுவையுந் தேவர்கள், முனிவர்கள் முதலாயினோ ரெல்லா மிகழ்ந்தனர். அவர்களும் நாமே நமக்கு வினை தேடினோம் என நொந்தனர். அன்னவ ரிருவருஞ் செய்யுந் துன்பங்களை யெல்லாஞ் சிவபெருமா னிடத்தில் விண்ணப்பஞ்செய்வோம். வருதிர் என்று திருமால் அவர்களை யெல்லாம் அழைத்துச் சென்றார். திருக்கயிலையை யடைந்து, திருநந்திதேவர் விடைபெற்றுப் பரசிவனார் சந்நிதியிற் சென்று யாவரும் பன்முறை யடியற்ற மரம்போல் வீழ்ந்து வீழ்ந்து வணங்கி யெழுந்து,

ஸம்ஸாரஸ்ய விஷவ்ருக்ஷஸ்ய நாஶீ ரஸ்ய ஹேதவே நம

ஜந்மஹராய ஶிவாய ஜந்மதேஹராய ஶிவாய ஜந்மஹரா

ஶிவேஶாவாமார்த்தஸ்பர்ஶதேஹாய ஶிவாய |

வியாக்கிராசுர சங்கார மூர்த்தி.

ஈசாநஸ்ஸர்வ வித்யாநா மீஸ்வரஸ்ஸர்வ பூதாநாம்
ப்ரஹ்மாதிபதிர் ப்ரஹ்மணோதிபதிர் ப்ரஹ்மா
சிவோமே அஸ்து சதாசிவோம்!

𑌨𑌮𑍋 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌬𑌾𑌹𑌵𑍇 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌪𑌤𑌯𑍇𑌽𑌮𑍍𑌬𑌿𑌕𑌾
𑌪𑌤𑌯 𑌉𑌮𑌾𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ।

என்னும் தைத்திரீய வேத ஆருண சாகா மந்திரங்களைச் சொல்லித் துதித்தார்கள். சிவபெருமான் றிருவருள் சுரந்து கூறி யருளுவார். அகங்காரம் பெருந்துன்ப மயம். நீவிரிருவரும் அகங்காரங் கொண்டதனென்றோ அவ்வசுர ரிருவருந் தோன்றினர். நுங்க ளகங்காரம் நுமக்கன்றி நும்மைச் சார்ந்த மற்றையோர்க்கும் பெருந் துன்பை விளைத்தது. ஹே, மாலே! உயிர்களைக் காக்கின்ற பட்டத்தை யுடைய நீ, இங்ஙனஞ் செய்ததென்னை? என்று உரைத்துப் பரமனார் துர்க்கா தேவியையுஞ் சுப்பிரமணியக் கடவுளையும் அனுப்பினர். துர்க்கை மகிடனைச் சங்கரிக்கவந்தாள்.

அதனைக் கண்ட சுப்பிரமணியப் பெருமானார் அசுர சேனைகளையெல்லாம் அதஞ்செய்தனர். மகிடன், வியாக்கிரன் என்னும் இருவரும் பெருங்கோபமுற்று, இத்தேவர்களா லன்றோ விவ் விருவரும் போர்புரிய வந்தனர். ஆகலிற் பிரமன் விட்டுணு முதலியதேவர்களை யெல்லாம் இப்பொழுதே விழுங்கி யழிப்பே மென்று பல மாயா வடிவங்களைக் கொண்டு தேவர்களை வளைத்தார்கள். தேவர்கள் கருடனைக் கண்ட பாம்பு போல மிக்க பயங்கொண்டு ஓலமிட்டார். துர்க்காதேவியையுஞ் சுப்பிரமணியப் பெருமானையும்நோக்கி அபயமிட்டார்கள்.

𑌤𑌾𑌮𑌗𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌣𑌾𑌂 𑌤𑌪𑌸𑌾 𑌜𑍍𑌵𑌲𑌨𑍍𑌤𑍀𑌂 𑌵𑍈𑌰𑍋𑌚𑌨𑍀𑌂
𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑍇𑌷𑍁 𑌜𑍁𑌷𑍍𑌟𑌾𑌂 । 𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌶𑌰𑌣
𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌸𑍁𑌤𑌰𑌸𑌿 𑌤𑌰𑌸𑍇 𑌨𑌮𑌃 ।

என்று துர்க்கா தேவியை நோக்கி அபய மிட்டார்கள். இந்த யசுர் வேத தோத்திரத்தைக் கேட்டதுந் தேவியானவள் எருமை முகத்தை யுடையானும் மகிடாசுரனை வளைத்துப் பொருது கொன்றுள்.

ஸாம வேதம்.

* விஶ்வாநி நோ து³ர்க³ஹா ஜாதவேத³ஸ்ஸிந்து⁴ம் ந நாவா
து³ரிதாதி பர்ஷி | அக்³நே அத்ரிவந்நமஸா க்³ருʼணாநோ
ऽஸ்மாகம் போ³த்⁴யவிதா தநூநாம் ||
ப்ருʼதநாஜிதம் ஸஹமாநமுக்³ரமக்³நிம் ஹுவேம
பரமாத்ஸத⁴ஸ்தா²த் | ஸ ந꞉ பர்ஷத³தி து³ர்கா³ணி
விஶ்வா க்ஷாமத்³தே³வோ அதி து³ரிதாத்யக்³நி꞉ ||

என்று முருகக் கடவுளை நோக்கித் தோத்திரம் புரிந்தார். பெருமானுர் அவ்வேத மந்திரங்களையெல்லாங்கேட்டு, அஞ்சன்மின் அஞ்சன் மின்! என அபயங்கொடுத்துப் புலிமுகமுடைய அசுர வீரனைப் பொரவுன்னினுர். தம்முடைய திருக் கரத்தின்க ணுள்ள அநந்தகுணம் என் னும் பெரிய வில்லை வளைத்துத்தொனிசெய்தார். வியாக்கிரன் மிகவும் பயந்து, குணத் தொனியே யிங்ஙனமாயின் இவர் வீரமெத்துணையதோ! ஆயினும் இத்தகையமகாவீரருடன் யுத்தஞ்செய்து இறப்பினும் எஞ்ஞான்றும் புகழ் இருக்கும். என்று துணிவுற்றுத் தன்வில்லை வளைத்து யுத்தம் புரிந்தான். பலப்பல வடிவங்களை யெடுத்துப் பாணங்களைப்

---

* இவ்வேத மகாவசனங்களிலே முருகக்கடவுளாரை அக்கினி எனவுஞ் சாதவேதா எனவுங் கூறித் துதித்திருக்கிறது. "தேவாநாம் அக்ரே சர" அதாவது தேவதைகட்கு முன்னே இருக்கிறவன் ஆகலின் அக்கினி எனவும், ஜாதாநி—வேதாம் ஸி—யஸ்மாத்ஸ; அதாவது எவனிடத்தி னின்றுஞ் சகல ஞானங்களும் உண்டாகின்றனவோ அவன் ஜாதவேதா எனவுஞ் சொல்லுவார். அக்கினிபூ என்னலானும், புலிங்கமூர்த்தி என்னலானும் அங்ஙனம் வேதங்கள் கூறினவென்க.

கரு௨ வியாக்கிராசுர சங்கார மூர்த்தி.

பொழியா நின்ற காலை, பரப்பிரமப் பொருளாங் குகக் கடவுள் ஓரத்திரம் விடுத்து அவன் றலை கொய்து புறக்கடலில் வீழச் செய்தனர். தேவர்கள் யாவருந் துதித்து முன்போலப் பதவிகளிற் சென்று வாழ்ந்திருந்தனர்.

தேவர்க்குத் துன்பஞ் செய்த மகா வீரனாகிய வியாக்கிராசுரனைச் சங்கரித்துத் தேவர்களைக் காத்தருளினமையால் வியாக்கிராசுர சங்கார மூர்த்தி யெனத் துதிக்கப்பட்டார்.

வாசிட்ட லிங்க புராணம்.

கண்ணுதற்கொருகண்ணையப்பியகண்ணனுமொருதிண்ணனன்
பெண்ணியாவருமுண்ணயந்திடவண்ணவாழியையுள்ளியெம்
மண்ணலாரடிகண்ணிடந்தவைமண்ணையுண்ணியுமெண்ணவாங்
கண்ணனும்முதருங்களென்றெருசண்டைகண்டனர்கற்பமே.

விண்டியானுனதத்தனென்றிடவேதனேதிமொயனே
பண்டுநாலவர்மகதியானெனவென்கண்வந்தனைபார்மகட்
கொண்டனன்மருகாகநின்றனைகூறுபோனுமாவையே
யண்டியுற்றபிறப்பினாற்படையங்கைசேர்ந்ததுகாண்டியே.

என்னமாயனுமோரழற்கொடிருட்கடற்பரிபோலவே
துன்னவோர்புலியுக்கிரத்துறுதூர்த்தனைப்பொரவுய்த்தன
னன்னனஞ்சிறையன்னனும்மகிடன்னையுய்த்தனனன்னவர்
முன்னிநின்றமர்கொண்டிணங்குருமூன்றினனருளன்றினர்.

வியாக்கிரன்றவமேன்மையால்வரவாய்மையாற்பலவேந்தரைக்
குயாக்கிரத்துறையாக்கிவானவர்கோலுமாபதமாக்கியே
சயாக்கிரத்தினலைக்கவேன்முருகத்தனாருள்சாரவே
புயாக்கிரத்தினில்வந்தபொற்கணைபூப்பவுண்டிடமண்டினன்.

வியாக்கிராசுர சங்கார மூர்த்தயே நம:

இருபதாவது,

கயாரூட மூர்த்தி.

பிரம விட்டுணுக்கள் இருவரும் பறவைகளாகிய அன்னம், கருடன் என்னும் இரண்டு பறவைகளை வாகனமாக் கொண்டு ஊர்வர். அவர்க்கும் மேலான கடவுள் யாமே என்பதனைச் சிவபெருமான் நீலகண்டம் முக்கண் முதலவற்றா னறிப்பதன்றி வாகனத்தானு மப்பரத்துவத்தை நன்கு விளக்கா நின்றனர். எங்ஙன மெனில், இடபம் என்னும் மிருகத்தை வாகனமாக ஊர்தலாலென்க. என்னை? பரவைகளினின்றும் மிருகம் ஏற்ற முடைமையா லென்பது. இங்ஙனம் இவர்களுள் இருவர் பறவைகளையும், ஒருவர் விலங்கினையும் ஊர்தியாகக் கொள்ள, இம் மூவர்க்குங் காரணராயிருந்து அதிட்டான வாயிலாற் படைத்தன் முதலிய தொழிலைச் செய்பவர் தாமே என்பதை விளங்க நங்குமாரக் கடவுளார் பறவைகளையும் மிருகங்களையும் வாகனமாக் கொண்டருளினர். எங்ஙனமெனிற், பறவைகள் இரண்டனையும், விலங்குகள் இரண்டனையும் ஊர்தியாகக் கொண்டதாம். பறவைகள் இரண்டாவன—மயில், கோழி. விலங்குகள் இரண்டாவன—ஆடு, யானை என்பன. இங்ஙனம் இருகாற் பிராணிகட்கும் நாற்காற் பிராணிகட்குந் தலைவராகிய பரப்பிரமம் யாமே யென்பதனைத் தெரித்தருளுஞ் சிவகுருநாதன்.

வேதங்களெல்லாம் "எவன் தேவர்கட்கு அரசன், எவனிடத்தே தேவர்கள் அடங்கி யுள்ளார். எவன் இந்த இருகால்களுக்கும் நாற்கால்களுக்கும் நாயகன்; அத்தகையதேவனுக்கு அவிசு கொடுப்பேம்" என்றும், "நாற்காற் பிராணிகளை முன்னர்ச் சிருட்டித்தான். இருகாற் பிராணிகளையு மங்ஙனே படைத்தான். முன்னர் அப்புருடன் உடல்களினுயிருட் புகுந்து அந்தரியாமியானான்" என்று மின்னவாகக் கூறும் பிரமாணங்கட் கெல்லாம் (வேதவாக்கியங்கட்குத்) தாமே பொருளென

அறிவித்தபடியாம். அவ்வேத வசனங்களை யிங்கே காட்டுவாங் காண்க. இங்ஙன முள்ள வாகனங்களுள் யானையு மொன்றென்றும். அந்த யானை அயிராவண மென்பர் சிலர். அற்றன்று. அது இரண்டாயிரங் கொம் பர்களை யுடையதாய்ச் சிவ பெருமானுக் குரியதாய்ச் சிவலோகத்தின்கண் இருப்ப தெனினும் "தந்தை பொருண் மைந்தர்க்கு" என்னு வழக் குப்படி, விநாயகர், சுப்பிரமணியர் முதலினோர்க்குப் பொது வாதல் கண்டுணர்க.

ஆகலி னன்றே பிரமதேவன் புத்திரிகளாகிய சித்தி புத்திகளை விநாயகனார் திருமணம் புரிந்த ஞான்று அவ்வயிராவணத்தி னிவர்ந்து திருவுலாப் போந்தாரெனப் பார்க்கவ புராணமும் பகர்ந்தது. ஈண்டுச் சுப்பிரமணியக் கடவுளார்க் குரிய யானை யெதுவோ வெனிற் "பிணி முகம்" என்னும் பெயரை யுடைய தென்க. கருப்ப வாசமில்லாத முனி வரைத் துருவாச ரென்றாற்போலவும் இமைத்தலில்லாதவரை "இமைய வர்" என்றாற் போலவும் எதிர் மறை யிலக்கணையான் வந்தபெயர் என் றிக. என்னை? எவரானும் பிணிக்கப்படாத (கட்டப்படாத) முகத்தை யுடையது என்று பொருளாகலின். அதற்கு எது யாதோ வெனிற் சொல்குதுங் கேண்மின். யானை யேற்றங் கொள்வோ ரவ்வியானையின் முகமுதலியவற்றை யலங்கரிப்பர். முகத்திற்கு, முகபடாம் என்னும் வத்திரங்கட்டுவர். நுதற் கண் ஓடை (பட்டம்) கட்டுவர். கிம்புரிப் பூண்பூட்டுவர். கவரிகள் பிணிப்பர். இவைமுதலாம் பிணிப்புக்க ளின்றி யியற்கையே யவையெலா மமையப் பெற்றுத் தோன்றிய யானை யென்க அல்லதூஉம் சடவடிவினை யுடைய யானை யாகாது பதினோராந் திரு முறைத் திருவருட்பாக்கண்ணும், மெய்கண்ட சாத்திரம் பதினன்கனு ளொன்றாய நெஞ்சுவிடு தூதினு முரைத்தாங்கு பராஞான மென்னும் யானை யெனப் பகர் வாருமுளர். அவ்வாறு இயற்கையே யமைந்த அலங்காரத்தை யுடைய அப்பிணிமுகம் என்னும் யானை எல்லா யானை களினும் மேலாயது.



கயாரூட மூர்த்தி.

ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவ பௌமம், சுப்பிரதீபம் என்னும் எட்டுத்திசையானைகளும், அவற்றின் பிடிகளுஞ் சூழ்ந்து போற்ற விளங்குவது. ஐராவதயானையுங் குற்றேவல் புரிய விளங்குவது. சிவலோகத்திலே யுள்ள ஐராவணம் என்னும் யானையும் அதற் கீடாகாது இருக்கு, யசுர், சாமம், அதர்வணமென்னும் நான்கு வேதங்களுஞ் சுப்பிரமணியக் கடவுளின் றிருவடிகளை மேடமாக வுருவெடுத்து வேள்வி யக்கினியினின்றுந் தோன்றித் தாங்குதல்போல, வேதங்களின் முதலாய பிரணவமு மவ்வாறே யவர்திருவடிகளைத் தாங்கவெண்ணி, இப்பிணி முகப் பெருவடிவந் தாங்கி வந்திரப்பப் பெருமானூர் அதனை யூர்தியாக் கொண்டருளினு ரென்று பிரமாண்டபுராணத்திலே நாரதவிசய சம்வாதச் சருக்கத்து உரைக்கப்பட்டுள்ளது. ஆகலிற் பிரணவ யானை யென்றும் தாரகக்களிறு என்றும் அழைக்கப்படும். இது வன்றி வேறும் வரலாறுங் கூறப்படும்.

திருமால், தந்தையை இடபமாய்த் தாங்கிய தன்றி மைந்தரையும் யானையாகத் தாங்க நினைத்தார். அவர் அதிதி வயிற்றிலே உபேந்திரனுகத் தோன்றி யிருந்த காலையொன்று நினைத்தார் என்னுட னெதிர்த்த காலத்து நான் விடுத்த சுதரிசன சக்கரத்தைத் தன்கழுத்திலே மாலையாகத் தரித்த தாரகனுல் நான் மிக்க அவமான மடைந்தேன். அவ்வவமானம் போக வவனைக் கொன்று காத்தருளியவர் சுப்பிர மணியக் கடவுளே. ஆகலி னவர்க்கு வாகனமாம் பேற்றை யடைந்து, இனி எந்த அசுரர்க்கும் பயப்படாதும், அவரா லிடையூறடைந்து அவமான முருமலும் இருப்பேன். எனது தமயனுகிய இந்திரன் மயிலாகத் தாங்கினு னல்லனே? என்று எண்ணி, மாவிர புரம் என்னுஞ் சீரிய தலஞ் சார்ந்து வாமனர் அருந்தவம் புரிவாராயினூர். அவர் தவங் கண்டிரங்கிய பெருமான்.

ஒரு திருமுகமும், இரு விழிகளும், நான்கு திருக் கரங்களும், இடத் திருக்கரங்கள் எவற்றைக் கேட்பினு மவையெல்லாம் ஒரு சேரக் கொடுத்

தருளும் வெற்றி பொருந்திய வாதமும், கோழிக் கொடியும் கொண்டிருப்பவும், வலத்திருக் கரங்களில் வேலும் வாளும் பொருந்தி விளங்கவும் அநேக கோடி சூரிய ரொருங்கு உதயஞ் செய்தாற்போன்ற பிரகாசம் பொருந்திய திருமேனியும் உடையாராய்த் தோன்றி யருளினார். வாமனர் அருந் துதிகள் புகன்று வீழ்ந்து வணங்கி யானந்தக் கூத்தாடினார்.

"நினக்கு என் வேண்டு" மென்று சுப்பிரமணியப் பெருமானார் கேட்ப, வாமனர் சொல்வார். அசுர குலாந்தகா! அடியேனை முன் அவமானம் புரிந்த தாரகன் றேவரீராற் கொல்லப்பட்டுச் சாத்தனார்க்கு யானை வாகனமாக விளங்குகின்றான். அவனும் நம்மைக் கண்டஞ்சுமாறும் அடியேனை யானை வாகன மாக்கி யென்றென்றும் ஊருதல் வேண்டு மென்றார். வேண்டுவார் வேண்டியாங் கருளும் பெம்மான், அவ்வாறே வாமனரை யானையாக்கி யூர்ந்தனர். வள்ளியம்மையார் அவதரித்த குறிச்சிநிலப் புட்களை வாகன மாகவுங் கொடியாகவுங் கொண்டருளினர். எனக் குரிமையா மொன்றையுங் கொண்டிலர் என்று ஊடல் கொண்ட தெய்வயானை யம்மையாரை மகிழ்விப்பான் வேண்டி, அவர்வளர்ந்த சுவர்க்கப் பொருள்களிற் சிறந்ததும், அவரை வளர்த்ததற் கினமாயதும், வள்ளியம்மையாரை யச்சுறுத்தியதை யொத்த வடிவினையுடையதும் ஆன இந்த யானையை வாகனமாக்கிக் கொண்டாரென்று தேவரெலாம் பூமாரி பொழிந்தார். இங்ஙனம் வாமனராகிய யானையின்மீது ஏறும் மூர்த்தியாய் விளங்கலிற் சுப்பிரமணியக் கடவுள் கஜாரூட மூர்த்தி எனப் பெயர் பெற்றார்,

யசுர் வேதம் - மந்திரசாகை.

[illegible]
[illegible] ||

இருக்கு வேதம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

குமாரதந்திரம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

தணிகைப்புராணம் - அகத்திய னருள்பெறுபடலம்.

ஒற்றை முகமு மிணைவிழியு மும்மைப் பயனு மொருங் களிக்குங்
கொற்ற வாத மூன்றலைக்குக் குடமோரிரண்டு மிடங்கதிர்ப்ப
மற்றை வலப்பான் மணிவேலும் வாளுங் கதிர்ப்பக் கரநான்கும்
பெற்ற மதவெங் களிற்றூர்திப் பெருமா னுருவஞ் சமைப்போரும்.

திருமுருகாற்றுப் படை (பதினோராந் திருமுறைத் திருவருட்பா.)

ஆடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
யோடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி,

பரிபாடல். (எட்டுத்தொகை.)

"பாயிரும் பனிக்கடல்" என்னும் ஐந்தாஞ் செய்யுளில்,

"சேயுயர் பிணிமுக மூர்ந்தம ருழக்கி" என்றது முணர்க. இன்னும் பலப்பல பிரமாணங்களுள. அவையெலாம் விரிவஞ்சி விடுத்தாம்.

கயாரூட மூர்த்தயே நம:

இருபத்தோராவது,

மாதங்காரி மூர்த்தி.

சியவன முனிவரின் புத்திரரான * ததீசி முனிவர், குபன் என்னும் அரசனுடன் நட்புற்றிருந்தார். ஒருநாள் முனிவர்க்கும் அரசகுமாரனுக்கும் ஓர் விவாத முண்டாயிற்று. என்னெனிற், பிராமண பலமோ? க்ஷத்திரிய பலமோ பெரியது? என்பதாம். குபாரசன் "க்ஷத்திரிய பலமே பெரியது" என்ன, முனிவர் அந்தணர் வலிமையே சாலவும் பெரிதென்றார். அதனால் இருவர்க்கும் வீரவாதம் நேர்ந்து கோபம் அதிகரித்தது. முனிவர் குபனைத் தாக்கினார். அரசனுஞ் சினங் கொண்டு ததீசி முனிவரை வச்சிராயுதத்தினால் அடித்தான். அவ்வடியினாலே இருடி குமாரரின் உயிர் மேலுல கடைந்தது.

அதுபோது முனிவரின் மூதாதையாகிய சுக்கிரனார் ஓடோடி வந்து, சிவமகிமை தலக்கு மருந்தே! உயிர் விடுத்துச் சென்றையோ"

---

* ஈண்டுக் கூறப்பட்ட ததீசி முனிவர்,

'[illegible]"

என வாதுளாகமங் கூறியவாறு பஞ்சலிகுடி கோத்திரத்தலாறு ததீசி முனிவரல்ல வென்றுணர்க.



மாதங்காரி மூர்த்தி.

என்று வருந்தி, இரு துண்டமாய்க் கிடந்த அவரி னுடலைப்பொருத்தி, தமது சஞ்சீவினி வித்தையாலே முன்போலாகச் செய்து அவ்வுடற்கண் உயிர்வரும்படி செய்தனர். உடனே தூங்கியெழுந்தவர் போலத் ததீசி முனிவர் எழுந்தார். சுக்கிரனோர் அவரைத் தழுவி முத்த மிட்டு வாழ்த்திக் குபனை நோக்கிக் கூறுவார். "அரசகுமர! பிராமணர் பிழை செய்த காலத்தும் அவரைத் தண்டிக்கவேண்டின் அவர் தலையிற் குட்டல், அல்லது சிறையிடல் செய்வதன்றி, ஓரற்ப விடயத்திற்கா வவரைக் கொல்வாரைக் கண்டிலேம். அங்ஙனஞ்செய்த மன்னர் வழித் தோன்றியோனீயொருவனே. நீ யிங்ஙன முறைதவறி மதத்தானுங்கோபத்தானும் வச்சிராயுதத்தால் அடித்துக் கொன்றமையால், சித்தாந்த நிலையினின்றும் விலகி, சிவதூடண னாகி, மாயனைக் கடவுளென்று அலமந்து மாழ்கி மாண்டு, மறுபிறப்பில் மதயானையாகத் திரிந்து பவம்புரிந்து மாய்க" என்று சபித்தார்.

அவ்வாறே குபன் சிவநெறியி னின்றும் விலகி, அவநெறியாகிய புன்மதத் தாழ்ந்து, மாயனே பரம்பொரு ளென்று மயங்கித் துன்புற்று மாண்டு, இலங்கை மண்டலத்திலே * உவா என்னும் வனத்திலே கொடியயானைகட் கெல்லாந் தலைமையான இளம் யானையாகத் தோன்றித் திருகுற்ற சிந்தையா லுன்மத்தங் கொண்டு திரிந்தான். அநேக உயிர்களை யெல்லாங் கொன்றும், முனிவர் தவநிலைகளை யழித்தும், வேள்விகட்கு இடையூறு செய்தும் இருந்த யானையைத் தேவர்களுங் கண்டால் மிகவும் பயந்து ஓடுவார்; ஒளிப்பார். இவ்வியானை யாரால் கொல்லப்படுமோ? என்று யாங்கலக்கந் தீர்ந்திருப்பமோ என்று பலருங் கந்த நாதனைப் போற்றுவார்கள். இங்ஙன நிகழுநாளிலே,

---

* உவா என்பது இக்காலத்து ஊவா எனப்படும். அதுகண்டிக்குச் சமீபத்திலேசப்பிரகாமம் என்னு மூர்க்கு அருகி லுள்ளது. உவா=யானை, அது பிறந்த விடவாகலின் அப்பெயர்த் தென்றெண்ணக் கிடக்கின்றது.

தத்தமாற்றங்கணிறுவியசமயிகள்பலருங்
கத்துபுன்சொலேவினவினரவன்செயல்காணார்
சுத்தவாதுளமுதலியதந்திரத்தொகுதி
யுய்த்துணர்ந்திடுசீரரேயொருசிறிதுணர்வார்.

என்றபடி சிவாகம வழிநின்று, அறுமுகக் கடவுளின் றிருவருட் பெருமைகளை யெல்லா முள்ளவாறுணர்ந்த சற்புத்திர னென்னும் வணிகர் ஒருவர் இருந்தார். தங்கள் செட்டிகுலத்திலே யவதரித்து அதனாலே செட்டி என்னுந் திருப் பெயரையுடைய கந்தக் கடவுள் எழுந்தருளி யிருக்கின்ற தலங்க ளெல்லாஞ் சார்ந்து தரிசனஞ் செய்து, "திருப்புகழ் பெற்ற தலங்களுட் கதிர்காமம் ஒன்று தரிசித்திலேன். மற்றைய வெல்லாந் தரிசித்து முற்றினேன். அக்கதிர்காமத் தலத்தையு மெம்பிரா னடியேற்குக் காட்டியருளுதல் வேண்டு" மென்று பிரார்த்தித்து வருவாராயினார். இவ்வாறு தரிசன விருப்பத் தழுந்தி நிற்குஞ் சற்புத்திர வணிகரது சொப்பனத்திலே சிறையிலே கிடந்து புலம்பிய சயந்த குமாரனுக்குத் தோன்றித் தெளிவித் தருளியதுபோலத் தோன்றி யருளித் திருவாய் மலர்ந்தருளுவார்.

"அன்பனே! கதிரைத் தலத்தைத் தரிசிக்கும் விருப்பமுடையனாய் நிற்கின்றாய். நாளைத் தினமே புறப்பட்டு வருதி" என்று மறைந்தருளினார். உடனே சற்புத்திர வணிகனார் விழித்தெழுந்து உடல நடுங்க, உரை தடுமாற, உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்தக் கூத்தாடி, குகக் கடவுளின் றிருவருளை வியந்து, அன்று புலரிக்காலேயிலெழுந்து வழிக்கொண்டார். பற்பல ஊர்கள் யாவுங் கடந்து * கண்டி என்னும் ஊர்க்கண் வந்தார். அதுபோது

* குபன் என்னும் யானையைக் கண்டித்த ஊராகலினன்றே கண்டி யெனப் பெயர்வந்தது. மகனறிவு தந்தை யறிவு என்றபடி தந்தையார் மாதங்காரியாய் விளங்கல்போல மைந்தரும் இதனால் மாதங்காரியென விளங்குதல் காண்க.

சமுத்திரங்களை யெல்லாம் மொண்டு மொண்டு குடித்து இருண்டு மிக்க வேகத்துடன் புகர் நிறத்தையுடைய இந்திர வில்லையு மேந்திக் கொண்டு மேகக் கூட்டங்களெல்லா மொருங்கு திரண்டு இடித்து முழங்கிவந்த தென்ன, முற்கூறிய உவா என்னுங் குபயானை யதிர்ந்து நடந்து முழங்கி வந்தது. அதனைக் கண்ட வணிகனார், தமக்குறு துணை சுப்பிரமணியக் கடவுளே யென்று துணிந்து, அவரை யன்புடன் றுதிப்பாராயினார்.

அருவம், உருவம், அருவுருவ மென்று சொல்லப்பட்ட மூன்று வடிவங்களையு முடையவர் எவரோ? அம் மூவகை வடிவங்களுஞ் சுத்த வச்சையினால் மந்திர வடிவாக் கொண்டு இலய போக அதிகாரங்களை யாவர்செய் வாரோ? அவர் அடியேனைக் காத்தருள்க. ஆன்மாக்களாகிய எங்கள் பொருட்டு யாவர் ஆரணி சத்தியினாலே சங்கார அநுக்கிரக கிருத்தி யங்களைச் செய்வாரோ? யாவர் ஜநநி சத்தியினாலே படைப்புத் தொழிலை யியற்று வாரோ? யாவர் உரோதயித்திரி சத்தியினாற் காத்தல் மறைத்த லென்னுந் தொழில்களைச் செய்தருள்வாரோ அவைகளை வேற்படை, தெய்வயானை, வள்ளியம்மை என்னுஞ் சத்திகளாக யாவர் காட்டுவாரோ அன்ன கடவுள் அடியேனைக் காத்தருள்க என்று துதித்தார்.

சுப்பிரமணியப் பெருமான் அந்தக் கணமே வேடர் போற்றிருவுருக் கொண்டு கையின் கண்ணே வேற்படைதரித்தவராய்த்தோன்றி, அன்ப! பயமுறற்க வென்று அபயங் கொடுத்து, ஓருங்காரஞ் செய்தார். யானை வீழ்ந்திறந்தது. குபன் தன்வடிவுகொண்டு வணங்கினான். குகக் கடவுள் மறைந்தருளினார். வணிகர் துதித்துக் குபாசனோடும் கதிரைத் தலமடைந்து மாணிக்க கங்கை நன்னதியாடித் தரிசித்தனர். அவருள் குபன், ததீசி முனிவர்க்குத் தான் செய்த பழிநீங்கப் பெற்றுத் தன் இராச்சியத் தைக் கைக்கொண்டான். வணிகர் இறுதியிற் குகபத மடைந்தார்.

மாதங்காரி மூர்த்தி.

யானையை யழித்து வணிகரைக் காத்தருளினமையாற் குகனார் மாதங் காரி மூர்த்தியாயினர். மாதங்க = யானையை, அரி = அழித்தவர்.

வாதுளாகமம்.

[illegible] |
[illegible] |
[illegible] ||

மிருகேந்திராகமம்.

[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] ||

பிரமாண்டபுராணம் (மொழி பெயர்ப்பு.)

சிவமொன்றே முதலாகுஞ் சத்தியஞ்சத்
 தியமீது தெருட்டி னேனீ
ரவமொன்றிச் சுடுநிரயத் தாழ்கின்றீ
 ரெனப்புகலு மந்தச் சோதி
குவனென்றிக் கலகமிடப் புடைத்தனன்மற்
 றவனுமொரு கோலிற் றூக்கச்
சவமொன்றச் சுக்கிரனும் பதைத்தொருநற்
 சிவக்கொழுந்தே சார்ந்திட்டாயோ.

என்றிரங்கிச் சீவனியின் வித்தையா லுயிர்ப்பித்தே
 யிவனை நோக்கி
நன்றுநீ மதமாவிற் படுதியெனச் சூள் செய்தா
 னாலு மீழத்

தொன்றுவா வனத்துவா வெனத்தோன்றிக் கொடுஞ்செயல்க
ளூனுற்றியன்ப
னன்றுதலங் காணச்சென்ற டர்த்துவேள் கொன்றருள
வன்பிற் சார்ந்தான்.

மாதங்காரி மூர்த்தயே நம:

இருபத்திரண்டாவது,

ஈயக ஈசுநக மூர்த்தி.

காசிப முனிவர், தக்கன் புத்திரிகளாகிய திதி, அதிதி, தனு, அரிட்டை, சுரசை, கடை, சுரபி, விநதை, தாம்பிரை, குரோதவசை, இளை, கத்துரு, முனி என்னும் பதின் மூவரையும் விவாகஞ் செய்தார். அவருள், திதி யென்பாள் இரணியன், இரணி யாக்கன் என்னும் இருவர் ஆண்மக்களையும், சிம்கிகை யென்னும் பெண்ணொருத்தியை யும் பெற்றாள்.

அவர்களுள் இரணியனுக்கு அனுகிலாதன், கிலாதன், பிரகலா தன், சங்கிலாதன் என்னு நான்கு குமாரர் தோன்றித் தைத்தியகுலத் தை விருத்தி யாக்கினர். இரணியாக்கனுக்குச் சருச்சான், சகுனி, பூதசந்த தாபனன், மகா நாபன், மகாபாகு, கால நாபன் என்னும் அறு வர் குமாரர் தோன்றினர். மற்றைய மனைவியர்க்கும் மகவுகள் பலப் பல தோன்றி உளவிறந்தனவாக விருத்தியாயினர்.

திதியின் குமாரர்களான அசுரர்களுக்கும், அதிதி புத்திரர்களான தேவர்க்கும் போர் தொடங்கிப் பலர் இறந்தார்கள். விட்டுணு அவ வேண்டுகோட் கிரங்கிப் பாற்கடல் கடைந்து, தோன்றிய அமிர்தத்



யாக ரக்ஷக மூர்த்தி.

தைத் தேவர்க்குக் கொடுத்து, அசுர கூட்டங்களை யெல்லாம் வேரோ டறுத்தொழித்தார். அஃதறிந்த திதி யென்பாள் மிக மனம்வருந்தி, என்னுடைய குலத்தவர்களை யறுத்த இந்திர உபேந்திரர் முதலிய அதிதி புத்திரர்களை யெல்லாங் கொல்லத்தக்க புத்திர னொருவனைத் தந்தருளி னல் என்னுயிரை வைப்பேன். அன்றேல் இப்போதே துறப்பே னென்று காசிப முனிவரிடம் முறையிட்டாள். அவர் அவளை நோக்கி, பிரியாய்! வருந்தற்க. அங்ஙன மொரு புதல்வனைத் தரு கின்றே மென்று தேற்றினர்.

முருகக்கடவுள் வீற்றிருந் தருள்கின்ற திருத்தலங்கள் அறுபத்து நான்கனுளொன்ருய புத்திர காமம் என்னுந் திருத்தலத்தை யடைந் தார். ஆங்குள்ள நற்றான மொன்றிலே யாகசாலை வகுக்கத் தொடங் கினர். சால்யோத்தாரணம், தாரை சுத்தி முதலியவைகளுஞ் செய்து யாகசாலை வகுப்பா ராயினர். மனு சூத்திரம், இரவி சூத்திரம், முனி சூத்திரம், மானவ சூத்திரம், திரபாக மண்டபம் என யாக சாலையை வகைப்படும். அவற்றுள் தங்கருமத்திற் குரிய யாகசாலை மானவ சூத்திர மாகலின் அதனை வகுத்தார். வேதிகை, ஊர்த்துவ பட்டி, அதோபட்டி, துவாரம், குண்டங்கள் இவைகற்பித்து, வேதியின் நடு விலே பிரமபத மெனவும், நான்கு பக்கத்தும் தெய்வபதம், மானுட பதம், பைசாசபதம், இராக்கத பதம் என்னும் பதங்களும், அவை களில் ஊர்த்துவ மேகலை, அதோ மேகலை, மத்திய மேகலை யிவைக ளும் கற்பித்துக் குண்டயோனி முதலியவையும் வகுத்தார்.

சிவபெருமான் பஞ்சவர்ண முடையாராய் விளங்கலானும் பஞ்ச தானங்களி னின்றும் வெளிப்பட்டுப் பஞ்சகிருத்தியஞ் செய்வதாலும் பஞ்சாவரணங்களும், துவாரம், தோரணம், சூலம், நான்கு தம்பம், உருத்திராக்க, பஸ்ம, உபாயன தாரண வேதிகைகளுமியற்றிச் செய்ய

வேண்டியன வெல்லாஞ் செய்து, யாகஞ் செய்தற்கு மிகவும் முக்கிய மான அதர்வசிரோ மந்திரங்களையுஞ் சிவாகம மந்திரங்களையும் விதிப் படி கூறிச் செய்வாராயினர்.

"அந்த யாக முற்றுமேல் திதி யென்பாள் வயிற்றிற் கருப்பமுண் டாகும். அஃதுண்டாயி னமக்கும் நங்குலத்தார்க்கு மழிவுநேரிடும்." என்று இந்திரனுந் திருமாலு மிடையூறுகள் செய்யத் தொடங்கினர். காசிப முனிவர் அது தெரிந்து, வேள்விப் பதியைத் துதிக்கத்தொடங் கினர்.

யாவனங்கி வடிவானோன் யாவ னயத்தை யூர்ந்திடுவான்
யாவனங்கி பூவெனமா மறைக ளியம்பு மகபலத்தை
யாவன் கொடுக்கும் பொறியாகத் தோன்று மெழிலோன் முக்கண்ணன்
யாவனவன்றன் பதமலர்க்கிங் கடியேன் சரணம் புகநின்றேன்.

யாவன் அக்கினி வடிவா யிருப்போன்; எவன் மேடவாகனத்தை யூர்வோன்; அம் மூர்த்தி அடியேனையும் யாகத்தையுங் காத்தருள்க. சிவாக் கினிபூ என்று வேதங்கள் முழங்கும் பொருளா யிருப்பவன் எவன்? யாகபலப் பிரதான மூர்த்தி யாவன்? ஊர்த்துவ ரேதசனும் அறுதிசை களைக் காப்பவனும் யாவன்? குமாரன் திரியம்பகன் யாவன்? அக்கட வுளாவான் அடியேனையும் யாகத்தையுங் காத்தருளும்படி யடைக்கலம் புக நின்றேன். யாகத்திலே மும்முறை "சுப்பிரமண்யோம்! சுப்பிர மண்யோம்!! சுப்பிரமண்யோம்"!!! என்று வேதங்களால் அழைக் கப் பெறுவோற்கு அடியேனடைக்கலம் அடைக்கல மென்றிவ்வாறு துதித்தார்.

இவ்வொலி கேட்டதுஞ் சேய்குரல் கேட்ட தாய் போலச் சுப் பிரமணியப் பெருமான் பால வடிவத் துடன் வேலாயுதமும் பல்லல மூர் தரித்த திருக்காத்தினராய்த் தோன்றி, முனியே! யாங் காக்

கின்றும். அஞ்சற்க. யாகத்தை முடிக்குதி யென் றருளினர். காசிபமுனிவர் கந்த சகத்திர நாமத்தால் அர்ச்சித்துச் சோடசரூபதியானஞ்செய்து யாகஞ் செய்வாராயினர் தேவர்கள் செய்த அபிசார வேள்வியினின்றுந் தோன்றி மலையன், மாயன் என்னும் அசுரர் இருவரனுப்பப்பட்டார். அவ்வசுரர்கள் முனிவரையும் யாகப் பொருள்களையும் விழுங்குவே மென்று ஆரவாரித்துவந்து நெருங்கினர். காசிப முனிவர் பயந்து, "ஞான சத்திதரா! பாலரூபா! பரஞ்சுடரே யோல மோல" மென்றார். இளைய பிள்ளையார் தங்கரத்திருந்த பல்லவத்தாலெறிந்து அவ்வசுரர்க ளிருவரையுங் கொன்றருளினர்.

முனிவர் யாகத்தை நிறைவேற்றி ஆங்குச் சுப்பிரமணியப் பிரதிட்டை செய்து சென்றார். அதுவே புத்திர விருப்பத்தை யளித்தமையாற் புத்திர காமம் என்னும் பெயர் பெற்றது. இங்ஙனம் முனிவர் செய்யும் வேள்விகளையும், அந்தணர் செய்யும் மகங்களையும் யாதோ ரிடையூறும் வாராமற் காத்தும், காசிப முனிவர்செய்த யாகத்தை யழிக்க வந்த அசுரர்களைக் கொன்றும், அவர்யாகத்தைப் பரிபாலித்தும் விளங்கலாற் சுப்பிரமணியக்கடவுள் யாகரக்ஷகமூர்த்தி யாயினர்.

அசி தாகமம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

சந்தான ஆகமம்.

ஸம்வக்ஷ்யே க்ருஸ்தேக்ஷ க்ருவஸ்தேஸ்மிகாலேஸவஹ்நி |
ஸம்ஷாவரணயாத்க்ஷஸ்வாஷ்ட்ராவாயஜ்ஞாதத:ஸர: |
ஸம்ஹாவரணம்யோநிஷ்யாநந்தேவதஷ்நஞ்ஜரம் |
யாமஸாஸாஜ்ஞாவஸிதேதாஷித்தேஷ க்ருயஷாவிய ||

குமார தரிசனம்.

வானயன் சுதன்றன் மனையருட் டிதிதன்
வமிசத்தை யழித்தமா யவனை
யெரிசதக் கிருதை யழிசுதற் றருகென்
றிரக்கவோர் வேள்வியை யியற்ற
வரியிரு வருஞ்செ யல்லவை தீர
வந்தடர் மாரனூர் மலையார்
பரிவுற வழித்துக் காத்தனன் வேள்விப்
பதிபுத்ர காமஙற் றலமே.

பதினோராந் திருமுறைத் திருவருட்பா.

மந்திர விதியின் மரபுளி வழாஅ
வந்தணர் வேள்வி யோர்க் கும்மே யொருமுகம்.

யாக ரக்ஷக மூர்த்தயே நம:

---

* இச் சரிதத்தை வேறுவகையாகவுங் கூறப்படும். மாரன், மலையன் என்னும் அசுரர்களைச் சுப்பிரமணியக் கடவுள் இளமை வடிவுடன்வந்து வேல்விட்டுக் கொன்றருளியது “இளையனூர் வேலூர்” என்னுந் தலத்தி லென்றுங் கூறுப.

இருபத்துமூன்றவது,

புட்பசத்திர மூர்த்தி.

நீர்வள நிலவள முதலிய எல்லா வளங்களானும் பொலிவுபெற்றதாகி, ஈழம், பொன்னகரம், * தக்கிண கைலாயம் என்றின்ன பெயர்களையுடைத்தாம் இலங்கை மாபுரியிலே யுள்ள ‡ ஏறுமாநாடு அதன்றிலகம் போற் சிறந்து விளங்கா நிற்கும். அத்தகைய வூரிலே குற்றமின்றி விளங்கிய அறிவும், வலிமையும், முயற்சியுமுடைய ஓவியர்குடியிலே, அற மெலாந் திரண்டு ஒரு வடிவெடுத்தாற்போலும் நல்லியக் கோடன் என்பவன் இருந்தான்.

அவன் அவ்வூரரசர்க்குத் தலைமை பெற்றோனாகி, தொண்டைநாட்டின்க ணுள்ள எயிற்பட்டினம், ஆமூர், வேலூர், மூதூர் என்னுநான்கு நகரங்களினும் அரண் கோலி யரசு புரிந்தான். மயிலுக்குப் போர்வைகொடுத்த ஆவியர் குடித் தோன்றலாம் பேகன், தடுத்த முல்லைக்கொடிக்குத் தன்றே ருதவிய பறம்பு மலைக்கு அரசனாகிய பாரியென்னும் வள்ளல், காரி யென்னும் பட்டத்துக் குதிரையுடன் றனது நாட்டினையும் இரவலர் கேட்டவுடன கொடுத்த காரிவள்ளல், பாம்பு கொடுத்த அரிய நீலநீறப்

---

* இலங்கையிலே ஏறுமாநாடு என்பது திரிகோண மலைப் பகுதிக் கணுள்ளவோரூர். அதனை ஏறுமாவூர் ஏராவூர்என்ப. இங்ஙன மரூஉவிற் றென்று கூறுவர் பலர். கோடன் என்னும் பெயரானே தக்கிண கைலாச புராணத்திலே கூறப் பட்ட குளக் கோடனும் இவன் வழிவந்த வரசனென்றே கூறல்பொருந்தும். அவனும் ஏறாவூர்ப் பகுதியில் வசித்தா னென்றும் ‡ கந்தளாய் என்ற குளந் தோண்டு வித்தா னென்றும் தெரிதலால் ஏறாவூரே ஏறுமாநா டென்ப தொருதலை.

‡ வாயுவினாற் பறித் தெறியப்பட்ட சிகரங்கள் மூன்றனுள் ஒன்று திருக் காளத்தி, ஒன்று திரிசிராமலை, ஒன்று திரிகோணமலை யாகும். அது "முன்னர் வீழ்ந்திடு சிகரிகாளத்தியா மொழிவர்-பின்னர்வீழ்ந்தது திரிசிரா. மலையெனும் பிறங்கல்-அன்னதின்பிற கமைந்தது கோணமாவசலம்-இன்ன மூன்றையுந் தக்கிண கயிலையென் றிசைப்பார்." என்னுஞ் செவ்வந்திபுராணச் செய்யுளானறிக தக்கிணகைலாயபுராணமு மிங்ஙன் கூறும்.

புட்பசத்திர மூர்த்தி.

போர்வையை யாகலின்கீழிருந்த இறைவற்குச் சாத்திய ஆய் என்னும் வள்ளல், மலைச்சாரலில் நின்ற கருநெல்லியினது அமிழ்தின் றன்மை யுடைய பழத்தைத்தான் நுகர்ந்து நெடுநாள் வாழாது ஔவைக்குக் கொடுத்த அதிகன், ஓரி என்னுங் குதிரையை யுடைய ஓரிவள்ளல்முதலாய வள்ளண்மாரை நாணச் செய்யுஞ் சிறந்த ஈகை யுடையவன். செங்கோலன்; சத்தி நிலயங்கண்டு வழிபாட்டிற் சிறந்தோன். புலவர் இரவலர் முதலாயினோரைத் தெய்வமாக் கொண்டு அவர் மனம் வெறுக்க வெறுக்கை யீவோன்; சுப்பிரமணியப் பெருமானையே குலதெய்வமாக்கொண்டு வழிபடுகின்றவன்.

கடைச் சங்கப் புலவராகிய இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பரிசில் விரும்பித் தன்மீது * "சிறுபாணாற்றுப் படை" என்னும் பிரபந்தம் பாடிச் சென்ற காலத்து, அவர்க்கு யானைக்கன்றும் வளநாடும் வேண்டும் பொருள்கள் பலவுங் கொடுத்தோன். அவர்போலப் பரிசில் பெற்ற புலவர் அளவிலரே. சுப்பிரமணியக் கடவுள் விரதங்கள் பல அநுட்டிப்பவன். எயிற் பட்டினம், ஆமூர், வேலூர், மூதூர் இலங்கை என்னும் இவ்விடங்களிலே முத்தமி ழாராய்ச்சிகளும், வீணைவல்லார் கந்தக் கடவுளின் றிருப்புகழ்களை யெல்லாம் அமைத்துப் பாடுதலும், புலவர் பிரசங்கங்களும், பாமாரி பொழிதலும், தானம், தவம், சிறப்பு, பூசனை யென்பனவும், சைவசித்தாந்த ஆராய்ச்சிகளும் இடையீடின்றி விளங்கின.

இங்ஙன நிகழ்தலாலே சேர சோழ பாண்டிய ரென்னு மூவேந்தர் நாடுகளும் வெறுமை யாயின. சுவர்க்க லோகம் போலுந் திவ்வியபோக்கியங்க ணிறைதலாலே இலங்கையைப் பொன்னகரம் என்றுபுகழ்ந்தனர்.

---

* இந்நூல் கடைச் சங்கத்தி லரங்கேற்றப் பட்டுப் பத்துப் பாட்டினொன்றாய்ச் சேர்க்கப்பட்டு விளங்குகின்றது. ஆசிரியர்நச்சினார்க்கினியர் உரைசெய்தனர். மூன்றாவது பாட்டாகவிளங்கி யகவற்பாவான் முடிந்து சொற்சுவை பொருட் சுவைகளுடன் இலங்குமெனக.

அதுகண்ட மூவேந்தரும் பொருமையுற்று இவனது நாடுகளைத் தன்வயமாக்கக் கருதிப் படையெடுத்து வருதல்கண்ட நல்லியக் கோடன், அதுபோது ஆமூர்க்க ணிருந்தா னாகலின், தன் சேனைகளை யணிவகுத்துப் பகைவருடன் போர் புரிந்தான். கோடன்றன் அமைச்சர்களுள் ஒருவன் பகைவர் பக்கஞ் சார்ந்து அந்தரங்களை யெல்லாஞ் சொன்னமையால் இவன் சேனைகள் தோற்றொழிந்தன. அதனானே நல்லியக் கோடன் மனம் வருந்தித் தன்மனைவியுடன் இரவிலே தெரியாது புறப்பட்டு வேலூர்க் கோட்டை சென்று, ஆங்கிருந்து தனக்கு உற்ற துணையாக நிற்கும் வேலாயுதப் பெருமானைத் துதித்து வந்தான்.

மானம் நின்று மனத்தை யலைப்ப, நல்லியக்கோடன் உளமிகவருந்தி, குகா! சரவணபவா! குமரா! கதிரை நாயகா! வல்லீபதே! தேவயானை காந்தா! தேவர்க்குவிண்ணுல கீந்த தேவதேவா! பக்த வற்சலா! பரமகுரவே! அடியரிடர் தீர்க்கும் அருட் பெருங்கடலே! இற்றைத் தினம் அடியேனுக்கு நல்லருள் புரியாயேல் என்னுயிர் விட நினைத்திருக்கின்றேன். அதுதேவரீர் அறிந்தருள்க, என்று பலவாறு துதித்து ஆங்குள்ள கேணியின் முழுகிப் புலராத வத்திர முடுத்து, அன்புடன் ஆறெழுத்து மந்திரத்தை யுச்சரித்துப் பூசித்தான். அன்றிரவு மூன்று சாமங்காறும் பூசித்து, நான்காஞ் சாமம் அயர்ந்து கண்படை கொண்டான்.

முருகக்கடவுள் அரசன்மீது இரக்க முற்று, ஒரு திருக்கரத்தில்வில்லும், மற்றோர் திருக்கரத்தில் வேலுந்தரித்தவராய், முக்கண்ணுங்கிரீடமுங் கடப்ப மாலையு முடையாராய், மயிலுஞ் சேவலும் பின்னாவர, அரசன் கனவிற் றோன்றித் திருவாய்மலர்ந்தருளும். "அன்பனே! அஞ்சற்க. அஞ்சற்க. நீ தோய்ந்துவருங் கேணிக்கணுள்ள புட்பத்தைக் கொய்து, நம் மந்திரங் கூறிப் பகைவரை நோக்கி யெறிவாயாக" வெனத் திருவாய்

மலர்ந்தருளி மறைந்தனர். அரசன் விழித் தெழுந்து வேலாயுதக் கடவுள் அளியனேன்றன் துன்பங்கண்டு விரைந்தருள் புரியு நிமித்தம் மயில்வாகனத்து மிவராது, உலகங்கள் தேடிக் காணாத் திருவடிகள் சேப்ப எழுந்தருளினரே! எளியனேன் அக்கொடுமைக் கென் செய்கேன்? என்று வருந்திக் கேணி சென்று தோய்ந்து அகமருடண ஸ்நான முதலிய சந்திக் கடன்களை முடித்து, சுப்பிரமணிய தியானம் புரிந்து, குக காயத்திரியைப் பன்முறைகூறி, அக்கேணிப் பூவைக் கொய்து ஷடக்ஷர மந்திரங் கூறி, வேற் படைக்கல மாகப் பாவித் தெறிந்தான்.

அது இறைவ னேந்திய வேலாயுதம் போற் சென்று, மூதண்டங்களும் நடுங்குமாறு ஆகாய வழியாய் விரைவின் ஏகி, எயிற் பட்டினம் ஆமூர், மூதூர் என்னு மிடங்களிலே வளைத்திருந்த சேனைவெள்ளங்களையும், வேலூர் நோக்கி வந்த படைக்கடலையும் ஒருசேர அழித்துச் சுவற்றிப் பகைவர் பக்கல் சார்ந்த மந்திரியின் றலையைக் கிள்ளிச் சென்று, நல்லியக் கோடனிடம் வந்து, அவனுடைய வஞ்சலிக்கரத்தி னமர்ந்தது. அரசன் எல்லையிலா ஆனந்த முற்றுப் புட்பம் வேலாகிச் சென்று பகைவரை யழித்த பொற்பு நோக்கி, அவ்வூர்க்கு வேலூர் எனப் பெயரிட்டுச் சுப்பிரமணி யாலயங் கண்டு, வேலாயுதப் பிரதிட்டை செய்து, தன் மனைவிக்கு நிகழ்ந்தனவெல்லா முரைதது, எயிற்பட்டின முதலிய தன்னூர்களிற் போயினான்.

ஆங்குப் பகைவர் சேனைகள் அழிந்ததும், மந்திரி தலை யுருண்டு கிடப்பதும், சேரர் முதலாய பகைமன்னர் அஞ்சி நாணங் கொண்டு தன்னடி வீழ்ந்து நட்பாயது மான செய்கைகளை யெல்லாங் கண்டு "இவையெல்லாம் வேணாதன்றிருவருளே" எனவியந்து உலகத்தைத் தன்னடிக் கீழ்ப்படுத்திச் செங்கோல் செலுத்தி, வேலூரையே முக்கிய இராச

தானியாகக் கொண்டு அரசுபுரிந்து வாழ்ந்து கந்தவேள் பதம் அடைந்தனன்.

நல்லியக் கோடன் என்னும் அரசனது அன்பின் மேலீட்டானே அவனுடைய பகைவரை யழித்தற்குக் கேணிப் புட்பத்தை வேலாக்கிக் காத்தருளிய பேராற்ற லுடையராகலாற் குமாரக்கடவுள் புட்ப சத்திர மூர்த்தியாயினர். புட்பம்=பூ, சத்திரம்=வேல். புட்பத்தை வேலாக்கிய மூர்த்தி யென்க.

பத்துப்பாட்டு - சிறுபாணாற்றுப் படை.

பொருபுன றரூஉம் போக்கரு மரபிற்
றொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளு
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வா
ளுறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்
களிற்றுத் தழும்பிருந்த கழறயங்கு திருந்தடிப்
பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்
சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வே னுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தின்.

ஆசிரியர் நச்சினார்க் கினியர் உரை.

"நல்லியக் கோடன் தன்பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழி பட்டவழி, அவன் இக்கேணியிற் பூவை வாங்கிப் பகைவரை யெறி யென்று கனவிற் கூறி, அதிற் பூவைத் தன் வேலாக நிருமித்ததோர் கதை கூறிற்று. இதனானே வேலூர் என்று பெயராயிற்று."

குமார தரிசனம்.

பொன்னக ரேறு மாவெனு மூரிற்
பொலிவுடன் றோன்றாநல் லியக்கோர்
டன்னுட னூமர்த் தலக்கணிற் பகைத்த
தரியல ரவரெலாஞ் சரிக்க
வன்னயங் கன்வி லுணர்த்திநீர்க் கேணி
நறுமலர் வேலினிற் செய்த
வன்னதை யுணர்ந்தே யானனை யடைந்தே
னறுமுகா புட்பசத் திரனே.

புட்ப சத்திர மூர்த்தயே நம:

இருபத்துநான்காவது,

பத்திர சத்தி மூர்த்தி.

தேவ விருடி யென்று அரிய நூல்களாற் புகழ்ந்து கூறப்பட்ட சிகண்டி என்னும் அருந்தவ முனிவர் தமிழ்மீது மிக்க ஆர்வ முற்றுச் செந்தமிழ்ப் பரமாசாரிய ராகிய சுப்பிர மணியக் கடவுளைத் தியானஞ் செய்து திருவேங்கட கிரியிற் றவஞ் செய்தார். சடாதாரும் நாகாபர ணரும் ஆகிய செவ்வேட் பெருமான், கசநாயகி எனப்படுந் தெய் வயானை யம்மையாரும், இலவலி நாயகி என்னும் வள்ளியம்மையா ரும் இருபாங்கரும் பொலிந்து விளங்க, மயில்வாக னருடனாய்த் தோன்றி யருளினர். சிகண்டி முனிவர் எழுந்து வணங்கித் துதி பாடி நின்றாராக, பெருமானார் இருடியைத் திருநோக்கம் புரிந்து, 'அறவோய்! நின் றவத்தை மெச்சினோம். நிற்கென் வேண்டுங் றுதி'' என்று திருவாய் மலர்ந் தருளினார். முனிவனார் கைம்முகிழ்த் கூறுவார். கதிரைநாதனே! அடியேற்குத் தமிழியல் யாவுஞ்

பத்திரசத்தி மூர்த்தி.

செவியறிவுறுத் தருளல் வேண்டும்'' என்ன; சுப்பிரமணியக் கடவுள் திருவாய் மலர்ந்தருள்வார். "இருடியே! தமிழ்மொழியி னியலெல் லாந் தெளியவேண்டு மேல், நமது மாணவன் அகத்தியன் பொதிய மலைக்க ணிருக்கின்றான். அவனிடஞ் செல்வையேற் செந்தமிழ் நல னெலாஞ் செவியறி வுறுத்துவான்'' என்று மறைந்தருளினார்.

சிகண்டி முனிவனார் அங்ஙனஞ் சென்று தீந்தமிழ்ப் பாராவா ரத்தைப் பருகி, அநாகுலன் என்னுந் தெய்வப் பாண்டியனுக்குந் திலோத்தமைக்கும் பிறந்த சயந்த குமாரன். இசையை யுணர்த்தியரு ளல் வேண்டு மென்று கேட்ப, அவன் அறிதற்காக இசைநுணுக்க மென்னும் நூலை யியற்றித் தெளிவித்தார். அகத்தியனா ராணையா லும், முனிவர் தம் விருப்பினாலும், கதிரைத்தல மென்னுங் கதிகா மந் தரிசித்தற்கு விரும்பி யதுநோக்கிச் செல்வா ராயினார். சிகண் டியார் போகுங் காலத்து அவர் சீடர்களுந் தரிசிக்க விரும்பினர. அவர் களையு முடன்கொண்டு பிரயாணஞ் செய்தனர். கதிரைத்தலத்திற்குச் சமீபமான வனத்திலே யானை யொன்று வந்து இவர்களை மறித்துத் தருக்களை முரித்து மதம்பொழிந்து கறுவிக் கொல்ல யத்தனித்தது.

சீடர்களும், மற்றைய பிரயாணிகளுஞ் சாலவும் அஞ்சி முனிவ ரடியிற் சேர்ந்து "தேவரீர் காத்தருள்க'' என்றனர். அதனை நோக்கிய முனிவரனார், கதிரை வேலாயுதக் கடவுளைத் தம்முள்ளத்திற் றியானி த்துச் சடக்கர மந்திர முரைத்துச் சமீபத்தி லிருந்த வெற்றிலை யொன்றைப் பிடுங்கித் தங்கையிலே யேந்தி,

"ஒருதுரும்பினாலே முன்னர்த் தேவர்களை யெல்லாம் வென் றது உண்மையாயின, அன்னவர் மைந்தராம அறுமுகக் கடவுள் திருவடியைப் பற்றுக் கோடாக வுடையேனானால், இவ்விலையே சென் றிக்கச் சென்று அழிக்குக'' என்று கூறி யடுத்தனர். அவ் வெற்

றிலை சுப்பிரமணியக் கடவுளின் திருவருளினாலே வேலாகச் சென்று யானையைக் கிழித்துச் சென்றது. யானை வீழ்ந்ததும் ஆங்கிருந்து ஓர் தேவ வுருத்தோன்றி முனிவரை வணங்கி, ஐயனே! அடியேன் ஐராவத என்னு மொரு கந்தருவ னாயிருந்தேன். பிருகற் பதியாம். வியாழ பகவான் சொற்றவறி நடந்தமையினாற் சாபம் பெற்று இப் புன் பிறவி யடைந்து நீண்ட காலம் வருத்த முற்றேன்; குகன் அடியவ ராகிய தேவரீர் விடுத்த வெற்றிலை, கதிரை வேலாயுதக் கடவுளின் திருவருளாலே வேலாக வந்து உடம்பை யுருவிச் சென்றமையா லென்சாபந் தீர்ந்து இத்தெய்வப் பழைய வடிவடைந்தேன். ஆகலாற் குகனடியார் மகிமை கூற வல்லார் யார்? என மொழிந்து சென்றது.

முனிவரும் மற்றையோரும் மிக்க வியப்படைந்து, பத்திர சத்தி மூர்த்தியே! மாணிக்க கங்கைப் பதியே! எனப் பரவிக் கதிரைத்தலஞ் சென்று பெருமானை வெளியி னின்றுந் தரிசித்து, அவர் திருவுருக்காண விரும்பி வரங் கிடப்ப, இறைவனார் தமது இரகசிய வடிவைக் காட்டத் தரிசித்து வேண்டிய வரம் பெற்றுத் தஞ்சீடர்களுடன் பொதிய மடைந்தார். இவ்வுண்மையா னன்றே புலவர் பலரும் வேற்படையை "இலைவேல்" எனவியந்து கூறுவாராயினர். தெரியாதார் "இலைத்தொழில் முற்றிய வேல், இலைபோலும் வேல்" எனவுரைப்பர். இவ் வற்புதத்தைப் புறச்சமயிகளாகிய சமணர் தாமுந் தமது நூலிலே வியந்து கூறியுள்ளார். பத்திரம்=இலை. சத்தி=வேல். அன்பர் துன்ப நீங்கும்படி அருள் சுரந்து வெற்றிலையை வேலாக்கியதனாற் குமாரக் கடவுள் பத்திர சத்தி மூர்த்தியாயினர்.

சாமவேதம் - தலவகார சாகை.

தஸ்மை த்ருணம் நிததாவேதத்தஹேதி ததுப
ப்ரேயாய | ஸர்வஜவேந தந்ந ஶஶாக தக்தும்

தவாவநிவ | வ ரூஷெதஹெ நதஷுமகம விஜ்ஞாதுமய
ஷெக ஹுக்ஷிதி ||

(இந்தத் துரும்பை உயா வெடுப்பாயாக வென்று அவ்வாயுதேவற்கு உரைத்து அவன் முன்னர்த் துரும்பை இயக்க மூர்த்திவைத்தனர். அதனையுயா வெடுக்குமாறு வாயு தன்முழுவேகத்துடன் கிட்டிச் சென்றான். அதையெடுத்தற்கு வன்மை யில்லானாய் இயக்க மூர்த்தியாகிய சிவ பெருமானை விட்டு நீங்கி, அவ்வுருவை யானுணரவல்ல னல்லேனென்று ஏனைய தேவர்கட்கு உரைத்தான்.)

கதிர்காம மான்மியம்.

சிகண்டிதமி ழார்வத்தாற் றவம்புரிய நாகத்தாற் றென்பாற்சேறி திகண்டவது முனிகூறு மெனவடைந்து தவன்சரணஞ் சிரமேற்சூடி யகண்டகலைக் கடலெல்லாந் தவாப்பருகி யிசைநுணுக்க மாற்றிக்காம நகண்டபுரி தரிசிப்பான் சீடரொடும் வரக்களிறு நணுகிற்றன்றே.

மதம்பிலிற்றிப் பிளிறியொரு தருமுரித்து மறிக்கமுனி மாட்சி யாறு, சதஞ்செபித்து முருகடியைத் தரித்துநிலைப் பெரியானை தனித் துக்கூறி, திதந்தனக்கு மிலையெறிய வேலாகிக் கிழித்ததுடனோர்ந்த சாற் றிப், பதஞ்செலவிங் கிவரிலைவேற் கடவுளோ வெனப்பொற்றிப் பதிந் தார்மன்னோ.

சீவக சிந்தாமணி–காந்தருவ தத்தையா ரிலம்பகம். (௩உ௩)

நல்லவை புரியும் மாந்தர் நாந்தகம் பிழைத்து வீழா
தல்லவை புரியு மாந்தர்க் கத்திர மொன்றும் வாயா
வெல்வதே குணத்தின் மிக்கார் வெற்றிலை விடினும் வேலா
மில்லையே வென்றி தீமை யிடன் கொண்ட மனத்தினோர்க்கே.

சிலப்பதிகாரம்-அடியார்க்கு நல்லார் உரை.

இனித் தேவவிருடி யாகிய குறுமுனிபாற் கேட்ட மாணாக்கர்பன்னிருவருட் சிகண்டி யென்னும் அருந்தவமுனி, இடைச் சங்கத்து அநாகுல னென்னுந் தெய்வப் பாண்டியன் தேரொடு விசும்பு செல்வோன், திலோத்தமை யென்னுந் தெய்வ மகளைக் கண்டு தேரிற் கூடின விடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவருஞ் சாரியாநிற்கத் தோன்றினமையிற் சாரகுமார னென அப்பெயர் பெற்ற குமரன் இசையறிதற்குச் செய்த இசைநுணுக்கமும்.

பத்திரசத்தி மூர்த்தயே நம:

இருபத்தைந்தாவது,

பிரணவாசல மூர்த்தி.

பிரணவ வடிவினரும், பிரணவப் பொருளா யிருப்பவரும், பிரணவ அதிபரும் ஆகிய சுப்பிரமணியப் பெருமான் பிரணவாசல மூர்த்தி ஆகிய விவரத்தையுந் தெரிப்பாம்.

ஒரு கற்பாந்தரத்திலே இருக்கு முதலிய நான்கு வேதங்களும் கலிகாலத்திற்கு அஞ்சிச் சிவபெருமானை நோக்கி அரிய தவத்தைச் செய்ய அவர் தோன்றி, அவைகளி னெண்ணப்படி, காஞ்சிமா நகர்க்குக் கிழக்கே ஒருபாங்கருள்ள அக்கினி மூலையில் திருப்பதமாக்கியெழுந்தருளினர். வேதாசலம் என்பதும், திருக்கழுக்குன்றம் என்பதும் அதுவே. வேதங்கள் இவ்வண்ணம் வரம்பெற்றதை யறிந்து, சிவப் பிரணவம், சத்திப் பிரணவம், சத்தியதீதப் பிரணவம், மாயாதீதப் பிரணவம், ஆதிப்பிரணவம், அநாதிப் பிரணவம், ஏகாதசப் பிரணவம், சகசம், சகசானந்தம், சகசானந்தாதீதம், அநந்தசோதி, அநந்தசோதியதீதம், அதிமகானந்தம்,



பிரணவாசலமூர்த்தி.

அதிமகானந்தாதீதம், அதிமகானந்தா தீதோத்தரை, நிர்மலம், நிர்மலா தீதம், சிற்பிரணவம், சிற்பிரணவாதீதம், மகாசிற்பிரணவம், மகாசிற்பிர ணவாதீதம், சிதானந்தம், சிதானந்தாதீதம், சிற்கூடம், சிற்கூடாதீதம் சித்வியோமம், சித்வியோமாதீதம், நித்தியம், நித்தியாதீதம், நிராமயம், நிராமயாதீதம், அநந்தபூதம் முதலிய பகுப்பினையுடைய பிரணவங்களெல் லாஞ் சேர்ந்து பசுபதியினிடஞ்சார்ந்து வணங்கி, கயிலாய பதே! கங்காத ரேச! வேதங்கள் எம்மை விடுத்துத் தவஞ்செய்து மலையாகும்வாமடைந் தன. எமக்கு இருப்பிடம் யாது என்று விண்ணப்பஞ் செய்தன. வேத முதல்வராகிய சிவபெருமான் அவற்றை நோக்கி, "நம்மைத் திருவுரு வாகவுடைய நங்குமரனிடஞ் செல்க" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பிரணவங்கள் வியாக்கிராசுர மர்த்தனராகிய முருகக் கடவுளை யடைந்து வணங்கித் துதித்து உற்றது கூறின. அவர் உத்தர வருளி யபடி யுத்தமா புரி, சமராபுரி முதலிய பெயர்களை யுடைய திருப் போரு ரின்கண் சென்று, வள்ளியா ரோடை என்னும் பொய்கையின் முழுகி, ஈசான திசையிலே தம்பெயரால் பிரணவா மிர்தம் எனவழங் குந் தீர்த்த மொன்றெடுத்து, அதனீரால் முருகனை யபிடேகித்துப் பூசித்தன. சண்முகக் கடவுள் சுயம்பு மூர்த்தத்தி னின்றுந் தோன்றி தம்மை வணங்கிய பிரணவத் தெய்வங்களைத் திருக்கடைக் கண் நோக்கஞ் செய்தருளி, இயந்திரமந்திரங்களால் நீவிர் சூழ்ந் திருத்தல் போல, இங்கு நமது பிற்பக்கத்திற்சூழ்ந்து மலைவடிவாக விருத்தி ரொன்று மலையாக்கி, அதனுச்சியில் யாமும் இடைவிடாது வீற்றிருக் கின்றேம். உருத்திர கோடி என்னுந் தலத்தில் மலைவடிவாக விளங் கும் வேதங்கள் உபநிடதங்க ளோடும் மந்திர சந்தசுக ளோடும் ஈரேயா றும் இவண் வந்து நம்மைச் சேவிக்கும். திருக் கழுக்குன்ற மாகிய

வேதசைலத்தைத் தரிசிப்போர் நம்மை முதல் வணங்கிப்பின்னர் அதனை வணங்குவாராயின் அவர் பிறவித் துன்பங்களை நீக்கி நம்முடன் இரண்டறக் கலக்கும் பேரின்பமாகிய அத்துவிதானந்த வாழ்க்கையை யளிப்பேம் என்றும் வரமளித்தார்.

தந்தையாராகிய் சிவபெருமான் வேதங்களை மலையாக்கி யமர, மைந்தராகிய தாம், வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும் மந்திரங்களுக்கும், ஏனைய உலகங்கட்கும் முதலாகிய பிரணவத்தை மலைவடிவாக்கி வீற்றிருந் தருளலாற் சரவணோற்பவ சுவாமி பிரணவாசல மூர்த்தியாயினர்.

* திருப்போரூர்ப் புராணம்.

யுத்த மாபுரி யுயர்சம ராபுரி போரூர்
யுத்த வான்கிரிப் பதிபிர ணவபுர மொருவா
வைத்த வின்னன பெயர்கொளுந் தவமிது வாய்மை
யத்த லத்துறை தீர்த்தமொன் றதன்வளங் கேட்டி.

திருப்போரூர்த்தல வெண்பா

பிரணவங்க ளீசனருட் பேச்சானே போரூர்க்
கரணங்கள் சான்றே கடுநோன்—பாணமுடன்
செய்யச்செவ் வேண்மலையிற் செய்தத்திற் சுக்கிலமா
வுய்தற் கிருக்கு முவண்.

பிரணவாசல மூர்த்தயே நம:

---

* இக் காலத்துப் பிரணவாசலம் என்பது, திருப்போரூர் என வழங்கப்படுகின்றது. போரூர், சமராபுரி, யுத்தமாபுரி, தாரகபுரம், பிரணவபுரம் என்பன அதன் பரியாயப்பெயர்கள் ஆகும். இப்பிரணவ மலைக்கட் சிவபெருமானும் வீற்றிருக்கின்றார். இதுசெங்கற்பட்டுச் சில்லாவிலே திருக்கழுக் குன்றத்திற்குச் சமீபத்திலுள்ளது. திருப்புகழ் பெற்ற தலங்களுள் ஒன்று.

இருபத்தாறாவது,

இலிங்க தலேச்சுர மூர்த்தி.

அன்பர்கள் சோபான முறைப்படி யநுட்டித்து மேலதாயுள்ள நிருமல விலிங்கத்தில் வந்தகாலை அவர்க்கு முத்தியுண்டெனை ஆகமங்கள்கூறுகிற்கும். அவ்விலிங்க தலங்கள் நூற்றொன்றாகும். இவைமுத்தித் தலத்திற்குக் காரணமாகும். விபூதித்தலம், உருத்திராக்கத்தலம், பஞ்சாக்கர தலம், பத்தத் தலம், உபயத் தலம், திரிவித சம்பத்துத்தலம், சதுர்விசார தலம், உபாதித்தலம், நிருபாதித்தலம், சகசத்தலம், மகேசுரத்தலம், இலிங்க நிட்டைத்தலம், பூர்வாசரிய நிரசனத்தலம், துவித நிரசனத்தலம், ஆவாகன நிரசனத்தலம், அட்டமூர்த்தி நிரசனத்தலம், சர்வகத நிரசனத் தலம், சிவசெகதலம், பக்த தேகித்தலம், பிரசாதத்தலம், குருமகாத்மிய தலம், மகேசலிங்க மகாத்மியதலம், மகேச சங்கம மகாத்மிய தலம், பக்த மகாத்மியதலம், சரணமகாத்மியதலம், பிரசாதமகாத்மியதலம், பிராண லிங்கத்தலம், பிராணலிங்கார்ச்சனைத்தலம், சிவயோகசமாதித்தலம், இலிங்கநிசத்தலம், அங்கலிங்கதலம், சரணத்தலம், தாமதநிரசனத்தலம், நிர்த்தேசத்தலம், சீலசம்பாதனத்தலம், அயிக்கத்தலம், அத்துவிதானந்த வயிக்கத்தலம், சர்வாசாரசம்பத்துத்தலம், ஏகபாசனத்தலம், சகபோசனத் தலம், தீட்சாகுருத்தலம், சிட்சாகுருத்தலம், ஞானகுருத்தலம், கிரியா லிங்கத்தலம், பாவலிங்கதலம், ஞானலிங்கதலம், பக்தசுயதலம், பக்த சரத்தலம், பக்தபரதலம், பக்தலிங்கதலம், கிரியாகமத்தலம் மகேசபாவக தலம், மகேசுரமெய்ஞ்ஞானதலம், மகேசசகாயதலம், மகேசாகாயதலம், மகேசபரகாயத்தலம், தருமாசாரதலம், பாவாசாரதலம், ஞானசாரதலம், பிரசாதிகாயா நுக்கிரகதலம், இந்திரியாநுக்கிரகதலம், பிராணநுக்கிரக தலம், பிரசாதிகாயார்ப்பிதத்தலம், பிரசாதி காணார்ப்பிதத்தலம், பிரசாதி



பிரணவாசல மூர்த்தி.

௧அ௮ இலிங்க தலேச்சுர மூர்த்தி.

த்தலம், பிரசாதிபாவார்ப்பிதத்தலம், சுேருவைத்தலம், பிரசாதிசேவியத் தலம், பிராணலிங்கதலம், பிராணலிங்கி யந்தராத்மதலம், பிராணலிங்கிப் பரமான்மதலம், பிராணலிங்கி நிர்த்தோன்மதலம், பிராணலிங்கிநிர்ப்பாவ காத்ம தலம், பிராணலிங்கி கட்டாகமதலம், ஆதிப்பிரசாதித்தலம், அந்திய பிரசாதிலிங்கதலம், தீட்சாபாதோதகத்தலம்,அங்குட்டபாததீர்த்தத்தலம், சரணசிட்சாபாதோதகத்தலம், சரணஞானபாதோதகத்தலம், கிரியாநிட் டக்கித்தலம், சரணபாவநிட்பக்தித்தலம், சரணநிட்பக்தித்தலம், சரண பிண்டாகாசத்தலம், சரணவிந்தா காசத்தலம், மகதாகாசத்தலம், கிரியாப் பிர காசத்தலம், பாவப்பிரகாசதலம், ஞானப்பிரகாசதலம், சுவீகிர்தப்பிர காசத்தலம், அயிக்க சிட்டோதனத்தலம், சராசரத் தலம், அயிக்க பாண் டத்தலம், அயிக்கபாசனத்தலம், அயிக்க அங்கலேபனத்தலம், அயிக்க சுபாரஞ்சத்தலம், அயிக்கபாவாபாவலயத்தலம், அயிக்கஞான சூனியத் தலம், சூனியத்தலம் என்பனவாம் இவற்றின் விரிவெல்லாம், வீராக மம், இலிங்க சோபானம், மதங்காகமம் என்னு மிவற்றிற் பரக்கக் காண்க.

இவைகளின் நின்றுநின்று மேற்போயகாலத்து முத்தியுண்டாம். இவைகள் எல்லாம், பாலிங்கதலம், பக்தலிங்கதலம், மகேசலிங்கதலம், பிரசாதிலிங்கதலம், பிராணலிங்கிதலம், அங்கலிங்க தலம் என்னும் ஆறி னுளடங்கும். அவை ஆறு இலிங்கத்தினும், அவை சாதாக்கியம்ஆறினும், அவை கலைக ளாறினும், அவை சத்திகள் ஆறினும், அச்சத்திகள் முரு கக்கடவுளின் ஆறுதிருமுகங்களினும் அடங்குமெனக.

இங்ஙனம் முத்தியுபாய மாகிய சத்தி, கலை, சாதாக்கியம், இலிங் கம், அறுதலம் என்பவற்றான் நூற்றொரு தலங்களையுங் கொடுத்துத் திரு வடிப் பேறுதவும் ஈச்சுராய் விளங்கலின், இலிங்க தலேச்சுர மூர்த்தி யாயினர்.

இலிங்காமிர்தம்.

ஞூலி ரண்டு முகத்திலுஞ் சத்திகண்
முன்னர்த் தோன்றக் கலைகள் சதாக்கிய
மாவி ருந்துரு வாகு மிலிங்கமவ்
வைவற்று நூற்றொரு மெய்த்தலங் காணுமே
தேவி ருந்த வவைதரி சித்தபோர்
செப்பி லிங்கத் திலிங்கம தாவரே
கூவி ருந்த தலமிவை கொள்ளவே
கூறு மாகம முண்மையிர் கொள்விரே.

இலிங்க தலேச்சுர மூர்த்தயே நம:

இருபத்தேழாவது,

முட்டைநாமக் குமார மூர்த்தி.

* சோழ நாட்டிலே சைவ வேளாள குலத்திலே பிறந்து, திருச்செங்காட்டங் கோட்டத் துறையூர்சேர்ந்து, முத்தமிழிலும் வல்லாராய், சிவபெருமான் ஒருவரையன்றி வேறெவரையும் பாடாது சிவபத்தியின் முதிர்ந்து விளங்கினமையாற் சிவகவி எனப் பெயரிய ஒரு புலவர் இருந்தார். அவரிடத்து ஓர் குகனடியார்சென்று, நல்லிசைப் புலவீர்! வேலாயுதக் கடவுள் மீது ஒரு பிரபந்தம் பாடித் தந்தருள்க என்றார் சிவகவியாகிய **பொய்யா மொழிப் புலவர்** "ஐய! சிவபெருமானை யன்றி எங்நாவானது மறந்தும் பிறரைக் கூறாது. சிவனாகிய சேவற்கு ஒருசிறுகுஞ்சு போன்ற அவனை நங் நாப் பாடாது" என்றார். அடியவர் வருந்தி, "தங்நாக்

---

* தென்பாண்டி நாட்டிலே யுள்ள பொய்யாமொழி என்னும் ஊர்ப் பிறந்தார் என்றும், அவ்வூர்ப் பெயர் முன்வைத்துப் பொய்யா மொழிப் புலவர் என வழங்கப்பட்டாரென்று முரைப்பாரு முளர். ',பொய்யா! மொழி" எனவும். "குஞ்சைப் பாடமாட்டேன் என்றது, பொய் ஆம் மொழி எனவுஞ் சுப்பிரமணியப் பெருமான் உரைத்தமையால் யிந்தபெய ரென்பது பலர் கருத்து.



முட்டைநாமக்குமாரமூர்த்தி.

குஞ்சினுக்கும் பாடும், கூழுக்கும்பாடும்" என்று, பெருமான் றிருக்கோ யிற் சந்நிதி சென்று, தந்தூஷணத்தை யடியனேன் பொறுக்கவில்லேன். புலவன் அகங்காரத்தைப் போக்கியருளல் வேண்டு மென்று செவ்வேளை யிரந்தார். பெருமானுர் அங்ஙனமாக வென்றறித்துச், சிவகவியார்க்குமிடி யைப் பெருக்கினுர். புலவர்,

மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப் பறந்து போம்.

என்ற முதுமொழிப்படி, வறுமை வரவாப் பெரிதும் வருந்தி, தஞ்சை மா நகரத்தி லரசு புரிந்த இருகை படைத்த கற்பக தருவைப்போன்ற சந்திர வாணன் என்னும் அரசன் வண்புகழையோர் அகப் பொருட்படுத் திக் கோவைபாடி யரங்கேற்றினர் அரசன் ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ் வோர் தேங்காயளவு பொன்கொடுத்து வேண்டிய பெரும்பொருள்களும் பரிசாக அளிக்கப் பெற்று, வறியார்க்கு மிகுதியாகக் கொடுத்து, எஞ்சிய சிறிது பகுதியைக் கைக்கொண்டு வழிநடந்து வரும்போது, மனுடர் சஞ் சார மில்லாத அருள் சுர மெனப்படும் பாலை நிலம் நேர்ந்தது. ஆங்கு வெயில் வாதனை யாற்ருது விரைவுடன் நடக்கையில்: குமாரக்கடவுள் அவரைத் தடுத்தாட் கொள்ள விரும்பி, திருக்கரத்திலே வேலும் வில்லும் அம்புகளும் கொண்டு, காலிற் றொடுதோன் மாட்டிக் கார்மேகம்போல வேகமா நடந்து ஆர்ப்பரித்து ஓர் வேடராக வந்தார். புலவர் கண்டு நடு நடுங்கி, "அந்தோ! பொருளாசை கொண்டுவந்து, பெறற்கரிய உயிரை யும் இழக்க நேர்ந்ததே. பரமபதீ! நின்னையன்றிப் பாடாத விரதத்தை யழித்து நிருபனைப் பாடினமையால் வந்ததுன்பமோ? என்செய்வே" னென்று நடக்குங்கால், வேடனுர், அடா! நில்லு நில்லு என்றுவிளித்தார்.

அதுகேட்டு இடிகேட்ட சர்ப்பம்போல் ஏங்கி யுயிரிழப்பார்போல நின்றார். வேடமூர்த்தி சமீபித்து நீ யாவன் என வினவ, புலவன் என்றார். குமார சுவாமியாங் கிராத மூர்த்தி நகைத்து, புலவன் என்னும் பெயர் நங்குறிச் சித் தெய்வமாகிய செவ்வேடனக்கு ஏற்குமன்றி வேறியாவர்க்கு அடுக் கும்? ஒரு சிறிது அத்தெய்வத்தின் மாணவன் ஆகிய அகத்தியற்குஞ் சேறும். நீ புலவன் என்று மொழிவ தெமக்கு வியப்பே. ஆயினும்நினக் குக் கவி வருமோ வென்றார்.

புலவனார் அவ்வார்த்தைகளைக் கேட்டுப் பயநீங்கி விம்மிதமுற்று, இத்தகைய வேடன் பொருளைக் கவர்வானன்றி யுயிரைப் பருகான் எனத் தேறி, உன் பெயர் என்னென்றார். என்பெயர் முட்டை. அப்பெயரும், இந்நிலமும், சுரம் போக்குத் துறையும் அமைய வெண்பாவிற் "பொன் போல்" என்று தொடங்கி முடித்தியென்றார். பொய்யாமொழிப்புலவர் உடனே,

பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
யென்பேதை செல்லற் கியைந்தனளே—மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு.

எனப்பாடினர். வேட மூர்த்தியாம் முட்டை நகைத்து, * புலவன் என்பது இடையினில் ஆயிற்று. நின்கவியிற் சொற்குற்றந் துவளினும், மிகையாம் பொருட் குற்ற மொன்றனைக் காட்டுகின்றாம். சதுரக்கள்ளிச் செடிகள் எரிந்து பொறிபறக்கும் பெருநெருப்புமிக்க காட்டினிடத்தே, சிறு நெருப்பிற்குத் தானும் வெந்து சாம்பராகும் வேலமரத்து முட்கள்

* புலவன் என்பது இடையின் ல் ஆயிற்று, எனக் கொண்டு, புல்ல வன் ஆனாய் எனவும், நடுவிலே அப்புலமைத் தன்மை இலதாயிற்று என வும் வேறுபொருள்கொளிக்கின்றது. இக்கதையைப் புலவர் புராணத் தாசிரியர் சிறிது பேதமுறச் சொல்வர்.

லைத்தல் யாங்ஙனம்? ஆதலாற் பொய்யாம் மொழிப் புலவ னுயினே. நிற்க, யாம் பாடு கின்றேம். அதன்கட் குற்றமுளதாயிற் றெரித்தி. அக் கவியில் நின்பெயரும், பாலை நிலவருணனைகளும், உரிப்பொருளும், இரங்கற்றுறையும் அமைவதன்றி, நீ குற்றத்துட்டவறி, விரதத்திற்றவறி "விழுந்தது போல்" என்னுங் கூட்டுமமையப் பாடுகின்றேம் என்று,

விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழி
னெழுந்து சுடர்சுடு மென்றுஞ்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்திற் பெய்வளையுஞ் சென்றனவே
பொய்யா மொழிபகைஞர் போல்.

என்னுந் திருவெண்பாவைச் சொல்லினர். பொய்யாமொழிப் புலவன் நீயா, அல்லது யாமா எனக் கேட்டனர். புலவனர் என்று மடை யாத அதிவியப்புந் திகிலு மடைந்து வேடனை வணங்கினர். வேடர், புலவ வருந்தலை என்று தமது வடிவத்தைக் காட்டி, அன்றொரு நாள் நமது அடியவன் துதிகூறுக என்று கேட்ட காலத்து, "கோழியைப் பாடிய வாயாற் குஞ்சினைப் பாடேம்"என்று இழித்தனை யன்றே! இப்போது கோழியினுங் குஞ்சினும் முட்டை பெரிதாயிற்றே? யாமுஞ் சிவமும் வேறல்லேம். எம்மையும் அவரையும் புராணதிகள் மைந்தன் றந்தையெனக் கூறுவது உபசாரமே. சிவாகம வேதங்களி னுண்மைப் பொரு ளறியாமையால் எம்மை வேருக எண்ணினை. சித்தாந்த வுண்மைகளைத் தெளிந்துய்தி அகத்தியனிடத்து, என்று ஓதி மறைந்தருளினர். புலவர் பொதியஞ்சென்று தவங்கிடந்து அகத்திய முனிவருழை யவ்வுண்மை விளங்கப் பெற்றுக் குகேசன் றிருவருளா டைந்தார்.

"குஞ்சினைப்பாடேன்" என்று இழித்த புலவரைப் பொய்யா கும் மொழியாக்க வேடவடிவுகொண்டு, முட்டையென்னும் பெயர் சொல்லிப் பாடுவித்து ஆட்கொண்டமையால் முட்டைநாமக் குமாரமூர் த்தியென்று உலகங் கூறுநிற்கும்.

முட்டை நாமக் குமாரமூர்த்தி.

பட்டினத்துப் பிள்ளையார் புராணம்.

வாரந் தான்வரு மமரிட மெனுப்பொடித் தளற்றி
வாரந் தான்வரெ னுளங்கனீ ரெனவசி வலையன்
வாரந் தான்வரு பாடல்சொல் லவன்றன்மேன் மலர்வாய்
வாரந் தான்வரப் பெற்றவன் வளவனுட் டவனே.

புலவர் புராணம்.

பொருவாதுயர் சுவைதோயகப் பொருட்கோவைசொ லிடலு
மொருபாடலுக் கம்பொன்னொரு தேங்காயள வொப்பப்
பெருகார்வமொ டுதவிப்பிற பொருளும்பல பெய்தா
னருகோர்துணை யில்லானவை கொடுவீறிய ணைந்தான்.

ஆயினென்பெயர் முட்டையா மென்மிசை
யருந்தமிழ்க்கவியொன்று
தீயினுங்கொடிதாயவிப்பாலையின்
றிறத்தொடுபகரென்றான்
வாயியம்புமுன்பொன்புரைகள்ளியின்
வன்பொறியுருங்காணிற்
போயினுள்சிறுபேதைவென்முட்டையைப்
போற்றலாரெனவந்தோ.

குஞ்சின்மேற்கவிபாடிடேனென்றதிற்
குறியமுட்டையைப்பாடற்
கொஞ்சிலானதுகேட்டுளநாணிமற்
றொருவரின்மையையுன்னி.

வேடன்பாடல்கேட்டப்பெரும்புலவன்றான்
வெட்கமிக்குறும்வேலை
யாடன்மாமயிற்பரியிற்றன்கோலமா
யரிவையரிருவோருங்
கூடவைகுறதேவர்கள்சூழ்தரக்
குலவுசேவையளித்தான்.

முட்டை நாமக் குமார மூர்த்தயே நம:

இருபத்தெட்டாவது,

சகத்திரான்ம பரிபாலன மூர்த்தி.

மதுரையிலே * கணக்காயன் மகனார் நக்கீரர் என்பார், சரசுவதியி னம்ச மாகலாலே கலைகளில் மாபெரும் புலவரா யிருந்தார். முச்சங்கத் துட் டிருவாலவாய்க்கணிருந்த கடைச்சங்கம் உண்டாயபோது சங்கப்பல கையில் முதன் முதல் ஏறி வீற்றிருந்தவர் இவரே. சங்கப் புலவர் நாற் பத் தொன்பதின்மருள் நடு நாயகமாக விளங்கினாரும் இவரே. இத்த கைப் பெருந்தகைப் புலவர், திருவாலவாயடிகளாற் செய்தருளப்பெற்ற,

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ வறியும் பூவே.

என்னும் திருமுகப் பாசுரத்திலே குற்றங்கூறி, ஆலவாய்க் கடவுளுடன் நேர் நின்று வாதித்தார். பெருமானார். "இவனுக் கிலக்கணஞ் செவ் வனே தெரிந்தில" தென்று, அகத்திய முனிவரை யழைத்துப் போதிப்பித்தருளினார். ஆகவே யிந்நக்கீரனார் அகத்தியனார் மாணாக்கரு மாவர். அகத்திய ருபதேசங் கேட்ட வக்கணமே தாம் வாதித்தன வெல்லாம் வெறுமையன வென்றுணர்ந்து பரிவுற்றுச் சிவபெருமான் மீது அன்பு செய்து வழிபடுவா ராயினார். ஒருநாள் மதுரைக்குச சமீபமானதும், குமாரக்கடவுளின் ஆறு திருப்படை வீடுகளு ளொன்றா யதும், தெய்வயானை யம்மையாரை இறையவன் றிருமணஞ் செய்த

---

* கணக்காயர்—உபாத்தியாயர். மதுரையிலே நெய்த னிலத்தில் ஒருமாவனுக்கு மகனாகப்பிறந்தார் என்றும், பாலப்பன் என்பது அவரது பிள்ளைத் திருநாம மென்றும், "சங்கறுப்ப தெங்கள்குலம்" என்னும் பாடலை நக்கீரனார் பாடியதாகக் கொண்டு தீர்மானிக்கப் படுமென்றுங் கூறுவார் சிலர். சங்க நூல்களுள் இன்னவற்றிற்கு ஆதாரங் காணேம்.

சகத்திரான்ம பரிபாலன மூர்த்தி.

தலமானதும், சிபிச் சக்கிரவர்த்தி, அரிச்சந்திரன் முதலாயினோரால் பூசிக்கப்பட்டது மாகிய திருப்பரங்குன்றந் தெய்வத்தைத் தரிசிப்பான் என்றார். ஆங்குள்ள சரவணப் பொய்கையினீராடி நித்திய கரும முடித்து, பஞ்சாக்கரப் பாறை யென்னும் பெயருடைத்தாய் அரசமர நிழற்கணிருந்த வத்தலக்கணிருந்து பஞ்சாக்கர செபஞ் செய்யா நின்றார். * சீகாளத்தி புராணம் ஞானப் பூங்கோதை யம்மையாராந் தேவியார் திருக்கூந்தலுக்கும் இயற்கை வாசனை யில்லை யென்று உரைத்தமையினாலே நக்கீரனார்க்குக் குஷ்ட நோய்வந்தது. அது கைலைதரிசித்தாற் றீருமென்று சிவனாருரைத்த வாற்றாற் கைலைக் கேகுவாராய் இமய மலைத் தடாகத்தி னருகுள்ள ஆலமரத்தி னீழலி லுட்கார்ந்தா ரென்று கூறும்.

இங்ஙனஞ் செபஞ் செய்து சிவபூசை இயற்றுங் காலத்தே, சததளத்தாமரை மலர்கள் விளங்குஞ் சரவணப் பொய்கைக் கரையிலேயுள்ள அரச மரத்திலோர் விசேட முண்டு. என்னை யெனில், அதன் இலை கீழே விழுங்கால், நீரிலே வீழின் மீனாகவும், நிலத்திலே வீழிற் பறவையாகவும் போதல் வழக்கம். அற்றைப் போது வீழ்ந்த இலையோ பாதி நிலத்தினும், மற்றோர் பாதி நீரினும் விழுந்தமையால் ஓரதிசயங் காணப்பட்டது. என்னை? நீரில் வீழ்ந்தது மீனாகி நீர்க்குட் செல்வான் இழுப்ப, நிலத்தில் வீழ்ந்த மற்றைப் பாதி பருந்தாகி மேலே பறப்பான் இழுப்ப விரண்டும் இன்னற்படுவதை யறிந்த நக்கீரனார் பார்த்து மனமுருகினார். அவற்றின் துன்பத்தைக் களைதல் மேலான புண்ணிய மாகு மென்று நினைத்துத் தாஞ் செய்திருந்த பூசையை

---

* இந் நக்கீரர் சரிதத்தைச் சீகாளத்தி புராணம், திருப்பரங்கிரிப் புராணம், புலவர்புராணம் என்பன பலவேறுபாடுறப் பகர்ந்தன. நக்கீரர் காளத்திக்குத் தங்குட்டந் தீர்க்கச்சென்ற வழியினிது சேர்ந்த தென்றலு மொன்று. திருப்பரங்கிரிப்புராணம் நிலத்தில் வீழ்வது பறவையாமென்ன, புலவர் புராணத்தார் ஒந்தியென்றார். அது "அங்குதிர்ந்த வாசிலை யொன்றுநீர்ப் - பங்குபாதி கரையினிற் பாதியா - யுங்கு மீனுடனோந்தியு மாகியே - யிங்குமங்கு மிழுக்கைகண் டானரோ" என்ற செய்யுளாற்றெறிக. புலவர் புராணத்தா ரிங்ஙனம் பல வேறு பாடுரைத்தன்னது கருதற்க.

முடிக்காது இடையே யெழுந்து சென்று பறவை வேறாகவும், மீன் வேறாகவுஞ் செல்லுமாறு கூறாக்கி வாராநின்றார்.

அதற்கு முன்னரே யிவர் போற் சிவபூசையி னின்றுந் தவறினார் தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பதின்மரை யெடுத்துத் தம்மலைக் குகையுள் அடைத்து, உண்ணுதற்கு இன்னும் ஒருவர் குறைந்தமையால், குறித்த அரசினிலையை நிலத்திலும் நீரிலும் பாதிபாதியா விழுமாறு கிள்ளியெறிந்து நக்கீரரைத் தூக்குதற்காக விருந்த * அண்டாபரணன், உக்கிரன் என்னும் பூதங்கள் அவரை யெடுத்துச் சென்று தம் மலைக் குகையி னுள்ளே வைத்து, நீராடுவான் சென்றன. அக்குகையினுள்ளே யமர்ந்த வவரெல்லாம் ஏக்கமுற்று நக்கீரரிடம் வந்து சூழ்ந்து வைவாராயினர். பாவியே! எமன் போல இவண் வந்தனையே. இந்நான்காறும் பூதங்களாற் கொடுக்கப்பட்ட சீரிய வுணவுகளை யெல்லாம் விலாப் புடைக்க நன்கு புசித்து மகிழ்வுற்றிருந்தேம். இற்றைத்தினம் நங்களுயிரைப் பறிக்கவந்தனையே. ஐயகோ! என் செய்கேம். பூதங்களோ நீராடுவான் குகையை யடைத்துச் சென்றன. வந்தது மொருசேர விழுங்குமே யென்று வருந்தா நின்றனர்.

நக்கீரர் குமாரக் கடவுளை நினைந்து அன்புடன் றுதிக்கத் தொடங்கி யவர்களைப் பார்த்துச் சொல்வார். அன்பர்களே! ஒன்றற்கும் சிவிரைந்சற்க. திருவருளானே யறுமுகப்பரம் பொருளை யறியலாம். ஆகம அநுமானுதிகளானுந் தெருண்டு வாழலாம். ஆனந்தானுபவமடையலாம். மலமாயா கன்மங்களா னுண்டாகுந் துன்பங்களையும் போக்கலாம். குமார பக்தர்களாகிய நுங்களுடன் கூடும் வாழ்வைப் பெற்றேம். நுங்களையும் உயிர் பிழைக்கச் செய்வே மென்று குகபரப் பிரமத்தின்மேற் றுதிகூறத் தொடங்கினர். பிரமர், விட்டுணு, காலருத்திரர் என்னு மூவரையும் அதிட்டித்துச் செய்யும் முத்தொழி

லேயு முடையது உலகம். தூலகிருத்தியத்தையிவர் அதிட்டான வாயி லாற்செய்து, சூக்கும கிருத்தியத்தைத் தாமாகவே செய்து ஞான, தான, கிருத்திய தார தம்மியங்களாற் பலவகைப்பட விளங்கும் பரமபதி உலகப் பொருள்க ளெல்லா முவப்பவருள்செயற் பால ரென்னுங் கருத்தை யமைத்து "உலகமுவப்ப" எனத் தொடங்கி, முதலாவது படைவீடு திருப்பரங் குன்றாகக் கொண்டு துதித்து, மற்றைய திருச் சீரலைவாய, திருவாவி னன்குடி, திருவேரகம், பழமுதிர் சோலை, குன்று தொருடல் என்னுந் திருத்தலங்களைவைத்து அகவற்பாவாற் றுதித்து முற்றி, இறுதி யில் வெண்பாக்களுங் கூறினர். அவை வருமாறு:—

நேரிசை வெண்பா.

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையா—யென்று
மிளையா யழகியா யேறூர்ந்தா னேறே
யுளையா யென்னுள்ளத் துறை. (க)

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவு
மன்றங்கமரிடர் தீர்த்ததுவு—மின்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல். (உ)

வீரவே றாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வே டிருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை. (௩)

இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்கும்
முன்ன வில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். (ச)

உன்னை யொழிய வொருவரையு நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. (௫)

அஞ்சுமுகந் தோன்றி லாறுமுகந் தோன்றும்
* வெஞ்சமரந் தோன்றில் வேலுண்டாம்—நெஞ்சி
லொருகா னினைக்கி லிருகாலுந் தோன்று
முருகாவென் றோதுவார் முன். (௬)

முருகனே செந்தின் முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
றம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுது
நம்பியே கைதொழுவே னான். (௭)

* காக்கக் கடவியநீ காவா திருந்தக்கா
லார்க்குப் பரமா மறுமுகவா—பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
விடங்கா ணிரங்கா யினி. (௮)

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான் றன்பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காம
லாசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். (௯)

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால்—முற்கோல
மாமுகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும். (௧0)

என முடித்துத் திரு முருகாற்றுப் படை யென்னுந் திவ்விய பிரபந்தத்தைத் தத்துவங் கடந்த தனிப்பரம் பொருளாகிய கந்தழி யென்னுங் கந்தக் கடவுளின் றிருவடிமீது சாத்தினார்.

முருகக் கடவுள் மயில்வாகனு ரூடரா யெழுந்தருளி, வேற்படையை விடுத்து, அம்மலைக்கண்ணே யின்று மிக் கலியுகத்தோர் காணும்படி பாறையைக் கிழித்து, பூதங்களையு மோட்டிக் கீரவருக வென்றருளினர். "பூதம் உண்ண வந்த போது வேலாயுதக் கடவுள் அதனைத் தண்டத்தா லடித்துக் கொன்று மலையையு மோதிப் பிளந்து வெளிப்படுத்தினர்" என்று திருக் காளத்தி புராணங் கூறிற்று. * நக்கீரரும் மற்றையோரும் பேரானந்தத்துடன் வெளிப் போந்து ஆடினர்; பாடினர். பிரம விட்டுணுக்க ளிருபக்கத்தும் துதித்து நிற்ப, பூத கணங்கள் புடைசூழ, தேவர் முனிவர் வணங்கி வணங்கி யெழ, மயில்வாகனத்துத் தேவிமார் சகிதமாய் விளங்கியருளிய சுப்பிரமணியப் பெருமானுரை நக்கீரர் தரிசித்துப் பரவச மடைந்தார். பெருமானுர் நக்கீரனுரைத் திரு நோக்கஞ் செய்து, "அன்பனே! நினக்குஎன் வேண்டும். கூறுதி தருதும்" என்ன, நக்கீரர் கூறுவார். "தேவரீர் திருவருளையடைந்த வெற்கு இனிவேண்டப் பெறுவதூஉ மொன்றுளதோ, ஆயினும் அன்பர் பலர் காசியிற் கங்கையை யீண்டழைப்பித் தருளல் வேண்டு மென்றனர். அதனை யங்ஙன மழைப்பித்துத் தரல்வேண்டு" மென்று பிரார்த்தித்தார். குகபரஞ்சுடர் அங்ஙனேயழைப்பித்து மலையி னுச்சியிலே காட்டி, கங்கை யென்பதற்கு அடையாளமாக ஐவகை நிறமுடைய தேளி மீன்கள் இருத்தலையுங்காட்டி மறைந் தருளினுர். நக்கீரரும் பிறரும் அதன்கண் தோய்ந்து அவனைப் பூசித்திருந்தனர். வேலாற் பிளக்கப்பட்ட பாறை இன்றும் வேலெறிந்த பாறை யெனச் சொல்ல இருக்கின்றது.

---

* "வெஞ்சமரி லஞ்சலென வேரேன்றும்" எனவும் பாடம். சில பிரதிகளிலே ஏழுசெய்யுள்களும், சிலவற்றிலே இப்பத்துச் செய்யுள்களுங் காணப்பட்டமையால் அவைகளையுங் காட்டினும். இத்திரு முருகாற் றுப்படை பத்துப் பாட்டுள் முதலாவதாய்ச் சேர்க்கப்பட்டது. பதினோரந் திருமுறைத் திருவருட் பாக்களுள்ளு மொன்ருக நம்பியாண்டார் நம்பிகளான் வகுக்கப்பட்டது. இதற்கு ஆசிரியர் நச்சினுர்க்கினியருரைசெய்துளார். இது பாராயண நூல்களுள் ஒன்று.

"பின்னர் முருகக்கடவு ளாஞ்ஞையாலே அவ்விமய மலைக்கணுள்ள தோர் தடாகத்தின் முழுக, அது பொன்முதலிநதியின்கரையேற்ற எறித் திருக்காளத்தி மலைசென்று அந்தாதி பாடிக்குட்டநோய் நீங்கப் பெற்று முத்தியடைந்தன" ரென்று திருக்காளத்தி புராணஞ் செப்பிற்று.

பூதங்களால் அடைக்கப்பட்ட ஆயிரவரை மலைக் குகையைப்பிளந்து காத்தருளினமையாற் சுப்பிரமணியக்கடவுள் சகத்திரான்ம பரிபாலன மூர்த்தி ஆயினர். சகத்திரம் = ஆயிரம். ஆன்மபரிபாலன = ஆன்மாக்களை க்காத்த, மூர்த்தி = திருவடிவினர் என்பதாம்.

மகிம்ந ஸ்தவம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

ஆதித்தியபுராணம். (பிரமகைவர்த்தம்.)

[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥

திருப்பரங்கிரிப் புராணம்.

அப்பணிதஞ் சிரத்தேந்தி யப்பணிவோ னருள்குமா னருளையெண்ணுச், செப்பரிய நக்கீரன் சரவணப்பூந் தடங்குடைந்து திருநீறிட்டுச்,

கப்பெழுந்த திருவாசி னீழலிலே மருவுபஞ்சாக்கர வெண்பாறை, யொப்பரிய தலனிருந்தே யஞ்செழுத்தை யுருவியற்றி யுறைந்தகாலை.

திருவாசி னிலைச்சருகு தெண்ணீரில் விழும்பொழுது சேலதாகும், பொருகரையில் விழும்பொழுது பறவையா மென்றுவரும் பூதர் தேர்ந்து, மாமுடியிற் சருகதனைக் கிள்ளியிட வங்குமிங்கு மருவி வீழப், பரியகய லொருபுறமும் பறவையொரு புறமும் பதைப்பக் கண்டான்.

அப்பொழுது நக்கீரன் றமிழ்மாலை யிளையோனென் றுரைத்து சூட்டச், செப்பரிய குடமுனிவர்க் குபதேசஞ் செலுத்துமொரு செஞ்சொ லாளி, யிப்பொருப்பி லடையாளங் கலியுகத்தோர் கண்டிடவே யெறியப்பாறை, யொப்பறநே ரேகிழித்தங் கிருபிளவாய்ப் பிளந்திடவே யுவப்பின் வந்தான்.

திருக்காளத்தி புராணம்.

முருகனைத் தொழுது சென்றுமூழ்கினா னத்தடத்தி
லிருவினைக் குறும்பு கொல்லு மிலங்குதென் கயிலைதோன்றப்
பொருதிரை கங்கைநாணும் பொன்முக ரியினெழுந்தான்
சுரர்கணமொய்த் தலர்பூமாரி சொரிந்தனர் விசும்பு போர்ப்ப.
பாடு புலவன் றனக்கொருதான் பரிசுகொடுப்பத் திருவுளங்கொண்
டாடும்பெருமா னெதிர்நின்றே யறைதிவேண்டிற் றெனவுடம்பு
கூடும்பிணியிங் கொழித்தவருட் குன்றேயென்றும் போற்றிவை
றூடும்பிணியுங் களைந்துனது முளரித்தாட்கீ ழிருத்தென்றான்.

அந்தமாதி யிலாக்கயிலை யமர்ந்தபெருமா னந்தாதிச்
சந்தமாலைப் புலவனது சத்திபாதத் துயற்சியாற்
பந்தபாச மறமாற்றிப் பன்றியுருவாய்க் காண்பதற்கு
வந்தமாலு மறியாத மலர்த்தாணிழலி லிருத்தினான்.

சகத்திரான்ம பரிபாலன மூர்த்தயே நம:

இருபத்தோன்பதாவது,

வரதராச மூர்த்தி.

வாமன கற்பத்திலே திரிகூடாசலம் என்னுந் திருத்தலத்தின் வடகீழ்த் திசையிலே இலஞ்சி என்னுங் குமாரதலம் ஒன்று உள்ளது. ஆங்கே பிரம புத்திரராகிய காசிப முனிவரும், திருமாலின் அம்ச மாகிய கபில முனிவரும், சீகண்ட பரமசிவ னிடத்தி னின்றுந் தோன்றிய துருவாச மகாமுனிவரும் ஒருவரை யொருவர் சந்தித்தனர். அக மகிழ்ச்சியுடன் பல விடயங்களை விசாரித்தனர். காணப்படுகின்ற இவ் வுலகம் உள்பொருளா? என்னும் வினா நிகழ்ந்தது. அப்போது கபில முனிவர் உலகம் மித்தையே. பிரமம் ஒன்றே உள்ளது.

அகமேக: தமமாஸம்! வர்த்தாமிச பவிஷ்யாமிச! நாந்ய: கச்சித் மத் தோவ்ய திரித்த:! யதாத மஸ்தந் நதி வாநராத்ர: நசந் நசா ஸச்சிவ ஏவ கேவல:! ப்ரஹ்மாவா இத மக்கிர ஆசீத்! ஏகமேவாத் விதீயம்! (யானொருவனே யாதியி லிருந்தேன்! இருக்கின்றேன்; இருப்பேன்! என்னிலும் வேறு யொருவனு மிலன்! எஞ்சான் றிருளிருந்தது; அஞ் ஞான்று அங்குப்பகலில்லை. இரவில்லை; சத்தியில்லை; அசத்தில்லை; தனித்த சிவனே யிருந்தான். ! பிரமமன்றே விது; ஆதியிலுள்ளது; ஒன்றே யுள்ளது; இரண்டற்றது.)

எனவரூஉம் வேதவசனங்களானே துணியப்படலால் உலகம் மித்தையே. அதாவது இல்பொருளே. கயிற்றிற் பாம்பு கானனீர், இளிஞ்சில் வெள்ளி, சொப்பன வுலகு, வானத்து மை, மலடி மகன், முயலின் கொம்பு இவைபோலச் சச்சிதானந்த பரப்பிரமத்தி னின்றுஞ் சகசீவபரங்கள் தோன்றலிற் பொய்யே.

வரதஸ்ராஜாயாதெ ஆமணாஉநஸ்ரவெஃமஜீயாணிவ'|
வமஉயாமநெஜஃ ஆத்ரரவஃவ்யூயிவிஸ்ஹஸ்யாஸிணீ||

வரதராச மூர்த்தி.

இந்தப் புருடனிடத்தே பிராணவாயு மனம், எல்லா விந்திரியங்கள், வெளி வாயு, தீ, நீர், எவற்றிற்கும் ஆதாரமான மண் என்பவைகள் உண்டாயின.)

இங்ஙனம் யசுர்வேத சாகை முதலாயின வியம்பா நின்றன. ஆகலின் ஒன்றே பொருள். அதுவே சத்து. இரண்டாவதில்லை என்றியம்பினர். துருவாச மகாமுனிவரும் காசிப முனிவருங் கபிலரை நோக்கி, முனியே! உலகந் தோன்றிநின்று ஒடுங்கக் காண்கின்றேம். அவன் அவள் அதுவெனக்காணப்படும் இவ்வுலகங்காரிய வடிவாகக் காணப்படலாலே நிமித்த காரணனுங் கடவுள் தோற்றுவித் தொடுக்குகின்றார். ஆகலான் மகாசங்கார காரணனுகியமுதலை யுடைத்து என்னை? உலகம் முத்தொழிலை யுடைத்து. அம்முத்தொழில் வினையுஞ் செய்வோரின்றி நிகழாவாகலிற் கர்த்தாவையுடைத்து. என்பது வேதமுடிபாகலின். "உள்ளது போகாது இல்லது வாராது" என்ற முதுமொழிப்படிமுயற்கோடு எங்ஙனந்தோன்றுதோ அங்ஙனமே யில்பொருளுந் தோன்று தென்க. என்றின்ன வுண்மைகளை வலியுறுத்தி யுலகமும் உள்பொருளே யென்றனர். வேதங்கள் உலகம் பிரமத்தினின்றுந் தோன்றிய தென்றதுகிழங்கினின்றுந் தோன்றுந் தாமரையைப் பங்கயம், சலசம் என்றாற்போலுமென்க என்றனர். அதனையொப்பினார் கபிலரும். அதன்பின்னர் அந்நிமித்த காரணக் கடவுள் யாவன் என்னும் ஆராய்ச்சியவர்க்குள் நிகழ்ந்தது.

பிரம புத்திரராகிய காசிப முனிவர் தமது தந்தையாகிய பிரமனே உலகங்களைப் படைக்குங் கருத்தா வென்றனர். திருமாலின் அம்சமாகிய கபிலனார் தம் அம்சமாகிய திருமாலே அக்கடவு ளாமென்றார். துருவாச மாமுனிவர் அவையிற்றைக் கேட்டுச் சொல்வார். அவ் விருவருங் கருத்தா வாகார். என்னையெனிற் கூறுதும். அவ்விருவரையும், அவர்தந் தொழில்களையும் அவ்விரு தொழிலானிகழு முலகத்தையும் அழிக்கின்றவனே

சிறந்தோர் ஞானலின் உருத்திரனே காரணக் கடவுளாமெனக் கழறினர். இங்ஙன மூவரும்வேறுவேறு மூவகைக் கொள்கை யுடையராய் வாதிட்டுக் களைய்த்தனர். அப்போது இத்தலத் தெழுந்தருளிய குமாரக்கடவுளே யிவ்வுண்மையைத் தெரித்தருளுவா ரென்று துருவாசயாமுனி தோத்திரித்தார்.

அதுகாலைக் குமாரக் கடவுள் ஆடகப் பொன்போன்ற திருமேனியும், ஒரு திருமுகமும், நான்கு திருக்கரங்களும், வலத்திருக்கரம்இரண்டினும் வரதம் வேல் என்பன பொருந்தவும். இடத்திருக்கரங்கள் இரண்டினும் அபயம் குக்குடம் என்பன பொருந்தவும், இளமைப் பருவ முடையராய் வெளிப்பட் டருளினுர். அப்போது முனிவர் மூவரு மெழுந்து வணங்கிப் பலதுதிகள்பாடினர் ஆடினா. முருகக் கடவுளாா தாபதர்களே! நுமக்கென் வேண்டு மென்று கேட்டருளினா. அவர்கள்கலையுணாபுலவ! குன்றெறிந்த குகனே! மூவர்களுள் யாவர் பரப்பிரம மாவர்? அதனைத் தேவரீர் திருவாய் மலர்ந்தருளி யடியேங்களின் ஐயப்பாட்டை யொழித்தருள வேண்டுமென்று இரந்தனர். பெருமானுர் அவர்மீது கருணைகூர்ந் தறைவார். இருடிகளே! இரணிய கருப்பன் கடவுளல்லன். அவன் நான்முகனுனகதை கேட்டிலிரோ? நம்மாற் சிறை யிடைப்புக்குப் பல்லாயிர வருடகாலம் வருந்தியதும், வேடனுய்ப் பிறந்து துன்பத்தில் வீழ்ந்ததும் அறியீர்போலும். மற்றைய திருமால் பிறவிகளிற் புக்கமையும் சாப வயத்தாற் றுன்பமுற்றதும், மதனெரிந்த காலை மௌனமாகி மறைந்ததும், வாசுகி விடத்தாற் கருநிற மடைந்ததுங் கேட்டிலிரோ? ஆகலாற் திருமாலுங் கடவுளல்லன். உருத்திரனுரு மன்னவாறே யாவர்.

மூவர்க்கும் மேலாய மகாசங்காரணனே கருத்தா. அவனருளாணை தாங்கியே யுலகங்களுள் அணுத்துணையினு மணுத்துணைய பகுதியைப் படைத்துங் காத்துந் துடைத்து நிற்கின்றனர். ஒவ்வோரண்டங்களினும் நாம் அதிட்டித்து நிற்கும் பலப்பல பிரமர்களும் பலப்பல விட்டுணுக்க

ளும் இருக்கின்றனர். அவர்களை யெல்லாம்பார்க்கக்கடவிர் என்று அழைத்துக் காட்டி யருளினர். இங்ஙனம் எத்தனையோ பிரமர்கள் விட்டுணுக்கள் முதலியோர் மாண்டனர். மகாசங்கார காரணனாகிய கருத்தாயாமே. யாமே விதியாக நின்று படைப்பேம்; அரியாக நின்று காப்பேம்; மற்றையோராக நின்று அழிப்பேம். ஆகலின் மும்மூர்த்தியாக விளங்குவோர் நாமே. அவ்வுண்மையை யினிது தெளியக் கடவீர் என்று மும்மூர்த்திகளும் ஒரு வடிவத்திற் பொருந்துமாறு காட்டியருளினர்.

பிரமனது வடிவமும் அவன் கையிலே தரித்தவும், விஷ்ணுவடிவமும் அவர்கையிலே தரித்தவும், உருத்திர வடிவமும் அவர் திருக்காத்திலே தரித்தவுங் காட்டி யொரு திருவுருவமும், மூன்று திருமுகங்களும், ஆறு திருக்கரங்களும், இரு திருவடிகளும் பொருந்திய திருக்கோலங் காட்டியருளி யுரைத்தருள்வார். முனிவாகாள்! இன்னு மிவ்வுண்மையை மூவிலைகளையும் ஒரு தாளையுமுடைய சூலாயுதத்தானும் வேற்படைக் கலத்தானும் அறிந்து கொள்ளுதிர். வேல் ஞானசத்தி, வள்ளி இச்சாசத்தி, தேவகுஞ்சரி கிரியாசத்தி. அன்றி யிவை முத்தொழிற்குங் காரணமாய ஆரணி, செனனி இரௌத்திரியுமாகும். இவற்றானே யாமே முக்குண வேறுபாட்டை யடைந்தவர்போல மும்மூர்த்தியாகி மூவினையுஞ் செய்வேமென்று தெரித்தருளி யவர் வேண்டிய வரங்களையுங் கொடுத்து அத்தலத்தி லெழுந்தருளினர். அம்முனிவர்கள் தேவரீர் இவ்விடத்தி லெழுந்தருளி யிருந்து வழிபடுவோர் யார்க்கும் வரத்தைக் கொடுத்தருளல் வேண்டு மென்று வேண்டிக் கொண்டமையால், சுப்பிரமணியக் கடவுள் ஆங்கு வரதராச மூர்த்தியாய் விளங்காநின்றார்.

சிவஞானபோதம்.

ஸ்த்ரீபும்நபும்ஸகாதித்வாஜ்ஜகத: கார்யதர்சநாத் |
அஸ்தி கர்தா ஸ ஹ்ருத்வைதத் ஸ்ருஜத்யஸ்மாத் ப்ரபுர்ஹர:

சந்தான் ஆகமம்.

[illegible]
[illegible]
[illegible]

ஆதித்திய புராணம்.

யதாஜ்ஞயா ஜகத் ஸ்ருஷ்டா விரிஞ்ச: பாலகோ ஹரி:।
ஸம்ஹர்த்தாகாலருத்ராக்யோ நமஸ் தஸ்மை பிநாகிநே।

திருச்செந்தூர்ப் புராணம்.

திரிகூடா சலத்தி சான திக்கினி லிலஞ்சி யர்ண
புரியினிற் கபில ராதி யோகியர் புகழ்ந்து கேட்ப
வரியமுத் தேவர் மூவ ராவது நாமே யென்று
சுருதியின் வாத ராசத் தொல்பெயர் சூட்டிக் கொண்டான்.

வாதராஜ மூர்த்தயே நம:

முப்பதாவது,

பஞ்சாயுதப் பிரதான மூர்த்தி.

சிவபெருமா னிடத்தில் வரம் பெற்றுவந்த சூரபன்மன் சிங்கமுகன், தாரகனென்னு மூவரும், அசுர குருவாகிய சுக்கிரனாலே அண்டங்களி னளவுகளையும் நிலைமைகளையு முணர்ந்து திக்குவிசயஞ் செய்யப் புறப்பட் டார்கள். அப்போது தாரகாசுரன் றன் றமையன்மார்க்கு முன்னே பதிற யிரங் குதிரைகள் பூட்டப்பட்டதேரிலேறிக்கொண்டு எண்டிசைப் பாலகர் நகரங்கடோறுஞ்சென்று அவர்களைவென்று, பாதலங்களிலுந் தீவுகளிலும்



பஞ்சாயுதப்பிரதானமூர்த்தி.

போய் ஆணைநிறுவி வந்தான். அதன்பின் விட்டுணு துயிலும் பாற்கடலை யடைந்தான். அசுர சேனை வெள்ளங்கள் பாலைக்குடித்துத் தேக்கெறிந்து கடல் வெள்ளத்தைக் கலக்கி யார்ப்பரித்தன. பூதேவி சீதேவி யிருவருந் திருமாலைத் துயிலி னின்று மெழுப்ப, அவரும் போர்க்கோலங் கொண்டு வந்து யுத்தம்புரிந்து அசுர சேனைகளைச் சிதறச் செய்தனர்.

பின்னர்த் தாரகன் வந்து எதிர்க்கப் பல மாய வுருவங்கொண்டு பொருதார். தாரகனுந் தன் குருவாகிய மாயை யுபதேசித்த மந்திரத்தை நினைத்துத் தானும் பல வடிவங் கொண்டு யுத்தஞ் செய்தான். தேவ மானப்படி பன்னிரு வருடம் யுத்தம் நடந்தது. தேவாசுர யுத்தம் பதி னெட்டாண்டிலும், இராம ராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும், துரியோதன பாண்டவர்களின் யுத்தம் பதினெட்டு நாளிலும், வஞ்சி வேந்தன் செங்குட்டுவனுக்கும் ஆரியமன்னருட் பாலகுமாரன் புதல்வரா கிய கனக விசயருக்கும் நடந்த யுத்தம் பதினெட்டு நாழிகையினும் முற் றினவென்று பெரியோர் கூறுவர். அவையெல்லா மவ்வாறு முடிந்து மிவர் யுத்தம் பன்னிரண்டு வருடம் நடந்ததே யென்று கண்டோரெல்லா மிறும்பூ தெய்தினர்.

நாராயண மூர்த்தி யேந்திய கௌமோதகி யென்னுந் தண்டாயுத மும், நந்தக மென்னும் வாளும், பாஞ்ச சன்னிய மென்னுஞ் சங்கமுஞ் சார்ங்க மென்னும் வில்லும் பொடியாக்கப்பட்டன. நாரணர் மிகுசீற்ற முற்றுச் சிவபெருமானுமலை கண்ணிடந்து அர்ச்சித்த காலத்துக் கொடுக்கப் பட்ட சுதரிசனம் என்னுஞ் சக்கரப்படையை விடுத்தார். அது சிவ வரப் பிரசாத முடைய தாரகன் கழுத்தில் மாலையாக விழுந்தது. வாசுதேவன் பேராச்சரிய முற்றுத் தாரகனையுந் தமயன்மாரையு மாசிகூறிச் சென்று குமாரக்கடவுளை யடுத்திருந்து அவனிறந்த பிற்றை ஞான்று தமது ஐந்தாயுதங்களையு மிழந்தமை பற்றி வருந்துவாராயினர். நாரத மாமுனிவர் தோன்றி, காத்தற்றொழி லுடையோய்! ஒன்றற்கு மஞ்சாதி. குமாரக்

கடவுளையுன்னி வரங் கிடைப்பையேல் அவற்றைப் பெறுவது திண்ணம் என்று கூறிப் போயினார். திருமாலும் அவ்வுண்மை தெளிந்தவராய் விபூதி ருத்திராக்க தாரணம் புரிந்து தவஞ் செய்வான் றொடங்கினர்.

அலையிலாக் கடல்போ லடங்கிப் பதுமாசனமிட்டு நூறு ஊழிக் காலம் நோற்றார். நாராயண மூர்த்தியின் வடிவத்தைப் புற்றுக்கள் மூடின, நீலநிறக் கடலின்மீது செங்கதிர் பலகோடி திரண்டு உதித்தாற் போலப் பங்குனி மாதத்திலே ஆதிவாரத்திலே உத்தர நட்சத்திரத்திலே, சண்முகக் கடவுள் நீலமயின்மீ திவர்ந்து தோன்றியருளினார். பலகோடி கணங்கள் சூழ வெளிப்பட் டருளுதலும், நாராயண மூர்த்தி யெதனு லறிந்தன ரெனின், அக் கணர்களுட் பானுகம்ப னென்னுங் கணநாதன் றன்னாயிரம் வாய்கடோறும் சங்குகளை வைத்து முழக்கினன். அந்த முழக்கத்தைக் கேட்டுப் பெருமானார் பிரசன்ன மாயினா ரெனத் தெரிந்து, நாராயண மூர்த்தியானவர் புற்றினின்றும் பாம்பு வெளிப்பட்டாற் போல வெளிப்பட்டுத் தண்டாகாரமாக வீழ்ந்து வணங்கி "துன்பங் களைந்து இன்பமளிக்குஞ் சோதியே! முன்னாட் காலத்திற் குபனென்னும் அரசனுக்காகப் பரிந்து சியவன முனிவர் குமாரரான ததீசி முனிவருடன் செய்த யுத்தத்தில் எனது சக்கரங் கூர் மழுங்கிற்று.

அதனாற் பரசிவ நாதனிடங் கண்ணிடந்து அருச்சித்துச் சுதரிசனம் பெற்றேன். அதனைச் சிறுவிதி யென்னுந் தக்கனது வேள்வியில் வீரபத்திரப் பெருமானிடம் ஏவ, அதனை யவரது வெண்டலை கௌவிற்று. அதனை யருளுமாறு வீரபத்திரக் கடவுளைப் பிரார்த்தித்த காலை, அப் பெருமான் வெண்டலை கொடுக்கப் பெற்றுக்கொள்க" என்றருளினார். விகடக் கூத்தாடினேன். அதனைக்கண்டு யாவருஞ் சிரித்தனர். வெண்டலையுஞ் சிரித்தது. சக்கரம் விழுந்தது கண்ட முன்னவரான விநாயகக் கடவுளார் அதனை யெடுத்துக் கொண்டு சென்றார். அவர் திருச்சந்நிதானத்துஞ் சென்று அங்ஙனம் விகடக் கூத்தாடினேன். அவர் இரக்கங் கொண்டு அளித்தருளினார். அத்துணைப் பிரயாசமுற்றுப் பெற்ற சக்கரா

யுதத்தைத்தாரகன் வந்து பொருதகாலை யவன்மீது பிரயோகித்தேன். அன்னது அவன் கண்டத்தே மாலையாக விழுந்து விளங்கியதை யென்னென்றுரைப்பல். முன்னர் என்சக்கரந் தன் கூர்மழுங்கி வீழ்ந்ததும், வெண்டலை கௌவியது மன்றி இதுபோல மாலையாக விழுந்ததின்று. இது மிக்க வியப்பே. அதுமட்டோ!

ஐயனே! அடியேன் மற்றைய ஆயுதங்களையும் அவன் பொடியாக்கினமையா லிழந்து நின்றேன். இங்ஙனம் நிராயுதனானது ஒருகாலத்துமின்று. இவ்வாறிருப்பனேற் றுட்டர்களைக் கண்டித்துச் சிட்டர்களைக் காப்பது எங்ஙனெற்றாகும்? ஆகலாற் பெரும்! பஞ்சாயுதங்களையும் எளியேன் றரிக்க முன்னருள் புரிந்து உய்வித் தருளுதி யென்று இரந்தார். அதுகண்ட வரைபக வெறிந்த கதிரைநாயகன் றன்றிருவுளத் துன்னிய மாத்திரையினே சூரியப்பிரகாசம் போன்ற சுதரிசனமும், சந்திரப் பிரகாசம் போன்ற பாஞ்ச சன்னிய மென்னுஞ் சங்கமும், மற்றை யாயுதங்களும் வந்து தோன்றின. அவற்றை விட்டுணு கண்டு மிக்க வியப்பனைனந்த முற்றவராய்,

காடாது வேட்ட கனிவழங்கும் வள்ளன்மை
தாடாழு நர்ப்பாற் றகைக்குங் கருணையா
ளோடாத தானை யுருமுச் சினச்சூரைச்
கோடாப்போர் வெங்களத்துக் கொன்றவிறை போலுங்
குருபரனைத் தாழ்த்த குருநாதன் போலும்.
அறிவிரண்டு மாய வலங்கறிவிற் றூழ்ந்தோர்
செறிவகன்ற யாக்கைச் செருத்தே றுகைப்போ
னுறுவலியின் வைய முடற்றுதக ரூர்ந்த
வெறும்மிகுத்த காற்கோட் டிபப்பாகன் போறு
மெழிற்கலவ மஞ்ஞை யினிதுகைத்தான் போலும்.

என்றின்னவாறு துதித்தார். சுப்பிரமணியப் பெருமானார் ஐந்தாயுதங்களையும் அவர் கையி லளித்து, அன்பனே! இவை யினியொருவரானு மழிக்கப்படா. நினக்குப் பின்னர்த் தோன்றுந் திதிக் கடவுளர்க்கு மிவை வழிவழி யாயுதமாகக் கடவன. நீயும் அன்னோரும் பஞ்சாயுதர் எனப் பெயர் பெறுதிர். குழவிப் பிரபந்தக் காப்பினிவ்வைங் கருவி பற்றி யெல்லாத் தேவரினு நின்னையே யுலகம் முற்கொண்டு புகழ்க. இப்படைகளி னுருவந் தீட்டிய (பஞ்சாயுத) மணியை யணிந்த குழவிகட்குத் தேவர் கொலை நீங்கிடுக" என்று வரமுமளித்து அந்தர்த் தான மாயினார். நாரணரிவைபெற்ற தலம் சித்தாச் சிரமம் எனவும், தான பஞ்சக மெனவுஞ் சொல்லப்படும். நாரணருக்குச் சிறந்த ஐந்து ஆயுதங்களையுங் கொடுத் தருளினமையாற் குகக்கடவுள் பஞ்சாயுதப் பிரதான மூர்த்தியாயினர்.

அதர்வண வேதச் சாப உபநிடதம்.

[illegible] |
[illegible] ||

தணிகைப் புராணம்.

ஆர்ங்கதிர் வேணிய னுக்கி யளித்தெதி
ரீர்ங்கவுண் மாமுகன் மார்பிடு மாழி
சார்ங்கமு மற்றவுஞ் சாமி யளித்தான்
பீர்ங்குரு வீயுற மாடையன் பெற்றான்.

பஞ்சாயுதப் பிரதான மூர்த்தயே நம:

முப்பந்நோராவது,

சதுர்முகசாபாரி மூர்த்தி.

புதூச்சந்நிதி யென்னும் பொற்கோயிற் றலக்க ணெழுந்தருளும் புண்ணிய வடிவரான கண்ணுதல் குமாரர், சூரபன்ம னாதியரைச் சங்கரித்துக் கிரியா சத்தி யெனப்படுந் தெய்வயானை யம்மையாரைத் திருப்பரங்குன்றத்திலே திருமணஞ் செய்து எழுந்தருளி யிருக்கு மோர்நாளில் தேவர் முதலாயினோர் குழுமிப் போற்றுஞ் சபையிலே, தந் திருக்கரத் தின்க ணுள்ள வேற்படைக் கலத்தைச் சுட்டிக் காட்டி, "தேவர்முதலிய கணர்காள்! நமக்கு இப்பெருமையெல்லாந் தந்தது இவ்வேலாகும்" என்று ஓர் திருவிளையாடலாகக் கூறியருளினர். அதனைக் கேட்ட வருகிலிருந்த பிரமன் "இவ்வேலிற்கு இந்நிலை யென்றால் வந்த தன்றோ" என்று தனதறி யாமை யாலும் அகங்காரத்தாலு முரைத்தான். குமரனு மிறைவன் அதுகேட்டுச்சிறிது வெகுளி யுற்று, "ஆணவமலத்தாற் சிமிழ்ப் புற்ற கீழோய்! என் மொழிந்தனை. நங் கரக்கட்பிரியா துறையு ஞான சத்திக்கு நீ கொடுப்பதொரு சத்தியு முண்டோ? முன்னர்ச்சிறையிருந்ததை மறந்தனையோ பேதாய். நீ பூமியிற்புன்பிறப்பையடைதி" என்று சபித்தருளினார்.

பிரமன் நடுநடுங்கிச் சாமிநாதன் றிருவடிகளிற் றஞ்சமென வீழ்ந்து புலம்பினன். கருணையங் கடலாங் கதிரை நாயகன் றிருவுள மிரங்கி, "பிரமனே! நீ யிப்பாவத்தைச் செய்தமையால் அநுபவித்தே தீர்த்தல் வேண்டும் பின்னர் நின்னை யாட்கொள்வாம்" என்று அருளினர். விதியோன் றன்னுரு மாறிப் பூமியிற் சென்று அந்திமான் என்னும் வேடனாகப் பிறந்தான். வனத்திற் கொலைத்தொழில் கொண்டு திரிந்த காலத்தில், இமயமலைச்சார லிடஞ்சென்றான். அங்கே மிருகங்க ளகப்படாமையாற் பட்டினியாயிருந்து பசியாலும் மிருக பயத்தாலும் விழித்திருந்தான். அன்று

சதுர்முகசாபாரி மூர்த்தி.

கார்த்திகைநா ளாயிற்று. மறுநாட் காலையிற் * பிப்பலாதமுனிவர் அவ் வழி வந்தனர். யாதேனும் பொருளாவது உணவாவது அவரிடமிருக்கு மென்று நினைத்து ஓடிச்சென்று அவர்தம் முடலைப் பற்றிக் கையா லிறுகக் கட்டினன். முனிவனுர் சுப்பிரமணியக் கடவுளின் றிருவருட் பெருமைகளை யெல்லா மெடுத்துரைக்கும் வேத கானங்களைப் பாடினுர். அதனைக் கேட்ட வேடற்குப் பண்டைய நல்லுணர்வு தோன்றித் தான் செய்த செய்கைகட்குப் பெரிது மிரங்கி, முனிவர் அடிகளில் வீழ்ந்து வணங்கி, அவராற் றன்பழைய வரலாறெல்லா முணர்ந்தான்.

முனிவர் பெருமானே! கந்தக் கடவுளின் றிருவருள் விரைவிற் கிடைக்குமாறு உபதேசித் தருள்க'' என்று முனிவனுரைப் பணிந்து கேட்டனன். முனிவனுர் "சரவண வாவியிற் படிந்து கார்த்திகை விரதத்தை யனுட்டிப்பையேல் உன் பவம் நீங்கும்'' என்று சடக்கர மந்திரமும் உபதேசித்து விடுத்தார். அங்ஙனே அந்திமான் அவ்விரதத் தை யாற்றுவா னுயினுன். விரதபலத்தானே வேடத்தன்மையி னின்று நீங்கி அரசனுகிக் கொடைத் தொழில் விசேடத்தானே இடைவள்ளள் ம ரெழுவரு ளொருவனுய் விளங்கினுன்.

இங்ஙனம் பிரமன் பூமியிற் றங்கலாற் சிருட்டித் தொழில் நடவாதாயிற்று. அதனுற் றிதித் தொழிலும், சங்காரத் தொழிலு மில்லையாயின. அதனுல் வருணன் சோமன் இந்திரன் திருமால்

---

* பிப்பலாதர் என்பவர் வேதங்களிலே பிரதி பாதிக்கப் பெற்ற வோர் முனிவர். அதர்வண வேதங் கண்டுபிடித்த அதர்வண விருடி யின் குமாரர் தத்தியங் என்னும் இருடி அது "தமூத்வா தத்தியங் ருஷி: புத்ர ஈதே அதர்வண; தத்தியங் தாதர் வண;" என்ற வேத வசனங்களாற் பெறப்படும். அத் தத்தியங் ரிஷி புத்திரர் ததீசி முனி. அத் ததீசி முனி புத்திரர் பிப்பலாத முனிவர் என்று பிரம புராணத்திலே கூறப்பட்டுளது.

* முதலியோர் "சித்தன் வாழ்வு" என்னுந் திருப்படை வீட்டுத் தலஞ் சென்று தேவநாயகனைச் சேவித்தார். பழநிப் பெருமான் அவர்கட்கு முன்னே பாலப்பருவமும், நான்கு திருக்கரங்களும் பொன்போலுங் காந்தியும் வேலாயுதமுங் கோழிக் கொடியும் வரதமும் அபயமும் பொருந்திய திருக்கரங்களுமுடையராய்த் தோன்றினர். தேவர்க ளெல்லாந் துதித்தனர். சுப்பிரமணியக் கடவுளார் அந்திமானையுடனே யழைத்துப் பவம் போக்கிப் பிரமனுக்கிரு முத்தொழிலு நடக்குமாறு திருவருள் செய்து மறைந்தனர். சதுர்முகனாகிய பிரமனது சாபத்தை அரித்தமையால் (அழித்தமையால்) சதுர்முக சாபாரி மூர்த்தியாயினர். இதனால் முத்தொழிற்கும் மும்மூர்த்திகட்கும் முதற்பொருளா யிருப்பவர் செவ்வேட் பெருமானே யென்பது சித்தாந்த மாதல் காண்க .

பத்துப்பாட்டு திருமுரு காற்றுப் படை.

புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ
ளுமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனு
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனு
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய

---

* சித்தன் வாழ்வென்றது திருவாவினன்குடி யென்னும் பழநித் தலத்தை. அதனை, 'நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்-வில்லந் தொறுமூன் றெரியுடைத்து-நல்லரவப், பாட்டுடைத்துச் சோமன் வழி வந்த பாண்டியனின் - னாட்டுடைத்து நல்ல தமிழ்" என்னும் ஔவை யார் திருவாக்காலு முணர்க. சித்த னென்பது முருகக்கடவுளி னாயிரநாமத்துளொன்று. அது பிரமாண்டபுராணத்திற் சகத்திரநாம அத்தியாயத்திற் காண்க.

வுலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
வேமுறு ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி.

விம்பாகமம்.

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

சதுர்முக சாபாரி மூர்த்தயே நம:

முப்பத்திரண்டாவது,

யோகாசாரிய மூர்த்தி.

வானளாவி யுயர்ந்த சையசிந்தம் என்னுந் தலத்திலே, கபிலர், கௌதமர், சுதீக்கணா, தத்தாத்திரேயர், பைங்கலர், தூர்வாசமுனிவர் முதலிய பல இருடியர்கள் கூடியிருந்தார். அப்போதுபைங்கல முனிவர் மற்றமுனிவர்களைநோக்கி, அறவீர்! வேண்டிய சித்திகளையும் ஞானத்தையும் அடைதற்குயாம்செய்யும் உபாயம்யாது? என்று வினவியகாலத்துஒவ்வொருவரும் ஒவ்வோர்உபாயங்கூறினர். அவர்கள் அவ்வாறு பிணங்கிய காலத்தே தேவவிருடியாகிய நாரதமுனிவர் தோன்றி, சிவயோகமேசித்தி



யோகசாரிய மூர்த்தி.

கலையுஞ்ஞானத்தையும் முத்தியையுங் கொடுக்கத் தக்கது. அதன் இலக்கணங்களை யெல்லாம் உணர்த்த வல்லவர் குகப் பெருமானே. அவனை நினைந்து தவஞ்செய்திர் என்று மறைந்தார். முனிவர்கள் அதனை யொப்பித் தவம் புரிந்தார். குமாரக் கடவுள் தோன்றி, யோகவியலை யுணர்த்துந் திருக்கோலத்துடன் வீற்றிருந்து உபதேசிப்பா ராயினார்.

மாதவஞ் செய்யும் முனிவர்களே! யோகம் மற்றையவை போல வாக்கினால் உணர்ப்படு மொன்றன்று. செய்கை தானும் நல்லாசிரியனிடத்தே முறையே யுணர்ந்து பழகலானுந் தெளியப்படு மொன்று. யாம் வாக்கினாலுஞ் செய்கைகளானும் தெரிக்கின்றேம். யோகம் — மந்திரயோகம், அடயோகம், இலயயோகம், இராசயோகம், தியான யோகம், பாவயோகம், கன்மயோகம், மாயோகம், ஆதாரயோகம், நிராதார யோகம், மீதானயோகம், தாரகயோகம், சாங்கியயோகம், அமனசுகம், பரிசயோகம், அபாவயோகம், சந்திரயோகம், சூரியயோகம், இலம்பிகா யோகம், அமிர்தயோகம், ஆனந்தயோகம், பன்னகயோகம், வச்சிரயோகம், சித்தயோகம், ஞானயோகம், பரமயோகம், முத்தியோகம் எனப் பலவகைப்படும். அவற்றுள்,

மந்திரயோகம் ஆவது — மூலாதாரம் முதலிய ஆறு தாரங்களையும், பிரமசக்கரம், சிகாரசககாரம், பச்சிமசக்காரம், அனுச்சக்கர முதலிய பத்துவகைச் சக்கரங்களையும் ஏனைய பதினொருவகைச் சக்கரங்களையும், செவித்துவாரம் இரண்டு, கண் துவாரம் இரண்டு, உண்ணாக்குத்துவாரம் ஒன்று, அபரோக்கத்துவாரம் ஒன்று என்னும் எண்வகைத் துவாரங்களையும், இவ்வெட்டின் கூறுபாடான நால்வகைத் தளங்களையும், ஆதார தேவதைகளையும், பிரம வெழுத்து முதலிய எழுத்துக்களையும், மந்திரங்களையும், யந்திரங்களையும், சகுண தேவதைகளையும், பிராசாதங்களையும் குரு முகமாக அறிந்து அநுட்டிப்பதாம்.

இலயயோகம்ஆவது-நாடிசுத்தி, ஆதாரசுத்தி, பிராணாயாமம் முதலிய சாதனங்களைச் செய்யுமிடத்து; இவைகள் சுத்தமாயின வென்னுஞ் சோதனையை யறிந்தபடி ஆதாரதேவதைகள் வெளிப்படும்போது தசநாதங்களுந் தோன்றும். அவற்றைத் தியானஞ் செய்யும்போது மனம் இலயமாகும். இதுவே இலயயோகம் எனப்படும்.

அடயோகம் ஆவது - இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டு அங்கங்களோடுசெய்வது, இதனை அட்டாங்க யோகம் எனவுங் கூறுவர்.

இராசயோகம் ஆவது-மூவகைப்பட விளங்கும யோகமாம், மூவகையாவன-தாரகம், சாங்கியம், அமனசிகம் என்பனவாம். அவற்றுள் தாரகம் ஆவது-சிற்சத்தி யானது மகாமாயையுடன் கூடி யுலக சிருட்டியுண்டாகும்போது இரம்மித்துக் கலக்குங்கால், சூரியகிரணம பளிங்கிற்பட்டு அக்கினி பிரகாசிப்பதுபோல, நிவிர்த்திமுதல் அநாசிருதை யிறுதியான பதினாறு கலைகளுந் தோன்றி, அவற்றினின்றும் அநேக கோடி கலைகள் தோன்றி, அதன்கண் தண்டம், தாரகை, குண்டலம், அர்த்த சந்திரம், தர்ப்பணம், சோதி முதலான அளவற்ற வன்ன வேறுபாட்டு வடிவுகள் தோன்ற அவற்றைத் தரிசிப்பதாம். சாங்கிய யோகமாவது எல்லாத் தத்துவங்களையும் நேதிகளைந்து தன்னையும் புருடனையும் உள்ளவாறு அறிதலாம். அமனசிக யோகமாவது-மனமிறந்து நிற்பதாம்.

ஆதார யோகமாவது - இயம முறையுடன் வான் எழுத்தை வாயு எழுத்துடன் பொருத்துவித்து. மேலாக விளங்குஞ் சோதியைப் பிரமரந்திரத்துள்ள் வெளியிலே கொண்டு செலுத்துவதாம். இதுசைவரின் ஆகாயத்திற் சஞ்சரிக்கும் வன்மையுண்டாம். இனி அட்டசித்தி யோகம் கூறுவாம். மூலாதாரவடிவின் சுழுமுனைத் துவாரத்திலே மனத்தை வைத்து அக்கினியை ஒருவருடம் இடைவிடாது நோக்கி

றூற் பொன்னிறமா யணுவைப் போன்ற வடிவங்கொள்வர். இது அணி
மாசித்தியோகம். அவ்வக்கினியைத் தானே மேருத் துவாரவழியாக வாயு
வினாலே குண்டலி வரையும் எழுப்பி யேற்றி இருவருடம் நோக்கில் நீர்
நுரைகள் போலத் தேகம் மெத்தென வாகும். இது இலகி மாசித்தியோ
கம். குண்டலிகாறும் எழுப்பிய அக்கினியை நாபி இருதயங்களி லேற்றி
மேருத்துவாரவழி மூவாண்டு நோக்கின் ஆகாயமளவு ஓங்கி வளருதலுண்
டாம். அணுவினுஞ் சிறிதாயிருக்குந் தன்மையு முண்டாம் இதுகரிமா
சித்தியோகம். முன்சொன்ன மூலாக்கினியை இருதயமுதற் கண்டங்
காறுமேற்றி ஐயாண்டு நோக்கின்முற்கால சம்பவமெல்லா முணர்வான்.
இது பிராத்திசித்தி யோகமாகும். கழுத்துமுதற் கண்கள் வரையும் ஏற்றி
ஆறுவருடம் நோக்கினால் மண்ணி லெத்தனைகாலம் புதைக்கினும் அவ்
வுட லழியாதிருக்கும், மீளவும பிறவியில்லை இது பிராகாமிய சித்தியோ
கம் சிரத்திலேற்றி யேழாண்டு வரையும் நோக்கின் யாவருக்கும் உள்ள
தீவினைகளைப் போக்கி யெல்லா வுயிர்களிலும் ஏகமாய்க் கலந்துநிற்பான்.
இது ஈசத்துவ யோகம், இனித் தலைக்கணுள்ள அக்கினியைப் பிராண
வாயுவினாலே வாங்கி நாசி நுனியிலே எட்டாண்டு நோக்கின் பூதண்டங்
களைப் படைக்கு முதல்வன் போலாகி வேண்டிய அண்டங்களையும் படை
ப்பான். இதுவசித்துவ யோகம். இந்நாசியின் அனலைச் சிகையளவுஞ்
செல்லநோக்கின் எந்தவடிவு எடுக்க வேண்டுமோ அந்த வடிவெடுக்கும்
வன்மையுடையனாவன். இது காமரூப சித்தியோகமாம் இங்ஙனம் அவ்
வவ் யோகங்களி னியல்களை யெல்லாம் எடுத்து உணர்த்தியருளி மறைந்
தனர். முனிவர்கள் அங்ஙனமுள்ள யோகத்துள் அட்டாங்க யோகப்பயன்
களை யடைந்து ஞானம்பெற்றார்கள்.

ஏனையவற்றி னியல்களை யெல்லாம். சிவயோகசாரம், சூதசங்கிதை:
யோககாரிகை, பாதஞ்சலம், சிவயோக மஞ்சரி, யோகாஸ்தவம், அட்

பிரதிபிம்பை என்பவற்றினும், புராணங்களினும், பெருந்திரட்டு, சிறுதிரட்டு, மெய்ம்மொழி, சகலாகம சிகாமணி, சிவதருமோத்தரம், திருமந்திரம், தத்துவப் பிரகாசம் முதலியவற்றினுங் காண்க.

இங்ஙனம் யோக சாதனங்களை யெல்லாம் உணர்த்தியருளும் மூர்த்தியாக விளங்கலால் யோகாசாரிய மூர்த்தி யாயினர்.

திருமந்திரம்.

ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லைக்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வார்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

ஈராறு கால்கொண் டெழுந்த புரவியைப்
போராமற் கட்டிப் பெரிதுண வல்லிரே
னீரா யிரமு நிலமா யிரத்தாண்டும்
போராது காயம் பிராணந்தி யாணையே.

புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கி
லுறுப்புச் சிவந்திடு முரோமங் கறுத்திடும்
புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.

யோக தரிசனம்.

அக்கினியிற் பொறிவடிவா யுதித்த னிலவனற்றேவ ரவரோதாங்க, மிக்கினிய சரவணத்தினிற் சார்ந்துவிளை யாடுமொரு வேளோன்காற்றைத், தொக்கினிலேற் றெழுப்பியனல் சுவாலிக்கச் செயும்யோகத் துணைவன் முன்ன, ரக்கினிய கரக்கபிலன் முதலோர்க்குப் போதித்தா னவற்றை மன்னோ.

யோகாசாரிய மூர்த்தயே நம:

முப்பத்துமூன்றாவது,

குழந்தை வேலப்ப மூர்த்தி.

பாண்டி நாட்டிலேயுள்ள திருவாவினன்குடிப் பதியிலே சுப்பிர மணிய பத்தியிற் சிறந்த வைசிய குலத்திலே சுவணகுத்தன் என்பவன் ஒருவனிருந்தான், அவன் மனையாள் அருந்ததிபோன்ற கற்பினையுடைய மகேசை யென்பவளாகும். அவளுடன் இல்லற நடாத்தி வருநாளிலே, புத்திரப் பேறின்மையால் மிகவும் வருந்திச் சண்முகநதிக்குக் கீழ்த்தி சையிலுள்ள பரத்துவாச ஆச்சிரமத்திலிருந்து திருமறுமார்பனாகிய சீதர மூர்த்தியை வழிபட்டுத் தவஞ்செய்தார் காவற் கடவுளாகிய நாரணர் இவர் பலகாலமாகத் தவஞ்செய்தல் கண்டு மனமிரங்கித் தோன்றினார். சுவணகுத்தனும் மனைவியும் வணங்கித் துதித்து, அண்ணலே! அடி யேங்களுக்குப் புத்திரப் பேற்றை யளித்தருள வேண்டுமென்று குறை யிரந்து வேண்டினர். மாயவன் அவர்களைநோக்கி, "தலையன்புடையீர்! நுமக்குப் புத்திரரில்லை. புத்திரர் பிறந்தாலும் இறந்துவிடும்" என்றார். எங்ஙனமாயினும் ஒருபுத்திரன் பிறக்க அருளுகஎன்று பிரார்த்தித்தனர். "அவ்வாறேதந்தேம்" என்றுமறைந்த திருமால் தமது பாஞ்சசன்னிய மாகிய சங்கத்தை நோக்கி, "சங்கே! நீ மகேசைவயிற்றிற் றோன்றிச் சிலகால மிருந்து வருக" வென்றார். அப்பணியைச் சிரமேற்கொண்ட பாஞ்ச சன்னியம் மகேசை வயிற்றிற் பாலனாகத் தோன்றிற்று. புத்திரனை பிறந்ததுங் குழந்தை வேலப்பன் என்று நாமகரணஞ்செய்து வளர்த்து வந்தார். அப்புத்திரனும் வளர்ந்து ஐந்துவயதடைந்து அரசகுமாருடன் செய்குன்றுகளிலும் நதிகளிலும் சோலைகளிலும் விளையாடி வந்தான். ஒருநாள் பழநிக்குச் சமீபமாயுள்ள வில்வவனத்தின்க ணுள்ள தேனுதீர்த் தத்திலே நீர்விளையாடுங் காலத்திற் பழமையாகிய பேரறிவு தோன்ற, அப்பாலகன் நீருளாழ்ந்து சங்காகித் திருமால் கையி னடைந்தான்.

குழந்தைவேலப்பமூர்த்தி.

குழந்தை வேலப்பன் நீருள் மூழ்கி நெடுநேரஞ் சென்றும் வெளி வாராமையாற் பார்த்திருந்தோரும், கூடிவிளையாடிய மற்றைப்பாலகரும் மனமாழ்கிப் பதைபதைத்துத் தேடியுங் காணாது ஏக்கமுற்றுத் தாய் தந்தையர்க்கு அறிவித்தனர். அதனைக் கேட்ட சுவணகுப்தனும் மனைவி மகேசையுந் தலையினும் மார்பினும் அடித்துப் புரண்டழுது ஓடிச்சென்று தேனுதீர்த்த நீர்க்குள் மூழ்கித் தேடியுங் காணப் பெறாது துக்கசாகரத்துள் முழுகிப் புலம்பி யினி உயிரை விடுவேமென்று துணிவுற்றார். சுற்றத்தாரும் அயலாரும் வருந்தி யிரங்கினர். தாய்தந்தையர்கள் புத்திர சோகத்தாற் கொண்டதுன்பஞ் சொல்லுந்தரமோ? அவற்றைக் கண்டார் யாவரும் பழநிப்பதியே! பரமகுருவே! தண்டாயுத பாணியே! தேவ ரீர்க்கு அபயம் அபயம்என்று அன்புடன் இரங்கித் துதித்தார்.

சுவணகுத்தன் நீரில் முழுகி யிறக்கவும், மகேசை நெருப்பின் முழுகியிறக்கவுந் தீர்மானித்தது கண்ட தண்டதர சுவாமி, பக்தவற்சல னாகலால் அவர் துன்பங்களை நீக்கத் திருவுளங் கொண்டு கடப்ப மலா மாலை யணிந்த சிகையும், இரத்தினச் சுட்டி யணிந்த நெற்றியும், இரத்தினக் குண்டலங்க ளணிந்த திருச் செவிகளும், கோவைப் பழம்போலும் வாயும், இளமுறுவலும் அழகைச் செய்ய, மாற்றுயாந்த பொன்னாற் செய்யப்பட்ட புலிநகங்களுடன் கூடிய பஞ்சாயுத மணியும், இளந்தோளும், இரத்தின மோதிரமணிந்த விரல்களும் ஒளியை வீச, பட்டுடையும் அரைஞாணும் ஏனையாபரணங்களும் மின்ன, தட்டை, சிலம்புமுதலிய ஆபரணங்கள் ஒலிக்குந்திருவடிகள் நோவத் தீர்த்தத்தினின்றும் எழுந்து வருவார் போலச்சுவண குத்தனுக்கும் அவன் மனைவிக்கும் முன்னர்த் தோன்றியருளினர்.

வணிகனும் மனைவியுங் கண்டு கரையிலாத ஆனந்தமுற்று, தமது புத்திர னென்று எடுத்து மார்போடணைத்து, "குலமணியேயாண்டிச-

சென்றாய். புத் என்னும் நரகத்தில் யாங்கள் வீழ்ந்துவருந்துவேமென்று இரங்கி வந்தனையோ" என்று பலவாறு கூறிமகிழ்ந்தனர். அதுபோது சுவண குத்தனையும் மகேசையையுந் தடுத்தாட்கொள்ள விரும்பிப்பழநிப் பெருமான் குழந்தைவடிவை மறைத்து, ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களும், அவற்றிற் பொருந்திய ஆயுதங்களும், அருள் பொழியும் பதினெட்டுத் திருக்கண்களும், மயில்வாகனமுந் தோன்ற ஆகாயத்திற் பிரசன்னமாயினர். தேவர்கள் பூமாரிபொழிந்தார். மண்ணவர்கள் மழை பொழிந்தார். வணிகனும் மனைவியும் பரவச மடைந்தார். தேவதுந்துபிக ளொலித்தன. குத்தனும் மகேசையும் தெளிவுற் றெழுந்து பெருமானை வணங்கினர். அறுமுகக் கடவுள் திருவாய் மலர்ந்தருள்வார்.

"வழிவழி யடியீர்! புத்திரப் பேற்றைத் திருமாலிடங் கேட்டீர். கோவிந்தன் நுங்கட்குப் புத்திரப் பேரில்லை யென்றான். நீவிர் பிறந்து செத்தாலும் புததிரன் வேண்டு மென்றீர். அதனால் அவனதுகையின்க ணுள்ள நமது பாஞ்ச சன்னியம் புத்திரனாகப் பிறந்துகாலம்வர, குளத் துண் மூழ்கிச் சங்காகி வைகுண்ட மடைந்தது. நுங்கள் வாட்டங்கண்டு, அதனைத் தீர்க்கும்படி குழந்தையாய் வந்தேம்" என்று பழநிப்பெருமான் பலவரங்களையுங் கொடுத்து மறைந்தருளினார். வணிகனும் மனைவியுஞ் சிலகாலம் பெருமானை யுபாசித்து அவர் திருவடியை யடைந்தின்புற்றார்.

சுவண குத்தனும் மனைவியும் உய்யும் பொருட்டுக் குழந்தைவேலப்ப மூர்த்தியாய் வந்தருளினமையாற் குழந்தை வேலப்ப மூர்த்தியெனப் பெயர் பெற்றார் செட்டிக்குப் பிள்ளையா வந்தமைகுறித்துச் செட்டி யெனவுங் கூறப்பட்டார்.

(பழநித்தலபுராணம்.) சுவணகுத்தச் சருக்கம்.

எடுத்தனைக்கு மதுபொழிந்தி ணிருவரையு முலகறியத்
தடுத்தடிமை கொளவேண்டிச் சண்முகமாய்ப் பன்னிருகைத்

தொடுத்தபடை களுங்கருணை சுரந்தநய னமுந்தோகை
மடுத்தமயி லுந்தோன்ற நின்றனன்வா னவர்கோமான்.

முன்னீர்மா தவநெடுநாண் முயறலுமுந் நீருறங்கு
மைந்நீர்மே னியன்றோன்றி மகப்பெறன்மற் றில்லையென்றான்
பின்னீர்பெற் றிறந்தாலு மகப்பேற லருள்கவென்றே
சொன்னீரா கலின்மகவாய்த் தோன்றியதொண் காச்சங்கம்.

ஆவலினம் பருவம்வைகி யடைந்ததுமீண் டதுபுரிமால்
யாவதும்யா மளியுடையீ ராதலினிவ் வாறுநும்பாற்
றூவறவாற் றினமென்றுச் சாற்றிவரம் பலநல்கித்
தேவதே வன்றிருவா வினன்புரிச்சே திமஞ்சென்றான்.

குழந்தைவேலப்ப மூர்த்தயே நம:

முப்பத்துநான்காவது,

கோரநிருதாரி மூர்த்தி.

அறுபத்து நான்கு திருவிளையாடல்களையுங் குமாரக்கடவுள்நடித்துக் காட்டத் தரிசித்த பெரும்பேறுடைய விஜயனுக்குக் குருகன் பிறந்தான். அவனுக்கு விருகன் பிறந்தான். விருகராசனுக்குப்பாகு என்னும் அரசன் மகனானன். அவன் அரசாளுங் காலத்திற்கேகய தால சங்காதியர்களாலே வெல்லப்பட்டு இருமனைவியருடன் வனம்சென்றான். அங்கு அவன் மனைவியருள் மூத்தவள் கருப்பவதியானாள். இளையமனைவி பொறாமை கொண்டு உணவுடனே விடத்தையும் ஊட்டினாள்.

அதனால் அக்கருப்பம் எழாண்டளவும் வயிற்றில் இருந்தது, அதற் குட் பாகுராசனும் இறந்தான். அப்போது கருப்பவதியான மனைவி தன்

கோரமிருதாரிமூர்த்தி.

கணவனுடன் இறக்கத் தீர்மானித்து விறகடுக்கினள். முக்காலமு முணா ந்த அவுர்வமுனிவர் தடுத்துத்தம் ஆச்சிரமத்திற்கு அழைத்துச்சென்று உபசரணை செய்தனர். சிலநாள் கழிந்திடப்போழகுடைய ஒருபுத்திரன் விடத்துடன் கூடப்பிறந்தான். நஞ்சுடன் கூடப் பிறந்தமையாற் சகரன் எனப் பெயரிட்டார் ச=கூட, கரன்=நஞ்சுடன் பிறந்தவன். கரம்= நஞ்சு. அவன் விதர்ப்பைசுமதி யென்னும் இருமனைவியரை விவாகஞ் செய்தான். அவருள்மூத்தமனைவியிடம் உதித்தான் அசமஞ்சன். அவன் மகன் அஞ்சுமான். அவன் புதல்வன் திலீபன். அவன்மகன்பகீரதராசன்.

இப்பகீரதராசன் அரிய தவங்களைச்செய்து கங்கையைப் பூமியிற் கொணர்ந்து தன்மூதாதையரை நற்கதி சேர்த்துப் பெரும்புகழுடன் அரசாண்டான். அதுகாலை, கோரன் என்னும் இராக்கதனொருவன் தவபலத்தினலே யாவரினும் மேம்பட்டு மிக்க வலியுடையனுய்த், தேவர், முனிவர் திசைகாப்பாளர் யாவரையும் வென்று பூவுலகிற்குவந்து பகீரதனேடு எதிர்த்தான். பகீரதன் தன் நாற்படைகளுடன் தீரத்துடன்நின்று பொருதும், கோரன் மகாகோபத்துடன் சேனைகளை யெல்லாம் அழித்து, பகீரதனைக் கையாலெடுத்துப் பந்துபோற் சுழற்றி வீசினன். அந்தரத்திற் சென்ற பகீரதன் மிக்க நெடுந்தூரத்திலுள்ள ஓர்வனத்தில் விழுந்தான். இங்கேகோரன், அரண்மனையுட்புகுந்து தன்னணை செலுத்தி எவரையும் அடக்கி யரசாண்டான். மனைவியும் மக்களும் பகீரதனிடஞ் சார்ந்தார்கள். அவற்றை யெல்லா மறிந்த பகீரதன் இதற் கென்செய்வோம். கோர ராக்கதனுடன் யான் சண்டைசெய்து வெற்றிகொள்ளல் முடியாது என்று வருந்தி மனைமகா ருடன்வா வனங்கடோறுஞ் சென்றன். செல்லுங் காலத்துப் பிருகு முனிவரின் ஆச்சிரமந்தோன்ற அங்குப்போய், அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நடந்ததெல்லாம் உரைத்து, அடியேன் உய்வதற்கு உபாய மருளுதல்வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

முனிவர் அபயங் கொடுத்து, அரசனே! கோர ராக்கதன் தவவலிமை யுடையவன். திரிமூர்த்திகள்வந்து எதிர்ப்பினும் அவனைவெல்லுதல் அரிது. நீயும் நின்மனைவி மக்களும் ஒருமை யுற்று அடியரிடர்தீர்க்குஞ் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து, அவரது விரதங்களுட் சிறந்தசுக்கிர வார விரதத்தை விதிப்படி மூன்று வருடம்அநுட்டிப்பீராக. அதன்பின் முருகக கடவுளின் றிருவருளாலே முன்னர்ப்போல அரசாட்சி பெற்றுச் செல்வ மோங்கி வாழ்வீர் என்றார். அச்சொற்களை யமிர்தம்போ லுட்கொண்டு அரசனும் மனைவியும் பிள்ளைகளுஞ் சேர்ந்து அநுட்டித்தார் சுக்கிர வார விரதத்தை. மூன்றாம் வருடத்து இறுதியிலேசுப்பிரமணியப் பெருமான் றோன்றி, "நமது வேல் கோரனைக் கொல்லும். நீவிர் பயமின்றி வேண்டிய செல்வத்துடன் அரசாட்சி செய்துவாழ ஆங்குச்சென்மின்" என்றுகட்டளை யிட்டருளினார். அரசனும் மனைவி மக்களும் வணங்கித் துதித்து நகர நோக்கிச் சென்றார். உடனே படைக்கல நாயகமாகிய வேலாயுதஞ் சென்று இராக்கத னுயிரையுண்டு உடலையுங்கண்டித்தது. பகீரதனும் மனைவி மக்களுங் கண்டு பகவானைத் துதித்து, அவர் திருவருளாலே குறைவற வாழ்ந்தனர்.

மெய்யன்பனான பகீரதற்காக, மகாபல முடைய கோரன் என்னும் நிருதனைக் கொன்று காத்தருளினமையாற் கோரநிருதாரிமூர்த்தியாயினார்

கந்தபுராணம்-கந்த விரதப் படலம்.

பகீரத னென்னும் வேந்தன் படைத்தபா ருலகை யெல்லா
நிகரறு கோர னென்னு நிருதனங் கொருவன் வௌவ
மகவொடு மனையுந் தானும் வனத்திடை வல்லை யேகிப்
புகரவன் றனது முன்போய்த் தன்குறை புகன்று நின்றான்.

பார்க்கவ னென்னு மாசான் பகீரத னுரைத்தல் கேளா
வேற்கான் மகிழு மாற்றால் வெள்ளிநல் விரதந் தன்னை

நோற்குதி மூன்றி பாண்டு நுங்களுக் கல்லல் செய்த
மூர்க்கனு முடிவ னீயே முழுதுல காள்வை யென்றான்.

நன்றென வினவி மன்னன் ஞாயிறு முதலா நாளி
லொன்றெனும் வெள்ளி முற்று முணவினைத் துறந்து முன்பின்
சென்றிடு மளவின் * யாண்டு மூன்றளவு நோற்றான்.

நோற்றிடு மளவி லைய னுதியுடைச் செவ்வேல் வந்து
மாற்றல னுயிரை யுண்டு வல்லையின் மீண்டு செல்லப்
போற்றியே பகீர தப்பேர்ப் புரவலன் றன்னா ரெய்தி
யேற்றதொல் லரசு பெற்றா னின்னுமோர் விரதஞ் சொல்வாம்.

கோர நிருதாரி மூர்த்தயே நம:

முப்பத்தைந்தாவது,

இடும்பாசுர சிக்ஷாரக்ஷக மூர்த்தி.

செந்தமிழ் ஆசிரியராகிய அகத்திய முனிவர் கந்த மலையின் சிகரங்களுட் சிறந்த சத்திசிகரம் சிவசிருங்கம் என்னுமிரண்டனையும் சத்தி சிவமாகப் பாவித்துப் பூசித்துக் கந்தவேளின் உத்த வின்படி அவற்றைப் பொதிய மலையின் கண் கொண்டு வந்து பூசிக்கநினைத்துப் பெயர்த்துக் கொண்டு பூவுலகில் வந்தார். பூர்ச்ச வனம் என்னுந் தலம் வந்ததும் செவ்வேளின் றிருவருளினாலோ அச்சிகரங்கள் இரண்டனையும் அங்கு வைத்துப் பொதியை நோக்கி வருவாராயினார்

சூரபன்மன் சிங்கமுகன் தாரகன் என்னும் அசுரர்களின் சேனைகளுக்கும் அக்குவத்தாருக்கும் வில்வித்தை முதலிய அத்திர சத்திர வித்தைகளைப் பயிற்றிய இடும்பாசுரன் என்பவன், குமாரக்கடவுளின் வேலா

இடும்பாசுர சிக்ஷாரணிய மூர்த்தி.

யுதத்தாலே அவர்கள் யாவரும் அழிந்தமையால், தன் மனையாளான இடும்பியுடன் மகேந்திர புரியை விடுத்து * வனத்திற்செல்வானாயினன். வழிச்செல்லுங்காலைத் திருக்குற்றாலத் தலசமீபத்திலே அகத்தியரைக் கண்டு வீழ்ந்து வணங்கித் தன் வரலாறு கூறி, நாயினுங் கடையேனாகிய அடியேனை யாட்கொண்டருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். முனிவர் பெருமான் முகமு மிதயமு மலர்ந்து, அவ்வா றுருக வென்று கையமைத்து ஒன்று கூறும்.

அன்பனே! திருக்கேதார தலத்திற்குப் பக்கத்திலுள்ள பூர்ச்ச வனத்திலே இரு சிகரங்கள் இருக்கின்றன. அவற்றை யெடுத்து நம் பொதியைக்குக் கொண்டு வருவையேல், அதனாற் பெறற்கரும்பேற்றை யடைவாய். அவ்விரு சிகரங்களின் மகிமை கூறுதற் கியலாது என்று வழிகளும், உணர்த்தி, மூலமந்திரமும் வழிபாடும் உபதேசித்து அனுப்பினர். இடும்பன் தன்மனைவியாகிய இடும்பி யென்பாள் காய் கனி கிழங்கு முதலியன உதவி யுபசரித்துவர, அகத்திய முனிவர் தெரித்த வழிச்சென்று, ஆங்காங்குள்ள தலங்களை யெல்லாந்தரிசித்துப் பூர்ச்சவனம் என்னுந் தலத்தையடைந்து சத்திசிகரம்சிவசிகரம்என்னும் இருசிகரங்களையும் தரிசித்தானந்தித்தான். யான்செய்த தவமே பெருந்தவ மென்று புகழ்ந்தான் இடும்பிபணிகள் செய்ய, இருமலைகளையும்பூசித்தான். அகத்தியமுனிவர் உபதேசித்த மூலமந்திரத்தை விதிப்படி யுளத்தழுத்தித் தவஞ்செய்தான். அப்போது பிரமதண்டம் புயதண்டாகவும், அட்டதிக்கு நாகங்

* வனசஞ்சாரஞ் செய்யுங் காலத்துச் சிவபெருமானைப் பூசித்துத் தேவசேனாபதியாகிய குமாரக்கடவுளின் திருவருளுடன் அவர்க்கு அடிமையாகவேண்டுமென்றே பூசித்தான் என்றும், சிவபெருமான் தோன்றி நினக்கவை கூடுமென்றாரென்றும், அத்தலம் இடும்பவனம் என்றும் கூறுவார். அவ்விடும்பவனம் என்னும்தலம் கோயிலூருக்குத் தென்கிழக்கேபத்துமைலில் உள்ளதென்றறிக. திருக்கன்றாப்பூரினும் பூசித்து வரம் பெற்றானென்றுஞ் சரிதம்.

களும் கயிமுகவும் தன் பக்கத்தில் வந்தமர்ந்தமை கண்டு அதிசயித்து, மேகம்போல் எழுந்து கைகுவித்து, இருமலைகளையும் பாம்புகளால் உறி போலச்செய்து அகப்படுத்திப் பிரமதண்டுடன் பிணித்து, மூல மந்திரத்தை யுன்னிப் புயதண்டத்தைத் தோளில் வைத்து, மண்ணில் முழங்காலை யூன்றி யெழுந்தான் கந்த நாயகன் றிருவருளாலே மலைகள் இரண்டு மெழுந்தன. இடும்பன் அவைகளைக் கவ்விக்கொண்டு, காவடி யெடுப்பார் போல நடந்து கடந்தான். செவ்வேளின் றிருவிளை யாட்டினாலே விழிமயங்கி விந்த மலை வழியாகச்சென்று மல்லிகார்ச்சுனம் திருக்காளத்தி திருவண்ணாமலை விருத்தாசலம் புட்பகிரி என்னுந் தலங்களை யடைந்துவழி தெரியானாகை, செவ்வேள் ஓர் அரச குமார வடிவங் கொண்டு இடும்பன் எதிர்சென்று, நீ இவ்வழிபோய் வராகமலையிற் சென்று, தங்கி அவ்வழியேபொதியைக்குப் போதி யென்றார். இடும்பன் அகமகிழ்ந்து சென்று வராகமலை வழி போனான்.

திருவாவினன்குடியாகிய பழநித்தலத்தை யடைதலும் குமரன்றிரு விளையாட்டானே யிடும்பனுக்கு அதிபாரமாகத் தோன்ற, உடலம்இளைத்து அங்கே யிறக்கி வைத்து, வாமதேவ முனியாச்சிரமஞ் சென்று இடும்பி யுதவிய கந்தமூலங்களை யுண்டு இளைப்பாறி, மலைகளைத்தூக்க ஆரம்பித்தான். மலைகள் எவ்வளவு முயற்சியாகத் தூக்கினும் மேலெழாமை கண்டு சுற்றிப் பார்த்தான். சிவகிரியின் ஒருசாரிற் குராமர நிழலிலே மழலை முதிர்ந்த கனிவாய்ச் சிறுவனிற்பது கண்டு, இறும்பூதுற்று, இக்கட்டழகுடைப் பாலன் இயக்கனோ ? முருகனோ ? என்றெண்ணிச் சமீபித்தான். பிடரிற் றாங்குங் குஞ்சியும், கருணைக் கடலொழுகுந் திருக்கண்களும், ஆயிரகோடி சூரியர் ஒன்றெனத் திரண்டாற்போன்ற காந்தியும், உபவீதமணிந்த மார்புந் தண்டாயுத பாணியும் விளங்க நிற்றல் கண்டு குமாரனே ! நீ தனி நிற்றலென் ? வழிதப்பி வந்தனையோ ? என்றுவினவினன். குமாரக் கடவுளொன்று முரைக்காது நகைத்தார்.

இடும்பன் சினங் கொண்டு, குன்றினை விடுத்து அப்பாற் போதி. யான் கொலைசெய்யும் அசுரனொரு மென்றான். குமார சுவாமி, " அசுர ! நீ கொண்டு வந்த இம்மலைகள் எம் இருக்கை யாகும். உனக்கு வலிமை யுளதேற் கொண்டுபோதி" என்றார். இடும்பன் கோபம் பொங்க வஞ் சனையில் வல்லைபோலும். நன்று நன்று. யானோ திருமாலினைச் சிவ னுக்கிய குறுமுனியின் அடியவன். உன்வலி காண்கின்றே னென்று பிசைந்த கையினன், கடித்த பல்லன், நெறித்த புருவத்தன், மடித்த வாயினனுய்க் குராவடியிற் பாய்ந்தான்.

பாய்ந்த காலத்துச் சுடர் வேலோ, அடர்கோலோ யாதோ கொன் றது அறிகிலேம் ஏறதண்ட முகடு உடைந்து வீழ்ந்தாற்போல வீழ்ந்து இறந்தான் நாகங்களும் பிரமதண்டும் அஞ்சி யகன்று அகத்தியமுனிவர்க்கு அறிவித்துத் தத்த மிருக்கை சேர்ந்தன. விழுந்திறந்த சததங் கேட்ட இடும்பி மனம் பதைபதைத் தோடிவந்து புலம்பி மாழ்கினுள். குமாரக் கடவுள் மயில்வாகன ரூடராய்க் கணங்கள் புடை சூழ, வாத்தியங்கள் ஒலிப்ப வந்தருளியது கண்டு துதித்து மங்கிலியப் பிச்சை கேட்டாள். குமாரப் பெருமான் திருக்கடைக் கண்நோக்க இடும்பனுந் துயில்விட் டெழுந்தான் போல வெழுந்துவணங்கித் துதித்து, அடியனேன் இம்மலை யடிக்க ணிருந்து தேவரீரது குற்றேவல் புரிந்திருக்க வரம் அருளல் வேண்டுமென்று இரப்ப, பெருமானும் அவ்வாறருளிச் சென்றார்.

இடும்பாசுரனைத் தண்டித்து, மலையைக் காக்கும் பெருவரமளித்து இரட்சித்தமையாற் சுப்பிரமணியப் பெருமான் 'இடும்பாசுர சிக்ஷா ரக்ஷக மூர்த்தி யாயினர்.

பழநித் தலபுராணம் - மலைகள் பழநியடைந்த சருக்கம்.

கொடுந்தொழிற் சூர னாதி கொலைகணி யவுணர்க் கென்று
மடும்படைத் தொழில் பயிற்று மடற்பெருங் குரவர் கோமா
னிடும்பனென் பவன் கொல் லியத் தெறும்வலிந் தடந்தோள் வீரன்,

௨௩அ இடும்பாசுர சிக்ஷா ரக்ஷக மூர்த்தி.

இன்றுதடுத் தாண்டனையென் கொண்கனையென் றூறு
மிரு நிலத்தில் வானி
லுன்றனடிச் சேரியரிற் றமியளுமோர் தொழும்பி யன்றோ
வும்பர் கோவே
மின்றவழு மங்கிலியப் பிச்சையிட வேண்டுமென
விழிநீர் சிந்தி
முன்னொழுதா டனக்குவிழிக் கடையளித்தான் முடிந்தானு
மெழுந்தான் மன்றே.

ஞானகுண னுடனிவ்வா றேத்திநவின் றிடுமேல்லை
யீனவினை தொலைந்தோய்கேள் யாதுநீ குறுமெனச்சேய்
தானவில யாதுபெறு வதுதமியென் றனைவாதுன்
பானவிர மிசையேவல் பணித்திடலே பணியென்றான்.

இடும்பாசுர சிக்ஷா ரக்ஷக மூர்த்தயே நம:

முப்பத்தாறாவது,

சர்வலோக சுதைப்பிர தக்ஷிண மூர்த்தி.

முன்னொரு காலத்து ஆயிர நரம்புகளையுடைத்தாய மகதிவீணையில் வல்ல நாரத முனிவர் சத்திய வுலகஞ் சார்ந்து, பிரமதேவரை வணங்கி, அவரை மகிழ்விக்க எண்ணி, சித்திரப் படத்துள் இருந்த மகதி யாழை யெடுத்து மாதங்கியென்னுந் தெய்வத்தைத் தொழுது பாடத் தொடங்கினர். பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்னும் எட்டுக்கலைத் தொழில்களானும்



சர்வலோகக்ஷணைப்பிரதக்ஷிணமூர்த்தி.

உ௯ரO சர்வலோக க்ஷணப்பிரதக்ஷிண மூர்த்தி.

இசை யெழுப்பி, பண்பாருபாட்டிற் குற்றந்தீர்ந்து, மெல்லிய விரல்கள் பாடுகின்ற வண்டுக் கூட்டங்களைப்போல நரம்புகளின் மீதுபடர, வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், அள்ளல், பட்டடை என்னும் இசைக்காண வுறுப்புக்கள் எட்டினுலும் பருந்தி னியக்கமும் நிழலும் போலப்பாடினர். சபையி னுள்ளாரும் பிரம தேவரும் சிவபெருமானது கீதாமிர்த விசைகேட்டுக் களித்தனர், அது பற்றிப் பிரமர் ஒரு மாதுளம்பழங் கொடுத்தார், அதனைச் சிவபெருமானது திருவடியில் வைதது வணங்கினர் நாரதர். பெருமானர் விருப் புடனெடுத்து நாரதர்க்கு நல்லருள் புரிநதமர்ந்த காலை, விநாயகக்கடவுளுஞ் சுப்பிரமணியக் கடவுளும்வந்து தமக்கு அப்பழத்தைக் கொடுக்குமாறு வேண்டினர்.

பெருமானர் அதனைப் பாதி பாதியாகப் பகிர்ந்து அளிக்கலாமன்றோ? பிருதிவி முதல் நாதமீருன அளவிலாதவுலகங்களை யெல்லாம் ஒருநாளிற் சுற்றிவருகின்றவன் யாவனோ அவனே தேவர் யாரினும் பெரியோன். அவனே பரப்பிரமம் என்றுதேவர் முதலிய பதினெண் கணத்தவர்களுஞ் சபையிலே பேசித் தீர்மானித்தார். அவ்வணஞ் • சுற்றி வருதற்கு விட்டுணுமுதலிய தேவர்கள் தாமும இயலாதென்று இருந்தார். தேவர்களுக்கு நோந்த ஐயத்தை யறுக்கவும், சாவ லோகங்களையும் ஓர் நொடிப் பொழுதினுள் வலம்வாவும், எல்லாவற்றையும் அறியவும், படைக்கவும் காக்கவும் அழிக்கவும் மறைக்கவும் அருளவும் வல்லவர் சுப்பிரமணியக் கடவுளே யென்று அறிததற்காகவும் ஒருபாயஞ்செய்வாராயினர்.

"அன்புடை மைந்தர்களே! நீவிர் இருவரும் ஒருகனியைக் கேட்பின் என்னென்று உதவுவேம். நும்மில் எவர் ஒருகணத்துள் உலகை யெல்லாப் வலம்வருகின்றனரோ அவர்க்கே இப்பழம் உரியதாகும்" உன்று திருவாய் மலர்ந்தருளினர். இச்சொல் முடியு முன்னரே சர்வ சர்த்த[illegible]யோகிய சுப்பிரமணியப் [illegible] பாவியாகிய

மயில் வாகனத்தின்மீது இவர்ந்து விரைவிற் சென்றார். வாயுவேகம் மனோவேகம் என்று சொல்லப்படும் வேகங்கள் அவர்போன வேகத்திற்கு ஓரிலேசா லேசந்தானும் ஒவ்வா. அவ்வேகம் யாராற் கூறலாகும். அதலம் விதலம், சுதலம் நிசாதலம் தராதலம், இரசாதலம், பாதலம் என்னும் ஏழனையும், அவற்றிற்குமேல் உள்ள எட்டிலக்கம் யோசனை தூரமுடைய கனிட்டம் என்னும் எட்டாவது பாதலத்தையும், பூமிக்கணுள்ள சத்த தீவம், கடல் மலைகள் முதலாயினவற்றையும், மேகம், வாயு, சூரிய சந்திர நட்சத்திர மண்டலங்களையும், துருவ நட்சத்திர முள்ள புவர்லோகம், இந்திரன் வாழும் சுவர்லோகம், மார்க்கண்டேயர் முதலாம் இருடிகள் வசிக்குஞ் சனலோகம், பிதிரர் வாழுந் தவலோகம், சனகாதியர் தவம்புரியும் மகலோகம், விதியோன் வீற்றிருக்குஞ் சத்தியலோகம், முண்டகக்கண்ணன் அண்டியிருக்கும் வைகுண்டலோகம் முதலிய வுலகங்களையும், இங்ஙனமே பிரமாண்டங்களையும், பிருதிவி யண்டத்துள்ள ஆயிரகோடி யண்டங்களையும், அப்பு அண்டம், தேயு அண்டம், வாயு அண்டம், ஆகாய அண்டம், தன்மாத்திராண்டம், அகங்கார புவனமுதலாக நாதமீறு யுள்ள உலகங்களான பஞ்ச கலைகளுக்கு முட்பட்ட மந்திரம், பதம், வன்னம், தத்துவம், புவனம் என்னுஞ்சொற்பொருட் பிரபஞ்சங்களை யெல்லாம் ஒருகோடியிற் கண்டுதிருக் கயிலை நோக்கினார்.

சுற்றி வருதற்குட் கடலெத்தனை, மலைகளெத்தனை, திக்கு யானைகள், திக்கு நாகங்கள் எத்தனை, திசைப் பாலகர்கள் எத்தனையர்? சூரிய சந்திர அக்கினி வாயு மேகங்கள் நட்சத்திரங்கள் எவ்வளவு, பிரம விட்டுணுக்களும் சத்தியலோக வைகுண்டங்களும் இந்திரர்களும் சுவர்க்கங்களும் உருத்திரர்களும் புவனங்களும் எண்ணிறந்த வரும் எண்ணிறந்தனவு மாகும். யாவரையும் யாவற்றையுங் கண்டு செல்ல அவர்களும் இவரை அஞ்சலி செய்கா வணங்கி யுள்ளார். எங்கும் வியாபியாய்ச் சாவ

உசுஉ சர்வலோக க்ஷணப் பிரதக்ஷிண மூர்த்தி.

லோகங்களையும் தமக்கு அங்கமாக்கொண்ட அத்துவாமூர்த்தியாகிய நம் பெருமானுக்கு இஃதோரருஞ் செயலோ ? இது பற்றியே.

ஈசோப நிடதமும்.

அநேஜதேகம் மநஸோ ஜவீயோ நை
நத்தேவா ஆப்நுவன் பூர்வமர்ஷத் !
தத்தாவ தோந்யா நத்யேதி திஷ்டத்
தஸ் மிந் நபோ மாதரிச்வா ததாதி !

என்று முழங்கிற்று. (அதாவது பதியொருவர். அவர் அசைபவரல்லர். மனத்தைப் பார்க்கினும் அதிக விரைவாகச் செல்பவர். ஐம்பொறிகளினும் மிக்க வேகமாக முற் செல்லும் இப்பதிப் பொருளைப் பொறிகளி லொன்றும் அடையமாட்டாது அவர் திரமாக விருந்தும் விரைவாகச் செல்லும் மனமுதலிய கருவிகளையுங் கடந்து செல்கின்றார். காற்று அவருழை யிருந்தே உயிர்களுக்கு உடலினசைவைக் கொடுக்கின்றது என்பதேயாம்.)

இங்ஙனம் எங்கும் நிறைந்த பழம்பொருள் எங்குஞ்சென்று வலம் வந்தா ரென்பது உபசாரமேயாம். சொல்லளவை பொருளளவைகட் கடங்கா உலகத்தை ஒரு நொடியில் வலம் வருதல் யாவரா லியலும். எங்கும் முகங்களும், எவ்விடமுங்கண்களும் எவ்விடமுஞ்செவிகளும், எவ்விடமும் கைகளும், எவ்விடமுந் திருவடிகளும் எவ்விடமும் வடிவமுமாகப் பெற்றார்ஒருவர்க்கன்றி யேனையோர்க்கு முடியா. அத்துணைப்பெருஞ் சிறப்புடைய பரம் பொருள்தாம் என்பதை விளக்குதற்கன்றோ சுப்பிரமணியப் பெருமான் உலகையொருநொடியில் வலம் வந்து அவ்வுண்மையை விளக்கியருளினார். இவ்வுண்மையை...

யசுர்வேதச் சுவேதாச்சுவதா உபநிடதமும்,

[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] ||

புருஷ ஏவேதஞ்சர்வம் யத்பூதம் யச்சபவ்யம் !
உதாம்ருதத்வஸ்யேசானோயதந்நே நாதிரோகதி !
ஸர்வத : பாணிபாதந்த சாவதோக்ஷி சிரோமுகம் !
ஸர்வத · ச்ருதிமல்லோகே ஸர்வமாவருத்யதிஷ்டதி !
ஸர்வேந்திர்ய குணுபாசம் ஸர்வேந்திர்யவிவர்ஜிதம் !
ஸர்வஸ்ய பிரபுமீசாநம் ஸர்வஸ்ய சரணம் சுஹ்ருத் !

என்றுகூறி வெளியாக்கிற்று. இக்கருத்தையே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளுந் தாம் அருளிச் செய்த கந்த புராணத்தில்,

எங்க ணும்பணி வதனங்க ளெங்கணும் விழிக
ளெங்க ணுந்திருக் கேள்விக ளெங்கணுங் கரங்க
ளெங்க ணுந்திருக் கழலடி யெங்கணும் வடிவ
மெங்க ணுஞ்செறிந் தருள்செயு மறுமுகத் திறைக்கே.

என்று எடுத்துரைத்தருளினர். இங்ஙனஞ் சண்முகப் பிரபு உலகைவலம் வந்து கயிலை வருமுன் என்செய்தார் கணபதி. சர்வலோகங்களிலும் பால்நீர், வெளிகாற்று, உடல் உயிர், கண்ணொளி சூரியவொளிபோலப் பிரிவற அத்துவிதமாக வியாபித்து நிற்குந் தன்மை

உ௪௪ சர்வலோக க்ஷணப் பிரதக்ஷிண மூர்த்தி.

யாரை வலம்வந்து, உலகமும் பல்லுயிரு மொன்றி நிறைந் தோங்கியில கும் பரஞ்சுடர் தேவரீ ரன்றோ? தேவரீரை வலம் வந்தது உலகைச் சுற்றியதனோ டொக்கும். ஆகலாற் கனியைத் தந் தருள்க வென்று வாங் கிக் கொண்டனர்.

குமாரப் பெருமான் சர்வ லோகங்களையும் ஒருகணத்துள் வலம் வந்து சர்வ வியாபகத்துவ சர்வாந்தர்யாமித்துவ சர்வபூதேச, சாவவிசு வரூப மூர்த்தி தாமென்பதை விளக்கி யருளலாற், சர்வலோக க்ஷணப் பிரதக்ஷிண மூர்த்தி யாயினர்.

பழநித் தலபுராணம் - திருவாவினன் குடிச்சருக்கம்.

மகதி யாழ்முனி விடைகொண்டு கனிவல கயிலைப்
பகவன் முன்புவைத் திறைஞ்சின னெடுத்ததைப் பரம
னிகல்க டந்தவை வேற்படைச் சேயினை யானைப்
புகர் முகத்தனை நோக்கினன் புன்னகை முகிழ்த்தான்.

யாவராயினுமிக்கனியினைழந்துளோர்கணத்திற்
பூவலங்கொடுவருதிரேலவர்க்கெனப்புகலத்
தூவியம்பசுந்தோகைமாமஞ்ஞைமேற்றோன்றித்
தேவர்சேனைகாவலன்கிரியிழிந்துபார்சேர்ந்தான்.

சீரு ருத்திரர் வசுக்கண் மாமுனிவர்
தீர்த்தர் பூத்திர ணிரப்பவே
மேரு வாதிகிரி புவன மெண்களிறு
விண்டு வாதிபுடை மண்டவே
சார தத்தலை சிறந்துளோ ரொடு
மீச னஞ்சலி திருத்தவே
கார்ம யிற்பரி நடாவிபோய்விநோர்
கணத்தனிற் கயிலை மேவினான்.

சர்வலோக க்ஷணப் பிரதக்ஷிண மூர்த்தயே நம:

முப்பத்தேழாவது,

தண்டதாரக் குமார மூர்த்தி.

குமாரப் பெருமானார் உலக மெல்லாவற்றையும் ஒரு நொடியில் வலஞ்செய்து திருக்கயிலை மலைவந்தார். அங்கு விநாயகக் கடவுள் * மாதுளம்பழம் வைத்திருத்தல் கண்டு, பிணக் குற்றார்போல, மயிலைவிடுத்து, மகுடம் குண்டலம் பொன்னாடை முதலிய ஆபரணங்களை யெல்லாங் கழற்றி யெறிந்து, கேதனம் வச்சிரம், அங்குசம், விசிகம், வேல், பங்கயம், கண்டாமணி, மழு, வில், வாள், தோமரம் என்னும் ஆயுதங்களையும் வீசி, தண்ட மொன்று கையினேந்தி, கௌபீன தாரியாய்த்திருக்கயிலையினின்றும் புறப்பட்டுத் தென்றிசை நோக்கிச் சென்று தேவகிரியை யடைந்தார். அங்கேதம்மை நோக்கித் தவஞ் செய்த முனிவர் தேவர்க்கு வரங்களைக்கொடுத்து, வைகா நாட்டிலே யுள்ள திருவாவினன் குடிக்குச் சென்று, சிவகிரி யமர்ந்து, இலக்குமி, சூரியன், காமதேனு முதலினோர்க்கு நல்லருள் புரிந்து பற்பல திருவிளை யாடல்களைச் செய்திருந்தார்.

இவண் உமாதேவியார் தமது செல்வக் குமாரர் உலகை வலம்வந்ததும், விநாயகர் கனிவாங்கியதும், அதனாற் பிணக் குற்று. அந்தக் குமாரர் தண்ட பாணியாக வெளிப் பட்டதும் அறிந்து, அவர்தம் பிரிவிற்குச் சிறிதும் ஆற்றாதவராய், இறைவருடன் திருவாவினன்குடிக்குச் சென்றனர். கதிரை வேலாயுதக் கடவுள் தாயையுந் தந்தையையும் வணங்கினர். திருமல ராகிய பரம சிவம் உளங் கனிந்து வேதாகம மோதுந் திருவாயினாலே இன் சொற்கள் கூறி யெடுத்தணைத்து முதுகு தைவந்து உச்சி மோந்து, அருகிருந்த பிராட்டி யாரைத் திருநோக்கஞ் செய்தார், உமையம்மையார் திருப்புன் முறுவல் கொண்டு,

---

* மாம்பழ மென்று சிலவிடங்களிலே கூறப்பட்டுளது.



தண்டதரக்குமார மூர்த்தி.

கந்தா வருக வுலகமெலாங் கணத்திற் புடைபோய் வந்தவொரு
காரே வருக மாதுளநற் கனிக்குப் பிரிந்தோய் வருகவரு
மெந்தாய் வருக வேள்வருக விளியோய் வருக வெவ்வுயிர்க்கு
மேந்தால் வருக தண்டதா வேறே வருக நங்கடிரு
மைந்தா வருக சிவகிரிநேர் வாழ்வே வருக வின்பமுள
மணியே யணியே வருகநலம் வந்தாய் வருக வருள்சுரக்குஞ்
சிந்தே வருக வினன்குடியிற் றிருவே வருக வருகவே
தேவே ஞானப் பழநீவா செல்வா வருக வருகவே.

என்று வருகைப் பருவங் கூறி வாரி யெடுத்துத் தோண்மேலணைத்து மீட்டும் இறைவன் கையிற் கொடுத்தனர். பெருமானார் மடியினில் வைத்துச் "செல்வக் கண்மணியே! நீ யென்று மிளமையை யுடையாய். எல்லா வறிவு முள்ளாய், நீ சிறுவனோ? இல்லை இல்லை. பெரியோன் கிழவோ னன்றோ! மாதுளங் கனியு மொருகனியோ? நீயே என்றுந் தெவிட்டாப் பேரின்பச் சுவையை யிடைவிடாது கொடுக்குஞ் சிவ ஞானப் பழம் ஆகும். அங்ஙன முள்ளபழநீ யாகவும், நுனக்கு வேறு பழமும் வேண்டுமோ? "என்றிவ்வாறு பலப்பல இனியமொழிகள் கூறி, "மைந்த! யாமுஞ் சத்தியும் நீயே யன்றோ? அது எம்முடைய ஐந்து முகமும், தேவியின் ஒருமுகமுஞ் சேர்ந்து நினக்குஆறு திருமுகங்களாக விருப்பதனு லறிதி. எம்மைக் குறித்துச் செய்யும் வழிபாடும், நின் னன்னையைக் குறித்துச் செய்யும் பூசனையும் நினக்கே யாகும். எம் மிருவரையும் பூசைசெய்தலையும் பலம் நின்னைப் பூசை செய்வதனு லுண்டாகும். நின்னைப் பூசித்தவர் எம்மிருவரையும் பூசித்தவ ராகின்றார்" எனத் திருவாய் மலர்ந்து அத்தலத்தில் வீற்றிருந்தனர்.

பரசிவப் பிரபுவுந் தேவியாரும் "பழநீ" எனப் புகன்றமையால் அத்தலம் அற்றைநாட் டொடங்கிப் பழநி யெனப் பெயர் பெற்றது,

தண்டதரக் குமார மூர்த்தி.

சுவாமியும் பழநி யாண்டவன் எனவும், தண்டாயுத பாணியெனவும் ஞானப்பல மூர்த்தி யெனவும் பெயர் பெற்றார். ஞானமாகிய பல மூர்த்தியென்க. பலம்=பழம் இம் மூர்த்தம் மேல் வருஞ்சாமவேத மகாமந்திர வசனப் பொருள்களை நுட்பமாயுணர்த்தக் கொண்டருளியதுமாம்.

சாந்தோக்கியோப நிடதம்.

ஆறாம் பிரபாடகம்—துவாதச கண்டம். க-உ

𑌨𑍍𑌯𑌗𑍍𑌰𑍋𑌧𑌫𑌲𑌮𑌤 𑌆𑌹𑌰𑍇𑌤𑍀𑌦𑌂 𑌭𑌗𑌵 𑌇𑌤𑌿 𑌭𑌿𑌨𑍍𑌦𑍍𑌧𑍀𑌤𑌿
𑌭𑌿𑌨𑍍𑌨𑌂 𑌭𑌗𑌵 𑌇𑌤𑌿 𑌕𑌿𑌮𑌤𑍍𑌰 𑌪𑌶𑍍𑌯𑌸𑍀𑌤𑍍𑌯𑌣𑍍𑌵𑍍𑌯 𑌇𑌵𑍇𑌮𑌾 𑌧𑌾𑌨𑌾
𑌭𑌗𑌵 𑌇𑌤𑍍𑌯𑌾𑌸𑌾𑌮𑌙𑍍𑌗𑍈𑌕𑌾𑌂 𑌭𑌿𑌨𑍍𑌦𑍍𑌧𑍀𑌤𑌿 𑌭𑌿𑌨𑍍𑌨𑌾 𑌭𑌗𑌵 𑌇𑌤𑌿 𑌕𑌿𑌮𑌤𑍍𑌰
𑌪𑌶𑍍𑌯𑌸𑍀𑌤𑌿 𑌨 𑌕𑌿𑌞𑍍𑌚𑌨 𑌭𑌗𑌵 𑌇𑌤𑌿 ॥

𑌤𑌂 𑌹𑍋𑌵𑌾𑌚 𑌯𑌂 𑌵𑍈 𑌸𑍋𑌮𑍍𑌯𑍈𑌤𑌮𑌣𑌿𑌮𑌾𑌨𑌂 𑌨
𑌨𑌿𑌭𑌾𑌲𑌯𑌸 𑌏𑌤𑌸𑍍𑌯 𑌵𑍈 𑌸𑍋𑌮𑍍𑌯𑍈𑌷𑍋𑌽𑌣𑌿𑌮𑍍𑌨
𑌏𑌵𑌂 𑌮𑌹𑌾𑌨𑍍𑌨𑍍𑌯𑌗𑍍𑌰𑍋𑌧𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 ।

ந்யக் ரோத பலமத ஆகரேதீ தம்பகவ இதி, பிந்தீதி பிந்நம் பகவஇதி கிமத்ர பச்ய சீத்யண்விய இவே மாதாநா பகவ இத்யாசா மம்கைகாம் பிந்தீதி பிந்நா பகவ இதி கிமத்ர பச்யசீதி நகிஞ்சந பகவஇதி!

தங்ஹோ வாசயம்வை சோம்யைத மணிமாநம் நநிபாலயசஎதஸ்ய வைகில சோம்யை ஷோணிம்ந ஏவம் மஹாந் ந்யக்ரோதஸ் திஷ்டதி

பழநித்தல புராணம்.

"தந்தை மலர்க்கைச் செழுங்கனிதன் றமையன் றளிர்க்கைதனிற் காணச், சிந்தை தெளிந்தாண் டொருவியுயர் தேவகிரிச்சே ரிமம்மைவெகி."

"சேயதிருவா வினன்குடியிற் சென்றான்குன்று தொறுநின்றான்"

ஈசனுருகி மடியினில்வைத் தென்று மிளேயோ யறிவுடையை
தேசுதருநம் வாணுதற்கண் மணிசேிறுவ ஞெபெரியை
வாசநறுமென் கனியுமொரு கனியோமதுர மொழிவாயாற்
பேசவரிய மறைஞானப் பிள்ளேபழநீ யெனப்புகன்றூர்.

கூறுடை யாளுங் குன்றக் குணப்பெருங் குன்று ஞானப்
பேறுடைப் பழநீ யென்னப் பெயராது மருவி யெங்க
ளாறுமா முகவன் வைகு நகாமு மன்று தொட்டு
வீறுதொல் பழநி யென்றே விளம்பின வுலக மூன்றும்.

தண்டதாக் குமார மூர்த்தயே நம:

முப்பத்தெட்டாவது,

புராண பாலனகிருபா மூர்த்தி.

தாம்பிர வன்னி நதிக்குத் தென் றிசையிலே செயந்தி மாநகரம், திருச்சீரலைவாய் எனவரும் பெயர்களை யுடைய திருச் செந்தூர் என்னுஞ் சுப்பிரமணிய தல முள்ளது. அது படைவீட்டுத் தலம் ஆறினுள் மிக விசேட முடையது. அவ்விடத்தி லெழுந்தருளி யிருக்கும் எமது பரம கிருபா நிதியாகிய குமாரக்கடவுளை மெய்யன்புடன் பூசித்து, அவரது திரு வடிகளையே யன்றி மறந்தும் புறந்தொழாத திரிசுதந்திரப் பிராமணமுனி

புராணபாலனகிருபா மூர்த்தி.

வர் இரண்டாயிரவர் உளர். அவருள் ஒருவராது தலமேலீட்டானதோன்றிய வென்றிமாலை ஐயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் கல்வியிலே பிரியமின்றி வாளாகாலங் கழித்தமையாற் றந்தையார் அவரைக் கந்தநாதனது திருக்கோயிலிலே மடைப்பள்ளி வேலையி லமரச் செய் வித்தனர் அவர் அங்கு மெய்யன்புடன் திருவமுது முதலியன செய்து கொடுத்து வருங் காலத்திலே, ஒருநாட், குமரன் றிருவருளாலே நைவேத்தியஞ் செய்தற்குக் காலந் தாழ்த்தனர். அதனாற் றலத்தாருமக்கோயிலி லுள்ள வர்களுஞ் சினமுற்று இவர்க்குக்கடுந் தண்டனையைச் செய்தனர். அத் துன்பத்தைச் சகிக்க முடியாது அற்றையிரவிலே, இவ்வாறிருப்பதினும் உயிர் விடுதலே மிக்க நலமென்று கருதிச் செவ்வேளைத் தம்மனத்தி லன் புடன் நினைந்து துதித்து, ஆலயத்தின் பக்கத்தேயுள்ள ஆழியில் விழு வான் சென்றார். வீழுஞ் சமையத்தில் அன்பினரைக் கைவிடாத தடங் கருணைப் பெருங்கடலாஞ் சத்திதரமூர்த்தி வெளிப்பட்டருளி அவர் கையைப் பற்றித திருவாய்மலர்ந்தருள்வார்.—

"அந்தணனே! நீ யொன்றற்கும் அஞ்சற்க. யாம் இத்தலத்தின் கண் நமக்காகவீற்றிருக்கின்றேம். இனி நின்னையவரும் பிறரும்போற்றி வணங்கும் வரத்தளுக்குவேம். இத்தல மான்மியத்தைத் தமிழிலே பாடுதி" யென்று திருவாய் மலர்ந்தருளினர் வென்றி மாலை ஐயர் என்பவர் பரவச மடைந்து, வணங்கி யெழுந்து "சர்வலோகாதிபதீ! புழுத்த நாயினுங் கடையேனை யொருபொருட்டாக்கொண் டெழுந்தருளினையோ!— அடியனேன் றமிழ்நெடுங் கணக்குத்தானும் முற்றுந் தெரிந்திலனே. எவ்வாறு மான்மியத்தை யறியவல். எங்ஙனம் பாடுவே னேழையேன்" என்றார். சண்முகப்பெருமான் றிருவுளமிரங்கி, "அளியோய்! செவ்வல் என்னும் நகரத்திலே கிருட்டிண சாத்திரி என்னும் பிராமணனிடஞ்

செல்வாய், அவன் அறிப்பான். அப்போது உனக்குப் பாடும் வன்மை யுண்டாகும்'' என்று மறைந்தனர். அதனைச் சிரமேற்கொண்டு சென்று சாத்திரியாரைக் கண்டு நிகழ்ந்தது கூற, அவர் தமக்கும் அங்ஙனம் அறி வித்தருளியதை நினைந்து அழலின் மெழுகதுபோல் உருகித் தல மான் மியங்களை வடமொழியி னின்றும் உணாத்திய மாத்திரையே பேராழி கரைபுரண் டோடினாற் போலச் செந்தமிழிற் கவிகள் பாடி முடித்தார் சாத்திரியார் அவர்கள் இவரது கவிகளின் சொற் சுவை, பொருட் சுவை, இணப்பு முதலாயவற்றையும், கவி கவிபாடும் விரைவினையுங் கண்டு புகழ்ந்து விம்மிதமு மன்பும் மேலிட, வென்றி மாலைக் கவிராசர் எனச் சிறப்புப் பட்டமு மளித்து அன்புடன் விடுத்தார். கவிராசர் அவர்கள் தாம்பாடிய திருச்செந்தூர்ப் புராணத்தைச் சுவாமியின் றிருச் சந்நி தானத்திலே அரங்கேற்றும்படி வந்தார். அவ்வுண்மையறியா அவ்வூரி லுள்ள திரி சுதந்திராாகிய பிராமணர்கள் கேட்டு, பரிசாரகனாவது பாடு கிறதாவது ஈதென்ன புதுமை? அரங்கேற்ற வொட்டே மென்று நிந்தித் துத் தடுத்தார். அவர் தன்மையை யறிந்த கவிராசர் அவர்கள் வருந்தி, ''அரங்கேற்றுவார் அரங்கேற்றுக; மதிப்பார் மதிக்கட்டும்'' என்று அப் புராணத்தைச் சமுத்திரத்திலெறிந்து தாஞ்சிவயோக பராய்க் கந்தக் கட வுள் திருவடியை யடைந்தார்.

கடலிலே எறியப் பட்ட புராண மானது அக்காலத்தே திரு ஞான சம்பந்த மூர்த்திநாயனார் வையை யாற்றி லிடப்பட்ட தமிழ் வேதத் திருவருட்பாத் திருவேட்டினைப் போல எதிரேறிக் கால்கொ ண்டு சென்று இலங்கையிலே யாழ்ப்பாணத்தின் வட பாகத்திலே யுள்ள உபய கதிர்காமம் என்னும் புதுச் சந்நிதித் தலத்திற்கு அணித் தான பனைமுனையை யடைந்தது. பனையோலையில் வரையப்பட்ட நூலடைந்த முனையாகலாற் பனைமுனை யெனப் பெயர் பெற்றது. புராணமுனை யென்றும் வழங்குவ துண்டு. அதனைச் சுப்பிரமணிய

சுவாமியின் தொண்டராய், கந்த புராண பாராயணராய், அந்நூலைத்தால யந்திரத்தின்கண் எழுதிப் பல திருமுறைகளாக்கி ஒவ்வோர் ஆலயத்திற்கும் வழங்கி வருதலையே தொழிலாகவுடையவராய் நம்வமிசபாம்பரையில் வந்த முருகதாசர் சுப்பிரமணியப் பெருமான் சொப்பனத்தி லறிந்தாங்கு அவண் சென்ற காலை, திருச்செந்தூர்ப் புராணத் திருமுறை கடற்கரையி னடைதல் கண்டு அறுமுகக் கடவுளின் றிருவரு ளிருந்தவா றென்னை யென வியந்து துதித்து, பூம் பல்லக்கில் வைத்து, வாத்தியங்கள் பல முழங்கக்கொண்டு சென்று பூசித்து வந்தார். அதன் பிரதிகள் பற்பல எழுதித் திருச் செந்தூர் முதலாய சுப்பிரமணிய தலங்களுக்கு அனுப்புவித்தார். தினந் தோறும் பாராயணஞ் செய்து வருவார். இங்ஙன மிருக்குநாளிலே சக்கர சுவாசம் என்னுங் காற்றின் வேகத்தாலே யவ்வூர் முழுதினுமுள்ள ஒவ்வோர் வீடுகளினும் பலர் இறக்கவும், இவர் இருக்கும் வீதியினுள்ளார் ஒருவரும் அக்கெடுதிக் காற்றினால் இறக்கா திருத்தலைக் கண்டு, புராணத்தின் பெருமையோ வென்று சந்தேகித்தார். சந்தேகித்த அவரது கனவின்கண் வேற்பெருமான் அவ்வுண்மையைத் தெரித்தருளிச் சென்றார். ஒவ் வொருவரும் பிரதிக ளெழுதுவித்துத் தத்தம இல்லங் களினும், கோயில், மடம் என்னு மிடங்களினும் வைத்துப் பத்தியுடன் பாராயணஞ் செய்து பயன் பெற்றார். இங்ஙனம் புராணத்தைப் பாடுதற்கும், வழங்குதற்குங் கிருபையைக் காட்டிய மூர்த்தியாகலாற் புராண பாலன கிருபா மூர்த்தியாயினர்.

திருச் செந்தூர்ப் புராணம் - சிறப்புப் பாயிரம்.

கந்தவேளோடிவந்துவேதியனைக்கைப்பிடித்தொன்றுக்குமஞ்சே
லந்தணுவவுணர்குலத்தைவேரறுத்தேயமரரைப்புரந்துசெந்தூரா
மிந்தமாதலத்தை யுற்றனமதனுலித்தலமகிமையாம்வடநூல்
செந்தமிழானுஞ்சிறக்கநீயினிதுசெப்புவாயென்றுரைசெய்தான்.

தடையற யாவுந் தெளிந்தோர் கிருட்டிண சாத்திரி மகிழ்ந்தனன் கதிர்வே, லுடையவன் றன்பான் மொழிந்த மாற்றமுநன் கொத்திருப் பது கண்டுவியந்தே, யிடைவிடா திருநது செந்தின்மான் மியத்தை யியம்பியே முடித்தபின் கடலின், மடைதிறந் திட்ட வெள்ளம்போல் வென்றி மாலைக்கு வந்தனவாக்கு.

இன்னகுறிப் புணர்ந்துபெரி தாகுலித்து மனவருத்தமெய்தவோடு, முன்னருமவ் வேடதனை யலைகடலில வீசியெறிந தோடிப்போனான், பின்னரவ்வே டலையொதுக்குண் டிழுததுத் துறைசேரப் பெற்றதந்த, நன்னகரு ளாரொருவன் காண்டலுங்கைக்கொண்டில்லநண்ணினனால்.

தணிகைப்புராணம்.

'எட்டெழு தாசி பாச மீந்தவ ரெழுதி வைப்போர்
பீடுறப பயில்வோா சொல்வோா பெரிதரும் பயன்க ளாய்வோா"
"ஆய்நதவர்க கனன மாதி யளிப்பவர் முதலா மேரு
மேய்நதநற் சுற்றத் தோடுஞ் சிவபுரத தெல்லை சேர்வார் "

புராண பாலன கிருபா மூர்த்தயே நம

முப்பத்தோன்பதாவது,

இந்திர போகாநுக்கிரக மூர்த்தி.

கொடுவினை முதிர்ந்த சூரபன்மன் முதலிய அசுரர் கூட்டங்களை யெல்லாம் அழித்து, இநதிரனை முன்போல விண்குடி யேற்றினார் குமாரக்கடவுள்: அங்ஙனம் அரசாட்சி பெற்ற இந்திரனுனவன், ஆங் குள்ள போகப் பொருள்களாய ஐராவதம், காமதேனு, சங்கநிதி, பதுமநிதி, சியமந்தக மணி, சூளாமணி, சிந்தாமணி, சந்தானம், அரிச்,

உ௫சு இந்திர போகாநுக்கிரக மூர்த்தி.

சந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம், உச்சைச் சிரவம் என்னும்புரவி சுதன்மை என்னுஞ் சபை, வசந்தமெனும் மண்டபம், அரம்பையர்முத லியன, பானுகோபன் ஆதியான அசுரர்களாலே கவரப்பட்டும் அழிக் கப்பட்டும் வெறுமையதாய் விண்ணுலகு விளங்கியது கண்டு, அவை களை முன்போ லெற்கு அளித்தருள வல்லவர் சரவணபவனே யெனத் தனது உள்ளத்து எண்ணிப் பூவுலகை யடைந்தான். ஆங்குக் கணிக வெற்பு, அகோர கைவல்லியப் பிரதம், பிரணவார்த்த நகரம், மூலாத் திரி, கற்பசித்து, நாரதப் பிரியம், சீபூரண கிரியெனத் திருநாமங்கள் வகித்த தணிகைமா தலத்தைச் சார்ந்தான். கிரிகண்டு வணங்கி வலம் வந்து, திருக்கோயிலின் சமீபத்துள்ள தீர்த்தமொன்றை யடுத்துத் தேவ தேவனது அருச்சனை செய்ய விரும்பிச் சிலவரைப் பார்த்து, எவலீர்! கற்பகச் சோலைக்க ணுள்ள மடுவினிடத்தே பூத்தொளிருங் குவளையங் கொடியைக் கொணர்வீ ரென்னலும் அவர் கொடுவந்தார். அதனைத் திரு மால் தவஞ்செய்த இடத்தின்கணுள்ள சுனையிலே பதித்து அம்மலர் கொண்டு அருச்சித்தான். அதனால் அவனெழுந்தருளி யிருக்கும் விநாய கப்பெருமான் அற்றைநாட் டொடங்கிச் செங்கழுநீர் விநாயகர் எனத் திருநாமமுற்றார்.

அதன் பின்னர் இந்திரன் வேத முதல்வராகிய ஞான சத்திதரப் பெருமான் திருக்கோயிலினுட் சென்று பணிந்து, மூழ்கினோரது பெரும் பாவங்களை யெல்லாந் தீர்க்க வல்ல குமார தீர்த்தத்தும் அவ்வாறே செங்கழுநீர்க் கொடியைப் பதித்து, காலைப் போதி லொரு மலரும், உச்சிக் காலத்தி லொருமலரும், மாலைக் காலத்தி லொருபூவுமாக மல ரும் வண்மைகண்டு அதிசயித்து அவைகளாற் சிவாகம முறைப்படி பூசை யாற்றினன். இங்ஙனம் முக்காலத்தும் மெய்யன்புடன் இயற்று வது கண்ட தணிகை நாயகன், கார்த்திகை மாதத்திலே கார்த்திகை நட் சத்திரத்திற் பூரணைத்திதியிலே யிந்திரன் முற் றோன்றி யருளினர்.

அது கண்ட இந்திரன் அளவிலா வானந்தம் பொங்கப் பன்முறை வீழ்ந்து வீழ்ந்து வணங்கிப் பெருமானைத் துதிப்பா னாயினன்.

பேரரு ளுடையா னென்னும் பெற்றிமை யுலகோர் தெள்ளக்
கூரிருண் மலந்தி னழ்ந்து கொட்புறு மிழுதை யேற்கு
சீரருள் புரிந்து தேவர் சிறையினைச் சீத்துக் காதத
வாரருள் போற்றி யாறு யிரமுறை போற்றி போற்றி.

பண்ணுயி ரனைத்து மல்க மழைமுகி லானாய் போற்றி
விண்ணுயி ரனைத்து மல்க மிளிரமிழ் தானாய் போற்றி
கண்ணுருக் காணக் கண்ணுட் கனலுரு வானாய் போற்றி
யெண்ணுயிர்த் தொழின்மை முற்ற விரந்தா மானாய் போற்றி.

என்றிவ் வாறு துதித்தான். மாமனாராம் மாகனார் போற்றியதற் குவகைகொண்டு, மருகனாராம் முருகநாதன் திருவாய் மலர்ந்தருளும். "ஆகண்டலோய்! நினக்கு என்வேண்டுங் கூறுதி யெமக்" கென்றார். "இந்திரன் பெருமானே! சுவர்க்கத்துள்ள போகப் பொருள்கள் யாவும் பெறுவான் தேவரீர் திருத்தல மடைந்தேன். ஏனைய தேவரும் தாந்தாம் வரங்களைப் பெறுமாறு வந்துளர். இவ்விடத்து எளியனான் நாட்டப் பட்ட குவளை யுலக மெல்லாம் அழியுங் காலத்தும் ஒழியா திருத்தல் வேண்டும். இம் மலையையணியும் வரைக்கும் எளியனேனுக்கு எவ்வகைத் துன்பமும் இல்லையாதல் வேண்டும். ஆதியந்த மில்லாப் பாஞ்சோதி யாகிய தேவரீர் காட்சி யருளிய இந் நன்னாளில் இத் தீர்த்தத்தில் மூழ் கினவர் பருகினவர் தெளித்துக் கொண்டோர் யாவரும் இருவினைகளும் மலமு மொழிந்து தேவரீரது திருப்பதத்திற் சார்ந் திரண்டறக்கலக்கும் இணையிலா முத்தியை யடைதலும் வேண்டும்" என்றிரந்தான். தணி கைப் பெருமான் அவ்வரங்களையு முதவி, அவற்குரிய போகப் பொருள் களையும் அளித்து முன்போல் இருந்து அரசு செய்யுமாறு கருணை

பாலித்தார். இந்திரனுக்குப் போகப் பொருள்களை யெல்லாம் அளித்து விண்ணுலகை நிறுத்தினமையாற் பெருமானுர் இந்திர போகாநுக்கிரக மூர்த்தி ஆயினர்.

தணிகைப் புராணம்.

இந்திரன் வேட்ட வெல்லா மெம்பிரா னருளிச் செய்தா
னக்தார் தாமுந் தத்த மாக்கமுற் றருளப் பெற்றார்
பைந்தரு காம தேனு பகர்நிதி மணிக ளாய்தஞ்
சந்தமார் சுதன்ம மென்னுஞ் சபைமுத லனைத்தும் பெற்றான்.

இந்திர போகாநுக்கிரக மூர்த்தயே நம:

நாற்பதாவது,

நாகவாதனு நிவாரண மூர்த்தி.

இப் பிரமாண்டத்தி னடியிலே சலத்தம்பமாக விளங்கும்சுவர்ண மயமான ஆதார சத்தியின் றலைமீது இரணிய மயமான தாமரை மலர் போல நூறு கோடி யோசனை யகல முள்ள ஆதி கூர்மம் இருக்கும். அதன் முதுகிலே எட்டுத் திக்குகளினும் எட்டு யானைகள் அழுரும் அவைகளின் நடுவிலே எட்டுமா நாகஙகள் இருந்து பூமியைத் தாங்கா நிற்கும். தக்கன், வாசுகி, அனந்தன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன் என்னும் அவ்வெட்டனுள் வாசுகியே சிறந்தது. இது முப்பதினுயிரம் யோசனை யகலமுடைய ஆயிரம் படைத்தலைகளை யுடைத்தாய், வெண்ணிறக் காந்தியுடையதாய் அநேக சர்ப்பர்கள் சூழ்ந்து போற்ற பகாபல முடையதாய், தன் பிடரை வளைத்துப் படங்களால்

நாகவாதனு நிவாரண மூர்த்தி.

தரணியைச் சுமந்து நிற்கும் துரியோதனன், குந்தி புத்திரனாகிய வீமனைக்கட்டி யாற்றிலிட அவன்பாதலத்தில் வீழ்ந்தபோது, இந்நாகராசனே யவனது விடநோய் தீர்த்துத் தன்னிடத்துள்ள அமிர்தத்தைக் குடங்குடமாகக் கொடுத்துப் பலவித ஆபரணங்களுடன் பதினாயிரம் யானை பலத்தையும் அளித்து அனுப்பினேன். இவ்வாறாய வாசுகியைத் தேவர்களும் அசுரர்களும் அமிர்தத்திற்காகப் பாற்கடல் கடைந்த காலத்தே மந்தர மலையாகிய மத்திற்கு நாணாகப் பூட்டிக் கடைந்தார்கள்.

அசுரர்கள் வாசுகியின் தலைகளிலும், தேவர்கள் அதன் வாலிலும் பற்றி மிகு வேகத்துடன் இழுத்துக் கடைந்தார்கள். வாசுகி நாகம் அதனைப் பொறுக்க லாற்றாது தன் வாய்களினின்றும் விடத்தைக் கால, அதற்கு அஞ்சித் தேவாசுரர்கள் யாவரும் ஓடினர். விபூதியுண்டதனால் வெள்ளை மேனியனாய் விளங்கிய மாதவன் காக்கின்றேனென்று எதிர் நின்றமையாற் காளமேனியனா யோடினன். அதனை யந்தி வண்ணனார் உண்டருளிப் பின்னருங் கடையுமாறு ஆஞ்ஞாபித்தார். அவர்கள்முன் போலவே கடைந்து அமிர்தமுண்டார். இவ்வாறு கடைதலால் வாசுகியினுடல் அவர் கைகளில் நெரிந்தும், மலையினுரோஞ்சுப்பட்டும் தேகமெல்லாம் பெரும் புண்ணுற்று மிக்க வருத்தமுற்றது. அமிர்த முண்டும் அகன்றிலதவ் வருத்தம். பரசிவப் பிரபுவின் றிருக்கண்டத்தைக் களங்கமாக்கிய பாதகமே யிவ்வருத்தத்திற் கேதுவென்று உணர்ந்து, அப்பாதகமும் இவ்வாதனையுந் தீர்ப்பவன் வாயுவாற் றாங்கப்பட்ட சிகிவாகன மூர்த்தியே என்று பெருமானை நோக்கித் தவங்கிடந்தான். அறுமுகக்கடவுள்தோன்றி யெவ்வரம் வேண்டுமென்றார். நாகராசன், "சுவாமீ! இப்புண் வாதனை யெவ்வாற்றானுந் தீராது பெரிதும் வருத்துகின்றது. அதனாற் பூமியைத் தாங்குமாற்றலில்லாதாயிற்று. அன்றியுந் தேவரீரது தந்தையாரது திருக் ண்டத்தைக்கறைக் கண்டமாக்கிய பாதக நோய் மிகுதியும் என்னைத்

தைச் சுட்டழிக்கின்றது என் செய்கே னென, சேந்தப்பெருமான், வாசுகியின் உடலைத் தைவந்து (தடவி) "நாகராச! இனி உடல் வாதனை யொழிந்தது. முன்னையதினும் அனந்த மடங்கு வலிமையையளித்தேம். இனி முன்போற் பூபாரந் தாங்கக் கடவை. பிரம விட்டுணு முதலிய தேவர்களும் எவர்களும் மலவசத்தாற் றாமே பிரமம் என்று மயங்காது, எந்தையே பரம்பொருளென் றுணர்ந்து வழிபட் டுய்தற்குரிய அடையாளமான நற்கறையாக விருத்தலால், அதுகறை பாதக மாகாது. எந்தை திரிபுர மெரிக்குங் காலத்து, மந்தரமலையிற் கயிறாக்கிடந்த நீ அவர் திருக்கரத் தேந்திய மேருமலையாம் வில்லிற்கு நாணு யிருப்பதால் அச் சிறுமை நீங்குவை" என்று அருளிச்சென்றார். வாசுகி நாகத்தின் உடல வாதனையையும்; கிலேசத்தையும் நீக்கி யருளினமையாற் குகேசப் பிரபு நாக வாதனு நிவாரண மூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

கந்தலகரி (மொழிபெயர்ப்பு.)

வாசுகி க்ஷீரக் கடல்கடை தலினால் வருபுண்ணு
மெமதுதந் தையனு
மீசனற் களத்தைக் கறையதாக் கிட்டே னெனவது
பதகமென் றுளைந்த
மாசையுங் கெடுத்து முதல்வலி யருளும் வள்ளலே
கந்தநா தப்போர்த்
தேசனே ஞானத் தெளிவமு தளிக்குந் திருவருட்
கடலெமக் கருளே.

தணிகைப் புராணம் - நாகமருள்பெறு படலம்.

பன்னெடு நாள்கழி வெய்த வுளம்பரி விற்றீர்ப்பான்
ன்னி மயிற்பெரு மானெதிர் போந்து கருந்திண்மை

போகமோக்ஷாநுக்கிரகமூர்த்தி,

மன்னு முடற்பிணர் நீத்து வழங்க மகிழ்ந்தாடிப்
பொன்னடி தாழ்ந்து புகுந்தது தன்புகழ் சால்வைப்பு.

நாகவாதனு நிவாரண மூர்த்தயே நம :

நாற்பத்தோராவது,

போக மோக்ஷா நுக்கிரக மூர்த்தி.

பொதிய மலையின் றென்பக்கத்திலே யுள்ள பதினொரு சிவதலங்களுக்குங் கீழ்த் திசையில் விளங்கிய மலைச் சாரலிலே பிரமன் றவஞ் செய்தான். முருகக்கடவுள் தோன்றித் திருப்புன் முறுவலோடும் பிரமனைத் திருநோக்கஞ் செய்து மறைந்தனர். மலரவன் மனம் வருந்திப் பின்னரும் பல்லாயிரம் வருடந் தவஞ் செய்தும் வேலினுக்கிறை வந்தாரல்லர். விதியவன் வருந்துங் காலத்திலே நாரணமூர்த்தி யவ்விடம் போந்து, "மைந்தனே கந்தக் கடவுள் இனித் தோன்றுமாறு வேண்டுவையாயின் அவரது ஆறெழுத்து மந்திரத்தை யுன்னித் தவஞ் செய்தி. அல்லதேல் அவர் வருதலும் நீ அவரது திருவருள் பெறுதலும் இல்லை" யென்று சடக்கர மந்திரத்தை யுபதேசித்துச் சென்றார். அவன் அவ்வாறே யாறெழுத்தை யுச்சரித்து நோற்க,

முண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகமுங் கண்ணுங்
குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங் கோல மார்பு
மெண்டரு கரமீ ராறு மிலங்கெழிற் படைகள் யாவுந்
தண்டையுஞ் சிலம்பு மார்க்குஞ் சரணமுந் தெரியக்கண்டான்.

என்றபடி ஆறுதிரு முகமும் பன்னிரு திருக்கண்களும் குண்டலங்களுந் திரு முடிகளும், பன்னிரு திருக்கரங்களும், அவற்றில் துவசம்

உ௬௪ போக மோக்ஷாநுக்கிரக மூர்த்தி.

வச்சிரம் அங்குசம் அம்பு வேலாயுதம் அபயமும் என்பவற்றோடு, வரதம் பங்கயம் மணி மழு தண்டு வில் என்பவைகளும், தண்டை சிலம்பு முதலிய அணிகள் ஒலிக்குந் திருவடிகளும் பொருந்தச் செந்தூர் முதல்வர் பிரசன்னராயினர். பிரமன் பணிந்து நடுநடுங்கி நின்றான்.

வேலாயுதக் கடவுள் விளித்து, "விதியோய், நீதவஞ் செய்தற்குக் காரணம் யாது? அவற்றின் வரலா றென்னை" யென்று அறியார் போல வினவப் பிரமன் கூறுவான். தெய்வ யானையும் வள்ளியம்மையும் படருந் திருப்புயங்களை யுடையவரே! வேதமுதலே! அடியேன் தவஞ் செய்தல் இழந்ததலையி லொன்றைப்பெறுதற்கே. ஐந்தலை யுடையனாகிய யான் ஒன்றிழந்தது தேவரீர்க்குத் தெரிந்த தொன்றே. அவ்வாறு இருப்பவும் எளியனேனைக் கூறும்படி கட்டளை யிட்டருளியது எற்கு நல்லுணர்ச்சி பின்னருந் தோன்ற வேண்டு மென்னுங் கருத்தே? தேவரீரது திருவிளையாடலை யாவருணர்வார்? என் வரலா றெனில்,

முன்னர்ப் போதில், அடியேனுந் திருமால், இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் மேருமலையின் கண் குழுமி இருந்தேம். அப்போது சனகர் முதலாய முனிவர்கள் சபையை நோக்கி "ஐயன்மீர்! உலகத்துள்ளவர்கள் யாவரினும் பெரியோன் எவன்?" என்று ஆராய்ந்தார். அதுபோது புன்மையேன் மலமறைப்பினாலே, யானே பெரியோன், என்று முழங்கிக் கூறினேன். அது கேட்ட திருமால் மனங் கொதித்துக் கோபத் தீபொங்க எழுந்து "நீயல்லை; யானே கடவுள்" என்றார். இங்ஙன மவருங் கூறவே யெம்மிருவர்க்கும் போர் மூண்டது. அதுகண்ட அவையத்தார் அஞ்சி நின்றார், அப்போது சபை நடுவே இருக்கு வேதந் தோன்றி,

இருவர் மொழியுங் கேட்டிகழா விருக்கு வேத மாங்கெய்திப்
பருவ முகில்போ னிறத்தோயும் பங்கே ருகமே லுறைவோயும்

விரியும் புவன மனைத்தி னுக்குங் கடவுளல்லீர் விரிகடலிற்
கருகும் விடமுண் டுமையளித்த கருணைக் கடலே முதலாவான்.

பருவகாலத்து மேகம்போன்ற திருமாலும், தாமரை மலர்மேலிருக்கும் பிரமனும் ஆகிய நீவிர் இருவரும், பரந்த உலகங்க ளெவற்றிற்கும் கடவுளாக மாட்டீர். விரிந்த பாற்கடலி னின்றுந் தோன்றிய ஆலாலத்தைப் பருகி நுங்களைக்காத்த அருட்கடலாகிய பரசிவனே முதற்பொருளாவான் என்று கூறிச்சென்றது. அது கேட்டும் மயக்க மேலீட்டினாலும் வெகுளி மிகுதியினாலுங் கவனியாது பின்னரும் அவ்வாறே கூறினேம். அப்போது இரண்டாம் வேதமாகிய யசுர்வேதந் தோன்றி,

என்று விருக்கு மறைபகர விரண்டாம் வேத மாங்கெய்தி , யொன்னார் புரமூன் றெருங்கெரிய முறுவல் கோட்டு மொருமுதலே, முன்னோன் முன்னோ னெனமேற்கோள் காட்டி முதிர்ந்த முதுக்குறைவாற், றன்னைத் தழும்ப முறையிட்டுக் கனம்போ லதிர்ந்து சாற்றியதே. (கூர்ம புராணம்.)

உண்மைப் பொருளிதுவே யென்று மேகம்போல இடித்துக் கூறியது. அவற்றையுஞ் செவிக் கொள்ளாது அலைந்தேம். மூன்றாம் வேதம் ஆகிய சாமவேதம் அதிர்ந்து விரைவின் வந்து "பேதைகளே! யானுரைப்பது கேண்மின்" என்று,

இறந்தும் பிறந்து மெவ்வுயிரு
மொழியா துலவி யெஞ்ஞான்றுங்
கறங்கு போலத் திரியவெவ வளியற்துங்
கருணைக் கடல் யாவன்
சிறந்த வந்தச் சங்கரனே
தேவதேவ னென்ப தல்லான்
மறந்தும் பிறரை யெண்ணற்க வென்று

சாமம் வழங்கியதே. (கூர்மபுராணம்)

உசுசு போக மோக்ஷாநுக்கிரக மூர்த்தி.

அதனையுங் கேட்டே மல்லேம். தீவினை மிக்க எமக்கு முன்னர் நான்காம் வேதமாகிய அதர்வண வேதமுந் தோன்றிச் சாட்சி கூறிற்று. அது வருமாறு:—

ஒன்றாய்ப் பலவா யுயிர்க்குயிரா
யுலக மனைத்துந் தானாகி
நின்றாங் கவற்றிற் பொருந்தாத
நீறு பூத்த செழும்பவளக்
குன்றா யன்ப ரிதயமலர்க்
கோயி றோறு மினிதமரும்
பொன்றாழ் சடையோன் முதல்வனென
நான்காம் வேதம் புகன்றதுவே. (கூர்மபுராணம்)

அதுவும் பாவியேஞ் செவிக்கு ஏறாதாகக் குடிலையென்னும் பிரணவந்தோன்றி யங்ஙனே சான்று கூறியது. அதனையும் மறந்து அகங்காரங் கொண்டேம். அதனைத்திருக் கண்ணோக்கஞ் செய்த தேவரீரது தந்தையாராம் நினைத்தற் கரிய பேரொளியான நிருமலச்சோதி ஒருகோடி சூரியர் ஆகாயத்தை யறுத்து உதித்தாற் போல வெளிப்பட்டார். அதனைப் பார்த்த திருமால் அஞ்சி வணங்கி யுய்ந்தான். மூடனேன் ஆணவ மலமறைப்பினாலே முன்னம் எனது நெற்றி நடுவிற்றோன்றிய நீயோ கடவுளாவா யென்றேன். அச்சொல் முடியுமுன்னே வைரவக் கடவுள் வந்து இகழ்ந்த ஐந்தாந்தலையை நகத்தாற் கிள்ளிச் சென்றார். அதன் பின் மூர்ச்சையுற்ற யான் றெளிந்து கருணைக் கடலாகிய தேவரீரையடுத்தேன். என்ன பிழை யிருப்பினும் அதனைப் பொறுத்தருளல் வேண்டுமென்றிரந்தான்.

குமாரக் கடவுள் அவற்றைக் கேட்டுக் கூறுவார். சிவ நிந்தை புரிந்த நினக்கு அது எளிதிற் சித்திப்பதன்று. சிவம் வேறு யாம் வேறல்லேம். ஆயினுந் திருச்செந்தூர் சென்று வதனாரம்ப தீர்த்தத்தின் முழுகித் தவஞ்செய்வா யென மறைந்தருளினார். பிரமன் அங்

னைஞ் சென்று முழுகி நாலாயிரம் யுகம் பூசித்துத் தவமிருந்தான். "தமே தம் வேதானு வசநேந ப்ராக்மணு விவிதிஷந்தி! யஜ்ஞேநதாநேந தப ஸாநா சகேந" என்ற வேத வசனப்படி தவத்தா லறியவிரும்பிய பிரமன், பெருமான் கட்டளைப்படி விமானமாகத் தொழுது கொண்டு வந்தான். அதனாலே பல்லாயிர யுககாலம் பிரமன் விமானமா யிருந்தான். இறுதி யில் அவனுக்கு ஐந்தலையும் படைப்புத் தொழிலும் வேண்டிய போகங்க ளுங் கொடுத்து நடத்துவித்துப் பின்பு தமது சாருப்பிய முத்தியையுங் குமாரசுவாமி கொடுத்தருளினர். இங்ஙனம் பிரமற்கு அளவிறந்த போகங்களையும் முத்தியையும் அளித்தருளலாற் பெருமானுக்குப் போக மோக்ஷ த்தியாக மூர்த்தி யென்று பெயர்.

திருச்செந்தூர்ப் புராணம்.

தேறலி னருவி தூற்றுந் தென்மல யதனுத் தென்பா
லாறுட னைந்த தான வரன்பதி யவையின் கீழ்ப்பால்
வீறுமங் களப்பொற் சாரல் வீற்றிருந் தகில நல்கு
நாறுபூங் கமல வீட்டு நான்முகன் வணங்கிப் போற்ற.

வேதனுக் குலகம் யாவும் விதித்திடுஞ் செயலு ஞான
போதனைச் செயலு முள்ளம் பொற்புற வுபதே சிதனுக்
காதலிற் சிறந்த வேற்றைக் காங்கெயன் கருணைகாட்டித்
தீதறு போக மோக்கத் தியாகியென் றிருந்தான் மன்னே.

போக மோக்ஷாநுக்கிரக மூர்த்தயே நம:

நாற்பத்திரண்டாவது,

பர மைசுவரிய மூர்த்தி.

சராசரப் பிரபஞ்சங்களை யெல்லாந் தமக்கு உடைமைப் பொருளும் அடிமைப் பொருளு மாகவுடைய முருகக் கடவுளின் திருவிளையாடல்களை யெல்லாம் பரசிவனார் தேவியாராகிய உமையம்மையார்க்கு எடுத்துத் திருவாய் மலர்ந்தருளினார். அவைகளைக் கேட்ட பரமகாருணியப் பிராட்டியார் உவகையுற்று, பெருமானே! தேவரீரது செல்வக் குமாரனாகிய சுப்பிரமணியனது பரம ஐசுவரியங்களையும் அடியே முணருமாறு வகுத்தருள வேண்டுமென்று இரந்தார். சரவண பவன் மகிமையா மைசுவரியங்களைப் பரசிவனார் திருவாய் மலர்ந்தருளத் தொடங்கி யொன்று மூன் வகுப்பார். மாதரசே! அவன் பெருமை நிற்குத் தெரிந்தனவே யாகும். ஆயினு முலகிலுள்ள மக்கட் கூட்ட முணர்ந் துய்ய வேண்டு மென்னும் பெருங்கருணை முகிழ்த்தமையாற் றெரியாதது போற் கேட்டனை. ஆயினு மவையிற்றை யுரைக்கின்றாம்.

நங் குமாரனே யெல்லாத் தேவவடிவும், எல்லா வுலகவடிவும் எல்லா வுயிர்களின் வடிவுமாக விளங்கு கின்றான். அதனால் அவனே சாட்சாத்கார பரப்பிரம மாவன். கௌரியே! உலகினிடத்தே எந்தப் பொருள்களாவது உயிர்களாவது மகிமை, இலக்குமி விலாசம்; தார்டியம் என்பவற்றை யுடையனவாய் விளங்கு கின்றனவோ அவற்றில் நமது மைந்தனுடைய மகிமையின் ஓரிலேசா லேசந்தா னுள்ள தென்றறியக்கடவாய். ஒருவிளக்கி னின்றும் மற்றொரு விளக்கு ஏற்றப்படுவது போலச் சோதி வடிவாகிய நம்மிடத்தி னின்றுஞ் சுடர் வடிவாகத் தோன்றினான் அவன். இன்னுந் தேவியே கேட்டி. அவன்மகிமையில் இலேசா விலேசந்தானுங்காங்குச் சிறிது சிறிதுதலைக் காட்டுகின்றது.



பரமைஸ்வரிய மூர்த்தி.

அளவற்ற உருத்திர கோடிகளி லிவனே மகா சங்கார காரவுருத்தி ரன். பஞ்சாயுதங்க டரித்த பலகோடி விட்டுணுக்களி லிவனே சீகண்ட வுருத்திரக் கடவுளின் சக்தியான மகாவிஷ்ணு. அவனது நான்கு மூர்த்தி களி லிவன் வாசுதேவ மூர்த்தி. அவனுடைய பத்துப்பிறவிகளில்இவன் சிராமன். ஆயுதந் தரித்த யாதவர்களி லிவனே வாசுதேவன். பாண்டவர் களி லிவன் அருச்சுனன். எல்லாப் பிரசாபதிகளுள்ளு மிவன் பிரமன். எல்லா மனுக்களுள்ளுமிவன் சுவாயம்புவ மனுவாகும். எல்லாத் தேவர்க ளுக்குள்ளும் இவனே இந்திரன் ஒளிப் பொருள்களி லிவன் அங்கியந் தேவன் பிதுர்களி லிவன் யமன் இராக்கதரி லிவன் * நிருதியென்னுந் திக்குப் பாலகனுவான் சல சரீரிகளி லிவன் வாயுதேவன். கந்தருவரா கிய பவண லோகத்தாரு ளிவன் சித்திர ரதனுகும். திரவிய வான்களி லிவன் விச்சிரவா முனிவன் புத்திரனுகிய குபேரன் திக்குப்பாலகர்களில் இவனே எல்லா வின்பங்களையு முதவவல்ல ஈசானனென்னும் வடகீழ்த் திசைப்பாலகனுவான்.

எண்டிசை யானைகளுட் கீழ்த்திசை யானையாகிய நான்கு கொம்பர் களை யுடைய ஐராவதம் நங்குமரனேயாம். யானைகளெல்லாவற்றினு மிவன் பிணிமுகமென்னும் யானை. பலவகைப்பட்ட நதிகளுட்கங்கை யிவன். பதினொரு உருத்திரர்களுட் சங்கரன் எண்வகை வசுக்களுள் நங் குமாரன் பாவகனென்னும் வசுவாகும். பன்னிரு சூரியர்களிற் செல்வ

---

* முராசுரனுடைய பாசிற் றேன்றிய அக்கினி பக்கண னென்ப வன் குமாரன் துரச்சயனென்பவன் இருந்தான். அவனொருகாற் கொங்கு நாட்டிலுள்ள திருக்கருவூர்த் திருவானிலை யென்னுங் கோயிலி லெழுந் தருளும் பசுபதீசப் பெருமானைப் பூசித்தபேற்றால் நிருதர்க்கெல்லாம் அதிபதியாய் நிருதியென்னும் பேர்பெற்றுத் தென்மேற்றிசைக்கும் அதி பதியாய் விளங்கினுனென்று கருவூர்ப்புராணம் திக்குப் பாலகச் சருக்கத் திற் கூறும். எம்மாற்செய்யப்பட்ட கருவூர் மான்மியத்தும் பாக்கவுரைத் துளாம்.

மைந்தன் விட்டுணு வென்னும்பரிதியாவான். வைத்தியர் யாரினும் மேலான அசுவினி தேவர்களிவன். அசுரர்களிற் பிரகலாதனும்; சர்ப்பங்களில் வாசுகியும், மிருகங்களிற் சிங்கமும், பறவைகளிற் கருடனும், குதிரைகளுட் சிறந்த உச்சைச் சிரவமென்னுங் குதிரையும், பசுக்களுட்சிறந்த காமதேனுவு மிவனே யாகும். அன்றியும் பிரியாய்! இருடிகளுட்பிரம இருடியாகிய வசிட்டன் இவன். கிருத்தியங்களுள் அநுக்கிரக கிருத்திய மிவனாகும்.

தேவமுனிவர்களுள் நாரத னிவன். இராச இருடிகளில் விசுவாமித்திர னிவன். வேளாள முனிவருட் சூதமுனி யென்னும் உரோம கருடண னிவன், அக்கினியுட் சிவாக்கினியும், மந்திரங்களுட் பஞ்சாக்கரமும், மணிகளுள் உருத்திராக்க மணியும், மலைகளுள் மேருமலையும், விருட்சங்களில் அரச மரமும், மனிதருட்பிரம ஞானம் வாய்ந்த அந்தணரு மிவன். அந்தணருள் ஆதி சைவப் பிராமணர்களும், வித்தைகளுட் பரவித்தை யெனப்படூஉஞ் சிவாக மங்களும், தேவமணிகளுட் சிந்தாமணியும், யோகங்களுள் அட்டாங்க யோகமும், மிருகங்களுட் பசுககளும், நவகண்டங்கணட் பரதகண்டமும், வாக்கிகளுள் வியாழ பகவானும், சாரதிகளுட் பிரமனும், குருவடிவங்களுட் டக்கிணா மூர்த்தியும், மாதங்களுள் ஆவணியும், சிவாகமங்களுள் இரௌரவ ஆகமமும், பொய்கைகளுட் சரவணமும். கடலுட் பாற்கடலும், அறநெறியுட் சத்தியமும், பருவங்களுள் வசந்தருதுவும், மலர்களுட் டாமரை மலரும், அணிகளுண் மேகலையும், ஞானங்களுட் சிவஞானமும், ஆச்சிரமங்களுட் சந்நியாசமும், சூத்திரத்துட் சிவஞான போத மகா சூத்திரமுஞ் சுப்பிரமணியனேயாம். இங்ஙனம் புவனேசுவரி யாகிய பார்வதி தேவி யார்க்குச் சிவபெருமான் குகக்கடவுளின் மேலா மைசுவரியங்களைத் தொகுத்துக் கூறியளினர். இவற்றானே சுப்பிரமணியப் பெருமான் பரமைசுவரிய மூர்த்தியாயினர்.



சேனாபதி மூர்த்தி.

ஸ்காந்த புராணம் - சங்கர சங்கிதை.

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑍀 𑌨𑌾𑌮 𑌸𑍇𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌣𑌸𑍁𑌤𑌿𑌃 ।
𑌧𑌨𑌾𑌧𑌿𑌨𑌾𑌥𑌪𑌿𑌸𑍇𑌨𑌾𑌨𑌾𑌂 𑌧𑌨𑌸𑍍𑌸𑌾𑌯𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌿𑌤𑌃 ॥
𑌐𑌂𑌦𑍍𑌰𑌾𑌯𑌂 𑌸𑍈𑌨𑍍𑌯𑌨𑌾𑌥𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌜𑌸𑌾𑌨𑌾𑌯𑌂 ।
𑌪𑌿𑌤𑍃𑌣𑌾𑌂 𑌯𑌧𑌸𑍍𑌤𑍁𑌯𑌂 𑌰𑌕𑍍𑌷𑌸𑌾𑌂 𑌰𑍂𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑍇 ।
𑌯𑌾𑌦𑌸𑌾𑌂 𑌵𑌰𑌣𑌸𑍍𑌤𑍁𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌵𑌾𑌯𑍁𑌰𑍇𑌵 𑌚 ।
𑌶𑌂𑌯𑌮𑌾𑌨𑌾𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌗𑍁𑌪𑍍𑌤𑌿 𑌨𑌾𑌯𑌨𑌦𑍇𑌶𑌸𑍍𑌯 ॥

என வருஉஞ் சுலோகங்களாற் காண்க.

பரமைசுவரிய மூர்த்தயே நம :

நாற்பத்து மூன்றுவது,

இரண்டாயிரம் பூதவெள்ளங்களும், சுப்பிரன், மேகமாலி, சுவேத சிரிடன், கபாலி, அப்பிரசித்து, சித்திராங்கன், சுவால தாலு, வச்சிரன், வீமன், உக்கிரன், உக்கிரேசன், பிப்பலன், நந்திசேனன், பிரமசன், பிரமசேனன், பதுமன், காளன், தண்டன், பத்திரன், பரிகநேமி, உதாகன், புட்பதந்தன், உருத்திராகாரன், வீரன், மதிசயன், கேதுமாலி, வக்கிரன், பிரமகேசன், அதிபதி, கலிங்கன், கோரன், அச்சுதன், அசலன், சாந்தன், சித்திரசேனன், பூரி, சுசீலன், மாசயன், சிங்கன், உத்தா சியன், உபதிட்டன், சயன், ஈசன், மத்தகன், மதங்கன், சண்டி, மகாபலன், சுவேதன், நீலபத்திரன், சுவாகு, அண்டாபாணன், காக பாதன், பிங்கலன், சமானன், மாயன் நிகும்பன், கும்பன், சங்கபாலன், விசாகன், சதநாவன், அயக்கிரீவன், சகத்திரகான், அயுதாக்கன், அனர்

சேனாபதி மூர்த்தி.

தன், வாமன், மங்கலகேசன், சோமன், வச்சிரமாலி, சண்டன், அசமுகன், சாடன், குந்தன், ஆடகன், கவந்தன், மேகன், விசயன், வித்துருமன், தண்டி, வியாக்கிரமன், காலபாசன், தசமுகன், குமுதன், பானு தனஞ்சயன், இடபரூபன், அசிமுகன், அனலகேசன், சுவத்திரன், கேது மோகன், மத்தன், உன்மத்தன், நந்தி, மனோபவன், வாயுவேகன், சகத்திரபாதன், பானுகம்பன், பதங்கன், சுத்தன் அனிகன், சீதன், சுனாதன், சுமாலி, மாலி, அத்திரி, அசுராந்தகன், அரிகேசன், சுவாலகேசன் என்னும் பெயர்களை யுடைய கணத்தலைவர் நூற்றென்மரும், இலக்கம் வீரர்களும், உமாதேவியாரது திருவடிச் சிலம்புகளினின்று முதிர்ந்தநவமணிச் சத்திமார்களாகிய மாணிக்க வல்லி, தரளவல்லி, புட்பராகவல்லி, கோமேதக வல்லி, வைடூரியவல்லி வைரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி, இந்திரநீலவல்லி யென்னும் ஒன்பதின்மர்களிடத்தி னின்றுந் தோன்றிய வீரவாகு, வீரகேசரி, வீரமா மகேந்திரன், வீர மகேச்சுரன், வீரமாபுரந்தரன், வீர ராக்கதன், வீர மார்த்தாண்டன், வீராந்தகன், வீர தீரன் என்னு நவவீரர்களும், விட்டுணு, பிரமன், இந்திரன், தேவர், முனிவர், முதலாயினோருஞ் சூழ்ந்து துதித்து நிற்க, அவர் நடுவே இரத்தின மிழைத்த பொன்னரிமான் றவிசில் அநந்தகோடி சூரியப் பிரகாசம் போன்ற திருமேனியும், ஆறு திரு முகங்களும், அபயம், முசலம், வாள், சூலம், வேல், அங்குசம் என்பன வலப்பக்கத்தும், வரதம், வச்சிரம், வில், தாமரை, தண்டம், அம்பு என்பன இடப்பக்கத்தும் ஆகத் தாங்கா நிற்குந் திருக் கரங்கள் பன்னிரண்டும் பிரகாசிக்க, தொழுதார் துன்பங்களை யெல்லாந் துடைத்தருள் செய்யுங் கோலத்துடன் சுப்பிரமணியப் பெருமான் எழுந்தருளியிருப்பார். இங்ஙனஞ் சேனைகளி னடுவே தலைமை வகித்து எழுந்தருளலாற் சேனாபதி மூர்த்தி எனப் பெயர் பெறுவர். இது சோடச மகா மூர்த்தங்களு ளொன்று.

சங்கர சங்கிதை - வீரமாமகேந்திர காண்டம்.

சுப்ரச்ச மேகமாலீச ச்வேத சிர்வ்ஷ காஸ்ததா! கபாலினா மாபலவா கப்ரசித்தாபிதோபர:! சித்ராங்க ஜ்வாலதா ஹூச வஜ்ர பீமோக்ரநாமகா:! உக்ரேப பிப்பலௌ நந்திசேனோ பிரஹ்மஜ சம்ஜ்ஞக:! ப்ரஹ்ம சேந: பத்ம கச்சக ராளோதண்ட பத்ரகௌ! ததா பரிகநே சிச்ச பரோருதவ கோமகாங்! புஷ்பதந்தச்ச பலவாந்ருத்ர கார ஹராவபி மதிஜித் கேதுமாலீச வக்த்ரோங்யோ ப்ரஹ்மகேசக:! நதீபதி கலிங்கௌ சமேரோப யங்யோ ச்யுதோபல:! சாந்தச்ச சித்ரசேனோங்யோ பூரிநா மாசுசீலக:! எனவரூஉஞ் சுலோகங்களா னுணர்க.

குமார தந்திரம்.

𑌸𑍇𑌨𑌾𑌪𑌤𑌿𑌃 ॥ 𑌅𑌭𑌯𑌮𑌸𑌿𑌰𑌥𑌾𑌙𑍍𑌗𑌮𑌙𑍍𑌕𑍁𑌶𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿
𑌶𑍂𑌲𑌂 𑌵𑌰𑌦𑌕𑍁𑌲𑌿𑌶𑌪𑌾𑌶𑌂 𑌪𑌦𑍍𑌮𑌦𑌣𑍍𑌡𑍌 𑌗𑌦𑌾𑌂𑌶𑍍𑌚 ।
𑌦𑌧𑌤𑌮𑍁𑌭𑌯𑌪𑌕𑍍𑌷𑍇 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌹𑌸𑍍𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌷𑌟𑍍𑌕𑌮𑌲𑌨𑍇𑌤𑍍𑌰𑌂
𑌦𑍇𑌵𑌸𑍇𑌨𑌾𑌨𑍍𑌯𑌮𑍀𑌡𑍇 ॥

சேநாபதி:!! அபய மசித ரதாங்க மங்குசம் சக்தி சூலம் வரதகுலிசபாசம் பத்ம தண்டௌகதாச்ச! ததரூபய வக்ஷத்வாதசா வாமஹஸ்தே த்விதசகமலநேத்ரம் தேவசேநாங்ய மீடே!

தணிகைப் புராணம் - அகத்திய னருள்பெறுபடலம்.

அபய முசலம் வாள்சூல மயில்வே றேட்டி வலம்வாதக்
தபுதீர் குலிசஞ் சிலைபதுமங் தண்டங் கதைமற் றிடமாக

வுபய விராறு காதலமு மொளிர்வித் தாறு முகந்தோன்றிச்
சுபாகன் கருளி யிடர்து மிக்குஞ் சேனாபதிசீர் தொகுப்போரும்.

சேனாபதி மூர்த்தயே நம:

நாற்பத்து நான்காவது,

சண்முக மூர்த்தி.

சரவண வாவியின்கண்ணே பெருமானார் ஆறு குழந்தைகளாக நின்று விளையாடுங் காலத்தில், பரமேசுவரி இறைவனுடன் சென்றுஆறனையு மணைத்துச் சேர்த்த மாத்திரத்து ஆறுதிருமுகமும் பன்னிரு திருக்கரங்களு முடையாரானார். சர்வலோக நாயகனான பரம்பரற்குரிய ஆறுதிருமுகங்களும் ஆதிசத்தி, இச்சா சத்தி, கிரியாசத்தி, பராசத்தி, ஞான சத்தி, குடிலா சத்தி யென்றும், அ, உ, ம், நாதம், விந்து, சத்தி என்னும் பிரணவங்களாகு மென்றும், சிவபெருமானது ஆறு திருமுகங்களாமென்றும். மந்திராத்துவா, பதாத்துவா, வன்னாத்துவா, புவனாத்துவா, கலாத்துவா, தத்துவாத்துவா என்னு மவைகளா மென்றும், ஈசானம், தற்புருடம், அகோரம் வாமதேவம், சத்தியோசாதம் என்னும் ஈசுரன் றிரு முகங்களைந்துடன் தேவி திருமுகமொன்றுஞ் சேர்ந்து ஆயின வென்றும், சருவஞ்ஞதை, திருப்தி, அநாதி, போதம், அலுப்த சத்தி, அநந்தசத்தி சுவதந்திரத்துவம் என்பனவா மென்றும், ஐசுவரியம், வீரியம், புகழ் திரு, ஞானம், வைராக்கியம் என்னும்அறுகுணங்களாமென்றும் சடக்கர மந் திரங்களாமென்றும் பலவகையாகச் சொல்லப்பட்டன. இவ்வாறு முகங்களானுங் கிழக்கு,தெற்கு, மேற்குவடக்கு, கீழ், மேல் என்னும் அறுவகை யிடங்களினு முள்ள ஓரறிவுயிர் முதல் ஆறறி விறுதியாக வுள்ள அறுவகை யுயிர்களும் அறுவகைச் சமயங்களையுந் தாண்டி.



சண்முக மூர்த்தி.

அறுவகைச் சாத்திரங்களையு முணர்ந்து அறுவகைப் பட்ட மலங்களி னின்றும் நீங்கி முத்தியை யடைகின்றனர். சருவஞ்ஞத சத்தியாகிய மூகம் படைத்தல், காத்தல், அழித்தல் என்னு முத்தொழில்களையுஞ் செய்யாநிற்கும். நித்திய திருப்தி சத்தியாகிய முகம் எல்லா அநுக்கிர கங்களையும் புரியும். அநாதி போத சத்தியாகிய மூகம் எல்லா வுயிர்க ளையும் போகிக்கப் பண்ணும். சர்வ சுதந்தா சத்தியாகிய முகம் பக்குவ ஆன்மாக்கட்கு முத்தியை யளிக்கும். அலுப்தசத்தியாகிய முகம் பஞ்ச கிருத்தியங்களையுஞ் செய்யாநிற்கும் அநந்தசத்தியாகிய முகம் எல்லா ஆற்றலையு முண்டாக்கும்.

ஒருமுகம் சூரபன்மன் முதலாய அசுரர்களை யெல்லாந் தடிந்தருளா நிற்கும். ஒருதிருமுகம் ஆன்மாக்களின் வினைகளைப்போக்கிப் பேரின்பத் தை யளிக்கும். ஒருதிருமுகம் வேதங்களையுஞ்சிவாகமங்களையும் அருளிப் போதிக்காநிற்கும். ஒன்று மலவிருளை நீக்கி ஒளிமயமாய் விளங்கும். ஒன்று தெய்வயானை யம்மையார்க்கும் வள்ளியம்மையார்க்கும் மோகமுத வும். ஒன்று தன்னடி சார்ந்தார்க்கு வேண்டு வரமளித்தருளும். இங்ஙன மன்றி மதுரைக் கணக்காயன்மகனார் நக்கீரனார் அருளிய திருமுருகாற்றுப் படையிலே, ஒருமுகம் பெருமையையுடைய இருள் செறிந்த உலகங் குற்ற மின்றி விளங்கும்படி பலகிரணங்களையுந் தோற்றுவிக்கும். ஒன்று அன்புசெய்வார் துதிக்க அவர்மீ துமகிழ்கூர்ந்து வேண்டு வரங்களையருளா நிற்கும். ஒன்று அந்தணர் வேள்வியைக் காத்தருளும். ஒன்றுசண்டுவெழுங் காத வேதசிவாகமங்களை யாராய்ந்துமுனிவர்மகிழும்படி யுணர்த்திச்சந்திர னைப்போலத் திசைகளையெல்லாம் விளக்காநிற்கும். ஒருதிருமுகம் சம நிலையின்றிக் கொடிய அசுரர்களையெல்லாம் அழித்தருளும். ஒருதிருமுகம் வேடர் புத்திரியாராம் வல்லிபோலும் இடையையுடைய வள்ளியம்மை யாருடன் மகிழ்ச்சியைப் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளன. மாமும்

வைரமும்போல் விளங்கும் பரசிவ சிற்சத்தியிற் பத்திலொரு கூறுய மகா சாதாக்கிய மென்னுந் தத்துவமும், மகா சாதாக்கிய ரென்னும் மூர்த்தியும் பொருந்திய கீழ் நோக்கா யுள்ள அகோரமுகமும், பராசத்தியிற் பத்தி லொரு கூறுள்ள சிவசாதாக்கிய மென்னுந் தத்துவமும் சதாசிவ னென்னு மூர்த்தியுஞ் செறிந்த மேனோக்கிய ஈசான முகமும், ஆதிசத்தியிற் பத்தி லொரு கூறுன அமூர்த்தி சாதாக்கிய மென்னுந் தத்துவமும் ஈச னென்னு மூர்த்தியும் பொருந்திய மேற்கு நோக்கியுள்ள சத்தியோ சாத முகமும், இச்சா சத்தியிற் பத்தி லொருகூறு யுள்ள மூர்த்தி சாதாக்கிய தத்துவமும் பிரமீசன் என்னும் மூர்த்தியும் பொருந்திய வடக்கு நோக் கிய வாமதேவ முகமும், ஞான சத்தியிற் பத்தி லொரு கூறுய கர்த்திரு சாதாக்கிய தத்துவமும் ஈசுர னென்னு மூர்த்தியும் பொருந்தின தெற்கு நோக்கிய அகோர முகமும், கிரியா சத்தியிற் பத்தி லொரு கூறுக வுள்ள கன்ம சாதாக்கிய தத்துவமும், ஈசான னென்னு மூர்த்தியும் பொ ருந்திய கிழக்கு நோக்கிய தற்புருட முகமும் ஆய ஆறு முகங்களே சிவ சுப்பிரமணியப் பெருமானது திருமுகங்களாம்" என்று வேத சிவாக மங்கள் கூறு நிற்கும்.

ஆகவே ஆறு திரு முகங்களும், வேல், அம்பு, வாள், சக்கரம், பாசம் அபயம் இவை பொருந்திய வலத்திருக் கரங்க ளாறும், வச்சிரம், வில், கேடகம், துவசம், அங்குசம், வரதம் என்பன அமைந்த இடத்திருக் கரங்கள் ஆறும், மயில் வாகனமும், வள்ளி யம்மையார் தெய்வயானை யம்மையார் என்னும் இருசத்திகளும் முறையே வலப்பாலும் இடப் பாலும் வீற்றிருக்க, கட்டழகுக் கெல்லாம் உறைவிடமாக விளங்குந் திரு மேனியை யுடைய மூர்த்தியே சண்முக மூர்த்தி யாகும், இது சோடச மகா மூர்த்தங்களு ளொன்று.

கந்த புராணம்.

ஏவர்தம் பாலு மின்றி யெல்லையி ரமலற் குள்ள
மூவிரு குணனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்த தென்னப்
பூவியல் சரவ ணத்தண் பொய்கையில் வைகு மைய
னுவிக ளருளு மாற்ற லறுமுகங் கொண்டா னன்றே.

நண்முக மிருமூன் றுண்டா னமக்கவை தாமே கந்தன்
றன்முக மாகி யுற்ற தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்த மூவிரண் டெழுத்து மொன்று
யுன்மக ளுமத் தோரா றெழுத்தென வுற்ற தன்றே.

குமார தந்திரம்.

𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 || 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌸𑌿𑌨𑍍𑌦𑍂𑌰𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌂 𑌶𑌰𑌵𑌿𑌪𑌿𑌨𑌭𑌵𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌯𑍂𑌰𑌾𑌧𑌿𑌰𑍂𑌢𑌂 𑌷𑌡𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌦𑍇𑌵𑌸𑍇𑌨𑌾𑌮𑌧𑍁𑌰𑌿𑌪𑍁𑌤𑌨𑌯𑌂 𑌵𑌲𑍍𑌲𑌭𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌕𑍍𑌷𑌂 | 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌬𑌾𑌣𑌂 𑌕𑍃𑌪𑌾𑌣𑌂 𑌧𑍍𑌵𑌜𑌮𑌪𑌿 𑌗𑌦𑌾𑌞𑍍𑌚𑌾𑌭𑌯𑌂 𑌸𑌵𑍍𑌯𑌚𑌾𑌪𑌂 𑌵𑌜𑍍𑌰𑌂 𑌸𑌰𑍋𑌜𑌂 𑌘𑌟𑌕𑌮𑌪𑌿 𑌵𑌰𑌂 𑌶𑍂𑌲𑌮𑌙𑍍𑌘𑍍𑌰𑍈𑌰𑍍 𑌦𑌧𑌾𑌨𑌂 ||

ஷண்முகஸ்வாமி!! வந்தேஸிந்தூரகாந்திம் சரவிபிநபவம் ஸ்ரீமயூராதிரூடம் ஷட்வக்திரம் தேவசேநா மதுரிபுதநயம் வல்லபத்வாதசாக்ஷம்! சக்திம்பாணம் க்ருபாணம் த்வஜமபிகதாஞ் சாபயஸ் சவ்யசாபம் வச்ரம்சரோஜ கட கமபிவரம் சூல மங்யைர் ததாநம்!!

தணிகைப் புராணம்.

படைவேல்பகழிவாடிகிரிபாசமபயம்வலத்திடத்துச்
சுடர்வார்குலிசஞ்சிலைதோல்புஃடோட்டிவாதமிவைபுரிந்த

தடவான்கரமுமுகமாறுந்தனிமாமயிலுமிருமாத
ருடனுமெழிலுந்தருமாறுமுகவனுருவமுஞற்றுநரும்.

சண்முக மூர்த்தயே நம:

நாற்பத்தைந்தாவது,

புரோகித மூர்த்தி.

தந்தை தாயர்க்கு விவாகம் நடக்குங் காலத்தில் மைந்த னுளனென்பது வியக்கத் தக்க தொன்றேயாம். அதனினும் மைந்தன் தந்தையார் சடங்கிற்குக் குருவாக இருந்து நடத்துவித்தா னெனின் எவர்க்கும் அதிசயத்தை விளைக்குமே யன்றோ? இவ்வாறாய அதிசய குணம் எமது சுப்பிரமணியப் பெருமான் ஒருவருழையிருப்பக் கண்டேமன்றி வேறெவர் மாட்டும் இருந்ததாக் கேட்டிலேம். தந்தையார்க்குப் பிரணவோபதேசஞ் செய்து சுவாமிநாதனெனச் சிறப்புப்பெயர் கொண் டிலகுவதினும் இது மிக்க சிறப்பாம் வியப்பே. வேதங்கள் யாகாக்கினிக் கதிபரொன்னும் உண்மைதோன்ற, சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம், என்று மும்முறை முழங்கின. நிற்க, இதன் சரிதமாவது — மதுராபுரியிலே மன்னர் மன்னவனும் மலயத்துவச பாண்டியனும் மனைவிகாஞ்சனமாலையென்பாளும் மகப்பேறின்றி வருந்தி நின்றார். பாண்டியன் அசுவயாகம் தொண்ணூற்றொன்பது செய்தான். இந்திரன் றன்னரசொழியுமேயென்று நினைத்துப் பாண்டியற்கண்டு, மன்னவ, புத்திரப்பேற்றை விரும்பி வேள்வி செய்வாயாக என்றுபோதித்துச்சென்றான். பாண்டியனும் அவ்வாறே புத்திரகாமேட்டிசெய்தான். யாகாக்கியினிடத்தினின்றும் உலகமாதாவாகியபரமேசுவரியுலகமெலாமுய்யுமாறு முத்தனமுடைய



புரோகித மூர்த்தி.

பெண்மகவாகி, மூன்று வருட வளர்ச்சிகொண்ட திருவுருவோடுந்தோன்றி யருளினார். காஞ்சன மாலை யெடுத்துப்பெரிது மன்பு கூர்ந்து எடுத்து அணைத்து இன்புற்றாள். மலயத்துவசன் உமாதேவியாரே தன்னன்பிற் குழவியாய் வந்தாரென்னும் உண்மை யுணராமல் மிக்க துயரத் தாழ்ந்தான். பிள்ளை யில்லாமற் பலகாலம் அருநோன்புழந்தேன். வேள்வி புரிந்தேன். அவ்வேள்வியும் ஒருபெண் குழந்தையைத் தந்தது. ஐயகோ அப்பெண்ணும் விகாரமான மும்முலையுடன் றோன்றிற்று என்று வருந்தினான்.

அதுபோது, அரசனே! நின் றிருமகட்கு மைந்தர் போலச் சடங்கனைத்தும் வழாது செய்க, தடாதகை எனப் பெயரிட்டு முடியுஞ் சூட்டுதி. அம்மாதரசிக்கு மணாளன் வருங்கா லோர்தனம் மறையும் என்று ஆகாய முகடுகிழிய வோர் வாக் கெழுந்தது. அரசன் நிரம்பிய மகிழ்ச்சி யுடையவனாய்ச் சடங்குகள் எல்லாஞ்செய்து, தடாதகைப் பிராட்டியாரெனத் திருநாம மிட்டு இன்புறாஉங் காலத்தே முடிசூட்டுத் திருவிழாவையு முடித்துச் சுவர்க்கஞ் சார்ந்தான். உலகமெலாந் தம்மொரு குடைநீழலி லடங்கப் பெண்ணரசி தனியாணை செலுத்தி வருநாளிலே திருமணஞ்செய்யும் பருவம் வந்தது. காஞ்சன மாலையாம் அன்னை யின்னமுங் கடிமணப் பேறு கண்டுகளித்திலேன் என்று வருந்தினாள். தடாதகைப் பிராட்டியார் கேட்டு, "அன்னாய் இரங்கலை. ஆகுநாளில் ஆகும். திசைதோறும் எனது சயத்தம்பம் நிறுத்தி வருவேன்" என்று பலவிமரிசைகளோடுந் திக்குக ளெங்கணுஞ்சென்று யாவரும் வந்து பணிந்து பாதகாணிக்கையாக நிதித் திரள்கள் செலுத்தப் பெற்று, முடிவிற் றிருக் கயிலைமலை நோக்கிச் சென்றார். சந்திர மௌலியா மெந்தையின் றிருவுளக்குறிப் பறிந்த நந்தியந் தேவர் சேனைகளோடுஞ் சென்று பொருது முறியடிக்கப் பட்டார். பரசிவப் பிரபு அஃதுணர்ந்து போர்க்களஞ் சார்ந்தார். அவரது திருவுருவத்தைத் தடாதகைப் பிராட்டியார் கண்ட மாத்திரையே யோர்முலை யொளித்தது. பிராட்டியார் நாணை

முற்றுப்பூங்கொம்புபோல் ஒசிந்து தலைகுனிந்து மண்ணைக் கிளைத்து நின்றார். சுமதி யென்னு மந்திரி அம்மையாரை யடிபணிந்து, இப்பிரபுவே தங்கட்குக் கணவர் என்றான். சிவ பெருமான் நங்கையே, சோமவாரங் கூடிய சுபமுகூர்த்தத்தே நின்னை மணஞ் செய வருதும். நீநகரஞ்செல்லுதியெனத் திருவாய் மலர்ந் தருளினார் அம்மையார் நாதன்மீது அன்பையும் உயிரையும் இருத்தி நகர் சென்றார். மணவினைக் குரியன யாவுஞ் செய்யப்பட்டன. பரம சிவன் பற்பல கோடி கணர்களும் கணநிபர்களும் புடைசூழத் திருமணக் கோலங் கொண்டு மதுரை மாநகர்க்கணுள்ள திருமணச் சாலைக்கு எழுந்தருளினார்.

சுபவேளை வந்தது என்று பிரமன் கூறுதலுங் காஞ்சனமாலை வந்து இறையவன் றிருவடிவிளக்கி யந்நீரை யுண்டு நின்றாள். மீனாட்சியம்மையாரும் அழகுக் கழகுசெய் தனேக வணிகள் கொண்டலங்கரித்து ஆயவெள்ளம் மகிழ மெல்லென நடந்து இறையவன் பாங்கர் எழுந்தருளி யிருந்தார். அப்போது மணச்சடங்கு இயற்றும் புரோகிதர் யாவரென, யாவரும் அஞ்சி நின்றார். பிரமதேவனுஞ் சுப்பிரமணியப் பெருமான் வீற்றிருந்தருளுதல் கண்டு வெருண் டொளித்தான். சிவபெருமான் சுப்பிரமணியக் கடவுளைத் திரு நோக்கஞ் செய்தருள, குன்ற மெறிந்த குகக் கடவுளாகிய பரமாசாரியன் புரோகிதராக இருந்துசடங்குகளை யாரம்பித்தார். முனிவப் பெண்களும் இலக்குமி சரஸ்வதியென்னு நங்கையரும் மங்கலம் பாடினர். சுப்பிரமணியப் பெருமான் சடங்கு இயற்றுவதையும், தந்தை தாயர் திருமண வினை கொண்டதையும் அங்குள்ள தேவர் முனிவர் முதலிய யாவருந்தரிசித்து மகிழ்ச்சிக் கடலின் மூழ்கிப் பெருவிம்மித மடைந்து நின்றார். அக்கினி வடிவரும் அக்கினிக் கதிபரும் அக்கினி குமாரரும் ஆகிய குமார சுவாமி துணையாலே கறு நெய் சொரிந்திட வேள்வித்தழல் மிளிர்ந் தெழுந்தது. பின்னர்மற்றையவிரி

யைகளைப்பதுங்கி யிருந்த * பிரமனைக் கொண்டு முடிப்பித்தார். பரமபிதா மாதாக்களாகிய சுந்தரேசப் பெருமானும் அங்கயற்கண் அம்மையாரும் சுப்ரமண்யப்பெருமானைப் புரோகிதராக் கொண்டு அவர் சொல்லியவண்ணம் நடப்பராயின் செவ்வேள் பெருமை யெளி, யனே னளவிற் றேயோ இங்ஙனம் இறைவனும் இறைவியுந் திருமணஞ் செய்யும் நாளிற் புரோகிதரா யிருந்து விவாகச் சடங்குகளை முடித்தலிற் கார்த்திகேயப் பெருமான் புரோகித மூர்த்தி யெனப் பெயர் பெற்றார். புரோகிதர்=யாக காரியங்களில் முன்வைக்கப் படுவோர். இவ்வாறு வேப்பத் தூரார் செய்த திருவிளையாடற் புராணமு முரைத்தது.

கடம்பவன புராணம்.

மருளாரும் பவத்தொடரை மாற்றியதென் னன்மகளாய் மவுலி சூடிப், பொருளாரும் புவிவிசயஞ் செய்தரசு செலுத்தியமும் முலைப்பூந் தேனைத், தெருளாருந் தமிழ்மதுரை நாதன்மணஞ் செயவிதிநூற் சடங்கு செய்தே, யருளாருங் கடம்பவனத் துறைகுமர குருபரனை யகத்துள் வைப்பாம்.

புரோகித மூர்த்தயே நம:

நாற்பத் தாறுவது,

கலாவிநோத மூர்த்தி.

பகவன் என்பவர்க்கும் ஆதி யென்பாட்கும் புத்திரியா ராகச் சரசுவதி தேவியின் அம்சமாகப் பிறந்து, கணபதி யாகிய விநாகக்

* பரஞ்சோதி முனிவர் இயற்றியருளிய திருவிளையாடற் புராணத்தில் "கற்றான் முகத்தோன் வேள்விச் சடங்குநூல் கரைந்தவாற்றான்" என்று கூறியபடி பிரமன் செய்தானென்பதற்கும் இது விரோத மில்லை யென்க. வேப்பத்தூரார் திருவிளையாடலுங் கடம்பவனபுராணமும் ஆகிய இரண்டும் நோக்கி யதனைத் தழுவிக் கோடல் சால்பு,

கலா

கடவுளைப் பூசித்து அவரது திருவருளினாலே தெய்வப் புலமை கைவரப் பெற்ற ஔவையார், அரச சமஸ்தானத்தை வெறுத்துக் கல்வியறிவிற் றமக்கு நிகராவார் ஒருவருமிலர் என்னும் எண்ணத்தான் அகங்காரமுற்றுக் காட்டுவழியாக வருவாராயினர். அமிழ்தினுமினிய செந்தமிழ்க்கடன் மாந்திய நல்லிசைப் புலவரை வெறுத்தல் பொறுக்காத பரமாசாரியராங் குமாரக் கடவுள், ஔவையாரின் அகங்காரத்தை யொழித்தல் காரணமாகவும், ஓர் கலா விநோதஞ் செய்வது காரணமாகவும் திருவிளையாடல் ஒன்று புரியத் திருவுளங்கொண்டருளினார். ஔவையார் வரும் வழியிற் செவ்வேள் தம்முருவை மறைத்துப் பசுக்களை மேய்க்கும் ஓர் ஆயச் சிறுவனாகிக் கோல் கைக்கொண்டு நாவன் மரத்திலேறிப் பழந் தின்பார் போல் நடித்து நின்றார். பசியினால் மிகவருந்தி நின்ற ஔவையார் அவரை நோக்கிக், "குமாரனே! பழத்தில் மிக்க விருப்புடையனாயிருக்கின்றனே. எற்குப் பசி நீங்கச் சிலபழங் கொடுக்க" என்றனர். கந்தநாதராகிய பாலனார், "அம்மே! சுடும் பழந்தருகோ? சுடாப்பழமுதவுகோ? எதுவென வுரைப்பையேல் இக்கணமே கொடுப்பல்" என்றார்.

ஔவையார் கேட்டுத் திகிலடைந்து நாவற்கனிகளிற் சுடும் பழம் யாண்டுங் கண்டிலேம் கேட்டிலேம். சுடாத கனிகளே எங்கணுமிருப்பக் கண்டுளேங் கேட்டுளேம். இஃதென் புதுமையென் றெண்ணி, அதனை யறிகுதும் என்று, "மைந்தவோ! சுடுகனியே தருக" வெனவுரைத்தார். குமார சுவாமியாம் பாலவடிவினர் அறக்கனிந்த சில பழங்களை மணலின்மீது எறிந்தார். அவற்றை ஔவையார் எடுத்துப், பசிக்கடுமையால் விரைவிற் றின்ன விரும்பிப் பழங்களி லொட்டியிருந்த மண் போகுமாறு வாயால் ஊதினார். அதனைப் பார்த்த பெருமான், "கிழவியே! சுட்டது கொல்? சுட்டது கொல்?" என்று கைதட்டி நகைத்தார். ஔவையார் அதுகேட்டுப் பெரிதும் நாணி, அன்னோ! அறிவின் முதி

ர்ந்து இணையிலா நுண்ணறி வுடைய பிறப்பு யாமேயென்று இறுமாந்தே மன்றோ? சிற்றுளி யானே பெருமலை தகர்த்தொழிதல் கண்கூடே. குறு முனி சிறுகையுட் பெருங்கட லுழுந்தளவாகிப் பருகப் பட்டதே. அறிவு யாரிடத் தடங்கிற்றம்ம! அறிவுக்கும் அவதியுண்டோ? முதியார் மாட்டு இழிவுறக்கு மொழியும், இளையார்வாய் உறுதியுடைச் சொல்லும் இருத் தல் கண்டேன். இதுகாறும் எவரானும் வெல்லப்படாமல் எத்துணைக் கூரிய மதி கொண்ட நல்லிசைப் புலவர்களை யெல்லாம் வென்று சிறந்து விளங்கினேன். இற்றை ஞான்று ஓர் குழந்தை வெல்கச் செய்தனனே. இஃதென் கொலோ வென்று துக்கத்து ளாழ்ந்தார். கார்த்திகேயப்பெரு மான் கண்டு, "முதியாய்! நுண்ணுணர் வுடையராய் நூலொடு பழகி னும்-பெண்ணறி வென்பது பெரும்பே தைமைத்தே" என்பது நீயறிந் ததே ஆகலால் நீ வருந்தலை" யென்று தமது சுயவடிவத்துடன் றோன்றி முன்னின்றார். ஒளவையார் தம்மை மறந்து ஆனந்த வெள்ளத் தாழ்ந்து, "எங்கள் செந்தமிழ்த் துரையோ அடியேனை யாட்கொண்டருள எழுந்த ருளிய திருக்கோலம்" எனப் பலவாறு துதித்துப் பன்முறை பணிந்து நின்றார். வேலாயுதப் பெருமான் அருள் சுரந்து, "பண்டிதையே! நின் னுடன் கலா விநோதஞ் செய்ய வந்தேம். இனியது எது?" என்று வினவி யருளினர். ஒளவையார் உரைப்பார்:—

இனியது கேட்கிற் றனிநெடு வேலோ
யினிது வினிது வேகாந்த மினிது
வதனினு மினிது லாதியைத் தொழுத
லதனினு மினிது வறிவினர்ச் சேர்த
லதனினு மினிது வறிவுள் ளோரைக்
கனவினு நனவினுங் காண்பது தானே.

அதற்குச் செவிசாய்த்த பெருமானர், "கலைக் கிழத்தியே! நன்று நன்று, இனியன கூறினை. கொடியனவற்றையும் இக்குவ

லயம் உணர்ந் தொழுகுமாறு தெரித்தி" யென்று ஆஞ்ஞாபித்தார். அதற்கு உத்தரமாக :—

கொடியது கேட்கி னெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
வதனினுங் கொடிது விளமையில் வறுமை
யதனினுங் கொடிது வாற்றொ ணுக் கொடுநோ
யதனினுங் கொடிது வன்பிலாப் பெண்டி
ரதனினுங் கொடிதிங் கவையி
னின்புற வவள்கையி லுண்பது தானே,

என்ற கவியை ஔவையார் சொற்றனர். அதுகேட்ட குகேசப் பெருமான் "ஔவையே! அரியவற்று ளெல்லாம் அரியது யாது?" என்று வினவியருளினர். ஔவையார்,

அரியது கேட்கின் வரிவடி வேலோ
யரிதரிது மானுட ராத லரிது
மானுட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்த லரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையு
ஞானமுங் கல்வியு நயத்த லரிது
ஞானமுங் கல்வியு நயந்த காலையுந்
தானமுந் தவமுந் தாஞ்செய்த லரிது
தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே.

என விரைவாக உத்தரங் கூறினர். "பெரியவற்று ளெல்லாம் பெரியது யாது?" என்று வள்ளி நாயகனார் கேட்டருளினர். ஔவை யார் கார்த்திகேயப் பெருமான்றன் கழலடியை வணங்கி, "எங்கள் தெய் வமே! செந்தமிழ்ப் பரமகுருவே! தேவரீர் அறியாத தொன்றுண்டோ?

எல்லா வறிவு முடைய தேவரீர் நாயினுங் கடைப்பட்ட பேதையேனை வினவல், தாய் தந்தையர் குழவிவாய் மழலைமொழி கேட்டுக் களிப்பது போன்றதே" யென்று கூறுவாராயினர்.

பெரியது கேட்கி னெரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தி வந்தோன்
கரிய மாலோ வலைகடற் றுயின்றோ
னலைகடல் குறுமுனி யங்கையி லடக்கங்
குறுமுனி யோகல சத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ வரவினுக் கொருதலைப் பார
மரவோ வுமையவள் சிறுவிரன் மோதிர
முமையோ விறைவர் பாகத் தொடுக்க
மிறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கந்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே

என்று கூறியது கேட்டு, சரவண பவன் மகிழ்ந்து கூறுவது "பண்புடையாய்! நின் மொழி கேட்டு உவகை யுற்றோம். பசி, பிணி, நரை, திரை, முதலியன வின்றி நெடுங்காலம் வாழ்வா னினைவை யேற் சேரநாட்டி லொரு பெருமலையின் முழையிடத்தே கரு நெல்லியிலே அமிழ்தின் றன்மையைத் தன்னிடத்தே யுடைய இனிய பழ மொன்றுளது. அரசனாகிய அதிகமான் நெடுமான் வஞ்சியைப் பாடிக் கேட்பையே லீவான் அதுண்டு நன்கு வாழ்தி" யென்றருளி யந்தர்த்தான மாயினர். அங்ஙனமே யௌவையார் கொங்கு நாட்டுக் கருவூர்க்கட் சென்று ஆங் கரசிருந்த அதிகமா னெடுமான் வஞ்சியைப் பாடி நெல்லியங்கனி யுண்டு நெடுநாள் வாழ்ந்திருந்தனர். இங்ஙனம் சுப்பிரமணியப் பெருமான் தெய்வப் புல

மை ஔவைப் பிராட்டியாருடன் கலாவிநோதஞ் செய்தருளினமையாற் கலாவிநோத மூர்த்தியாயினர்.

செந்தமிழ் நாவலர் சரிதை முதலிய நூல்களி னிவ் விவரங் காண்க.

கலா விநோத மூர்த்தயே நம:

நாற்பத்தேழாவது,

இலீலா மூர்த்தி.

மகாதேவருக்குந் தேவியாருக்கும் நடுவேயெழுந்தருளி யிருந்த முருகக்கடவுள் தம்முடைய துணைவர்களாகிய வீரவாகு முதலினோருடன் எழுந்து பெருங் கருணையினாலே திருவிளையாடல் செய்யும்படி திருவுளங் கொண்டருளினார். திருவடிகளிலே தண்டையுஞ் சிலம்புங் கழலுஞ் சதங்கையும் ஒலிக்க, திருவரையிலே கிண்கிணி இசைக்க, திருச் செவிகளிலே குண்டலமும், திருமார்பிலே மதாணியும், திருநெற்றியிலே வீரபட்டிகையும் விளங்கத் திருவிளையாடல் செய்வாராயினார் சபைதோறும் உலாவுவர். வாவிகடோறு முலாவுவர். பூஞ்சோலைகள், ஆறுகள், குன்றுகள், குளங்கள், ஆற்றிடைக்குறைகள், ஆதீண்டு குற்றியையுடைய இடங்கள், அந்தணர் சாலைகள், சிவதலங்கள், கடப்ப மரங்கள் இருக்குந் தானங்கள் செந்தமிழ்ப் பயிலுங் கழகங்கள், வடமொழி கற்கும் மாணிடங்கள் என்பவற்றி னுலாவுவர். பூமிக்க ணுலாவுவா திசைக டோறுஞ் செல்வார். கடல்க டோறு முலாவுவர். ஆகாயத்திற் சஞ்சரிப்பர். சூரிய சந்திராதி கிரகங்களும் நட்சத்திரங்களு முள்ள இடங்கடோறுஞ் செல்வார். சந்தர்வர் சித்தர் கருடர் முதலாயினோருடைய உலகங்களி னுலாவுவா, இந்திரலோகம், இருடியர்

இலீலா மூர்த்தி.

லோகம், பிரம பதம், விட்டுணு பதம், சத்தியுலகு, சிவலோகம் என்ப
வற்றி னடந்து சென்று விளையாடல் செய்வார்; பிருதிவி யண்டங்கள்,
ப்பு,அ தேயு, வாயு, ஆகாயம் என்னு மிவையிற்றி னண்டங்கள் எங்க
ளுஞ் செல்வார்; மற்றைப் புவனங்களினு முலாவுவர். ஆறுதிருமுகங்க
ளோடும் பாலராய்த் திரிவர். முனிவராக விளங்குவார். வீரராய்த் திரிவர்;
காலாற் செல்லுவர்; குதிரைமீது செல்லுவர்; யானை மீது வருவர்;
தேர்மீதேறுவர்; சிங்கப் பிடரில் இவர்ந்து செல்வர்; ஆட்டுக்கடாமீது
போதுவர்; விமானத்திற் சஞ்சரிப்பர். முகிலின் மீது வருவர்; மணி
யசைப்பர்; குழலூதுவர்; கோடு இரட்டுவர்; வீணை வாசிப்பர்; நாநாவித
வாத்தியங்களை யிசைப்பர்; இசை பாடுவர்; கூத்தாடுவர்.

உலகங்க ளெங்கணுஞ் சென்று திருவிளையாடல் புரியும் சண்முகக்
கடவுள் பின் ஒருதிரு விளையாடல் செய்வாராயினர். குலமலைகள் அனைத்
தையும் ஓரிடத்தில் ஒருங்கு கூட்டுவர். அவைகளைப் பின்பு தலைதடு
மாற்ற மாகப் பூமியி னிறுத்துவர். கடல்கள் அனைத்தையும் ஒன்றாக்கு
வர். மகாமேரு மலையைப் பாதலத்திற் பொருந்த அழுத்துவர். கங்கா
நதியை யடைப்பர். பாதலத்துள்ள எட்டு நாகங்களையும் பிடித்து மகா
மேரு முதலிய மலைகளிலே பிணைத்து உயிர்களுக்கு ஊறில்லா வண்ணஞ்
சிறுதேர்களாகக் கொண்டு உருட்டிச் செல்வர். திக்கு யானைகளை யொன்
றோடொன்று போர் செய்ய விடுவர். விசுவர்கள், சித்தர்கள், அமரேந்
திரர்கள், நவப் பிரசாபதிகள் என்னு மிவர்களை யெல்லாம் நடுங்கச் செய்
தும், பூமியைக் கோட்டை போலவளைந்து நிற்கின்ற சக்கிரவாள மலைக்
குஞ் சென்றும் விளையாடினர். பின்னர்ச் சத்திய லோகஞ் சென்று பிரம
னுடைய முகங்களைத் தமது திருக்கை விரல்களால் அடிக்கடி தொட்டும்,
அவன் மார்பி லணிந்திருந்த முப்புரி நூலை யவனது தலையிலே சூட்டிச்

நாற்பத் தெட்டாவது,

தேவ தண்டன ரக்ஷா மூர்த்தி.

இங்ஙனம் சுப்பிரமணியப் பெருமான் திருவிளையாடல் புரியும் போது, பூமியிலுள்ள அசுரர்கள் "இது செய்தவர் யாவர்?" என்று தியக்க முற்றார்கள். அசுரர்கள் யாவரும் பின்னுஞ் சிலநாள் சீவிக்கும் வண்ணம் ஆயுள் பெற்றுள்ளாராகலின் முருகக்கடவுள் அவர்களுக்குத் தமது திருமேனியைக் காட்டாது உலாவினார். அவர்கள் தேடித் தேடி ஒருவரையுங் காணாமையால் "பிரம விட்டுணுக்களாலுங் காணப்படாத சிவபெருமானுடைய மாயமே இது" என்றார்கள். பூமியிலுள்ள மனிதர்கள் யாவருங் கண்டு "கொடுங்கோல் செலுத்தாநின்ற அசுரர்களெல்லாம் இறப்பது திண்ணம். இவை அதற்கு ஏதுக்களாகத் தோன்றிய விம்மிதம்போலும்" என்றார். சூரிய சந்திரர் முதலிய தேவர்கள் "இவை யசுரர்கள் செய்கையன்று; வேறியாரோ செய்தனர்" என்று இரங்கி யொருங்கு சேர்ந்து இந்திரன் பிரமன் முதலினோர் இருக்கும் மேரு சிகரத்தை யடைந்தார். இந்திரனைக் கண்டு பணிந்து இவற்றைக் கூறினர். அவனது கேட்டு "நானும் ஆராய்ந்து கொண்டே யிருக்கின்றேன் சிறிதும் அறிந்திலேன். பிரமதேவரை வினவுவேம்; எழுந்திருங்கள்" என்றான். உடனே அவ்விந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் மெய்த்தவஞ் செய்தமையால் அவர்கள் கண்களுக்குத் தெரியும் வண்ணம் அறுமுகக்கடவுள் ஒருதிரு முகமுடைய பாலராய் அம்மலைமீது தோன்றி மேருமலையை யசைத்துத் தாமரையிதழ்களைக் கொய்து சிந்துதல்போலக் கொடுமுடிகளைப் பறித்து வீசினார்.

இந்திரன் முதலிய தேவர்கள் கண்டு "ஐயையோ! பூவுலகத்தையும் வானுலகத்தையுந் திரிவு செய்தவன் இவனே யாகும்" என்று சிங்கத்தை யெதிர்ந்த விலங்கினங்கள் போலக் கலங்கி யேங்கி, "இவன் அசுரரினுங் கொடியன்; யாவரும் எய்தாத மாயமுடையன்;

தேவதண்டணாக்ஷா மூர்த்தி.

இவனைப் போர்செய்து வெல்வேம்" என்று வளைந்தனர். இந்திரனுங் குமாரசுவாமி யென்றுணராது சினமுற்று ஐராவதயானையை நினைக்க அது வந்தது. குலிசம், வாள் வில் முதலிய ஆயுதங்களையேந்தி இந்திரன் போர்க்கோலங்கொண்டு யானைமீதேறிப் போர்செய்யத்தொடங்கினன். குமாரசுவாமி தம்மைத் தேவர்கள் பகைவர்களாய் வளைந்தமையைநோக்கித் திருநகை செய்து யாதும் எண்ணாது முன்போலவே தமதுதிருவிளையாடலைச் செய்தார். இந்திரன் படைக்கலங்கள் பலவற்றைக் குமாரக்கடவுள்மீது விடுப்ப, அவையெல்லாம் அவர்மீதுமலர்போலப் பட்டன. அது கண்டு இந்திரன் வச்சிராயுதத்தை விடுத்து ஆரவாரித்தான். அது எம்பெருமானது திருமார்பிலே பட்டு நுண்மணல்போலத் துகளாயிற்று. மேகவாகனன் றயாத் தழுந்த, ஐராவதம் வெகுண்டு மதங்களை மழைபோற் சொரிந்து கொண்டு பெருமானார் முன் சென்றது. முருகக்கடவுள் சங்கற்பத்தால் ஓர் வில்லையும் பலபாணங்களையும் விரைந்து படைத்துக்கொண்டு, வில்லை வளைத்து நாணொலிசெய்து ஒருபாணத்தை அவ்யானைமீது செலுத்தினார். உடனே ஐராவதம் புலம்பி வீழ்ந்து இறந்தது. இந்திரன் வருந்திக் குமாரக் கடவுளை யணுகித் தன்வில்லை வளைப்ப, அவர் ஓரம்பை யவன் புயமீது விடுத்தார். ஆகண்டலன் வலிமை குன்றித் தளர்ந்து வேலொன்றை யேவினன். அது சிறுபுற் போலப்பட்டுச் சாயத் தேவர்கள் கண்டு அற்புதமெய்தி நின்றார். முருகக்கடவுள் இந்திரன் முடியை யோரம்பினாலும், கொடியை யோரம்பினாலும் கவசத்தை யோரம்பினாலுஞ் சிதைத்து, மார்பின்மீது எழம்பை யேவினார். இந்திரன் அயர்ந்து வீழ்ந்தான். மற்றைத் தேவர்கள் வளைத்தனர். அப்போது சுப்பிரமணியக்கடவுள் வருணனை நான்கம்பினாலும், இயமனை ஐந்து பாணத்தாலும், இந்திரனை ஒருவாளியாலும், சூரியனைமூன்றுகணையாலும், வாயுவை இரண்டு அத்திரத்தினாலும், அக்கினியை மூன்று எவினாலுங் கொன்று நின்றார்.

ஏனைய தேவர்கள் யாவருஞ் சரபத்தின் வணமை கண்ட நரசிங்கம்போல நடுநடுங்கி யோடினர். பெருமான் அங்குத் தனிநின் றுலாவினர்.

இச்செயலை நாரத முனிவர் கண்டு தேவகுருவாகிய பிருகற்பதி யிடத்துச் சென்று கூறினர். வியாழப்புத்தேள் அதுகேட்டுத் தேவர்களு டைய வாழ்க்கை யிறந்ததுபோலும், என்று சொல்லிக்கொண்டுதுயருற்று விரைந்து சென்று, தேவர்கள் இறந்து கிடத்தல் கண்டு துக்கித்து, முரு கப் பிரான் திருவிளையாடல் செய்வதையுந் தரிசித்தார். பாலராகிய அவ ரது திருவடித் தாமரைகளில் வீழ்ந்து வணங்கித் துதித்து, "எம்பெரு மானே! தாரகன் சிங்கன் சூரன் என்னும் அசுரர்கள் வருத்த இந்திரன் நாடோறுந் துன்பமுழந்து தன்பதத்தை விடுத்து இம் மேருமலையில் மறைந்திருந்தான். அவன் தேவரீரை வழிபட்டுப் பகைவர்களைக் கொல் வித்து முன்போலத் தன்னரசைப்பெற நினைத் திருந்தான். பல காலம் அருந்தவஞ்செய்து வாடினன். தேவரீரது திருவவதாரந் தரிசித்தூத தன் றுயரமெல்லாம் நீங்கினாற்போல உவகை பூத்தான். தொண்டனை இந் திரன் றேவரீர் இங்ஙனந் திருவிளையாடல் செய்வதை யறிந்திலன். விட் டுணு முதலினோர் தேடிக் காணாத சிவபெருமானும் உமாதேவியாரும் அவர் திருவருள் பெற்றோர் சிலருமன்றித் தேவரீரது திருவிளையாடலை யறிய வல்லவர் யாவர்? அடியேம் பாசத்தையும் பசுவையும் பகுத்து இஃதித் தன்மைய தென்று அறிந்திலேம். பாசத்தினின்று நீங்கிலேம். சிற்றறி வுடையேம். இவ்வியல்பு உடையேந்தேவரீரது திருவிளையாடலை யெங்ஙனம் அறிவேம். நீதி சேர்தண்டமே புரிந் தருளினீர். மற்றைத் தேவர்களும் அஞ்ஞானத்தாற் பொரு திறந்தார். தாய் தந்தையர் தமக்குப் பிழை புரிந்த பிள்ளைகளைக் கொல்வா ராயின் அவர்க்கு வேறியார் அருள் செய்வர். ஞான வடிவாகிய சுவாமீ! சரபஞ் சிங்கத்தைக் கொல்வதன்றி மின்மினியைக் கொல்லுமோ? அருட் பெருங் கடலே! அசுரர்களை வே

ரோடு அறுத்தருளும். எளியவர்களுந், தேவரீரது திருவடியை மறத்தலில்லாத அன்பர்களுமான தேவர்கள் செய்த பிழையைப் பொறுத்தருளி, அவருயிர் பெற்று உய்யும் வண்ணந் திருவருள்புரிக'' என்று விண்ணப்பஞ் செய்தார்.

முன்னைப் பழம் பொருட்கெல்லாம் முன்னைப் பழம்பொருளாகிய முருகக்கடவுள் அது கேட்டுத் திருமுறுவல் செய்து இந்திரன் முதலிய தேவர்கள் தத்தம் வாகனம், படை, முடி முதலியவற்றோடும் பழமை போல் உயிர்பெற்று எழுமாறு திருவுளங் கொண்டருளினார். அங்ஙனமே இந்திரன் முதலாயினோர் எழுந்து மெய்யறிவு தோன்றப் பெற்றுத் தாங்கள் போர் புரிந்தது முருகக்கடவுளுட னென்று அறிந்து நடுநடுங்கி யொடுங்கிப் பன்முறை வீழ்ந்து துதித்து அவரது திருவருள் பெற்று முன்போல உலகங்களைவைப்பித்து உய்ந்தார். தேவர்களைத் தண்டித்து இரட்சித்தமையாற் குகஸ்வாமி தேவதண்டன ரக்ஷா மூர்த்தி எனப் பெயர் பெற்றார்,

சங்கர சங்கிதை-சம்பவ காண்டம்:

[illegible] |
[illegible]
[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible]
[illegible] |
[illegible] |
[illegible] ||

கந்தபுராணம் - திருவிளையாட்டுப் படலம்.

எழுதியென் றுரைத்த லோடு மிந்திரன் முதலா வுள்ளோர்
விழியிடைத் தெரிய வன்னோர் மெய்த்தவம் புரிந்த நீரா
வழிவுற வுலகி லாடு மறுமுகன் வதன மொன்றிற்
குழவிய தென்ன வன்ன குன்றிடைத் தோன்றி னானால்.

ஒல்லா தவரிற் பொருதே சிலவும்பர் வீழ
நில்லா துடைந்து சிலதேவர்க ணீங்க நேரில்
வில்லா ளியாகித் தனிநின்ற விசாகன் மேனா
ளெல்லா ரையுமட் டிலவுந் தனியீச னொத்தான்.

பொன்னவ னின்னன புகன்று வேண்டிட
முன்னவர் முன்னவன் முறுவல் செய்துவான்
மன்னவ னாதியர் மால்க ளிற்றொடு
மங்கிலை யெழும்வகை யருள்செய் தானரோ.

தேவதண்டன ரக்ஷாமூர்த்தயே நம:

நாற்பத்தொன்பதாவது,

*தாரகாசுர சங்கார மூர்த்தி.

முருகக் கடவுள் சூரபன்மன் முதலாய அசுரரைச் சங்கரிப்பான் திருக்கயிலையி னின்றும் எழுந்து தேர்மேல் ஏறியருளும்போது வாயு

* தாரகாசுர சங்கார மூர்த்தியும் வேறு. தாரகாந்தக மூர்த்தியும் வேறாம். தாரகன் இருவா ரென்றுணராத சிலர் தாரகாந்தகன் என்று சொல்லப்பட்ட மூர்த்தியை, குகன் றுணைவனாகிய தாரகனைக் கொன்ற மூர்த்தி யென்று கொள்வர். அன்னது பொருந்தாது. என்னை? அங்ஙனேற் பதினாறு மூர்த்தங்களுட் சூரபதுமாந்தக மூர்த்தி, சிங்கமுகாந்தக மூர்த்தி எனபவுஞ் சொல்லப் படுதல் வேண்டும். அங்ஙன மின்மையால் அஃதன்றென்க. ஈண்டுக் கூறப்பட்ட தாரகன் மாயைபுத்திரனாய்ச் சூரற்குத் தம்பியாயுள்ளவன்.

தாரகாசுர சங்காரமூர்த்தி

தேவன் முட்கோலும் மத்திகையுங் கொண்டு பாகனாகி, $ தன்னினமாகிய வாயுக்கள் பக்கத்துவா மகிழ்ச்சியோடுஞ் செலுத்தினான். இரண்டாயிரம் பூதவெள்ளங்களும், ‡ நூற்றெண்மர் சேனாபதிகளும், இலக்கம் வீரர்களும், தம்பிமார் ஒன்பதின்மருஞ் சூழப் புறப்பட்டார். பூமியை வந்து அடைந்த காலை, தாரகாசுரனுக்கு இருப்பிடமான கிரவுஞ்சமலை சேர்ந்தது. தேவர்கள் அதனைக் கண்டு மனம் பதை பதைத்தார்கள். இந்திரன் நடுங்கினான். நாரத முனிவர் அறு முகக் கடவுளின் திருவடிகளைப் பணிந்து, பராபர மூர்த்தி! முனிவர் தேவர்களை யெல்லாம் வருத்தாற் கொன்று அகஸ்திய முனிவர் சாபத்தால் மலைவடிவமாம் நிற்கும் அசுரன் இவனே. இம்மலையின் பக்கத்துள்ள மாயமா புரியிலே சூரபன்மனுக்குத் தம்பியும், யானை முக முடையவனும், மாயையில் வல்லவனும், விட்டுணுவின் சக்கரத்தைப் பொன் மாலையாகத் தரித்தவனும் ஆகிய தாரகன் என்னும் அசுர வீரன் இருக்கின்றான். இவனைக் கொல்வீராயின் இவன் றமையனைக் கொல்லல் மிக எளிது என்று விண்ணப்பஞ் செய்தார். "அவனை இங்கே கொல்வேம்" என்று சரவண பவ சுவாமி திருவாய் மலர்ந்தருளி, பக்கத்து நின்ற வீரவாகு தேவரை நோக்கி; "இளவலே! இது கிரவுஞ்சமலை. இதன்பக்கத்தே யுள்ள மாயமா புரியிற் றாரகன் என்பானுளன். ஆயிரம் பூதவெள்ளத் துடனும், இலக்கத்தெண்மர், பூதசேனாநிபர் என்னு மிவர்களோடுஞ் சென்று போர்புரிந்து தடுத்தெதிர்க்குஞ் சேனைகளைக் கொல்வாய். தாரகனுடன் பொருது

$ நூற்றெண்மர் சேனாபதிகளின் விவரங்களை மகேந்திர காண்டத்திற் காண்க.

‡ வாயுக்கள் நாற்பத்தொன்பதென்று புராணங்கள் புகறலின் தன்னினமாகிய வாயுக்க ளென்றாம். அவைகளை யிருபக்கத்துந் தோள்களாகவு முடைமையால் வாயுதேவற்குக் கந்த வாகன் என்னும் பெயர் வந்ததென்ப. இவற்றி னியல்களை யெல்லாங் கூர்ம மகாபுராணம் விண்டு புராண முதலியவற்றிற் காண்க.

வெல்லலரிதாயின் யாம் வந்து தெறுப்பாம்" என்று கட்டளையிட்டருளி னார்.

அப்போதே தேவர்கள் மனத்தினின்றும் பயம் வெளிச் சென்று பெருங்களிப்பு வந்து புகுந்தது. அசுரர்களின் நகரங்கடோறும் சாக்குறி களும், கோரமான அவசகுனங்களுந் தோன்றின. மேகங்கள் கழுதை கதறுவதுபோல் முழங்கி யிரத்தமழை பெய்தன. அசுரர்களின் உபரி கைகளின் சிகரங்களிடிந்து வீழ்ந்தன. பூகம்ப முண்டாயிற்று. ஆங்காங் குக் காற்றுடன் கூடிய அக்கினிச் சுவாலையு முண்டாயிற்று. மண்மாரி சில விடங்களிற் பெய்தது, விண் வீழ்கொள்ளிகள் பன்முறை வீழ்ந்தன நட்சத்திரங்கள் உதிர்ந்தன. வால் மீன் விண்ணிற் காணப்பட்டது. நீர்க் கால்கள் கலக்க முற்றன. எல்லாக்கடல்களும் நுரைகளால் நிரம்பப்பெற் றன அமங்களாமான நரிகள் சூரியனை நோக்கி யூளை யிட்டன. நாய்கள் குரைத்தன. அசுரர் தலைகளில் ஓணான்கள் விழுந்தன. அவர்கள் வீடுக டோறும் ஆமைகள் காணப்பட்டன. தேர் வீரர் தலைகீழாக விருந்தார் கள். குதிரைகள் கண்களி னின்றும் நீரைத் தாரைதாரையாக விட்டன. தேர்களிற்பருந்துகளுங் காகங்களும் வந்து இருந்தன. யானைகள் காரண மின்றித் தந்தங்கள் தலைகளைத் தூங்க விட்டன. பொன்களைக் கட் டைகள் போலக் கண்டார்கள் நீரிலே வானவில்லைப் பார்த்தனர். இங்ங னம் அசுரர்க ளிருக்குமிடங்க டோறும் உற்பாதங்க ளேணர்ந்தன.

வீரவாகு தேவர் முதலினோர் சுவாமியை வணங்கி போர்முன்சென் றார். பூதர்கள் மாயமா புரியினுள் நுழைந்து அசுரசேனைகளுடன்பொருது நின்றார். தாரகன் தூதராலதனை யறிந்து மிக்க கோபமுற்றுச் சேனைக ளோடும் எழுந்து போர்க் கோலங்கொண்டு தேர்மீதேறி வந்தான். அசுர சேனைகளும் பூத சேனைகளுங் கோரயுத்தம் புரிந்து அசுரச் சேனைகள் இறந்தன. தாரகன் கண்டு தேரினின்றும் பூமியிலே குதித்து ஒருதண் டத்தைச் சுழற்றிப் பூதர்களைக் கொன்று அண்டமுங் குலுங்கும்படி ஆர் த்துக்கால்களால் உழக்கிச் சென்றான். அதனாற் பூதசேனை ப,

மனந் தளர்ந்து அஞ்சி யோடினர். சிறந்த இலக்கம் வீரர்கள் அதனை யறிந்து வளைந்து யுத்தம் புரிந்தார்.

தாரகன் வைரத் தண்டத்தாற் றேர்களையடித்துச் சிதைத்து, இலக்கம் வீரர்களையும் வாரித் தன்றுதிக்கையா லெடுத்துக் கடலிலெறிந்தான். அவர்கள் விழுந்து ஒருபக்கத்துப் போனார்கள். வீரகேசரி யென்பார் தாரகன் கிரீடத்தைத் தகர்த்தார். அவனும் தண்டத்தாலடித்தான். மயங்கி வீழ்ந்தார். வீரவாகுதேவர் எதிர்த்துப் பொருதார். புதனுஞ் சுக்கிரனுஞ் சேருங் காலத்திற் சோனைமாரி பெய்வதைப்போலத் தாரகன் பாணங்களைப் பொழிந்து மறைந்தான். கருநிற முடைய சனி புகைந்த காலத்து மழையென்பது சிறிது மில்லாமைபோல வீரவாகுதேவர் அவைகளை யெல்லாம் பாணங்கள் விட்டு மாற்றினார். அசுரன் மிக்க கோபங்கொண்டு முத்தலைச் சூலமொன்றை யெறிந்தான். அது வீரபாகு தேவரது மார்பிலே பட்டமையால் அவர் சிறிது காலம் மூர்ச்சையடைந்தார். அப்போதவரது தம்பிமார் எழுவரும் வந்து வளைந்து யுத்தம் புரிந்தனர். தாரகன் அவர்கள் விடுத்த பாணங்களை யெல்லாந் தன் றுதிக்கையின்கணிருந்த தண்டாயுதத்தினால் விலக்கி அவ்வெழுவரையு மவ்விருப்புத் தண்டாயுதத்தினாற் புடைத்தனன். அவர்கள் மிக்க வருத்த முற்றோங்காலத்திற் சத்துருக்களை நாசஞ்செய்யும் வீரவாகு தேவர் மூர்ச்சைதெளிந்து பாணங்கள் பலவற்றைக் கோபத்துடன் பொழிந்தார். அசுரனவைகளைப் பாணம் விட்டறுத்து ஓர் அக்கினியத்திரம் செலுத்தினன். வீரவாகு தேவரும் ஓர் யத்திரத்தை யுந்தி யதனை யடக்கினார். இதனாற்றான் வெப்பம் வெப்பத்தாற் றணிகின்ற தென்பதோ ராச்சரியவதந்தி வந்ததுபோலும்! பின்னரும் யானைமுகமுடைய அவுணன் வருணாத்திரம் சூரியபாணம், சந்திரபாணம், பிரமாத்திரம், நாராயண பாணம் என்னும் அத்திரங்களை யெல்

லாம் எவினன். அவைகளை யெல்லாம் அவ்வவ் வம்புகளை விடுத்தும், மாறுன பாணங்களை யேவியும் அழித்தனர் வீரவாகு தேவர்.

மாயையில் வல்ல யானைமுக முடைய தாரகன் அவரது யுத்தவல்லமைகண்டு அற்புதங் கொண்டு, இவனை மாயையினுல் வெல்லவேண்டுமென்று, மாயா மந்திரத்தை யுச்சரித்து, எண்ணில்லாத வடிவங்களைத், தாங்கி, இருட் குழாம் எங்கும் பரந்தாற்போல அவனொருவனே யெங்குமாய் நின்று போர்செய்தான். அசுரர்களோ குணலைத் தொனி செய்தார்கள். வீரவாகுதேவர் வீரபத்திரப் படைக்கலத்தை விடுதற்கு எடுத்தார். அம்மாத்திரையே தாரகன் மாயையழிந்தது. தனித்து நின்றதாரகன் பின்னரும் மாயையால் வெல்ல நினைத்துத் தோற்றேடுவோன் போலப் புறங்காட்டி யோடினுன். வீரவாகு தேவர் தோற்றவன்மீது படைவிடுதலொல்வாதென்று படையைத் தூணியுள் இட்டு, இவனைப் பிடித்துக் கட்டி எம்பெருமான் முன்னர்க் கொடுபோவேம்'' என்று அவனைத்துரத்திச் செல்லுதலுங் கிரவுஞ்ச மலையுட் சென் றொளித்தான். வீரவாகு தேவர் அக்குகை வழியே செல்லலும் மயங்கிவழிதெரியாது அறிவிழந்து துயின்றார். பூதர்களும் இலக்கத் தெண்மரும் எமது தலைவர் இன்னும் மீண்டிலர் என்று தாமும் மலைக்குட் புகுந்து அறிவிழந்து மயக்க நித்திரைக் காளானர் தேவர்கள் கலங்கிப் பதைபதைத் தோடினர். தாரகன் வந்து வில் வளைத்துப்பாணங்களாலடித்தலும் பூதங்களெல்லா மோடின.

நாரத முனிவர் இவையிற்றைக் கண்டு நடுநடுங்கி யோடிச்சென்று எம்பெருமானுக்கு நிகழ்ந்தனவற்றை விண்ணப்பித்தார். அருட்கடலாகிய பெருமானுர் ''ஓரிமைப் பொழுதுள் தாரகனையும் மலையையும் அழித்து வீரரை மீட்கின்றும்'' எனத் திருவாய் மலர்ந்தருளி, விரைவிற்றேர் செலுத்துவித்துத் தாரகனிடத்தை யடைந்தருளினுர். தாரகன் பூதசேனை

களை யடித்துத் தூர்த்தி, குமாரசுவாமி மீது சோனை மாரிபோலப் பாணங்களைப் பொழிந்தான் அவை யெல்லாம் பெருமான்பக்கல் வந்து வந்து ஒதுங்கின; துதித்து நின்றன. தாரகன் கண்டு அகந்தையை யொழித்தான்; சிறிது அஞ்சினான்; மிகவிம்மிதமுமடைந்தான். அரிய சிவப்படைக்கலத்தை விடுத்தான். அதனைத் தம்முடைய கரத்தை நீட்டிப்பெருமானார்பற்றிக் கொண்டனர். பின்னர்த் தாரகன் மனநொந்து கிரவுஞ்சமலையுடன் கூறுஞ் சேர்ந்து அநேககோடி மாயைகளைச் செய்துதிரிந்தான். பெருமானார் வேலாயுதத்தைத் திருக்கடைக்கண் நோக்கஞ்செய்து ஓரிறைப் பொழுதுள் மலையையும் அசுரனையும் அழித்து வீரரை மீட்டு வருதி யென்றார். அங்ஙனே வேலாயுதஞ் சென்று மலையைப்பொடிபடுத்தித் தாரகன்மார்பைப்பிளந்து சென்றது. தாரகன் அண்டமுகடுஉடைந்து வீழ்ந்தாற்போல விழுந்தான். படைக்கல நாயகமாகிய வேலாயுதம் வீரர்கள் யாவரையும் எழுப்பிவிட்டு ஆகாய கங்கையிற்றோய்ந்து சுத்தவடிவாய் எம்பெருமான் திருக்கரத்தில் வீற்றிருந்தது. பரப்பிரம பரஞ்சோதிப் பிழம்பாகிய அறுமுகக் கடவுள், தாரகன் என்னும் அசுரனைக் கொன்றமையால் தாரகாசுர சங்காரமூர்த்தி யாயினர்.

ஸ்காந்த புராணம் - சிவரகசிய கண்டம்.

[illegible] |
[illegible] ||
[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] |

[illegible] ।
[illegible] ॥

தாரகாசுர சங்கார மூர்த்தயே நம:

ஐம்பதாவது,

சந்திர நடன மூர்த்தி.

ரிய திராவிட நூல்கண் மாட்டுப் பலவகை நடனங்கள் கூறப்பட்டுள்ளன. கூத்துக்கள் சாந்தி விநோதம் என இருவகைப்படும். அவற்றுட் சாந்திக் கூத்து என்பது சுத்த நிருத்தம், மெய்க்கூத்து, அவிநயக் கூத்து, கதை தழுவி வரும் நாடகக் கூத்து எனநான்கு வகைப்படும். மற்றைய விநோதக் கூத்து என்பது குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என அறுவகைப்படும். விதூடகக் கூத்து என்னும் நகைத்திறச் சுவை யென்பதனையுஞ் சேர்த்து எழுவகைப்படு மென்றனா மதிவாணர் முதலிய ஆசிரியர். அது "எழுவகைக்கூத்து மிழிகுலத்தோரை - யாட வகுத்தன னகத்தியன் றனே" என்று நாடக நூன்முதலிய கூறுமாற்று னுணர்க.

இக்கூத்துக்களி னிலக்கண முறைக்குங்கால் வைணவம், சமநிலை, வைசாகம், மண்டலம், ஆலீடம், பிரத்தி யாலீடம் என்னும் அறுவகை நிலையும், சமநிலை, உற்கடிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிதம் என்னும்ஐவகைப்பாதமும், சரிகை, புரிகை, சமகலி, திரிகை, ஊர்த்துவ கலிகை,பிருட்டகம், அர்த்த பிருட்டகம், சுவத்திகம், உல்லோலம், குர்த்தனம்,வேட்டனம், உபவேட்டனம், தானபதப் பிராய விருத்தம், உக்ஷேபணம், அவக்ஷேபணம், நிருஞ்சன மென்னும் பதினாறு வகை



சங்கிராகடன மூர்த்தி.

யங்கக் கிரியைகளும், அப வேட்டிதம், உபவேட்டிதம், வியாவர்த்திதம், பராவர்த்திதம் என்னு நால்வகை வருத்தனையும், சதுரச் சிரம்முதலாக வலிதை யீருகவுள்ள முப்பதுவகை நிருத்தக் கையு முடையன வாகும். அது "அறுவகைநிலையு மைவகைப் பாதமு - மீரெண் வகைய வங்கக் கிரியையும் - வருத்தனை நான்கு நிருத்தக்கை முப்பது - மத்தகு தொழில வாகுமென்ப" என்னுஞ் சுத்தானந்தப் பிரகாச பரதநூற் கூற்றாற் றெளிக.

இவை யெல்லாம் அகக் கூத்துப் புறக்கூத்து என்னு மிருவகைக் கூத்தினு ளடங்கப்பெறும். அவற்றுட் புறக்கூத்திற்குரிய ஆடல்கள் பெருநடை, சாரியை, பிரமரி, பதினோராடல் என்பனவுமாம். பதினோராடல்க ளாவன:—அல்லியம், கொடு கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பாவை என்னு மிவைக ளாம். இவற்றுள் முன்னைய ஆறும் நின்றாடல் எனவும், பின்னைய வைந்தும் வீழ்ந்தாட லெனவுஞ் சொல்லப்படும். இப் பதினொன்றும் வஞ்சக முள்ள அசுரரைக் கொல்லுமாறு தேவர்களால் ஆடப்பட்டமையாற் றெய்வ விருத்தியெனவுஞ் சொல்லப்படும். அவையிற்றை,

"அல்லியங் கொட்டி குடைகுடம் பாண்டரங்க
மல்லுட னின்றாட லாறு"
"துடிகடையம் பேடு மரக்காலே பாவை
வடிவுடன் வீழ்ந்தாட லைந்து"

என நாடகநூல் கூறிற்று. இவையிற்றுட் சத்திர நடனமென்பது குடையாடல் என்று சொல்லப்படும் மூன்றாவது ஆடலாம். சத்திரம்—குடை. இக்கூத்தா நின்று ஆடலின்பாற் படும். இச்சத்திர நடனம் நான்கு உறுப்புக்களை யுடையது. அது "அறு முகத்தோ னாடல் குடை மற் றதற்குப் - பெறுமுறுப்பு நான்கா மெனல்" என்ற சூத்திரத்திற் கண்டது.

இத்தகைய குடையாடல் முன்னர் நாளிலே அதுலராய், சின்மாத்திர மூர்த்தியாய், சாந்தராய், சர்வதோ முகராய், சர்வஞ்ஞத்துவராய், அதிசூக்குமராய், விசுவாதிபராய், இரண்மயராய், பசுபதியாய், வேதாந்தக் கிருதாய், அப்பிரமேயராய், சமானாதிக நாமரூபகுணரகிதராய், தத்துவா தீதராய், வரராய், சகள நிட்களராய், அத்துவாமூர்த்தியாய், தத்துவயிரேசகராய், ஞான சத்திதரராய், காலத்திரயாதீதராய், அத்துவிதராய், சாந்தியதீதாதீதராய், நிராமயராய், நிர்மலராய், நிரஞ்சனராய், பிரபுவாய், அசிந்திதராய், அசுரகாலாந்தகராய், சிகிவாகன குக்குடத் துவசராய், அகண்டாகார சிற்கனானந்த மூர்த்தியாய், சர்வ லோக நாயகராய், எண்குணராய், பிரணவரூபராய், பிரண வார்த்தராய், உபய கதிர்காம சாந்நித்தியராய், செந்தமிழ்ப் பரமாசாரியராய், சகலகலா வல்லப மூர்த்தியாய், பரசிவாசாரியாய் விளங்கா நின்ற சுப்பிரமணியக் கடவுளாலே யாடி யருளப் பட்டது.

அற்றேலது எவ்விடத் தெது காரணமாக ஆடியருளப் பெற்ற தென்னிற் கூறுதும். தேவரைப் புரத்தற்காகக் குகப் பெருமானார் அசுரர்களுடன் போர் செய்தருளினார். அதுகாலை யவ்வவுணர்கள் யாவரும் தாங் கொண்ட சூலம் வேல், மழு, சக்கரம், தண்டு, வாள், தோமரம், கேடகம், முசலம், வில் பாணம் முதலிய படைக்கலங்களை யெல்லாம் அறுமுகப் பகவன்மீது பிரயோகித்தனர். அவைகளெல்லாம் பாதத்தில் மலர் போல வீழ்ந்து துண்டுகளாய்க் காணாதாயின. அங்ஙனந் தம்படைகளை யெல்லா மிழந்து நிராயுதராய் வலிமை குன்றி வருத்தம் உற்ற மாத்திரையே நியாயப் போர்புரிந்த முருகனார்க்கு அருள் தோன்றிற்று.

நிராயுதராய் நிற்பாரைக் கொல்லுத லறமன்றாகலானும், யாதேனு மோர் திருவிளையாடலைப் புரிந்து நிற்பின் அதற் கிடையில் அன்னவரெல்லாம் வெல்லற் குரிய வுபாயங்கண்டு மேற்கொள்வாரென்னு மெண்ணத்தானும் ஒரு திரு விளையாடல் புரிந்தருள்வான் றிருவுளங்

குடிக்கூத்த மூர்த்தி.

கொண்டார். பூதர்களாலே தமக்குக் கவிக்கப் பட்ட குடை யொன்றனை யெடுத்து முன்னே சாய்த்து, அதனையே * யொரு முக வெழினியாகக் கொண்டு நின்று ஆடியருளினர். அதனானே யவர்கள் தம் மாய வஞ்சனைக ளெல்லாம் ஒழிந்து புறங்காட்டி யோடினர். சத்திரத்தையே திரையாகக் கொண்டு குமாரக் கடவு ளடித்தமையாற் சத்திரநடன மூர்த்தியாயினர்.

சிலப்பதிகாரம் - கடலாடுகாதை.

படைவீழ்த் தவுணர் பையுளெய்தக்
குடைவீழ்த் தவர்மு னாடிய குடையும்.

சத்திர நடன மூர்த்தயே நம:

ஐம்பத்தோராவது,

துடிக்கூத்த மூர்த்தி.

இத்துடிக் கூத்துத் தெய்வக் கூத்துப் பதினொன்றனு ளொன்று, தெய்வக் கூத்துப் பதினொன் றுவன—அல்லியம், கொடு கொட்டி, குடை, குடம் பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால் பாவை என்னு மிவைகளாம். இவையிற்றுள் அல்லியமாவது - கஞ்சன் றன் வஞ்சத்தாற் கொல்லவந்த குவலயா பீடமென்னும் யானையை யதன் கோட்டை யிறுத்தற்கு மாயோனால் ஆடப் பட்டதாம். இது வைணவ நிலையென்றும் அலிப்பேடென்றுஞ் சொல்லப்படும். என்னை? முகம், மார்பு, கை கால்களின் வட்டணையும் அபிநயமும் இருந்துக்

* ஒருமுக வெழினி யென்பது - நாடகம் ஆடும் அரங்கி னிடத்துக் கட்டப்படுந்திரைகள் மூன்றனு ளொன்று. இடத்தூண் நிலையிற் கட்டப்படும் உருவு திரையே யதாகும். "முன்னிய வெழினிதான் மூன்று வகைப்படும்" என மதிவாணர் நாடகத்தமிழ் நூலாகும். "அரிதரங்கிற், செய் தெழினி மூன்றமைத்துச் சித்திரத்தாற் பூதரையு - மெய்தவெழுதி யியற்று" எனப் பாத சேனாபதீய நூலாரு முரைத்தமை தெற்றெனக் காண்க.

தொழில் செய்யாது நிற்றலி னென்க. அது "ஆடலின்றி நிற்பவை யெல்லா - மாயோ ளுடும் வைணவ நிலேயே" என்றார் கூத்தநூலாரும். இது ஆறுறுப்புக்களை யுடைத்து.

கொடு கொட்டியாவது - நாரண பாணத்தையும் மலைச் சிலையையு முடைய தேவர்பெருமான் சிரித்தருளாநிற்ப முப்புரத்தவுணரும்வெந்து சாம்பரான பாரதி அரங்கத்திலே யுமையம்மையார் பாணி, தூக்கு, சீரென னுந் தாளங்களைச் செலுத்த, வென்றி யானந்தத்தாற் கைகொட்டிநின்று ஆடியருளியது. கொடுங் கொட்டி கொடு கொட்டி யென விகாரமாயிற்று. இது நான் குறுப்புக்களை யுடைத்து. குடையாடல் - சத்திர நடன மூர்த்தி என்னும் பராக்கிரமக் கட்டெரித்தாம். ஆங்குக் கண்டுகொள்க,

குடக் கூத்தாவது - காமன் புத்திரன் அநிருத்தனைச் சிறைமீட் டல் காரணமாக வாணன் நகர மாகிய சோவென்னும் புரியின் வீதிக்கட் கண்ணன் குடங்கொண்டாடியதாம். அக்குடம் பஞ்சலோகத்தாலும் மண் ணாலு மியற்றப்பட்ட தென்க. இது ஐந்துறுப்புக்களை யுடைத்து பாண்ட ரங்கக் கூத்தாவது - வானேராகிய தேரிலே நான்மறைகளாங் கடும்பரி பூட்டி யலங்கரித்துக் கூர்முட் பிடித்துச் சாரதியாயமர்ந்த பிரமன் றன் றேவியின் பிரிவிற்கு ஆற்றாது மாழ்கிய காலே யதனைநீக்கற் பொருட்டு இறைவனே சரச்சுவதி யுருவந் தாங்கி யாடி யருளியதாம். இது ஆறுறு ப்புக்களை யுடைத்து.

மற்கூத்தாவது - கஞ்சனு லேவப்பட்ட மல்லர்களைவேறல் காரண மாகக் கண்ணனு லாடப்பட்டது. இது ஐந்துறுப்புகளை யுடைத்து. கடையமாவது - வாண னகரத்தின் வடக்கு வாயிற்க ணுள்ள வயலி னிடத்தே இந்திராணி யாடியது. இது ஆறுறுப்புக்களை யுடைத்து. பேடாவது - காமன் தன்மகன் அநிருத்தனின் சிறை மீட்டற்குத் தன் ஞண்மைதிரிந்த கோலமாகிய மூலே முதலாய பெண்ணுறுப்புக்கள் பலவு முடைய பேடாகி யாடியது. இது நான் குறுப்புக்களை யுடைத்து.

மரக்கால் ஆவது—கொடுங் கோபத்தை யுடைய அசுரர்கள் வஞ்சத்தானே வெல்லக் கருதித் தேள் பாம்பு முதலிய வுருவெடுத்துப் படுகளந் தோறும் புகுதலை யறிந்து துர்க்காதேவி யவற்றைக் காலால்நெரித் தழித்தற்கு மரக் கால் மேலே நின்று ஆடியது. இதுவு நான்குறுப்புக்களை யுடைத்து. பாவைக் கூத்தாவது—அசுரர்கள் கொடிய போரைச் செய்வதற்கு வந்த காலைத் தன்னைக் கண்டு மோகித்து வீழும்படி திருமகளா மிலக்குமி தேவி, சோ நகரத்திலே கொல்லிப் பாவைவடிவா யாடியது. இது உறுப் புக்க ளிரண்டினை யுடைத்து.

இங்ஙனம் பத்தாடலும் விரிக்கப்பட்டன. ஏனைய துடியாடல் பற் றிச் சிறிது கூறுதும். முன்னர் ஞான்று காசிப முனிகுமாரனை சூர பன்மனுடன் யுத்தம் புரியாநின்ற காலத்து, அன்னோன் பொருகளம் விடுத்துப் பொருகடல் புக்கு எரியன்ன தளிரும், புகைபோலு மிலைக ளும் தங்கம் போலும் மலர்களும், பச்சைக் கற்கள் போலும் பிஞ்சுகளும், மாணிக்கம் புரையுங் கனிகளும், மேகங்களை யொத்த கிளைகளும் உடைய இலக்க யோசனை யுயர்த்தியா யுள்ள தலைகீழான மாமரவடிவங் கொண்டு நின்றான். அவன் வஞ்சத்தை யுணர்ந்த குகப்பெருமானார் அவ்வஞ்சங் களும் மாயைகளும் ஒழியுமா றென்று செய்தருளினார். தந்தை யாகிய சிவபெருமான் ஆனந்த தாண்டவ மென்னும் பஞ்சகிருத்திய நடனஞ் செய்தருளுங் காலத்துக் கடைத்தட் டட்டுங் கருவியென நூல்களான் விதக்கப்பட்ட துடியென்னுங் கருவியை யொலித்தாடி யருளல் சிவனை, தாமும் நூல்களிலேநாடகக் கருவிகள் என்று கூறப்பட்ட.

பேரிகை படக மிடக்கை யுடுக்கை
சீர்மிகு மத்தளஞ் சல்லிகை கரடிகை
திமிலை குடாமுழாத் தக்கை கணப்பறை
தமருகந் தண்ணுமை தாவி றடாரி

யந்தரி முழவொடு சந்திர வளைய
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளந் துடுமை சிறுபறை யடக்க
மாசி றகுணிச்சம் விரலேறு பாகந்
தொக்க வுபாங்கந் துடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே,

என்னு நாடக நூற் சூத்திரத்தாற் பெறப்படுங் கருவிகளுள் முடியிலே தட்டுதற் குரிய உடுக்கை யென்னுந் துடியை யொலித்து, உல்லோலம், கல்லோலம் என்னுஞ் சிறுதிரை பெருந்திரைகளையே ஆடும் அரங்க மாகக் கொண்டு, திருவடிச் சிலம்புகள் கலகலெனக் கறங்க ஆடியருளினர். அவ்வாடலாலே சூரபன்மனுமசுரனது மாயங்களெல்லாஞ்சூரியன் முற்பட்ட பனிப்படலங்களை போலத் தொலைந்தன. வேற்படையாற் றருவைப் பிளந்து தேவர்ப் புரழ்ந்தார். இக்கூத்து ஐந்துறுப்புக்களை யுடைத்து.

இங்ஙனந் துடியென்னுங் கருவியைத் தட்டிக் கடனடுவணே துலா மதி வளர்ப்பக்கத் தாரு நாளிலே பெருமான் றிருநடனஞ்செய் தருளலாற் றுடிக் கூத்த மூர்த்தி யாயினர்.

மதிவாணர் நாடகத் தமிழ்நூல்.

கடையமிந்தி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமா லல்லியமற் கும்பஞ்—சுடர்விழியாற்
பட்டமதன் பேடுதிருப் பாவையான் பாண்டரங்கங்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து.

புரமெரித்தல் சூர்மார் துளைபடுத்தல் கஞ்ச
னுரனெரித்தல் வாணனைவா னுய்த்தல்—பெரிய
வான்முத லாகவே லன்முதன் மாயோ
னமர்முத லாடிய வாறு.

துணை நூல்.

துடியாடல் வேன்முருக னுடை லதனுக்
கொடியா வுறுப்போரைந் தாம்.

சிலப்பதிகாரம்.

மல்லி னாடலு மாக்கட னடுவ
ணீர்த்திரை யரங்கத்து நிகர்த்துமுன் னின்ற
சூர்த்திறங் கடந்தோ னாடிய துடையும்.

துடிக்கூத்த மூர்த்தயே நம:

ஐம்பத்திரண்டாவது,

வித்வ மூர்த்தி.

"மகனறிவு தந்தை யறிவு" என்ற முதுமொழிப்படி சுப்பிரமணியக் கடவுள் தம்தந்தையா ரெவ்வெத் தொழில்களை யியற்றி நின்றனரோ, அவ்வாறே தாமும் அவைபோலுந் தொழில்களை யியற்றியருள்கின்றார். என்னை? சிவபெருமான் அருண்மொழித் தேவராகிய ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளுக்கு "உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்" என அடியெடுத்துக் கொடுத்துப் பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரிய புராணத் திருவருட் பாவைப் பாடுவித்தாற் போலக் கந்தக் கடவுளார் தாமும் ஓர் பெருங் காப்பியத்தை யடியெடுத்துக் கொடுத்துப் பாடுவித்த சரிதம் பெறப்படுகின்றது. தந்தையார் தருமிக்களித்த கவியை மெய்ப்பிக்குமாறு வித்வ கோலங் கொண்டு புலவர் குழுமிய வவைக்களஞ் சென்றாங்கு, மைந்தரா யிவருந் தாம் அடியெடுத்துக் கொடுத்தருளிய கவியை மெய்ப்பிக்குமாறு வித்வ கோலங்கொண் டெழுந்தருளினர். அவற்றின் வரலாற்றைச் சுருக்கிக் கூறுவாம்.



வித்வ மூர்த்தி.

சாலிவாகன சகவருடம் * எழுநூற்றிற்குச் சமமான கலியுக வருடம் மூவாயிரத் தெண்ணூற் றெழுபத் தொன்பதிலே, தொண்டை மண்டலத்திலே சப்த முத்தித் தலங்களுட் சிறந்து பற்பல மகிமைகள் செறியப் பெற்றதாகி விளங்குங் காஞ்சி புரத்திலே, "சிவோ ஸ்தாபிதச் சைவ சைவோ ஸ்தாபிச் சிவ:! சிவ சைவ விசுத்தாத்மா சசிவ ப்ராஹ்மணோ குரு:! (சிவாகமஞ் சிவ பெருமானாற் றாபிக்கப் பட்டது. சிவபெருமான் சிவாகமத்தாற் றாபிக்கப்பட்டனர். சிவபெருமானாலுஞ் சிவாகமங்களாலுஞ் சுத்த ஆன்மாக்களாயுள்ள சிவப்பிராமணரென்னுஞ் சைவாசாரியர் தாபிக்கப்பட்டனர்.) என்று காரணாகமங் கூறிவிதந்த பஞ்ச விருடி கோத்திரத்தவர்களான ஆதிசைவ மரபின்கண் காளத்தியப்ப சிவாசாரியர் என்னு மருந்தவப்படிவர் ஒருவர் இருந்தார்.

சுப்பிரமணிய பக்தியின் மேற்பட்ட அவர் "ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே - மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சியிற் - கூறு சீர் புனைதரு குமர கோட்டம்வா-ழாறுமா முகப்பிரா னடிகள்" போற்று மருச்சகராய் விளங்கினர். மூன்றிலக்கங் கிரந்தங்களை, யுடைய சிவ புராணம் பத்தனுள், ஓரிலக்கங் கிரந்தங்களையும், ஐம்பது கண்டங்களையும் ‡ ஆறு சங்கிதைகளையு முடைய காந்தபுராணத்தி னோர் சங்கிதையின் பாகஞ் செந்தமிழிற் செவ்வனே வருதற்கேற்ற புண்ணிய மெல்லாந்

---

* சாலிவாகன சகவருடம் எழுநூற்றிற்கு, ஆங்கிலேய வருடம் எழுநூற்றெழுபத்தேழாம் வருடம். எனவே யிற்றைக்கு 1129௵த்திற்கு முன்ன ரென்க.

‡ சனற் குமாரசங்கிதை 55000-கிரந்தமும், சூதசங்கிதை 6000-கிரந்தமும், பிரமசங்கிதை 3000-கிரந்தமும், விட்டுணுசங்கிதை 5000-கிரந்தமும், சங்கரசங்கிதை 30000-கிரந்தமும், சூதசங்கிதை 1000-கிரந்தமும் ஆக ஓரிலக்கங் கிரந்த சங்கியைகண்டுகொள்க. சங்கரசங்கிதைபன்னிரு கண்டங்களையுடைத்து. அவற்றிற் பதின்மூவாயிரங் கிரந்தங்களுள்ள முதலாங் கண்டமாகிய சிவரகசிய கண்டத்தின் ஏழுகாண்டங்களுள் முதலாறுகாண்டமே யீண்டுப் பாகமெனப் பட்டன.

திரண்டோர் வடிவெடுத்தாற்போலக் குமர கோட்டத்து அடிகளா ரருளி னாலே காளத்தியப்பசி வாசாரியார்க்கு ஓர் தவக் குமாரர் உதித்தார்.

அவர்க்கு உரிய காலங்களிலே செய்ய வேண்டிய சடங்குகள்செய்து கச்சியப்ப சிவாசாரியர் என்று நாமகரணமுஞ் செய்தனர். பின்னர் ஐந் தாம் வயதிலே வித்தியாரம்பஞ் செய்யப்பட்டது கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் குகக்கடவுளின் றிருவருளினாலே இருக்கு முதலிய நான்கு வேதங்கள், உபநிடதங்கள், வியாசசூத்திரம், மீமாஞ்சை, பாதஞ்சலம், வைசேடிகம், மிருதி, நியாயம், சிக்கை, வியாகரணம், நிருத்தம், சோதி டம், கற்பம், சந்தோவிசிதி, உபவேதங்கள், புராணங்கள், காமிகம் முதலிய இருபத் தெட்டாகமங்கள், உபாகமங்கள் முதலிய வடமொழி நூல்களின் மிக்க பாண்டித்திய முடையவரானார்.

"சிவசாஸ்திர சமாயுக்தா: பசுசாஸ்திர பராங் முகா: |
ப்ராஹ்மணாதி சதுர்வர்ணாந் ஆசார்யாஸ்துப்ர கீர்த்திதா: |"

என்று சைவபுராணங் கூறியவாறு பசு சாத்திரங்களை யெல்லாம் பயி லாது கழித்துச் சிவ சாததிரங்களையே பயின்று ஆசாரித்துவ மடைந் தார். சிவாகமத்தில் இலக்கம், அதிற்பாதி (௫0000) அதிற் பாதி (௨௫000) முறையே அத்தியயனஞ் செய்பவர் முறையே குரு சிரேட் டர், மத்திமகுரு, அதமகுரு எனக்கூறலால் இலக்கங் கிரந்தங்கள் வரை யில் அத்தியயனஞ்செய்யு மாசாரியத்துவ முதன்மை பூண்டார். தமிழி லுந் தேவாரதிருவாசகங்கள், திருக்கோவையார், இறையனார் அகப்பொ ருள், தொல்காப்பியம், அகப்பாட்டு, புறப்பாட்டு, பதிற்றுப்பத்து, பரி பாடல், இசைநூல், முத்தொள்ளாயிரம், தாளசமுத்திரம், திவாகரம், கபா கரம், பாதசேனாபதீயம், இசைமரபு முதலிய பலப்பல நூல்களையுங் கற்று வல்லவராயினார். சுப்பிரமணியப் பெருமானே பரமபதி யென்று உண்மையி னுணர்ந்து தந்தை யார் செய்து வந்த குமர கோட்டக் குகார்ச்சனைத் தொழிலையே சிவாகம விதிப்படி தாமுஞ் செய்துவந்தார்.

குக பரப் பிரமத்தையே வழிபடு கடவுளாக் கொண்ட சுவாமிகள் சைவ சித்தாந்தத்தையே யுண்மை நிலையெனக் கொண்டு தமிழினும்மிக்க ஆர்வம் வைத் தொழுகினர். செந்தமிழ்ப் பரமாசாரியனுஞ் சிவ குகக் கடவு ளொருநா ளவரது சொப்பனத்தின்கண் எழுந்தருளி, "அன்பனே! வடமொழிக் கந்த புராணத் துள்ள எமது புகழ்ச் சரிதையைத் தமிழிற் பாடுதி" என் றுஞ்சாபித்து, "திகடசக்கரச் செம்முக மைந்துளான்" எனவும் அடி யெடுத்துக் கொடுத்து மறைந் தருளினர். சுவாமிகள் விழித் தெழுந்து "புழுத்த நாயினுங் கடையேனுகிய அடியேனை யொரு பொருட் படுத்திப் பரம தெய்வம் எழுந்தருளிப் பணித்தவா நன்றுநன்று" என்று திருவருளை வியந்து வாழ்த்திச் சுப முகூர்த்தத்திலே கந்த புரா ணத்தைப் பாடத் தொடங்கினர்.

வடமொழிக் கந்த புராணத்தி லாறுசங்கிதையுட் சங்கர சங்கிதை யிற் பன்னிரு கண்டத்துள் முதற் கண்டமாகிய சிவ ரகசிய கண்டத்தி னெழு காண்டங்களுள் முதலாறு காண்டத்தையே மொழி பெயர்த்துப் பாடியருளினர். பாடிய கவிகளை யவ்வத்தினத்திலேயே ஏட்டி லெழு திக் குமரகோட்டத் தெம் பெருமானது திருவடிக்கீழ்வைத்து அருச்சித் துத் திருக்கதவந் திருக்காப்பிட்டுச் செல்வார். மற்றைநாட் புலரியிற் றே ரய்ந்து சந்தியாவந்தன முதலிய கடன்களை முடித்துத் திருக்கோயிற் கதவு திறந்து பார்க்குங் காலத்தில் ஆங்காங்குள்ள பாடல்களிற் றிருத்தஞ் செய்யப்பட் டிருத்தலைக் கண்டு கரையிலா மகிழ்ச்சி யடைந்து, கசிந்து கசிந்துருகுவார். எம்பெருமான் றிருவரு ளிருந்தவா றென்னே என்னே யென்று சாலவும் வியப்புக்கொண்டு தலையா மன்புந் தலைக்கொளப் பெற றார். உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷ காண்டம் என்னும் ஆறுகாண்டங்

கலையும். "மாத்திரை யெழுத்திய லசைநிலை யெனாஅ" என வொல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனா ரெடுத்தோதிய செய்யுளுறுப்பு முப்பா னான்கும் பெரிது மமையச் சொற் சுவைபொருட் சுவை முதலிய வெச் சுவைகளு மியன்றுவர "பெருங்காப்பிய நிலை பேசுங் காலை - வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றி னொன் - றேற்புடைத் தாக முன்வர வியன்று" எனவரூஉஞ் சூத்திரத்தாற் றண்டியாசிரியர் சொற்றாங்குப் பெருங் காப்பியத்திற் குரிய விலக்கண மெல்லா நிரம்பப் பெற்றுப் பதினா யிரத்து முந்நூற்று நாற்பத்தாறு பாக்களாகப் பாடிமுடிந் தருளினார்.

அவ்வரிய நூலை யாங் கேட்க வேண்டுமென்று அடியவர் விழைந் தாங் கஃதியற்ற வியைந்தருளினார். குமர கோட்டத்திருமண்டப மெங் கணும் விதான முதலியவற்றானுந் தோரணங்களானுமழகு செய்து வேண்டியனவற்றை யெல்லா மாங்குள்ளா ரடியார் தந்து முற்றினர். கச்சி யப்ப சிவாசாரியசுவாமிகள் சுபதினத்தே புராணத் திருமுறையை யலங்கரிப்பித்து அன்புடன் அருச்சனை புரிந்து முதற்காப்புச் செய்யு ளைப் படித்து "திகழ் தசகரச் செம்முகம் ஐந்து உளான் = விளங்கா நின்ற பத்துத் திருக்கரங்களையுஞ் செவ்விய ஐந்து திருமுகங்களையுமுள்ள சிவபெருமானது" என்று அருத்தம் உரைத்தார்.

அவைக்கட் குழுமியுள்ள புலவரு ளொருவ ரெழுந்து, உலககுரு வென்னும் புட்பகிரி சந்தானச் சுவாமின் !" திகழ் + தசம் = திகடசம் எனப் புணர்தற்கு விதி யாண்டையது? தொல்காப்பிய முதலிய விலக்க ணங் களினுங் கண்டிலேம். ஆதலினதற்குச் செவ்வ னிறையளித் தருள லாவசியகமா மென் றியம்பினர். அவர் வினயநீர்மையானே யவை யத்தாரு மஃதுண்மையேயென் றகமகிழ் பூத்தனர். சுவாமிகள் புலவரை நோக்கிப் "புலவீர் ! அவ்வடி யெம் வாக்கன்று. ஈண்டுச் சாந்நித்தியரா யெழுந்தருளி விளங்குஞ் சர்வாந்தரியாமி யான குமாரக் கடவுள் நங்கனா

வில் எடுத்துக் கொடுத்தருளிய திருவாக்காகும் என்றார். புலவர் "சுவாமி களே! தேவரீ ருரைப்பன வுண்மையேயாக. இறைவனுந் தான் விதித்த சங்கேதத்தைக் கடந்து சேற வன்றோ னென் முதன்மைக் கிழுக்கன்றே. தேவரீ ரிறைகூறுது இறைவனடி யென்ப தீண்டைக் கேலாது" என் றார். சுவாமிகள் அரங்கேற்றத்தை "நிறுத்தி நாளைத் தினம் அதற்கு விடை கூறுதும். எத்துணைக் கடாக்கள் வரினும் அவையிற்றுக்கு விடை விடுக்க வன்றோ விறைவன் விடை கொண்டான். அவ்விடை யுடை யான் மகனெமை யுடையானுதலி னிதற்கு விடை கொடுக்கு" மென்று எழுந்து அன்புடன் பூசை செய்து அற்றை யிரவிலே ஒன்று மருந் தாது,

"ஆறுமா முகப்பிரா னன்றி யிவ்விடை - வேருரு துணையிலை மெய்ம்மை யீதெனத் - தேறின னவனடி சிந்தை செய்துளான்-மாறிழி யருவிநீர் வழியுங் கண்ணினு" ராகி மிக்க விசனத்துடன் கோயிற் றிருச் சந்நி திக்கணே கிடந்தார். அன்ப ரிடாகற்றும் அறுமுக நாதன் அவா தஞ் சொர்ப்பனத்தி லெழுந்தருளி, "அன்பனே வருந்தற்க. நாளைத்தி னம் சோழ தேயக்கண் வசிப்பா னோர் புலவன் வரும். அன்னோன் கையின் வீரசோழிய மெனப் பெயரிய இயல்நூல் இருக்கும். அதன் கட் சந்திப் படலத்துப் பதினெட்டாஞ் செய்யுளிற் றிகடசம் எனப்புணர் தற்கு விதியுளது" என்று மறைந்தருளினர். சுவாமிகள் விழித்தெழுந்து பரவச மடைந்து ஆனந்தக் கூத்தாடி, வழக்கப்படி பூசை புரிந்து அரங் கேற்றச் சபைக்கண் சென்று நிகழ்ந்தனவற்றை யெல்லாஞ் சபையார்க் குத் தெரித்தார். சபையிலுள்ளா ரெவரும் ஆனந்த மடைந்து புலவரின் வருகையை யெதிர்நோக்கி யிருந்தார்.

அப்போது குமாரக் கடவுள் தந்தையார் கொண்ட வித்வக் கோலத்தைத் தாமுங் கொள்வான் றிருவுளங் கொண்டு "வித்தக

யோக சித்தர்வேண்டுருக் கொள்ளுமா போல்'' என்று சிவஞான சித்தியார் தெரித்தவாறே யிச்சையானே யவ்வுருவங் கொள்வா ராயினார். ஒரு திருக்கரத்திற் புத்தகமும், மற்றோர் கரத்திற் றண்டுந் தரித்து, ஒரு திருமுக மிரு திருக்கரங்க ளுடனே கடப்ப மாலை மார்பிற் புரளாநிற்ப விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்த திருவுரு விளங்க, கண்டிகை கவினக்குமரக் கோட்டத்தை யண்மினார். ஆசங்கை கூறிய புலவர் பரிதியைக் கண்ட பங்கயம் போல யாவர்க்கும் முன்னதாக விரைந்து சென்று பணிந்து, "தேவரீர் யாண்டுளீர் ? திருக் காத்துள்ள புத்தகம் யாது ? '' என வினவினார். புலவர் பெருமான் "யாஞ் சோழ தேயத்துள்ளேம். ஈண்டுக் கந்தபுராண வரங்கேற்ற நிகழ்வ துணர்ந் ததுகாண்பா னுவகையுடன் வந்தேம். கையிலுள்ள புத்தகம் வீரசோழியமாகும்'' என்றனர். ஆசங்கைப் புலவர் அதனைவாங்கிச் * சந்திப்படலப் பதினெட்டாஞ் செய்யுளைக் கண்ணுற்று விதியிருத்த லுணர்ந்து பேரானந்த முற்றார். சுப்பிரமணியக் கடவுளாகும் புலவசிகாமணி சபையிலுள்ளார் யாவரையுந் திருநோக்கஞ் செய்து "சபையீர் ! நுந்த மாசங்கை நீங்கிற்றா ?'' என வினவிய போது அவையும் ஆமாம் என முழங்கிற்று. "இனிப்புராணத்தை யரங்கேற்றுதிர்'' என வித்வமூர்த்தி திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர். சபையார் யாவரும் என்று மடையாத பெரு விம்மிதங் கொண்டு சுவாமிகளையும் புராணத்தையும் பன்முறை வீழ்ந்து வணங்கினர்; புகழ்ந்தனர்; கூத்தாடினர்.

முருகக் கடவுளின் றிருவருளை வியந்து மெய்யன்புடன் அரங்கேற்றுவிக்க விரும்பி, இருபத்து நான்கு கோட்டத்து முதலிமார்களும் சுவாமிகளையும் புராண முறையினையும் யானைத் தந்தப் பல்

---

* சந்திப் படலம் பதினெட்டாஞ் செய்யுளாவது – "நான்கொடு மூன்றென்ப தாமுயிரின்பின்பு நவ்வருமே – லென்றஞ்சுராம தாம்பதி னொன்றினொ டெண்ணிரண்டாய்த் – தோன்று முடற்பின்றகாரம் வரினிரண்டும்மொருகா–லான்றலைவந் தாமுட லாமுன்பிலொற்றுக் கழிவுமுண்டே''
எனவரும்.

லக்கில் வைத்துச் சகல உபசாரங்களுடன் தாமே தாங்கி நகர்வலஞ் செய்வித்து அரங்கேற்ற முடிப்பித்து வணங்கினர். ஆசங்கையுரைத்த புலவர் சுவாமிகள் திருவடியில் வீழ்ந்து வணங்கி, "அடியேன்செய்த குற்றத்தை மன்னித் தருளவேண்டும்" என்று இரந்தனர். சுவாமிகள் "அன்பரே! நும்மா லன்றோ வித்தகைய பெருஞ்சிறப் படைந்தேம். எவர்க்கு முணரப்படா வொன்று வித்வகோலந் தாங்கிவரத் தரிசித்தேம். நீவிர் செய்த நன்றிக்கி யாமென் செய்யவல்லேம்" என்று கூறினர்.

இங்ஙனங் கந்தபுராணத்தி னுண்மை கடைப்பிடித் தொழுகியுய்விப்பான் வித்வகோலங் கொண்டு வரலாற் கந்தக்கடவுள் வித்வமூர்த்தி யெனப் பெயர் பெற்றார்.

தொண்டை மண்டல சதகம்.

அந்தப் புரமு மறுநான்கு கோட்டகத் தாரு மொன்றாய்க்
கந்தப் புராணம் பதினா யிரஞ்சொன்ன கச்சியப்பர்
தந்தப் பல்லக்குச் சிவிகையுந் தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப் புராண மரங்கேற்றி ஞர்தொண்டை மண்டலமே.

கந்த புராணச் சுருக்கம்.

போதமுறு சூதமுனி புகன்ற காந்தப்
புகழ்க்கடலிற் படிக்ததன்கட் பொருள தான
மேதகுவண் புனலருந்தி வைய முய்ய
வெய்யதுயர்ப் பிறவியெனும் வெம்மை தீரத்
தாதவிழ்பூம் பொழிற் காஞ்சிக் குவட்டி லேறிச்
சலதிமுழ் தினைதிகள்செந் தமிழ தான
காதன்மழை பொழிந்தவருட் கொண்ட லான
கச்சியப்ப னிருபாத முச்சி வைப்பாம்.

அபியுக்தர் வாக்கு.

வேதமொடு வேதாங்கம் பயின்று வல்லோன்
விசித்தசிவா கமமுணர்ந்து மேன்மை பூண்டோன்

போதநிறை சிவமறையோன் காஞ்சி வாழும்
புனிதமிகு கசியப்ப குரவ னோன்
வாதமுறு புலவர்குழா மகிழ்ந்து போற்ற
மதிமலிமா டம்புடைசூழ் குமர கோட்டத்
தேதமறு சகாத்தமெழு நூற்றின் மேலா
யிலகுகந்த புராண மரங்கேற்றி னானே.

முன்னையோர் முத்திகலத் தந்தணன்றன் பொருட்டா
முதல்வனொரு வித்துவான் வடிவமதைக் கொண்டான்
பின்னையுமோர் முத்திதலத் தந்தணனுக் கென்றே
பிரான்மகனு மக்கோலம் பெட்புடனே கொண்டா·
னென்னையீ ததிசயமென் றெல்லவரும் பேசி
யேத்திடவே * சோழியத்தின் விதிகாட்டி யிணைக்கத்
தன்னவனை யழைத்தொரு சகக்குரவன் மறையோன்
றன்சரண மெனக்கரணந் தானாக வளர்மே.

வித்வ மூர்த்தயே நம:

* இச்சரிதத்தானே வீரசோழிய மென்னுநூல் கந்தபுராணத்திற்கு முற்பட்ட தென்றே தெரிகிறது. அங்ஙன மாகவுஞ் சிலர் குலோத்துங்க சோழன் வீரசோழ னென்பார் காலம் சாலிவாகனசகம் எண்ணூறு வரையிலிருத்தலான் அவர் பொருட்டுச் செய்த வீரசோழியம் சாலிவாகன சகம் எழுநூற்றிற் செய்யப்பட்ட கந்தபுராணத்திற்கு மேற்கோணூலாமா றியாங்ஙனென வாசங்கித்து மலைகுவர். அவர் வீரசோழன் காலம் சாலிவாகனசகம் எழுநூற்றிற்கு மேலா மென்பதும், குலோத்துங்க சோழ னென்னும் பெயருடைய அரசர் பலரென்பதுங் காண்பரே லங்ஙன மாசங்கிக்க வொருப் படாரென்பது தேற்றம். "முந்துகாஞ்சியின் முற்றுணர் மேலையோர்" எனவருஉஞ் சிவாசாரியர் கூற்றுக்கள் இச்சரிதத்துடன் முரணாமை வல்லார் வாய்க்கேட்டுணர்க. விரிப்பிற் பெருகும்.

ஐம்பத்துமூன்றாவது,

மாதிருகா மந்திரரூப மூர்த்தி.

"அப்பிரமேய மரூப மவ்வியத்தம்" என்று வேதங்கள் கோஷித்தலாற் சுப்பிரமணியக் கடவுளுக்கு மந்திர வடிவும் மாயாவடிவுமில்லையென்பதுண்மையாய் இருக்கவும் ஈண்டு மந்திர வடிவங்கற்பித்த லெற்றேறெனின் அறைதும்.

குகக் கடவுள் உண்மையே சரீரியல்ல ராயினும் மூவகை யான்மாக்களின் றியான பூசாநிமித்தம் மந்திராதி யுருவங்களையுடையானெனக் கொள்க. எனவே யது கற்பனு வடிவ மென்று வாதுளாகமம், பௌட்கராகமம் முதலியன கூறா நிற்கும். மந்திர மென்பதற்கு மந்=நினைத்தல், திர=காப்பாற்றல்; எனவே நினைப்பவனைக் காப்பது எனப் பொருள் கூறப்படுவ தல்லாமல் "மகாரச்சைவ மாயாஸ்யாத் த்ருசப்தஸ தார கோபவேத" என்று அசிதவாகமங் கூறியவாறு, மா=மாயை த்ரா=தாண்டுவித்தல்; எனவே மாயையைத் தாண்டுவிப்பது மந்திர மாகும் என்றும் பொருள் விரிக்கப்படும்.

"சுத்தமாம் விந்து தன்னிற் றோன்றிய வாதலானும்" என்று சிவஞானசித்தியார் கூறியபடி மந்திரங்கள் விந்துவினின்றுந் தோன்றியவென்க. என்னை? உலகத்திற்கு முதற்காரணம் விந்து மோகினி மான் என மூன்றாகும். இந்த விந்துச்சத்தியே சுத்த மென்றும் பிரகாசமென்றும் அபர விந்து வென்றுஞ் சொல்லப்படும். ஆகவே, குண்டலினியென்னும் பரவிந்துவே விந்துமுதலாய மூன்றற்குங் காரணமா மென்றும், விந்துவின்கண் உண்டான சுத்தப்பிரபஞ்சத்திற்குச் சாந்தாத்மக மென்றும், மோகினியி லுண்டாயவற்றிற்குக் கோராத்மக மென்றும், மகானிலே யுண்டான வற்றிற்கு மூடாத்மக மென்றுஞ் சொல்லப்படும். அது,

மாதிருகா மந்திரமூர்த்தி.

ஸாதகஞ்சாபி நிஸ்ஸங்கோ ஸக்திஸ்ஸம்ஜாயதே ததா |
உபாதாநஞ்ச தோஹே தாஸ்ஸர்வேஷாம் ஸ்ருஷ்டிகாரண |
விஸ்வம் ஸ்வர்ணாத்மகம் ஸாதம் வோஸ்ம ஸ்ருஷ்டாத்மகம் ததா ||

எனப் பௌட்கராகமம் உரைத்தவா றுணரப்படும் நிற்க, சுத்த மாயை யென்னும் இப் பரவிந்துவினிடத்தே சுப்பிர மணியப் பெருமா னது ஞானசத்தியானது பதிய நாதம் உதிக்கும். அந்நாதத்தி னின்றுங் களங்க மில்லாத சரற் காலத்துச் சந்திரன் போலக் குண்டலி வடிவாக அபரவிந்து தோன்றும். அவ்விந்துச் சத்தியினின்றுங் குகநாதனது இச் சையினுலே யம்பிகை யென்னும் விந்துக் காரிய சத்தி வெளிப்படும். அதினின்றும் வாமை சேட்டை இரௌத்திரியென்னு முச்சத்திகளு முண்டாம். அவற்றுள் வாமை நித்திரை செய்யும் குண்டலி வடிவாகவும், சேட்டை தண்ட வுருவாகவும், இரௌத்திரி யிரண்டுகளைக் கொம்பர்கள் வடிவாகவும் விளங்கும். அவற்றி லிருந்து சயை விசயை அஜிதை பரா ஜிதை என்னு நான்கு சத்திகள் தோன்றும். அவற்றி னின்றும் ஐங்கலை கள் காரணமாகச் சூக்குமை பைசந்தி மத்திமை வைகரி யென்னு நான்கு வாக்குக்களுந் தோன்றும்.

சூக்குமை என்னும் வாக்கைச் சாந்தி, சாந்தியதீதம் என்னும் இரு கலைகளும், பைசந்தியை வித்தியா கலையும், மத்திமையைப் பிரதிட்டா கலையும், வைகரியை நிவிர்த்தி கலையுங் காரியப் படுத்துமென்க. இந்நால் வகை வாக்கும் இத்தன்மையவாக நிற்குமென்பது மருட்பா மறுப்பின்க ணுரைக்கப் பட்டது; ஆங்குக் கண்டுகொள்க. இங்ஙனமாய நாத காரிய வாக்குகளி னின்று சுரங்களும், அந்தச்சுரங்கள் சோடசத்தினின்று அக் கரங்களுந் தோன்று நிற்கும், அகார முதலிய தோற்றங்கள் படங் குடிலா னுற் போலச் சுத்த மாயா காரியமன்றி யசுத்த மாயா காரியம் போலப்

பரிணும மல்ல. அகார வெழுத்திற்கு இரௌத்திரி சிரமும், வாமை முக முடம், அம்பிகை தோளும், சேட்டை தண்டு வடிவான வுருவமுமாக விளங்கு மென்றறிக. இவ்வாறு அகாரமுதல் க்ஷகார மிறுதியாக ஐம்பத் தொரு எழுத்துக்களாற் பிரிக்கப்பட்ட நாதமென்று பெயருள்ள சப்த மந் திரங்கள் ஆயிரத்து நானூற்று நாற்பத்தைந்து வகையாக வுண்டாயின.

அவற்றுள் மாத்ருகா மந்த்ரமே யெல்லா மந்திரங் களினு முயர்ந் தது. அம்மந்திரம் ஐம்பது சத்தர் பேதங்களோடும் அத்துணைச் சத்தி பேதங்களோடும் விளங்கா நிற்கும். இம்மந்திரத்தையே மேனா மந்திர மெனவும், மாலா மந்திரமெனவும் வேத சிவாகமங்கள் கூறின.

𑌮𑌾𑌤𑍃𑌕𑌾 𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌮𑍂𑌲𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌤𑍍 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵|
𑌤𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍍𑌭𑍂𑌤𑌾 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌵𑌾 𑌸𑌦𑌾𑌶𑌿𑌵 |

எனக் காமிகாகமம் மந்திராவதாரப் படலத்துச் சுலோகங்களா னவ் வுண்மை தெளிக. இம்மந்திரமான ஐம்பத்தோரக்கரங்களையும் சுப்பிர மணியக் கடவுள் தமக்கு வடிவாகக்கொண்டு விளங்குவர். அதன்விவரம் வருமாறு:—

𑌅 (அ) தலையாகவும், 𑌆 (ஆ) நெற்றியாகவும், 𑌇 (இ) வலக் கண்ணாகவும், 𑌈 (ஈ) இடக்கண் ஆகவும், 𑌉 வலச் செவியாகவும், 𑌊 இடச் செவியாகவும், 𑌋 (இரு) வலக் கபோல மாகவும், 𑍠 (இரூ) இடக் கபோல மாகவும் 𑌌 (இலு) 𑍡 (இலூ) என்பனநாசி களாகவும், 𑌏 (ஏ) மேலுத டாகவும், 𑌐 (ஐ) கீழுதடாகவும், 𑌓 𑌔 என்பன மேலுங் கீழு முள்ள பற்க ளாகவும், 𑌅𑌂 (அம்) 𑌅𑌃 (அகா) என்பன முரசுகளாகவும், 𑌕 𑌖 𑌗 𑌘 𑌙 என்பன வல த்திருக் கரங்க ளாகவும், 𑌚 𑌛 𑌜 𑌝 𑌞 என்பன இடத் திருக்க

ரங்களாகவும், ட ட ஜ ஜ ண என்பன வலப்பாதங்க ளாகவும், த ய த ய த என்பன இடப்பாதங்க ளாகவும், ப என்னு மெழுத்து வயி றாகவும், ம வ என்னு மெழுத்துக்கள் முறையே வலப்பாரிசம் இடப்பாரிச மாகவும், ஷ கந்த மாகவும், ஐ இருதய மாகவும், ய ர ல வ ம ஷ ஸ என்னும் எழுத்துக்களுஞ் சத்த தாதுக்க ளாக வும், ஹ ஆன்மாவாகவும், க்ஷ உபசாரங்க ளாகவுந் திருவுருவங் கொண்டு சொற்பிரபஞ்சங்களை யெல்லா மியக்காநிற்பர் என்க.

இவ்வுண்மை தெரித்தற் கன்றே நாத ரூபத்தை யறிக்குஞ் சேவ லைக் கொடியாகப் புதுச் சந்நிதிப் பெருமான் வைத்தருளியதென்க. இம் மாதிருகா மந்திரங்களை யுருவமாகக் கொள்ளலால் வரைபகவெறிந்த சரவ ணக் கடவுள் மாதிருகாமந்திர மூர்த்தியாயினர்.

காமிகாகமம்.

-ஷம்வொ தாநு-நாக-ஹரிக-த ஷ-ஐரஐ-நம்-பம்-ய-
ஹே-நூ-வ-க்ஷி-ஐ. ந-ஞ-ஜி ரு-ஐரி-ஜூ-ஷி-க-தெ ரு-ய-கூ-
க-ஞ-ஐ ருகம்-யம்-வாம்-ப-மவம்த்ரியம்-வ:
ஐம்தேத்ராயம்த்ரும்பகாத ருஷு-ஹவ-ர்காஐஸெஷ ருத:।
ரீஸஷ ருதளஷித ருதெதெவி பஹாயாரசிமஸக்தகா॥

வாதுளாகமம்.

யொதி நாம்வயதீ நாம்வய ருதி நாம்ஐம்திருணாம்தஞா।
ய ருா நவெஜாகிதிதாயதி ஷஜூம்வஸகஞம்ஷவெஸ॥

பௌட்காரகமம்.

[illegible] ।
[illegible]
[illegible] ॥

மாதிருகா மந்திரூப மூர்த்தயே நம:

ஐம்பத்துநான்காவது,

குக பரப்பிரம மூர்த்தி.

அநாதி மல முத்த பதியாகிய அறுமுகக் கடவுட்கு நூல்களிற் குகன் என்னுந் திருநாமம் படிக்கப்பட்டுள்ளது. பல மலைகடோறு முள்ள குகைகளிற் றங்கலாலும், இரகசியப் பொருளாய் விளங்கலாலும் அத் திருநாமம் போந்த தென்ப. வெளியாகிய அண்டத்திலுள்ள குகைக டோறுந் தங்கி யருளலோர் விசேட மன்றும். பிண்டமாகிய தேகங்களிலுள்ள குகைக டோறுந் திகழ்தலே மிக்க விசேடமாம் அதனானன்றே வேத சிவாகமங்க ளெல்லாங் குகன், அங்குட்டவடிவன் எனப் பலவாறு கூப்பிடா நின் றன.

பூதவகைக ளோரைந்தாய்ப் பொறியைந்தாய்
வாதனையோ ரையைந்தாய் மாருதமு-மேதகுசீர்ப்
பத்தாகு நாடிகளும் பப்பத்தாம் பாரிடத்தே
முத்திக்கு வித்தா முடம்பு.

என இசை நுணுக்கத்தார் கூறியாங்கு முத்தியை யடைதற் குரிய விச் சரீரம் பூதங்களாலும் பொறி முதலிய வற்றாலும் பரிணமித் துள்ளதாகும். அவ்வுடம்பு தொண்ணூற்றாறு அங்குல வளவுடைத்



குகபரப்பிரமமூர்த்தி.

தாய், முப்பா னிரண்டு உறுப்புக்களை யுடையதாய் இருக்கும். அதன்க ணுள்ள நாடிகளும் உரோமங்களுந் *தனித்தனி மூன்றரைக் கோடியா கும். பற்கள் முப்பத்திரண்டு கால் கை நகங்கள் இருபது. வீரியம் ஆழாக்கு. உடலின்க ணுள்ள பித்தம் உழக்கு. மிடற்றுக் கபம் உரியுடன் காற்படி. நிணம் இருபது தொடி. மேதை ஐஞ்சுநூறு தொடி. தசை நூறு தொடி. இளகிய விரத்தமும் இறுகிய விரத்தமும் மூன்று தொடி. மூளையி னளவு பன்னிரு தொடி. உரோம முதலாக வெல்லா வற்றை யுஞ் சேர்த்து அளவிடின் ஆயிரந் தொடியாகும்.

இத்தகைய சரீரத்திலே சீவான்ம பரமான் மாக்கள் வியாபித் திருப் பாராயினும் இதயம் என்னுந் தானமே யவர்கட்கு முக்கிய தானங்களாம் என்று வேத சிவாகமங்கள் கூறுகின்றன இவ்வுண்மைபற்றி யன்றே ஆயுர்வேத முதல்வராகிய தன்வந்திரியாரும், "இரத்தங் கப மென்னு மிவற்றின் தெளிவா லமைந்ததும், அவற்றைத் தெளியச் செய்வதும் இருதய மென்க. அதுவே முக்கிய சேதனத்தான மாகுமென்று சுஸ்ரு தத்தில் "ஶோணித கஃப ப்ரஸாதஜம் ஹ்ருதயம் விஶேஷேண வேதநாஸ்தாநம்" என்பதனு னுணர்த்தினர். இவ்விருதய கம லம், தகரம், தேகாலயம், அமலம், சத்து, பரம், மகத்து, ஆகாசம், வியோ மம், இரண்மய கோசம், அந்தப் புரம், விவிக்தம், புண்டரீகம், குகை எனவுங் கூறப்படும்.

இருதயக் குகையாவது—தாமரை முகுளம் போன்றதாய் ஐந்து துளைக ளுள்ள செந்நிற முடைத்தான மாமிச கண்டமாய்த் தலை கீழா கத் தொங்குவதாம். "பத்மகோச ப்ரதீகாசம் ஹ்ருதயம் சாப்யதோ முகம்" (தாமரை மொட்டுப் போன்று தலைகீழாகத் தூங்குவதிதயமாம். என்று மகோபநிடதங் கூறிற்று. இருதயகமல மென்னுங் குகை கர்ணி கையுட னுண்டாயிற்று. எல்லா வுயிர்களின் இதயமும் வாழைப் பூப்

போன்று விளங்கும். அவ்விருதய நடுவண் கர்ணிகையுடன் எட்டிதழ்க ளுள்ள பதும மிருக்கின்றது. இருதயம் ஒரு சாணளவும், கமலம் நாலங் குலப் பிரமாணமுமாகும். உந்திக்குமேல் எட்டங்குலப் பிரமாணத்தில் அந்தத் தாமரை நாளம் இருக்கும். அந்நாளத்திற் றுவார மொன்பது உள் ளன. அதன் நான்கு பக்கமு முட்போன்ற வோர்வகைச் சவ்வு விளங் கும். இருதய கமலக் கர்ணிகை பெருவிரற் கணுவுக் கொப்பான நுனி யுள்ளதாய்க் கேசரத்துடன் கூடியிருக்கும். "அக் கர்ணிகையின் மாட் டுச் சூரியனும், அவன் நடுவிற் சந்திரனும், அவர் நடுவில் அக்கினியும், அவர்கள் நடுவின் மகேசுர மூர்த்தியும், அவர் நடுவிற் சுப்பிர மணியக் கடவுளாகிய குகனும் விளங்கியிருப்பர்" என்று சிசுவாச காரிகையென் னுநூல் கூறுகின்றது.

ஆஷ்டாதிமுதலிய சத்திகளின் இருதயக்க ணுள்ள அகாரத்தில் விளங்கும் விசயை, சௌமியை, அம்சுசமஞ்ஞா, திருதி, மதனை, பந் தினி, மோசனி, மாயை, மோகினி, போதினி யென்னுந் தசகலைகளை யும் பிரேரித்து நிற்கு மென்று கந்தகாலோத்தர மென்னு மாகமங் கூறு கிறது. இவ்விருதய கமலமாகிய குகைக்க ணிருக்கும் வெளியே பரவி யோமம், சிதம்பரம், சிதாகாசம், தகராகாசம், சிற்றம்பலம், ஞானம்பரம், அந்தராகாசம் என்றற் றொடக்கத்தவாகச் சுருதிக ளுரைக்கு மென்பது. அற்றாகலி னன்றே குகபரப் பிரமமாகிய புருடன் அங்குட்டப் பிரமாணம் உடையவன் என "அங்குஷ்ட மாத்ர: புருஷோந்தராத்மா ஸதாஜநாநாம் ஹிருதயே ஸந்நிவிஷ்ட:" என்று யசுர்வேதசாகையும், "அங்குஷ்ட மாத்ரோ ரவிதுல்யரூப: (பெருவிரலளவுள்ளன் சூரியனைப் போன்ற வன்) என இருக்குவேத சாகையுங் கூறின. இங்ஙனமுள்ள தகராகாச அந்தக் குகையி னிடத்தே இன்பவடிவான குகப் பெருமான் வெல்லாங் கூட எதுதான் அசையும், எதுதான் உயிரோ டிருக்கும்



க காணி

ஏழைப் பூப்

சந்தானன் [illegible] மூர்த்தி.

என்று "கோக்யே வாக்யாத் க:ப்ராணாத் யதேஷ ஆகாச ஆநந்தோ நஸ்யாத்! ஏஷஹ்யேவாநந்தயாதி! என தைத்திரீயச் சுருதி யுரைத்தது. இவற்றி னியல்களை யெல்லாம் தைத்திரீயம், கைவல்லியம், நாராயணம், சாந்தோக்கியம், பிருகதாரண்ய முதலிய வேதசிரசுகள் சிறப்பாக எடுத்துரைக்கின்றன. ஆங்குப் பரக்கக் காண்க.

இங்ஙனங் கந்தக் கடவுள் தேவர், மக்கள், விலங்கு, பறவைமுதலிய உயிர்களின் பலவகைப்பட்ட சரீரங்களினுமுள்ள சிறியவும் பெரியவுமான இருதயக் குகைகடோறும் அவ்வவற்றிற்குத் தக்கவாறிருத்தலால் அணுவிற் கணுவாதலும் மகத்திற்கு மகத்தாதலு முடையானென்னும் ஆற்றல் கூறப்பட்டது. "அணோரணீயாந் மகதோமகீயாந்! ஆத்மாகுஹாயாம் நிஹிதோஸ்ய ஜந்தோ" என்று மந்திரோப நிடதம் அதனை நன்குவிளக்கிற்று. இங்ஙன முயிர்களின் குகைகடோறும் விளங்கியும் உபாசிக்கப் பட்டு மிருத்தலாற் குமாரக்கடவுள் குகபரப்பிரம மூர்த்தி யாயினர்.

சங்கர சங்கிதை சிவரகசிய காண்டம்.

[illegible]
[illegible]
[illegible]

குக பரப்பிரம மூர்த்தயே நம:

ஐம்பத் தைந்தாவது,

சந்தான வரத மூர்த்தி.

காசிப முனிவரது மனைவியருள் ஒருத்தி யாகிய அதிதி அதிதி — மற்றைய பன்னிரு சூரியர்களும் பற்பல பிள்ளைகளைப் பெல்லாங் கூறி,

பெறத்தனக்குப் பிள்ளைக ளில்லாம லிருத்தலால் வருத்த முற்றாள்.

ப்ரஜயா ஹி மநுஷ்ய: பூர்ண: | புத்ரேண லோகாஞ்ஜயதி | புத்ரேணாநந்த்யமஶ்நுதே | நாபுத்ரஸ்ய லோகோஸ்தி |

எனவரூஉம் வேதவசனங்கள் சற்புத்திரப்பேறு உத்தம லோக சாதகமா மென்றுரைத்தனவே. "மங்கல மென்ப மனைமாட்சி மற்றத - னன் கல நன்மக்கட்பேறு" என்றாங்குப் புத்திரரில்லையே லில்வாழ்க்கையாற் பயனொன்று மில்லை.

ஆகலிற் கிருகத்தாச்சிரம மாகிய இல்லற வாழ்க்கைக்குச் சிறந்த ஆபரணமாகவுள்ளது புத்திரப் பேறன்றோ? புத் என்னுங் கொடிய நரக வாதனையினின்றும் நீக்கிக் காப்பது சந்தான மாதலால் அதுபெறாத வாழ்க்கையும் வாழ்க்கையோ? அறிவறிந்த மக்கட் பேற்றைப் பார்க்கி னுஞ் சிறந்த பேறியாது? எவ்வகைப் பொருளையுடைய வராயினும், புத் திரப் பேற்றையுடைய ராகாரேல் அவர் யாதேனு முடையராவரோ? இவை நோக்கியே முனிவர்கள் யாவரும் இல்லற வாழ்க்கையினின்றார். பாரசார் வியாசரையீன்றதும், செந்தமிழ் முனியாகிய அகத்தியர் சித்த முனியைப் பெற்றதும். மிருகண்டுமுனி மார்க்கண்டேயரை யுயிர்த ததும், சிலாதமுனிவர் செப்பேசுரரை யுயிர்த்ததும், வியாசர் சுகரை யீன்றதும் இம்வுண்மைக் கருத்துப் பற்றியே யென்று கவலைக் கடலு ளாழ்ந் திருக்கையில் நாரத முனிவர் வந்தார்.

அவரை வணங்கி மகதியாழுடைய தவ சிரேட்டரே! அடியாள் கொண்ட கவலை தீர்தற்கு மருந்தியாது என்று கேட்டனள். அவர், "அம்மையே! திருச்செந்தூர் சென்று குமாரக கடவுளை நோக்கி, சுத பூரணை விரதத்தை அநுட்டிப்பாயாக" என்று, அதன் விதிகளெல் லாம் உபதேசித்துச் சென்றார். [illegible] அதிதி யெ[illegible] ராகிய காசியமுனிவரி னரு[illegible]

சென்று, கார்த்திகை மாதப் பௌர்ணமியிலே தொடங்கி, கந்தபுட்கரணி முதலிய தீர்த்தங்களில் மூழ்கி விரதம் முற்ற வேண்டுமென்று சங்கற்பஞ் செய்து, இருபத்து நான்கு தீர்த்தங்களினும் ஆடிப் பன்னிரு முறை வலம் வந்து, பன்னிரு கண்ணாகிய வேளின் திருவடிகளைப் பன்னிரு தரம் வணங்கி, மேலே சக்கரவடிவமுங் கீழே சூலவடிவமும் நடுவே வேலாயுத வடிவமும் எழுதி, சோடச உபசாரத்தாற் பூசித்து, சமுத்திர தீர்த்தத்துண் மூழ்கி, கும்பதம்ப விம்பங்கள் என்னு மூன்றிடத்துங் குமர வேட்கு அருச்சனை புரிந்து, பன்னிரு பிராமணர்க்கு அன்னம் அளித்து, பன்னிரு மாதப்பூரணையினும் இவ்வாறியற்றி ஒரு வருடம் நோன்பு கொண்டாள்.

இச்சாசத்தி, கிரியாசத்திக ளாகிய வள்ளியம்மையார் தெய்வயானையம்மையார் என்னும் இருவரும் பக்கத்தில் வீற்றிருக்க அநேககோடி சூரியர்கள திரண்டு ஒரு வடிவெடுத்தாற் போன்ற வேலாயுதம் திருக்கரத்தில் விளங்க, கணங்கள் போற்ற, மயில்வாகனத்தின் மீது குமாரசுவாமி தோன்றினர். அதிதி ஆனந்த சாகரத்துள் மூழ்கி, அம்மைமார்களையும் அப்பனையும் வணங்கி, தன் வேண்டுகோளை விண்ணப்பித்தாள். முருகக் கடவுள் கூறும். "பன்னிரு சககளத்திரியர் பிள்ளைகளைப் பார்க்கினுஞ் சிறந்த புத்திரர் வேண்டு மென்கின்றாய்; அவ்வாறே அளித்தேம். நீ பன்னிருமாதம் அநுட்டித்தமையால் உலகெலாம் புகழத்தக்க பிரகாசமமைந்த பன்னிரு பிள்ளைகளைத் தந்தேம். இன்னும் இருவருதிப்பார்; அவர் சகல கணத்தவர்களிலுஞ் சிறந்தவராவர்" என்று அந்தர்த்தானமாயினர்.

அதிதி யவ்விடத்தி னின்றும் தன் நாயகனிடஞ் சென்று நிகழ்ந்தனவெல்லாங் கூறி, அவருடன் [illegible] காலத்திலே வைகதத்தன்

விவச்சுதன், வாசன், மார்த்தாண்டன், பாற்கரன், இரவி, உலோகப் பிர காசன், உலோக சாட்சி, திரிவிக்கிரமன், ஆதித்தன், திவாகரன், அங்கிச மாலி என்னும் பன்னிரு பிள்ளைகளையு மீன்றாள். இவர் முப்பத்து முக் கோடி தேவர்களுள்ளுஞ் சிறந்தவரானர். அதிதியின் புத்திர ரானமை யால் ஆதித்தர் ஆதித்தியர் என வழங்கப்பட்டார். பின்னர் மேலுலகத் திற்கு அதிபதியாகிய இந்திரனைப் பெற்றாள். அதன் பின்னர் விட்டுணு வாகிய உபேந்திரனை யீன்றாள். அவர்களாலே அதிதி பெறற்கரும் மகிழ் வையடைந்தனள். இங்ஙனம் சந்தானம் வேண்டினவர்களுக்கு மகிழ் வுடன் அளித்தலாற் சந்தானவரதமூர்த்தி யாயினர். இதற்கு மேற்கோள் திருச் செந்தூர்ப் புராண முதலிய நூல்களிற் காண்க.

சந்தான வரத மூர்த்தயே நம:

ஐம்பத்தாறவது,

காமாசார தேவ மூர்த்தி.

மக்கட் கூட்டத்தவராலே அடைதற் பாலன வாய உறுதிப்பொருள் கள் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்குமே இவையிற்றை முறையே தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பர் வடநூலார். காமம் என்னும் மொழி கேட்டுக் காமம் தீது என்றலும், களவு என்னுஞ் சொற் கேட்டுக் களவு தீதென்றலும் ஆகாது. என்னை? "பொய்ம்மையும் வாய் மை யிடத்த புரைதீர்ந்த-நன்மை பயக்கு மெனின்" என்று தெய்வப்புல மைத் திருவள்ளுவ நாயனருங் கூறினாராகலின். ஈண்டுக் கூறப்பட்ட காமம், பொது மகளி ரிடத்தும் பிறன் மனைவியர் முதலாயினோ ரிடத் துஞ் சென்று கூடுங்கேட்டிற்குக் காரண மாகிய தூர்த்த வொழுக்கத்தை



காமாசார மூர்த்தி.

யன்று. இது எவ்வொழுக்க மெனின் உலகின்கண் இல்லறம் நடத்தற் கேதுவாகிய காமம் எனக் கொள்க. இதுபற்றியன்றே ஒல்காப்பெரும் புகழ்த் தொல்காப்பியனாரும்,

இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணையோ ரியல்பே. என்றார்.

இத்தன்மை யாகிய காமம் எனப்படும் இன்பம், அறம் பொருள் என்னும் இரண்டின் பிரயோசன மாகு மன்றி, மேலாயுள்ள வீட்டின் பத்தை ஒவ்வாதென்று இவ்வின்பத்தைவெறுத்து, அதனை யவாவியடை தற்குங் காரணமாகும். அதனாற்றான் இதுசிறந்தது. இந்நான்கு உறுதிப் பொருளையும் "உலகெலா மாகி வேறா யுடனுமாய்" நிற்கும் முழுமுதற் பொருள்கொள்ளாக்கால், உலகத்தி னிடத்தும் அவை நிகழாவாம். உமா தேவியாரைச் சிவபெருமான் பிரிந்து ஓர்கணம் யோகத்திருந்தபோது, உலகத்திலுள்ள வுயிர்கள் யாவும் ஈருடல் முயங்குங் காமானச யில்லாமல் வருந்தியதும், அது கண்ட பெருமான் திருமணஞ் செய்து இறைவியை இடப்பாகத்தில் வைத்தருளிய காலத்து அவை யொன்றை யொன்று விரும்பிச் சேர்ந்ததுங் கந்தபுராணத்திற் சொல்லப்பட் டிருக்கின்றது.

இவ்வா றிருக்க, அறம், பொருள்முதலிய நாற் பொருள்களுள் வீடு என்பது சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத் தாகலின் அது உரைக்குஞ் செயலுக்கும் அடங்காதாகும். அதனைத் தக்ஷிணா மூர்த் தியாயிருந்து குறியாற் காட்டியும், பொருள் வகையைப் பட்டினத்து ப்பிள்ளையார்க்குப் புதல்வராகச்சென்று காட்டியும், மதுரைக்கண்வளை யல் விற்றும், மாணிக்கம் விற்று முணர்த்தியும் சிவபெருமான் நின்றார். இறைவியோ காஞ்சியி லிருந்து அறங்களை வளர்த்தருளினள். ஏனைய

காமங் காட்டுதலரியதாகலின் எம் பெருமானாகிய குமாரக்கடவுளை யறிப் பா னுன்னினர்.

அக்காமம் களவு, கற்பு என இருவகைப்படும். அவற்றுட் கற்பென்னும் ஒழுக்கத்தை இந்திரன் மகளாகிய தேவசேனை யென்னும் கசநாயகி யாரை அக்கினி யறிய விவாகஞ் செய்தமையினாலும், களவு என்னும் ஒழுக்கத்தை வேடர் மகளாகிய இலவலி நாயகி யென்னும் வள்ளியம்மை யாரைக் களவிற் புணர்ந்தமையாலுங் குகனார் காட்டியருளினர். இக்களவிற் புணர்ச்சி கந்தருவமணம் எனப்படும். அஃதாவது கந்தருவ குமாரருங் கன்னியருந் தம்முள் எதிர்ப்பட்டுக்கண்டு இயைந்தது போலத் தலைவனுந் தலைவியும் எதிர்ப்பட்டுப் புணர்வது.

அதிர்ப்பில் பைம்பூணாரு மாடவருந் தம்மு
ளெதிர்ப்பட்டுக் கண்டியைத லென்ப-கதிர்ப்பொன்யாழ்
முந்திருவர் கண்ட முனிவறு தண்காட்சிக்
கந்தருவர் கண்ட கலப்பு.

இங்ஙனங் களவு கற்பென்னும் இருகைகோளையு முலக மறியநடித்துக் காட்டிய எம்பெருமான், புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றுங் கூறும் ஒழுக்கத்தைவிருப்பமோடு உணர்த்தவெண்ணி, மகேந்திரமலையின் தென்கீழ்த் திசையிலே, யாவரும் அடைதற்கரிய ஒருயோசனை யளவுகாறும் யானை மணைபோலும் வடிவினையுடைய கூர்மப்பாறையிலே விளங்குஞ் சோதி மண்டபத்தை யடைந்து, ஆங்குத் தெய்வயானை யம்மையாரோடும் வள்ளியம்மை யாரோடுங் கூடியிருந்து, காமஞ்சிறிது மில்லாத கடவுளாயிருந்தும் உலகர் பொருட்டாக, களவுக்கும் கற்புக்கும் உரிய தகையணங் குறுத்தல், புலவி, புணர்ச்சி விதும்பல் முதலிய துறைகளையெல்லாங்காட்டி, காமநூலிற்கூறிய ஆசாரங்களை யெல்லாங்கொண்டு திருவிளையாடல் செய்தருளலாற் காமாசாரதேவ மூர்த்தியெனப்பட்டார்.



கிரவுஞ்சபேத மூர்த்தி.

திருச்செந்தூர்ப் புராணம்.

கொண்டசூழ்மகேந்திரத்திற்குருக்கத்தித்தென்கீழ்ப்பாங்க
ரண்டுதற்கரியகூர்மச்சிலையிடையணிகொள்சோதி
மண்டபத்திரண்டுமொதருடியும்புணர்க்கும்வானோர்
கண்டடிவணங்கக்காமக்கடவுளென்றொருபேர்பெற்றான்.

காமாசார தேவ மூர்த்தயே நம:

ஐம்பத்தேழாவது,

கிரவுஞ்ச பேத மூர்த்தி.

இந்திரன் இந்திராணியுடன் சுவர்க்க லோகத்தை விட்டுக் கிளியுருக் கொண்டு பூமிக்கண் வந்து சீகாழிப் பதியிலே மூங்கில்வடிவமாக விருந்து தவம்புரிந்தான். அங்ஙனாகவும் நாரதமகா முனிவர் விந்தமலையையடைந்தார். விந்தாசல தேவதை யவரை யுபசரித்துத் தேவரீர் இவ்விடம் வந்த தென்னென்று வினவ, நாரதர் கூறுவார். “விந்தமே! மேருமலையினிடத்தி னின்றும் வருகின்றேம். அம்மலை கூறியதை யென்னென்றுரைப்பேம். நாடோறுஞ் சூரியசந்திரர் முதலிய கிரகங்க ளெல்லாந் தன்னை வலம்வந்தே போகின்றனவாம். தன்னிடத்தே சகல தேவர் முதலிய கணர்களெவரும் வசிக்கின்றனராம். தான் சிவனார்க்கு வில்லாயிற்றாம். ஆகலாற் றனக் கீடான பருவதங்கள் மூவுலகங்களினு மில்லையென்றது” என்றார்.

அதனைக் கேட்ட விந்தம் மிகவுங் கோபங்கொண்டு, “முனிவர் பெருமானே! மூடத் தன்மையை யுடைய மேரு வீண்பெருமை கொண்டு பிதற்றினன். நாசிங்கத்தை வதைப்பான் எழுந்த ஸ்ரீச

ரமேசுர மூர்த்தியினுடைய நகக் கண்ணி லோர் உழுந்தளவாக இருந்து உருளலுற்ற தன்மையை அவ னெண்ணிலன் போலும். அன்றியுஞ் சரப மூர்த்தியின் சிறகுகளின் விசைக் காற்றா லம்மேரு அடிபட்டு நொந்து மின்மினிப் பூச்சிபோ லெங்கணு மோடித் திரிந்ததை மறந்த னன் போலும்'' என் றிவ்வாறு விந்தங் கூற நாரத ராசிகூறி விரை வின் ஆகாய வழிச் சென்றார். விந்த மலையானது மேரு மலையுடன் பகைத்து வானளாவி வளர்ந்தது. அதனாற் சூரிய சந்திரர் முதலிய கிர கங்களும் நட்சத்திராதிகளுந் தேவமுனிவராதியரும் சஞ்சரிக்கும் வழி யின்றி யிடர்ப்பட்டுத் தமிழ் முனியை யுன்னித் துதித்து ஓல மிட்டார்.

அதனை யகத்திய முனிவர் அறிந்து பரமசிவனை நினைத்துத் தவம் புரிந்து விந்த மலையை யடக்கும் வலிமையும் பூசைக்குக் காவிரித் தீர்த்த மும் பெற்றுத் தென்றிசை நோக்கி வருவார், புத்திரோற் பத்தியை விரும்பி விதர்ப்ப ராசன் மகளாகிய உலோபா முத்திரை என்னும் பெண் ணரசை மணந்து சித்த முனியை யீன்று வருவாராயினர். வழியிலே மாயமா புரம் வாராநிற்புழி, சூரபன்மன் றுணைவனாகிய தாரகாசுரனுக் குறு துணையாயிருந்து பலப்பல மாயங்களைப் புரிந்து தேவர்களையும் முனி வர்களையுங் கொல்லுகின்ற கிரவுஞ்ச னென்னும் அசுரன் கண்டான் அன் றில் வடிவத்தை யுடையானாகிய அவனது மாயைகளையும் வல்லமையை யும் இவ்வளவென்று சொல்லுதல் அரிது. அவனோ வானுலகை மண் ணுலகாக்குவன். மண்ணை விண்ணாக்குவன். கடலினை மலையாகவும் மலைகளைக் கடல்களாகவுஞ் செய்வான். இன்னுஞ் சூரியனைச் சந்திரனா கவும், சந்திரனைச் சூரியனாகவும், அணுவை மேருவாகவும், மேருவை யணுவடிவாகவும், வடவா முகாக்கினியை நீராகவும், நீரை வடவையாக வும் இவ்வாறேயொன்றை யொன்றாக மாற்றுவான். ஒரு நாழிகையின் ஆயிரத்து ளொன்றாங்காலத்து யாவர்க்காயினும் பற்பல மாயங்களைப்

புரிந்து பலநெடுங் காலஞ் செல்லும்படி மயக்குவான் ஆயின் அவன் வலிமை யாவர் கூற வல்லவர்? அத்தன்மையை யுடைய அசுரத் தலைவன் விந்த மலைபோலச் சிகரங்களை யாகாயத்திற் போக்கிப் பெரியதோர் மலை வடிவு கொண்டு தன்னுளே வழியு மொன்று செய்து நின்றான். அம்மலைக்குள் வழியே யொரு குரோசதூரஞ் சென்ற அகத்திய முனிவர் வழி காணாது நிற்ப பின்னர் ஓர்வழி காணப்பட்டது. அவ்வழி செல்லப் பின்னரும் வழியிலதாயிற்று. அகத்திய முனிவர் மயங்கி யொருசார் சிறுவழி தோன்ற அதன் கண் நடந்த காலை, அக்கினி சுவாலித்துச் சூழ, மழை சோனையாகப் பொழிய, இடியிடிக்க, இருட்படலஞ்சூழுமாறு மாயத்தைச் செய்தான்.

முனிவனார் இது கிரௌஞ்சனாகிய அசுரரின் மாயமென்று உண்மை தெரிந்து கைகொட்டி நகைத்துச் சீறி, "நல்லது நல்லது. இவன் வலிமையை யொழிப்பேனென்று தங் காதலத் திருந்த தண்டாயுதத்தாற் குற்றித் துவார மாக்கிச் சாபஞ் சொல்வாராயினார். "வெய்யோய்! நின் அசுரவுரு மாறி இம்மலை வடிவாய் அசுரர்க் கெல்லாம் இருப்பிடமாகி, அரியதவமுனிவர்க்குந் தேவர்க்குங் கொடுந்தொழிலைப் பலநாளாகச் செய்யக்கடவை. எமது தண்டாயுதத்தாற் புழை படுத்தப்பட்ட இவை யெல்லாம் மாயைகளுக்கு இருப்பாக விளங்கிக் குமாரக்கடவுளின் வேலாயுதத்தாற் பொடியாக அழியக் கடவாய்" என்று சென்றார். அவ்வாறே யசுரன் மலைவடிவாய்ப் பலர்க்கும் மாயஞ் செய்து வந்தான். பின், குமாரக் கடவுளின் ஆஞ்ஞைப்படி போர் செய்யவந்த வீரவாகுதேவர் தாரகனுடைய மாயந் தெரியாது அம்மலைக்கு ளவனைப் பின்றொடர்ந்து சென்று மயங்கினார். "முதல்வர் சென்று திரும்பிலரே? என் நிகழ்ந்தனவோ" வென்று வீரகேசரி, வீரமா மகேந்திரர், வீரமா மகேசுரர், வீரமா புரந்தரர், வீர ராக்கதர், வீரமார்த் தண்டர், வீராந்தகர், வீரதீர

என்னும் எண்மரும், இலக்கம் வீரரும் பூத வெள்ளங்களும் அவ்வாறே சென்று கிரவுஞ்சமலையின் மாயையால் மயங்கிக் கிடந்தனர்.

இதனை, நாரதர் ஓடிச் சென்று என்னை யாளாகவுடைய வேலாயுதக் கடவுளுக்கு அறிவிக்க, அவரங்குச் சென்று வேலாயுதத்தை யேவி யொரு நொடியிற் பொடிபொடியாக அழித்தருள வீரவாகு முதலாயினோர் நித்திரையினின்று மெழுந்தார் போல மாயையினின்றும் நீங்கி யெழுந்து குமாரக் கடவுளைத் துதித்தார். அவர் ஆறு திருமுகங்களும் பன்னிரு விழிகளும், வேல் வாள் அம்பு அபயம் என்பன அமைந்த வலத் திருக்கரங்கள் நான்கும், குலிசம் கேடகம் வரதம் வில் இவைகொண்ட இடத்திருக்கரங்கள் நான்கும் உடைய மூர்த்தியாகக் காட்சிகொடுத்து அருள் புரிந்தார். அதுவே கிரவுஞ்ச பெத மூர்த்தமாகும்.

கந்தபுராணம் – கிரவுஞ்சப்படலம்.

மாற்படு நமது பாணி வலிகெழு தண்டாலுன்றன்
பாற்படு புழைகள் யாவும் பற்பல மாயைக்கெல்லா
மேற்புடை யிருக்கை யாக வெம்பிரா னுதவுஞ் செவ்வேள்
வேற்படை தன்னிற் பின்னாள் விளிகுதி விரைவி னென்றான்.

ஷை புராணம் – தாரகன்வதைப்படலம்.

ஆங்கது காலை தன்னி லளப்பிலா மாயை வல்ல
வோங்கல திறப்ப வங்க ணுறங்கிய வீர ரெல்லாந்
தீங்குறு மைய னீங்கித் கதுமெனச் சென்று செவ்வேள்
பூங்கழல் வணங்கி நின்று போற்றியே புடையி னின்றார்.

குமார தந்த்ரம்.

க்ரௌஞ்சம் ஸமேத்ய ஸ்வாமீ | ஸஹ்ய ஸித்த்யர்த்தமாணம் ஶக்திநா
[illegible] ஸஹவே த்ரு வாதகாரிஸ ஷாவம் வேடகம் ஹஸ்த்ரு

ஸமேத்ய: | தயா தத்³தே³வ நாநாய கம்பயந் ஷண்முகா²ம்
க³தோத்³யதநஷ்டம் க்ரௌஞ்சம் ஸமேத்ய ஸ்தா²நே ச ॥

சங்கர சங்கிதை - சிவரகசிய கண்டம்.

ஜ்ஞாநஶக்திஜ்ஞாநத: ப்ராஜ்ஞ: ஸமேத: ப்ரதாபாங்க்ரௌஞ்சாசலஶ்ரேஷ்ட²
ஸஞ்சாலேஶ ப்ரநஷ்டோத்³ஹஸ்த்யஸ்வித³ஜ்ஞேந நிர்மல்ய: ।[ஸ:]
யஸ்யாத்³வஶஸ்ரீமேநாத்மநா த்ருஷ்ணோதீதநம் ।
ஸர்வாத்மஸ்த²ஸ்தஸ்மிந் ஸ்ரீகஸ்மேவாஞ்ஜாயந்தா ।
ஷண்முகாஸ்யா விஶக்த்யா ஸத்³ரவ்யாசலதந்த்ரா*
ஸிக்தாஸ்தே த்ருஷ்டிமாஸேநா: க்ரௌஞ்சஶ்ருங்கா³விஷ்டித: ।
தாம்ஶ்ச யாதவிஸம்ஹ்ருத்ய ஸஹஸா விஶ்வேஶ்வரம் த்ரிஷு ॥

தணிகைப் புராணம் - அகத்திய னருள்பெறுபடலம்.

அழலுறு நெடுவேல் வாள்பகழி யபயம் வலநாற் கரத்தமைத்துத்
தழல்வச் சிரங்கே டகம்வரதஞ் சாபமிடநாற் கரத்தாக்கி
யெழின்மிக் கொழுகு முகமாறு மிலங்கத் தோற்றிக் கிரவுஞ்சம்
புழைபட் டழியப் படைவிடுத்த புத்தே ளுருவம் பொறிப்போரும்.

கிரவுஞ்சபேத மூர்த்தயே நம:

ஐம்பத்தெட்டாவது,

முருக மூர்த்தி.

சோழ நாட்டிலேயுள்ள சுப்பிரமணிய தல மொன்றிலே வேளாள குலத்திலே, தாய் தந்தையாது அருமைத் தவத்தினாலே வலம் புரியிடத்தின் முத்துத் தோன்றினாற் போல நன்மக ளொருத்தி தோன்றி

முருகமூர்த்தி.

னள். அவள் பூர்வபுண்ணிய பலத்தினாலே முருகன் என்னுந் திருநாமத்தையே கூறிக்கொண்டு இருந்தனளன்றி, சுப்பிரமணியப் பெருமானிடத்தே மிக்க அன்புடையளாகவும் விளங்கினள். முருகன் என்னுந்திரு நாமத்தை யன்றி வேறோர் தேவர் பெயரைத் தானும் மறந்து மொழியாள் இங்ஙனஞ் சுப்பிர மணிய பத்தியின் முதிர்ந்த அவட்கு முருகம்மையார் என்னும் பெயரிட்டனர். மாதரசியாராம் முருகம்மையார் தாம் விவாகம் புரிதற்குப்பிரிய மில்லாராயினும் தாய்தந்தையரது சொல்லை மறுத்தற்கு அஞ்சித் தங்குலத்திலே யுள்ள ளொருவனை விவாகஞ் செய்து, தாய்வீடு விட்டுக் கணவன் இல்லிற் சேர்ந்து கற் பொழுக்கினின்று இல்லற நடாத்தி வந்தனர். அவ்வா றிருந்தன ராயினும், "எத்தொழிலைச்செய்தாலு மேதவத்தைப் பட்டாலு - முத்தர் மனமிருக்கு மோனத்தே" என்ற திருவாக்கின்படி, சிறிதுஞ் சுப்பிரமணிய பத்தியினின்றும் வழுவாதிருந்தார். இடையிடையே முருகா! முருகா என்ற திருநாமத்தை யுச்சரிக்கின்றமையினாலே பக்கத்து வீட்டுள்ள முருகன் என்னும் பெயருடைய வாலிபன் ஒன்று நினைத்தான். முருகம்மையாரின் உண்மைக்கருத்தை யறியாமையினாலே தன்மேல் விருப்பமுற்று அழைக்கின்றாரென்று நினைத்து வருவான். இவ்விடயங்களி னுண்மையையறியாத கணவன் முருகா என்று இனிக் கூவாதே யென்று கண்டித்து வந்தான். அவ்வாறு செய்தும் அம்மையார் அதனை விடுத்தாரல்லர், என்னை? பழக்கவயத்தானே மறந்தும் அப்பெயர் வருதலாலென்க.

அயலி லிருந்த தூர்த்த னாகிய முருகன் என்பவனும் அம்மையார் தன்பெயர் சொல்லி யழைப்பதும், அதற்குக் கணவன் பொறாது தண்டிப்பதையும் அறிந்து, தன்மீது முருகம்மையா ராசை யுடையளாயிருக்கின்றா ளென்று மனத்தி லெண்ணி யிருந்தான். அம்மையார் தமது கணவனுக்குப் பயந்து அவனிருக்குங் காலத்து மனத்துள்ளே நினைத்தும், அவன் வெளியே புறப்பட்ட காலத்து வெளிப்பட

வுரைத்தும் வருவாராயினர். ஒருநாள் நாயகன் வெளியே சென்றுவீட்டு வாயிலில்வருங் காலத்துமுருகா என்று அழைத்ததும், அதுகேட்ட அயல் வீட்டுள்ள முருகன் ஓடிவந்ததுங் கண்டநாயகன் கோபங்கொண்டு, மனம் பொருணிக்கத்தியொன்று எடுத்து அம்மையாரது கரத்தைவெட்டினன்.

அம்மையார் "முருகா இதுசமையம்முன்வந்து காத்தருளே" என்று கூவிப் புலம்பும்போது, முருகக்கடவுள் தோன்றியபயமளித்து வெட்டப் பட்ட கையை முன்போலாக்கித் திருவாய் மலர்ந்தருளும். "அம்மையே! நம்மீது வைத்த அன்புடைமை கண்டு மகிழ்ந்தேம். இனி நம்முலகு சார்ந்து இச்சா சத்தி கிரியாசத்தியென்னும் நந்தேவிமார்க்குக் குற்றேவல் புரிந்து இருப்பாயாக" என்று அருளினர். முருகம்மையார் ஆனந்த சாக ரத்துள் ஆழ்ந்து துதித்துக் கற்புடைய நங்கையாகலாற் கந்தவேளைநோக்கி யின்னொன்று வேண்டும் என்னெனில், "பராபரமுதலே! பறங்குன்றப் பதியே! பக்த வற்சல மூர்த்தி! அடியேனது நாயகனையும் அவ்வுலகி னமர்த்தியருள்க" என்று பிரார்த்தித்தார். முருகக்கடவுள், "நங்காய்! பூவுடன் சேர்ந்த நார் தானும் மணமுறு மன்றே? நின்பொருட்டு அவற்கு மங்கனருள்கின்றாம்" என்று கிருபைபுரிந்தார்.

இடையறாது முருகா என்றுரைத்த முருகம்மையார்க்கு முருகக் கடவுள் தோன்றிக் கரத்தையு மொன்றச் செய்து, கணவனுக்குந் தமது லோகத்தை யளித்தருளிய காரணத்தால் முருக மூர்த்தி யாயினர். முரு கன் = தெய்வத்தன்மையை யுடையவன், இளமைப்பருவமுடையவன்.

முருகன் முறையீடு:

முன்னுனின் பெயருரைத்த முதுக்குறையாட் கொருகரத்தைக்
கொன்னுறக் கொடுத்தனையென் றுரைத்திடுவர் [illegible]ன்யான்

மன்றவிச் சகவாழ்க்கை மதித்தேனின் பெயரறியே
னென்றுதா ரையிடினு மூவந்தருள ஏின்கடனே.

கதிர்காமக் கலம்பகம்.

தோகைமீது விருப்படைந்தவர் தோகைமீது விருப்பிலார்
தூயவன்ப ரகத்துளார்மலர் தூயவன்ப ரகத்தெறார்
வாகைபட்ட கொடிக்குளாரடி வாகைபட்ட கொடிக்கிலார்
மலைதணித்தவை வேலி னூர்மத மலைதணித்திட வேலிலா
ரோகையென்றவ னுக்கடுத்தவ ரோகையென்றவ னுக்குறா
ரோதிமற்குரு வாகிவந்தவ ரோதிமற்குரு வாய்வரார்
சாகையார்பொழி லார்கதிர்க்கிரி சாகையார்க்கிவை யொண்ணுமோ
தாளினேடொரு தாளினின்றுத வஞ்செயுங்கம லங்களே.

முருகமூர்த்தயே நம:

ஐம்பத் தொன்பதாவது,

பால சுப்பிரமணிய மூர்த்தி.

இம்மூர்த்தி சோடச மூர்த்திகளுள் ஒருவராவர். திருவரையி னிடத்தே இடக்கையை வைத்தருளி, கமலத்தை வலக்கையி லேந்தி, திருவடிகளினிடத்தே கிண்கிணி சூழ்ந்து விளங்கத் தரித்து, தாமரை மலர்நிறத்தை யொத்த ஒருதிருமுகமும், இரு திருக்காதுகளும், இருதிரு விழிகளும், சூரியனது கிரணம் போன்ற காந்தி செறிந்த பால வுருவமும் உடையராய், விட்டுணு, பிரமன், முதலிய தேவர்கள் தமது முடிகள் உரோஞ்சும்படி வணங்க அவர்களுக்கு அருள் புரியுந் திருக்கோல முடை யராக விளங்குவர். முருகக் கடவுள் ஏனைய தேவர்கள் போலப் பிணி, நரை, திரை, மூப்பு முதலியன வின்றி யென்றுமான்



பாலசுப்பிரமணியமூர்த்தி.

றும் பாலப்பருவ முடையாராக விளங்கலாற் பிறப்பு இறப்பு விகாரம் முத லிய பசுத்துவ மடையாத பதியென்று தெள்ளிதிற் றுணியப்படும். பத் தாம் ஆண்டில் இளமையும், இருபதாம் ஆண்டில் வளர்ச்சியும், முப்ப தில் அழகும், நாற்பதில் அறிவும், ஐம்பதிற் சரீர வலிமையும், அறுபதாம் ஆண்டிற்றிருஷ்டி விருத்தியும், எழுபதில் நேத்திரமும் எண்பதிற் செவிக் கருவியும், தொண்ணூற்றில் மனமும், நூறும் ஆண்டிற் சீவனுங் கெடு மென்று உண்மை நூல்கள் உரைத்தலால், அவ்வாறின்றி யிளமைப்பருவ மதாகவே குமாரக் கடவுள் விளங்கு மென்க. இளமைப் பருவம் அறிவு செறிதற்குக் காரணமாகலானும், அழகுவலிமை முதலிய பெருமைக் குணங்கட்கு மேதுவாகலானும், தாம் உபதேசித்தருள்கின்ற பேரறிவு எக்காலத்து முதிராத பேரின்பத்தை யளிக்கு மென்னும் உணர்ச்சியைக் கொடுத்தலானும் பால சுப்பிரமணிய மூர்த்தியாய் விளங்குவர் என்பதாம்.

குமார தந்த்ரம்.

𑌬𑌾𑌲𑌸𑍍𑌵𑌾𑌮𑍀॥ 𑌪𑌦𑍍𑌮𑌸𑌵𑍍𑌯𑌕𑌟𑌿𑌸𑌂𑌯𑍁𑌤𑌵𑌾𑌮𑌂𑌪𑌦𑍍𑌮𑌕𑌾
𑌨𑍍𑌤𑌿𑌮𑍁𑌖𑌮𑍇𑌕𑌮𑍁𑌖𑌾𑌤𑍍𑌮 । 𑌬𑌾𑌲𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌕𑌰 𑌶𑍀𑌰𑍍𑌷 𑌸𑍂
𑌟𑌂 𑌬𑌾𑌲𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌭𑍁𑌜𑌂 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 । 𑌏𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌦𑍍𑌵𑌿
𑌨𑌯𑌨𑌂 𑌪𑌦𑍍𑌮𑌦𑍍𑌵𑌯𑌕𑌰𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 । 𑌵𑌿𑌪𑍍𑌰𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑌰𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌬𑌾𑌲
𑌰𑍂𑌪𑌂 𑌰𑌵𑌿𑌪𑍍𑌰𑌭𑌮𑍍 ॥

பாலஸ்வாமீ !! பத்மசவ்யகடிசம்யுதவாமம்பத்மகாந்தி முகமேகமுகத் வாம்! பாலவ்ருத்திகரமீச்வர சூடம் பாலமுகுந்தபுஜம்ப்ராணதோஸ்மி ! ஏகவக்த்ரம் த்விநயநம் பத்மத்வயகரத்வயம்! விப்ர ப்ரியகரம் வந்தேபால ரூபம் ரவிப் ரபம்!

பாலசுப்பிரமணிய மூர்த்தி.

தணிகைப் புராணம் - அகத்தியனருள்பெறு படலம்.

கடியி லிடக்கைத் தலமிருவிக் கமலம் வலக்கைத் தலமேந்தி
யடியின் மணிக்கிண் கிணிகலைவெ யமரும் பால வுருத்தோற்றி
முடிக ளுரிஞ வெதிர்வணங்கு முகுந்தன் முதலோர்க் கருள்சுரக்கும்
படியி லெழிற்சுப் பிரமணிய பகவ னுருவம் பயிற்றுநரும்.

பாலசுப்பிரமணிய மூர்த்தயே நம:

அறுபதாவது,

பிரபந்ததாரதம்மிய நிர்ணய மூர்த்தி.

“சிவக்ஷேத்ரோத்தம மிதிஸ்ரீமத் ஆலாஸ்ய மித்யபி! ஸமஷ்டி வித்யாநகரீ மதுராபுர மித்யபி! பூலோக சிவலோகஞ்ச சீவன் முக்தி புரந்ததா! சதுஷ்கூட புரஞ்சேதி த்வாதசாந்தம் விதுர்ப்புதா:!” என அகத்திய சங்கிதையானே போற்றிப் புகலப் பெற்றதூஉம், சங்கப்புலவர்கள் நாற்பத் தொன்பதின்மர்க டகவின் வீற்றிருந்து தமிழாராய்ந்ததூஉம், தமிழ்பரி பாலித்த பாண்டியர்கள் இருக்கப் பெற்ற தூஉம், இன்னோரன்ன பற்பல சிறப்புக்களை யுடையதூஉமான மதுராபுரியிலே “வம்சசேகர பாண்டியஸ்ய வம்ச சூடாமணிச் சுத:! விக்ர மேண கவித்வேந காந்த்யா கருணை யாச்ரயா!” என ஆலாஸ்ய மகாத்மியத்தானே யுரைக்கப் பெற்ற வம்சசேகர பாண்டியன் றன் புதல்வன் வமிச சூடாமணி யென்னும் பாண்டியன் அரசு புரிவானாயினான். நாடோறுஞ் சண்பக மலர்கள் கொண்டு சோம சுந்தரக் கடவுளை யருச்சித்தலானே யவற்குச் சண்பக பாண்டிய னென்னும் பெயரும் போந்த தென்க.

இங்ஙன மன்னோன் உலகைப் பொதுவறப் புரக்குங் காலத்திலே கிரக நிலை மாற்றத்தானே மாரி பெய்யாது வளம் பொய்த்துவற்



பிரபந்ததாரதம்மிய நிர்ணயமூர்த்தி:

௩௫அ பிரபந்த தாரதம்மிய நிர்ணய மூர்த்தி.

கடம் பன்னீராட்டை நேர்ந்து பெரும்பசி யுடற்றலாற் றய்ப்பின்றித் தம்முயிர் புரப்பா னிருபனை யென் றுங்காங் குள்ள புலவன்மா ரனை யரு மொருங்கே குழீஇக் கூடன் மாநகரத் தவனவையஞ் சார்ந்தனர். தமிழ்ப் பாராவாரங்களை பருகித் தேக்கெறியுங் கார்மேகமெனத் துலங்கு மாசிரியன்மா ரெவரையும் எழுதி யுபசரித் தினியவை கூறி யன்புட னறையும்.

"முத்தமிழ் வல்லுநர்காள்! அஞ்சாதிர்! இங்ஙனே யெஞ்ஞான்று மிருந்து அமிழ்தினு மினிய தமிழ் நூல்களை யாய்திர்" என்றான். புல வர் யாவரும் "அன்னையினுஞ் சான்றவளியுடைய மன்னவ கேண்மோ! எழுத்துஞ் சொல்லும் யாப்பும் அணியும் பொருண் மாட்டன்றோ தங் கும். ஆகலிற் பொருணூ லின்றி யெங்ஙன மவையிற்றை யாய்வ" மென் றுரைத்தாராக, அன்னோ னென் செய்து மென்றினைத் திக்குறை முடித்தருளு மாலவா யடிகளென் றெண்ணி, அவரொழுந் தருளும் கோயிலை யடைந்து முறையிட்டான். தடங்கருணைப் பெருங்கட லெந் தையாகிய சோமசுந்தரக் கடவுள், "ஆரிய மொழிதானும் பாணினியாற் செய்யப்பட்ட வியாகரணத்தையே யுடைத்து. இத்தென்மொழியோ வம் முனியின் மேலு மாருள் படைத்த தவத்திற் கதித்த அகத்திய விருடி யானுஞ் செய்யப் பெற்ற வியாகரணத்தை யுடையதன்றித் தம்பெயரிட் டுஞ் செய்தருளப்பெற்ற சீரிய விலக்கணத்தை யுடைத்தென்றறிஞ ரெலாம் போற்ற,

அன்பி னைந்திணைக் களவெனப் படுவ
தந்தண ரருமறை மன்றல் லெட்டினுட்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர்.

என்றதனை முதலாக அறுபது சூத்திரங்களை யுடைய "இறையனார் அகப் பொருள்" என்னும் பொருணூலை யருளிச் செய்து பீடத் தின் கீழ்வைத் தருளினார். அதனைத் திருவலகிடச் சென்ற அக்

கணார் கண்டு எடுத்து அரசனுக்குக் கொடுப்ப, அவன்மிகவும் மகிழ்ந்து வாங்கி யதன் பொருள் காண்ட லரிதாயிருத்தலின் புலவர்களை நோக்கி "இதற்கு உரை காண்மின்" என்று ஆஞ்ஞாபித்தனன். அங்ஙனமே நக்கீரர், கபிலர், பாணர் முதலாய நாற்பத்தொன்பதின்மரும் உரை செய்து தங்கடங்க ளுரைகளே சிறந்தனவென்று தருக்கித்துக் கலகஞ் செய்வாராயினர்.

இவர்தம் முரைகளை யாய்ந்து இது சிறந்த தென்றுரைத்தற் கிவரி னும் மேலான கல்விக் கடலாம் புலவர் யாண்டுளர்? அன்றோ! இதற் கென்செய்கேன்? ஆலவாயடிகளே வழிதெரித்தருளு மென்று சந்நிதி சென்று வணங்கி முறையிட்டான். அதுகாலை மீனாட்சிசமேதரான சுந்த ரேசப்பிரபு காருண்யத்தானே யோர் திருவுருவங் கொள்வாராயினர்.

ஸர்வாவயவ ருத்ராக்ஷ மாலாக் தரித விக்ரக:!
பஸ்மாங்கித லலாடாதி பரிசோபி களேபர:!
உஷ்ணீஷ மண்டனோத்பாஸி மௌலிமண்டலமண்டித;!
நிர்மலாம்பர ஸம்பூத கஞ்சுகாஞ்சித விக்ரக:!
கவி வேஷதரோ தேவஸ்ஸர்வாவயவ சுந்தர:!

என ஆலாசிய மான்மியங் கூறியவாறு வித்வ கோலந் தரித்துச் சென்று "அரசே வருந்தற்க—இவ் வூரிலே சிவபக்தியிற் சிறந்த வன் றனட்டியன் * வைசிய குலதிலகன் ஒருவனுளன். அவன்

---

* தனபதி யென்னும் வைசியனுக்கும் அவன்மனைவி குணசாலி னிக்கும் மகனுகி வளர்ந்தாரென்று திருவிளையாடற் புராணக்காரர் கூறி யுள்ளார். அஃதங்ஙனங்கூற இந்நூற்கு உரைகண்ட நக்கீரனார் தம்மைப் பிறர்போல் வைத்துரைத்த வவ்வுரைப் பாயிரத்திலே, "இவ்வூரிலே உப் பூரி குடிகிழார்மகனுவன் உருத்திர சருமனே யழைத்து வந்து உரை கேட்பின் மெய்யுரை யவன் றெரிக்கும். அந்தப் பிள்ளை குமாரசுவாமி யாகும். மெய்யுரைக்குக் கண்ணீர் சொரிந் துடல்கம்பித் தானந்த மடை வான். என்று அசரீரி கூறிற்று" என்றுரைத்தமை யுணர்க. எனவே கிழார் என்னுஞ்சொல் வேளாள குலத்தார்க் கன்றி வைசிய குலத்தார்க்கு முரிய பெயர்போலும் என் றெண்ணக்கிடக்கின்றது.

௩௯௦ பிரபந்ததாரதம்மிய நிர்ணய மூர்த்தி.

மனைவி குணசாலினி. - இருவருஞ் சுப்பிர மணியக்கடவுளைத் தமக்குப் புத்திரராக வரவேண்டு மென்று முன்னர்ப்பிறவியிற் றவங்கிடந்தமையா லிப்போ தக்கடவுளே யோர் குழவி வடிவெடுத்து அவர்வீட்டில் வளரா நின்றார். அந்தக் குழந்தை செங்கண்ணன், புன்மயிரன்; ஐயாட்டைப் பருவத்தன். அவன் மூகைபோ லொன்றும் பேசலன். அன்னோனைக் கொடுவந்து வெள்ளாடை வெண் சாந்து வெண்பூ முதலியவற்றா னலங் கரித்து இச்சங்கப் பலகையி னேற்றி யுரைகளை வாசிக்கின் மெய்யுரைக் குக் கண்ணீர் சொரிந்து உடல் கம்பிக்கு மென்று மறைந்தருளினர்.

ஆங்கு நின்றவ ரெல்லா மத்திருவுருவங் கொண்டு வந்தவர் கூடலம் பதிக்க ணுடல் புரிந்தருளு மோடுவான் றிங்கள் சூடிய வாலவாயடிகளே யென்று விம்மித முற்றுத் திருவருளைப் புகழ்ந்து வணங்கினர். பின்னர் நக்கீரர் முன்னாக நின்ற நவையிலாப் புலவரும் நரபதியுங் குமார சுவாமி யின் றிருவவதாரமாங் குழவி யிருக்கு மிடமண்மிப் போற்றிப் பணிந்து வித்தியா மண்டபம் வருமா றிரப்ப, முழுதுணர் புலவனு மறுமுகக் கட வுட் குழவி யியைந்தனைந்த காலைப் பொருவிறீர்த்த மாட்டி வெள்ளைக் கலை வெண்சாந்து வெண்பூ வென்னு மிவையிற்று னலங்கரித்துச் சங் கப் பலகையி னேற்றி வீற்றிருக்கச் செய்து, புலவர் யாவருந் தத்த முரை களை வாசிப்பாராயினர்.

எம்பெருந் தகையாருஞ் சுப்பிரமணியக் கடவுளும், அவ் வுரை களை யெல்லாங் கேட்டு வருவாராயினர். சில புலவர்களுடைய சொல் லாட்சிக்கு மகிழ்ந்தார். சிலர் பொருளை யிகழ்ந்தார். சிலருடைய சொல் வைப்பை நோக்கி யுவர்த்தார். கபிலர் பாணர் என்னும் புல வர்கள் வாசிக்குங் காலத்து ஆங் காங்குத் தலையை யசைத்தனர்.

* மதுரைக் கணக்காயன் மகனார் நக்கீரனார்தம்முரையை வாசித்தகாலத்து ஒவ்வொரு சொற்க டோறும் பொருட்சுவை தேக்கித் தலையசைத்துக் கண்க டோறும் ஆனந்த பாட்பம் பொழிந்து மெய்ப் புளகங் காட்டி யுண்மை யுரையென வினிதின் விளக்கி யருளினர். அரசனும் புலவரும்மெய் யுரை பெற்றே மென்று கழிபேருவகையுற்றனர்.

பின்னர்ப் பிரபந்த தார தம்மியநிர்ணய மூர்த்தியாகிய குமாரக்குழவி திருவள்ளுவ நாயனார் திருக்குற ளாராங் கேற்றுங் காலத்ததுகேட்டு, அவ ரொருவரோடு தாமுஞ் சங்கப் பலகையின்கண் வீற்றிருந்து தமிழின்பெருமையை நன்குதெரித்து முடிவிற் றம்முருவங்காட்டி மறைந்தருளினர். இங்ஙனங் குமாரக் கடவுள் வசியர்செய்த தவப்பேறுகாரணமாகவும், செந் தமிழ்ப் பரமாசாரியனாதலாற் றீந்தமிழ் நூலாங் களவியலின் மெய்யுரை தெரிக்கு நிமித்தமாகவும், ஐயாட்டைக் குழவியாய்த் தோன்றிச் சங்கப் பலகையி னெழுந்தருளி யிருத்தலாற் பிரபந்ததாரதம்மிய நிர்ணயமூர்த்தி யாயினர்.

ஸ்காந்த புராணம் - அகத்திய சங்கிதை.

[illegible]
[illegible]

---

* சிலர், இறையனார் அகப் பொருட்கு இப்போது வழங்கப்படும் உரை நக்கீரனாாற் செய்யப்பட்ட உரையன்று என்றும், முசிறியாசிரியர் நீலகண்டனார் கேட்டுச் செய்த தென்றுந் தம் மறியாமையைப் புலப்படுத்துவர். இங்ஙனம் மயங்கி யிடர்ப்படுவா ரென்றே யாசிரியருள் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க் கினியரும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் "ஒத்த சூத்திரம்" என வருஉஞ் சூத்திர வுரைக்கண், "இவ்வுயிரைசெய் தார் யாரோ வென்ற வழி மதுரைக்கணக் காயனார் மகனார் நக்கீரரென வுரையெழுதினான் பெயர் கூறுதலும்" என வுரைத்து ஐயநீக்கினமை யுணர்வரே லங்ஙன முரையாரெனக இவ்வாறே அடியார்க்கு நல்லாரும் களவியலுரை கண்டார் நக்கீரனாரெனச் சிலப்பதிகாரம் வேனிற்காதைக்கணுரைத்துளார். இந்த மூர்த்தத்தை உருத்திரசன்ம மூர்த்தி யென்றும் சுபுத்திர மூர்த்தி யென்றுஞ் சில விடங்களிற் கூறப்பட்டுளது.

ஶிவ:| ஸ்ரூதேவ்யூவேந்நாக்கீரோக்ருவிரேஹாரேண
விவ | ஸ்கந்த:ஸ்ரூணீர்மம்வந்துவவாஜகம்விதவிஹ்ரு
ஹ: | ஸ்கந்தஸ்வாமீரோந்ஹ்ரு:கஷுவ்ருஷ்வஜவாஹவஸ ||

திருவிளையாடற்புராணம்.

இம்மாநக ருள்ளானொரு வணிகன் றனபதியென்
றம்மாநிதிக் கிழவோன்மனை குணசாலினி யனையார்
தம்மாதவப் பொருட்டால்வெளிற் றறிவாளரைத் தழுவும்
பொய்ம்மாசற வினன்போலவ தரித்தானொரு புத்தேள்.

பின்பாவல ரெல்லாம்பெரு வணிகக்குல மணியை
யன்பாலழைத் தேகித்தம தவையத்திடை யிருத்தா
நன்பான்மலர் நறுஞ்சாந்துகொண் டருச்சித்தனர் நயந்தே
முன்பாலிருந் தருந்தீந்தமிழ் மொழிந்தா ரவைகேளா.

நுழைந்தான்பொருடொறுஞ்சொற்றொறு நுண்மஞ்சுவையுண்டே
தலைந்தழானுடல்புலனைந்தினுந்தனித்தான்சிரம்பனித்தான்
குழைந்தான்விழிவழிவேலையுட்குளித்தான்றனையளித்தான்
விழைந்தான்புரி தவப்பேற்றினை விளைத்தான்களி திளைத்தான்.

கந்தபுராணம் யுத்தகாண்டம்.

திருத்தகு மதுரை தன்னிற் சிவன்பொரு ளிறுக்கு மாற்ற
முருத்திர சருமனாகி யுறுபொருள் விரித்தோன்.

திருவள்ளுவமாலை.

அசரீரி.

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—விருக்க

வுருத்திர சன்ம ரெனவுரைத்து வாணி
லொருக்கவோ வென்றதோர் சொல்.

* பிரபந்த தாரதம்மிய நிர்ணய மூர்த்தயே நம:

அறுபத் தோராவது,

உக்கிர வர்ம மூர்த்தி.

மாலி காஞ்சன முதலிய வித்தைகளை யுடைய வித்தியாதர கணத்தவர்களுக்குள், "இதி விச்வாவசு வசச ச்ருத்வா வித்யா வதீததா" என்று ஆலாஸ்ய மகாத்மியம் விதந்த விசுவாவசு வென்னும் வித்தியாதரன்புதல்வியாகிய வித்தியாவதி யென்னும் பெண்ணணவள், சத்தி பீடங்களுட் சிறந்த மதுரைத்தலத்தை யடுத்துப் புவனேசுவரியாகிய மீனாட்சியம்மையாரை நினைத்து உபாசிக்க, அவர் மூன்று வருடக் குழந்தைபோல மகா சௌந்தரிய வதியாய்த் தோன்றி, "நங்காய்! நிற்கென்வேண்டும்?" என்று வினவியருள, வித்தியாவதி கூறுவாள். சர்வலோக மாதாவே! தேவரீர் அடியாளுக்கு இவ்வடிவிற் புத்திரியாக வருதல் வேண்டு மென்றிரப்ப, அம்மை திருவாய் மலர்ந்தருளும். "மங்காய்! நீ யடுத்தபிறவியிற் சந்திரகுல சூடாமணியாகிய மலயத்துவச பாண்டியற்கு மனைவி

---

* இம்மூர்த்தி உருத்திரனாலே யடைந்த ஜன்மத்தை யுடைய மூகைப் பிள்ளையானமையால் இது அவர் பராக்கிரமத்திற் கிழுக்கன்றோ வெனின், அறியாது கூறினாய். உருத்திரர்க்கு மேலாய மகேசுர ரிதயக் கணிருந்தும் அவர்க்குமேலாய அதிபரமாப்த பதியாகிய சதாசிவ மூர்த்திகளின் றிருநுதற் கண்களிலிருந்துந் தோன்றிய விப்பரம்பொருளை உருத்திரர் சபித்தன ரென்பதும் அதனாற் சன்மமெடுத்தா ரென்றதும் உபசாரமேயன்றி யுண்மையாகா தென்க. இனி யுருத்திர சன்ம ரென்பதற்கு உருத்திரக் கடவுளின் களவியலூற் பொருளி னுண்மை தெரித்தற்குச் சன்மித்தோ ரெனக் காரணங் கோடலே சிறப்புடைத்தா மென்பது. மற்றையோரா லுணர்தற் கரிய பொருளி னுண்மையைப் புலப்படுத்தும் வல்லபம் பெறப்படலா னிக்தவர் பராக்கிரமத்திற் கிழுக்கன்று மென்க.



உக்கிரவர்மமூர்த்தி.

யாண காஞ்சன மாலையாக வருவாய். அவன் புத்திர ரில்லாமையா லியாகம் புரிவன். அந்த யாகாக்கினியி னின்றுந் தோன்றுவேன்" என்றருளிய படி மும்முலைகளையுடைய தடாதகைப் பிராட்டியாராகத் தோன்றியருளி, மணிமுடிபுனைந்து அரசாள்வாராயினர். அந்நாளிற்றிக்கு விசயம் புரிந்து எவ்வுலகங்களையும் வென்று திறைவாங்கிக் கயிலை நோக்கி வந்து கணங் களை வென்று இறையவற் காணைத் தனம் மறைதலா ஞணி மதுரை நகர் வந்தனர்.

இறையவன் சோம சுந்தர பாண்டியனாகிச் சுபமுகூர்த்தத்திலே மதுரை வந்து திருக்கல்யாணம் புரிந்து தாமே யரசாண்டு இருந்தார். அங் ஙனஞ் சுந்தரேச பாண்டியருடன் அறுபத்தாறுயிர வருடம் மதுரையி லிருந்து செங்கோல் செலுத்துங் காலத்தில் ஒன்று செய்தனர். உலகத்தி லே யரசர் மரபும் அவர் செயும் நீதிகளுந் தழைக்குமாறு முடிவிலாப்பரம யோகியாங் கடவுள் தமது நெற்றிக் கண்களி னின்றும் முன்றோன்றி யருளிய கந்தக் கடவுளைத் தடாதகைப் பிராட்டியாரது திருவயிற்றினிற் கருப்ப மெய்தும்படி நினைத்தருளினர். குமாரக் கடவுளும் இந்திரசால வித்தை செய்வார் போலத் தடாதகைப் பிராட்டியாரது கருப்பத்தில், தாமரையிலையிற் றண்ணீர்போல யாதோர் வருத்தமு மின்றித் தங்கியரு ளினர். தடாதகைப் பிராட்டியாரும் தூய வுடம்பினை யுடையாராக இருந் தும் உலகியலை நோக்கிக் கருப்பக் குறிகளைக் காட்டி அவ்வம் மாதங்கடோ றுஞ் செய்யுங் கிரியைகளையும் பேணத் திருவுள்ளங்கொண்டார். ஆயத் தாரும் பிறருங் கூடிக் * கருப்பாதானம் புஞ்சவனம், சீமந்தம், விண்டுபலி

* கருப்பா தானம் ஆவது—கர்ப்பந் தரிக்கும்படி செய்யுங் கிரியை புஞ்சவனமாவது—வாமதேவ மந்திரத்தாலே ஆயிரத்தெட்டுத் தரம் அல் லது நூற்றெட்டுத்தரம் ஓமஞ்செய்து, அந்த மந்திரத்தினாலேயே ஆண் குழந்தைபிறக்கும்படி கருப்பமுற்றவளின் மூக்கிலே ஆலந்தளிர், பால், உழுந்து இவைகளைப் பிழியுங் கிரியை. இது இரண்டு அல்லது நான்காம் மாதங்களிற் செய்யப்படும். சீமந்தமாவது—வியாகிருதி, அகோரமந்திரங்

யென்னுங் கருமங்களைச் செய்தனர். அதன்பின் உலகத்தாரது துன்பங்க ளொழியவும், வேதங்கள் முழங்கவும், பஞ்ச துந்துபிகளு மொலிக்கவும், வீரலக்குமி, திருமகள், நாமகள் உவகை கொள்ளவும், அந்தணர் மகிழ்ச்சி யிற்றிளைக்கவும், யாகாக்கினி வலஞ் சுழித்து எரியவும், எட்டு யானைகளும் ஆதிசேடனும் தம்பாரநீங்கி யிளைப்பாறவும், இந்திரன், மேருத்தெய்வம், வருணன் என்னும் இவர்க்கு இடத்தோள்கள் துடிக்கவும், திருவாதிரை நாளிலே, சோமவாரத்திலே, சுபலக்கினத்திலே, தேவகுருவாகிய வியா ழன் கர்க் கடகத்திலேறிக் கேந்திரமுற்று விளங்க, மற்றைய கிரகங்களுந் தத்தமக்குரிய தானங்களிலிருந்து வலியுற்று நிற்க, அறுமுகங்களையுடைய தாரகாரியான குமாரக்கடவுள் ஒருதிருமுகத்துடன் திருவவதாரஞ் செய் தார்.

தடாதகைப் பிராட்டியார் மிக்க மகிழ்வுட னெடுத்துத் தனை ஈன்றார் தனுர் திருக்கரத்திற்கொடுத்து, மகிழ்ந்து, அத்திரமந்திரத்தால் நூறுஓமஞ் செய்து வாமமந்திரத்தாற் குழந்தையின் முகநோக்கி, ஈசானுதி பஞ்சப் பிரமமந்திரங்களையுச்சரித்து உச்சியைமோந்து தற்புருட மந்திரத்தைவலக் காதிற்செலுத்திச் செய்யப்படுஞ் சாதகன்மத்தையுஞ் செய்து, உத்தாப னமு மியற்றி, உக்கிரத்தையே கவசமாகவுடையாராதல்பற்றி "உக்கிரவரு மன்" என நாமகரணமுஞ்செய்தனர். பின்னர்நான்காமாதத்திற்சந்திமிதித் தலாகியபிரவாசக்கிரியையும், ஆறாமதியில் அன்னப் பிராசானமும், பதின்

களால் 103-தரம் ஓமஞ் செய்து, தருப்பை, அத்தி, அரக்கொம்பு, மூன் றிடத்து விளர்ப்புள்ள பன்றி முள் என்னு மிவற்றால் வித்தியாங்க மந்தி ரஞ் சொல்லித் தலைமயிரை வகிரும்படி நெற்றி முதன்மே விழுத்துச் செய்யுங் கிரியை. இது 6-8-முதலிய இரட்டித்தமாதங்களிற் செய்வது. விண்டு பலியாவது—ஸீமந்தச் சடங்கி னுறுப்புக்களி லொன்ருய், விட்டு ணுவை இருடிகேசன் முதலிய மந்திரங்களாற் காலைமாலைகளில் ஆவா கனஞ்செய்து அருச்சித்து, வியாகிருதி, அகோரங்களால் 108-ஓமங்களை யும், விட்டுணு மந்திரத்தால் ஆறு ஓமங்களையுஞ், செய்து, முடிவிலே பிர மசாரிகள் எண்மருக்கு அன்ன மூட்டிக் கருப்பவதியின் வயிற்றிலுள்ள சிசுவுக்கு வலிமையுண்டாகச் செய்யுங் கிரியையாகும். இவற்றின் தத்து வார்த்தங்களைச் சதாசிவரூபம், கிரியா விவரணம் என்னு நூல்களிற் பாக் கக்காண்க.

மூன்றுமாதத்திற் சௌளமும், ஐந்தாம் ஆண்டில் உபநயனச் சடங்குஞ் செய்யப்பட்டன. இவற்றையெல்லாம் உலகர்பொருட்டுக்கொண்ட உக்கிர வருமனார் பதம், கிரமம், ஜடை, சாகை, ஆரணமென்னும் உறுப்புக்களை யுடையவேதங்களையும் சிவாகமங்களையும், வேதாங்க உபாங்காதி சாத்தி ரங்களையும், அத்திர சத்திராதி வித்தைகளையும் நன்குபயின்று சாமுத் திரிகாலக்கணங்களை யெல்லாந் தம்வடிவின்றற் காட்டி விளங்கிய நாளிலே, தந்தையாராகுஞ் சௌந்தர பாண்டியர்தமக்கு மணிமுடி கவிக்க அரசு செய் தார்

அதுகாலை "வள்ளியம்மையார், தாம் மான்மகளாய் வேடர்சேரிக்க ணின்று வளர்ந்து, குறத்தியென்னும் பெயரைக் கொண்டிருத்தற்கு ஆற்றே" னென்றமையால், முருகக் கடவுள் "மதுரைக்கு வடக்கி லுள்ள மணவூரிலே விட்டுணுவும் இலக்குமியுஞ் சோம சேகரச்சோழனு கவும் மனைவியாகவும் வாழ்கின்றார். ஆங் கவரிடத்துக் காந்திமதி யென் னும் பெயருடன் வளர்தி. நாம் திருமணஞ் செய்வேம்" என்று அருளிய கட்டளைப்படி வளர்ந் திருந்தமையால், சோம சுந்தரப் பெருமானது திரு வருளாணைப்படி யவன் கொண்டு வந்து அளிக்க, பெண்களின் சாமுத்திரிகா லக்கணத்திற் கெல்லாம் ஓரிலக்கியமா நின்ற அக்காந்தி மதி யென்னும் வனிதையை நன்னாளில் மணவினைகொண்டு வேல், வளை, செண்டு என்னு மூன்றுந்தாங்கி அரசு புரிந்தார். உலக மெல்லாந் தம் ஒரு குடை நீழலிற்றங்கி யின்பெய்த, யானைகளுஞ் சேடனும், ஆதி கூர்ம முந் தம்பாரநீங்கிச் சுகமுற, நீதி பெருக, ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும் * பதினெண்வகை யுறுதிச் சுற்றமுங் கொண்டு இறைமாட்சி களையெல்லாங் காட்டி யாண்டருளா நின்றார்.

---

* பதினெண்வகை யுறுதிச் சுற்றம் ஆவன—அமைச்சர், புரோகி தர், சேநாபதியர், தூதுவர், சாரணர், காணத்தியலவர், கரும விதிகள், கனகச் சுற்றம், கடை காப்பாளர், நகர மாந்தர் முதலாயினோர். அவற்றின் விரிவுகளையெல்லாந் திவாகரம், பிங்கலந்தை முதலிய நிகண்டு களிற் பார்க்கக் காண்க.

உக்கிர வர்ம மூர்த்தி.

ஸ்காந்த புராணம் — அகத்திய சங்கிதை.

[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
* * [illegible] ।
[illegible] ।
[illegible] ॥

திருவிளையாடற்புராணம்.

இந்திர சால விச்சை காட்டுவா னென்னத் தன்பாற்
செந்தழ லூட்ட மீன்ற செல்வனைக் கருப்பு மெய்தா
தந்தமி லுயிரு ஞால மனைத்தையு மீன்ற தாயாஞ்
சுந்தர வல்லி தன்பாற் றோன்றுமா றுள்ளஞ் செய்தான்.

"வழுதியர் பெருமான் றன்பாற் கந்தனே வந்தா னென்பார்"

பொதியவிழ் கடப்பந் தண்டார்ப் புயத்திளங் காளை யன்னான்
முதியவர் செந்தீயோம்ப வின்னிய முழங்கக் காந்தி
மதியைமங் கலநாண் பூட்டி வரிவளைச் செங்கை பற்றி
விதிவழி யேனைமன்றல் வினையெலா நிரம்பச் செய்தான்.

உக்கிரவர்ம பூர்த்தயே நம:

அறுபத்திரண்டாவது,

வாருணோக்கிர மர்த்தன மூர்த்தி.

இவ்வாறு உக்கிர குமாரனார் அரசுபுரியுங் காலத்திலே, தேவர்க ளெல்லாம் வியக்கும்படி சோதிட் டோமம், அங்கிட் டோமம், வாசபேயம், உத்தியம், சோடசீ, அத்திராத்திரம், சோமயாகம், சாதுர்மாசியம், பவித்திரமேதம், சௌத்திராமணி, பௌண்டரீகம், அங்கிசயம், இராசசூயம், விச்சுவதித்து, பிரமமேதம், பிராணவமேதம், பசுபந்தம் என்னும் பதினேழு வேள்விகளையு முடித்து, அசுவமேதயாகத்தையுஞ் செய்யத் தொடங்கித் தொண்ணூற் றாறாவது வேள்வியைச் செய்தார். இந்திரன் கண்டு நூறு யாகஞ் செய்யின் நம் மரசு நீங்குமே யென்று பொறாமை கொண்டு ஓருபாயஞ் செய்வா னாயினான். சமுத்திர ராசனாகிய வருணனைக் கூவி, ஊழிப் பிரவாகம்போற் பொங்கி விரைவிற் சென்று மதுரையை யழிப்பாயாக வென்று கட்டளை யிட்டனன். விளைவை யறியா வேலை வேந்தனும் வருணனும் அர்த்த ராத்திரியிலே ஊழிநாளில் ஆர்வாரித் தெழும்பிரளய வெள்ளம் போலப் பெருகி யிரைந்து மதுரையை வளைத்துவந்தான். அஃதறிந்த உக்கிர குமாரனார் அமைச்சரொடுங் கடிது வந்து வாயில் பலகடந்து, திரைகளை யெறிந்து பெரு முழக்கஞ் செய்து வருங் கடலைப் பார்த்து அதிசயத்தராய் நின்றார். சித்த வடிவினரான சோம சுந்தரப் பெருமான் அவர் கனவிற்றோன்றி, " அப்பனே! காலந் தாழ்த்து நிற்ப தென்னை? விரைவில் வேலாயுதத்தை யெறிந்து, பொங்கி யெழுந்த கடலை வறளச்செய்து உலகமழியாது காத்தி " யென்ன, உக்கிர வர்மப் பெருமானார் தாம் முன்னர்த் தோன்றிய இடம் (சரவணவாவிக்கண்) நீரொன்றும் பாராது உலகுயிர் பொருட்டு வேலாயுதத்தைச் சுழற்றி யெறிந்தார்.

ஆகாய மளாவி யுயர்ந்து வளர்ந்த பெருஞ் சமுத்திர வெள்ளமானது சூரியன் முற்பட்ட பனிப் படலம்போற் சுஃறென வற்றிக்காலின் மட்



வாருணேக்கிரமர்த்தனமூர்த்தி.

டாய் நின்றது. ஈருருவ ஞகிய வருணனும் வலியொடுங்கி யச்சமுற்றுக் கடற்கு ளொளித்தான். இந்திரன் முதலிய தேவர்கள் யாவருஞ் செய் வகை தெரியாது வெட்கமுற்ருர். மற்றை யுயிர்கள் யாவும் உய்ந்து உக் கிர வர்மஞரது செயலறிந்து போற்றி யானந்தக் கடலில் முழுகின. வள்ளலாம் உக்கிர வர்மரும் யாவரும் வியக்கத் தம் கோயில் புக்கு உல கைப் புரந்திருந்தார். வருணனது உக்கிரத்தை யடக்கி யுலகைக் காத்தரு ளினமையால் வாருணேக்கிரமர்த்தன மூர்த்தியாயினர். இதனைச் சக்தியா சிந்து தாடன மூர்த்தியென்று ஆலாஸ்ய மான்மியம் அறைகின்றது.

ஆலாஸ் மகாத்மியம் - பதினேழாம் அத்தியாயம்.

[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] ||
[illegible] |
[illegible] |
[illegible] ||

என வரூஉஞ் சுலோகங்களாற் காண்க.

திருவிளையாடற் புராணம்.

அரும்பரி மகந்தொணூற் ருறு செய்துழிச்
சுரும்பரி னிசைத்தருந் தோன்ற றண்ணுரு
விரும்பரி முரன்றுசூழ் வேம்பி னந்தழைப்
பொரும்பரி வீரன்மேற் பொருது பொங்கிஞன்.
விளைவது தெரிந்திலன் வேலை வேந்தனும்
வளவயன் மதுரையை வளைந்திட் டிம்மெனச்

விளவது கருதினன் பேயுங் கண்படை
கொளவரு நனந்தலைக் குருட்டுக் கங்குல்வாய்.

எடுத்த வேல்வ லஃதிரித் தெரிந்த வேலை வென்முனை
மடுத்த வேலை சுஃறெனு வறந்து மான வலிகெட
வடுத்து வேரி வாகையின்றி யடிவ ணங்கு தெவ்வரைக்
கடுத்த வேல்வ லான்கனைக் காலின் மட்ட தானதே.

வாருணேக்ர மர்த்தன மூர்த்தயே நம:

அறுபத்துமூன்றாவது,

பாகசாதன கருவபங்க மூர்த்தி.

உக்கிர குமார பாண்டியர் அரசு புரியுங் காலத்திலே, இரகிலை பிழைத்து மேகம் மழையாகிய வளத்தைச் சுரத்தலின்றிப் பொய்த் தது. அதனுலே பயிர்கள் தீய்ந்து பசும் புல்லின் றலையுங் காண்பரி தாய், உயிர்கள் பசியினுல் வருந்திப் பெரிதும் துன்பமுற்றன. இங்ஙனஞ் சேர சோழ பாண்டி நாடுகள் மூன்றுங் கையற வடைய, மன்னர் மூவருஞ் செந்தமிழ் வளர்த்த அகத்தியனு ருழைச் சார்ந்தார். பொதிய மலை முனிவர் அவரை நோக்கி "இனி மழையில்லை. யாதினு லென்பது கேட்டீர். மன்னர்களே! சூரியனுஞ் செவ்வாயும் முன்னர்ச் செல்ல, அசுர குருவாகிய வெள்ளி பின்னர்ச் செல்லுதலாலும், சனிக் கோள் இடபம், சிங்கம், மீன மென்னு மிவற்றிஞேடு மாறுபட்டு நடத்தலாலும், ஆகாயத்தே காந்துறை கோட்களாகிய வட்டம், சிலை, நுட்பம் தூமம் என்னும் நான்கனுள், தூமம் என்னுங் கொடுங்கோள் எழுந்தமை ——— பன்னிரு வருடம் மழையில்லாகும் என்று நூல்கள்



பாகசாதனகருவபங்கமூர்த்தி.

கூறுகின்றன. இன்னும்மழை பெய்விக்கும் இந்திரத் தெய்வத்தைக்கேட்டுப் பெய்வியுங்க" ளென்றார்.

"உததியை யுழுந்தளவாக்கி யுண்டுமிழ்ந்த அருந்தவத் தமிழ்முனியே! இந்திர னிடம் யாம் எவ்வாறு செல்வே" மென்றார். "விரதங்க ளெவற்றினுஞ் சிறந்த சோமவார விரதத்தை யநுட்டித்து, அதன் பலத்தாற் செல்மின்" என்று, சோமவார விரத விதிகளையு முரைத்தார் முனிவர். மூவேந்தரும் அங்ஙனம் விரதம் அநுட்டித்த பலத்தினால் ஆகாயவழியாகச் சென்றார். அதனை யறிந்த இந்திரன் மூவர்க்கும் மூன்றாசனந் தனக்குக் கீழாய இடத்தில் இடுவித்தான். வந்த அரசருள் சேரனுஞ் சோழனும் இந்திரனை வணங்கிக் கீழிட்ட ஆசனத்தில் இருந்தனர். வருணன் அகங்கார மழியக் கடல் சுவற்றிய வேலாயுதத்தையுடைய உக்கிர குமாரனார் இந்திரனுடைய தவிசிலேறி அவனுடன் கூடவிருந்தனர். ஆகண்டலன் அதுகண்டு அழுக்காறடைந்து கீழிருந்த அரசர் முகநோக்கி வந்தகாரண மென்னென்று வினவி, அவர் வேண்டியபடியே மழை பெய்யும் வரம்அளித்து, மணிக்கலன், பொன்னுடை முதலிய வற்றையுங் கொடுத்து நீவிர் போமினென்றான். அவர் போய பின்னர் இந்திரன் உக்கிர குமார வர்மர் தன்னாசனத்திற் சரியாக வீற்றிருக்குங் களிப்பையும், மழைபெய்விக்கும் வரத்தைக் கேளா திருத்தலையும் பார்த்து, தெரியான் போல இருந்து ஓர் விஷயத்தை நினைத்தான். குமார பாண்டியர்க்கு வரிசை செய்வான் போல எண்ணிறந்தோராற் கொண்டுவரப்பட்ட ஆரமொன்றைக் கொடுத்தான். அதனைக் குமாரக் கடவுளாம் பாண்டியனார் சிறிதேனும் கஷ்டமின்றிப் பூமாலைபோலெடுத்துத் தமது கழுத்திற் றரித்துக்கொண்டார். இந்திரன் கண்டு மிக்க வியப்பற்று இன்று தொடங்கி ஆரந்தாங்கு பாண்டியன் எனப் பெயர் பெறுக என்றான் அவற்றை யெல்லா மொருபொருட் படுத்தாது ஆங்கு நின்று தங்காடடைந்து வேட்டையாடச் சென்றார் உக்கிர குமார பாண்டியர். மற்றிரு

வர் நாடும் மழைபெய்துவளம் பெருக, பாண்டிநாடு மாத்திரம் பஞ்சடைந்திலையதாக இருந்தது. அதனை மனத்தில்வைத்த உக்கிர குமாரர் வேட்டையாடி வரும்போது பொதிய மலையின்கண், முறையே பொன் பூமண் கல் என்பவற்றைப் பொழியும் புட்கலா வர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி என்னும் மேகங்கள் மேய்வது கண்டு அவையிற்றைப் பிடித்துச் சென்று சிறையிலிட்டார்.

இந்திரன் கோபங்கொண்டு ஐராவதத்திலேறிச், சேனைகள் சூழ்ந்துவர மதுரையை வந்து வளைத்தான். உக்கிர குமாரர் கேட்டுப் பொருகெனவெழுந்து வெகுளி பொங்கச் சேனைகளுடன் சென்றார். பாண்டியனார் சேனை * பாகசாதனன் சேனையைச் சிதைத்தது. இந்திரன் வந்தெதிர்த்தான் குமாரபாண்டியர் அவன்விடுத்த படைகளையெல்லாம்விலக்கினர். மேகவாகனன் மற்போர் புரியத் தொடங்கினன். குமார வழுதியாரு மதற் கிசைந்து அதில் இந்திரனை வென்றார். பின்னர் இந்திரன் வச்சிரம் வீசினன். அதனைத் தங்காத் திருந்த வளையை யெறிந்து வீழ்த்தி இந்திரன் முடியையும் அறுத்தார். முடியற்ற பாகசாதனன் வலியிழந்து நாணமுற்றுப் பயந்து ஓடிச் சென்றான். புறங்காட்டி யோடிய இந்திரன், "நின்னாட்டிற்கு மழை பெய்விப்பேன். விலங்கை நீக்கி மேகத்தை விடுப்பாயாக" என்று திருமுக மனுப்ப, அதுகேட்ட குமார பாண்டியர் சினங் கொண்டு மாறுபட்டார்.

அப்போது ‡ நாலாங் குலத்தவராகிய வேளாளர்களுள் ஒருவர்பாண்டியனார் முற்சென்று, நான் பிணை யென்று வணங்கினன். குமார பாண்டியனாரும் உயிர்க்கிறுதி வரினும் மெய்காத்துப் பொய்களைந் தொழுகும் நாலாங் குலத்தானான வேளாள சிகாமணியின் மொழியைச் சிவபெருமா

---

* பாகசாதனன்—பாகன் என்னும் அசுரனைக் கொன்றவன்; இந்திரன்.

‡ வேதாகம முதலிய நூல்களின் கருத்தும், சமய சந்தான குரவர்களதும், பெரியபுராணக்காரர் கந்த புராணக்காரர் காஞ்சிப் புராணத்தார் முதலிய தொல்வாசிரியர்களதும் உண்மைக் கருத்தறியார் வேளாளரை மூன்றாங் குலமென் றிடர்ப்படுவர்.

னது ஆத்த மொழிபோற் கொண்டு விலங்கை விடுவித்தனர். மேகங்களெல்லாம் யானைகள்போல் மேலெழுந்து சென்றன. பின்னர் இந்திரன் பயந்து மழை பெய் வித்தான். பாண்டிநாடு மற்றை நாடுகளைப் பார்க்கினும் மிக்க செழிப்புற்றிருந்தது. காராகிய மேகங்களைச் சிறையி னின்றும் நீக்குவித்த வேளாள வமிசத்தார் கார்காத்த வேளாளரெனப்பட்டார்.

பாகசாதன னாகிய இந்திரனது அகங்காரத்தைப் போக்கி யருளினமையாற் குமாரக் கடவுள் பாகசாதன கருவபங்க மூர்த்தி யாயினர். இதனை விருத்தாரி மௌலி பேதக மூர்த்தி யென்று ஆலாஸ்யமான்மியத்துப் பதினெட்டாம் அத்தியாயங் கூறுகின்றது.

ஸ்காந்தபுராணம் - அகத்திய சங்கிதை.

उग्रो विजितवृत्रारिश्चतुरङ्गबलान्वितः ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥ எனவரூஉஞ் சுலோகங்களாலுணர்க.

திருவிளையாடற் புராணம்.

காய்சின மடங்க லன்னான் கைவளை சுழற்றி வல்லே
வீசினன் குலிசந் தன்னை வீழ்த்தது விடுத்தான் சென்னித்
தேசினன் மகுடந் தள்ளிச் சிதைத்தது சிதைத்த லோடுங்
கூசின னஞ்சிப் போனான் குன்றிற கரிந்த வீரன்.

இடுக்கண்வந் துயிர்க்கு மூற்ற மெய்தினும் வாய்மை காத்து
வடுக்களைந் தொழுகு சாலா மரபினா னுரையை யாத்த

னெடுத்துரை மறைபோற் சூழ்ந்து சிறைக்களத் திட்ட யாப்பு
விடுத்தனன் பசுபோல மீண்டன மேகமெல்லாம்.

பாகசாதன கநுவபங்க மூர்த்தயே நம:

அறுபத்து நான்காவது,

சுவர்ணசல தண்டன மூர்த்தி.

இந்திரன் கர்வத்தைப் பங்கப் படுத்திய உக்கிர குமார பாண்டியர் அரசு புரியு நாளிலே, 'முன்னர்ப்போலச் சனி, செவ்வாய், குரு, சூரியன், வெள்ளி, பாம்பு என்னும் ஆறு கோள்களுந் திரிந்து மழையின்றி மாநிலம் வருந்திற்று. தமது குடைக்கீ ழகப்பட்ட வுயிர்கள் யாவும் வருந்திப் பசியால் அலமருதல் கண்ட குமார வர்மனார் ஆலவாயடிகளிடஞ் சென்று குறைகூற அவரும் பேசா திருந்தார். பாண்டியனார் இது காலக்கொடுமை போலும் என்று மீண்டு தங்கோயிலடைந்து துயில, பெருமான் அவர் கனவிற் சென்று சித்தர் போனின்று, மைந்தனே! இப்போது மழையை விரும்பி வருந்தாதே. பூமிக்கு நடுவிடத்துள்ள மேருமலையி னோர்குகையு ளளவிறந்த பொன்னுள்ளன. மேருகிரியின் கருவம் போகுமாறு செண்டாலடித்து, பாறையைத் திறந்து வேண்டிய பொன்னை யெடுத்துக் கொண்டு, அடைத்து நின் முத்திரையும் பொறித்துத் திரும்புதி" யென்றார். குமார பாண்டியர் விழித்து நித்திய கடன்களைச் செய்து, தந்தையாரைப் போற்றிச் சேனைகளுடன் தேரிலேறிப் பலவாத்தியங்கள் முழங்கச் சென்றார். ஆங்காங் குள்ள தம் நாடு கடந்து சோழநாடு சார்ந்து அவனு லுபசரிக்கப் பெற்று, தொண்டை நாடு, வடுக நாடு, கருநாடதேசம், மாளவதேசம், அருஞ்சுரம், விராடதேசம், மத்தியதேயம், காசி என்னும் இவையிற்றை யெல்லாந் தாண்டி,



சவஞசல தண்டனமூர்த்தி.

ஆயிர யோசனை யளவுடைய * குமரி கண்டத்தையும், அதுபோலுள்ள ஏனைய எட்டுக் கண்டங்களையும் உடைய பரதகண்டத்தை யகன்று, இம யத்திற்கு அப்புறத்ததாக வுள்ள கிம்புருட கண்டத்தையும், அரிவருடத் தையுங் கழிந்து கிடதஞ் சார்ந்தனர். அதற்கப்பால் இளாவிருத வருடத் தையுங் கடந்து சம்புநதி சூழ்ந்தோடுங் கானகங் கண்டு இறும்பூதுற்று மேரு மலையின் பக்கல் சென்று மலைத் தெய்வத்தை நோக்கி,

"மலைகளுக்கு அரசே! எந் தந்தை யாரின் றிருக்கா லில்லே! பூமிக்கு ஓர் ஆதாரமே? அளவிலாக் கோள்களும் நட்சத்திரங்களும் தழு விச் சூழ்கின்ற தெய்வத மலையே! தேவர் கோயிலே" யென்றுவிளித் தார். மலைத்தெய்வம் வாராது காலந் தாழ்த்தது கண்டு குமாரபாண்டி யர் அதனைத் தண்டிகக வுன்னிச் செண்டு கொண்டு சிகரத்தில் மண்ட அடித்தார். அடித்தகாலை யசையாத மேரு அசைந்து பந்து போலத் துடித்து, தேவா இருக்கும் மாட சிகரங்கள் யாவும் வெடிப்பற்றுப் பலம ணிகளை யெல்லாஞ் சொரிந்தன. உடனே மலைத்தெய்வம் எட்டுப் புயங் களும் நான்கு தலைகளும், வெள்ளைக் குடையும் உற்ற வடிவத்துடன் வந்து தாழ்ந்து கூறும். "ஐயனே! தேவரீரது தந்தையாகிய சிவபெரு மானைத் தினந்தோறும் இவ்வடிவுடன் சென்று பூசித்து வருவேன். இற் றைத்தினம் ஓர் பெண்ணி னுசையால் அது தவறிற்று. அக்கொடிய பாதகத்தை யெம்பிரான் றண்டித்து நீக்கி யருளினர். அதற்கு அடிய னேன் செயுங் கைம்மாறியாது?" என்று பொன் இருக்கு மிடத்தை யுங் காட்டிற்று. பாண்டியனார் ஆங்குச் சென்று திறந் தெடுத்து, முன் போலடைத்து முத்திரையிட்டு மதுரை நாடடைந்து மழை பெய்யுங் காறும் உயிர்களின் றுன்பங்களை நீக்கிக் காத்தருளினார்.

---

* பாத ராசன் றன் குமாரிக்குக் கொடுத்த கண்ட மாகலாற் குமரி கண்டமெனப் பெயர்பெற்றது. இம் மூர்த்தியி னியல்களை யெல்லாம் ஆலாஸ்ய மகாத்மியம் இருபத் தோராவது அத்தியாயத்திற் பாக்கக் காண்க. ஆங்கது "மேரோ காஞ்சன ஹாணமூர்த்தி" யென இவ்விலீ லையைக் கூறுகிறது.



சகல கலா வல்லப மூர்த்தி.

இங்ஙனம் சுவணுசலம் என்னும் மேருமலையின் கர்வத்தையொழித்துத் தண்டித்தமையாற் சுவணுசல தண்டனமூர்த்தி யாயினர்.

திருவிளையாடற் புராணம்.

அடித்தது மசையா மேரு வசைந்துபொற் பந்துபோலத்
துடித்தது சிகா பந்தி சுரர்பயின் மாடப்பந்தி
வெடித்தன தருண பானு மண்டலம் விண்டு தூளாய்ப்
படித்தலை தெறித்தா லென்னப் பன்மணி யுதிர்ந்த வன்றே.

சுவணுசல தண்டன மூர்த்தயே நம:

அறுபத் தைந்தாவது,

சகல கலா வல்லப மூர்த்தி.

முந்தைக் காலத்தோர்காட் கலைப் புலவர்களுந் தேவர் முனிவர் முதலாயினோருங் கூடியிருந்த சபையிலே வித்வ தாம்பூலங் கொடுக்க நேர்ந்தது. யாவ ரீண்டு முதன்மைப் புலமை யுடையவர்; எவர்க்குக் கொடுக்கலாம்?'' என்னு மாராய்ச்சி தொடங்கிற்று. அதுகாலை யாங்கிருந்தாருண் முதியவளும், "ஓம்! ஓம் லம் நமஸ்தே கணபதயே! த்வமேவ ப்ரத்தியக்ஷம் தத்வமசி!" எனவரூஉ மதர்வண வேதப் பிரதி பாதிதரான விநாயகக் கடவுளைப் பூசித்துப் பெறற்கரும் பேறுற்றவளும், சங்கத் தமிழ் மூன்று மவராற்றரப் பெற்றவளும், சங்கப் புலவர்களை வென்றவளும், பரமாசாரியராகிய சுப்பிரமணியக் கடவுளுடன் கானகத்திற் கலா விநோத சம்பாடணஞ் செய்தவளும், தெய்வப் புலமைகளும், பாண்டிய னவைக்களத்தி னிட்டப்பட்ட * பொற் சங்கிலியைத் தன்னமிர்த வாக்காற்

* இங்ஙன மௌவையா ரறுத்திருக்க விவ்வுண்மை யுணரா வைணவர் சிலர் தம்மாள்வாரு ளொருவ ரறுத்தா ரென்றுரைத்துப் பெரியோரா னெள்ளப்படுவர்.

றுண்டாகச் செய்தவளும், சரச்சுவதியி னம்சமாகத் தோன்றியவளும், அதிகமா னெடுமான் வஞ்சியி னிடம் அமிழ்த முடைத்தாங்கரு நெல்லி யங் கனி பெற்று * நெடுநாளாக வசிப்பவளும் ஔவையாகலான் அவளே யித்தாம்பூலம் வாங்குதற் குரிய ளென்று கொண்டு சென்று "இதனை யேற்றருள்க." என்று பணிந்து நீட்டினர்.

தெய்வப்புலமை படைத்த ஔவைப் பிராட்டி யன்னவரைநோக்கி "அன்புடையீர்! இதுபெறற் குரியவர் யாமல்லேம். புலவர்களாகிய தேவர்கட் கெல்லா மதிபனும், ஐந்திர வியாகரணம் என்னும் அரியவிலக் கணஞ் செய்தவனும், உலகிற்குக் காரணமாகிய மழையைப் பெய்விப்ப வனு மான இந்திரன்பாற் சென்றீமின்" என்றருளினள். அன்னவரதி சயித்துச் சுவர்க்கஞ் சென்று நிகழ்ந்த துரைத்து அவர்க்கு நீட்டினர். இந் திரனார் உண்ணடுங்கி யுரைக்கும். ஐயமீர்! இதுபெறற்கு யான் பிரிய னல்லேன். என்னினுஞ் சிறந்த புலவ ரொருவருளர். அவர் இறைவ னிடம் புலமை பெற்றவராய், சர்வஞானக் கடவாய், உமையை மணந்த ஞான் றுற்றவிடர் களைந்த தவத்திற் கதிதவராய், பிரண வோப தேசம் பெற்றுச் சங்கமும் முதனூலுந் தந்தவராய், பெரிதாய் விளங்கும் மகோ ததியை யுழுந்தளவாக்கி யுண்டு, அண்ட கோளமதைகாறு முயர்ந்து வளர்ந்து மேலுலகர்க் கெல்லாம் பேரிடுக்கண் புரிந்த விந்தமலையை யொரு திருக்கரத்தா னடக்கிப் பாதலம் புகுத்தி, வில்வல வாதாவி யரை யழித்துக் காவிரி நீத்தந் தென்றிசை யுறச்செய்து, குற்றாலநா தரைக் குறுக குறுக வெனக் குழைத்து லிங்க வடிவ மாசகியவராய்

---

* நெடுநாள் வாழ்ந்தவையா னன்றே ஔவை யென்னும் பெயர் போந்த தென்னுமேது வறியாது காலநீட்டங் கண்ட வாங்கில வுணர்வி னர் சிலர் ஔவை யிருவரென்று உரைத்து இடர்ப் படுப. இச்சரிதம் இந்திர னவைக்களஞ் சென்ற ஔவையையவன் "புலவீர்" என்று அழைத்த தெனவும், அதனைக் கேட்ட ஔவையார் தாம் அப்பெயர்க்குரி யேனல்லே னென, ஆங்கிருந்த அகத்தியனார், சரசுவதி முதலாயினோரும் அங்ஙனே கூறின ரெனவு முரைப்பார் சிலர். அது பொருந்தாமை யுணர்க.

விளங்கு மலர்தம் பெருமை புகலற் கரியதே. ஆகலி னவரிடங் கொடு போதி ரென் றேவினன்.

அவர்க ளங்ஙனே தென்றிசைக்க ணுள்ள பொதியமலை நோக்கிச் சென்று குறுமுனிவர் திருவடிகளைப் பணிந் தாங்காங்கு நிகழ்ந்தன கூற வவருரைப்பார். "கல்விப் பேற்றின் பெருமை கண்டீர்! எழுத்தின் கிழத்தி நாமகளாகலானும், திரிபுர வதஞ் செய்தருளுங் காலத் திறைவ னவளுருக் கொண்டு நடத்தருள லானும், அவ்வப் புலவர்க ளுக்கேற்ற மமர்ந் தன்னவர்க்குச் சொல்வன்மை யளித்தலா னுமக ளெனப் பெய ரிருத்த லானும் அவளே கலா வல்லப முடையவள். அவளே யிதனை யேற்றற் கருகமு முடையள். ஆகலினுங்குக் கொண்டு செல் குதிர்" என் றேவினர்.

அவ்வாஞ் ஞையை மறுக்க லாற்றாது அன்னோர் சத்திய லோகஞ் சென்றனர். ஆங்கே வெள்ளைக் கலையுடுத்து வெண்ணிறத்த பணிபூண்டு வெண் பூமாலை புனைந்து வெண் சந்தன மணிந்து விளங்குஞ் சரசுவதி தேவியார் வீற்றிருந் தனர். இவர்கள் அவளை வணங்கி இருக்கு வேதத் திலே கூறப்பட்ட சாஸ்வதி * தசச் சுலோகி யென்னு மரிய மந்திர மாகிய,

[illegible]

---

* இம் மந்திரத்திற்கு இருடி ஆக்வலாயனர். சந்தசு அநுட்டுப் தேவதை ஸ்ரீவாகீச்வரி. யத்வா ஹ்ரீதி பீசம். தேவீங் வாசம் சக்தி. பிரஞ்ஞை தேவீ கீலகம் என்று அறிக. இன்னும் பிரஞ்ஞாதேவீத்திய மந் திரம், ப வமான மந்திரம், மேகா அர்ணேதி மந்திர முதலியனவும் இருக்கு வேதத்திற் சாஸ்வதிரகசிய சாகையிற் கூறப்படுகின்றன.

என்னு மிதனைக் கூறித் துதித்தனர். கலைமகள் கேட்டு யாதுகார ணங்கழறுதி! மென்னலோடு மிவர் உரைப்பார். "இசை மடந்தாய்! வித்வ தாம்பூலங் கொடுக்க வேண்டிக் குறு முனிவர் பாற் போந்த காலை யன்னவர் சகல கலாவல்லியாகிய நின்னிடம் போமாறு ஆஞ்ஞாபித்தனர். ஆகலி னிதனை யேற்றருள்க" வென்று வேண்டினு ராக, ஞான மூர்த்தி யாஞ் சரச்சுவதி யவர்களை நோக்கி யுரைக்கும். "அம்மவோ! யான்தாம் பூலம் வாங்கற்கு உரியளல்லள். நான் கற்றதுங் கல்லாததுமான அளவு களை யறையுங்காற் கற்றதோ கைக்குளடங்கிய மண்ணளவாகும். கல்லா தனவோ உலகளவு இருக்கின்றன. ஆகலாற் பூரண கலாவதியா யிருப்ப வர் திரிபுரா பரமேச்சுவரி யென்பது தேற்றம். அவர் தம்மையே அதர் வண வேதமும்,

ஸர்வ மந்திரா ஸந கதாம் பீடோப பீட தேவதா பரிவ்ருதாம் ஸகல கலாவியாபிநீம் தேவதாம் ஸாமோ தாம் ஸபாரா ஹ்ராம் ஸஹ்ருதயாம் ஸர்ம் ருதாம் ஸகளாம் ஸௌந்த்ரியாம் ஸதோதிதாம் பராம்வித்யாம் ஸ்பஷ்டீ க்ருத்வா ஹ்ருதயே நியாயவிஜ்ஞாய நிலியம் கமயித்வா திரபுராம் பரமாம் மாயாம் ச்ரேஷ்டாம்.

என்றற் றொடக்கத்தவா வுரைக்கின்றது. சிவாகமங்களும் அவ்வம் மையார் தம்மையே வாகீசவரி யெனக் கழறுகின்றது. ஆகலானவரிடஞ் சென்று கொடுக்கவென் றேவினள். அவ்வாறே யன்னோர் திருக்கயிலை மலைசென்று திருநந்தியங் கடவுளின் விடைபெற்று அம்மையார் தம் நாயகரான பரம பதியுடன் றிருவோலக்கங் கொண்டெழுந்தருளி யிருந் துங் கோயில் சென்று வணங்கித் துதிப்பாராயினர்.

"ஸந்நிதாய ஹ்ருதய கமல கர்ணிகாயாம் பராம் பகவதீம் லக்ஷ் மீம்மாயாம் ஸதோதிதாம் மஹாவச்யகரீம் மதநோந் மாதந காரிணீம் தநுர்ப் பாண தாரிணீம் வாக் விச்ரும் பிணீம் சந்திர மண்ட மத்யவ

வர்த்திநீம் சந்த்ரகளாம் சப்தசீம் மஹாகித்யோ பஸ்திதாம் - ஸ்ரீ பீடே பராம் பைரவீம் சித்களாம் மஹா திரபுரா தேவீம் த்யாயே"

எனவருஉம் வேதமந்திரங்களை யெடுத்து வழுத்தியகாலை யம்பிகை யாரென் னென்று வின்வி யருளினர். அவர் நிகழ்ந்தன கூறினர். அவை யிற்றைக் கேட்டருளிய மகாதேவி திருவாய் மலர்ந்தருளும். அன்பீர்! தலைச்சங்கத்தி லிருந்து தமி ழாராய்ந்தமையாலும், தமிழை வளர்த்த புல வன் அகத்தியனுக்குச் செந்தமிழைச் செவியறிவுறுத் தமையானும், கடைச் சங்கத்திலே களவியலின் மெய்யுரையைக் காட்டினமையாலும், பரம குருவாந் தன்றந்தையார்க்குப் பிரணவாருத்த மொழிந்து சிவகுரு வாய் விளங்களானும், நக்கீரன் முதலிய அடியவ ரறையுந் தமிழ்மாலை கேட்டு அவர்க் கருள் புரிதலாலும், பராசர குமரர்கள், நந்தி முதலாயி னோர்க்கு ஞானோபதேசம் புரிதலானும், செந்தமிழ் மொழிக்குச் சிறப்பா யுள்ள அகப்பொருளிற் களவியல் கற்பிய லென்னு மிரண்டனுட் களவிய லொழுக்கை மடவரல் வள்ளியாலும், கற்பியல் என்னும் ஒழுக்கத்தைத் தேவ குஞ்சரியானும் நிறுத்து உணர்த்தினமையாலும், சர்வகலாஞான சத்தியென்னும் வேலாயுதத்தை தரித்து ஞானசத்திதரன், ஞான சத்தி யான்மா வென விளங்கலானும், அருணகிரியின் புகழ்கொண் டருளியத னானும், வேதப் புலவனென விளம்பிய விரிஞ்சனைச் சிறை யிட்டமை யானும் இன்னும் பல வேதுக்களானும் நங்குமாரன் சுப்பிரமணியனே சகல வல்லபனுவான். அவனிடஞ் சென்மினென் றேவி யருளினர்!

அவ்வாறே யவர்க ளிறுதியிற் கந்தலோகஞ் சார்ந்து பரமகருணாநிதி யாகிய சுப்பிரமணியக் கடவுளைத் துதித்துப் பன்முறை வணங்கி நின்ற னர். வந்த காரண மியாது என்று வினவியருளினா கந்தவேள். இவர்க டாம்வந்த காரணத்தை விண்ணப்பித்து நின்றனர். சகலகலா வல்லப மூர்த்தியாகிய குமாரக்கடவுள் புன்னகைபுரிந்து ஏற்றுக் கொண்டேம்

என்று திருவாய் மலர்ந்தருள வீரவாகுதேவர் வந்து அதனையெடுத்தனர். அதனை லெவர்களுங் குமாரக்கடவுளின் மகிமைகளைப் பாராட்டி யானந்தக் கூத்தாடினர். இதனாற் குகக் கடவுளார் சகலகலா வல்லப மூர்த்தி யாயினர்.

தனிப் பாடல்.

* புலவீரென் றனையழைத்தீர் புரந்தரனே யெனவவனும் பொதிகை வெற்பி, லிலகியகோ முனிபுலவ னென்றலுமே யவனுங் கேட் டிரங்கி நின்று, கலைமகளாம் புலத்தியெனக் கலைமகளுங் கருத்தழிந்து கௌரி யென்ன, மலையரசன் மகள்புதல்வன் சரவண வேள்புலவனென வருத்தா னன்றே.

இவ்வாறச் சபையினர்தாங் கேட்டினனி விம்மிதமுற் றியம்பொருகை, தவ்வாரு மொளிவடிவிற் கந்தபுரஞ் சென்றிறையைத் துதித்து நிற்ப, வவ்வாறுங் குணர்ந்தருளிப் புன்னகைபூத் திவ்வரிசை யழகிற் கொண்டேந், தவ்வாத குணத்திறனுஞ் சகலகலா வல்லபனுஞ் சாமி தானே.

சகல கலா வல்லப மூர்த்தயே நம:

---

* புலவீரென் றெனை யழைத்தீர் புரந்தரனே யானல்ல பொதிகை வெற்பி – லிலகிய கோ முனியென்றுங் கும்பமுனி வனுமெழுத்தே வெலியே னல்லேன் – கலை மகளாம். புலவியெனக் கலைமகளும் யானல்ல கழறக் கேண்மின் – மலை யரையன் மகள்சுதனுஞ் சரவணவேள் புலவனென வாழ்த்த லாமே" எனச் சிலர் பாடங் கொள்ளர். அது பொருந் தாது.

அறுபத்தாறாவது,

அபிடேக குமார மூர்த்தி.

பரத கண்டத்தி லுள்ள குகதலங்க ளெல்லாவற்றினும் மேலா னவை பதினெட்டுத் தலங்களாகும். அவை யாவன—இந்திரநீலம், கன கலம், பொதியமலை, பழநிமலை (திருவாவினன்குடி) சுவாமிமலை (திரு வேரகம்) விசாகபட்டினம் (விசாகபவனம்) திருப்பரங் குன்றம், குமார தாரை, சந்தனாசலம் (திருச்செந்தூர்) தண்டக வனம், கதிர்காமம், சையச் சித்தம், திரி கூடாசலம், குமாரவனம், சிங்கிபேரி பட்டினம், விருத்தா சலம், முகாம்புரி, துங்க பத்திரோத்தரம் என்பனவாம். இவற்றுள்ளே இந்திர நீலம் என்னுந் தலத்தில் வீற்றிருக் கின்றவரே அபிடேக குமார மூர்த்தி யெனப்படுவர். அதன் வரலாறுவது:—

முகிற் கூட்டங்கள் வந்து படிகின்ற இமயமலையின் பக்கத்திலே பலவளங்களை யுடைத்தாய், மும்மூர்த்திகளுங் காவல் கொண்டு இருக்கும் இந்திர நீலம் என்னும் பெரிய நகரம் ஒன்றுளது. அதன்கண் விட்டுணு பிரமன் இந்திரன் முதலிய தேவர்க ளெல்லாம் ஒன்று சேர்ந்து, ஆகாய கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்க ளெல்லாவற்றானும் அபிடேகஞ் செய்து, மணிமுடி சூட்டிப் பூமாரி பொழிந்து, வேத மங்கள வாழ்த்துக் களைக் கூறிக் குமாரக் கடவுளைப் பூசிக்க, பெருமான் கருணை கூர்ந்து, "தேவிர்காள் நுமக்கு என்வேண்டு" மென்றார். விட்டுணு முதலி னோர், "ஐயனே! தேவரீர் எங்க ளெல்லவர்க்குந் தலைவராய், என்றுமான் றும் இவ்வாறுய அபிடேகத்தை யியற்ற அதனை யேற்றுக் கொண்டு எங் கட்கு வருந்துன்பங்களை யெல்லாம் நீக்கி யருள வேண்டு" மென்று பிரார்த்தித்தனர். அவ்வாறே வேண்டும் வரங்களை யெல்லாங் கொடுத்து, அன்றுமுதல் அபிடேக குமார மூர்த்தி யென்னுந் திருநாமங்கொண்டு வீற்றிருக் கின்றனர்.



அபிடேககுமாரமூர்த்தி.

திருச்செந்தூர்ப் புராணம்.

எழுமுகிற் படலை தூங்கு மிமயமால் வரையின் பாங்க
ரழகினுக் கழகு நோக்கு மாடியின் சிறப்பு வாய்ந்துச்
செழுமைபெற் றுயர்ந்த ஞானச் செய்யவிந் திரநீ லப்போர்
தழுவிமுத் தேவர்காக்குந் தகையபட் டினமொன் றுண்டால்

அந்தமா நகரிற் றேவர் யாவருந் திரண்டன் பாக
முந்துமோர் தேவர் சேனா பதியென முருக வேட்குச்
சிந்தையார் வத்தி னோடுந் திருமணி மவுலி சூட்டிச்
சந்தநான் மறையின் வாழ்த்தித் தண்மலர் மாரி தூற்றி.

அன்றுதொட் டின்று காறு மாரரு ளபிடே கப்பே
ரொன்றிய குமர னென்ன வும்பர்கள் வணங்கி யேத்த
வென்றிவே லண்ணல் போற்றி வேண்டுநர் வேண்டியாங்கே
நன்றருள் புரிந்து வேத நவிற்றலிற் றிருந்தான் மாதோ.

அபிடேக குமார மூர்த்தயே நம:

அறுபத்தேழாவது,

சீடாதிப மூர்த்தி.

கங்கா நதிக்கரையி னுள்ள கனகலம் என்னுந் தலத்திலே அழகு விளங்க விருக்குங் கோயி லொன்றுண்டு. ஆங்கே வித்தியா விலாசமண்டபம் எனப் பெயரிய ஒரு பட்டி மண்டபம் விளங்கும். அதன்கண் குமாரக் கடவுள் ஆயிரகோடி சூரியப் பிரகாசம் போன்ற நவமணி யிழைத்த சிங்க வாசனத்தின்கண், ஒரு திருக்கரத்திலே விநாயகக் கடவுளின் கொம்பாகிய எழுத்தாணியும், ஒரு திருக்கரத்திலே வேத்திரப் படையும் ஒரு திருக்கரத்தில் வேதமுதலிய உண்மை நூல்களுந் தரித்து, மற்றொரு



பீடாதிபமூர்த்தி.

காத்தை மார்பில் வைத்தருளிய திருக்கோலத்துடன் வீற்றிருந்து, வேதம், உபநிடதம், சிவாகமச் சித்தாந்தம், மிருதி, புராணம், இதிகாசம், தருக்க முதலாகிய வடமொழி தென் மொழிகளை யெல்லாஞ் சகல லோகத்து முள்ள தேவர் முனிவர் முதலாயினோர்க் குணர்த்தி யருள்வர்.

அங்கே விட்டுணு, பிரமன், இந்திரன் என்பாரும், தேவர், அசுரர், கருடர், கின்னரர், கிம்புருடர், இயக்கர், விஞ்சையர், இராக்கதர், கந்தருவர், சித்தர், சாரணர், பூதர், பைசாசர், தாரகாகணம், ஆகாய வாசிகள், நாகர், போகபூமியர், தைத்தியர் என்னும் பதினெண் வகைப்பட்ட கணத்தவருட் பேரறிவும் பக்குவமும் வாய்ந்தவரும், அகத்தியர்,வசிட்டர், மார்க்கண்டேயர், அத்திரி, பிருகு, அங்கிரா, விசுவாமித்திரர், நாரதர், பிப்பிலாதர், புசுண்டர், சனகர், சனந்தனர், சனந்தனர், சனற்குமாரர், சுதீக்கணர், கபிலர், ததீசி, துருவாசர், தத்தாத் திரேயர், வாமதேவர், கண்ணுவர், சதானந்தர், சாதாதபர், சிகண்டி, தௌமியர், கணாதர், கௌதமர், சுகர், பாரத்துவாசர் முதலாய இருஷி மாணவரும், சுவாயம புவர், பிரசாபதி, உசன், பிருகற்பதி, ஆதபன், மிருத்தியு, இந்திரன், வசிட்டன், சாரச்சுதன், திரிதாமன், விடபன், தருமன், தரக்கு, திரியாருணி, தனஞ்சயன், கேமகன், உருதஞ்சயன், பரத்துவாசன், கோதமன், வாச்சுவான், சூட்டுமாயணன், திரணவிந்து வான்மீகி, சத்தி, பராசரன், சாது கன்னன், கிருஷ்ணத்துவை பாயனன் (திருமால்) என்னும் இவர்கள் ஒவ்வோர் துவாபர யுகங்கடோறும் வேத வியாசராகப் பிறத்தலால் இது காறும் பிறந்த இருபத்தேழு வியாச மாணாக்கர்களும், அசுரர் குருவும் தேவகுருவுமாகிய சுக்கிரன், வியாழபகவான் என்னும் குருமாணவரும் சூழ்ந்து பாடங்கேட்டு முறையின் இருந்து பயிலப் போதிப்பர். வியாதர்களின் மாணாக்கர்கள் ஆகிய,

சாதன், தமனன், சுகோத்திரன், கங்கணன், உலோகாகியோகி, சதக்கிரது, சைகிடன், ததிவாகன், விடபன், பிருகு, உக்கிரதபன், அத்

திரி, வாலி, கோதமன், வேதசிரிடபன், கோகன்னன், குகன், சிகண்டி, சடாமன், அட்டகாசன், தாருகன், இலாங்கலி, சுவேதன், சூலி, திண்டா முண்டி, சயிட்டுணு, சோமதர்மன் இலகுலீசன் என்பவருஞ்சூழ்ந்திருந்து பாடங்கேட்பர். இவர்க்குற்ற ஐய விபரீத மயக்கங்களை யெல்லாம் நீக்கித் தத்துவ ஞானத்தை யுணர்த்தி யருளலானும், இம்மாணவர்க் கெல்லாந் தலைமைபெற்ற ஆசிரியராகலானும் சீடாதிப மூர்த்தியெனப் பெயர்பெற் றனர். இதனையே சிஷ்யேச மூர்த்தி, பிரதமாசிரிய மூர்த்தி யெனக் கூறும் வராகமா புராணம்.

வராக புராணம். (மொழிபெயர்ப்பு.)

வானதிக் கரையின் மஞ்சு வருங்கன கலத்துப் பட்டி
யானமண் டபத்துக் கோடி யருணரோன் றிணைதன் மானக்
கோனெழுத் தாணி வேதங் கொளுஞ்சிவா கமங்க ளாதி
மேனகன் முறைக டாரித் தமர்ந்தவேத் திரமுந் தாங்கி.

குரவனிற் பொலிந்து மார்பிற் குருமல ரத்தஞ் சாத்திப்
பரவிய முனிவர் தேவர் பலமறை வியாதர் தாலர்
திரகலை யமிர்த முண்ணச் சீடரா யவர்பி றங்கச்
சரவண பவனுஞ் சீடத் தலைவனு யிருந்தான் மன்னோ.

சீடாதிப மூர்த்தயே நம:

அறுபத்தெட்டாவது,

குமாரப் பிரமசாரி மூர்த்தி.

இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ் என்னும் முத்தமிழ்த் திவ்விய மணஞ் சிறுதென்றற் காற்றுட னளாவி வீசும் பொதிய



குமாரப்பிரமசாரி மூர்த்தி.

மலைக்கு மேற்கே யுள்ளதும், முத்தியைக் கொடுப்பதும் ஆகிய அந்தரங்க தானத்திலே, குமார தாரையின் பக்கத்தில் உள்ள கலைப் பிரகாச தல மொன் றுண்டு. ஆங்கே ஆதிசைவப் பிராமணர்க ணிறைந்து வேதாதி கலைகளை யத்தியயனஞ் செய் திருப்பர். அங்கண் பிரமசாரி வடிவங் கொண்டு சென்று, காமிகாதி சிவாகமங்கள் இருபத் தெட்டையும், அவற்றின் பிரிவுகளையும், அக்கினிரீதி, மாநஸ்தோகே, திரியாயுஷம், சிந்தாமணி காலாந்தகம், உருத்திரம், மாதிருகை, மௌனமந்திரம், பஞ்சாக்கர வகை என்னும் மந்திரங்களையும், ஸ்நான விதி, அருச்சனை விதி, தீக்ஷா விதி, நவ நைவேத்திய விதி, அருச்சனாங்க விதி, சண்டலக்கணம், அக்கினி காரியம், காலவிதி, நிமித்த பரீக்கை, பூமி பரீக்கை, பிரவேச பலி, கிராமாதி இலக்கணம், சங்குத் தாபனம், மானோப கரணக் கிரமம், பதவிந்நியாசம், சூத்திர மர்மம், வாத்துதேவபலி, ஆயாம வித்தார விதி, ஆயாதி நிரூபணம், நட்சத்திர சகர விதி, தண்டாதி விதிந்நியாசம், துவாராதிப் பிரமாணம், தெய்வத் தாபநம், துவிச சங்கியாவிதி, பிரம தேவ பதாதி, அங்கத்தான நிர்ணயம், கர்ப்ப நியாசம், பாலத்தாபனம், கிரகவிநியாசம், வாத்து சாந்தி, சாலா லக்கணம், நந்தியா வர்த்த லக்கணம், ஏகதுவிசாலா லக்கணங்கள், சர்வதோ பத்திரம், தண்டமாலிகா லக்கணம், பீட கண்டாதி விதி, சிகரம், தூபிநாளம், மூர்த்தாட்டக விதானம், இலிங்கம் என்பவற்றின் இலக்கணம், அங்குரார்ப்பணம், சிவலிங்கப் பிரதிட்டை, பிரதிமாலக்கணம், சூலம் தெய்வம் இடபம் கோபுரம் பரிவாரம் விமானம் பீடம் என்னுமிவற்றின் தாபன விதி, துவார பூசை, சகளார்ச்சனம், நபனம், நித்திய மகோற்சவ விதிகள், அபிடேக விதி, பல பூசை, அந்தியேட்டி, பிதிர்யஞ்ஞம், பிராயச் சித்தம், சிவசிராத்தம், சம்புரோக்கணம், தான லக்கணம், விக்கினே சாதி தாபனம், க்ஷேத்திர கந்த சிவாத்திர கிருத கம்பள பற்குந பூசைகள் முதலாய விதிகளை யெல்லாம் மந்திர பாவன கிரியா சகிதம் உணர்த்தி யருளா நிற்பர்.

இங்ஙனம் பிரமசாரி வடிவங்கொண் டிணைர்த்துங் குமார ராகவின் குழக ஞர் குமாரப் பிரமசாரி மூர்த்தி ஆகி விளங்கினர் என்க.

திருச்செந்தூர்ப்புராணம்.

மலயத்தின் மேல்பான் முத்தி வழங்குமந் தாங்க மான
நிலயத்திற் குமார தாரை நீணதிக் கரையின் பாங்கர்க்
கலைமுற்று முணர்ந்த வேத வாரிடர் கண்ணே யாகித்
தலைமைத்தன் வேத பாடந் தணப்பிலா தவர்கள் கூட.

இருந்துருச் சொல்லிக் கொண்டி யாவர்க்கு மிறைவ ளுகிக்
கருந்தட நெடுங்கட் செவ்வாய்க் கௌரிவார் முலைப்பான் ஞானத்
தருந்திவெஞ் சமணை மாய்த்த வாறுமா முகங்கொண் டுற்ற
பெருந்தகை யாங்கு மாரப் பிரமசா ரிப்பேர் பெற்முன்.

குமாரப் பிரமசாரி மூர்த்தயே நம:

அறுபத்தொன்பதாவது,

வல்லி கல்யாண மூர்த்தி.

இம் மூர்த்தம் சோடச மூர்த்தனங்களுள் ஒன்முய வல்லி கல்யாண திவ்விய மூர்த்தம் போன்றது. அதன் வரலாருவது—சுப்பிரமணியக் கடவுள் வள்ளி யம்மையாரைத் திருமணஞ் செய்தருளியது கேட்ட பிர மன் முதலிய தேவர்கள் விட்டுணு விடஞ்சென்று "கமல நாயனே! உனது திருமருகராகிய சுப்பிரமணியப் பெருமான் நினது கண்ணி னின் றும் உதித்த புத்திரிகளுட் சுந்தர வல்லியார் மான் வயிற்றிற் ரேன்றி வள்ளி யெனத் திருநாமங் கொண்டு வளராநிற்கக் களவிற் கொணர்ந்து பின்னர் வேடர் இரக்க, அவரூரிற் சென்று திருமணஞ் செய்தருளினர். அப்போது யாம் சிவ பெருமான் உடன் விண்ணின்று கண்டேம் அன்றி நேரிற் றரிசித்து ஆனந்த முற்றே மல்லேம். தெய்வயானை யம்மையார்க்



வல்லிகல்யாண மூர்த்தி.

குத் திருப் பரங் கிரியில் மன்றல் செய்வித்து ஆனந்தித்ததுபோல இத னையும் யாஞ்செய்து தரிசித் தின்புறுதல் வேண்டு'' மென்று விந்த மலை யிற் சென்று தவஞ் செய்தார்.

குமாரக் கடவுள் தோன்றி "நும் மெண்ணப்படி யாகுக" என்று திருவாய் மலர்ந் தருளினர். தேவர்கள் உடனே அம்மகாமலையின் பக் கத்தே யுள்ள இடத்திலே சிறந்த கோயி லொன்று தெய்வத் தச்சனுற் புனைவித்து, திருமண மண்டபம் வகுப்பித்து விட்டுணு முதலிய தேவர் களும், இலக்குமி சரசுவதி முதலிய தேவப் பெண்களும் நிறைந்து அலங்காரஞ் செய்தனர். அவை முடிந்தவுடன் குமாரப் பெருமானும் வள்ளி நாயகியாருந் தோன்றியருள,

சிந்தா மணியே தெய்வத் தருவே
கொந்தார் தருவிற் குலவுங் கொடியே
யந்தா மரைசங் கெனுமா நிதியே
நந்தா வொளியே நறையே யமுதே.

மாவின் குயிலே மருதின் கிளியே
காவின் மயிலே கானப் புறவே
பூவின் னனமே புறவின் பிணையென்
றேவின் விழியா ரினிதேத் தினரால்.

என்று இலக்குமி தேவி முதலாயினோர் துதிக்க, திருமால் முதலா யினோரும் வேத மந்திரங்களாற் றுதித்து வேண்ட, மணச் சாலையுட் பெருமானும் பெருமாட்டியாரும் புகுந்தருளினர். தேவமகளிருந் தேவர் களுந் திருமணக் கோலத்தைச் செய்ய, வள்ளியம்மை யாரும் கந்தக் கட வுளுந் திருமணக் கோலங் கொண்டு வீற்றிருந்தனர். அதுபோது குமா ரக் கடவுள், ஆணவ விருட் டொகுதியை யழிக்கும் வலத் திருக் கரங்கள் இரண்டும் முறையே அபயமாகவும், உருத்திராக்க மாலையை யேந்தியதா

கவும், இடத் திருக்கரங்களுள் ஒன்று இரத்தின கும்பத்தை யேந்தாநிற்கவும், மற்றொன்று அரையினிடத்தே பொருந்தவும், தெய்வத் திருவெலாஞ் சேர்ந்து திரண்டாற்போலும் வள்ளியம்மையார் வலப்பாகத்தில் விளங்காநிற்கவும், சர்வ அலங்கார முடையராய், மாமகுடிய திருமால் "மகட் கொடுத்தேன்; ஏற்றருள்க" வென்று கரக நீர் விடுப்ப, திருக்குறு முறுவல் பூப்ப விளங்கி யிருந்து திருமணக் காட்சி கொடுத்தார். யாவருந் தரிசித்து ஆனந்தக் கடலி லமிழ்ந்தி நின்றார். விசாகப் பெருமான் விரும்பித் திருமணக் காட்சி வழங்கி யமர்தலால் அவ்விடத்திற்கு விசாகபவனம் என்று பெயர். அது இப்போது விசாகபட்டினம் என வழங்கப் படுகின்றது. வல்லி யாகிய வள்ளியம்மையாருடன் மணக்கோலங் கொண்ட அழகராயிருந்தமையால் வல்லி கல்யாண மூர்த்தி யெனப்பெயருற்றார்.

குமார தந்த்ரம்.

வல்லி கல்யாண ஸ்வாமி !! ஹஸ்த த்யந்த்வேக்ஷ மாலா மபய மபிப்ருதம் குண்டிகாம் ச்ரோணி பத்தம் சவ்யே வாமே நிஷண்ணே மசாவத்ருத விதிசச்ருய மானே யுக்தம் ! சர்வாலங்கார யுக்தம் ஜல கமலத்ருதா விஷ்ணுநா சாருரூபம் வல்லீ கல்யாண மூர்த்திம் சகல சுரகணைஸ் ஸ்துய மானம் ப்ரபத்யே !!

தணிகைப் புராணம் - அகத்தியனருள்பெறு படலம்.

அல்யாப் பவிழ்க்கும் வலக்கரங்க ளபய மக்க வடந்தாங்க
வெல்யாப் புறுத்த மணிக்கடமுங் கடியு மிடக்கைத் தவஞ்சேரச்
சொல்யா ழனைய வள்ளிவலந் துன்ன மணிநீ ரரிவார்க்கக்
கல்யாணத்தி னெழில்வாய்ந்த கடவுளுருவங் காண்போரும்.

வல்லி கல்யாண மூர்த்தயே நம:

எழுபதாவது,

நடன நாத மூர்த்தி.

சூரிய குலத்திலே தோன்றிய அரசர்களுட் புருகுச்சன் என்னும் அரசனுக்குத் திரசதசியு என்னு மகன் பிறந்தான். அவனுக்கு அநாரணியன் என்பவன் தோன்றினன். அவன் மகன் பிரடதசுவன்! அவன் குமாரன் அரிய சுவன். அவன் புதல்வன் அத்தன். அவன்சுதன் வசுமனசு. அவன் புத்திரன் திரிதன்வா, அவன் றோன்றல் திரயாருணி, அவனுக்குச் சத்திய விரதன் என்னும் * திரிசங்கு உதித்தான். அவனுக்குச் சுத்தியவதி யென்னும் மனைவியிடத்திலே சத்தியம் என்னும்பெருந் தவத்தை நிலைநாட்டிய அரிச்சந்திரன் றோன்றினன். அவன் குமாரன் லோகிதாச்சுவன், அவனுக்கு அரிதனும், அவ்வரிதற்குத் துந்தனும், அவனுக்கு விசயனுந் தோன்றினர் அவ்விசயன் புத்திர ரில்லாமையால் அரிய தவத்தைச்செய்து காருகன் எனவழங்குஞ் சித்திரசேனனைப் பெற்றான். அவன் றன் தந்தையான விசயன் வானுலகேற, சிலகாலம் மணிமுடி தரித்து உலகமெல்லாம் ஒருகுடைக்கீ ழாண்டு, பின்னர்த் துறவு கொண்டு ஒப்பற்ற சுகுமார சிகாசலம் எனும் ஞான கிரியிலே தவஞ்செய்தான்.

குமாரக்கடவுள் தோன்றி, அரசனே அநேக வருடமாகக் கடுந் தவஞ் செய்தற்குக் காரண மென்னை யென வினவி யருளினர். சித்திர சேனன் தாய் கண்ட குழவி போலவும், கார்கண்ட மஞ்ஞை போலவும், கதிரைக் கண்ட கமலம் போலவும், உள்ளமும் முகமும் மலர்ந்து, அன்பு பொங்கி வழிந்தாற் போலக் கண்களி னின்றும் ஆனந்த வருவி சொரிய, உரோமஞ் சிலிர்ப்ப, நாக்குழற உரை தடு

---

* மூன்று குற்றஞ் செய்த காலத்திலே, அக்குற்றத்திற்குப் பரிகாரமாக வசிட்ட முனிவராலே மூன்று முளை யடிக்கப் பட்டமையாற்சத்திய விரதன் திரிசங்கு எனப்பெயர் பெற்றான். திரி=மூன்று. சங்கு=முளை.

கடணநாத மூர்த்தி.

மிற, வீழ்ந்து வீழ்ந்து வணங்கி வேதப் பொருள்களை யெடுத்துத் துதிப் பானாயினான்.

மாமணிச் செவ்வேற் சேய்நின் வாசச் சரோருகச்செந்
தேமலர்ப் பொற்றாள் வணங்காச் சென்னியுஞ் சென்னியோ
தூமறைத் தொல்லோ னுதற்கட் டோன்றமுந்தன் சோதியுருக்
காமரெழில் காணாப்புன் கண்களுங் கண்களோ.

'அண்டர் சேனாதிபநின் சீர்பாடி யாரணமுந்
தண்டமிழு நுவலாத' நாவுவுந் நாவுவோ
பண்டை மறைதொடாப் பண்ணவரின் பாதமலர்
கண்டுசிர முகிழாத கைகளுங் கைகளோ.

பைங்கண் மயிலோய்நிற் பாசநா வாய்குவிப்ப
வங்கை யெழில் காணக்க ணாயிர மாயிரமா
யுங்குவைபெற் றோரிருப்ப வோர்வாயு மிவ்விரண்டு
செங்கையுங் கனும்படைத்தோர் செல்வமுஞ் செல்வமோ.

என்றிவ்வாறு வழுத்த, குகப் பெருமான் "அரசனே! நீ விரும்பிய தென்" னென்று கேட்ப, வேந்தன் விளம்புவான். "தேவ சேனாபதியே! தேவரீர்து தந்தையார் மதுரை மாநகரத்திலே செய்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களையும் அடியேன் றரிசித்து மகிழ்வடையக் காட்டி யருள வேண்டு" மென்றான். அவ்வாறே செவ்வேற் பெருமான் கந்த புராணத்திலே அகத்திய சங்கிதையின் பகுதியான ஆலாஸ்ய மகாத்மியத்திலே யுரைக்கப்பட்ட வொவ்வோர் திருவிளையாடலையுங் காட்டியருளித் திருப்பரங் குன்றத்திற்கு எழுந்தருளினர். அறுபத்து நான்கு திருவிளை யாடலையும் நடித்துக் காட்டி யருளினமையால் நடன நாத மூர்த்தி யாயினர்.

திருச்செந்தூர்ப் புராணம்.

கூறரு மறுபா னன்காங் கோலத்தின் செய்கை யெல்லாம்
வேறுவே றுகக் கந்த வேடிரு நடனங் காட்டி

பூறதே னருவிகால வுயர்ந்தவான் பரங்குன் றத்தி
னேறுசீர் நடனநாத னெனவொரு பெயர்பெற் றுளல்.

நடன நாத மூர்த்தயே நம :

எழுபத்தோராவது,

பராசர குமாரோப தேச மூர்த்தி.

"பிந்து ரூபம் மஹா தேவம் வ்யோ மாகாரம் சதாசிவ:! சுத்த ஸ்படிக சங்காசம் பாலேந்து க்ருத சேகரம்! பஞ்சவக் திரதாம் சௌம்யம் தசபாகுந் த்ரிலோசகம்! சர்வாயுத த்யோத காம் சர்வ பூஷண பூஷிதம்! உமார்த்த தேகம் வரதம் சர்வ காரண காரணம்! சிந்தயந் சித்த விந்யஸ்த: முகூர்த்த மபிதாரயேத்! எனச் சிகரிணி மாலை யுடையா ருரைத்தாங்குப் பரமேசுரனை எல்லா முகூர்த்தங்கடோறுந் தியானிப்பவரும், "சர்வாங் கோத் தூளநம் யத்தத் விரதம் ப்ரோக்தம் மநீஷிபி: ! ஏதத்வேத சிரோநிஷ்டா: ப்ராகு: பாசுபதம் முநே" எனச் சூதசங்கிதை ஞான யோக கண்டத்துப் பதினைன்காம் அத்தியாயத்தும், "தமைசுவரம் ஞாநம் ஸ்வசாகாவிசித வ்ரதம்! அசேஷம் வேத ஸாரந் ததபசு பாச விமோசநம்! எனக் கூர்ம புராணம் பூருவ காண்டத்துப் பதினைன்காம் அத்தியாயத்தும், "அயமத் யாச்ரமோ தர்மோ யைஸ் ஸமா சரிதஸ்ததா! தேஷா மேவபரம் ஞாநம் சம்சாரச் சேத காரணம்!" எனப் பிரமோத்தர காண்டத்தும், "வ்ரதம் பாசுபதம் ச்ரௌத மதர்வ சிரசி ச்ருதம்" என வாயு சங்கிதையினும் கூறப்பட்டதாகி, விபூதி விரதம், சிரோவிரதம் அத்தியாச்சிரமம், விரதம், சாம்பவம், ஐசுவரமென்னும் பெயர்களை யுடைய மகாபாசுபத விரதத்தை யநுட்டிக்கின்ற வருமானம் பாராசரமுனிவர் ஒருவருளர்.

பராசரகுமாரோபதேசமூர்த்தி.

அவர் தவப்பேறு காரணமாக ஆறு குமாரர்கள் தோன்றினர், அவர்கள் பெயர்க ளாவன – தத்தன், அனந்தன், நந்தி, சதுர்முகன், சக்கர பாணி, மாலி யென்பனவாம். அவ்வறு குமாரர்களும் இளமைப் பருவத் திலே நாணற் புற்க ணிறைந்த சரவண வாவியின்கட் சென்று நீராடப் போயினர். விளையாட்டின் பொருட்டு ஆங்குள்ள மீன்கள் சிலவற்றைப் பிடித்து வாயிற் கயிற்றைக் கோத்து வேடிக்கையாகக் காலங் கழித்தார். தந்தையாரான பாராசர முனிவர் மைந்தர்கள் வாராமை கண்டு சரவண வாவிக்குச் சென்றார். ஆங்கே மீன்பிடித்து விளையாடுவதைக் கண்டு "நடு நடுங்கி ஆ! ஆ!! கெட்டே" மென்று மனநொந்து மிக்க கோபமுடைய ராய்ப் புதல்வர்களை நோக்கி, "பிள்ளைகாள்! நம்மரபிற் கேலாத வில்விட யத்தைச் செய்தீர். எல்லாப் பாதகங்களினுங் கொலை அதிபாதக மெனக் கூறப்படுகின்றதே.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌮𑌹𑌿𑌂𑌸𑌾 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌂 𑌚 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌯𑌤𑍋
𑌨 𑌹𑍇 𑌰𑌕𑍍𑌷𑌤𑍋 𑌹𑍇 𑌰𑌕𑍍𑌷𑌤𑍋 𑌹𑍇 𑌰𑌕𑍍𑌷𑌤 ।

ப்ரஹ்ம சர்ய மஹிம்சா பரிக்ரஹம்ச சத்யம்ச யதோந ஹே, ரக்ஷதோ ஹே ரக்ஷத! என கூடாருணிகோப நிடத மாகிய வேதசிரசு முழங்குவதை யறிகிலீர் போலும். நீவிர் மதிகெட் டுண்டு மற்சங்கட்குத் துன்பஞ் செய் தமையால் நெடுநாள் இப் பொய்கைக் கண்மற்சங்க ளாதிர்'! என்று சாப மிட்டார். புத்திரர்கள் "பகவானே! தெரியா திழைத்தேம். தேவரீ ரிட்ட விச்சாபம் நீங்கு மெல்லையும் உரைத்தருளுதல் வேண்டு மென்று கேட்டனர். "சர்வேசனான குகக்கடவுள் திருவவதாரம் புரிவார். அவரை யெடுத் தணைத்தற்காக இறைவனு மிறைவியும் எழுந் தருளுவர். உலக மாதாவாகிய பரமே சுவரியார் போதானந்த வடிவமாகிய தமது திரு முலைப்பாலைப் பொற்கிண்ணத்திற் கறந்து குகக்கடவுட்கு ஊட்டுவர். அதுபோது சுரந்து வடிந்த பால் இத்தடத்திற் கலப்ப வதனையுண்டு

பழைய வடிவங்கொண்டு அவர் திருவருளை யடைவீரென்று கூறிப்போனார். இவ்வறுவரும் மீன்வடிவெடுத்து அத் தடாகத்தில் விளையாடி நின்றார். அதனாற் பராசர முனிவர் புத்திர சோகங்கொண்டு நல்ல புத்திரரைப் பெறப் பன்னெடுங் காலந் தவமுஞற்றி நல்லவோரை வந்ததை நாடிப் போம்போது பரிமள கந்தி யெதிர்ப்பட அவளை யாற்றிடைக் குறையிற் கலந்து கிருட்டிணத் துவைபாயனர் என்னும் வியாத முனியைப் பெற்றார்.

இவண் மீனுருவாய புத்திரர்கள் இறைவி பகவனுக்குப் பாலூட்டும்போது மிக்கு வழிந்த பாலையுண்டு மீன்வடிவ நீங்கித் தொன்மையமுனி வடிவம் பெற்று இறைவனையு மிறைவியையும் வணங்கி நின்றார். மகாதேவர் ஆன சிவபெருமான் "முனி குமாரர்காள்! நீவிர் பர பருப்பதம் (திருப் பரங் குன்றம்) சென்று ஆங்கிருந்து நங்குமரனி னனுக்கிரகம் பெறுங்காறுந் தவம்புரிதிர். அவன் வந்த காலை யாதரவுடன் சேர்ந்து மேன்மை பெறுமின்" என்றருளினர். அங்ஙனம் அவர்கள் குமார சுவாமியின் ஆறு படைவீட்டுத் தலங்களு ளொன்றாய், அரிச்சந்திரன், நக்கீரர், சிபிச்சக்கிரவர்த்தி முதலியோராற் பூசிக்கப்பட்டதாய், மதுரைத் தலத்திற்கு மேற்பால் விளங்குந் திருப்பரங் குன்றிற் சேர்ந்து தவஞ்செய்தனர். சுப்பிரமணியக் கடவுள் சூரபன்மன் முதலாய அசுரர்களைக்கொன்று கின்னர கானத்தில் வேட்கை யுற்றாய்த திருப்பரங் குன்றத்திற் சேர்ந்து அதனுச்சியில் விசுவகர்மனைக் கொண்டு கோயி லொன்று செய்வித்து வீற்றிருந்தருளினர்.

அதுகாலை முனிகுமாரர்கள் அறுவரும் வந்து வணங்கித் துதி மழை பொழிந்தார்கள். தேவேசன் மகிழ்ச்சி யுற்று,

கேவாஸா: கோசோ: வேத்ராஜ்ஞ: கவஸோ ஷ்வ ஸ: வாதீதி
வதிச்சிம் விமோஜ்ஞு யஷ்ணாயிகாப வதேஷ்யிதா: |
ஸிவஸ்ச்ச க்ஷ்ப்ரஸத்வேத்ராக்ஷேத்ரயோயிகாப விமுக்தா: |

எனச் சர்வஞானோத்த ராகமத்தி னுரைத்தாங்குப் பாசம் மலம் என்பவற்றிற்கும், பதி சிவம் என்பவற்றிற்கும், பசு சீவன் என்பவற்றிற்குமுள்ள வேறுபாடுகளும் இலக்கணங்களும் பிறவு முபதேசித்து நிட்டைகைகூடச் செய்து அத்துவித முத்தியும் அருளினார். இதனாற் பராசர குமாரோப தேச மூர்த்தி யாயினார் குமாரக் கடவுள்.

ஸ்காந்த புராணம் – சங்கர சங்கிதை.

[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ॥

பராசர குமாரோப தேச மூர்த்தயே நம:

எழுபத்திரண்டாவது,

திரிசுதந்திரா பேத மூர்த்தி.

கங்கை யாற்றின் கரையிலே எழுபத் தெண்ணாயிர முனிவர் பிரமனை நோக்கித் தவம் புரிந்தார். காமம், குரோதம், உலோபம்,



கிரிசுதந்திராபேதமூர்த்தி·

திரிசுதந்திர பேத மூர்த்தி.

மோகம், மதம், மார்ச்சரியம் என்னும் உட்பகை ஆறனையுங் கடந்த முனிவர் முன்னர்ச், சிவபெருமானுக்கும் நாராயண சத்திக்கும் உற்பவித்த பிரமதேவர் ஐந்தலையுடன் தோன்றினர். முனிவர் யாவரும் பணிதலும், "அறவீர்நும் விருப்பம யாது உரைமின் என்ன?" கலைமகட்கு ஒரு நாவைக் காணியாகக் கொடுத்த கமலாசனக் கடவுளே! பூவுலகம், சுவர்க்கம், சத்தியலோகம் என்னுந் திரிலோகத்தும் தடையின்றி யாட்சியுடன் வசிக்க அருள்புரிய வேண்டு" மென்று கேட்டனர். அவ்வாறே பிரமரும் மனமகிழ்ச்சியுடன் வரமருளிச் சென்றனர். பின்னர் அம்முனிவர் விட்டுணுவையும் சங்கரனையும் நோக்கித் தவங் கிடந்து அவ்வாறு சுதந்திரமாகச் சஞ்சரிக்கும் வரத்தைப் பெற்றனர். திரி மூர்த்திகளிடத்தும் திரிலோகத்திலும் வசிக்குஞ் சுதந்திரத்தைப் பெற்றமையால் திரிசுதந்திரர் எனப் பெயர் பெற்றார். அதுவும் போதா தென்று மூவுலகுந் தடையின்றிச் சஞ்சரிப்பதனாற் கந்தன் என்னும் பெயர் பெற்ற முருகக் கடவுளை உள்ளன்புடன் கருதித் தவங்கிடந்து அவ்வுரிமையுடன் தம்மோட பேதமாக விருக்கும் சுதந்திரமும் பெற்றனர். மூன்று உலகினுஞ் சஞ்சரித்துக் கந்தன் திருப்புகழைக்கருதி யிருந்தார்.

அவர்கள் பூமியின்கண் வந்து நிலைத் திருந்த தன்மையும் கூறுவாம்.

விருத்தாசலத்தில்	ஆயிரவர்	க000.
திருச்செந்தூரில்	ஈராயிரவர்	உ000.
சிதம்பரத்தில்	மூவாயிரவர்	௩000.
கமலாசனபுரத்தில்	நாலாயிரவர்	௪000.
திருவண்ணாமலையில்	ஐயாயிரவர்	௫000.
சகநாதத்திலே	ஆறாயிரவர்	௬000.
திருவிழிமிழலையிலே	ஏழாயிரவர்	௭000.
மதுரைத்தலத்திலே	எண்ணாயிரவர்	௮000.
தண்டக வனத்திலே	ஒன்பதினாயிரவர்	௯000.

கோகிலபுரியிலே	பதினாயிரவர்	௧0000.
வதரிகாச்சிரமத்திலே	பதினோராயிரவர்	௧௧000.
சுவாமி மலையிலே	பன்னிராயிரவர்	௧௨000.
	ஆக எழுபத்தெண்ணாயிரவர்	௭௮000.

இத்தொகையுள்ள முனிவர்கள் யாவரும் அந்தணராய் இல்லறத்தோடு கூடி வாழ்ந்து, தேவதேவராகிய செவ்வேளின் திருவருளாலே பெறும்பேருடன் வாழ்ந்தனர். அவர்க்கு எவ்வித இடுக்கண் வரினும் அவற்றை யெல்லாங் கந்தக் கடவுளே முன்னின்று தீர்ப்பார். இடையறாத அன்பின் மேலீட்டினாலே பூசித்து நிற்றலால் அவர்களுடன் அபேதமாக நின்று அருள் செய்தமையால் சுப்பிரமணியப்பகவான் திரிசுதந்திரா பேத மூர்த்தி யாயினர்.

ஸ்ரீசுதந்திரா பேத மூர்த்தயே நம:

எழுபத்து மூன்றாவது,

சர்வ விபுத்துவ மூர்த்தி.

சூரபன்மன், சிங்கமுகன், தாரகன், முதலிய அசுரர்களைக் கொன்று தெய்வயானை யம்மை யாரையும் வள்ளி யம்மையாரையுந் திருமணஞ் செய்து தணிகை மலையில் வீற்றிருந்த பெருமான், திருச் செந்தூருக்கு எழுந்தருளி அங்குள்ள திருக்கோயிலின்கண், இரண்டாயிரம் பூத வெள்ளங்களும், இலக்கத் தொன்பது வீரர்களும் தம்மைச் சூழ்ந்து இருக்க. தேவர் முனிவர் முதலியோர். நாற்றிசைகளிலும் நின்றுபோற்றி வணங்கித் திருமுக நோக்கி நிற்ப வீற்றிருந்தருளினர்.



சர்வவிபுத்துவ மூர்த்தி.

அப்போது அவர்களுட் சிறந்த காளையாகிய வீரவாகுதேவர் வணங்கித் துதித்து, தத்துவங் கடந்த தனிப்பரம் பொருளே ! தேவரீரது திருவுரு வக் காட்சியை யெவ்விடத்துங் கண்டு வழிபட்டருள் பெறும்படி திருக் கடைக்கண் நோக்கருள்வீராக.

ஓம் நமஸ்தே ஸதேதே ஜகத் காரணாய !
நமஸ்தே சிதே ஸர்வ லோகாச் ரயயாய !
நமோ த்வைத தத்வாய முக்திப் பிரதாய !
நமோ பிரஹ்மணே வ்யாபினே சாச்வதாய !

(சத்து வடிவரும் உலக காரணரும் ஆகிய தேவரீருக்கு நமஸ்காரம்; ஞானரூபரும் சர்வலோகத்தை நடத்துகின்றவருமாகிய தேவரீர்க்கு வந்த னம் : ஒப்பு உயர்வான இரண்டாவது 'பொருளில்லாத வரும், முத்தி யளிப்பவரும் ஆகிய பகவானுக்கு வணக்கஞ் செய்கின்றேன் ; பரப்பிர மமும் எல்லாவற்றிலும் நிறைந்திருப்பவரு மாகிய சுவாமிக்கு வந்தனம்.)

என்று சுக்கில யசுர்வேதத்துக் காண்வசாகையிற் பிருகதாரண்ய உப நிடதந் துதித்தபடி, "தேவரீர்க்கு அரிய தொன்று இல்லையே." என்று பலவாறு வேண்டித் துதித்தார். எல்லா வான்மாக்களையும் ஈடேற்றத் திருவுளங் கொண்டு, அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொரு ளாக நிற்கும் பரம் பொருள் தாமே என்று உணர்த்த அறுமுகங்கொண்ட பெம்மான் எல்லாப் பொருள்களி னிடத்துந் தம்மையும், தம்மிடத்து எல்லாப் பொருள்களையும் வைத்துக் காட்சி யருளினார். வீரவாகு தேவர் அவ்வாறே தியானித்து இன்றுங் கந்த மலையிற் பூசித்த வண்ணமாகவே யிருக்கின்றார். வீரவாகு தேவர்க்கு எவ்விடத்தும் தாம் விபுத்துவமுடை யாராய் விளங்குங் கோலங் காட்டலால் விபுத்துவ மூர்த்தியாயினர்.

ஈசா வாஸ்யோப நிடதம்.

𑌯𑌸𑍍𑌤𑍁𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑍇𑌵𑌾𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌤𑌿।
𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁𑌚𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂𑌤𑌤𑍋𑌨𑌵𑌿𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌤𑍇॥

யஸ்து ஸர்வாணி பூதாந்யாத் மந்யே வாநு பச்யதி !
ஸர்வ பூதேஷு சாத்மா நந்ததோ நவிசுகுப் ஸதே !

கந்த புராணம்.

எங்க ணும்பணி வதனங்க ளெங்கணும் விழிக
ளெங்க ணுந்திருக் கேள்விக ளெங்கணுங் கரங்க
ளெங்க ணுந்திருக் கழலடி யெங்கணும் வடிவ
மெங்க ணுஞ்செறிந் தருள்செயு மறுமுகத் திறைக்கே.

திருச்செந்தூர்ப் புராணம்.

ஊனுறுங் கண்களுக் குட்படா துன்றன
தானஞா னக்கணே யருளொடுந் தருதுநீ
ஞானநாட் டத்தினு னந்திருத்தோற்றமே
மானவாட் செங்கையாம் வாகுவே காண்டியால்.

புகலருங் குமரவேள்வி பூதியுங் கேட்டு மேலாந்
தகையபே ருருவங் கண்டு சததளத் திறைக்கு மெட்டாச்
சுகமடைந் தருந்தியானத் துதியுட னிருந்து யோகத்
தகமகிழ்ந் தின்றுகாறு மற்புதப் புணரி யாழ்ந்தான்.

சர்வவிபுத்துவ மூர்த்தயே நம:

எழுபத்து நான்காவது,

தேவ வாகன தான மூர்த்தி.

பொன்மயமான மகாமேரு மலையின் வடபாலிற் றிருக்கைலாய மலை விளங்காநிற்கும். அது இருபதுகோடி யோசனை நீளமும் அதற் கிரட்டி யுயரமு முள்ளதென்க. அதனடுவணே நவரத்தினமயமான சிகரமொன் றினுள்ள கோயிலினடுவே மணியாசனத்து இருபத்தைந்து திருமுகங் களை யுடையவரும், ஐம்பது திருக்கரங்களும் இரு திருவடிகளும் சர்வாப ரணாலங்காரமும் கோடி சூரியப் பிரகாசம் போன்றகாந்தியும் உடையவரு மான பரமானந்த மங்கள மூர்த்தியான சதாசிவ மூர்த்திகள் எழுந்தருளி யிருப்பர். அவ்விடத்தே சூரியகாந்தக் கன்மயமான பதினொருசிகரங்களி னேகாதச வுருத்திர ரிருப்பர்.

இச்சிகரங்களைச் சூழச் சந்திரகாந்தக் கன்மயமான நாற்பொரு சிக ரங்களுள்ளன. அவற்றி லட்ட வித்தியேசுரர், அட்ட மூர்த்திகள், நவ சத்திகள், இருபத்தைந்து மூர்த்திகள், ஐம்பத்தொரு மாதிருகா சத்திகள் இருப்பார்கள். அவைகளைச் சூழ்ந்துள்ள ஆயிரத்தெட்டு சிகரங்களில் நூற்றெட்டுத் தாண்டவேச மூர்த்திகள், ஏழுகோடி மகா மந்திரர்கள் தியா னித்து விளங்குவர். அவையிற்றைச் சூழ்ந்துள்ளபடிக மயமான ஆயி ரத்தொரு பெரிய சிகரங்களில் விநாயகர், சுப்பிரமணியக்கடவுள், ஐயனார் வைரவக் கடவுள் நந்தி, பிருங்கி, மகாகாளர், இடபதேவர், காமதேனு, சிந்தாமணி, துர்க்கை முதலிய சத்திகள், சண்டேசுரர் முதலிய நாயன் மார், அத்திரதேவ மூர்த்திகள் முதலாயினோர் விளங்கியிருப்பர். அவை களைச் சுற்றியுள்ள மணிகாந்திமயமான இலகத்தொருசிகரங்களிலேமேற் றிசைச் சிகரங்களின்கண் பல்லாயிரகோடி விட்டுணுக்களும், வடதிசைச் சிகரங்களிற் பல்லாயிரகோடி பிரமர்களும், தென்றிசைச் சிகரங்களிற்பல் லாயிரகோடி முனிவர்களும், கீழ்த்திசைச் சிகரங்களில் உலோகபாலர்களு



தேவவாகன தானமூர்த்தி.

யிருந்து தத்தம் பதவிகளில் வெறுப்புற்றவராய்ப் பரமாப்தபதியாகியசிவ பெருமானது திருவடியினிடத்திரண்டறக் கலக்கப் பெறூஉம் அத்துவித முத்தியையடையுமாறு தவம்புரிகின்றனர்.

அம்மலையி னடிவாரத்திற் கோடியோசனை விசால முடைத்தாம் பொற்பூமி சூழ்ந்துவிளங்கும். ஆண்டு அநேககோடி யுருத்திரர்களும்முனிவர்களும் பூதர்களும் தத்தமக்கு வேண்டும் போகங்களையெல்லா மநுபவித்துக் கருணாநிதியாகிய சிவபெருமானைத் தியானித்து இருப்பர். சம்புத்தீவத்திலுள்ள கைலாய மலையினும் எத்தனையோகோடி யேற்றமுடையதிதுவாகலான் மகாகைலாய மெனப்படும். இவ்வாறாய விருவகைக் கைலைகளுள் மகா கைலாயத்தின்க ணெழுந்தருளி யிருக்குஞ் சிவ பெருமானைத் தரிசிக்கும்பொருட்டு இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு குபேரர், ஈசானன், பிரமன், பிதா மகன், விதி, விதாதா, சிருஷ்டி, பிரசாபதி, தாதா, சாவித்திரி, விட்டுணு, சயந்தர், மாகேந்திரர், ஆதித்தியர், சததியகர், அந்தரிட்சர், பூடா, விதாதா, கிரகத்ததா, கந்தர்வர், பிருங்காரயர், தௌவாரிகர், சுக்கிரீவர், புட்பதந்தர், சோஷர், உரோகர், நாகர், முக்கியர், பல்லாடகர், சோமர், உருகர், தித்தியர், அதித்தியர், ஆபர், ஆபவற்சர், நவக்கிரகங்கள் முதலாய பலப்பல தேவர்கள் தத்தம்வாகனங்களைக் கயிலையி னோர்பாகங்களில் விடுத்து உட்சென்றார்.

அது காலைச் சுப்பிரமணியப் பகவனுந் "தாய் தந்தையரைக்காணும் பொருட்டுக் கந்தகயிலாயத்தினின்று மிவண்வந்து தமதுவாகன மாகிய மயிலையுங் கொடியாகிய சேவலையும் அவ்விடத்து விடுத்து உட்சென்றார். மற்றைய தேவர்களின் வாகனங்களாகிய யானை, ஆட்டுக்கடா, எருமைக்கடா, பேய், முதலை, கலைமான், புருடாமிருகம், இடபம், அன்னங்கள், கருடர்கள், குதிரைகள், காகம் முதலிய வாகனங்கள் தம்மை வணங்காது

தேவவாகன தான மூர்த்தி.

அகங்காரமா யிருக்கின்றனை வென்னும் வெகுளியாற் கந்தக் கடவுளின் வாகன மாகிய மயிலும், கொடியாகிய சேவலும் புறப்பட்டு எல்லாவற்றை யுந் துரத்தியழிக்கத் தொடங்கின. பறவைகளும் மிருகங்களும் பசாசுகளு மாகிய வவைகளெல்லாம் யாண்டுச் செல்லினும் விடாது தொடர்ந்து தங் கள் கால்களானும் சிறகுகளானும், வால்களானும் அலகுகளானும் புடைத் துங் கிழித்துங் கொத்தியுங் கொன்று வந்தன.

தரிசித்து வணங்கி வெளிவந்த தேவர்கள் யாவருந் தங்கடங்கள்வாக னங்களைக் காணாது துயரக்கடலி லாழ்ந்து தேவதேவராகிய சுப்பிரமணி யக் கடவுள் வெளியே போந்தருளியகாலை, அவரைப் பன்முறைவணங்கி யாவரு மொருங்கு சேர்ந்து சாமகானம் பாடித் துதித்தனர். அவ்வொலி யூழிக்காலத் தொலிபோற் பெருகியது கண்டு வரதராசன் உண்மகிழ்ந்து அவர்கள் விரும்பிய வண்ணம் அவ்வத் தேவர்கட்குரிய வாகனங்களைப் படைத்துக் கொடுத்தருளினர். அதனாற் றேவயானை காந்தனார் தேவவா கன தான மூர்த்தியெனப் பெயர்பெற்றார்.

சிவரகசிய கண்டம் - உபதேச காண்டம்.

[illegible] |
[illegible]
[illegible] ||
[illegible] |
[illegible] |
[illegible]
[illegible] |

[illegible] ।
[illegible] ।
[illegible] ।

தேவ வாகன தான மூர்த்தயே நம:

எழுபத்தைந்தாவது,

மாவிட்டபுரக் காங்கேய மூர்த்தி.

சுவர்க்க லோகத்துள்ள சந்தானம் அரிச்சந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் என்னும் ஐந்தருக்களின் றழைகளை உண்ணுதற்குக் கைநீட்டிமூரித்து முழங்கும் யானைச் சேனைகளை யுடைய கலிங்கதேயத்து அரசன் ஒருவ னிருந்தான். அவன் அரிய தவத்தாற் பெற்ற புத்திரி பேரழகினை யுடைய கனக சுந்தரி யென்னும் பெயருள்ளாள். அவள் தலதீர்த்த மூர்த்த சேவையை விரும்பிப் பலதலங்களைத் தரிசித்தும் தீர்த்தங்களிற் றோய்ந்தும் மூர்த்திகளைப் பூசித்தும் வருவா ளாயினள். செந்தமிழ் வளர்த்த அகத்திய முனிவர் வசிக்கும் பொதியமலைச் சாரலினுள்ள தாம்பிர வன்னி நதித் துறையிலே ஆடுதற்கு வந்தாள். ஆங்குப் * பஞ்சாக்கினி காரியங்களையும் நீக்கிப் பஞ்சப் பொறிகளையும் அவித்து, $ பஞ்சாக்கினி நடுவினின்று அரிய தவத்தைச் செய்யாநின்ற அயக்கிரீவ முனிவரைப் பார்த்து நகைத்தாள். அது கண்ட முனிவனார் "மங்கையே! நம்மை யவமதித்து நகைத்தனை. அதனால் நீ குருஞ் சன

---

* பஞ்சாக்கினி காரியங்களாவன — இராகம், வெகுளி, காமம், பயம், தீபனம் என்பன. $ பஞ்சாக்கினி மத்தி — கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்னும் நான்கு திசைகளினும் மூட்டப்பட்ட அக்கினியும், நடுவே சூரியாக்கினியு மாகிய ஐந்தக்கினியின் நடு.



மாவிட்டபுரக் காங்கேயமூர்த்தி.

னத்திற்கு பலரு மிகழவருங் குதிரை முகத்தைக் கொள்ளுதி. இதுவே நின்னகைக்குப் பிரதிபல னாகும்'' என்று சாபமிட்டார்.

கனக சுந்தரி முனிவர் சாபத்தைக் கேட்டு வருந்தி, அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, ஒருபரம் பொருளாகிய சண்முகக் கடவுளை நினைந்து, இரவு பகல் என்னும் இருகாலத்தும், காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றமும், அகற்றி, மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னு நாற்கரணங் களையு மடக்கி, ஐந்தக்கினி நடுவி னின்று, ஆறெழுத்தையு முச்சரித்து, எழ்பவக் கடலையுஞ் சுவற்றி இயமம், நியம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி எனும் எட்டுறுப்புடைய சிவயோகத்தினால் நவபெரும்புவனமும் வந்து தொழ வீற்றிருக்கும் ‡ தசகாரியத்தாபதரே! நுண்ணறி வுடையாய் நூலொடு பழகினும் - பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்தே'' என்றமை தேவரீர் அறிந்ததேயன்றோ? அடியேன் றெரியா திழைத்த குற்றத்தைப் பொறுத்துச் சாப நீங்கும் வழியையருள்க வென்று பிரார்த்தித்தாள். முனிவரும் மனமிரங்கி ''மடநல்லாய், கடற்றுறைத் தீர்த்த மாடுங்கால் கந்தப் பெருமான் றிருவருளா லகலும்'' என்றார்.

பின்னர்க் கனக சுந்தரி யிறந்து, மறுபிறப்பிலே உலக மெல்லா வற்றையும் பொதுவறப் புரந்த மதுரை மன்னவன் உக்கிரப்பெரு வழுதிக்குப் புத்திரியாகப் பிறந்தாள். அக்காலத்து மிக்க அழகுடன் விளங்கினு

‡ தசகாரிய மாவன—தத்வரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம் ஆன்மதரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பன. அது'' ப்ரதமம் தத்வரூபந் த்விதீயந் தத்வதர்சநம், த்ருதீயந் தத்வ சுத்திஞ்ச சதுர்த்தந் சாத்மரூபகம், பஞ்சகமாத்ம தர்சனந்து ஷஷ்டமஞ் சாத்ம சோதநம், சப்தமஞ் சிவரூபந்து அஷ்டமம் சிவதர்சநம், நவமஞ் சிவயோகஞ்ச தசமஞ் சிவபோகச்ச'' எனவரூ உங் காமிகாகமச் சுலோகத்தாலுணர்க. இதனையே ''இரண்டினிலைந்தி லாறி லேழினி லெட்டுத் தன்னிற் - றிரண்டிரண் டொன்றதாகத் திக ழொன்பா ன் பத்துத் தன்னி-டிரண்டிலாப் பேறு தன்னி லிருத்தியபத் தோ டொன்றிற்-றிரண்டெழு முபதே சங்கள் சிவஞான போதஞ்சித்தி'' என்னும் ஆன்றோர் வாக்கும் வலியுறுத்திற்று.

னாகலின் அவட்கு * அங்க சுந்தரி யெனப் பெயரிட்டுத் தாய் தந்தைய அருமையாக வளர்த்தனர். சிறிது காலஞ் செல்லவும் முனிவரிட்டசாபக் தொடுதற்கு ஆரம்பித்தது. புழுக்கள் வேட்டுவனாகவும், வண்டுகள் பயிர்க் குட்டிகளாகவும் மாறினாற் போல அங்க சுந்தரி குதிரைமுகங் கொண் டாள். தாய் தந்தையர்களாகிய அரசியும் அரசனும் வருந்தித் துக்க சாக ரத்தில் மூழ்கினார். அப்போது, அசரீரித் தெய்வம் "நுங்கள் மகள் குதிரை முகத்தை விட்டு நல்லமுகம் பெற வேண்டுதிராயின் கடலினும் நதியினும் மூழ்கிவருவாளாக" என்று முழங்கிக் கூறியது. அதுகேட்ட அரசனும் அரசியும் மன மூவகையுற்றிருந்தார் சில வருடங்களுள் கழித் ததும், மந்திரி மார்களையுஞ் சேனைகளையும் சேர்த்துத் தோழியர்களுடன் றன்மகளைத் தீர்த்தமாடுமாறு அரசன் அனுப்பினான்.

அங்கசுந்தரி பாண்டி நாடு, சோழ நாடு, தொண்டை நாடு, சேர நாடு முதலிய தேயங்களினுள்ள தீர்த்தங்களி லாடி, ஈழ நாட்டிற்குச் சென்று இந்து சமுத்திரம் என்னும் மகேந்திரக் கடலிற் குளித்து, பக்கத் திலே ஏமகூடம் எனப் பெயரிய சுப்பிர மணிய துவாதசாந்தத் தலமாகிய கதிர்காமத்திற் சென்று, ஆங்குள்ள மாணிக்க கங்கையின் முழுகி, கதிரை வேற் பெருமானை யன்புடன் றுதித்துக் கண்ணீர் விட்டாள். "வடகோ டியிலே கடற்கரையிற் றிவ்விய தீர்த்த மொன்றுள்ளது-ஆங்குச்சென்று காங்கேயனை யன்புடனினைத்து முழுகுவையேல் அகலும்" என்று அச ரீரி கூறிற்று. அங்கசுந்தரி யன்புடன் மகிழ்தூங்க வந்து வடகடற்றுறை யடைந்து, யாழ்ப்பாணத்துள்ள நகுலகிரியின் அருகே கடற்கரை யூறிப் பெருகுந் தீர்த்தத்திற் கந்தக்கடவுளை யுன்னி முழுகினாள். உடனே குதிரை முகம் நீங்கிற்று. அரசகுமாரியும் மந்திரிமார்களும், சேனைக

---

* மாருதப்பிர வல்லி யென்னும் பெயருடையாளென்றும், உக்கிர சோழமகாராசாவின் குமரியென்றுங் குட்டநோயாற் பீடிக்கப் பட்டா ளென்றுஞ் சிலர் கூறுவர்.

ளும், தோழியர்களும் யாவரும் பெரு விம்மிதமும் உவகையும் அடைந்த னர். அவள் தந்தையாகிய உக்கிரப் பெருவழுதிக்கு அறிவித்து, கந்தக் கடவுளின் திருவருளினாலே நீங்கினமையால் சுப்பிரமணியப் பிரதிட்டை செய்ய விரும்பி, கந்தாலய மொன்று செய்வித்து, மதில் முதலியவும் வகுப்பித்து, அவ்வூர்க்குக் குதிரை முகம் விட்டபுரம் என்னுங் காரணம் விளங்கு மாறு மாவிட்ட புரம் எனப் பெயருஞ் சூட்டி, சுப்பிரமணிய திருவுருவ மொன்று சிற்ப .லக்கணம் வல்லாரால் செய்வித்து, அங்குக் கடல் வழியாக வருவித்து இறக்கப்பட்டமையால் அக்கடற் றுறைக்குக் காங் கேயன் றுறையெனப் பெயரு மிட்டனள். அத்திரு வுருவத்தைச் சுபவோரையிலே பிரதிட்டை செய்வித்து, பூசித்தல் தொண்டுசெய்தன் முதலியவற்றிற்குத் தன்னாட்டினின்றும் ஆதிசைவப் பிராமணர்களையும் சைவ வேளாளர்களையுங் குடியேற்றிக் கந்தன் றிருவருள் பெற்று அங்க சுந்தரி கட்டழகுடையளாய் மதுரை சென்றாள். இது போதும் மாவிட்ட புரத்துள்ள அத்தீர்த்தம் தன்னின் மூழ்கினோ ரது கொடுநோய்களைப் பரிக ரித்து வரல் கண்கூடே. தக்கிண கைலாய மான்மியமும் இதற்குப் பிர மாணமாகும்.

அங்க சுந்தரியின் குதிரை முகத்தை நீக்கிக் காங்கேய மூர்த்தியாக விளங்கலால் மாவிட்டபுரக் காங்கேய மூர்த்தி யெனக் கந்தக் கடவுளை உல கம் போற்றுகிற்கும் என்க.

திருச்செந்தூர்ப் புராணம்.

விதித்தசாபத்தைக்கனகசுந்தரியெனுமெல்லியறயரோடுந்
துதித்துநீபகர்கொடுமொழிதவிர்பகற்சொல்லுதியெனவோடு
மதித்திருந்தபக்கிரீவனுமவண்முகம்பார்த்துமாதவனும்பி
யுதித்துளானுக்குப்போந்தலைவருதலையுன்னிநோற்றுளன்முன்னம்.

புக்குமச்சனனச் சுமைபோயபின் புவிபொதுவறக் காக்கு
முக்கிரப்பெரு வழுதிபா னுதித்தன ளொளிவளைப் புறமேனி

மிக்கவங்க சுந்தரியெனும் பெயரொடும் விளங்கினள் பரிபோன்று
தக்கமாமுக மாயினள் வழுதியுஞ் சஞ்சலித்துடன் சார்ந்தான்.

தீர்த்த மாலை.

கங்கையின் மூழ்கினும் பேய்ச்சுரை காகங் கதிப்பிலிதிற்,
சங்கையி லென்ற தரவுரை சாய்த் தலத்தருய்ய
மங்கையுந் தோயக் குராமுக மோட்டிய வார்கிரிவே
லங்கையன் தீர்த்த குலத்திளுரு மறிமின்களே.

மாவிட்டபுரக் காங்கேய மூர்த்தயே நம:

எழுபத்தாறவது,

மது காவல மூர்த்தி.

காலநேமி யென்னும் அசுரராசன் வழித் தோன்றலான மதுஎன்னும் அசுரன் * இலங்கை நகரத்தி னேரிடத்திலே யிருந்து ஆட்சி செய்து வந்தான். இராவணன் தவபலத்தினுலே மூவுலகுமஞ்ச அரசாள்வ தறிந்து, தவத்தின் மிக்கது பிறி தொன்றில்லை. தவத்தினுலே யெப்பொருளையும் அடையலாம். தவமே யெவர்க்கும் வலிமையை யளிப்பது என்று தீர்மானித்து, மகேந்திரக் கடலெனும் இந்து சமுத்திரத்திற்கு வடபக்கத்தே, சூரபன்ம னுதியரைச் சங்கரித்தற்குப் பாடி கொண்டு வீற்றிருந்த கதிர்காமத் தலத்தைச் சார்ந்து, ஆங்குள்ள முனிவ ரொருவராற்

* இலங்கை=எவ்விடத்தும் மணிகள் இலங்குவது. பலவளங் களாலும் இலங்குவது, முத்துக்கள் விளைந்திலங்குவது என்றுமாம். "எங்கணும் மணி யிலங்மலா விலங்கை" எனத் தக்கிண கைலாய புராணங் கூறிற்று. "தென்கடன் முத்துங் குணகடற் றுகிரும் ஈழத்துணவும்" எனப் பட்டினப்பாலையு முரைத்தது. எக்காலு மழியாது இலங்குதலை யுடையது என்றல் பொருத்த மாகும். அது, "கரு வொடு போக்கரு மாபி னிலங்கை" எனச் சிறுபாணாற்றுப் படை யுரைத்த தறிக.



மதுகாவல மூர்த்தி.

சடக்கரமந்திரத்தி னியல்க ளெல்லாந் தெரிந்து மாணிக்க கங்கையென்னுந் தீர்த்தத்தின் மூழ்கி, விபூதியை யுத்தூளன மாகத் தரித்து, அந் நகர்க்குக் காவலாக விருக்குந் துர்க்காதேவியையும், சுதந்திர வைரவர், சுவேச்சையர் வைரவர், லோக வைரவர், கால வைரவர், உக்கிர வைரவர், பிரச்சையா வைரவர், நிர்வாண வைரவர், பூடண வைரவர் என்னும் அட்ட வைரவர் களையும் வந்தித்து, அசுராந்தக மூர்த்தியாகியதேவசேனுபதியை நினைந்து அநேகாயிர வருடங் கடுந்தவம் புரிந்தான். பெருமானுர் வெளிப்பட்டு என் வரம் வேண்டுமென்று வினவ, மதுவசுரன் சொல்வான், "மறை முதலே! பழம் பொருளே! வரைபக வெறிந் தோய்! இராவணன் ஆளும் இலங்கையை அடியேன் தனியாள வேண்டும். தேவரீர் எனக்குக் காவலாக வேண்டும். அன்புடை மனையாள் அகப்படவும் வேண்டும். இராவணன் முதலாயினேர் என்னைப் போற்றவும் வேண்டும்" என் றிரந்தான். கதிரைப்பெருமான் றிருக்கடைக்கண் பாலித்து, அன்பே. இராவணன் றன் மனைவி வயிற்றி லுதித்தாளாஞ் சீதையை விரும்பிச் சிறைவைப்பான். நம்பக்தனுகிய தசரதராமன் இங்குவந்து அவனை வேரற வழிப்பான். அதுபோது நீ யிலங்கை யிது முற்றையும் பொதுவறப் புரப்பாய். அன்புடை மனையாளையும் இராவணுதியா போற்றையும் வெள்குவையேல் மாலியவான் மகளான கும்பீநசி யென்பாள் இராவணனது அந்த புரத்தி லிருக்கின்முள். நீ யிப்போதே இடத்துடன் அங்குச் சென்று அவளை யெடுத்து நின்னூர் செல்லுதி" என்று மறைந்தருளினர்.

மது என்பான் மகிழ்ச்சிக் கடலிற் றிளைத்தவனுய், அம்பும் வில்லுங் கையேந்தி, இராவணனது மதிலை வளைத்திருந்த காவலாளரைப் பாணங்களால் அடித்துத் துரத்தி, உட் சென்று, அங்கே யாது தான வீரர் வந்தெதிர்க்கப் புறமுதுகிடச் செய்து அந்த புரம்

புகுந்து கும்பிநசியைக் கொண்டு சென்று தன் நகரமாகிய * மதுவாட்சி சேர்ந்து அவளுடன் சுகித்திருந்தான். இந்திரசித்து நிகும்பலை யென்னும் உத்தியான வனத்தில் யாகஞ் செய்து சிவபெருமானிடத்து, விரும்பிய படி ஆகாயத்திற் செல்லவல்ல ஒருதேரும், அம்புகள் நீங்காத தூணீர மும், மிக்க வலியுடைய வில்லும், தாமசியென்னும் மாயசித்தியும் பெற்றது கேட்ட இராவணன் போய் அவனை யழைத்துத் தன் மாளிகை சேர்ந்தான். சேனைகளும் யாதுதான வீரர்களும், மற்றையரும் மது என் பவன் அநலையின் மகளை யெடுத்துச் சென்றது கூறினால் என்வருமோ என்று அஞ்சி உரையாராயினர்.

சிலநாட் சென்றதும் இராவணனாலே காம வின்பத்தின் பொருட் டுச் சிறைவைக்கப்பட்ட தேவ கன்னியர், நாக கன்னியர், அசுரகன்னியர், இராக்கத கன்னியர், யக்ஷ கன்னியர், வித்தியாதர கன்னியர், மானுடப் பெண்கள் முதலாய கன்னியர்கள் யாவரும் கதறி யழுவதைக் கண்ட விபீடணன் மனஞ் சகிக்காதவனாய், தமையனை நோக்கி, "அண்ணா, நீ அறிவுடையனாயிருந்துங் கொடும் பவஞ் செய்கின்றனை. பிறர் மனைவி யரையும் கன்னியர்களையும் நீ கவர்ந்து சிறைவைத்த பாதகத்தா லன்றோ, நமது தங்கையைப் பிறன் கவர்ந்து சென்றான்" என்றான். அதுகேட்ட தசக் கிரீவன் கண்கள் சிவந்து உதடு துடிக்க வெகுண்டு "உடன் பிறந் தாள் யாவள்? கவர்ந்தவன் யாவன்" என வினவ விபீடண னுரைப் பான்.

"நம் அன்னையின் பெரிய தந்தையின் புத்திரி அநலை. அவளை நமது தாய்க்குச் சகோதரி. அவள் மகள் கும்பிநசி யென்னும் பெய ருடைய கற்புடைக் கன்னியை மது என்னும் வலிய அசுரராசன் இங்கு வந்து சேனைகளையும் யாதுதானரையும் புறங்காட்டச் செய்து, அந்தப் புரஞ் சென்று கவர்ந்து போயினன். நீ திக்குவிசயத்தி லிருந்தாய். உனது

* மது வாட்சி = மது என்னும் இராக்கதனால் ஆளப்பட்டவூர். மது வாட்சி யென்றது இப்போது மதவாட்சி யென வழங்கப் படுகின்றது. இது இலங்கையின் வடமத்திய மாகாணத்திலுள்ளது.

குமாரன் * திரும்பலை வனத்து யாகஞ் செய்திருந்தான். யான் நீரில் மூழ்கிப் பசுபதியைக் குறித்துத் தவஞ்செய்தலி லிருந்தேன். கும்பகன்னன் நித்திரையி லிருந்தான். மற்றவர் அவன் வலிக்குப் பின்னிட்டார். இச்சமயத்தில் மது வரசன் அந்தப் புரத்தில் நித்திரை செய்திருந்த தங்கையைக் கொடு சென்றான். அவனை வெல்லல் எவர்க்கு மரிது. கதிர்காமக் கடவுளின் வரப் பிரசாத முள்ளவன். அவரால் காக்கப்படும் பெருமையன்; அவனை நட்புக் கொண்டொழுகலே நன்று" என்றான். அது கேட்டதும் இராவணன் மனம் பொறாது நாலாயிரம் அக்குரோணி சேனைகளோடும் மதுபுரஞ் சென்று மதிலை வளைத்தான். குமாரக் கடவுள் காமன் என்னுங் கணத்தலைவரை யனுப்ப, அவர் சென்று ஒருகணத்திற் சேனைகளை மடிவித்து † இராவணனையும் சிரும்பணுத்தி ரத்தால் அசையவொட்டாது நிறுத்தினர். மதுவரசன் குமாரப் பெருமான் றிருவருளை வியந்து துதித்தான். கும்பிநசி யிராவணனிடம் வந்து குமாரப் பெருமானது திருவருளும், பெறற் கருங்காவலும் பெற்ற தன்னாயகன் பெருமைகளை வகுத்துரைக்க, இராவணன், மகிழ்ந்து மதுவைச் சிநேகித்தான். இராவணன் மதுவொடுஞ் சென்று இந்திரலோகத்தையும் வென்றான். பின்னர் இராவணன் கொடுஞ் செய்கைகள்நோக்கி மதுவரசன் மனம் வெறுத்தான். இராம சுவாமியாற் கொல்லப்பட்ட பின்னர் மதுவரசன் இலங்கையை யாண்டு ஞானமுற்றிக் கந்தவேளுலகு சேர்ந்தான். மது என்னும் அரசற்கு வேண்டு வரமளித்து இராவணனையும் அடர்ப்பித்து

* திரும்பலை யென்பது இக்காலத்து நீர்கொழும்பு என வழங்கப் படுகின்றது என்க.

† இராவணன் = அழுதலைச் செய்தவன். ராவணம் = அழுதல். தசக்கிரீவன் அளகையை வென்று வரும்போது கயிலை வந்ததும் விமானத் தடைப்பட்டதாக, அதனைப் பெயர்க்கத் தொடங்கிச் சிவபெருமான் றம் திருவிரலா லூன்றப் பாதலம் புக்கு ஆயிரந் தேவ வருடம் அழுதான். அதனால் இராவணன் எனப் பெயர் பெற்றான். "ஆயிரம் பருவமிவ்வா றழுதலா லரக்கர் கோனுக் - கேய்வுற வியம்புநாம மிராவணன்" என்று கூர்ம புராணங் கூறுமாறுணர்க.

அரசு அளித்துத் தம் உலகுங் கொடுத்துக் காத்தமையாற் குமாரப் பெருமான் மதுகாவல மூர்த்தி யாயினர்.

கூர்மபுராணம் அகத்தியன் இராவணன்மரபுரைத்த அத்தியாயம்.

வெருவாவின்றி மதுவென வுரைக்கும் வெந்திற லவுணனீண்டெய்திப், பொருவருங் கும்பி நசியினைக் கவர்ந்தானென் றதுமிரா வணன் புழுங்கி - யுரைபெறு தானைகடலெனச் சூழக் குரோணி நாலாயிரத்தோடு - மருவலுங் கும்பி நசிதெரிந் துரைப்ப மதுவொடு மாக்கள்கோனட்டான்.

பாழியந் தடந்தோண் மதுவொடுஞ் சூழ்ந்த பலகிளைப் பரப்பொடு மாக்கள் - மாழைமென்றேக்கிற் புலோமசை கணவன் மாநகர் தனதடிப்படுத்தி - வீழியங் கனிவா யியக்கிய ரமரர் கின்னரமிது தனம் வீற்றிருக்குஞ் - சூழ்சுடர்ப் பரிதி போக்கற நிவந்த கயிலையிற் றனவின்வந் தடைந்தான்.

அருவரைத் தடந்தோளிராவணி யெண்டோளந்தண னருளினொடர்க்குஞ் - செருவினி லெவர்க்குந் தெரிவுறு தொளித்துச் செருச்செயு மாயையு மொன்னர் - வெருவா வெங்குந் திரிதருதேரு நிகும்பலை வேள்வியிற் பெற்று - மருவினனவனே டிலங்கையிற் புகுதவீடணன் வணங்கி யாங்குரைத்தான்.

மதுவெனும் வேந்தைத் தசரதன் போற்றி வாழ்ந்தது வியப்பதோவவன்றன் - சதுமுகற் றக்கு மொருதனிக் கதிரைத் தலைவனர் காத்திடும் வரத்தோன் - மொதுமலர்ப் போற்றுந் தாத்தனவ் வரக்கனென்றிடச் செய்வதால் வெறுத்தான் - கதுமென விறக்கவரசுகொண் டிறுதி கந்தவேளுலகுகண் டனனே.

மதுகாவல மூர்த்தயே நம:



அகிலலோக நடனமூர்த்தி.

எழுபத்தேழாவது,

அகிலலோக நடன மூர்த்தி.

திரிபுரத் தசுரர்களான, கமலாக்கன், வித்தியுன்மாலி, தாரகாக்கன் என்னும் அசுரர்களின் கொடுந்துன்பத்தைச் சகிக்க லாற்றாத பிரமன், விட்டுணு முதலிய தேவர்கள் ஒருங்கு கூடி ஓர் யாகஞ் செய்து பற்பல பூதங்களை யுண்டாக்கி யசுரர்மீது விடுத்தனர். அவைகள் சென்று சிவ பூசை செய்யும் அசுரர்மீது அணுகுதற்கு இயலாமற் குரங்குக் கூட்டங் கள் போலச் சோலைகளிற் சென்று பலாப்பழம் மாம்பழங்களைத் தின்று கொண் டிருந்தன. அசுரர்கள் அறிந்து மண்ணுங் கட்டியாலும், தடிக ளாலும் எறிந்து அடித்துக் கொன்று தேவர்களைப் பின்னரும் வருத்துவா ராயினர். அமரர்கள் யாவரும் அஞ்சி யோசித்தார். அசுரர்கள் மகா சிவபத் தராய் விளங்குகின்றார். அவரை வெல்லுத லரிது. அவரை யதினின் றும் விலகுமாறு செய்யின் இலகுவில் மகாதேவரைக் கொண்டு கொல்லு விக்கலாம் என்ன, நாராயண மூர்த்தி மழித்த தலையும், மயிற்றோகையும், மரவுரி யுடையும், தலை மண்டை யோடும், ஊசியும், உறியும் தாங்கிய புத்த வடிவங் கொண்டு, நாரதர் சீடராக உடன்செல்ல, அசுரரை யணைந்து சிவபூசையைக் கெடுத்துப் புத்தராக்கினர். பின்னர்த் தமது அம்சத்தில் மாயா மோகன் என்னும் ஓர் புத்தனையுண்டாக்கி அங்கிருக்கச் செய்து, தம் உபதேசத்தைக் கொள்ளாத தாரகாக்கன் முதலிய மூவரோடும் ஒரு வரையுஞ் சேராதவாறு கட்டளையிட்டுக் கயிலைமலைக்கு வந்தார்.

திருமாலும் நாரதரும் கயிலைமலையில் ஏறுதற் கியலாது வருந்தி, "நாஞ் சைவர்களை யெல்லாம் புத்தராக்கிய பாவத்தினாற் கயிலையில் ஏறிச் செல்லுதற்கு வலிமை யில்லாதவ ராயினோம். என்ன பவத்தைச் செய் தோம்" என்று இரங்கிச் சிவபெருமானை நினைந்து தவம் புரிந்தார். பரம னுர் தோன்றி "மூடர்களே! நம்பத்தர்களைக் கெடுத்துப் பாழ்மதப் படு

குழியில் வீழ்த்திய பாதகர் நீவிரல்லவோ? சிறிதேனும் அச்சமின்றிச் செய்த அப் பவத்தினாற் கயிலைக்கு வருதல் இயலாதாயிற்று. மாயவா! நாரத னுடன் மானச வாவிசென்று நோற்று நுங்க ளெண்ணத்தை நிறைவேற்றுதிர் என்றார். அங்ஙனஞ் சென்று தவம்புரியா நிற்கையிற் சோமாக் கந்த மூர்த்தி தோன்றி யருளினர், திருமாலும் நாரதரும், ஆங்கிருந்த இந்திரன் தேவர்கள் முதலாயினோரும் எழுந்து சாம வேத கானம் பாடி வீழ்ந்து வீழ்ந்து பன்முறை வணங்கி யானந்த பரவச மடைந்தார். பரமேசன் அவர்களைத் திருக்கடைக்கண் நோக்கஞ் செய்து, அளியீர்! விரைவிற் பாசுபத விரதங்கொள்வீர். அதனை யநுட்டிக்கின் நும் மன எண்ணம் நிறைவேறும் என்று திருவாய் மலர்ந் தருளினார்.

அதுகாலைத் திடீரென்று மடிமீதிருந்த வடிவேலாயுத மூர்த்தி திருக்கூத்தாடினார். உலக மாதாவாகிய உமா பிராட்டியார் தேவராசராகிய சிவபெருமானது திருத்தோளில் இளமுறுவலுடன் ஓர் நீலோற்பல மலரால் தட்டி, "புதநிரச்செல்வத்துட் சிறந்த மகாதேவா! நமது செல்வக் குமரேசன் கூத்தாடுகின்றதைக் கண்ணோக்கி யருள்வீர்" என்றார். தேவியார் உரைத்த வார்த்தைகளைக் கேட்ட பெருமான், உவகையுடன் திருக்கூத்தாடி யருளும் முருகக் கடவுளை இருதிருக்கரங்களாலு மெடுத்துத் தமது மார்பி னிடத்துத் தூக்கி வைத்துச் "சர்வலோக சுதந்திர முடைய ஒரு முருகே! இப்போது நடனஞ் செய்க" என்று தமது அருமைத் திருக்கரங்களாற் பலவகைத் தாளங்களையும் கொட்டினர். கையுடனே கைகள் கூம்பப்பெறாத பரமேசன் தாளமிட, அவற்றிற் குரிய நடனங்கள் எவை யெவையோ அவைகளை யெல்லாங் குமார மூர்த்தி நடித்துக் காட்டினார். சர்வ வியாபியாய், சர்வாந்தரி யாமியாய், சர்வதோ முகராய் விளங்கா நின்ற குமாரக் கடவுள் திருக் கூத்தாட எல்லா உலகமுங் கூத்தாடின. அதனைத் தரிசித்த திருமால், பிரமன், இந்திரன், தேவர், முனிவர் முதலிய யாவரும் ஆனந்த மேலீட்டினாலே தம்மைமறந்து பரவசமடைந்து கூத்தாடினர். அநேக தாள விடயங்கள் சாகித்திய சிந்தாமணி,

சாகித்திய ரத்நாகரம், பிரதாப ருத்திரீயம், தசரூபகம், அமருகம், இரச மஞ்சரி, புட்பபாண விலாசம், மாகம், சாகுந்தலம், கீதசந்திரிகா, கூத்த நூல், இசை நுணுக்கம், தாளசமுத்திரம், சுத்தானந்தப் பிரகாசபரதம் முதலியநூல்களிற் காண்க.

இங்ஙனங் குமாரக் கடவுள் கூத்தாடி யருள, உலக மெல்லாம் ஆடினமையால் அகில லோக நடனமூர்த்தி யாயினர்.

சங்கர சங்கிதை - சிவாகசிய கண்டம்.

[illegible]
[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] ||

அகில லோக நடன மூர்த்தயே நம :

எழுபத்தெட்டாவது,

இராம மூர்த்தி.

இராமன் என்னும் பெயர் சுப்பிரமணியக் கடவுட்கே யுரியது இரம்மியத்தை யுடையவர் சகலகுண சம்பன்னர் அவராகவே விளங்கலானென்க. இரம்மியம் என்பது மகிழ்ச்சி முதலிய பலபொருளைத் தால் சப்தார்த்த நிர்ணய முதலியவற்றிற் காண்க. விட்டுணுவின்



சிவராமமூர்த்தி.

பிறவிகளு மொன்றாய தசரதன் மகனுக்கு உரைப்பாரு முளர். அஃதவர்க்கு இடுகுறியாக்கப் பெயரா மன்றியிடுகுறி மரபன் றென்பது தெள்ளிதிற் றுணியப்படு மென்க. என்னை? அவர்தம் மிருபானைந்து பிறவிகளுட் சமதக்கினி முனிவரின் குமாரனாகப் பிறந்தாற்கும் இராமன் என்று பெயர். வசுதேவர்க்கு உரோகிணி வயிற்றிற் றோன்றியாற்கும் இராமன் என்று பெயர். இங்ஙனம் இராமனென்று மற்றையர்க்கும் வைக்கப்பட்டிருத்தலானும், அதுபோல இற்றை ஞான்றும் நம்மனோர் பலர் குகப்பரம் பொருளின் திருப்பெயர்களான ஆறுமுகன், வேலன், குமாரனாகிய பெயர்களைத் தத்தங் குமாரர்க்கு வைத்தல் கண்கூடாகலானும், தசரதபுத்திரர் பல்வகைத் துன்பங்களினு முழந்து போதலானும் அஃதவற்குப்பொருந்தாமை யறிக. இங்ஙனமே வேதங்களில் வருஉம் நாராயணன் கோவிந்தன், கோபாலன், மாதவன், கேசவன் முதலிய பெயர்க ளெல்லாஞ் சிவ பெருமானுக்குங் குகப் பெருமானுக்கும் வாச்சியமாகப் பொருந்தற்பாலன வென்பது ஆன்றோர் துணிபாம்.

அதுபற்றி யன்றே அப்பய தீக்கித சுவாமிகளும் கேசவாதி நாமசிவ பரத்துவ நிரூபணத்துக் கூறியுள்ளார். அந்நூலின்கண் இந்நாமங்களை யெல்லாஞ் சிவபரமாக்கினமை கண்டு தெளிக. வைணவநண்பர்கள் “ மற்றைய நாமங்க ளெல்லாவற்றையு மியைக்கினு மியைக்கலாம். நாராயண னென்ற பெயர் மற்றை யோர்க்கு எவ்வாற்றானு மியையா தென்பர்.” அதனையு மெமது சிவகுகக் கடவுட்கு ஆக்கிக் காண்பாம். நாராயண னென்பது நரசமூகங்களி லிருப்பவன் எனப் பொருள் ஆற்றல் கோடலால் ஆன்மாக்க டோறும் பரமான்மாவா யிருப்பவ னென்பது போதரும். இங்ஙனம் பொருள் கொள்ளுங்கால் ணைத்துவம் பாதிக்கு மெனின் அற்றன்று.

நரருடைய தொகுதி நாரம் எனத் தொகுதிப் பொருள் பற்றி அண் விகுதி வரு மென்னும் பாணினி சூத்திரத்தால் அண், விகுதிபெற்று

நிற்ப, அதன்மே லாசாரப் பொருளுணர்த்தும் ககர நகர வித்துக்களை
யுடைய யகர விகுதி வந்து அயனீண்டு நாராயவென நின்ற வழி, அது
வும் பகுதித் தன்மைப் படுதலின் அதன்மேல் வினைமுதற் பொருண்மை
யுணர்த்தும் லகர டகர வித்துக்களை யுடைய யுகர விகுதி யன வெனத்
திரிந்து நாராயக னென நின்றவழி, வினைப் பெயர் விகுதியி னின்ற நக
ரம் ணகரமாய்த் திரியு மென்பதனால் அங்ஙனந் திரிந்து நாராயணனென
வொரு மொழியாய் உயிர்த்தொகையை யொத்து நிற்ப னென்னும்
பொருட்டாய்க் காரணக் குறியாய வாறு காண்க. இங்ஙனம் நாராயண
னென்பது லகர டகர வித்துக்களை யுடைய யுகரவீற்றுச் சொல்லாகலி
னன்றே பெண்பாலின் நாராயணீ யென ஙகர பகர வித்துக்களை யுடைய
ஈகார விகுதி யீற்றான் யாண்டும் வழங்குவதூஉ மென்க. யுகர விகுதி யீற்
றுச் சொல்லெனக் கொள்ளாக்கால் நாராயணீ யென ஈகார விகுதி பெறு
தற்கு விதியின்மை யுணர்க நாராயண னெனும் வடமொழிக்கு இங்ங
னம் விகுதிமேல் விகுதி புணர்த்துச் செய்கை செய்வன வெல்லாம் வட
மொழி வியாகரணத்திற் கண்டு கொள்க.

இங்ஙனம் நாராயண சப்தமே யாகுங்கால், இராமசப்தம் ஆவது
வியப்பன் றென்க. இரகுவமிசத்திற் றோன்றிய தசரதன் மகா சிவபத்தி
யுடையவன். தனக்குப் புத்திர சந்தான மின்மையாற் கௌசலை யன்றிக்
கைகேயி சுமித்திரை யென்பாரையு மணந்தான். அவர்க்கு மங்ஙன மில்
லாமை கண்டு மனம் வருந்தி யிருந்த காலை, இருசிய சிருங்கர் என்னுங்
கலைக் கோட்டு முனிவர் தோன்றி,

“இஷ்டிந் தேஹம் கரிஷ்யாமி புத்ரீயாம் புத்ர காரணாத்!
அதர்வ சிரஸிப் ரோக்தை : மந்த்ர த்ருஷ்டைர் விதாநத : !

(ஓ அரசனே! நிற்கு யாம் அதர்வ சிரசு என்ற வேத பாகத்திற் கூறப்
பட்ட மந்திரங்களால் அமைந்த விதிப்படி புத்திர காமேட்டியைப் புத்தி
ரோற்பத்திக்காகச் செய்விப்பேம்)

என் றிவ்வாறுரைத்து அதர்வசிரமந்திரங் கூறி இட்டி செய்தமையா லேயவர் புருடனளித்த பாயசத்தினால் இராமன் இலக்குமணன் பரதன் சத்துருக்கன் என்பார் தோன்றினர். தாசரதி தாடகையை வதைத்துச் சீதையை மணந்து தன்றந்தை வரத்தைக் காக்கும்படி மனைவியுடன் காட்டிற்குச் சென்றிருந்தகாலே, மாயமானை யுண்மை மானென்று துரத்தப் போங்காலே இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றான். அதனாற் றுக்கக் கடலின் மூழ்கிய இராகவன் தாமிர சூடத்துவசம் என்னுந் தலத்தை யடைந்து குகக்கடவுளை நோக்கித் தவமுஞற்ற அவர் தோன்றித் திருவாய் மலர்ந்தருள்வார்.

கோதண்டராகவனே! ஓர் பெண் பொருட்டாக நீ யிரங்குவது அழகன்று. "வழும்புதடி குடரென்பு வார்நரம்பு மேதை நெய்த்தோர் - தழும்புழுக்கண் மூளைமயிர் சருமமாதிகள் குழுமுங் - கொழும்பொதியைப் பகுத்திடுங்காற் கோற்றொடியா ளவள்காட்டாய் - விழும்பி னத்தெவ் வுறுப்பில்லை விழையாமை விடல்கிளவாய்" என்பதுணர்ந்து கொள்க. பயனில்லாத சானகியைப் பெரும்பேறாக மதித்து அலைகின்றனை. அறிவு மிக்க மானுடப் பிறவியை யெடுத்துப் பெறவேண்டிய பயனை விடுத்துச் சிறிது கணச் சுகத்தை நினைத்து மாழ்கின்றனை. இராகவ! பசுபாச மென்று சொல்லப்படுகின்ற சராசரமெல்லா வற்றையுந் தொழிற்படுத்து கின்ற பதியா மெம்மையும் மலமென்னும் வலிய நோயினால் நொந்த நின்னையும் உள்ளவாறு அறிதி இடம், பொருள், ஏவல் முதலியன போல ஒழியாது உன்னோடு கூடப் பிறந்த உடம்பே உனக்கு வேறாய்ப் பிரிந்தழியு மாயின் பெண் என்னும் அவ்வுடல் சொந்த மாகுமோ? சீதையைச் சனகன் மகளென்று நினைக்கின்றாய். அவ்வா றல்லள். தூக்கிக் கொண்டு சென்ற இராவணனது புத்திரியே. அதையுஞ் சுருங்கச் சொல்வேம்.

முன்னர் வேதவதி என்னும் பெண் திருமாலினை விவாகஞ் செய்ய வேண்டுமென்று நினைத்துத் தவஞ் செய்தாள். அவ்வழி வந்த இராவ

வணன் அவளைக் கண்டு மோகித்துக் கற்பழிக்கத் தொடங்கினன். வேத வதி வருந்தி நினக்கே மகளாகப் பிறந்து உன்னையும் உன்னூரையுந் துணை சுற்றங்களையும், படைகளையும் அழிப்பிக்கின்றேனென்று அக்கினி யில் வீழ்ந்து பின் வண்டோதரி வயிற்றில் வந்து பிறந்தாள். அவன் சோதிடர்களை வருவித்துப் பலன்கேட்க, அவர் இக்குழந்தை யிங்குள தேல் இலங்கை முற்றும் நாசமாகும்'' என்று சொல்ல, குழந்தையைக் கடலி லெறியும்படி இராவணன் உத்தரவிட வண்டோதரி யோர் பெட் டிக்குள் வைத்துப் பூட்டிட்டு மனம் வருந்தி அழுது கொடுத்தாள். அது கடலி லெறியப்பட்டு மிதிலைக் கரையிற் சேர்ந்து மணலான் மூடப்பட் டுக கிடந்தது. சனகன் புத்திர காமேட்டி யாகஞ் செய்தற்காக உழுவித் தான் கலப்பைச் சால் வழியாகப் பெட்டி காணப்படத் திறந்து பெண்ணு திருத்தல் கண்டு வளர்த்தான். கலப்பைச் சாலிற்கண் டெடுத்தமை யாற் சீதை என்று பெயரிட்டான். ஆதலால் தன்மக ளென்று அறி யாமல் இராவணனும் மோகித் தெடுத்துச் சென்றான். சீதைக்கும் இரா வணன் தந்தையென்று தெரியாது. உனக்கும் இவ்வுண்மைகள் தெரிந் தில

பெண்களாலே துன்பம் பெரிதும் வருமென்பது துணிபு. உனது தந்தை பெண்ணின் சொல்லால் இறந்தான். நீயோ அப்பெண் பிரிவால் வருந்துகின்றனை. இவை யிரண்டுமே தக்க சாட்சி ஆதலாற் பெண் ணாசையை விடுதி. அதற்காகக் கலங்காதே, அன்றிச் சீதையை மீட்பது கருத்தாயின் மந்திர மொன்று உபதேசிக்கின்றேம். நுந்தையும் அவன் வழிவந்தாரும் நம்மடியவர். தசரதன் எம்மிடத்துப் பக்தியுடையவன். அதனாற்றான் உனக்கு, எமக்கும் எமது தந்தையார்க்கும் உரியதாக வுள்ள "இராமன்" என்னும் பெயரை வைத்தான். உனக்கு முன்னே தோன் றிய இராமர்க்கு யாம் சாரூப்பியம் கொடுத்துள்ளோம். வேதங்களிற் கூறப்

பட்ட எமது பெயர் இராமன் என்பதற்கு ஐயமின்று உன்னைப் போலப் பற்பலராமரைக் கண்டுள்ளேம். இன்னும் பலரைக் காணப் போகின்றேம் வேதத்திலே கூறப்பட்ட இராம சப்தத்திற் குரிய பொருள் நீயேயென்று கருவங் கொண்டாய் அதனாற்றான் இத் துன்பம் அநுபவிக்கின்றாய். தசரதராமனாகிய நீ இவ்வாறு கொள்ளின், பரசுராமன், பலராமன் என்பார் என் சொல்வார்! இன்னும் மற்றைய இராமர்கள் என் கூறுவார்

அதர்வண வேதம் - இராம ரகசியோப நிடதத்திலே,

𑌰𑌾𑌮𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌸𑍋𑌮𑌾𑌰𑍍𑌧𑌧𑌾𑌰𑌿𑌣𑌂 𑌶𑍂𑌲𑌿𑌨𑌂 𑌪𑌰𑌂
𑌭𑌸𑍍𑌮𑍋𑌦𑍍𑌧𑍂𑌲𑌿𑌤𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌕𑌪𑌰𑍍𑌦𑌿𑌨𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌮𑌹𑍇 ॥

ராமம் திரிணேத்திரம் சோமார்த்த தாரிணம் சூலிநம்பரம்!
பஸ் மோத் தூளித சர்வாங்கம் கபர்த்திந முபாஸ்மகே!

என்று கூறப்பட்டதனாற் சிவபெருமா னென்பதே நன்கு வெளியாம். நிற்கு ஆயின் கூறிய மூன்று கண்களெங்கே? பிறைச் சந்திரதாரணம் எங்கே? உமையை நீ பாதியுடம்பாகத் தரித் திருக் கின்றனையா? அதற்கு மாறாகப் பெண்டிழந்தா யன்றோ? சூலமில்லையே கோதண்டந் தரித்துக் கோதண்டராமன் எனப் பெற்றனையே யன்றிச் சூலராமன் ஆனா யல்லை இதனால் இராம என்னும் பெயரும் மந்திரமுஞ் சிவ பெருமானுக்கும் எமக்குமே யுரியதாம். திருமால் இதற்கு முன்னெடுத்த மூன்று இராமாவ தாரத்தில் எம்மையும் பூசித்து மூலசேதுவுஞ் செய்தமையினால் இந்த மந்திரத்தை யுபதேசித்துளோம். சடக்கரமந்திரம்தூலம் சூக்குமம் காரணம் என மூவகைப்படும். தூல சடக்கரமந்திரத்திலேயுள்ள இரண்டா மெழுத்தும், சூக்குமசடக்கரத்தின் இரண்டா மெழுத்துங்கூட்டின் "ராம" என்னு மந்திரமாதல் காண்க. சூக்கும சடக்கரத்திலே நிலைமாறலாலே "(கு)மார" என்று நிற்றலையு மறிகுதி. வேதங்கள் இரா

மன், இலக்குவன் என்று கூறியது முறையே எமையும், எமது துணைவன் வீரவாகுவையும், சீதை என்று கூறியது தெய்வ யானையம்மையையும் என்றறிவாயாக.

ஷடக்ஷரஸ்ய மகாத்மியம் சிவோ ஜாநா திதத்பர :!
ஸ்ரீராம மந்திர ராஜஸ்ய சம்ய கர்த்தோய முச்யதே !
யஏதம் மந்த்ர ராஜம் ஸ்ரீராமச் சந்த்ர ஷடக்ஷரம் நித்ய
மதீதே சோக்நி பூதோ பவதி ! ஸவாயு பூதோபவதி !

எனவரும் வேதமகா வசனங்களாலும்.

காணுப த்யாதி மந்த்ரேஷு கோடி கோடி கணுதிக : !
மந்த்ரஸ் தேஷ் வப்ய நாயாஸ பலதோய ஷடக்ஷர :!
ஷடக்ஷ ரோயம் மந்த்ரஸ்யாத் ஸர்வா கௌக நிவாரண : !

எனவரும் வேத வசனங்களாலும் சடக்கர மந்திரம் எல்லா மந்திரங்களினும் விசேடமுற்ற தென்றும், ஸ்ரீராமச் சந்திரனுடையதே சடக்கரமென்றுங் கூறியிருக்கின்றமை தெளிவாகும்" என்று கூறி, சீதையைப் பிரிந்ததனு லுண்டாகிய காமாக்கினியைத் தணித்தற் கியலாதிருந்த தசரத இராமனை ஆற்றித் தெளிவித்து, இராமதாரகம் என்னுந் தமது சடக்ஷர மந்திரங்களுள் ஒன்றை யுபதேசித்து, இராக்கதரை வெல்லும் வலிமையும் அளித்து. ஆகமங்கள்கூறிய வேதாந்த சார சித்தாந்த மகா வாக்கியங்களாகிய சிவத்துவமசி முதலிய நான்கனையு முபதேசித் தருளினர். பின்னரும் நின் ஐயத்தை மாற்றுகின்றேம் என்று, விபூதி யுத்தூளனமாகத் தரித்த திருமேனியும், சூலாயுதம், பாசம், அங்குசம், தனுபாணங்கள் தரித்த திருக்கரமும், மூன்று திருக்கண்களும் சந்திர தாரணதிருமுடியுஞ் சீதையுருவாந் தெய்வயானை யம்மையாரும், பொருந்தத் தரிசனங்காட்டியருளினர். தசரதராமர் தெளிவுற்று இன்பக்கடலுண் முழுகிச்சென்றார். இதனாலே சிவராம மூர்த்தி, இராமமூர்த்தி, இராமச்சந்திர மூர்த்தி எனப் பெயர் பெற்றார் குகனர்.

அதர்வண வேதம்.

சிவோ மாராம மந்த் ரோயம் வஸ்வர்ணஸ்து வசுப்ரத :!
ருஷிஸ் ஸதாசிவப் புரோக்தோ காயத்ரிம் சந்த உச்யதே
சிவோ மாராமச் சந்த்ரோத்ர தேவதா பரிகீர்த்தித :!

ராமாபி ராமாம் ஸௌந்தர்ய ஸீமாம் சோமா வதப் சகாம்!
பாசாங் குசதநுர்ப் பாண தராந் தியாயேத் த்ரலோ சநம்!
ராமம் த்ரிணேத்திரம் சோமார்த்த தாரிணம் சூலிநம்பரம்!
பஸ்மோத் தூளித சர்வாங்கம் கபர்த்திந முபாஸ்மகே!

திருச்செந்தூர்ப் புராணம்.

தண்டக வனத்துக் கோதா வரிக்குத்தென் பாங்கர்ச் சீதை
யொண்டொடிப் பிரிந்து காமத் தொள்ளழற் பொருநி ராமக்
கொண்டனெஞ் சகமுன் றேறக் கோதில்வாக் கியமோர் நான்கும்
பண்ணிரைத் தருளி ராம னெனப்பெயர் பரித்தாங் குற்றான்.

இராம மூர்த்தயே நம :

எழுபத்தொன்பதாவது,

கதிர்காம மூர்த்தி.

முன்னாட் காலத்து வாயுவினாலே பறித்து எறியப் பட்ட கொடு முடி மூன்றனு ளொன்றாய், தக்கிண கயிலை, பொன்னகரம், ஈழம் முதலிய பற்பல பெயர்களை யுடைத்தாய், சூரபன்மன், இராவணன், குபேரன், மது, உக்கிரவழுதி, விபீடணன், தொண்டை மானிளந் திரையன், நல்லியக் கோடன், குளக் கோடன், உக்கிர சோழன், வாலசிங்கன், சிங்கையாரியன், அரசகேசரி, பரராச சேகரன், செக



கதிர்காம மூர்த்தி.

ராசசேகரன் முதலிய பலப்பல அரசரா லளப்பட்டதாய், சிவாகமம், புராணம், மிருதி, தமிழ்வேதத் திருவருட்பா, இதிகாசம் முதலிய நூல்களினுஞ் சங்க நூல்களினும் ஆங்காங்கே புகழப்பட்டதாகி, விராட்புருடனுக்கு இடைநாடியாய், திரிகூடம், கேதீச்சரம், கந்தமாதனம், ஏமகூடம் நீலம், சுவேலம், சிவனொளிபாதம், செங்கடகம், வள்ளி, காளபைரவம், நகுலம், மேருதலை, மகானுவரம், சிவர்த்தனம், உகந்தை, கதிரை, முதலியமலைகளையும், மாவலிகங்கை, கருடகங்கை, காவிரிகங்கை, மாணிக்க கங்கை, பாலாவி, பாபநாசம், நவகங்கை, மாயவனாறு, கழுநீர்க்கங்கை, வேலாயுத புட்கரணி, கன்னியாகங்கை, நகுலம், சமுத்திர தீர்த்தம், பாதல கங்கை, கல்லாறு, நவகிரி திருவடிநிலை, யமுனரி, நிலாவிரி, வாமனம் முதலிய தீர்த்தங்களையும் பற்பல தலங்களையு முடையதாய் விளங்குவது இலங்கை மண்டலமேயாம்.

இத்தகைய இலங்கை சூரபன்மனுறன் மகேந்திர புரிக்கு வடக்கே யுள்ளது. எவ்வாறெனிற் கூறுதும். இந்து சமுத்திர மென விப்போது வழங்கப்படும் மகேந்திரக் கடலி னடுவே எண்பதினாயிரம் யோசனை யகலமும் நூறு யோசனை வித்தீரணமு முடைய மதூர் நகரைச் செய்வித்து, அதன் எட்டுத் திக்குகளினும் எமபுரம், தேவபுரம், இலங்காபுரம், நீலபுரம், சுவேதபுரம் முதலிய எட்டு நகரங்களையும் புரிவித்து அவற்றிற் கசானனன் (யானை முகன்) துரங்காசியன் (குதிரைமுகன்) யாளிவத்திரன் (யாளிமுகன்) பல்லூக வத்திரன் (கரடி முகன்) வியாக்கிரானனன் (புலி முகன்) வராக துண்டன் (பன்றி முகன்) சிங்கவத்திரன் (சிங்க முகன்) கவயாசியன் (காட்டுப் பசுமுகன்) என்னும் வீரர்களைக் காவல் வைத்தானென்று கந்த புராணங்கூறல் காண்க.

இங்ஙனம் வீரமகேந்திரபுரிக்கு வடக்கு வாயிலி னுள்ளதாகி விளங்கும் இலங்கையின் றென் கோடியிலே விளங்குவது கதிரை

என்னுங் கதிர்காமத் தலமேயாம். இத்தல மகாத்மியங்கள் யாவும் அவ னருள்பெற்ற வான்றோ ரெடுத்துரைப்பதன்றிப் புழுத்த நாயினுங் கடை யேனாகிய யானெடுத்துரைக்கப் புகுத லகை யென்பது சத்தியம். ஆயி னும் என்மனத் தவா வென்வயப்படாதியன்றவா றுரைத்தி யென்று பிடர் பிடித்துந்தலா னெழுந்தனன். இத்தலத்தின் மகிமைக ளெல்லாங் கந்தபுராணம் மகேந்திர யுத்த காண்டங்களினும், பிரமாண்ட புராணம் தல மாகாத்மியத்துங் கூறப்பட்டன வன்றி, விசேடமாக மற்சபுராணம், தக்ஷிண கைலாச மான்மியத்திலே அம்சுகாமாசல மான்மியத்திலு மக லமா யறையப்பட்டுள்ளன. ஸ்ரீமத் அருணகிரி நாத சுவாமிகள் கிளியுரு வெடுத்துப் பலதலங்க டோறுந் தரிசித்துப் போந்தருளிய காலை யித்த லத்தும் உபய கதிர்காமத்தும் எழுந்தருளித் திருப்புகழ் பாடித்., தோத் திரம் புரிந்தருள் பெற்றார். அது "கிளிப்பாடு பூதியில் வருவோனே" எனவித்தலத் திருப்புகழிற் கூறி யருளியதனானும் பெறுதும். அது பற்றி வன்னி மங்கலம் என்னுஞ் சிறப்புப் பெயருள்ளது.

திருப்படை வீட்டுத் தலங்களாகிய திருப்பரங் குன்ற முதலியஆறு தார தலங்களினும் மேலாய துவாதசாந்தத் தலமாய் விளங்குவது. அன்றி யும் சிவதலங்களிலே கோயில் என்னுஞ் சிதம்பரம் ஆகாய லிங்கமுடைத் தாம் பிரகசியத் தலமானது போல, இஃது மங்ஙனே சோதி வடிவரா யெவரானும் விரும்பத் தகுந்த பாவி யோம மூர்த்தி,எவர்களானுங் காண் டற்கு அரியராய் விளங்கலி னிரகசியத் தலமாய் விளங்கும். அஃதிற்றை ஞான்றும் பிரத்தியக்கமாக் காணலாம்.ஆகலின் உலகின்க ணுள்ள தலங்க ளெல்லா வற்றினும் மேலாயதிது. இங்ஙனுள்ள தீர்த்தங்களோ மாணிக்க கங்கை முதலாக அளவற்றன. மலைகளோ கதிரைமலை, வள்ளி மலை, தெய்வயானைமலை, காளபைரவ மலை, முதலாக வெண்ணிலா தன. மூர்த்திகளோ சுப்பிர மணிய சிவ கணேச உமா வீர பைரவ

மகாசாத்த நவ லக்கவீர புட்கலேச ராமகாளிய சுராரி துர்க்கா முதலிய பலப்பல ருளர். அவர்களெல்லாஞ் சுப்பிரமணியக் கடவுளை யுபாசித்து நாற்புறங்களினும் வசித்துளார்.

இத்தலத்திற்குத் தக்கிண கந்தபுரி, ஏமகூடம், அம் சுகாமம், கதிரை கதிர்காமம், பூலோக கந்தபுரி, கோட்டம், வன்னி மங்கலம், காரி காப்பு, வரபுரி, பஞ்சமூர்த்தி வாசம், சகலதேவோ பாசியம், கதிக்கேணி, சகல சித்திகாம், அகத்தியப் பிரியம், சிதாகாசம், குகைத்தலம், தகராலயம், பிரமசித்து, மகத்து, விவிக்தம், ககனம், பரிசுத்தம், அற்புதம், பாசறை, அம்பலம், பரவியோமம், இரண்மயகோசம், அந்தராகாசம், அவ்விறத்த மூர்த்தபுரி முதலிய பலப்பல திருநாமங்களை யுடையது. இங்கே குமாரக் கடவுள் கணப் போதும் நீங்கா திருந்து இச்சாசத்தி, கிரியா சத்திகளா கிய வள்ளியம்மையார் தெய்வயானை யம்மையா ருடனமர்ந்து பற்பல திவ்வியாற்புத திருவிளை யாடல்களைச் செய்தருள்வார். தேவர் முதலிய கணர்கள் இப்போதும் பூசைசெய்வது அன்பர்க்குத் தெரியவருகின்றது.

முன்னே சூரபன்மன் இதற்கருகி லுள்ள தன் மகேந்திர புரியிற் றேவர்களையுஞ் சயந்தனையுஞ் சிறையிட, அதனை மீட்டற்காக எழுந்தரு ளிய சுப்பிரமணியக் கடவுள் திருக்கயிலையினின்றும் இலக்கத் தொன்பது வீரர்களும் இரண்டாயிரம் பூத வெள்ளங்களுந் தம்மைச் சூழப் புறப்பட் டுத் தாரகற் கொன்று திருச்செந்தி யமர்ந்து, சூரபன்மன் முதலாயினோர் தம் வரலாறுகளை யெல்லாம் வாக்குத் தலைவனை தேவ குருவாம் வியா ழமுனிடங் கேட்பார் போலக் கேட்டருளிக் கடல் வழியாகப்போந்து அத னைக் கடந்து, இலங்கை மலைகளையுந் தாண்டி யதன் றென் கோடியை யடுத்தகாலைப் பிரம விட்டுணுக்கள் வந்து பணிந்து, "பரம் பொருளே! இதோ சூரபன்மனிருக்கும் மகேந்திரம். ஆண்டசுர நீசர்கள் செறிதலாற்

றேவரீர்போத றருதியன்று" என்ன, கதிரை வேற் கடவுளும் தெய்வக் கம்மியனுன விசுவகருமனைத் திருநோக்கஞ்செய்தருளி. "ஓர் நகரமைத்தி விரைவி" னென்றருள, அவனும் பலப்பல மண்டபங்களோடு கூடியதும், உன்னத கோபுரங்களால் விளங்கப் பெற்றதும், நடுவணே ஸ்ரீகந்தக் கடவுளின் றிருக்கோயிலா னலங்கரிக்கப் பெற்றதும், பலப்பல வீதிகள் செறியப்பட்டதும், மாற்றுயர்ந்த ஏமத்தால் (தங்கத்திஞல்) அமைக்கப்பட்டதுமான ஏமகூட மென்னும் ஓர் நகரஞ் செய்தனன். அதன்கட் பெருமானுர் எழுந்தருளி யிருந்து போர்புரிந்து அவுணர்த் தொலைத்துத் தேவர்களைச் சிறைமீட்டு, மகேந்திர புரியை வருண ராசற்குக் கொடுத்தருளி வடகோடிக்கட் பரிதி புரத்துள்ள (ஆம்பாத் துறை) உத்தர கதிர்காமம், உபய கதிர்காம மெனப்படும் புதுச் சந்நிதியிற் றங்கி வீற்றிருந்துபின் தம் * மகேந்திர மலையைக் கடந்து இலங்கை மலைகளையுங் கடலினையுந் தாண்டித் திருச்சீரலைவாய் சென்றருளின வென்பது. ஆகலிற் பாசறை கதிர்காமமே. அது, வடமொழிக் காந்தபுராணம் வீரமா மகேந்திர காண்டம் ஏழாவது அத்தியாயம் உக வது சுலோகம் முதல் ௬அ வது சுலோகம்வரையு முரைக்கப்பட்ட வற்றானும், தமிழ்க் காந்த புராணத்து,

கந்தபுராணம் ஏமகூடப் படலம்.

இவ்வகை யயில்வே லண்ண லிராயிரம் பூத வெள்ளங்
கவ்வையி னமைந்து செல்லக் கனைகடல் வரைப்பி னேகி
யெவ்வம தடைந்த தொல்லை யிலங்கையங் குவடு நீங்கி
மைவரை புரைசூர் மேவு மகேந்திர புரமுன் போந்தான்.

காண்டியீது சூரனூர் கடுங்க ணீசர் செறிதலா
லாண்டு சேறன் முறையதன் றதற்கடுத்த வெல்லையா

---

* மகேந்திர மலையென்பது இலங்கையின் றென்மேற் பாகத்தே யுள்ள சப்பிரகாமம் என்ற இடத்தி லுள்ள சிவனொளி பாதமலை யென்பர் பெரியோர்.

மீண்டுபாச றைத்தல மியற்றுவித் திருந்தபின்
வேண்டு மாறு புரிதியைய வினைய நாடி யென்னவே.

கலங்கல் கொண்டிடு மகேந்திர வரைப்பினைக் கடந்தேபின்
னிலங்கை மாநக ரொருவியே யளக்கலை யிகந்தேகி
கலங்கொள் சீருடைச் செந்தியிற் றொல்லைமா நகரெய்தி
யலங்க லஞ்சுடர் மஞ்ஞைநின் றிழிந்தன னயில்வேலோன்.

எனவருஞ் செய்யுள்களால் அறியப்படும். இத்தலத்தே ஏம கூடம் என்னுந் திருக் கோயிலினிடத்தே ஆறு திரு முகங்களும், பதினெட்டுத் திருக் கண்களும், ஆறு திரு முடிகளும், குண்டல நிரைகளும், அழகிய கடப்ப மாலையணிந்த திருமார்பும், வலத்திருக் கரங்களிலே கொடி, வச்சிரம், அங்குசம், அம்பு, வேல், அபயம் என்பவும், இடத்திருக்கரங்களிலே தாமரை, கண்டாமணி, மழு, தண்டு, வில், வரதம் என்பவும் அமைந்த பன்னிரு திருப் புயங்களுங் கொண்டு, கோடி சூரியப் பிரகாசம் போன்ற திருமேனி யுடையராய், வேகமூர்த்தியாய், நவவீரர்களும், இலக்கங் கணதிபர்களும், இரண்டாயிரம் பூத வெள்ளங்களும், தேவர், முனிவர், கின்னரர் முதலாய பதினெண் கணத்தவர்களும் போற்றி வணங்கியேவல்புரிய வீற்றிருந் தருளினர். அத்திருக் கோலத்தை மானுடராகிய சிறியேந் தரிசித்த லியலா தென்றே மூலத்தான மடைக்கப்பட்டு மூர்த்தியும் அவ்வியத்தமாயினர். கந்த சுவாமி இத் தலத்தை விரும்பி யுறைகின்றார் என்பது,

"கதிரை நச்சினனுங் கலசனுமாம் வேத
மதுரை நச்சினார்க்கினியன் வந்து"

என்ற தொல்காப்பிய வுரைச் சிறப்புப்பாயிரத்தா லுணர்க. கதிர்காமம் என்பது, கதிர்=ஒளி, காமம்=இன்பம் எனப் பொருள் படவே ஆன்மாக்களுக்குச் சிவஞான வொளியினாற் பேரின்பத்தை யளிப்பது எனவும், பரஞ்சுடராகிய கந்தக் கடவுள் விரும்பி யுறைவது எனவும்

சொல்வர். அன்றித் துரியப் பொருளாகிய குகஞான மென்னுஞ் சோதி வியாபித்தலாலும். குகசாயுச்சிய மென்னும் இன்பத்தைக் கொடுத்தலானும் வந்தகாரணப் பெயரென்னலுமாம். அது,.

(கதிர்காமத் திருப்புகழ்.)

துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதிரைமீ றற்றசொற்
சுகசொரு பத்தையுற் றடைவேனோ.

என அருணகிரி நாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளி யதனானும் பெறுதும். கதிர்=சூரிய சந்திரர்களால், காமம்=விரும்பிப்பூசிக் கப்பட்ட தெனவுங் கூறுப. இதன் விரிவெல்லாங் கதிர காம மான்மியத்துட் கூறியுள்ளாம். ஆண்டுக் காண்க. கதிர்காமம் என்னுஞ்சொல்லே கதிரை என மரூஉவிற்று. இம் மூர்த்தியின் பெருமையைச், சுப்பிரமணிய தலக் கோவைப் பிள்ளைத் தமிழ்ச் செய்யுளானும் அறிக. அது வருமாறு.

மாணிக்க நிறைகங்கை யாடியுன் னைப்பணிய
வந்திடும் பூதலத்தோர்
வாயூமர் பாடவுங் குருடர்கண் பார்த்திடவு
மலடிகள்பின் மைந்தர் பெறவுங்
காணிற்கு மாரவே லாவென்று மன்பரைக்
கரடிபுலி யானை சிங்கங்
காலிற் பணிந்தஞ்சி யோடவுங் கந்தனே
கண்கண்ட தெய்வ மெனவே
யாணிப்பொன் முத்திமண் டபமேவு கச்சியினு
னடியேனை யாண்டு கொண்டெ
ஜகத்தில் நொந்தபிணி தீர்த்திடவு முன்னிற்கு

மாமுருக மெய்த்தெய்வமே
சேணிற் புலோமசை வளர்த்தபெண் பிடிகணவ
செங்கீரை யாடியருளே
தேவரொடு மனிதர்பணி கதிர்காம வேலனே
செங்கீரை யாடி யருளே.

• இக்கடவுள் அருணகிரிநாதரது திருப்புகழ், பொய்யா மொழிப் புலவரது கோவை, கதிர்காமக் கலம்பகம் என்னு மிவையிற்றை யேற்றருளிய சரிதங்களும் பிறவும் விரிவு மாகலின் விடுத்தாம். இங்ஙனம் ஏமகூடம் என்னுங் கதிர் காமத் தலத்திற் சோதி வடிவாய் வீற்றிருந்து போக பேரின்பங்களை அருளலாற் கதிர் காம மூர்த்தி யெனப் பெயர் பெற்றார்.

• கதிர்காம மூர்த்தயே நம:

எண்ப தாவது,

சிங்க முகாசுரவத மூர்த்தி.

பிரம தேவரின் புத்திரரான காசிப முனிவர்க்குத் திதி யென்னும் மனைவி யிருந்தாள், அவளுக்கு எண்ணில்லாத அசுரர்கள் பிள்ளைகளாய்த் தோன்றினர். அப் பிள்ளைக ளெல்லாந் தேவர்களுடன் போர் புரிந்து இறந்தனர். அதனாலே திதி யென்பாள் புத்திர சோகத்தினால் மிகவும் வருந்திச் சரீரம் மெலிந்த வளாய்ச் சாலவுங் கோபங் கொண்டு மலைகளிற் சிறந்த விந்த மலையி னுச்சியின் மீதேறி "யான் மிகவு முயர்ந்த பிள்ளைகளைப் பெற்று அவர்களாலித்தேவர்கள் யாவரையும் வருத்துவிப்பே" னென்று உறுதி செய்து கொண்டு கீழே வீழ்ந்து உயிர் துறந்தாள். அவள் மரண காலத்தி

சிங்கமுகாசுரவதமூர்த்தி.

லவ்வுறுதி நினைத் துயிர் துறந்தமையால் மீளவும் அசுர குலத்திலே அசு ரேந்திர னென்பானுக்கும் மங்கலகேசினி யென்பாட்கும் மகளாய்ப் பிறந்து சுரசை யென்னும் பெயருடையவளா யிருந்தாள்.

அதனை யறிந்த அசுர குருவாகிய சுக்கிரன் சுரசையென்னும் பெண்ணினால் அசுரர் குலந் தழைய விருக்கு முண்மை யறிந்து வேண்டிய மாயவித்தைகளை யெல்லாங் கற்பித்துக் கொடுத்தான். சுரசை யென்பாள் அவ்வித்தையில் மிக்க வல்லவளாதல் நோக்கிய சுக்கிரனார் அவட்கு மாயை யென்று காரணப்பெயரிட்டழைத்தனர். அசுரகுலந் தழை விருத்தி செய்து தேவகுலத்தை நசிக்கச்செய்தல் உன் கடமை யாதலால், நீ காசிப முனிவரிடஞ்சென்று வேண்டிய பிள்ளைகளைப் பெறுவாயென்று சுக்கிரனு ரவளை அனுப்பினார். அவளு மங்ஙனங் காசிப முனிவரைப் பலவாற்றானே மயங்கச்செய்து மறைந்தனள். முனிவர் புலம்பி வருந்தா நிற்பப் பின்றோன்றினள். காசிபர் வறியோன் பெரு நிதியைக் கண்டாற்போல மனமகிழ்ந்து அவள் காலில் வீழ்ந்து "மங்கையர் திலகமே! எனக்கருள் பாற்ற வேண்டு" மென் றிரந்தார். மாயை யவர் தம்மை நோக்கி "முனிவர் பிரானே நான் என்னென்ன வுருவங்கொள்வேனோ அவ்வவ் வுருவங்களை நீருங் கொள்ளுவிராயின் நும்மைச் சேர்வே னென்ன, இருடியரும் அதற் கிசைந்தார்.

மாயை கொண்டுள்ள அதிரூபத்திற்குத் தக்க சுந்தர வடிவத்தை முனிவருங் கொண்டு அவளா லுண்டாக்கப்பட்ட அழகிய மண்டபத்தே முதலாஞ் சாமத்திற் சென்றுசுரத விளையாட்டைச்செய்தனர். அதுகாலை யசுரர்கட் கெல்லாந் தலைவனாகிய சூரபன்மன் றோன்றினன். அவ்விருவர்க்கு முண்டாய வியர்வைப் பெருக்கில் முப்பதினாயிரஞ் சேனைகளுண்டாயின. அவர்களை யங்ஙனிறுத்தி வேறோர் மண்டபத்தே சென்று

மாயை பெண் சிங்கவுருவெடுக்கக் காசிப முனிவர் ஆண்சிங்க வடிவெடுத்துப் புணர்ந்தார் இரண்டாவது சாமாந்தத்தில் ஆயிரஞ் சிங்க முகங்களும் இரண்டாயிரங் கைகளையுமுடைய மகாபராக்கிரமம் வாய்ந்த சிங்கமுகாசுரன் தேவர்க ளெல்லாம் நடுங்கத் தோன்றினன். வியர்வை வெள்ளத்தி னின்றுஞ் சிங்க முகங்களையுடைய கோரத் தன்மையரான நாற்பதினாயிரஞ் சேனைகள் தோன்றினர். அவர்களை யங்ங னிருத்தி மூன்றாஞ் சாமத்தில் மாயை பிடியுருக் கொள்ள முனிவருங் களிறுருக் கொண்டு வேறொரு மண்டபஞ் சென்று கூட, யானைமுகமுடைய தாரகன் றோன்றினன். அங்கும் யானை யுருவங்கொண்ட நாற்பதினாயிரஞ்சேனைகளுண்டாயின. நான்காஞ் சாமத்தில் வேறோர் மண்டபஞ் சென்று ஆட்டுருவங் கொண்டுசேர்ந்து அசமுகியென்னும்பெண்ணையும், ஆட்டுமுகங்கொண்ட முப்பதினாயிரஞ் சேனைகளையுந் தோற்று வித்தனர்.

பின்னரும் அநேக மண்டபங்க டோறும் புலி, குதிரை, மான், பசு, கரடி, பன்றி, எருமை, செந்நாய், காண்டாமிருகம், கழுதை, ஒட்டகம், குரங்கு, நரி முதலிய வுருவங்க ளெடுத்துச்சென்றுசேர்ந்து அவ்வம்மிருக வுருவமுடைய அறுபதினாயிரஞ் சேனைகளை யுண்டாக்கினர். சூரபன்மன், சிங்கமுகன், தாரக னென்னு மூவர்களுந் தாயாகிய மாயையின்சொற்படி வடக்கேயுள்ள ஆலவனத்தின்கண் வீரயாகம்புரிந்து ஆயிரத் தெட்டண்டங்களையும் நூற்றெட்டு யுகம் அரசாளும் வரத்தையும், சத்தியாலன்றி வேறொன்றானுமிறக்கப்படாத வரத்தையும்பெற்றுத்திக்கு விசயம்புரிந்து யாவரையும் வென்றுவந்தனர். அதன்பின் சூரபன்மன் தெற்கே இந்து சமுத்திர மெனப் பெயர் வாய்ந்த இலங்கையின் றென் சமுத்திரத்தின் நடுவே சுக்கிரன் கூறியபடி மிக்க அலங்கார முடையதாய் எண்பதினாயிரம் யோசனை நீளமும் நூறு யோசனை விசாலமு முடைய வீர மகேந்திர புரியை விசுவகர்மனைக்கொண்டு சிருட்டிப்பித்து, அதன் எட்டுத் திசைக டோறும் எமபுரம், தேவபுரம், இலங்காபுரம், நீலபுரம், சுவேதபுரம், வாம

புரம், பதுமபுரம் என்னும் பட்டினங்களையு முண்டாக்கிப் பட்டாபிடேகஞ் செய்வித்து, விசுவகருமன் புதல்வியாகிய பதுமகோமளையென்பாளையும் விவாகம்புரிந்து பானுகோபன் முதலிய பிள்ளைகளையும் பெற்றிருந்

சிங்கமுகாசுர னென்பான் வடசமுத்திர நடுவே மிக்க விசித்திரமான ஆசுரபுரி யென்னு மோர் நகரஞ் செய்வித்து இரண்டுகோடிசேனைகளுட னங்குச் சென்று அரசு புரிந்தான். அங்ஙனமிருக்கு நாளிலே அவ்வசுரன் யமனது புதல்வி யாகிய விபுதை (விபூதிகை யென்று வடமொழிப் புராணங் கூறும்.) என்னும் பெண்ணை விவாகஞ்செய்து மகாசூரனென்னும் புதல்வனைப் பெற்றான். பின்னரும் பலப்பல கன்னியர்களைக் கூடி நூறு பிள்ளைகளைப் பெற்றான். இங்ஙன மிருக்கு நாளிலே சூரபன்மன் றேவர்களையும் இந்திர குமாரனான சயந்தனையுஞ் சிறையிட்டதனால் அவர்களை மீட்கவேண்டிக் கந்தக் கடவுள் திருக்கயிலையி னின்றும் புறப்பட்டார். அவருடனே வீரவாகு முதலிய துணைவர் ஒன்பதின்மர்களும், இலக்கம் வீரர்களும், இரண்டாயிரம் பூத வெள்ளங்களும், நூற்றெண்மர் சேனாபதிகளும் கூடவந்தனர். அறுமுகக் கடவுள் அவர்களுடன் வழிக்கொண்டு எதிர்ப்பட்ட தாரகனையுங் கிரவுஞ்ச மலையையும் அழித்து இலங்கை வழியாய் நடந்து அவ்விலங்கையின் றென்கோடியையடுத்ததும், பிரம விட்டுணுக்கள் வந்து பணிந்து, சுவாமீ! இது மகேந்திர புரியாகும். ஆண்டு நீசரா மசுரர்கள் இருத்தலா லாங்குச் சேறன் மாபன்றென்ன, ஆங்கே விசுவ கருமனைக்கொண்டு பாடிவீடு செய்வித்துத் தாமுஞ் சேனைகளுமாகக் கதிர்காம மெனப் பெயரிய ஏமகூடத்தின்கணிருந்தனர். ஆங்கே வீரவாகு தேவரைத் தூதாக அனுப்பித் “தேவர் சிறையை விடுதி. அன்றேல் நம் வேற்படைக்கு இரை ஆவாய்” என்று தெரிவிக்க, அவன் பரிகசித்து இத்தூதனைப் பிடித்து பிணித்து விலங்கிடுதி” றென்ன வீரவாகுதேவர்தம்முடனெதிர்த்தார்பலரையும் அழித்து

சஎ௨ சிங்கமுகாசுரவத மூர்த்தி.

மகேந்திர புரியையு மழித்துக் குகக்கடவுள் சமுகத்தில் வந்து வணங்கி நிகழ்ந்த வெலா முரைத்தார்.

சூரபன்மன் மந்திராலோசனை புரிய நினைந்து அதற் குரியவர்களுடன் மயூரன், துர்க்குணன், தருமகோபன், காலசித்து, சண்டன், அனலன், சிங்கனென்னு மந்திரிகள் சேர்ந்து யோசித்தகாலை, பானுகோபன், அக்கினிமுகன் முதலாய பலரும் சூரபன்மனுக்குத் தகுந்தபடி "அந்தக் குழந்தை யினையுஞ் சேனைகளையுங் கொல்வ தரிதன்று" என வீரமொழி கூறினர். அவர்களுட் சிங்கமுகன் எழுந்து, அண்ணே! கந்தக்கடவுளைக் குழந்தையென் றெண்ணுறீதே. அவர் முன்னே யெங்கட்கு வரங்கள் தந்த பரப்பிரமமேயாகும். ஆதலாற் றேவர்களின் சிறையை விட்டு அவரைச் சரணடைந்து வாழ்தலே தகுதி" யென்று கந்தக்கடவுளின் மகிமைகளை யெடுத் துரைத்தான். சூரபன்மன் கேட்டு மிக்க கோபமடைந்து "நீமாயையா லிங்ஙனம் பிதற்றுகின்றாய். ஆகலி னிவ்விடத்தை விட்டு எங்கேயாவது போய்விடு" என்று கூற, சிங்கமுகன் "உண்மை யுரைப்போர் விரோதிகளே. ஆகலின் தகுந்தபடி யுரைப்பே" மென்று கூறுவான். "அசுரேசுரா! நின் எண்ணத்தை யறியக்கூறினேன். இப்போதே யென்னை விடுத்தாற் பாலனையும் அவன் சேனைகளையுங் கொன்று வருவே" னென்ன, சூரபன்மன் சாலவும் உவகையடைந்து "தம்பியே நீ யவ்வாலிபனைக் குறித்துச் செல்வது தகுதி யாகாது. வேண்டியகாலத்து உன்னை யழைப்பிப்பேம். இப்போது நின் இருப்பிடஞ் செல்வாய்" என்னச்சிங்கமுகாசூரன் றனது ஆசுரபுரிக்கு வந்திருந்தான். மகேந்திர புரியில் யுத்தந் தொடங்கி யெல்லாரு மிறத்தல் கண்டு சிங்கமுகனை வருமாறு தூதனுப்ப அவன் புறப்பட்டுத் தமையனிடம் வந்து யாவுந் தெரிந்து கொண்டு போர்க்கோலமுற்று புறப்பட்டான். அவனுடன் மகாபலமுள்ள ஓரிலக்கம் வாகினித்தொகைகொண்ட சதுரங்க சேனைகள்வந்தன.

அதனைக் கண்ட பிரம விட்டுணு முதலாய தேவர்களோடிச்சென்று, "பரம்பொருளே! ஆயிரந் தலைகளையும் இரண்டாயிரங் கைகளையு முடையவன்; ஆயிரம் யோசனை விஸ்தீரண முடைய திடமான மார்பையுடையவன் வருகின்றான். அவன் சத்துருக்களையெல்லாம் வென்று ஆயிர மண்டலங்களை யாள்கின்றான். அன்றி யொருகா லிப்பூமியைத் தூக்கினான். பிரமாண்டத்துடன் உலகங்களை யெல்லா மொரே யுருண்டையாக விழுங்கக் கருதி மேருமலையைப் பிடுங்கி யண்டச்சுவரி னடித்த காலைச் சார மில்லதென்று முன்போல் வைத்துளான். இருபக்கங்களினும் கிழ லாடப்பெற்றவோர். மகா சூலத்தைப் பிடித்திருக்கின்றான். ஆகலின் அவனைத்தேவரீர்விரைவினழித்து அடியேங்களைக் காத்தருளல்வேண்டு" மென்றி இரந்தார்கள். பரஞ்சோதிப் பிழம்பாகிய கந்தக்கடவு ளன்றென்று சாரதியான வாயுதேவனை நோக்கி நமது மனோவேகப் பொற்றேரைக்கொண்டு வருக" என்று அருளினர். அப்போது வீரவாகுதேவர் வந்து வணங்கி யடியேன் அவர்களை யெல்லாங் கொல்லுவே னென்று வேண்ட, அவரும் மந்தகாசமுடையராய் வீரவாகுவை யனுப்பினர். வீரவாகு தேவரும் தம்பிமார் எண்மரும் இலக்கம் வீரர்களும் நூற்றெண்மர் சேனாபதிகளும் ஆயிரவெள்ளம் பூதங்களும் புறப்பட்டுப் போய் காலையிரு பக்கச் சேனைகளும் எதிர்த்துப் போர்செய்தன. அசுர சேனைகள் பூதசேனைகளைத் துரத்துவதைக் கண்ட பூதசேனாபதியான சிங்கன் என்பார் அசுர சேனைகளை யதஞ் செய்தல் கண்டு அவருடன் உதிட்டிரனென்னும் அசுரத்தலைவன் றண்டத்தாற்போர்செய்யச் சிங்கர் அவன்மார்பிலறைந்து கொன்றார்.

அவருட னசுரரெல்லாரு மெதிர்த்தனர். அதனைக் கண்ட இலக்கம் வீரர்களி லொருவரான கனகர் பாணங்களால் அசுரர்களைத் துரத்தினார். அசுர சேனாபதி துர்முகன் வந்தெதிர்க்க வீரமார்த்தாண்டர் அவனை மூர்ச்

சையாக்கினர். அசுர சேனைக ளோடப் பூதசேனைகள் சொக்கரிப்பதைக் கண்ட சிங்க முகாசூரன் அச்சேனையுட் புகுந்து அவர்களை வாரி வாரியெறிந்தும் பலவாறாகக் கொன்றும் நாசம் பண்ணினான். பின்னர் மற்றைய இலக்கம் வீரர் முதலினோரை யெல்லாம் அதம் பண்ணுவதைக்கண்டு மற்றையோ ரெல்லாம் சிங்கத்தைக் கண்டு மானோடுவதைப்போல ஓடினார்கள். அதனைக்கண்ட வீரவாகுதேவர்வந்து எதிர்த்துச்சரமழைகளால் அசுரர்களை யதம் பண்ணினார். சிங்கமுகாசுரனுடைய நூறு பிள்ளைகளும் வந்தெதிர்க்க அவர்களை ஒரே வாளால் வெட்டி யெறிந்து தேரிலேறினர்,

அதனைக் கண்ட சிங்கமுகாசுரன் மிக்ககோபங் கொண்டு பயங்கரமான யுத்தம் புரிந்தான். வீரவாகு தேவரும் அவனுடன் அதிபராக்கிரமத்துட னின்று யுத்தஞ்செய்தார். இங்ஙன மொருவர்க்கொருவர்பாணங்களை விடுவதும் மாற்றுவதும் தேர் சாரதி குதிரை யிவைகளை யழிப்பதுமாக நின்று யுத்தம் புரிந்தார்கள். சிங்கமுகன் இவனைச் சயிப்ப தருமையாமென்று நினைத்துத் தன்றாயாகிய மாயையினாலே கொடுக்கப் பட்ட மாயாபாசத்தை விடுத்தான். அதுமிக்க விரைவிற் போய்ப் பூதர்களையும் இலக்க வீரர்களையும் நவவீரர்களையுங் கட்டிச் சென்று உதயகிரியில்வைத்தது. அசுரனுஞ்சேனைகளும் அட்டகாசம் புரிந்துகொண்டு கந்தனெங்கேயுள்ளானெனத் தேடினுந்தனர். அவையிற்றையெல்லாம் வாயுதேவ னறிவிக்கச் சிங்காதனத்தி னின்றும் பெருமானா ரிறங்கிப் பிரமனாற்கொண்டு வந்து வைக்கப்பட்ட வேதப் பாதுகையின்க ணேறி மனோவேகப் பொற்றேர்மீ[illegible] ஆரோகணித்து வீற்றிருந்தருளினார். இந்திரன் அக்கினி யமன் வருணன் பிரமன் விட்டுணு முதலாய தேவர்கள் யாவரும் கொடி குடை சாமரம் அடைப்பை முதலியனதாங்க, வாயுதேவன் தேர் செலுத்தச் சென்றருளினார். ஆயிரம்பூத வெள்ளஞ் சேனைகளுஞ் சென்றார்கள்.

போர்க்களஞ்சென்றதும் அசுரசேனைகள் பூதசேனைகளுட னெதிர்த்து நிற்க முடியாது ஓடினார்கள். அதனைக் கண்ட சிங்கமுகன் பூதர்கள்மேல் விழுந்து வாரி வாரி விழுங்கினான். விழுங்கப்பட்ட பூதர்கள் காது மூக்கு முதலவற்றின் துவாரங்களாலோடினர். வயிற்றுட் சென்ற பூதர் ஆயுதங்களாற் கீறியும் முடியாதாயிற்று. மற்றைய வீரர்களையும் விழுங்கியவர்கள் வெளிவாராதபடி காது மூக்குமுதலிய துவாரங்களை மூடினான். அதனையறிந்த சூரபன்மன் ஓர் கோபுரத்தின்மீதேறித் தம்பியின் போரைப்பார்த்திருந்தான். முருகக் கடவுள் வில்லையெடுத்து வளைத்தார். அதன் சத்தத்தால் ஊழிக்காலமோவென்று உலகங்களெல்லாம் பயந்து நடுங்கின. ஓரத்திரத்தைப் பிரயோகித்துவீரமொழிக ளுரைத்த அசுரனுடைய மார்பைப் பிளந்தனர். அத்துவாரவழியே சில பூதர்களோடி வருவதைப்பார்த்து அசுரன் அந்தப் பிளப்பைத்தன் கைகளால் மூடிக்கொண்டு ஓர் தண்டத்தை யெடுத்துவந்தான். குகப்பிரான் நான்கு பாணங்கள் விட அவையத்தண்டத்தைத் தூளிசெய்து அவன்ற னெற்றியில் உருவ, மூர்ச்சைகொண்டான். எல்லாப் பூதர்களும் அவ்வழியாக வெளிவந்து குமாரசுவாமியின் பக்கத்தே நின்றார்கள். இறந்த பூதர்களும் செவ்வேளின் அருளாலெழுந்து நின்றனர். அதுகாலை முருகக்கடவுள் பாசத்தை யழித்து வீரவாகு முதலாயினோரைக் கொண்டுவரும்படி ஓர் அம்பைப் பிரயோகித்தருளினார். அது உதயகிரிசென்று பாசத்தைக் களைந்து மூர்ச்சையானாவர்களை யெழுப்பி யோர் புட்பக விமானம்போல் அவர்களைச் சுமந்து கொண்டுவந்து குமரேசன் முன் விட்டது. யாவரு மிறைஞ்சிப் பெருமானை வந்தித்தனர். மூர்ச்சையான அசுரர்களெல்லாம் எழுந்து தேவசேனை வளைந்து ஆர்ப்பரித்துச் சரமாரி பொழிந்தனர். கருணை நிதியாங் கந்தக் கடவுளும் பாணங்களைப் பிரயோகிக்க அவையொவ்வொன்று கோடாகோ

டியாய்ச் சென்று அசுர சேனைகளையெல்லாங் கொன்றுவிட்டன. சிங்க முகன் தானொருவன் றனியே நிற்பதுகண்டு பொரத் தொடங்கினன்.

ஒருவருக் கொருவர் பாணங்களை விடுவதும் மாற்றுவதுமாக நின்றனர். அசுரன் கடவுள் மீது ஓர் பாசத்தைப் பிரயோகித்தான். அதனைக் கண்ட துண்டஞ் செய்தார் கடவுள். அதனைக்கண்ட வசுரனுரப்பரித்து ஓடி வருவதைக் கண்டு ஆயிரம்பாணங்களா லவனுடைய வாயிரந் தலைகளையும், இரண்டாயிரங் கணைகளா லிரண்டாயிரங் கைகளையும் அறுத்தார். மீளவும் அந்தத் தலைகளும் கைகளும் உண்டாயதைக் கண்டு தேவர்கள் மிக்க வியாகுல மடைந்து ஆச்சரியமு முற்றார்கள். அசுரன் பகவானை நோக்கி "நமது பலம் வீரம் என்பவைகளையும் தலைகள் கைகள் முளைக்குந் தன்மையையும் நீ யறிந்தாயல்லை. தேவர்களை ஒருகாலும் யாங்கள் விடுகிலேம். நின்னை மாத்திரம் விடுகின்றும். எங்கேயாவது ஓடிச்சென் றுன்னுயிர் காத்துக்கொள்" என்றான். அதனை யாதி பரம குகக் கடவுள் கேட்டுப் புன்முறுவல் பூத்து விரைவிலே நின்னை யிலகுவிற் கொல்கின்றுமென்றார். அசுரன் வேகமாய்ச் சென்று இரண்டாயிரங் கைகளாலும் அவ்வளவு மலைகளைப்பிடுங்கி யெறிந்தான். அவைகளைக் கந்தக் கடவுள் நூறு கணைகளாற் பொடிசெய்து மார்பி லுருவுமாறு ஆயிரம் அத்திரங்கள் பிரயோகித்தார். அதனு லிரத்த வெள்ளம் பாயப் பெற்றவனுயினும் நகைத்துப் பின்னும் பல மலைகளைப் பிடுங்கினன். சுவாமி வெகுளிகொண்டவராய் ஆயிரங் கணைகளாற் றலைகளைக் கொய்தனர். அத்தலைகள் உடனே முளைக்க அசுரன் மலைகளை யெறிந்தான்.

அறுமுகக் கடவு ளிரண்டாயிர மம்புகளா லவைகளை யெல்லாம் அழித்து அவனுடைய வெல்லாக் கைகளையு மறுத்தனர். அக் கைகள் பின்னரு முண்டாயின. இங்ஙனம் அவனுடைய கைகள் தலைக ளாகிய உறுப்புக்களை யாயிரத்தெட்டு முறை யறுத்தறுத்து

விழுத்தினர். அவைக ளெல்லாம் எங்கணும் விழலாயின. அறுபட்ட தனு லுண்டாகு மோசையைக் கேட்டுத் தேவர்க ளெல்லாம் அச்சங் கொண்டார்கள். கார்த்திகேயக் கடவுளார் சிங்க முகாசுரனது ஒரு தலையும் இருகைகளையும் விட்டு மற்றைய வுறுப்புக்க ளெல்லாவற்றையு மறுத்தார். பின்னும் பின்னும் அவை முளைத்தல் கண்டு ஓர் உங்காரஞ் செய்தார். அவைக ளெல்லா முடனே யுள்ளடங்க ஒருதலையோடும் இருகைகளோடும் நின்றான் அசுரன்.

அதனால் அசுரன் கோபங்கொண்டு ஓர் மலையைப் பிடுங்கி யெறிய அசுர குலாந்தகர் அதனைப் பொடிபடுத்த, அரிமுகன் ஓர் தண்டாயுதத்தைக் கையிலெடுத்து, "பாலா! நினக்கு வேலினாலு மம்புகளாலும் போர் செய்ய வல்லமை யுண்டன்றி, வேறாயுதங்களாற் பொரும் வல்லமையில்லையே" என்று எறிந்தான். சுப்பிரமணியக் கடவுள் தமது காத்தி லிருந்த வச்சிராயுதத்தைத் திருநோக்கஞ் செய்தருள, அது மிக்க வேகத்துடன் சென்று தண்டாயுதத்தைத் தூளி செய்து அசுரன் மார்பினும் பாய்ந்து உருவிச்சென்று வானதி யாடி, அறுமுகப் பெருமான் திருக்கரத்தில் வந்தமர்ந்தது. சிங்க முகாசுரன் துடிதுடித்துக் கீழே வீழ்ந்து இறந்தான்.

இங்ஙனம் சிங்க முகாசுரனை வதைத்தமையாற் குமாரக் கடவுள் சிங்க முகாசுர வத மூர்த்தி யாயினர்.

ஸ்காந்தபுராணம் - சங்கர ஸம்ஹிதை.

[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] ।

சூரசங்கார மூர்த்தி.

[illegible]
[illegible] ।

சிங்கமுகாசுராவத மூர்த்தயே நம:

எண்பத்தோராவது,

சூரசங்கார மூர்த்தி.

காசிப முனிவர் புத்திரனாகிய சூரபன்மன் றாயான மாயையின் சொற்படி பசுபதியைக் குறித்துச் செய்யும் வீரயாகத்தைப் புரிதற்காக ஆலவனம் நோக்கித் தம்பிமார்களுடன் சேனைகள் சூழ்ந்து வரச் சென்றான். நடுவழியிலே யச்சேனைகளின் கூட்டத்தைப் பார்த்துச் சுக்கிரனார் மிகவும் ஆச்சரியங்கொண்டு வசிய மந்திரஞ் செபித்துச் சூரபன்மன் முன்வந்து "நானுங்கள் குரு" என்றார். சூரபன்மன் அவரது பாதங்களை வணங்கி நின்றனன். சுக்கிரனார் யாகங்களில் வரு மிடையூறுகளை நீக்கத் தக்க மந்திரத்தை யுபதேசித்துச் சென்றார். சூரபன்மன் ஆலவனஞ் சென்று பதினாயிரம் யோசனை விசால முள்ள யாகசாலை யமைத்து அதைச் சூழ மலைகளைக் கோட்டையாக்கினான். அதனுட் பக்கங்களைச் சூழச் சேனைகளை நிறுத்தி நடுவே ஆயிரம் யோசனை சதுரமு மாழமு முள்ள ஓர் அக்கினிக் குண்டத்தை யமைத்தான். அதனைச் சூழ அது போலும் நூற்றெட்டுக் குண்டங்களையும் அவைகளைச் சூழ வாயிரத் தெட்டுக் குண்டங்களையுஞ் செய்து பிரதான குண்டத்திற் றான் ஓமஞ் செய்ய முயன்றான்.

அதனை யறிந்த மாயை யென்பாள் எருக்கு, வெள்ளெருக்கு, நாயுருவி, பூவரசு, வேம்பு, இறலி, புளி முதலான விஷமரங்களின் சமித்துக்களும், பால், தயிர், நெய், எண்ணெய், தேன், துவரை, பயறு,

உழுந்து, எள், கொள்ளு, கடுகு, அரிசி, நெல் முதலியவும், இலக்கம் பசுக்கள், அசங்கள், பெற்றங்கள், சோரி, தடி, பச்சைக் கர்ப்பூரம், சந்தனம், கஸ்தூரி, பற்பல வகைப் புஷ்பங்கள், தர்ப்பங்களுடன் (அத்திமரத்தாற் செய்யப்பட்ட ஓம பாத்திரம்) பிரஸ்தரம் (தர்ப்பத்தினோர் முட்டி) ஸ்வத்தி (கோக்களைச் சேதிக்கு மாயுதம்) அரணி முதலியவும் ஆகிய பொருள்களை யெல்லாம் மூவாயிரம் யோசனை தூரம் நிறைத்தாள். சூரபன்மன் கிழக்கு முதலிய எட்டுத் திக்குகளிலும் துர்க்கை, வைரவக் கடவுள், பத்திரகாளி, பூதம், பிரேதம், பிசாசம், இடாகினி, கணங்களின் கூட்டம், சாமுண்டி என்னும் தேவதைக ளெட்டனையும் பூசித்து அரணியைக் கடைந்து குண்டமத்தியில் மூட்டி வளர்த்து, நுனியிலே கூர்மையை யுடைய வச்சிரகம்ப மொன்றனை நாட்டிப் பதினாயிரம் வருடம் அளவும் ஓமம் புரிந்தான். நூற்றெட்டு, ஆயிரத்தெட்டுக் குண்டங்களிற் சிங்கமுகன் தாரகனென்பா ரோமஞ் செய்தனர் அவ்வாறு செய்தும் மகாதேவன் பிரசன்னமாக வில்லை. சூரபன்மன் விசன முற்றுக்கம்பத்தினுச்சியி னின்று தன்னுடற் றசைகளை யரிந் தரிந்து ஆயிரம் வருட மளவும் ஓமஞ் செய்தான். அதற்குந் தேவதேவன் வாராமைகண்டு கம்ப நுனியைத் தன் னபான வழியாக விட்டு மூளை கிழிக்கப் பட்டானுய்க் கம்பத்தி னடியிற்சேர்ந்து அக்கினி குண்டத்தில் வீழ்ந்திறந்தான். தேவர்கள் பேரானந்த மடைந்தார்கள். சிங்கமுகன் தாரக னென்பாரும் தங்கடங்கள் சிரங்களை முளைக்க முளைக்க வெட்டி வெட்டி யோமஞ் செய்தனர் சங்கரனதற்கும் எழுந்தருளாமை கண்டு இருவரும் உயிர் விட வுன்னினர். அதனைத் திருநோக்கஞ் செய்தருளிய கருணையங் கடலான உமாபதி ஓர் விருத்தப் பிராமண வடிவங் கொண்டு வாமனாது முதுகெலும்பாந் தண்டினை யூன்றிக் கொண்டு அவண் தோன்றி யவர்களைத் தடுத்து ஆகாயகங்கையை யழைத்து நனைப்பிக்கச் சூரபன்ம னுயிர்பெற் றெழுந்தான்.

சிவபெருமா னவ்வடிவை விடுத்து "இருதம் சத்யம் பரப்பிரஹ்ம புருஷம் க்ருஷ்ண பிங்களம்! ஊர்த்வ ரேதம் விரூபாக்ஷம் சங்கரம் நீல லோகிதம்! உமாபதி: பசுபதி:" என யோக தத்வோப நிடதமும், "உமா சகாயம் நீலகண்டம் ப்ரசாந்தம்" என மண்டலப் பிராமணோபநிடதமும் பிரதி பாதித்தாங்கு உமா சமேதராய்த் தோன்றிச சூரபன்மன் முதலாயி னோர் துதிகேட்டு மகிழ்ந்து, ஆயிரத் தெட்டு அண்டங்களையும் நூற் றெட்டியுகம் அரசாளவும், வச்சிரயாக்கையும், பலப்பல மணிகளா லலங்க ரிக்கப்பட்ட இந்திரமா ஞால மென்னு மிரதமும், எந்தவிடத்தையும் ஓர் கணப்போதி லடையும் சிங்கவாகனமும், பாசுபத முதலியதெய்வப்படை க்கலங்களும், பதினுயிரகோடி யெண்ணுள்ள நால்வகைச் சேனைகளும், சத்தியாலன்றி வேறொன்றானு மழிவுறாத் தன்மையுங் கொடுத்தருளிப் போந்தார். பின் சூரபன்மன் முதலினோர் தந்தை சொற்படி சுக்கிரனை யடைந்தார். அவர் வஞ்சகத் தன்மையால் மாயாவாத மென்னுமசகான்ம வாதத்தை யுபதேசிக்க அதனை யுண்மையாக் கொண்டு திக்கு விசயம் புரிந்து யாவரையும் வென்று தேவர்கள் ஏவல் புரிய வீர மகேந்திரத்துப் பட்டாபிடேகங்கொண்டு அரசுபுரிய லாயினன். அதுகாலைப் பதுமகோ மளை யென்பா ளிடத்துப் பானுகோபன், அக்கினிமுகன், இரணியன், வச்சிரவாகு என்னும் நான்கு பிள்ளைகள் தோன்றினர். இன்னுந் தேவ அசுர இராக்கத நாக கிம்புருட கந்தர்வ சித்த வித்தியாதர கருட கின்னர கன்னிகைகள் பலரை மணந்து அவர்களிடத்தும் மூவாயிரம் பிள்ளைக ளைப் பெற்றான்.

சூரபன்மன் றங்கையாகிய அசமுகி துருவாசரை வலிதிற் கூடி வில்வலன் வாதாவி யென்னு மிரு பிள்ளைகளைப் பெற்றாள். அவர்கள் அகத்திய முனிவராற் கொல்லப்பட்டனர். சூரபன்ம னிந்திராணியின் மேல் மோகங் கொண்டு அவளைக் கொண்டு வருமாறு சேனைபதிக்குக் கட் டளை யிட்டான். அவனங்ஙனஞ் சேனைக ளோடும் ஒன்பது கோடி அசுரப் பெண்களோடும் புறப்பட்டுச் சுவர்க்கலோகம் வருவதை யறிந்த

இந்திர னிந்திராணியுடன் கிளியுருக்கொண்டு பூவுலகடைந்து சீகாழியிற் பூசை செய்திருந்தான். அவனைத் தேவர்கள் சூரன் கொடுமைக் காற் றூது வந்து நெருக்க, மாதேவனிடஞ் செல்வான் அரிகர புத்திரரான ஐய னாரின் சேனைத்தலைவர் வீர மாகாள ரென்பாரை இந்திராணிக்குக் காவ லாக வைத்துப் போனான். அதுகாலை தன்றமையனாகிய சூரபன் மனுக்கு நாடோறும் அழகுள்ள இரண்டாயிரம் பெண்களைக் கொண்டு போய் விடுகின்றவளான அசமுகி தன்றோழி துன்முகியுட னவ்விடம் வந்தாள். இந்திராணியைக் கண்டு தமையனுக்குச் சேர்க்குமாறு கை யைப் பற்றியிழுக்க வவளோலமிட்டாள். வீரமாகாள ரோடிவந்து அச முகி துன்முகிகளின் கையைவெட்ட, அசமுகி பெருகிய விரதத்துடன் றமையன் காலில்வந்து புரண்டு புரண்டு "இந்திரன் சேவகர்களுளொரு வனான தேவன் இததுன்பஞ் செய்தான்" என்றாள் சூரன் பானுகோப னாற் சுவர்க்கலோகத்தைக் கொளுத்து வித்து அங்குள்ள பொருள்களை யெல்லாஞ் சூறையாடுவித்துத் தேவர்க ளெல்லாரையுஞ் சயந்த குமாரனை யுங்கட்டி மகேந்திரத்திற் கொண்டுவருமாறு செய்து சிறையிடுவித்தான்.

அச்சிறையை மீட்டற்காகவே முருகக்கடவுள் திருவவதாரஞ் செய் தார். உமாதேவியாரது சிலம்புகளினின்றுந் தோன்றிய இரத்தின வல்லி தரளவல்லி, புட்பராகவல்லி, கோமேதக திலகை, வைடூரிய வல்லி, வச்சிர வல்லி, மரகத வல்லி, பவள வல்லி, நீலவல்லியென்னு நவசத்திகள் பரசி வனை நோக்கியாசையுற்றுக் கருப்பங்கொண்டார்கள். அவர்தம் வியர்வையி னின்றும் இலக்கம் வீரர்க ளுதித்தார். முறையே யவர்களி னுயிட மிருந்து வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரன், வீரமகேசன், வீரபுரந்த ரன், வீரராக்கதன், வீரமார்த்தாண்டன், வீராந்தகன், வீரதீரன் என்பார் தோன்றினர். இவர்களுடனும் இரண்டாயிர பூத வெள்ளங்க ளோடும் ஆறுமுகக் கடவுள் மகேந்திர புரியின் வடவாயிற்கணுள்ள இலங்கையின் றென் கோடியிலேயுள்ள ஏமகூடமாகிய கதிர்காமத்திற் பாடிவீடு கொண்டு

எழுந்தருளி யிருந்தார். அவாராலும் வீரவாகு முதலிய வீரர்களாலுந்தார கன், சிங்கமுகனுகிய தம்பிமார்களும் பானுகோபன் முதலிய பிள்ளைக ளும் சேனைகளும் மந்திரிகளும் அழிந்தமையாற் சூரபன்மன் மிக்க துன் பப்பட்டுப் போர்க்கோலங்கொண்டு ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள சேனைகளை வருமாறு கட்டளை யிட்டுப் போர்க்களஞ் செல்லத் தொடங் கினன்.

சேனைகள் எல்லாம் வந்து மொய்த்தன. சூரபன்மன் றன்னையலங் கரித்து அத்திரங்கட் கெல்லாம் மேலான பாசுபதத்தையும் ஏனைய பிர மாத்திரம் முதலியவற்றையு மெடுத்துக் கொண்டு, ஏழாயிரங் குதிரை கள், சிங்கங்கள், பூதங்களென்னு மிவையிற்று விழுக்கப் படுகின்றதும் அழகியதும் வேகமானதுமான இந்திரமா ஞாலமென்னும் இரதத்தி னிடத்து ஏறிச்சென்றான். அவ்விரதத்தைச் சுற்றி யாயிர கோடி தேர் கள் தொடர்ந்து வந்தன. எண்ணில்லாத சேனைகளுடன் பொருகளம் போந்தான். வீரர்களுஞ்சேனாபதிகளும், பூதர்களும் அதிக பயங்கொண் டனர். அதனைத் திருநோக்கஞ்செய்த கதிரை வேலாயுதப் பெருமானும் மனோவேகப் பொற்றேர் மீதேறி இலக்கத் தொன்பதின்மரும் இரண் டாயிரம் பூதவெள்ளங்களுஞ் சூழப்போர்முனை யடைந்தருளினார்.

ஆயிரத்தெட்டு அண்டங்களிலுமுள்ள சேனைகளையெல்லாம் பார்த்த பூதர்கள் வீரர்கள் சேனாபதிகள் யாவரு மிவர்கள் முன்னர் யாங்க ளெதிர் நிற்கலாற்றேம். குகப் பெருமா னொருவரே யெதிர் நிற்றற் குரியரெ னப் பேசிக் கொள்ளுங் காலத்து, இந்திரன் முதலிய தேவர்கள் விட்டு ணுவை நோக்கி யிவர்களை யெல்லாம் கொல்வதற்கு எத்தனையோ கால மாகுமே. அதற்குள் யாங்க ளிருப்பமோ வென்று துக்கத்துடன் வின வினார். திருமால் அதற்குண்மையான விடை யுரைத்துத் தெளிவித்தார் அதுகாலை யிருபக்கச் சேனைகளுக்கும் வீரர்கட்கும் யுத்தம்நேர்ந்தது. அசு

ரர்களால் வீரர்களும் பூதர்களும் முறியடிக்கப்பட்டார்கள். அதனைக்கண்ட மகாவீரரான வீரவாகுதேவர் வில்வாங்கிப் பாணங்கள் விடுத்துப் பலப்பல அசுரர்களைக்கொன்றும், அசுர சேனைகளின் முன் நிற்க வியலாதவராய்ச் சுப்பிரமணியக்கடவுளின் முன் னோடிவந்து நின்றார், குகப்பெருமான் றமது வில்லை வளைத்துக் குணத்தொனி செய்ய வவ்வொலி கேட்டு அநேக சேனைகள் மூர்ச்சையாயின. பெருமானாருஞ் சோனா மாரிபோற் பாணங்களை விடுத்துக் கால்கள், கைகள், தலைகள், மார்புகள், புயங்கள் முதலிய உறுப்புக்களை யெல்லாம் அறுத்து நால்வகைச் சேனைகளையும் நாசப்படுத்தினார். அவைகளெல்லாம் சுவர்க்கம், பிரமலோகம் வைகுண்டம், பூவுலகம், பாதலமுதலிய இடங்களெங்கணும் விழுந்து நிறைந்தன.

மற்றை யண்டங்களினுள்ள சேனைகள் வந்து கொண்டே யிருந்தன தேவநாயகன் சாரதியாகிய வாயுவைத் திருநோக்கஞ் செய்தருளி "வாயுவே! நம் இரதத்தை முன்னோட்டம், பின்னோட்டம் நடு வோட்டம், பக்கங்களி னோட்டமாகிய வெல்லா வோட்டங்களினும் விடுக' என்றருள அவனு மப்படியே செலுத்துவா னாயினான். கதிர்காம மூர்த்தியும் கடல்கள், மலைகள், நதிகள், பூமி, ஆகாயம் முதலிய வெல்லா விடங்களினுஞ் சென்று அளவிலாப் பாணங்களைக் கடாவி யழித்து வரலாற் பிணமாமலைகள் அண்டச் சுவரை முட்டின. குகேசனார் சேனைகள் வருகின்ற, அண்டத்தின் வாயிலைப் பாணங்களா லடைத்துத் தமது பன்னிரு திருக்கண்களானும் அப்பிணமலைகளைச் சாம்பராக்கினார், தேவர்களெல்லாம் மகிழ்ச்சியாற் றிளைத்துப் பகவானைப் பராவல் செய்தார். இவைகளைப் பார்த்தசூரபன்மன் கோபித்து எதிர்த்து வருதலைக் கண்ட பூதர் வீரர்களு மெதிர்த்தார்கள். அசுரன் விட்ட பாணங்களா லடிபட்டு ஓடினார்கள். இலக்கத்தெண்மரின் றேர்களைச் சுழற்றி வீசலாலே அவர்க ளெல்லாரு மிரத்தந் தாரைதாரையா யொழுக வருத்தமுற்று ஓடினார். மகா தீரரான

வீரவாகு தேவர் மிக்கசினங் கொண்டு அவன் றேர்மேற் பாய்ந்து வில்லை யிருதுண்டாக வெட்டி யெறிந்தார். சூரபன்மன் அவரைக் கையாற் புடைத்துத் தூதரைக் கொல்வது தகுதியன்றென்று கால்களிற் பிடித்து ஆகாயத்தி லெறிந்தான். மேலே சென்ற வீரவாகு தேவர் கீழே வீழ்ந்து மூர்ச்சைதெளிந்து சண்முகன் பாங்கர் வந்து நின்றார். குகக் கடவுளார்க்கு மசுரத்தலைவனுக்கும் உக்கிரமான போர்நடந்தது. அகோரமான யுத்தத் தைக்கண்டு வீரலக்குமியும் மிக்க வியப்படைந்தாள். அவுணன் பகவா னுடைய தேரிலுள்ள சேவற் கொடியை யறுத்து வீழ்த்தி யட்டகாசம் பண்ணிப் பின்னும் பகவான் மீது பாணங்களை வருஷித்தான்.

அவைகளை யெல்லாங் குமாரக்கடவுள் விலக்கிச் சூரபன்மன் றேர்க் கொடியை யறுத்துக் கடலில் வீழ்த்தினார். அதனைக் கண்ட பானுகம்பர் என்னும் மகா பலவான் தனதாயிரம் வாய்களிலும் ஆயிரஞ் சங்கங்களை வைத்து அண்டமு மிடியுமாறு முழக்கஞ் செய்தார். திருமால் பாஞ்சசன் னிய முழக்கஞ்செய்தார். அவ்வொலிகளண்டச் சுவரின்முட்டி யெதி ரொலி கொண்டு பலப்பல யுகங்காறுங் கேட்கலாயின. தேவர்க ளேவலால் அக்கினி கோழி யுருவெடுத்துத் தேர்மேற் சென்று கூவிநின்றான். சூரன் ஆகாயத்தி லுள்ள தேவர்களை யெல்லாங் கொன்று பின் இப்பாலனைக் கொல்வேனென்று பாணங்களைப் பெய்தான். தேவர்க ளோலமிட வவை யிற்றைக் கந்தக் கடவுள் விலக்கித் தேவர்களைக் காத்தருள, தேவேசன் மீது பலப்பல பாணங்களைப் பிரயோகித்தான் அவுணன். அங்கங்குச் சென்று சென்று அசுரன் பொரக் கந்தக்கடவுளு மாங்காங்குச் சென்று பொருதார். அண்டத்தின் வாயிலடைபட்டதைக் கண்ட வசுரன் அதைத் கண்டித்தனன். சேனைகளெல்லாங் கூட்டங் கூட்டமாய்வர அறுமுகப் பெருமான் சில ஆயுதங்களை யெடுத்து யாவரையுங் கொன்று வருகின்றனர்

றேவ அவ்வம்புகள் அங்ஙனஞ் செய்து திரும்பின. சூரபன்மன் மாயையினாலே பலப்பல வுருவங்களையெடுத்து ஆங்காங்கே யோடியோடிப்போனான். அங்கங்கே தொடர்ந்து சேர்தனரும் பொருதார்.. எஞ்சிநின்ற அவுணசேனைகளையுந் தந்தையார்போலப் புன்னகையாலெரித்தழித்தனர்.

சூரபன்மன் றானொருவன் றனியேநிற்பதுகண்டு மனவருத்தமுற்று யோசித்துத் தன்றாயை நினைத்தான். அவள் தோன்றி யாதற்கென்னை நினைத்தாயென்றாள். இறந்தவர்களை யெல்லா முயிர்ப்பிக்கு முபாயங் கூறவேண்டு மென்ன, மாயை "மைந்தனே! பரமான்மாவுடன் போர் வேண்டா" மென்று புத்திகளுரைத்துஞ் சூரபன்மன் கேளாமை கண்டு விதியின்படி நடக்குமென் றுன்னிச் சொல்வாள். "மைந்த! இறந்தம ரெழவேண்டுமாயின் புறவாழியின் பக்கலுள்ள சுதாமந்தரம் (அமுதசீத மந்தரம்) என்னும் மலை கொணரின் எழுவாரென்று போயினள். அங்ஙன மிரதத்தை யேவிக் கொணர்விக்க வெல்லாருமெழுந்தனர். அவர்களை யெல்லாங் கொன்று மலையினையுந் தூளாக்கியருளினார் கந்தக்கடவுள். சூரபன்மன் றனிநின்று துக்கித்துத் தன்னிரதத்தையேவி வீரவாகு முதலிய வீரர்களையும் பூதங்களையும் வருவித்து அண்டகோளகையில் வைப்பிக்க, குமாரசுவாமி யோரம்பு விடுத்து இரதத்தை யெழுப்பித்துச் சேனைகளையும் வீரர்களையும் முன்போலெழுக்கச் செய்து இரததனையுஞ் சூரபன்மனிடம் போகாதவாறு தடுத்தருளினார், அசுரன் இரதமில்லாமையாற் சிங்கவாகனத்தின் மீதேறிச் சண்டை செய்வது கண்டு இரண்டாயிரம் பாணங்களை விடுத்து அவ்வாகனத்தைக் கொல்ல, அவன் மகாகோரரூபமான சக்கரவாகப்பட்சி வடிவங்கொண்டு ஆகாயத்தின்மேற் சென்றான்.

வீரர்களையும் பூதர்களையுந் தேவர்களையுந் தன் கால்களினாலும் மூக்கினாலுங் கொத்திக் கிழித்து வருத்தியதைக் கண்ட குமாரசுவாமி யிப்பறவையுடன் றேர்மீதிருந்து சமர் புரிதல் நீதி யன்றெனத் திருவு

ணங் கொண்டு இந்திரனைத் திருநோக்கஞ் செய்தருளினார். அவன் உடனே மயிலுருவங் கொண்டு நிற்கப் பெருமானதன்மீதேறிச் சக்கர வாகம் மயிலைக் கிழித்துக் கொத்திவருத்த இந்திரனாகிய மயில்மிகவருந்திற்று. குமாரக் கடவுள் பாணங்களைப் பிரயோகிக்க அவைகளாற் சக்கரவாகம் இரத்த மொழுகவருந்திப் பின் அறுமுகக்கடவுளின் வில்லைத் துண்டிக்க வந்தது. பெருமானார் தமது திருக்கரத்துள்ள வாளாயுதத்தால் இருதுண்டாக வெட்டினார். பூமியில் விழுந்த அசுரன், பூமி, சமுத்திரம், அக்கினி, வாயு, மும்மூர்த்திகள், தேவர்கள், பூதர்கள், எருது, நஞ்சு, மேகக் கூட்டங்கள், இடி, இருள், மலை, சூரியன், யானைகள், சிங்கம், பக்ஷி, மான் முதலிய வுருவங்க ளெடுத்தும், பின்னோர்பாற் றம்பிமார், புதல்வர்கள், மந்திரிமார்கண் முதலினோர் வடிவங்களை யெடுத்தும் பொருதான் வேலாயுதப் பெருமான் அவ்வவ்வடிவங்களை யெல்லாம் அத்திரங்களை விடுத்து அவ்வப்போது அழித்தருளினார். சூரபன்மன் றன்மாயவடிவங்க ளெல்லா மழியப்பெற்றுத் தனியே நின்றகாலை யெம்பிரானா ரவனைத் திருநோக்கஞ்செய்து சில கூறியருளும். அசுரனே! நின்னுருவங்களைக் காட்டினை. நம் வடிவத்தைச் சிறிது காட்டுதும் என்று விசுவரூபத்தைக் காட்டியருளச் சூரபன்மன் கண்டு நனி விம்மித முற்றுப் பின் மருண் மேலிட்டானே கடுஞ் சினத்தாற் பீடிக்கப் பட்டவனாய், இவனை யிங்கேகொண்டு வந்த தேவர்களை யெல்லாம் முதலில் விழுங்கி யப்பாலிவனைக் கொல்லுவனெனவுன்னி யோரந்தகாரத்தை யுண்டாக்கி, பல பல முகங்களுங்கைகளுங் கொண்டு தேவர்களை யுண்ணத்தொடங்க அவர்கள் பயந்து ஓலமிட்டனர். இவனைக் கொல்லவேண்டுமென்று மயிலுருவங் கொண்டுநின்ற இந்திரனும் துதித்தான்.

குமாரக் கடவுள் தந்திருக் கரத்துள்ள வேலாயுதத்தை நோக்கி அவனையு மவன் மாயைகளையு மழித்து வருதியென்று ஏவி யருளினார். சூரபன்மன் அதைக் கண்டு என்றுமழிவில்லாத என்னை யிவ்வேலா

யுதம் என்செய்யும் என்று விரைவி னவ்விடம்விட்டு வடகடலின் மத்தியிற் சென்று நெருப்புப்போலுந் தளிர்களும், புகைபோன்ற இலைகளும், மேகக் கூட்டங்கள் போன்ற கிளைகளும், பச்சைக் கற்கள்போலும் பிஞ்சுகளும், மாணிக்கத்தை யொத்த பழங்களுங் கொண்டு பிரமாண்டச் சுவர் வரையில் வேரோடி, இலக்க யோசனை தூரமளவும் விசாலித்த தலைகீழான மாமர வடிவங்கொண்டு சகல லோகங்களையு நடுநடுங்க மோதினன். வேலாயுதம் அம்மரத்தையிரண்டாய்க் கிழித்தது. அசுரன் சுயவடிவங் கொண்டு ஓர் வாளாயுதத்தோ டெதிர்க்க மார்பிற் பாய்ந்து கிழித்துக் கங்கை தோய்ந்து குகக்கடவுளார் திருக்கரத்தில் வீற்றிருந்தது. அசுரன் கூறுகளிரண்டுங் கோழியும் மயிலுமாக வுருவங்கொண்டு எதிர்க்க, வேலாயுதக் கடவுள் அவைகளைக் கருணைநோக்கஞ் செய்ய, அருண்ஞான முற்றுத் துதித்த கோழியைக் கொடியாகவும், மயிலை வாகனமாகவுங் கொண்டருளினர். அக்கினியும் இந்திரனும் முன்னைய வடிவங்கொண்டு மற்றைய தேவர்களுடன் றுதித்து வணங்கினர். இங்ஙனம் குமாரக்கடவுள் சூரபன்மனைச் சங்கரித்தமையாற் சூரசங்காரமூர்த்தியாயினர்.

ஸ்காந்தபுராணம் – சங்கர சங்கிதை.

[illegible] |
[illegible] |
[illegible] | *

[illegible] |
[illegible]
[illegible] |

சூரசங்கார மூர்த்தயே நம:

'என்பத்திரண்டாவது

விசுவரூப மூர்த்தி.

சூரபன்மன் போர்புரிந்து வரும்போது பலப்பல மாய வடிவங்களை யெல்லாங் கொண்டு யுத்தஞ் செய்தான். குமாரக்கடவுளாம் ஆதிபகவன் அவன் செய்கையைத் திருநோக்கஞ் செய்து மந்தகாசம் பண்ணி ஆயிர கோடி சங்கியை கொண்ட கொடும் பாணங்களைப் பொழிந்தனர் அவைக ளெல்லாந் துராத்மாவாகிய சூரபன்மன் கொண்ட மாயவுருவங்களையெல் லாம் ஓரிமைப்போதினி லழித்துக் குமாரக்கடவுள்பாற் றிரும்பிச் சென் றன அதுகாலைச் சூரபன்ம னொருவன்மாத்திரம் நின்றனன். அதனைத் திருநோக்கஞ்செய்த சேந்தப்பெருமான் றிருவாய் மலர்ந்தருளும்.

அசுரனே! நீ கொண்ட மாயவடிவங்களை யெல்லாங் கண்ணுற்றோ ரிமைப்போதினி லழித்தேம். நமது வடிவத்தையுஞ் சிறிது காட்டுகின் றோம். அது நின்றன் வழக்கமான கண்கட்குச் சிறிதுந் தெரியப்படாமை யால் ஞானக்கண் உதவுகின்றோம். பார்க்கக் கடவையென்று தமது பரமே சுரரூபம் என்னும் விசுவரூபத்தைக் கொண்டருளினர்

"யஸ் மிந் தேவா அதிவிச்வே நிஷேது:" (எதன் இடம் எல்லாத் தேவர்களு முள்ளார்) சந்தாம்ஸி யஞ்ஞா: க்ருதவோ விரதாநிபூதம் பவ் யம் யச்சவேதா வதந்தி! அஸ்மாந் மாயீ ஸ்ரு ஜதே விச்வ மேதத் அஸ்மிம்ச் சாந்யே மாயயா ஸம் நிருத்தா:!! (காயத்ரி முதலிய சந்த சுகள் யஞ்ஞங்கள், அக்கினிட்டோம முதலியயாகங்கள், சாந்திராயண முதலிய விரதங்கள், சென்றது, வருவது, வேதங்களாற் சொல்லப்படு வன், இவையெலாந் தொக்க விவ்வுலகத்தை யிதன்கணிருந்தே மாயை யுடையவன் சிருட்டிக்கிறான். இவனிடமே யேனையர் யாவரும் மாயை யாற் கட்டுண்டனர்) "தஸ்யாவயவ பூதைத் பூதைஸ்து வியாப்தம்

விசுவரூபமூர்த்தி.

ஸர்வ மிதம் ஜகத் (அவனது அவயவங்களா னவைகளானே யெல்லாவுல கமும் வியாபிக்கப் படுகின்றன.

என்று வேதங்கள் புகழுங் காரண மகாவாக்கியப் பொருளாயிருப் பவர் தாமே யென்பதை யுலகரு முணர்ந்துய்தற் பொருட்டு விசுவரூபங் கொண்டனரென்க. அதனியல் சிறிது உரைப்பாம்.

உள்ளடியி னிடத்தே மேருமலை, மந்தரம், மாலியவான், கந்தமாத னம், நிடதம், இமயம், ஏமகூடம், விபுலம், சுபாசுபம், சுவேதம், சிருங் கம், நீலம், மகேந்திரம், பொதியம், விந்தம், பாரியாத்திரம், சத்தி, மானு டம், சோமம், சுமனசு, சந்திரம், துந்துபி, மகாகிரி, பிரவிராசனம், நார தீயம், கோமேதம், உன்னதம், குமுதம், குமாரம், மேகம், சங்ககம் முத லாய பலகோடி மலைகள் காணப் பட்டன. புறத்திருவடியினிடத்தே * உப் புக் கடலும், பாற்கடல், தயிர்க்கடல், கருப்பஞ் சாற்றுக்கடல், நெய்க் கடல், தேன்கடல், சுத்த நீர்க்கடல் என்னுஞ் சமுத்திரங்களும், மொழிந்தபொரு ளோடொன்ற வவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தலென் னும் உத்தியானே கங்கை, யமுனை, கௌதமி, சரசுவதி, கௌசிகி, காவிரி, நருமதை, கம்பை, பம்பை, துங்கபத்திரை, குசை, பாலாறு, பாஞ்சாலி, கோமதி, ஆம்பிராவதி, மணிமுத்தம், பவானி, சூரி, சிகி, பாபவிநாசினி, சங்கவாகி, பாரத்துவாகி, சிகை, சார்வரி, சந்திரபாகை, சரயு, வேணுபி ங்கலை, மாணிக்க கங்கை, மாவலி கங்கை, சுவர்ண முகி, குண்டலை, பெண்ணை, வைகை, கந்தநதி, சிவை, விபாபை, அமிர்தை, சுகிர்தை, மனுதத் தகை, சித்தி, கிரமை, அங்குசோனை, ரூபியை, மதி, தாமிரை, சேத்திரை, பாவ விமோசனை முதலாய எண்ணிறந்த நதிகளுங் காணப் பட்டன.

---

* கந்தபுராணத்திலே நீத்தம் என்றதனாற் பொதுச் சொல்லானே கடல்களும் நதிகளுங் கொள்ளப்பட்டன. ஆயினுஞ் சிறப்பானே யதற் குக் கடலே பொருளெனவும், நதிகள் என்பன மலைகளினிடத்தே தோன் றலால், மலைகள் கூறப்படவே யவைக ளடங்குமாகலின் வேறு கூறப் படவேண்டா வென்றுங் கொள்வது மொன்று.

திருவடி விரல்களி னிடத்தே இடியேறு, மின்னல், முழக்கம் நட்சத்திரங்கள் கிரகங்கள் என்பனவும், இருபாடுகளிடத்தும் வருணன் குபேரன் கருநிற வுருவத்தனாகிய நிருதி, பலப்பல அரக்கர்கள் என்பாரும், கணைக்கால்களி னிடத்தே மார்க்கண்டேயர், வசிட்டர், விசுவாமித்திரர், காசிபர், கௌதமர், அகத்தியர், பாரத்துவாசர், ஆங்கிரசு, துர்வாசர், அத்திரி, பிருங்கி, உருகு, சுவேதர், உபமன்னியர், பிருகு, உக்கிரசீலர், போதாயனர், பிசிங்கி, விபாண்டகர், துருவர், நாரதர், சுப்பிரர், புதர், சுந்தி, சங்கமர், வாமதேவர், கண்ணுவர், அரிதகர், பௌலா, சுமுந்தரர், ஆபத்தம்பர், கருணர், பருப்பதர், காத்தியாயனர், பௌமர், பாசதரர், பராசரர், வியாசர், பக்குவர், கபிலர், கலாதரர், காணர், காலவர், கைவல்லியர், சௌபரி, மூற்கலர், சரபங்கர், சௌநகர், யாஞ்ஞவற்கியர், ததீசி, சனகர், சனந்தனர், சனற்குமாரர், சனந்தனர், புசுண்டர், பைப்பலாதர், உதஞ்சனி, கணாதர், அக்கபாதர், சித்தர், சத்தியர், பண்டிதோத்தமர், சுவேதாசுவதரர், அதர்வணர், சதானந்தர், வான்மீகி, மாண்டூக்கியர், முண்டகர், சாதாதபர், சமதக்கினி, சற்சரர், மாண்டவியர், சுதீக்கணர், இரதிதர், ஸைபரவர், காண்டிப்பியர், குண்டலர், அசிதர், தேவலர், உசனர் முதலாய முனிவர் கூட்டங்களும், சிந்தாமணி, பாதுகாஞ்சனம, சியமந்தகமணி, சூளாமணி, சூடாமணி, கௌத்துவமணி முதலிய இரத்தினங்களும் காணப்பட்டன.

முழந்தாளிலே வித்தியாதரர், கின்னரர், கிம்புருடர் சித்தர் கந்தருவர், போக பூமியர், கருடர் பூதர், இயக்கர், சாரணர், பைசாசர் முதலானோர்களும். தொடை மூலத்திலே இந்திரனு மவன் குமாரனான சயந்தனும், தொடைச் சந்தியிலே யமனும் அவன் மந்திரி யாகிய காலனென்பானும் குதத் தானத்திலே அசுர கூட்டங்களும், இருவிலாப் புறங்களினும் எண்மர் வசுக்களும், பன்னிருவர் திவாகரரும், பதினொருவர் உருத்திரரும். இருவர் மருத்துவரு

மாகிய முப்பத்து முக்கோடி தேவ ரென்னும் நால்வகைக் கடவுளரும், பிருட்டத்திலே சர்ப்பங்களும், கோசத்திலே மரணத்தை யொழிக்குமமிர் தமும், திருவுந்தியி னிடத்தே சகல சராசரத் தோற்றங்களும், திருமார்பி னிடத்தேவாஜசநேயம், கேனம், கடம், பிரச்சினம், மூண்டகம், மாண்டூக்கியம், தைத்திரீயகம், ஐதரேயம், சாந்தோக்கியம், பிருக தாரண்யகம், பிரமம், கைவல்லியம், சாபாலம், சுவேதாசுவதரம், அம்சம், ஆருணிகம், கர்ப்பம், நாராயணம், பரமஹம்சம், அமிர்த பிந்து, அமிர்தநாதம், அதர்வசிரம், அதர்வசிகை, மைத்திராயணி, கௌஷீதப் பிராஹ்ம மணம், பிருகச்சாபாலம், நிருசிம்மதாபினி, காலாக்கினி ருத்திரம், மைத்திரேயி, சுபாலம் முதலிய உபநிடதங்களும், உபவேதங்கள், மிருதிகள், புராணங்கள், உபபுராணங்கள், இதிகாசங்கள், ஆறு சாத்திரங்கள், அறுபத்துநான்கு கலைகள் முதலியவும் உபவீதமுங் காணப்பட்டன.

அளவிறந்த உரோமத் தொகுதிகளுள் ஒவ்வோ ருரோமங்களினு மொவ்வோ ரண்ட புவனங்களும், உருத்திர கோடிகளும், உள்ளங்கையி னிடத்தே யெல்லாப் போகங்களும், திருத்தோள்களி னிடத்தே பிரம விட்டுணுக்களும், திருக்கை விரல்கடோறும் எல்லாத் தேவப்பெண்களும், திருக் கண்டத்திலே எல்லாப் பண்களு மிசைகளும் அக்கினிதேவனும், திருவாயி னிடத்தே இருக்கு யசுர்சாமம் அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும், பற்களினிடத்தே எல்லாவெழுத்துக்களும், நாவின்கண் காமிகம், யோகசம், சிந்தியம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம் அஞ்சுமான், சுப்பிர பேதம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம் முதலிய சிவாகமங்களும், அவற்றின் பேதங்க ளாகிய உபாகமங்களும், உதடுகளிலே மகாமந்திர வித்தியா சமுகங்களும், நாசியினிடத்தே வாயுதேவனும்,

திருக்கண்களிலே * சூரியசந்திரர்களும், செவிகளிலே பத்துத் திக்குக ளும், அழகிய நெற்றியினிடத்தே பிரணவமும், சிரத்தி னிடத்தே பரமான்மாவும், இன்னும் மற்றைய உறுப்புகள்தோறும் அளவிறந்த சத்திகளும் சத்தர்களுங் காணப்பட்டனர்.

இங்ஙனமாய பாரமேசுர ரூபமென்னும் விசுவரூபத்தைக்கண்ட, தேவர் முனிவர் பிரமன் விட்டுணு முதலாயினோர் யாவரும் தரிசித்து மிகவும் பயந்து நடுநடுங்கிக் குகப்பெருமானே யோலமோல மென்றனர். முருகக் கடவுள் அவர்கள் யாவர்க்கும் அபயங்கொடுத்தனர். சூரபன்மன் அத்திருவுருவத்தைத் தரிசித்து விசேடஞானமுற்று என்று மடையாத விறும்பூது பெற்று, அழகிய மயில்வாகனத்தே விளங்கித் தோன்றிய இவரை யறியாமையான் முன்னர்ப் பால னென்றிகழ்ந்தேன். இவரன்றோ பரம்பொருள், இவரேசர்வ லோகாதிபதி, சர்வாந்தரியாமி, சர்வகர்த்தத்துவர், சர்வஞானத்துவ முடையவர், சர்வபூத நியந்தா. முன்னர் வந்ததூதுவனும், என்றுணைவனாகிய சிங்கமுகனும் பரம்பொருளே பாலனாகவந்த தென்று கூறியன வெல்லா முண்மை யுண்மையே. இதுபற்றியன்றே கிருஷ்ணயசுர் வேதமும் மந்திர சாகையினிடத்தே,

[illegible] |

* திருவடிவிரல்களி னிடத்தே கிரகங்கள் காணப்பட்டனவென்று சொன்னதனாற் சூரியன் சந்திரன் அடங்கவும் மீட்டுந்திருவிழிகளிற்சூரிய சந்திரர்க ளுள்ளா ரெனக் கூறியது முரணுமாலோ வெனின், அற்றன்று; சூரிய சந்திரர்கள் ஆதிதைவிகர், ஆதியான்மிகர், ஆதிபௌதிகர் என மூவகையாய் விளங்கலான் முரணன் றென்க. இறைவன் விசுவருபங்காட்டுங்காலத்து யுத்தகளத்தின்கணுள்ள சமனொலம் (இலங்கையிலே கண்டிக்குச்சமீபமாயுள்ளமலை அது இப்போது சிவனொளிபாதம் என்றுவழங்கப்படும்) என்னும் மலையில் ஒருதிருவடியும் பக்கத்திலொரு திருவடியுமாகவிருந்தனவென்றும், அதனாற்றான் றிருவடியடையாளங்க ளவற்றிற் பதிந்திருக்கின்றனவென்றுங் கூறுப. இவ்வுண்மையுணராத பௌத்தர்களும் மகமதியருந் தங்களாலய மெனக்கொண்டு வணங்குப.

ஸஞ்ஜீவநோ ரக்ஷ நஸ்ஸஜ்வவி ஸஞ்ஜாதோ தாஸவ ஶவி விஶ்வ
தோமுகம் ||

என்று கூறிற்று. இவருக்கு நான் மீளா அடிமையாகிவாழவேண்டு மென்று என்மனம் பெரிதும் விரும்புகின்றது என்று பலவிதமாகவுரைத் துத் துதித்தான்.

இவ்வுருவம் முன்னர்க் காலத்தே சூரபன்மனுக் கன்றித் தேவர்முத லாயினோர்க்கும், ஜெயந்திபுரம் எனப்படுந் திருச் செந்தூரினிடத்தே வீர வாகு தேவர்க்குங் காட்டியருளினர். உலகமெல்லாந் தம்மிடத்தேயடங்கு முருவ முடைய மூர்த்தியாகலின் விசுவரூப மூர்த்தியாயினர் குமாரக்கட வுள். விசுவம்=உலகம்.

வேத வசனங்கள்.

"யோ யோநிமதிஷ்டத்யேக: யஸ்மிந்நிதம் ஸம் ச வி சைதி

யேநேதா ஜாதாநி புவநாநி விஶ்வா" ஸர்வாநநஶி
ரோக்ரீவஸ்ஸர்வபூதகுஹாஶய: | ஸர்வவ்யாபீ ஸ பகவாந் | ஸஹஸ்ரஶீர்ஷா விஶ்வகத்யாத்மா: ||

சங்கர சங்கிதை — சிவரகசிய கண்டம்.

தமாஜ்ஞ: ஸர்வதோ பாதகமலேத்ரய ப்ரஸ்பிதா: |
ஸர்வாகார: ப்ரபஞ்சஸ்ய ஸாகார ஸ்ருஷ்டி நிர்ணயா: |
பாதாம்ஶ விஶேஷ விஶ்வாத்மா ஸர்வதோ ஸ்ரோதஸஹஸ்ரம் |
தேஜ ஸர்வாம் பூதாவ்ருதோ க்ரமாத் ஸ்வாமி தஸ்மா
ஜம்பூ த்ரிஷ்டுப் த்ரிதா காணிஜாத நாநாத்மஸ்ரீதா: || [ஸ்வா

விசுவரூப மூர்த்தி.

[illegible] ।
[illegible] ।
[illegible] ॥

வேத வசனம்.

நாப்யா ஆஸீ தந்தரிக்ஷம்! சீர்ஷ்ணோத் யௌஸ் சமவர்த்தத! பத்ப்யாம் பூமிர்த் திசச்ரோத்ராத் ததாலோகாம் அகல்பயந்! வேதாகமேதம் புருஷம் மகாந்தம் ஆதித்யவர்ணம் தமஸஸ்து பாரே! சர்வாணி ரூபாணி விசித்ய தீர:! நாமாநிக்ருத் வாபி வதந்யதாஸ்தே!

கந்தபுராணம் - சூரபன்மன் வதைப்படலம்.

உன்னடி வரைகள் யாவு மொண்புற வடியி னீத்தம்
வன்னுகிர் விரல்கண் முற்றும் வானுரு மேறு நான்கோ
னென்வரும் பாடு தன்னி லிரும்புனற் கிறைவன் சோம
னன்னிரு ணனைய மேனி நிருதியோ டரக்கர் நண்ண.

அடித்திரள் கணைக்கா றன்னி லாரிடர் மணிகள் சானு
வடிவமை முழந்தாள் விஞ்சை வானவ ராதி யானோர்
தொடைதனின் மகவான் மைந்தன் றொடைமுத னடுவன் காலன்
கடிதடத் தசுரர் பக்கங் கடவுளர் யாரு நிற்ப.

*"இருப்பினி னூர்கோச***தோள்வைப்பிற் செங்கண்மால் விரிஞ்சன்மேவ." "மெல்லிதழனைய***பவனன் மன்ன."*

கருணைகொள் விழியிற் சோமன் கதிரவன் செவியிற் றிக்குத்
திருநுதற் குடிலை வைப்புச் சென்னியிற் பரம வான்மா
மரபினின் மேவித் தோன்ற மாறிலா திருக்குந் தொல்லை
யொருதனி யுருவங் காட்டி நிற்றலு மும்பர் கண்டார்.

சீர்க்கும ரேசன் கொண்ட திருப்பெரு வடிவந் தன்னி
லேர்க்குறு மொளியுஞ் சீரு மிளமையு மெழிலு மெல்லா
மார்க்குள வுலகி லம்மா வற்புதத் தோடும் பல்காற்
பார்க்கினுந் தெவிட்டிற் றில்லை யின்னுமென் பார்வைதானும்.

விசுவரூப மூர்த்தயே நம:

எண்பத்துமூன்றாவது,

அசுரபுர தகன மூர்த்தி.

சூரபன்மன் போர்க்கு வந்தகாலைத் தனது ஆயிரத்தெட்டு அண்டங்களினு முள்ள சேனைக ளெல்லாம்வரும்படி தெரிப்பிராக வென்றான் அவ்வாறே யானை குதிரை தேர் காலாள் என்னும் நாற் படைகளுந்திரண்டன. ஓரண்டத்திலுள்ள சேனைகளுக்கே கீழுலகேழும் மேலுலகேழும் இடமின்றி நடுங்கின வென்றால், ஆயிரத் தெட்டினுமுள்ளசேனைகளின் முடிவு யாவர்க்குத் தெரியும். இராம ராவண சேனைகளும், பாண்டவ துரியோதன சேனைகளும் ஒருதரம்வரும் படைகளுள் முற்படையான தூசிப் படையின் கோடியில் ஒருபங்கிற்குஞ் சமமாகாது. அவ்வாறாய அசுர சேனைவெள்ளங்கள் போர்க்கள மெலாம் நிறைந்து கந்தப்பெருமான் எழுந்தருளியிருந்த பாடிவீட்டையும் நெருங்கி மொய்த்தன. தேவர்களெலாம் பயந்தனர். பூத வெள்ளங்கள் அச்சேனைகளையெல்லாங்கண்டு அஞ்சி வலியிழந்தன. இலக்கத் தெண்மரும் புறங்காட்டி யோடினர். அஞ்சா நெஞ்சராகிய வீரவாகு தேவரும் எதிர் நிற்கமுடியாது திரும்பினர். அவ்வகளை யெல்லாங் கண்டு, இந்திரன்சொல்வான். இச்சேனைகளை யெல்லாங் கொல்வதற்கு எத்தனை ஊழிகாலங்கள் செல்லுமோ? அதன் பின்னர்ச்



அசுரபுரதகன மூர்த்தி.

சூரபன்மனைக் கொல்வதெந்நாளோ? என்னுடைய ஆயுள் முடிந்து வேறோர் இந்திரன் வந்திடுவான். யான் இறக்குங் காலுந் துன்பமே யநுபவிப்பதோ? அந்தோ! அந்தோ!! என்று இரங்க, திருமால் அவனைத் தேற்றினார். சுப்பிரமணியக் கடவுளும் வியப்புற்று, இரதத்திவர்ந்துபோர் தொடங்கிப் பாணங்களை இடைவிடாது செலுத்தி அழித்தார். சேனைகளும் புறவாழி கரையுடைத்தாற் போல வந்துகொண்டே யிருந்தன. பிரமாண்டம் நிறைந்து சேனைகளும் இரத்தப் பிரவாகமும் பிணமலைகளும், கழுகு, காகம், அலகை வேதாள முதலியவற்றின் ஒலிகளும் ஆடல்களும் போர் முழக்கமும், சேனைகளுடைய ஆர்ப்பும் சேர்ந்து ஒன்றுந் தெரியாமலிருந்தன. முருகப் பெருமான் திருவுளத் துன்னுவார். எவ்விடமும் பிணங்களும் இரத்த வெள்ளமும் ஆக இருக்கின்றன. இன்னுஞ்சேனைகள் வந்தபடியே யிருக்கின்றன அண்டகோளகையின் வாயிலை யடைப்பேமாயின் அதற் கப்பாலுள்ள சேனைகள் நின்றுவிடும். இப்பா லிருந்து வந்தசேனைகளைக் கொன்றுவிடுவேம் என்று கோளகை வாயிலையடைத்தார். பாணங்களையும் தெய்வப் படைக்கலங்களையும் ஏவி யேவி யழித்தனர். ஓயாமற் பின்னரும் வந்து வந்து நிறைந்தன. முருகக்கடவுள் தாம் நிற்றற்கும் இடமில்லாது பிணமலைகளுஞ் சேனைகளும் நிறையவே, இனி யிவை படைக்கலங்களா லழிக்கத் தக்கினவல்ல என்று ஒரு திருவிளையாடல் செய்வாராயினர்.

“தந்தைக் குரியது மைந்தற்கும்” என்னு மூதுரைப்படி பிதாவாகிய சிவபெருமான் திரிபுரத்தை முறுவலா லெரித் தழித்தாற் போலவும், மன்மதனை நெற்றிக் கண்ணால் நீறாக்கினாற் போலவும் தமது திருவிழிகளை வடவை போலாக்கி நோக்கி யெரித் தெரித்து வந்தார். புன்னகையாலும் சேனைகள் எரிந்தழிந்தன. அண்டகோளகைக்கு அப்புறத்தும் இப்புறத்தும் உள்ள அவுண சேனைகளை யெல்லாம் எரித் தழித்தனர். சூரபன்ம னொருவனே நின்றான்.

இங்ஙனம் அளவிறந்த அவுணருடல்களைத் திருவிழிகளாலும் புன்முறுவலாலும் எரித்தழித்தமையால் அசுரபுர தகனமூர்த்தி யாயினர்.

சங்கர சங்கிதை – சிவரகசியகண்டம்.

ஹஸ்தீ வக்த்ராப்ஜேந வீக்ஷ்யா ஸாத்ய ஸமயோ வதேநஃ |
ஸஹஸ்ர ஸஹஸ்ரஞ்ச த்ரிவதேய: க்ஷணோஜேத்ரணைஹர்ஷஸ்ய
ஸுவக்ரேண யயாவத்ஸ்வஸவ த்ரஸநோஜாயத |
தேவா ஹஸ்தீநிவமிந: கேவலம் விபரீதீஷி |
ததாவிஷ்ணு ப்ரமுகாதேவா ஹேஜாதம் விஸ்மயாக்ருதே |
ஸம்ப்ரூஹணஸ்யஸ்ய தாஷ்டா: ஸ்தம் வகாஸ்யவாலநீஷு |
** ஹஸ்தீ வகாரகோ வேந கேவலமேகத்ர ஹ்ருதா |
ஸாப்ரபூவமேதஸ்ய கோதிஹா ஸோரஜோஹஸ்தாஃ ||

கந்தபுராணம் – சூரபன்மன் வதைப்படலம்.

நெற்றி நாட்டத்தி னுலகெலா மட்டிடு மிமலன்
பெற்ற மாமகன் பன்னிரு விழிகளும் பிறங்கு
கற்றை வெஞ்சுடர் வடவைபோ லாக்கியக் கணத்தி
லுற்று நோக்கினனெரிந்தன களேவரத் தோங்கல்.

பாறு லாவுரு களேவரத் தமலையும் படிமேல்
வீறு சோணித நீத்தமும் வேவுற விழித்து
நீற தாக்கினன் சூரனை யட்டில னின்று
றாறு மாமுக னுடலை யுன்னின னுங்கொல்.

அசுரபுரதகன மூர்த்தயே நம:

எண்பத்துநான்காவது,

அகடித கடனு சாமர்த்திய மூர்த்தி.

மாயையின் புத்திரனுகிய சூரபன்மன் போர் செய்த காலத்துத் தன் மாயையின் வல்லமையினுலே அண்டப்பித்திகை வாயில் சென்று அறை கூவி யப்புறமா யுள்ள அண்டஞ் சென்ருன். கந்தசுவாமியுந் தொடர்ந்து சென்ருர். அதுகண்ட சூரபன்மன் எங்கையுடன் கடும்போர் புரிந்து மாயத் தன்மையால் அதற் கப்பாலுள்ள அண்டஞ் சென்ருன். இங்ஙனம் ஒவ்வோ ரண்டங்க டோறும் மறைந்து மறைந்து செல்லக் குகப்பிரா னும் ஆங்காங்கு விடாது சென்று பொருதார். அப்போது சூரபன்மனை யுங் கந்தக் கடவுளையுங் காணுது இந்திரன் பிரமன் முதலிய தேவர்கள் யாவரும் வாடிவருந்தி யேக்கமுற்ருர். திருமால் அவர்களைத் தேற்றி, தேவிர்காள்! குமார சுவாமி சிவனே யாகும். ஓர் திருவிளையாட னிமித் தத்தாற் குழவியுருக் கொண்டு தோன்றி நிற்கின்றனர். ஆதியந்த மில்லாத பாப்பிரமத்தை யற்ப வலியுடைய அசுர னென் செய்வான். இன்னுஞ் சிறிது போதிற் காண்பிர் என்ருர். சூரபன்மன் தன் மாயாவல்லபத்தால ஆயிரத்தெட்டு அண்டங்களினு மோடி யோடி யொளிக்க, பரஞ்சோதி யாகிய கந்த வேளும் விடாது தொடர்ந்து பொருது அவன் மாயைகளை யொழித்தார். இறுதியில் மகேந்திரபுரியில் வந்தான். பெருமானுங் கடி தின் ஆங்கு வந்தார். அதுபோது அவுணச் சேனைகள் பொங்கி யெழுந்து போர் புரியுமாறு ஆர்த்துச் சூழ்ந்தன. கார்த்தி கேயப் பெருமான் அச் சேனைகளை நோக்கித் திருப்புன் முறுவல் செய்தருளினுர். அத்திருப்புன் முறுவலாலே சூரபன்மனது சேனைகள் யாவும், திரிபுரமும் அசுரக் கூட் டங்களுஞ் சிவபெருமான் திருப்புன்முறுவலால் எரிந்தழிந்தாற் போல அழிந்தன, அதுகண்ட விட்டுணு பிரமன் இந்திரன் முதலிஞேர் குகன் சிவனே யென்று விம்மிதமுற்றுத் துதித்து நின்ருர். சூரபன்மன்



அகடிதகடஞசாமர்த்தியமூர்த்தி.

தனித்து ஒருவனும் நின்றான். தன் சேனைகள் சிரிப்பக்கினியால் அழிந்ததும், தான் றனியனும் நிற்பதும், பூதசேனைகள் ஆர்ப்பதுங் கண்டு சொல்வான். ஐயகோ! எனது தம்பியர், புத்திரர்கள், மந்திரிமார், சேனாபதிகள், சேனைகள் ஆகிய யாவரையுஞ் சிவகுமாரன் அழித்தான். தமியன் யான் என் செய்வேன் என்று நெட்டுயிர்ப் பெறிந்து தாயாகிய மாயவளை நினைக்கே அவள் தோன்றி, குமாரக்கடவுளைப் பாலனென்று கொள்ளலை. அவன் ஆதிபகவனே. தேவர் சிறையை விட்டுய்ய நினைக்கிலாய். மைந்த! விதிவழி கடந்தாருண்டோ என்றான். சூரபன்மன் வெகுண்டு எனது தம்பியர் முதலாயினோர் உயிர்பெற் றெழும் வழியைக் கூறுதி யென்றான்.

மாயவள் வருந்தி, சத்த சமுத்திரத்திற்கும் அப்பாற் புறவாழி யிருக்கிறது. அச் சமுத்திரத்தின் ஒரு பாங்கரில் அமுதசீத மந்தர கூடம் என்று ஒருமலையுளது. அதனை யிவ்விடங் கொண்டு வருதியேல் இறந்தார் யாவரு முயிர்பெற் றெழுவர் எனக் கூறிச் சென்றாள். சூரபன்மன் றனது இந்திர மாஞால மென்னுந் தேரை நோக்கி யம்மலையைக்கொண்டு வருதி யென்றான். அஃதோடிச் சென்று ஒருகணத்திற்குள் கொண்டு வந்தது. அதனாலே சேனைகள் முழுவதும் எழுந்தன. குதிரை, யானை, தேர், பதாதி, விற்கள், பாணம், படைக்கலங்கள் ஆகிய யாவுந் தோன்றின, சிங்கமுகன், பானுகோபன், அங்கிமுகன், வச்சிரவாகு, சகத்திரவாகுகள், மூவாயிரங் குமாரர், தருமகோபன், அங்கிமுகன் முதலாய யாவரும் எழுந்து ஊழிக்காலம் பிரளயமும் வாயுவும் அக்கினியும் ஒன்று கூடினாற்போ லாரவாரித்தார். சூரபன்மன் அளவிலா வுவகை கொண்டான். தேவரெல்லாங் கரையிறந்த துயர்க்கடற் குளித்தார். சூரபன்மனிடம் வீரங்கூறிவந்து கந்தசுவாமியை வளைத்தார். பூதர்களும், இலக்கத் தொன் பதின்மரும் ஆற்றாது தளர்ந்தார். பெருமானார் அவற்றைக் கண்டு நகைத்து உயிர்க் கூட்டங்களை யெல்லாம் ஓரிமைப் போதில் அழிக்குஞ் சிவப்படைக் கலத்தை யெடுத்து அழித்து வருதி யென விடுத்தருளினார். அது விரைவிற் சென்று எழுந்த சேனைகளை யெல்லாங் கணப்

௪௮௪ அகடித கடனா சாமர்த்திய மூர்த்தி.

போரின் முன்போ லழித்துத் தேர்மீதிருந்த மந்தர மலையையுந் துகளாக மாய்த்துக் கந்தவேள் பால் வந்தது சூரன் முன்போற் றனித்து நின்று விம்மிதமுந் துக்கமுங் கொண்டு மெய்ம் மறந்து வலிகுன்றி நின்றான். இச்செய்கை யாவரால் முடியும். "இக்கடவுள் அகடித கடனா சாமார்த்திய மூர்த்தியாய் விளங்குகின்றார்" என்று தேவர்கள் பூமாரி பொழிந்தாரத் துத் துதித்தார்.

சங்கர சங்கிதை - சிவரகசிய கண்டம்.

[illegible] ।
[illegible] ।
[illegible]
[illegible] ।
* * [illegible] ।
[illegible] ।
[illegible] ॥

கந்தபுராணம் - சூரபன்மன் வதைப்படலம்.

முந்து வெய்யசூர்ப் பரிசனத் தொகையெலா முருக்கி
யிந்தி ரப்பெரு ஞாலமாந் தேர்மிசை யிருந்த
மந்த ரப்பெருங் கிரியினைத் துகளெழ மாய்த்துக்
கந்த வேள்புடை மீண்டது சிவன்படைக் கலமே.

தன்மை யங்கவை யாவையுங் கண்டனன் றளர்ந்தான்
வன்மை நீங்கினன் கவன்றன னிரங்கிமெய் மறந்தான்

முன்மை யாயின னுயிர்த்தனன் செயிர்த்தனன் புலர்ந்தான்
றொன்மை போலவே தமித்தனன் றுணையிலாச் சூரன்.

அகடித கடனா சாமார்த்திய மூர்த்தயே நம :

எண்பத்தைந்தாவது,

தேவசேனாபதி மூர்த்தி.

கந்தப் பெருமான் சூரபன்மனைக் கொன்று, தேவர் சிறைமீட்டருளி, மகேந்திரத்தை வருணற்கு அளித்து, பாண்டி நாட்டின்கண் மதுரைக்குச் சமீபத்திலுள்ள திருப்பரங்குன்றை யடைந்து திருமால் முதலினோர் வேண்டு கோட்படி தேவத் தச்சன் செய்த கோயிலின்கண் வீற்றிருந்தருளினர். அப்போது இந்திரன் தேவசேனையாகிய குசகாயகியம்மையாரைப் பெருமானுக்குத் திருமணஞ் செய்விக்க எண்ணித் தன் கருத்தைப் பதுமநாபன், பிரமதேவன் முதலினோர்க்கு அறிவித்தனன். அன்னவர் "இந்திரனே நன்கு யோசித்தாய். தேவகுஞ்சரியும் சரவண வாவியின்கண் அருந்தவஞ் செய்தனள். பெருமானும் இந்திரனிடஞ் சென்று வளர்தி யென்றருள, அதனைச் சிரமீக் கொண்டு குழந்தையாகி நின்னிடம் வர, நீ யானை கைக்கொடுத்து வளர்க்கக் கட்டளையிட்டனை. அதனால் தெய்வயானை யென்னும் பெயரைப் பெற்றனள்" என்று முயற்சி செய்யும்படியுங் கூறினர். ஆகண்டலன் தூதரைக் கொண்டு மேருமலையிலிருந்த தன் மனைவி யாகிய புலோமன் புத்திரி இந்திராணியையும், தனது குமாரியாகிய தேவசேனையையும் அழைப்பித்து அறுமுகப்பெருமானுக்குத் தன் எண்ணத்தை விண்ணப்பித்தான். குமாரசுவாமி திருவாய் மலர்ந்தருளும். "மேகவாகன! அந்நங்கையும் நம்மை விவாகஞ் செய்தற்குப் பெரிதும்" கோற்றனள்.



தேவசேனாபதிமூர்த்தி.

எங்ஙன மெனில், நின்றுணைவ னுபேந்திரன்ற னிருகண்களினின்றும் அமிர்த வல்லி, சுந்தர வல்லி யென்னு மிருபெண்க டோன்றினர். நம்மகிமையை வைகுண்டத்துள்ள மங்கையர் வீணையி லமைத்துப் பாடினதைக் கேட்டு அவ்விருவரும் நம்மை விவாகஞ்செய்ய இச்சை கொண்டு, இமய மலையின் பாங்கரே யுள்ள சரவணவாவியிற் சென்று நவரத்தின கசித வொட்டியாணங்களை நீக்கி முஞ்சப் புன்ஞாண் தரித்தும், பட்டுவத்திரங்களை நீக்கி மரவுரிதரித்தும் நம் ஆறெழுத்தை யுச்சரித்து நோற்றார். யாம் தோன்றி, அழகுள்ள பெண்காள்! நுங்கட்கியாது வேண்டு மென்றேம். அவர்கள் "தேவரீர் எங்களைத் திருமணஞ்செய்தருள வேண்டும்" என்றனர். யாம் அப்போது சிலகாலத்தின் பின் நும்விருப்பப்படி விவாகஞ்செய்து கொள்வேம். ஆனால் அமிர்தவல்லியான நீ தேவலோகஞ் சென்று மகபதி மகளாக வளர்ந்து இருக்குமாறு ஆஞ்ஞாபித்தேம். மற்றைய சௌந்தரிய வல்லியை மான்வயிற்றிற்றோன்றி வேடரிடம் வளர்கவென்றேம். நம் ஆஞ்ஞைப்படி அமிர்தவல்லியோர் குழந்தை வடிவெடுத்து நின்னிடம்வர ஐராவதயானையை வளர்க்கும்படி பணித்தாய். அதனாற் றெய்வயானையெனப் பெயர் பெற்ற அவளை அங்ஙனம் நாளை மணமுடித்தும்" என்றார். விருப்பு வெறுப்பில்லாச் செவ்வேள் திருவாய் மலர்ந்தருளியன கேட்டு அளவிறந்த ஆனந்தமுற் றிந்திரன் தருக்கினின்றான்; வணங்கினான். அவ்விடத்தி னின்றும் விடைபெற்று வந்து தூதுவரை நோக்கி, "முசுகுந்தன்முதலிய அரசர்களுக்கும், தேவர், முனிவர், திக்குப்பாலகர், கணத்தவர்கள் முதலிய யாவர்க்கும் நாளை, எந்தை கந்தவேளுக்குந் தேவ குஞ்சரிக்கும் திருமணம் எனத் தெரிவித்து வருக" என்று அனுப்பி, கம்மியனைத் திருமணச் சாலை செய்ய விதித்தான்.

விசுவகன்மன், மலையி னுச்சியிலே யாவரும் வந்து தங்குதற்கு உரிய கோயில்களும் மண்டபங்களும் சோலை வாவி சுனைகளும் அமைத்துத்

தேஜோ மயமான அழகெலாம் வந்து குடியிருந்தாற் போன்ற திருமண
மண்டபஞ் செய்து, நடுவே அழகிய சிங்காதனங்கள் அமைத்து, வாழை,
கமுகு முதலியவற்றான் அலங்கரித்து எவரும் வியக்கும்படி செய்தான்.
திருமணத்திற்கு வேண்டுவன விந்திரன் அமைத்தான். அதுகாலை அரிச்
சந்திரன் வழித்தோன்றலாய கருவூரின்கண் அரசபுரிந்திருந்த முசுகுந்
தன் பறையறைவித்துத் தன்சேனைகள் கடலெனச் சூழத் திருப்பரங்
குன்று சார்ந்தான். ஏனைய மகிபரும் இயலுடன் போந்தார். மங்கையர்
யாவரும் வந்து பொங்கரிற் சென்று பற்பல விளையாடல்களைப் புரிந்தார்.
திக்குப் பாலகர், தேவர், முனிவர், கணங்கள் யாவரும் வந்தனர். தேவப்
பெண்கள், நாகமங்கையர், வீரமகளிர், முனிவர் பத்தினிமார் முதலிய
பெண்கள் யாவருந் தெய்வயானை யம்மையாரிடம் வந்து, "நங்கையே!
பரம்பொருளாகிய ஆறுமுகப் பெருமானுக்குத் தேவியாகும் உரிமை
படைத்தமையாற் சகல லோகத்தாராலும் வணக்கஞ் செய்தற் குரியாய்"
என்று வணங்கி வணங்கிப் பணிபுரிந்தனர்.

பின்னர்த் தெய்வயானை யம்மையாரை நீராட்டிப் பூண்கள் அணி
ந்து மணக்கோலஞ் செய்தார். திருமால் பிரமன் முதலினோர் அறு
முகக் கடவுள் சந்நிதி சென்று தொழ, அவர் மயில்வாகனத்தி னிவர்
ந்து பலவகை யாடம்பரங்களுடனும் வீதிவந்து திருமணச் சாலை புகு
ந்து பிரம விட்டுணுக்கள் பாங்கிருப்ப வீற்றிருந் தருளினார். அப்
போது வணங்கினோர்க்கெலாம் அருள் புரிந்தார். சர்வ லோகத்தை
யும் பெற்றதாய் தந்தையர்களான சிவ பெருமானும் உமாதேவியாரும்
மைந்தருடைய கல்யாணத்தைப் பார்க்க விரும்பி அங்கு எழுந்தருளி,
வணங்கிய மைந்தரை வாழ்த்தி வானினின்றும் வந்த ஆசனத்தி லெ
ழுந்தருளினர். யாவரும் வந்து பணிந்து உய்ந்தோம் உய்ந்தோ மென்று

துநித்தார். இனி மணவினை நடக்கவென்று சங்கரனார் கூறியருளினார். இந்திரன் சொற்படி தெய்வயானையம்மையார் இலக்குமி முதலிய வனிதையர் நடுவணே மெல்லென நடந்துவந்தார்.

பஞ்சிதனின் மெல்லடி பனிப்பவரை யின்பாற்
குஞ்சரிந டந்தசெயல் கூறுதுபுது மைத்தோ
செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடி நீய
னெஞ்சகவ டிக்கவினு நின்றுலவு மென்றால்.

என்று அதனைச் சிறப்பித்தார் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும். அங்ஙன் வந்தஅம்மையார் இந்திரன் முன்னர் வந்து நிற்ப, அவன்மணச் சாலையில் விடுத்தான். அம்மையார்மாமியாரையும் மாதுலரையும்வணங்கி, செவ்வேட் பெருமானைக் கடைக்கண்ணு னோக்கித் தூண்மென வெள்கினார். உடனே பார்வதிதேவியார் தேவகுஞ்சரியாரினதுமுதுகைத்தடவி அவரையும் மைந்தரையும் மணப்பீடத்தி லிருத்தினார். அதுகாலை இந்திராணி நீர்வார்க்க இந்திரன் திருவடிப் பூசைசெய்து, "தேவகுஞ்சரியாரைத் தேவரீர்க்குக் கொடுத்தேன். ஏற்றருள்க" வென்று தத்தஞ்செய்து கொடுக்கப் பெருமானும் மகிழ்வுடனேற்றருளி மணமாலை சூட்டினார். பிரமன் விதிப்படி சடங்குசெய்தான். அதன்பின்னர் அம்பிகையாரும், ஐயனும் அருள் புரிந்து கணங்களொடும் மறைந்தருளினார். யாவருந் தொழுதார். அறுமுகப்பெருமான், ஒரு திருக்கரம் தமது வலக்குறங்கி னிருந்த தெய்வயானை யம்மையாரைத் தழுவா நிற்ப, ஒருதிருக்கரம் அபயமாக, பரிசை. வாள், சூலம், வச்சிரம், வேல். வில், தண்டம், அம்பு, பதுமம், துவசம் என்னும் ஆயுதங்கள் பொருந்திய * பத்துத் திருக்கரங்களும் விளங்க அருள்புரியும் மூர்த்தமே தேவ சேனாபதி மூர்த்தியாகும்.

* இவ் வேறுபாட்டைக் கந்தபுராணங் கூறிற்றிலது.

குமார தந்திரம்.

𑌦𑍇𑌵𑌸𑍇𑌨𑌾𑌪𑌤𑌿𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 | 𑌮𑍌𑌨𑌂 𑌬𑌾𑌲𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑍍𑌤𑌂
𑌦𑍍𑌵𑌿𑌦𑌶𑌨𑌯𑌨𑌕𑌂 𑌷𑌣𑍍𑌮𑍁𑌖𑌂 𑌮𑌨𑍍𑌦𑌹𑌾𑌸𑌂 𑌵𑌾𑌮𑌾𑌙𑍍𑌕𑍇𑌶𑌂
𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌯𑌾𑌸𑍍𑌸𑌰𑌸𑌿𑌰𑍁𑌹𑌧𑍃𑌤𑌯𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌾𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾-
𑌯𑌾𑌃 | 𑌉𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑍋𑌰𑍁𑌸𑍍𑌥𑌨𑌾𑌗𑍇 𑌵𑌿𑌧𑍃𑌤𑌕𑌰𑌤𑌲𑌾 𑌭𑍀𑌤𑌿
𑌖𑍇𑌟𑌾𑌸𑌿 𑌶𑍂𑌲𑌾𑌗𑍍𑌰𑌾 𑌦𑍍𑌯𑍋𑌤𑌿𑌦𑍀𑌪𑍍𑌤𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑍍𑌵𑌜𑌸𑌨𑍍𑌵𑌰𑌦𑌾
𑌭𑍀𑌤𑌿 𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌾𑌬𑍍𑌜𑍇 𑌷𑌡𑍍𑌢𑌸𑍍𑌤𑌃 ||

தேவ சேனாபதி ஸ்வாமீ! மௌனம் யாதித்யப்ர தீப்தம் த்விதசநய நகம் ஷண்முகம் மந்தகாசம் வாமாங் கேஸம் ஸ்திதாயாச் சரிஸரு ஹத்ரு தயா விங்கி தாயா ப்ரயாயா:! உத்துங்கோ ருஸ்த காக்ரே விதிதூ..காதலா பீதி கேடாசி சூலாக்ரா திங்யோத் தீப்த சக்திஷ்வ சநுவாகதா குக்குடாப் ஜே ஷண்ஹஸ்த:!

கந்தபுராணம் - தெய்வயானை யம்மை திருமணப் படலம்.

அன்னுழி யிந்திர னுறுமு கேசன்
றன்னொரு கையிடைத் தந்தியை நல்கி
மின்னடி யேனிவ ணேர்ந்தன னென்னுக்
கன்ன லுமிழ்ந்த கடிப்புன லுய்த்தான்.

மருத்துவன் மாமறை மந்திர நீரா
லொருத்தி பொருட்டினி லொண்புன லுய்ப்பக்
கரத்திடை யேற்றன னுற்கழல் சேர்ந்தார்க்
கருத்திகொண் முத்தியு மாக்கமு மீவோன்.

தணிகைப் புராணம் - அகத்திய னருள்பெறுபடலம்.

ஒருகை தனது வலக்குறங்கி னணங்கைத் தழுவி யுகளமுலை
மருவ வபய மொன்றுக வளர்தோல் வாள்சூ லங்குலிசம்

*பொருவேல் வாள்வில் கதைபுள்ளம் புயங்கோல் பத்துங் காம்பத்தி
னிருவு மாறு முகத்தேவ சேனா பதிசீ ரிழைப்போரும்.*

ஸ்ரீதேவசேனாபதி மூர்த்தயே நம:

எண்பத்தோராவது,

சர்வபலப்பிரதான மூர்த்தி.

சூரபன்மன் முதலாய அசுரர்களை யெல்லாங் கொன்று தேவரைப் புரந்தருளிய அறுமுகக்கடவுள் ஒருகாலத்துத் தந்திருத் தலங்கடோறும் எழுந்தருளத் திருவுளங் கொண்டு, கந்தலோகத்தி னின்றுமெல்லாக் கணங்களோடும் புறப்பட்டு, பவானிசங்கமம், சமணம்பிராண நாசனம், பவானி சங்காம்; சரவணம், குமாரபுரம், கதம்ப காரண்யம், வன்னித்தானம், சத்தியபுரம், சண்முகபுரம், கன்னபூடணம், கீர்த்தி பூடணம், வாகுலேய மாபுரம், பவித்திரம், ஆரூடம், எடகம், நப்பிரமத மோசம், கிரவுஞ்சம், வேத சைலம், சத்தியவாசகம், குமரகோட்டம், கௌமாரம், தாமிர சூடத்துவசம், வில்வகானனம், மயூரமதம், தேவகும்பம், குகைத்தானம், விசாகபவனம், வித்தியாவனம், மாரானந்த காரணம், சுவேத மாவனம், குமாரசிகாசலம், சுராபயப்பிரதம், வள்ளிவெற்பு, மாவீரபுரம், சோமாக்கந்தம், வாகுலேயாசிரமம், கந்தசயிலம், சித்திரகூடம், சம்புகேசுரம், கோமுக்கியம், சிகாவத்தி, பிரணவபுரம், ஞானாசனம், புத்திரகாமம், இந்திராபயப்பிரதம், சிவோபாசிய நகரம், பிரமநிக்கிரகம், பிரம வனுக்கிரகம், வாதபுரம், வாஞ்சலம், வரதசயம், அபிடேகபுரம், குறுஞ்சுனை, கல்யாணகானம், சுப்பிரமணியம், வித்தியாதாரம், மணிகண்டேசுரம், சமயத்தான பஞ்சகம், சயந்தபு , குமாரசலம், திருவேங்கடம், சீபூரணகிரி முதலிய தலங்கள்

சர்வபலப்பிரதான மூர்த்தி.

தோறும் எழுந்தருளியிருந்து வந்தித்துப் பூசித்ததேவர் முதலாயினோர்க் கெல்லாம் அருள்புரிந்து பின்னருந் தென்றிசைநோக்கியெழுந்தருளினர்.

அங்ஙனம் போந்து வேதாரணியப் பாங்கரினுள்ள கோடிக்கரை யென்னும் இடத்திற் கோயில்கொண்டருளிப் பிரணவத்தையேயோர் தெப்பமாக்கி அதன்மீது சகலகணர்களோடு மேறியருளி யிலங்கையின் வடபாகத்திலுள்ள காங்கேயன்றுறையி னிறங்கியாங்குக் கோயில்கொண்டு வீற்றிருந்து, அதற்குக் கிழக்கேயுள்ள கந்தவனப் பதியிற் போந்து தங்கி பின்னர் அதற்குக் கீழ்ப்பாலுள்ள ஆய்ப்பாத்துறை என்னுமிடத்தின் அருகே மேலைப்புலோலி யென்னு மூர்க்கண் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்தனர். புலவர்களாகிய தேவர்களெல்லாம் பெருமானுரையுவப் பிக்கு நிமித்தஞ் சாமகானங்களையாழ்முதலிய விசைகளுடன்பாடித் துதிப் பாராயினர். விவைச்சுவா னென்னுஞ் சூரியன்சற்புத்திரப்பேற்றைவிரும் பிக் குமாரதந்திர விதிப்படி பூசித்தான். தேவர்களின் கானங்களையெல் லாங்கேட்டு அவர்க்கு நல்லருள் புரிதலாலே யத்தலம் புலவகானம் எனப் பெயர்பெற்ற தென்று வாமன புராணங் கூறுகின்றது. புலவகானம் என்னும்பெயர் புலவொலியெனவழங்கி யிக்காலத்துப் புலோலி யென வழங்கப்படுகின்றது சூரியன்செய்தபூசையையுகந்து அவர்க்குக் காளிந்தி, யமன், சனியென்னும் மக்களைப்பெறத் திருவருள் புரிதலால் அத்தலம் பரிதிபுரம், பரிதித்துறை யெனப்பெயர் பெற்றது. அவ்வாறே முனிவர், கந்தருவர், சித்தர், விஞ்சையர், நாகர் முதலாயினோர் வழிபட அவர்களெல் லாம் மகாவேலாயுத மூர்த்தி புதுமையாய் விளங்குந் திருச்சந்நிதி கொண் டெழுந்தருளி அவ்வவர்கள் விரும்பிய எல்லாப் பேறுகளையும ஈந்தருளலாற் சர்வபலப்பிரதான மூர்த்தியெனப் பெயர் பெற்றார். மகாவேலன் றணித்தருளிய இடமாதலின் அவ்விடம் மகாவேலன்றணி, மாவேலன் றணி எனவும், நவமாகச் சந்நிதி கொண்டருளலான் நவசந்நிதி, புதுச்சந்

மிதி யெனவும், விட்டுணு பூசித்துத் தென்கீழ்த்திசையிலேயுறையும் வரத்தைப் பெற்றமையால் மாலோன்றணியெனவும் பெயர்பெற்றதென்க. இத்தலத்தையே சிமத் அருணகிரிநாத சுவாமிகளுந் தாம் அருளிச்செய்த திருப்புகழில் "யாழ்ப்பாணயன்பட்டின மருவிய பெருமாளே" என்பது முதலாகத் துதித்துள்ளார்.

இத்தகைச் சிறப்பினையுடைய திருத்தலக்கோயில் பின்னர்க்காலத்துப் புதிதுபுதிதாக உண்டாக வேண்டுமென்னுங் காரணத்தாலோ, புறச்சமயிகளாகிய பௌத்தர்களால் அழிக்கப்பட்டமையால் அத்திருத்தலவுண்மை பலர்க்குந் தெரியா திருந்தது. பின்னர் மேலைப்புலோலியிலே பரம்பரைச் சைவவேளாள குலத்திலே அக்குலத்தினர் தவமெலாந் திரண்டு ஓர்வடிவெடுத்தாற்போலக் கோணநாயகியம்மையார் என்பார் தோன்றினர். அவர் தக்கிணகயிலாயமென்னும் இலங்கையின் றென்கோடியிலே இந்து சமுத்திரமெனப்படும் மகேந்திரக் கடலின்பக்கத்தேயுள்ள ஏமகூடமென்னுங் கதிர்காமத் தலத்திற்கு யாத்திரை பலகாற் செய்வாராயினர். சுப்பிரமணிய பத்தியின் முதிர்ந்த முருகம்மையார் தாம் இங்ஙனந்தோன்றின ரென்று உலகோர் வியக்குமாறு கதிர்காமக் கடவுளின் றிருவடியினிடத்தே யிடைவிடாத பத்தியின் முதிர்ந்து விளங்கினமையால் உலகர்கள் அவரைக் குகானந்தநாயகி எனக்கூறுவாராயினர்.

இங்ஙனம் குகானந்த நாயகியார் உலகப்பற் றொன்றுமின்றி இலங்கையின் வடகோடிக்கணுள்ள தம் மூரிலிருந்து, தென்கோடிக்க ணுள்ள கதிர்காமத் தலத்திற்கு யாத்திரை செய்து வருவார். முன்னர்க் காலத்தில் அத்தலத்திற்குச் சேறலரிதரிது. என்னை? மனுடசஞ்சார மில்லாதவும், யானை, புலி, கரடி முதலிய கொடிய மிருகங்க ணிறைந்தவும், மனுடர்

முதலாயினோரை விழுங்கும் முதலைகள் செறிந்த பாழிகளையுடைய யாறுகள் இருப்பவும், பொருளையும் உயிரையுங் கூறையாடுங் கள்வர்கட்கு இருப்பிடமாகவும் ஆகிய பெரிய வனங்கள் பலப்பல இருப்பதனா லென்க. அதனா லத்தலஞ்செல்லு மன்பு முதிரமுதிரக் கதிரை வேலாயுதக்கடவுள் சொப்பனத்திற் றோன்றி வருகவெனின், அத்திருவரு ளாணைபற்றிச் செல்வார்யாதோ ரிடையூறு மின்றிச்சென்று கதிரைநாயகனைத்தொழுது அவனருள் பெற்று வாராநிற்பர். அக்கடவுளி னாணையின்றிச் செல்வார் திருடர்களானாதல், நோய்களானாதல், மிருகங்களானாதல், முதலைகளானாதல், மயக்கத்தானாதல், தாம்வந்தவழியே திரும்புதல், அல்லது உயிர்நீத்தல் திண்ணமாம். எனவே மிக்க அன்புடைய பக்குவர்தாங் கதிரைத்தலந் தரிசித்தற் குரியா ரென்பது. இவ்வாறிருத்தலாற் கதிர்காம யாத்திரை முன்னைக் காசியாத்திரையினு மருமையுடைத்தாம் யாத்திரையதென்க.

இத்துணை யருமை யுடைத்தாம் கதிர்காம யாத்திரையைப் பன்முறைசெய்த குகானந்த நாயகியார் வழியானே வடகோடிக்கணுள்ள நவசந்நிதி என்னும் புதுச்சந்நிதித் தலத்தை வெளிப்படுத்தி யருளத் திருவுளங் கொண்டருளிய பெருமான், கதிர்காமத் தலஞ்சென்று தரிசித்திருந்த குகானந்த நாயகியார் முன்னர் ஓர் சித்தராகத் தோன்றினர். குகானந்த நாயகியார் பஞ்சாங்க நமஸ்காரம் புரிந்து நின்றகாலைச் சித்தமூர்த்திகள் மகிழ்மீக் கூர்ந்து சடக்கர மந்திரத்தை அதற்குரிய சந்தசு, நியாசம், கீலகம், பீசம், சத்தி, அதி தேவதை, இருடி, தியானம் முதலிய இயல்களுடன் உபதேசித்துச் சிலவுறுதிமொழிகளைத் திருவாய்மலர்ந்தருளுவார்.

“கதிரைநாதன் மீது சாலவு மளியுள்ளாய்! சிவதலங்களுட் சிதம்பரம்போல உலகின்க ணுள்ள குகதலங்களு ளிக்கதிரையந்தலங்குகைத்தலமாம் இரகசியத் தலமாகும். “யோவேத நிகிதம் குகாயாம் பரமே வ்யோமந்” என வரூஉம் யசுர்வேத வசனத்தானும்,

யத்ரக்ருத்யநி தேவேச: பரமாநந்த விக்ரக: !
தஸ்ய தேசஸ்ய நாமாநி ச்ருதாந் யேதாநி பூதலே !
அமலம் சத்யரம் நித்யம் மஹாரங் கோசோ ஹிரண் மய: !
அந்த: புரம் விவிக்தஞ்ச புண்டரீகம் குகாவரம் !

எனவரூஉம் ஸ்காந்த சம்பவச் சுலோகங்களானும், "ஹிர்தயாகாசமயம் கோசமானந்தம் பரமாலயம்" எனவரூஉம் மைத்திராயணோபநிடதக்கூற்றானும். பிறவற்றானும் இத்தலம் ஏமகூடம் முதலிய பலபெயர்களையுடைத்து. ஈண்டுச் சூரபன்மன் முதலாய அசுரர்களைக் கொன்றருளிய வேகமூர்த்தியாய்ப் பெருமானா ரெழுந்தருளி யிருக்கின்றார். ஆகலால் நீயிவண் இனிக் கட்டுற்று வருதல் வேண்டா. உத்தர கோடியிலேயுள்ள நின்றார்க்க ணோர்தல முள்ளது. அஃதிக் கதிர்காமம்போலச் சுப்பிரமணியக் கடவுட்கு உகந்ததாயுள்ளது. ஆகலால் உபய கதிர்காமம் என்னும் பெயருடைத்து. சூரபன்மன் போர்புரிந்த காலத்துப் பொருகளமகன்று வடகடற் றீரமோடிப் பலப்பல மாய யாக்கைகள் கொண்டு பொருத விடமு மாங்குள்ளது. அந்த இடத்தையே மாயயாக்கை (இப்போது மாயக்கை) என்று சொல்வார்கள். இன்னு மவ்வுணன் அல்வடிவுவாய்ந்து தேவர்களை வாயால் நுங்கக் கிளம்பிய இடமே அல்வாய் எனப்படும். அவ்விருளைக்கண்டு பயந்து ஓலமிட்ட தேவர்களை யாண்டருளிய இடம் அவ்வுபய கதிர் காமத்திற்கு மேற்றிசைக்க ணுள்ளது. அது இக்காலத்துந் தேவரையாளி யென வழங்கப்பட்டுவரும். சூரபன்மன் ஆம்பர (மாமரம்) வடிவாகி நின்ற கடல்மிக்க சமீபித்ததேயாம். ஆம்பரமாய் நின்ற கடற்றுறை யதுவாகலின் அதனை ஆம்பரத்துறை யென்பா ருலகர். ஆம்பரத்துறை யென்பது இக்காலத்துப் பாத்துறையெனச் சொல்லப்படும். இவற்றி னடுவே பச்சிம புலவகான நகரமுள்ளது. ஆங்கே மகரவேலன் தணி, மாலோன் தணி, உபய கதிர்காமம், உத்தரகதிர்காமம், வாமனபுரம்,

நவசந்நிதி, சர்வமலப் பிரதம், புலவகானம் பரிதிபுரம், பரத்துறை, சூரிகான சதனம் முதலான பெயரையுடைய கந்த கோட்டம் விளங்காநிற்கும்.

அஃதிது காலை மறைந்திருப்பதனால் இவ்வேலாயுதமாகிய ஞான சத்தியைக் கொண்டு சென்று தாபிப்பாய். ஆங்கு இத்தலத்தி லமர்ந்தருளல் போலக்குகனார் சாந்நித்தியமாய் வழிபடுவார்க் கருள்புரிவார். அத்தலத்தையும் ஆங்குள்ள இவ் வேலாயுத மூர்த்தியையும் வழிபடுவோ ரித்தலத்தையும் ஈங்குள்ள மூர்த்தியையும் வழிபட்ட பயனை யடைவர். இது சத்தியம்! சத்தியம்!! இவ்வேலாயுத மூர்த்தியைத் தாபிக்கும் இடத்தையும், கோயிலி னளவையும், வேலாயுத புட்கரணி யென்னுந் தீர்த்த மிருக்கு மிடத்தையும் மயிற்பறவை யொன்று வந்து அகவி வளைத்துக் காட்டும். அவ்வவ் விடங்களி னமையிற்றறைச் செய்து பூசித்து இருத்தி" என்று ஓர் வேற்படையும் அருளி யர்தர்த்தான மானார். குகானந்த நாயகி யாரும், ஆங்கு நின்ற அன்பர்களும் பரவசம் அடைந்து "தோன்றி யருளினனவர் குமாரக் கடவுளே" என்று விம்மிதராய்ப் புகழ்ந்து வணங்கி யானந்தக் கூத்தாடினார்.

குகானந்த நாயகியார் அங்ஙனே ஞான சத்தியைக் கொடுவந்த காலை, ஆங்காங் குள்ள அடியார்கள் சர்வோப சாரங்களுடன் போற்றினர். மாவேலன் தணி என்னும் இடத்தில் வந்து எங்கே தாபிப்ப தென்று எண்ணிய காலத்து, வாமனர் கோயில் காண விரும்பிய போது ஓர் மயில் வந்து அகவி வக்கிரஞ் செய்து காட்டியதே போல, அதுபோதும் முருகக் கடவுளின் வாகனமாகிய மயிலின் இனமெனப்படும் ஓர் மயூரம் திடீரெனத் தோன்றி சிறகரைப் புடைத்துத் தோகையை விரித்து நின்று அகவிக் கண்டாரெல்லாம் "திருவருளிருந்தவா றென்னே யென்னே யென்னே?" என்று அதிசயிப்ப வளைந்து நடந்து காட்டிற்று. அவ்விடங்களில் தோன்

டியபோது முன்னிருந்த கோயிலுந் தீர்த்தமுங் காணப்பட வியப்புற்றுக் கோயிலுந் தீர்த்தமுங் கண்டு ஞான சத்தியைத் தாபித்து வழிபட்டனர். மயூரம் விளைந்து காட்டினமையால் மயூர வக்கிரம் என்றும் அத்தலம் பெயர் பெற்றது.

இந்தியாவின்க ணுள்ள சுப்பிரமணிய தெய்வத் தலங்கள் அறுபத்து நான்கினும், இலங்கைக்க ணுள்ள மாவிட்டபுரம், கந்தவனம், நல்லூர், கந்தமலை, சிவனொளி பாதம், வள்ளிமலை, கண்டகி வளம், உகந்தமலை, வில்லூன்றி, செட்டிகுளம், வெருகல், குமாரபுரம், கதிர்காமம், யாழ்ப் பாணயன் பட்டினம் என்னும் புலவகானம் முதலிய இச்சுப்பிரமணிய தலங்களுள்ளே மிக்க மேன்மையை யுடையது எமகூட மென்னுங் கதிர் காமமே. இதற்கு இரண்டாவது தலமாக விளங்குவது புலவகான மென்பது ஞம் இந் நவசந்நிதித் தலமேயாம். இங்குள்ள வேலாயுத புட்கரிணியும் வடக்கணுள்ள சமுத்திர தீர்த்தமும், இலங்கைக்கணுள்ள மாவலி கங்கை, வளவஞறு, மாயவஞறு, கன்னியா கங்கை, காவிரி கங்கை, நகுல தீர்த் தம, நிலாவரை, யமுனரி, நவகங்கை, கருடகங்கை, திருவடிநிலை, பிரம மேடை முதலிய தீர்த்தங்க ளெல்லாவற்றினும் விசேடித் தவையாகும். மாணிக்க கங்கை யென்னுங் கதிர்காமத் தீர்த்தத்திற்கு இரண்டாவதா யுள்ளது.

இத்தலத் தெழுந்தருளுஞ் சுப்பிரமணியக் கடவுள் உபயகதிரை நாதன், புதுச்சந்நிதிக் கந்தன், மகா வேலாயுத மூர்த்தி, குகானந்த நாய கன், சர்வபலப் பிரதான மூர்த்தி யெனவும், தேவிமார் தேவகுஞ்சரநாயகி, அருணை சுந்தர நாயகி, யெனவும் பெயர் பெறுவர் என்க.

இங்ஙனஞ் ஞானசத்தி ரூபமா யிருந்து அன்பர்கள் எண்ணிய சர்வபலங்களையும் அருளியிருத்தலாற் சர்வபலப் பிரதான மூர்த்தி யாயினர் குமாரக்கடவுள். இவைகட்குப் பிரமாணம் மற்சபுராணம், அம்சுகாமாசல வைபவம், கதிர்காமப் புராணம், தக்கிண கைலாச

புராணம், கந்தபுராணம், வாமனனி புராணம் புதுச்சந்நிதிக் கந்தர்சதகம் முதலியவற்றிற் காண்க.

வாமன புராணம்.

[illegible]

கதிர்காமப் புராணம் - உபயகதிர் காமப் படலம்.

சீர்பெறு மிலங்கைத் தலத்தியாழ்ப் பாணன் றிருத்திய நகரத்தின் வடபா, லேர்பெறு மேலைப் புலோலிநற் றலத்தி னினியமெய்ச் சைவவே ளாளக், கார்பெறுங் குலத்தே மழவரா யப்பேர்க் கதித்திடுங் கோத்திர மதனி, னேர்பெறுந் தவங்க டாண்டென வொருபெண்ணியைந்தனள் குகா னந்தை பெயரே.

மங்கையர்க் கரசி வந்துதித் தனளோ வண்மையார் திருவருள் படைத்த, துங்கமார் புனித வதியினார் பின்னுந் தோன்றிய புதுமையோ புலமைப், புங்கவி யிளையா ளன்பினைத் தெரிக்கப் போந்ததோ வறிகிலே மவளுந், துங்கவேற் கதிரைக் கடவுண்மீ தன்பிற் றுதைந்தன ளவன்புகழ் சொலுவாள்.

பத்தியாண் டனுகப் பத்தியாண் டுள்ள பாவையுங் கதிரைகற்ற லக்கு, முத்தியை விரும்பிச் சென்றிட முயன்று ளிருமுது குரவர்க்கு முடிவி, னித்திய பரமன் கனவினிற் றோன்றி கிகரிலாப் புதல்வியோ டுற்று, நத்திய பெறுதி யென்றனை ஞங்குப் பன்முறை நடந்தயாத் திரையே.

துறவினிற் புகுந்து கதிரையி னண்மித் துதித்திருந் தனளிறை தோன்றி, நிறவயி லருளி நன்றனூர் தாபித் தேத்துக நீன்மயிலிடத் தைக், குறைதபக் காட்டு மவண்முனம் வாமன் கோயில்கொண் டுய்ந் தன னவுண, னிறையிருள் சூத வடிவினைத் துமித்த நிகரிலாத் தலங்க ளுஞ் சூழும்.

அன்னவை நடுவட் டுவிகதிர் காம மருமையாஞ் சித்திரற் காமே, துன்னிய வுதீசிக் கதிரைமேற் புலவர் சொல்லிடுங் கானமே மஞ்ஞை, மன்னுவக் கிராமா வேலனற் றணியே வாமனம் பாத்துறைபிரத, மென் னுமிப் பெயர்சேர்ந் தோளிருமா நவசந் நிதியெனு மொருபெருங் கோயில்.

அதன்கணே சர்வ பலப்பிர தான மூர்த்தியா யறுமுகக் கடவுள், பதங்கன்வா னவர்க ளதிதிபுத் திரனே பற்பல கணத்தவர் பழிச்ச, நித மெழுந் தருளி யவரவர் வேண்டு நினைப்பெலா முற்றிநின் றனனென், றிதமொழி யியம்பிச் சித்தனு மறைந்தா னிதுகண்டி யாவருந் துதித்தார்.

சர்வபலப் பிரதான மூர்த்தயே நம:

எண்பத்தேழாவது,

பதங்காப வர்க்க மூர்த்தி.

சுப்பிரமண்ணியப் பெருமானுருக்கு மயில் வாகனமுங் கோழிக்கொடியு முள்ளன வென்பது கந்தபுராணத்தா லுணரக் கிடக்கின்றது. மயிலுங் கோழியுந் தமது குறிச்சித் திணைப் பறவைக ளென்பதனுன்றே, அன்றி மயில் மழை கண்டு கூவுதலும், கோழி வெயில் கண்டு கூவுதலு முடையவாஞ் சிறப்பினுன்றோ பறவைகளையும்வாகனமாக் கொண்டருளினுர். அல்லதூஉம் பற்பல தன்மைகளையுடைய சொற் பிரபஞ்சம் பொருட் பிரபஞ்சங்களுக் கெல்லாம் அதிபதி யென்பதை புணர்த்தற்கோ? ஆடலினும் அகவலினும் உயர்வுடைதாய அழகிய பறவை யென்றோ? பல வன்னங்களையுடைய மயிலையும், தசநாதங்களு மொலித்த பின்னர் ஞான சூரியராகிய தாம் பிரசன்னமாய் ஆணவப் பேரிருளை யோட்டி யருளுதலாகிய குறிப்பை யுணர்த்தற்கோ? சூரியன் வருகையைத் தெரிவிக்குஞ் சேவலையும் முறையே வாகன மாகவுங் கொடியாகவுங் கொண்டருளினுர்.

அல்லதூஉம் "ஸம்பா குப்யார்த மதிசம்பத த்ரை:! எனவும், "த்வாசுபர்ணாஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வ ஜாதே! தயோரேக: பிப்பலம் ஸ்வாத் வத்தி அநச் நந் நந்யோ அபிசாகசீதி! (* இருபறவைகள் ஒருதன்மை யுடையன, இணைபிரியாதன; ஒரு தருவினிடத்தே வசிக்கின்றன. அவற்று ளோர். பறவை கைப்பை யினிப் பெனக் கொள்ளா நிற்கும்; மற்றொன்று ஒன்றனையும் அருந்தாது பிரகாசிக்கும்) எனவும் யசுர் வேதமும், இவற்றையே பின்னும் அநுவதித்து, "த்வாசுபர்ணா வயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வ ஜாதே! தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத் வத்திய நச்நந் நந்யோ பிசாக சீதி" என அதர் வணவேத முண்டகச் சாகையுங் கூறியபடி பதிப் பொருள் பசுப் பொருந்

பதங்காபவர்க்க மூர்த்தி,

என்னு மிரண்ட னியல்களை யெல்லா முணர்த்தற்கே கொண்டருளினு ரென்று ஆத்தர்க டெளிவித்துளார்.

பரம் பொருளாகிய கந்தக் கடவுளின் றிருவடிக் கீழுள்ள மயில் ஆணவத்தை யடக்கு மாற்றலேயும், முடியின்மேலுள்ள சேவல் அருண் ஞான மென்னும் பரஞானத்தை மேற் கொள்ளும் வண்மையையுங் குறிக்க நிற்றலான் மயில் ஆணவ மெனவும், சேவல் சிவஞான மென வுங் கூறப்படு மென்பாரும், மயிலால் ஐங்குணத்தை யுடைய பிருதிவி தத்துவமும், சேவலா னொலிமயமான நாததத்துவமுங் குறிக்கப் படலாற் பிருதிவி முத னாத மிறுதியாக வுள்ள தத்துவங்கட் கெல்லாந் தலைவரும், அவற்றி னீக்கமின்றி நிற்பவரும் பிரேரிப்பவருந் தாமே யென்பதை விளக்கி யருளுகின்ரு ரென்பாரும், மயிலாற் பொருட் பிரபஞ்சமும், சேவலாற் சொற் பிரபஞ்சமும், குறித்தப்படலா னிருவகைப் பிரபஞ்ச முந் தம்வயப்பட்டன வென்பதைத் தெரித்தபடியா மென்பாரு மாகப் பலவாறுரைப்பார் பெரியோர். அங்ஙனமுள்ள மயிற் பறவை. சேவற் பறவையென்னு மிரண்டனையுங் கொண்ட வரலாறும் முத்தியளித்த தன்மையுங் கூறுவாம்.

முன்னோர் கற்பத்திற் சாகத்தீவிற்கு அரசனுகிய பிரபாகர னென் பானுக்கு ஓரிரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர். அந்தப் பிள்ளைகட்குச் சூரன், பதுமன் எனப் பெயரிட்டான். வேறு இரு குமாரர்கள் தோன் றினர். அவர்கட்குச் சிங்கன், தாரக னெனப் பெயரிட்டான். சூரன் பது மன் என்னும் பிள்ளைகளிடத்துச் செந்தமிழ் முனியாகிய அகத்தியனுர் தோன்றிச் சுப்பிரமணியக் கடவுளின் மகிமைகளையும் அவரது வாகனங் கொடிகளாகிய மயில் சேவலென்னு மிவைகளின் பெருமைகளையுமெடுத் துரைத்தார். அங்ஙனே திரணவிந்து முனிவர் சிங்க னிடத்தும், விடப யோகி யென்பார் தாரகனிடத்துஞ் சென்று முறையே துர்க்கைத் தேவி

யின் வாகனமாகிய சிங்கத்தினதும், மகாசாத்தா ஆகிய அரிகர புத்திரரது வாகனமாகிய யானையினதும் மகிமைகளை யெடுத்து உரைத்தார். அவர்கள் நால்வரும் முறையே மயில், கோழி, சிங்கம், யானை யென்னும் வாகனங்களாகி, அந்தக் கடவுளர்களைத் தாங்க வேண்டு மென்று விருப்ப முற்றுச் சீகுல பருவதத் திற்கு அடுத்த வனத்திலே பஞ்சாக்கினி மத்தியினின்றும் நாற்பதினாயிர வருடங் கடுந்தவஞ் செய்வாராயினர்.

அதுகாலைத் தேவர்கள் யாவருஞ் சிவபெருமானைத் தரிசித்தற்கு விரும்பித் திருக்கயிலாய மலை சென்று அதனடி வாரத்திற் றங்கடங்கள் வாகனங்களை விடுத்துச் சென்றனர். அப்போது கருடன் அன்னம் முதலிய பறவைகள் சுப்பிரமணியக் கடவுளின் வாகனம் கொடி யிவைகளினிடத்தும், துர்க்கைத் தேவியார், மகா சாத்தா வென்னு மிவர்களின் வாகனங்க ளிடத்துஞ் சென்று, "மயூர குக்குட முதலிய வேந்தர்காள்! நுங்கள் பதவிகளை விரும்பிப் பிரபாகர மன்னவன் குமாரர்கள் தவஞ் செய்கின்றனர்" என்ன அவைகள் மிக்க கோபங்கொண்டு தவஞ் செய்யுமிடம் போந்து சுவாலித் தெரியு மக்கினியை யவித்து "நீவிர் யாதற்குத் தவம் புரிகின்றீர்" என வினவிய காலத்து மன்னவ குமாரர்கள் நடுநடுங்கித் தத்தம் விருப்பங்களை யவைகட் குரைத்தார். அப்போது மயில்முதலிய வாகனங்கள் நீங்களெம் பதங்களை யிச்சித்தமையா லெங்கள் முகங்களைக் கொண்ட பூதங்க ளாகக்கடவிரென்று சாபமிட்டுச் சென்றன. அங்ஙன மம்முகத்தைக் கொண்ட பூதங்களான மன்னவ குமரர் நால்வரும் அவைகளைப் பின்றொடர்ந்து பலவாறு துதித்துச் சென்றனர், அவைகளவர்களின் றுதிகளைக்கேட் டிரக்கமுற்று "நீவிரிவண் சிலகாலம் இருமின். உண்மையாய் நுங்கள் விழைவு கைகூடு" மென்ன அவ்வாறே யப்பூதர்களால் வருங் கைலை மலைக்க ணுள்ள அண்டாவரணப் பூதங்களுடன் கூடியிருந்தனர்.

அந்தகாலத் தேவர்களெல்லாம் வந்து அசுரர்களின் கொடுமைகளைச் சொல்லி யழுது அடைக்கலம் புகுந்தனர். அந்நான்கு பூதங்களு மவர் கட்கு அபயங் கொடுத்துச் சில பூதங்களுடன் சென்று அசுரர்களையெல் லாம் பலவாறு இம்சித்துக் கொன்றூர்கள். அசுரர்கட்குத் தலைவனான அசு ரேந்திரன் மறைந்திருந்து கயிலையின்கட் சென்று அப்பூதர்கள்செய்த தீங் குகளைப் பூதங்கட்கெல்லாந் தலைவனான அண்டாவாண னிடஞ்சொல்லி யிரங்கினன். கணேசன் அப்பூதர்களை யழைத்து அசுரர்களாகப் பிறந்து தேவர்க்குத் துன்பஞ் செய்யக்கடவிர்" என்று சபித்தான். அவர்க ளங்ஙன மே தேவர்க்குத் துன்பஞ் செய்திருந்தனர். ஒருகாலத்து முருகக் கடவு ளார் தம் வாகனத்தையுங் கொடியையுந் திருக்கயிலைச் சாரலில் விடுத்துத் தாயந்தையரைக் காணச் சென்றார். பரம சிவனைச் சேவிக்கவந்த பிரம விட்டுணு இந்திரர் முதலியோர் வாகனங்களும் அங்கிருந்தன. அவ்வாக னங்கள் மயிலையுங் கோழியையும் வந்திக்காமல் அகங்காரங் கொண்டிருந் ததை யந்நான்கு பூதங்களும் மயிலுக்குஞ் சேவலுக்கு மறிவித்து அவைக ளோடு சேர்ந்து, கருடன் அன்னமுதலிய வாகனங்களை யெல்லாந்துரத்தி வைகுண்டம் சத்தியலோகம் சுவர்க்க முதலிய வுலகங்களிற் சென்று அவைகளை யெல்லா மிடித்து அழித்துக் கருடன் முதலிய வாகனங்களை யுங் கொன்றுதாமிருந்த இடம்வந்து சேர்ந்தன. பரசிவனை வந்தனித்துத் திரும்பிய தேவர்கள் தங்கள் வாகனங்களைக் காணமையால்நடந்தனவெல் லாங் கேட்டறிந்து மிக்க துக்கமுடையவராய், வெளியே யெழுந்தருளிய வேலாயுதக்கடவுளின் றிரு முன்னிலையில் வீழ்ந்து வணங்கி முறையிட் டனர், அவர் பூதங்க ளைங்களையும் அசுரராகும்படி சபித்தனர். அதனால் அவர்கள் சூரன், பதுமன், சிங்கமுகன், தாரகன் என்று நால்வருங் காசிப முனிவர்க்கும் மாயைக்கும் பிள்ளைகளாகிச் சூரபன்மன், சிங்கமுகன், தார கனென மூவராய்ப் பிறந்து கந்தக்கடவுளின் வேலாயுதத்தாலும் வச்சிரா

யுதத்தானுங் கொல்லப்பட்டு மயிலுங் கோழியுஞ்சிங்கமும் யானையுமாகி யவ்வக் கடவுளர்க்கு வாகனமுங் கொடியுமாயினர்.

கந்தக் கடவுட்கு வாகனமுங் கொடியுமா யிருந்த மயிலுஞ் சேவலும் இராசகுமாரர்கள் செய்த தவத்திற்கு இடையூறுசெய்தமையாலும், பூதங் களின் சொற்களைக் கேட்டுக் கருடன், அன்னம், யானைமுதலிய வாகனங் களைக் கொன்று திரும்பிய குற்றத்தினாலுங் கந்தக்கடவுளி னின்றும் நீங்கி யலமந்து அன்னவர்தந் திருவருளை யடையு முபாய மெண்ணித் தொண் டை மண்டலத்திற்சிறந்து விளங்குங்காஞ்சிபுரத்தை யடைந்தன. அங்கே மயில், சேவல் என்னும் அவ்வுருவத்துடனே யநேக காலங் கந்தநாதனைக் கருதித் தவம்புரிந்து அவர் திருவரு ளடைந்து குகசாயுச்சிய பதவியை யடைந்தன. இங்ஙனங் குகக் கடவுள் மயில், சேவலென்னும் இருபதங் கங்களுக்கும் முத்தி யளித்தலாற் பதங்காபவர்க்க மூர்த்தி யாயினர். பதங் கம் = பறவைகள். அபவர்க்கம் = முத்தி.

சங்கர சங்கிதை - சிவரகசிய கண்டம்.

[illegible] |
[illegible] |
[illegible] ||
[illegible] |
[illegible] * *
[illegible] |
[illegible] |

எனவரூஉஞ் சுலோகங்களாற் காண்க.

உபதேச காண்டம்.

கொடியெனப்பிடித் துயரியசேவலைக் கொழுங்கார்
நெடியதோகைமா மயிலினைநீவிர்போ யுருத்து
முடிவின்மாதவ முயற்சியையொழித்தனி ரதனாற்
கடியபாதகமடைந்தனி ரெனமனங் கறுத்தான்.

கஞ்சிமாநக ரடைந்துநீ ரெமையுணர் கருத்தான்
மஞ்சுதோய்வரை மாதவம்புரிகுதிர் புரிந்தாற்
றஞ்சமெம்மடி தருகுதுமெனச் சென்றுசாரா
வஞ்சிலம்படி நினைந்துநின் றவனடியடைந்த.

பதங்காபவர்க்க மூர்த்தயே நம:

எண்பத்தெட்டாவது,

வள்ளி பரிணய மூர்த்தி.

திருமாலின் கண்களி னின்றுந் தோன்றிய புத்திரிகளுட் சுந்தரவல்லி யென்பார் குமாரக் கடவுளி னுஞ்ஞைப்படி தம்முருவை விடுத்துச் சூக்கும தேகத்துடன் சென்று தொண்டை நாட்டின்க ணுள்ள வள்ளி மலையிற் காலம் பார்த்திருந்தார். இவரிங்ஙன மிருப்ப முன்னர்க் காலத்துப் பிரத்தியும்நர், அநிருத்தர் முதலிய மூர்த்திகளைப் போன்ற உபேந்திரர் திருமாலினது மாளிகைக்குவந்து அவருடன் பேசியிருந்தனர். அவ்வாறுய சமையத்திற் சிவபெருமானையன்றி வேறொருவரையு மறந்துந் தொழாத காசிப முனிவரின் புத்திரரான கண்ணுவ விருடியார் விட்டுணுவைக் காண்பான் வைகுண்டஞ் சென்றார். அவ்விருவர்களும் வந்த முனிவரைப் பாராதும், ஆசனங் கொடாதும்

வள்ளிபரிணய மூர்த்தி.

அவருடன் பேசாதும் வாளாவிருந்தனர். கண்ணுவ முனிவர் மிக்ககோபங் கொண்டவராய் அவர்களைச் சபிப்பாராயினர்.

விஷ்ணோ த்வஸ்மாந் ஆகதாந் ஜ்ஞாத்வா ஸஹஜஸ்ரியா |
ஸம்பாஷ்ய ந க்ருதவாந் த்ருடஸ்தப்தோ யதஸ்தத: |
ஜந்மாநி ஸுபஹூந்யேவ ப்ராப்நுஹி த்வம் அத: பரம் |
ஸ்வயம் த்ருதீயம் ஜந்மாப்ய மூகோ பூத்வா வஸாம்யஹம் |
லக்ஷ்மீர் த்வத்பக்ஷஸம்ஸ்தா ம்ருகீ பவது காநநே |
த்வத்பக்தாஸ்ஸர்வே மோஹிதா: ஸம்ஸாரிண: |
ஸர்வே ம்ருகா நிந்தகா நரகே பதந்து நிராவிதா: ||

என்றபடி, முனிவர் பெருமான் அவர்களை நோக்கி, விட்டுணுவே! யாம் வந்ததை யறிந்தும் வாளாவிருந்து அவமதித்தனை. ஆகலால் நீ பற்பல ஜென்மங்களை யெடுக்கக்கடவாய். அப் பிறப்புக்களோடு மூமையாயிருத்தி. அன்றியும் நின்பக்கலின் மிருகத்தைப்போல இருக்கு மிலக்குமியும் மான் பிணையாய்ப் பிறப்பாளாக. வேடரைப்போல வமர்ந்தவிவ்வுபேந்திரனு மவ்வேடனுகப்பிறந்து நீண்டகாலங்காட்டிலே வசித்துழல்வானுக. நின் அடியவர் யாவரும் மதிமயங்கிச் சிவநிந்தை, விபூதி ருத்திராக்க நிந்தை செய்து எரிவாய் நரகிற் கிரையாகக்கடவர்களென்று சாபமிட்டுச்சென்றார்.

அதனுற் றிருமாலு மூமைமுனியான சிவமுனியாகப்பிறந்து வள்ளிமலைச் சாரலிற் றவம்புரிந்தார். இலக்குமியும் மான் மறியாகி யாண்டு வந்தாள். உபேந்திரனும் நம்பியென்ற வேடத்தலைவனுகப் பிறந்து குழந்தைவேண்டுமென்று முருகக்கடவுளை நோக்கித் தவங்கிடந்தான். வள்ளி

மலைச் சாரலின்கணுள்ள வனத்தில் வந்துலாவி நின்ற மானைக்கண்ட சிவமுனிவர் விரகங்கொண்டு அதனை நோக்கினர். மான்மறியும் விதிவயத்தானே காமத்தா னிவரைநோக்கிற்று. அதனாற் கருப்பம் வாய்த்தல்கண்டு எமதன்னையாராஞ் சுந்தரவல்லியார்,

"மானிடத்தின் வருமைந்தன் முந்துநீ - மானிடத்தின் வருகென்ற வாய்மையான் - மானிடத்தின் வயினடைந்தாண்மரு - மானிடத்தின் மானாகியமான்மகள்." என்றாங்கு அம்மானின் கர்ப்பத்தை யடைந்தார். கருக்கொண்ட மான்பிணை நொந்து வள்ளிக்கிழங்கெடுத்த குழிநடுவணோர் மகவை யீன்றுபார்த்தது.

ததோ(அ)பேக்ஷ நந்தநம் ம்ருகீ ஸ்வதேஹஸம்பவாம் |
ஸுவர்ணாங்கீம் ப்ராஸாதஸ்யாபேதவஸ்த்ரியமுத்தமாம் |
விலோக்ய தாம் விஜாதீயாம் ஸம்ப்ராப்தபயவிஹ்வலா ||

என்று வடமொழிக் காந்தங் கூறியாங்குத் தன்சாதிக் குழவியாகாதுவேறு சாதிக் குழந்தையா யிருத்தல் கண்டுநனி யச்சமுற் றோடியது, அதுகாலை யக்குழந்தையானது தும்புரு நாரத கந்தர்வ கின்னரர்களின் யாழினிசையோ வென்றயிர்க்க அழுதது கேட்டு வேடவரசனும் நம்பியும் மனைவி கொற்றக்கொடிச்சி யென்பாளும்போய்ப்பார்த்தபோது, எங்கணுங்காணப் படாத மிக்க அழகு வாய்ந்த பெண்குழந்தை கிடப்பதைப்பார்த்துச் சாலவும் வியப்புற்று, ஆசையுடன் அதனை யெடுத்து, இது நங்குலதெய்வம் அளித்தருளிற்றென்று தன்மனைவிகையிற்கொடுத்தான். கொற்றக்கொடிச்சியு மதனைவாங்கி மிக்க வுவகையும் வியப்புங் கொண் டுச்சிமோந்து முலைப்பால் சுரக்கப் புளகமுற்றுச் சிறுகுடிசென்று தன்னில்லத்திற்செவ்வனே பாராட்டிவளர்த்துவந்தாள்.

ஆஙவாலெஜமலமு ஙாவலாயகஷுாவ ஙாவஹஸெவஷி ।

என்றாங்கு வள்ளிக் குழியிற் றோன்றலால் வள்ளியென அம்மையார்க்கு நாமகரணஞ் செய்தார் அக் குறிச்சியிலுள்ள முதியோர்கள். அங்ஙனம் அம்மையார் வளர்ந்து வருங்காலத்திலே வேடர் தலைவன் தங்கள் குலமுறைப்படியே காட்டிலுள்ள தினைப்புனங்களைக் காக்கும்படி வைத்தனன். வள்ளி நாயகியார் பரண்மீதிருந்து தட்டை கவண்களாற் பறவை முதலியன வோப்பி வருஉங்காலைத் தேவ விருடியான நாரதமுனிவர் தணிகை நாயகனைத் துதிக்கப்போவார் வழியில் வள்ளியம்மையார் புனங்காத்திருத்தல் கண்டு அவரழகை வியந்து தணிகையையடைந்து, பகவான் சுப்பிரமணியக் கடவுளின் றிருவடிகளை வணங்கிக் கற்றாணங்களுந் தவிர்க்கவும் பழமையான மலையுருகவும், கின்னர மிதுனங்கள் பரவசப்படவும், ஆயிர நரம்பினையுடைய மகதியென்னும் யாழினைச் சித்திரப் படத்தினின்று மெடுத்துப் பதுமாசன மிட்டு மாதங்கி யென்னுந் தெய்வம் பரவி, தாம் அருளிச்செய்த பஞ்சபாரதீயத்திற் கூறி யாங்குப் பண்ணல், பரிவட்டனை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு என்னுங் கலைத்தொழி லெட்டுஞ்செய்து, இசையெழுப்பி, விரல்கள் பாடுகின்ற வண்டுகளின் கிளைபோலப் பலநரப்புக்களின்மீது படரா நிற்ப, வார்தல் வடித்தல் உந்தல் உறழ்தல் உருட்டல், தெருட்டல் அள்ளல் பட்டடை யென்னும் இசைக் காணத்தானே கொல்லி யென்னும் பண்ணைப் பாடிப் பெருமான் றுதிகளை யெடுத்து முழக்கி வள்ளியம்மையார் இயல்புரைத்து, அவர்தம் அழகெனப் படும் பாராவாரத்தி னோர்சிறு திவலையி னளவே மானும் வனப்பியல்பை யறிந்தவா வளியேன் வருகின்றேன். எம் பெருமானே கருணைகூர்ந்து திருச்செவி சாய்த்துக் கொண்டருள்க வென்று முப்பானிரண்டுறுப்புகளி னியல்களையும் வகுத்தனர்.

வள்ளிபரிணய மூர்த்தி.

கருங்குழன்மேக மீழவண்டொடையற் கணத்தினன் மின்னியு சிறைய, சுரும்பினற்சிலம்பி மலர்மதுத்தாரை சொரிதலினுயங்கு சாய்ந்த, மருங்குலஞ்சியஞ் சரணசரணென்று மருவவஞ்சலே யெனவே மொ, லொருங்கிருகுன்றம் பெயர்த்துநின்றதுபோ லொழுகியதுரோமய வல்லி.

திருமுகங்கமலமிணைவிழிகமலஞ்செய்யவாய்கமல நித்திலந்தாழ்
வருமுலேகமலந் துணைக்காங்கமலம்வலம்புரியுந்திபொற்கமலம்
பெருகியவல்குன்மணித்தடங்கமலம்பிடிநடைத்தாள்களுங்கமல
முருவவட்கவ்வாறுதலினன்றேயுயர்ந்ததுபூவினுட்கமலம்.

என் றிங்ஙனங் கூறியவற்றை யெல்லாங் கேட்ட குமாரக் கடவுள் நல றென்று முனிவரை விடுத்துத் தாந் தணிகைக் குன்றை நீங்கியா வேடர்தலைவர்போ லுருவங் கொண்டு வள்ளியம்மையார் எழுந்தருள யிருக்குங் காட்டகத்தே யேகந்தருளினர். ஆங்கு வள்ளிநாயகியார் இருப பக்கண்டு வியந்து அவர் அருகிற்போய் நின்று, மங்கையர்க் கரசே! நின் பெயர் யாது? நீ யார் மகள்? இத்தகைய அழகு வாய்ந்த நின்னை யறிவ லிகளாம் வேடர்கள் எவ்வாறு மனங்கொண்டிக் காட்டகத்திற் காவல்வை தனரோ வறிகிலேன். வனப்பு வாய்ந்த வதனத்தையுடைய நங்கையே நின் வரலாறுகளை யுரைத்து நகை முகங் காட்டுதி வனங்களின் மிகவுஞ் சுற்றி வந்தமையால் அமிர்தபானஞ் செய்யவேண்டும் வேட்கை சால முடையே னென்று பலப்பல விங்கித மொழிகளை யுரையா நிற்கும் போது, வேடர் தலைவனுன நம்பியென்பான் கிராதர்கள் பலராற் சேவிக் கப்பட்டவனுகி, அச்சத்தை விளைக்குந் தொண்டக முதலான வாத்தியங்க ளார்ப்ப அவண் வந்தான். வடமொழிக் கந்தபுராணம்,

தஊா நீஜெவதெஊவொவி ஹ்ரு ஹீகுாஸ நஸாவி நஃ|
கஊஜெவதஊஸாவஸ ஹ்ரு தெஜஃவாரஜூஃதஂ|

என்றுவீகுத் தேவ நாயகராகிய சுப்பிரமணியக் கடவுள் உடனே யளவி லாத வேத முதலியனவாய கிளைகள் இலைகள், கனிக ளாதியவற்றை யுடைய வேங்கைமர மானார். இவ் வுண்மையினையே சூதகீதையும், "அதர்வவேணுத்ரும: ஸ்கந்த: சாகா ஸ்த்ர யோவேதா: பர்ண: ச்ருதி புராணகா அங்காநி சாகாவர்ணம் தர்காஸ்தஸ்யை வரக்ஷகா: ! புஷ்பம்சிவ பரிஜ்ஞாநம பலம் முக்தி பாரமதா! என்று ஆறுவ தத்தியாயம் ௩௨ சம் ௩௩ம் சுலோகங்களாற் றெரித்தது. அதன்படி அதர்வண வேதம் விருக்க மாகவும், இருக்கு யசுர் சாமம் என்னுமூன்று வேதங்களும்மூன்று பெருஞ் சாகைகளாகவும், மிருதிகள் புராணங்கள் இலைகளாகவும், வியாகரண முத லிய ஆறங்கங்களுஞ் சிறு சாகைகளும், வர்ணமுந் தர்க்கமுங் காவலாக வும், சிவஞானமே மலராகவும், பராமிர்த மென்னு முத்தியே பழமாகவும் விளங்கியதெனக் கொள்க.

அம்மரத்தைக் கண்ட வேடரெல்லாம் மிக்க ஆச்சரியமுற்று ஆயு தங்களால் வெட்டத் தொடங்கினர். நம்பி அவர்களைத் தடுத்து வள்ளி யம்மையாரை நோக்கி "இது வந்தவா றென்" னென அம்மையார் "தந்தாய்! இது வந்தவா றுணரேன். மாயமாக முளைத்திருக்கின்றது" என்றார். நம்பி " இது நங்குமாரத்திக்கு ஓர் துணையாயிருக்கட்டும்" என்று சென்றனன். வேடர்களெல்லாருஞ் சென்ற பின்னர்க்கு, பிரான் முந்திய வுருவத்தைக் கொண்டு பலவாறு வள்ளி யம்மையாரை யிரந்து கேட்ட னர். அங்ங னுரையாடுங் காலத்து முன்போல நம்பி அங்குவந்தான். பக வானுடனே நரை முதிர்ந்த வோர் கிழவுருவங்கொண்டு வேடமன்னனை வாழ்த்தி விபூதி நல்கினர். அவன் அவரை நோக்கி "அடிகாள் இவ ணெழுந்தருளிய தென்கொல்? " என வினயகாலை "யாங் குமரியாடப் போந்தேம்" என்றார். "நன்று நன்றது நாறு மெம்புதல்விக் குறுது ணையா யிருத்தி" ரென்று கிராதமன்னன் கிளந்து சென்றான். விருத்த

சான பெருமான் வள்ளியம்மையாரைப் பசிக்குணவு தரும்படி கேட்டார் அம்மையார் கையிலிருந்த கனி, மா, தேன் இவையிற்றைக் கொடுத்தார். அதனையுண்டு தாகமாயிருத்தலாற் சுனைநீர்காட்டுதி யென்றார். அறுமுகக் காந்தகள்வர்தம் வார்த்தையைக் கேட்டு அம்மையார் கூறுவார். "பெரியீர்! இவ்வேழுமலைகளையுங்கடந்து அப்பால் ஓர்சுனை யிருக்கிறது. ஆண்டுச் சென்று அருந்தி விரைவின் வருதிரென்ன, ஐயனுங் கிழவன் உரைக்கும். பாவாய்! நீயேவந்து காட்டுதி யென்ன வங்ஙனஞ் சென்று காட்டியபோது உண்டருளிப் பகவ னுரைத்தருளும்.

[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] ||

ஆகத்தை வருத்துகின்ற வரும்பசி தவிர்த்தாய் தெண்ணீர்த்
தாகத்தைத் தவிர்த்தா யின்னுந் தளர்ந்தில தளர்ச்சிமன்றோ
மேகத்தை யனைய கூந்தன் மெல்லியல் வினையேன்கொண்ட
மோகத்தைத் தவிர்த்தா யாயின் முடிந்ததென் குறையதென்றான்.

என்றிங்ஙன் கூறுமொழிகளை யெல்லாங் கேட்டு வள்ளி யம்மையார் தமது திருக்கரங்களா லிருசெவிகளையு மூடி இத்தகாத வார்த்தை களை விடுமி னென வெகுண்டு, தாங் காவல் செய்திருந்த தினைப்பு னஞ்செல்வாராயினார், பொன்னே யனையாளாம் வள்ளி நாயகியார் தம் மைக் கடிந்து போகுந் திறனறிந் தென்செய்வே மென வுன்னித் தம்

முன்னவரான விநாயகக்கடவுளை வருமாறு திருவுளத்து வேண்டினர். விக்கினங்க ணீக்கி வேண்டுவோர் வேண்டியதையருளும் விநாயகக்கடவுள்

[illegible] | [illegible]

[illegible] |

என்றபடி மும்மதத்த னென்னுந் திருப்பெயர் தமக்கும், கோற்றொடிக் கொடிச்சியாகிய வள்ளிநாயகியார், கைம்மலர்க்க ணிலைவே றரித்த தம்பிக்கும் இணையும் பொருட்டுக் களிற்றுருவங்கொண்டு பெருமுழக்குடன் அக்கஃஃஃறென்னுங் கானத்துத் தோன்றிக் கானவர் மடமகளை முற்னர். அதனைக் கண்டதும்,

அவ்வேலை யில்வள்ளி யச்சமொடு மீண்டுதவப்
பொய்வேடங் கொண்டுநின்ற புங்கவன்றன் பாலணுகி
யிவ்வேழங் காத்தருள்க வென்னைநீர் சொற்படி
செய்வே னெனமுயன்று சேர்ந்துதழீஇக் கொண்டனளே.

இங்ஙனம் வள்ளி யம்மையார் தம்மை யிறுகத் தழுவி நின்றதைக் குகப்பிரான் கண்டு ஸ்ரீகணநாயகரை வந்தனித்து மிக்க அன்புடன்தோத்திரம் புரிய, விநாயகக் கடவுளு மவ்வுருவத்தைவிடுத்து மறைந்தருளினர். அதன் பின் குகக்கடவுள் விருத்த வேடத்தை விடுத்து அழகிய தம் வடிவத்தைக் கொண்டு கலவி செய்து முற்றியவுடன் வள்ளி நாயகியார் சாலவும் வருந்தி, எம்பெருமானே! தேவரீர் இவ்வுருவத்தை முன்னேகாட்டி முயங்காமல் இது காறுங் கொன்னேகழித்தீர். கொடியாளா மடியேன் செய்த குற்றங்களை யெல்லாம் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டினர். முருகக்கடவுள் பூர்வவரலாற்றை வள்ளியம்மையார்க்கு உரைத்துத் தினைப்புனம்போகுமாறனுப்பித் தாம்பின்னர் அரசவடிவங்கொண்டு, வில்லம்புகள் பற்றிவேட்டையிற் களைப்படைந்தார்போலத்தோன்றிப் "பெண்

காள்! நம தம்பா னடிபட்ட தேக முடைத்தா யோடி வந்த வுயர்வு டைத்தாமியானை யொன்றைக் கண்டீர்களா?" என்று வினவினர். தோழியும் வள்ளியம்மையாரும் பேசிய கலகமொழிகளை விடுத்தனர். அவருட் சகியானவள் "ஐய! நும் வண்மையை நும்மொத்த சூரர்க் குரைப்ப தன்றி யெம்மிட முரையற்க" வென் றுரைத்துக் கோபமாய்ப் போக, அரசவடிவ முள்ள பிரானுர் அவளைத் தடுத்து, என் வேண்டி னுங் கொடுப்பேன்; வள்ளியை யெனக் குரிமையாக்கிக் கொடுத்தி யென; அவள் அதனை மறுக்கப் பெருமான் கூறியருளும்.

என்பா லருளுங் குமார லிங்கேசனை யேத்த லர்போ
லன்பா லிணங்கு மணங்களையார் பொருட் டாவிநைய
வன்பால் விலக்கிய பெண்பெறின் வையத் தவர்க்கு மன்னு
மொன்பா னுயிருற்ற பெண்ணன்றி வேறே ருானில்லையே.

என்றுங்கு, புாங்கியே! வள்ளியைச் சேர்க்காது விலக்குதி யாயின் நாளைக்கு அவளுருவையெழுதிப் பனைமடன்மா வேறுவே னென்றுரைக் கத் தோழி பயந்து ஓர் சோலையிற் கொடுசென்று வள்ளியைச் சேர்த் தனள். ஆங்கு முருகக்கடவுளும் நாயகியாருங் கூடிய பின் றேழியவளை யழைத்துவந்தனள். தினைக ளெல்லாம் விளைந்த வுடன் வேடர்கள் வள்ளியம்மையாரை யழைத்து வீட்டிற்குச் சென்றனர். நாயகியாரும் இனி யெங்ஙனிற் பெருமான் சேர்க்கை கேரிடுமோ வென்று காம மேலி டப் பட்டவாய் விகாரங்கொண்டு மூர்ச்சை யடைந்தார். கொற்றக் கொடிச்சி முதலாயினேர் வெறியாட்டுச் செய்வித்தனர். செவிலித் தாய் மேற் றெய்வம் போந்து "முருகன் சேர்க்கை யிவட் குண்டாயிற்று என்ன" அத்திரு நாமத்தைக் கேட்டு வள்ளியம்மையார் விழித்தெழுந்து பின்னரும் மூர்ச்சையுற்றிருந்தார்.

சுப்பிரமணியக் கடவுள் கானகஞ் சென்று வள்ளி யம்மையாரைக் காணுது திருவிளையாடலாகப் பலவாறு வருந்தி யாங்குள்ள மான்

மயில், குயில், மேகம் முதலியவற்றை "வள்ளிபோன வழியைக் கூறு திர்" என்று அடிச்சுவடு வழியே குறிச்சி சென்று தங்குறிகாட்ட அதனை யறிந்தபாங்கி யொருவரு மறியாத யாமத்தே வள்ளியைக் கூட்டிக் கொண்டு வாயிலின் கதவை நீக்கி மெதுவாய் வடிவேலன் கையிற்கொ டுத்தான். பெருமானும் நாயகியாரு மினிய மொழிகள் பேசி யுவகையு டன் சென்று ஓர்சோலையிற் சேர்ந்திருந்தனர். கொற்றக் கொடிச்சி யெழுந்து பார்த்தபோது தன் மகட்காணாது தன்னாயகனிடங் கூற, நம்பி மிக்க சினங்கொண்டு, கூட்டமான வேடர்களுடன் புறப்பட்டுக் காடுகள், மலைகள், ஆறுகள் முதலிய எங்கணும் விரைவிற் றேடுவானாயி னன். இவரிருக்குஞ் சோலைக்கண் வந்ததும் "நம் நங்கையைக் கவர்ந்த கள்வ னீங்குளா னென்றார்ப்பரித்து வில்லை வணக்கிச் சரமாரிகளைப் பொழிந்தனர். அதனைக்கண்ட அங்கண் மாதராள் அஞ்சின ளயர்த்தாள். பெருமானார் அம்மையாரைத் தேற்றிக் கொடியாஞ் சேவலைத் திருவுளத் துன்ன, அதுதோன்றி யார்க்க யாவரும் வீழ்ந்து மடிந்தனர்.

புள்ளடுத்தது மார்த்ததும் புளிர்நக ளாவி
விள்ளடுத்ததும் விம்மிதம் விளைப்பமெல் லியலா
ளுள்ளடுத்தயே ரோகைய ளொளிமுக மலர்ந்தா
டெள்ளடுத்திலள் கணவனார் திருவிளை யாட்டில்.

வள்ளியம்மையாரின் அன்பைப் பிறர்க்குக் காட்டும் பொருட்டுப் பெரு மானார் நடந்தருள, அம்மையாருந் தந்தையர் முதலிய சுற்றத்தாரின் மர ணத்தைச் சிறிதும் பொருட் படுத்தாது அவரின் பின்னே சென்றார். நாரதமுனிவர் தோன்றி யெம்பெருமானே யவர்களை யெழுப்பி யுலகர் காணத் திருமணமுஞ் செய்தருள வேண்டு மென்று இறந்தனர். பெரு மானரு மதற்குடன்பட்டு வள்ளியம்மையாரை யெழுப்புமா றருளினர். அவரு மங்ஙனே வந்து "யாவரு மெழுதிர்" என்னத் துயில் கொண் டெழுந்தார். பகவான் அதுகாலைத் தம்மானுட வடிவத்தை விடுத்து

௫௧௮ வள்ளி பரிணய மூர்த்தி.

ஆறு திருமுகங்களும் பன்னிரு திருக்கரங்களு முடைய திருவடிவத்தைக் காட்டியருளத் தீவினை நீங்கப் பெற்ற வவ்வேடர்கள் யாவருங் கண்டு அளவிலா வானந்தக் கடலின் முழுகிப் பலமுறை வணங்கித் துதித்து, "சகபதே! தேவரீ ரிங்ஙனஞ் செல்லின் எங்கள் குலத்திற்கு அவகீர்த்தி யுண்டாகும். ஆகலாற் சிறுகுடிவந்து முறைப்படி மணஞ்செய் தருள வேண்டு" மென்று இறந்தார். அதற்கிசைந்த எம்பெருமானார் நாரத ருடன் சிறுகுடி மேவினர்.

ஊரிலுள்ளார் யாவரும் அதனைக்கேட்டுக் கரையிறந்த ஆனந்தமுற் றுக் கடல்போலப் பொங்கினர். ஊர்கள் எல்லாம் அலங்கரிக்கப் பட்டன. பெருமானார் நாயகியா ரிருவருந் தேவவுருவத்துடன் வீற்றிருந்தார்கள். நம்பியுங் கொற்றக் கொடிச்சியும் வந்து திருவடி பூசித்துத் தத்தஞ் செய் தனர். நாரதமுனிவர் மறைவிதிப்படி சடங்கெல்லாஞ் செய்து முடித் தார். சிவபெருமானாருந் தேவியாருஞ் சகல தேவ கணங்களுடன் வந்து ஆகாயத்தி னின்று திருமண வைபவத்தைக் கண்டருளினர். வேலாயுதக் கடவுள் வள்ளியம்மையாருடன் எழுந்து வந்தனிக்க மலர் மழைசொரிந்து வாழ்த்தி மறைந்தருளினர். குகக்கடவுள் வள்ளியம்மையாருடன் திருத் தணிகைக்கு எழுந்தருளினர்.

இங்ஙனம் வள்ளி நாயகியைத் திருமணஞ் செய்தருளலின் வள்ளி பரிணய மூர்த்தி யெனப் பெயர் பெற்றார்.

சங்கர சங்கிதை - சிவரகசிய கண்டம்.

[illegible] ।
[illegible] ।
[illegible] ।

[illegible] |
[illegible] |
[illegible] |
[illegible] ||

வள்ளி பரிணய மூர்த்தயே நம:

மயூரவக்கிரப் பெருமான் மலரடி சரணே.

சுப்பிரமணிய பராக்கிரமம்

முற்றிற்று.

றிரு தடந்தோள் வாழ்க வறுமுகம் வாழ்க வெற்பைக்
றுடைத் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்கச் செவ்வே
ளேறிய மஞ்ஞை வாழ்க யானைத னணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடிய ரெல்லாம்.